

கல்கி
மணியம்.
தீபாவளி மலர்
KALKI
DEEPAVALI
NUMBER
1953



CHEVROLET
1953 மாடல்
டீஸல், பெட்ரோல்
செவர்லெட்
பஸ்கள், லாரிகள்
இந்திய விற்பனையில்
முதல் ஸ்தானம்
டி.வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் லிமிடெட்.
மதுரை
சுந்தரம் மோட்டார்ஸ் லிமிடெட்.
சென்னை
TVS·42




புதிது அணிந்து
புது மணம் கமழும்
நரஸுஸ்
காபியை அருந்தி
நீங்கள் கொண்டாடும்
கோலாகலமான தீபாவளி
என்றும் உமது வாழ்வுக்கு
பிரகாசமளிக்கட்டும்
நரஸுஸ் மான்யுபாக்சரிங்
கம்பெனி லிட்.
மதராஸ் & .சேலம்


சேவையில் சிறந்தது?
தேச சேவை
தங்க பஸ்பம்
தேவையில் சிறந்தது?
தங்கபஸ்பம் புகையிலை.
N. ஆறுமுகம் பிள்ளை
காரைக்குடி
BS


ஆரோக்யஸ்தலத்துக்கு குற்றாலம்
ஆரோக்ய
ஸ்நானத்துக்கு
அருணகிரி விலாஸ்
சீயக்காய் பவுடர்.
N. ஆறுமுகம் பிள்ளை
காரைக்குடி
B.S


the Popular Pen!
WILSON
VACUMATIC PEN
WITH A GUARANTEE
Sole Distributors for India
KIRON & CO., LTD.
BOMBAY - CALCUTTA - MADRAS
PRICE
Rs. 5-12
ONLY
14 காரட் கெட்டி தங்க நிப் பொருத்தப்பட்டுள்ளது. விலை ரூ. 8-12.
மதராஸ் பிராஞ்சு: கிரான் & கோ., லிமிடெட், 82, நாராயண முதலித் தெரு, சென்னை -1


பருவங்களுடனும் பகல்-இரவின் குறிப்பிட்ட காலங்களுடனும் இசைந்து வருவது இந்திய ராகங்களின் தனிச் சிறப்பு. ஒவ்வொரு ராகமும் அந்தந்த வேளையின் ரஸம் அல்லது பாவத்தை வெளியிடும் சாதனமாகும்.
தேனீர்
லலிதா
CTS-103

அதிக நெல் பயிரிடுக

அதற்கு ஒரு
ஜான் டீர் "எம்ஸி"
டிராக்டர்




... இந்தியா, ஆசியாவில் வளர்ந்து வரும் ஜனத்தொகைக்கு உணவளிக்க அதிக அரிசி

நீங்கள் உற்பத்தியைப் பெருக்க முடியும்!

உறுதியான ஜான் டீர் "எம்ஸி" டிராக்டர் மூலம் உங்கள் நெல் வயல்களை உழுங்கள். அதிக கனமில்லாதது; தரையைக் கவ்விப் பிடிக்கவும், சேற்றிலும் நீரிலும் லகுவாகச் செல்லவும் கூடிய பற் சக்கரங்கள் பொருந்தியது; நெல் பயிரிடுவதற்கு மிகவும் ஏற்றது.

வயல் நிலைமை எவ்வளவு மோசமாயிருந்தாலும், குறைந்த செலவில், அதிக லாபத்துடன், அதிக நெல் மகசூலை நீங்களும் பெற முடியும்.



JOHN DEERE MC TRACTOR


IN SERVICE LIES SUCCESS

JDG/11

LARSEN & TOUBRO LIMITED

Bombay P.O.B. 278 Calcutta P.O.B. 619 Madras P.O.B. 5247 Bangalore P.O.B. 98 Cochin P.O.B. 55 New Delhi P.O.B. 323


சூலம் மார்க் சங்கர் பிராண்ட்
SANKAR
I C
BRAND
போர்ட்லண்ட்
சிமெண்ட்
திடத்திலும்
தரத்திலும்
தேர்ந்தது
இந்தியா சிமெண்ட்ஸ் லிட்.
தொழிற்சாலை: சங்கர் நகர்.... ரிஜிஸ்டர்ட் ஆபிஸ்: மதராஸ்-1


The National Hindu Hotel
THE HOME FOR SOUTH-INDIAN-COMFORTS IN BOMBAY
NATIONAL HINDU HOTEL
FRERE ROAD AND MINT-ROAD TRAM JUNCTION FORT, BOMBAY.
Phone 25624
TELEGRAM "SUKHNIVAS"


மிகக் குறைந்த
நேரத்தில்
(100 மீட்டர் ஓட்டம்)
அவனுடைய வெற்றிக்குக் காரணம் திடமான பயிற்சியே. அதுபோலவே அவன் வெற்றிக்குக் காரணமாயிருந்ததில் முக்கியமானது அவனுடைய உணவு. உண்மையாகவே இந்த வெற்றிக்கு வேண்டிய அளவு ஊக்கமும் பலமும் அவனுக்குக் கொடுத்தது அவனது உணவுதான். அவனுடைய உணவில் எப்பொழுதும் அதிக பலம் இருந்தது.
அவனுடைய உணவு சமைக்கப்பட்டிருந்தது
Tushar
HYDROGENATED
GROUNDNUT OIL
துஷார்
வனஸ்பதியில்
இரட்டிப்பாக சுத்தப்படுத்தி கை படாமல் செய்யப்பட்ட வனஸ்பதி ஆரோக்கியமான முறையில் பாக் செய்யப்பட்டது.
துங்கபத்ரா இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட், கர்னூல்.


இவைகளுக்கு
எது
பொதுவாக
உள்ளது
எந்தப் பொருளையும் சீதோஷ்ண ஸ்திதியின் தன்மைக்கேற்பப் பாதுகாப்பது என்பது எல்லா உற்பத்தியாளர்களுக்கும் ஒரு பெரிய பிரச்னைதான்.
வியக்கத்தக்க முறையில் உலகப் பிரசித்தி பெற்ற ஸ்பார்ட்டன், சாமான்களின் பாதுகாப்புப் பிரச்னையை மிகவும் சுலபமாகவும் அழகாகவும் தீர்த்து வைக்கிறது. சாமான்களின் உற்பத்தியாளர்கள் இதை நன்கு அறிந்திருப்பதனுலேதான் எப்போதும் ஸ்பார்ட்டன் சரக்குகளையே வாங்கி உபயோகிக்கிறார்கள்.
உங்கள் உள்ளூர் வியாபாரியைக் கேளுங்கள். அல்லது எங்களுக்கு எழுதுங்கள்
டிஸ்ட்ரிபியூட்டர்களும் ஸ்டாக்கிஸ்டுகளும் இந்தியா முழுவதும் உள்ளனர்
Spartan
INDUSTRIAL FINISHES
SILVER
Addisons Paints & Chemicals Ltd.
Madras-11.



தீபாவளி வாழ்த்துக்கள்!

எல்லோருக்கும் வசதியான முறையிலும் சௌகர்யமான கால அளவுகளிலும், சந்தா தொகைகளிலும் பல ஆண்டுகளாக சிட்டுகள் நடத்தி சேவை செய்து வருகிறோம். யாவரும் இதில் கலந்து கொண்டு சிறுகச் சிறுகச் சேமித்து க்ஷேமமடையும்படி கோருகிறோம்.

விபரங்களுக்கு எழுதவும்:

கள்ளிக்கோட்டை பண்ட்ஸ் லிட்.

(இந்தியாவில் ஸ்தாபிக்கப்பட்டது)

தலைமை ஆபீஸ்: கள்ளிக்கோட்டை.


மதராஸ் பிராஞ்சு: 9, செம்புதாஸ் தெரு, மதராஸ்-1

போன்: 33536 • த. பெ. நெ. 1395 • தந்தி: "KALLIFUNDS"



பொருளடக்கம்


SUPERIOR QUALITY
ESTD 1919
TRADE MARK
EMPIRE
VERMICELLI
CHOOLAI, MADRAS.


எமது தீபாவளி
வாழ்த்துக்கள்
Co-optex
FABRICS


NOW IN EVERY HOME...
They are dependable, economical and safe cooking-stoves. Prabhat stoves do not emit bad odours, smoke or fumes because they work on the principle of gas-emission. Prabhat No. 1 stoves are fitted with original Swedish PRIMUS BURNERS.
PRABHAT LANTERNS
These portable gas lanterns of 200 to 300 candlepower give equally brilliant light. They are made from high-quality brass metal and their chromium-plated finish is excellent. They carry an all-round guarantee. They are very economical in price and give a clear and bright light.
PRABHAT SILK MANTLES
They are indispensable for your gas-lamp and lantern. They are well-known since a long time for their high-quality and bright light.
Prabhat
STOVES
PRABHAT PRODUCTS CO.
Head Office: Noble Chambers, Parsee Bazar St., P. O. Box No. 291, BOMBAY I.

பாதுகா பட்டாபிஷேகம்

ராமாயண காவியத்தில் பாதுகை மிக்க மகிமை பெற்றிருக்கிறது.

பரதன் எவ்வளவோ வருந்தி நேரில் கேட்டுக் கொண்டும் இராமர் பதினாலு வருஷம் வனவாசம் முடிவதற்கு முன்னால் அயோத்திக்கு வர முடியாது என்று மறுத்து விடுகிறார். கடைசியாக, பரதன், "தங்கள் காலில் அணிந்துள்ள பாதுகைகளையாவது கொடுங்கள்" என்று மன்றாடுகிறான். இராமர் கொடுக்கிறார். பரதன் அப் பாதுகைகளைத் தலையிலே வைத்துத் தூக்கிக் கொண்டு போய் அயோத்தியில் சிங்காதனத்திலேயே ஏற்றி வைத்து விடுகிறான். இராமருடைய பாதுகைகளே இராஜ்யத்தை ஆள்வதாகப் பாவித்து, தான் பிரதிநிதியாக மட்டும் அரசு புரிகிறான். இந்தச் சம்பவத்துக்குப் 'பாதுகா பட்டாபிஷேகம்' என்ற பெயர் ஏற்பட்டு விட்டது. நாடகங்களும் காலட்சேபங்களும் எத்தனையோ நடைபெற்று வருகின்றன.

இப்படி யெல்லாம் படித்திருந்தும் கேட்டிருந்தும் பாதுகைகளின் மகிமையை நம்மில் பலர் உணர்வதில்லை. "செருப்புத்தானே!" என்று இகழ்ச்சியாகப் பேசுகிறோம். அதை ஒரு மட்டமான பொருளாகவே கருதுகிறோம். நன்றாகத் துடைத்து வைத்துக் கொள்ளுவதுகூட இல்லை.

என்னுடைய வாழ்க்கையில், பாதரட்சைகளின் மகிமையை வேறொரு விதத்தில் நன்கு அறிந்து கொள்ளும்படியான சந்தர்ப்பம் ஒன்று எனக்குக் கிடைத்தது. வியக்கத்தக்க அந்த அற்புத நிகழ்ச்சியை இங்கே எழுதுகிறேன்.



சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்





1020-ம் வருஷம். திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் நானும் என் சகாக்களும் வேலை செய்து கொண்டிருந்தோம். திருச்செங்கோடு பிராந்தியத்தில் அடிக்கடி பஞ்சம் ஏற்படுவது வழக்கம். வானம் பார்த்த பூமி. மழை பெய்தால்தான் குட்டைகளில் ஜலம்; நிலங்களில் வெள்ளாமை. மழை பெய்யும் வருடங்களைக் காட்டிலும் மழை பெய்யாத வருடங்களே அதிகம்.

பஞ்சத்தில் அடிபட்டவர்களுக்குக் காந்தி ஆசிரமத்திலிருந்து சொற்ப விலைக்குத் தானியம் வழங்கப்பட்டு வந்தது. பஞ்சத்தின் கொடுமை அதிகமாயிருந்த கிராமங்களில் மணியனூர்க் கிராமம் ஒன்று. அந்த ஊரில் எல்லா வீடுகளும் சக்கிலியர் வீடுகள். விவசாயிகள் அரைப் பட்டினியாயிருக்கும் போது செருப்புத் தைக்கும் வேலை எங்கே கிடைக்கப் போகிறது? ஆகையால் மணியனூர் ஹரிஜனங்களும் அரைப் பட்டினியாகவே வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார்கள்.

வாரத்தில் ஒரு நாள் மணியனூரில் சந்தை கூடும். அக்கம் பக்கத்திலுள்ள பல ஊர்களிலிருந்து ஜனங்கள் சாமான் விற்கவும் வாங்கவும் வருவார்கள். இப்படிச் சந்தை நடக்கும் இடங்களைப் பார்த்துத்தான் பழைய நாளில் கவர்ன்மெண்டார் கள்ளு-சாராயக் கடை வைப்பது வழக்கம். எத்தனையோ பாடுபட்டுக் கிணற்றிலிருந்து தண்ணீர் எடுத்து ஊற்றிப் பயிர் செய்து விளைந்த பொருள்களைச் சந்தையில் கொண்டு போய் விற்று விட்டுக் கிராமவாசிகள் திரும்பிப் போகும்போது, அவர்கள் கொண்டு போகும் பணத்தில் ஒரு பெரும் பகுதியைக் கள்ளு-சாராயக்கடைகள் மூலமாக அரசாங்கத்தார் எடுத்துக் கொள்வது பழைய கால வழக்கம். ஹரிஜனங்களில் பெரும்பாலோர் குடிப் பழக்க முள்ளவர்கள்.

மணியனூர்ச் சக்கிலியர்களும் அப்படித்தான். காந்தி ஆசிரமத்தார் பஞ்ச நிவாரண வேலை நடத்திய கிராமங்களில் "குடிப்பதில்லை" என்று ஜனங்கள் சபதம் செய்து கொடுத்தார்கள். அவ்வாறே மணியனூர்க் கிராமத்து ஹரிஜனங்களும் மது விலக்குப் பிரதிக்ஞை செய்திருந்தார்கள்.

ஒரு வியாழக்கிழமை யன்று, மணியனூர்க் கிராமத்து மூனியன் இன்னும் சிலரையும் அழைத்துக் கொண்டு, காந்தி ஆசிரமத்தில் நான் இருந்த குடிசைக்கு வந்தான். அன்றைக்குத்தான் ஆசிரமத்தில் தானியம் வழங்கும் நாள்.

"இங்கே ஏன் வந்தீர்கள்? தானியம் கொடுக்கும் கொட்டகைக்குப் போங்கள்!" என்றேன்.

"ஒரு காரியம் நடந்துடுத்துங்கோ!" என்று சொன்னான் மூனியன்.

"என்ன நடந்துவிட்டது?" என்று கேட்டேன்.

"ஒன்று மில்லீங்கோ! கட்டுப்பாட்டை மீறி நன்றாகக் குடித்து விட்டானுங்கோ! நீங்கள் விசாரித்து முடிவு செய்யணுங்கோ!" என்றான்.

கடிதங்களுக்குப் பதில் எழுதிக் கொண்டிருந்தேன். எழுத வேண்டிய கடிதங்கள் இன்னும் நிறையப் பாக்கி இருந்தன. கடுமையாகப் பேசினேன்.

"கள்ளுக் குடிக்கப் பணம் இருந்தால் தானியம் வாங்கவும் பணம் இருக்கும். உங்களுக்கு எதற்குப் பாதி விலைக்குத் தானியம் தருவது? முடியாது! போங்கள்! வேண்டும் என்கிற மட்டும் குடித்து விட்டுப் போங்கள்!" என்றேன்.

அவர்கள் குடிக்காமல் இருந்து வந்தால் அவர்களுக்குத்தான் லாபமே தவிர மற்றவர்களுக்கு ஒன்றும் நன்மை இல்லை என்பதை அவர்கள் மனத்தில் நன்றாய்ப் பதியச் செய்ய விரும்பினேன்.

மூனியனும், அவர்களோடு வந்தவர்களும், போகவில்லை. "அப்படிச் சொன்னால், என்ன செய்வதுங்கோ! நியாயத்தை விசாரித்துக் குற்றவாளியைத் தண்டியுங்கோ!" என்றான் மூனியன்.

"குடித்தவர்கள் யார்? எத்தனை பேர்?" என்று கேட்டேன்.

"இரண்டு பேருங்கோ!" என்றான் மூனியன்.

"அவர்களை இங்கே அழைத்து வந்திருக்கிறாயா?"

"ஒருத்தன் வந்திருக்கிறான்; இன்னொருத்தன் வீட்டுக்காரி வந்திருக்கிறாள்" என்றான் மூனியன்.

"குடித்ததாக அவர்கள் ஒப்புக் கொண்டார்களா?" என்று கேட்டேன்.

"இல்லீங்க! நேற்று ராத்திரி குடித்து விட்டு வந்து பெண்சாதியோடு சண்டை போட்டானுங்க. ஊருக்கெல்லாம் தெரியும். ஒப்புக் கொள்ளாமல் போனால் எப்படி?" என்றான் முனியன்.

குற்றவாளியைப் பார்த்து "நீ என்னப்பா சொல்லுகிறாய்?" என்று கேட்டேன்.

"பெண்சாதியோடு சண்டை போட்டது நெசந்தானுங்க. அதனாலே குடித்தேன் என்று சொல்லி விடலாமா? குடிக்காதவன்கள் எல்லாம் பெண்சாதியோடு சண்டை போடுகிறதே இல்லேங்களா?" என்று சாமர்த்தியமாகப் பேசினான்.

நான் கோபமாக "இதோ பார்! உண்மையைச் சொல். நீ நேற்றைக்குக் கள்ளுக்கடைக்குப் போய்க் குடித்தாயா? இல்லையா? உங்கள் ஊரில் ஒருவன் கள்ளுக் கடைக்குப் பணங் கொடுத்தாலும் ஊருக்கே தானியம் கொடுப்பதை நிறுத்தி விடுவோம் என்று சொல்லி யிருக்கிறேன் அல்லவா? அதை உங்கள் ஊராரும் ஒப்புக் கொண்டார்கள்" என்றேன்.

"இல்லேங்க, ஐயா! நான் குடிக்கவில்லை. பொய் சொல்லுகிறானுங்க" என்றான்.

மற்றவர்களைப் பார்த்து "நீங்கள் எல்லாரும் என்ன சொல்லுகிறீர்கள்?" என்று கேட்டேன்.

"பெண்சாதியோடு இவன் சண்டை போட்டது நெசம்; குடித்ததை நாங்கள் கண்ணால் பார்க்கலேங்கோ!" என்று சொன்னார்கள்.

நான் குற்றவாளியைப் பார்த்து, "உன்பேரில் முனியனுக்கு ஏதாவது பகையா? நிஜம் இல்லாவிட்டால் எதற்காக உன்மீது குற்றம் சொல்லுகிறான்?" என்று கேட்டேன்.

"ஆமாம், அவனுக்கும் எனக்கும் பகைதானுங்க. வேலை செய்ய மலைக்குப் போயிருக்கிற ஆள்களுக்கும் சேர்த்து முனியன் தானியம் வாங்குகிறானுங்க. அதை நான் சொன்னதற்காக அவனுக்கு என்மேலே கோபமுங்கோ!" என்றான்.

"முனியா! இவன் சொல்கிறது நிஜமா?" என்று முனியனைப் பார்த்துக் கேட்டேன்.

"இதோ இந்தக் கிழவனைக் கேட்டுப் பாருங்க. இவன் மகன் குடித்தானா, இல்லையா என்று. கிழவன் எனக்குச் சித்தப்பன். இரண்டு பேருக்கும் பொதுவில் கிழவன் எது நெசம் எது பொய் என்று சொல்லட்டும்" என்றான் முனியன்.

கிழவனைப் பார்த்து "உன் மகன் குடித்தது உண்டா? இல்லையா?" என்று கேட்டேன். கிழவன் ஒரு கணம் மௌனமாக இருந்தான். பிறகு,


"நேற்று இரவு அவன் சத்தம்போட்டுக் கலவரம் விளைத்தது நெசந்தானுங்க" என்றான்.


"சத்தம் போட்டதைப் பற்றி நான் கேட்கவில்லை. குடித்தது உண்டா? இல்லையா?" என்று மீண்டும் கேட்டேன்.

"இல்லேங்க, குடிக்கலேங்க. சண்டை போட்டது என்னவோ நெசந்தானுங்க" என்றான் கிழவன்.


முனியன் ஆத்திரமாக, "கிழவனும் பொய் சொல்லுகிறான். சத்தியம் பண்ணிச் சொல்லச் சொல்லுங்கோ" என்றான்.

பிரமாணம் எந்த முறையில் வாங்குவது என்று யோசனை செய்தேன். கோயிலுக்குப் போவதினால் கிழவன் மாற்றிச் சொல்லுவான் என்ற நம்பிக்கை எனக்குக் கொஞ்சமும் இல்லை. மகனைத் தப்பவைப்பதற்காகக் கிழவன் சொல்லுவதைச் சொல்லியாகி விட்டது. சாமி கோயிலில் நிற்பதால் மட்டும் வேறு விதமாய்ச் சொல்லப் போகிறானா? பதினெட்டு வருஷம் வக்கீல் தொழில் பார்த்த அனுபவத்தில் எனக்குப் பிரமாணங்களிலும் சத்தியங்களிலும் நம்பிக்கையே தீர்ந்துபோய் விட்டது. பொய்ச் சாட்சி







யம் சொல்லுவதென்று தீர்மானித்துக் கொண்டு வருகிறவர்கள் எப்படியும் பொய் சொல்லியே தீருவார்கள். பின்னால் குறுக்கு விசாரணையில் அவர்களுடைய சாட்சியம் பொய் என்று வெளிப் படுத்தினால்தான் உண்டு. உலகமே இப்படி இருக்கும்போது இந்தக் கிழவனைச் சத்தியம் பண்ணச் சொல்லிக் கேட்பதில் மட்டும் என்ன பயன் விளையப் போகிறது? இந்த மாதிரி ஜனங்கள் பொய் சொல்ல அஞ்சக் கூடிய பிரமாண முறை என்ன இருக்கிறது? முனியனைத் திருப்தி செய்வதற்காக ஏதாவது ஒன்று கேட்டு விட்டு இவர்கள் எல்லாரையும் திருப்பி அனுப்பி விட வேண்டியதுதான்.

இப்படி நான் எண்ணிக் கொண்டிருக்கையில் பக்கத்தில் கிடந்த என் செருப்பு ஜதையின் பேரில் என் பார்வை தற்செயலாக விழுந்தது. உடனே கிழவனைக் கிட்டத்தில் வரும்படி அழைத்தேன்.

"இதோ பாரப்பா! தோல் வேலையினால்தானே உனக்குப் பிழைப்பு?" என்றேன்.

"ஆமாமுங்கோ" என்றான் கிழவன்.

"சரி, உனக்கு ஜீவனம் அளிக்கும் தோல் இதோ இருக்கிறது. இதைக் கையில் எடுத்துக்கொள்" என்று அந்தச் செருப்பு ஜதையைச் சுட்டிக் காட்டினேன்.

கிழவன் எடுத்துக் கொண்டான்.

"இப்போது நான் சொல்லுகிறபடி திருப்பிச் சொல்—கடவுளின் முன்னிலையில் எனக்குச் சோறு போடும் இந்தத் தோலின்மேல் ஆணையாக நான் சொல்லுவது சத்தியம்."

கிழவன் அதே மாதிரி அந்த வார்த்தைகளைத் திருப்பிச் சொன்னான்.

"நேற்று இரவு உன் மகன் குடித்து விட்டு வந்திருந்தானா?" என்று கேட்டேன்.

"ஆமாமுங்கோ! குடித்து விட்டு வந்திருந்தானுங்கோ!" என்றான் கிழவன்!

கிழவனுடைய பதில் என்னை ஸ்தம்பிக்கச் செய்து விட்டது. இந்த உலகத்திலும் சில சமயம் அற்புதங்கள் நிகழத்தான் செய்கின்றன. ஆனால் கிழவனை உண்மையை ஒப்புக் கொள்ளும்படி செய்த இந்த அற்புதம் என்னைச் சிறிது நேரம் பேச முடியாமல் செய்து விட்டது. பிறகு குற்றவாளியைப் பார்த்து, "இங்கே வா. செருப்பை நீயும் கையில் எடுத்துக் கொள்" என்றேன்.

எடுத்துக் கொண்டான்.

"தோலின்மேல் ஆணையாகச் சொல். நீ குடித்ததுண்டா, இல்லையா?" என்று கேட்டேன்.

"குடித்தேனுங்க. குற்றந்தானுங்க" என்று மகனும் ஒப்புக் கொண்டான்.

எல்லாருமாகச் சேர்ந்து குற்றம் செய்தவனுக்கு நான்கு அணா அபராதம் விதித்தார்கள். குற்றவாளி அந்த நான்கு அணாவையும் உடனே கொடுத்து விட்டான். அது பஞ்ச நிவாரண நிதியில் சேர்க்கப்பட்டது.

பிறகு முனியனையும் அவனோடு வந்தவர்கள் அத்தனை பேர்களையும் ஒவ்வொருவராகக் கையில் செருப்பு ஜதையை எடுத்துக் கொண்டு "இனிமேல் கள்ளைத் தொடுவதில்லை" என்று பிரமாணம் பண்ணச் செய்தேன். அவர்கள் அப்படியே பிரமாணம் செய்து விட்டுச் சோளம் வாங்கிக் கொண்டு ஊருக்குத் திரும்பினார்கள்.

அவர்கள் நின்ற இடத்தில் பழைய தைந்து போன என் செருப்பு ஜதை கிடந்தது. அதன் பேரில் எனக்கு என்றும் ஏற்படாத மரியாதை ஏற்பட்டது. செருப்பு என்பது அலட்சியம் செய்யக் கூடிய பொருள் அல்ல. காலில் போட்டுக் கொண்டு நடப்பதற்கு மட்டும் உபயோகமான பொருள் அல்ல. எத்தனையோ ஏழை ஜனங்களுக்கு ஜீவாதாரமாக இருந்து வருகிறது. இந்த ஏழைகளுக்குக் கடவுளும், பக்தியும், சமயமும் அதுதான்.

இனி செருப்பைக் காலில் மாட்டிக் கொள்ளும்போது பயபக்தியுடன் அதிலுள்ள மெய்ப் பொருளை வணங்கி விட்டு அதைக் காலில் போட்டுக் கொள்ள வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டேன்.

* * *





ANGLO INDIAN DRUG & CHEMICAL CO. BOMBAY 2.

சண்முகக் கண்மணி

காற்றும் ஒளியும் கலந்து வருகுது!
காரிருளும் மெல்ல மங்கி மறையுது!
சேற்றின் கமலங்கள் சேர்ந்து சிரிக்குது!
சேவலும் கூவிப் பழகுது!

வேலைத் திரைகடல் முத்தம் சிதறுது!
வெற்றி முர செட்டுத் திக்கும் அதிருது!
நீல முகிலிடைப் பேரொளி காணுது!
மேனிக் கதிர் என்றும் தோணுது!

ஆதவன் வந்தனன் என்று நினைத்தனன்
மாதவன் பாம்பணை நீங்கி யெழுந்தனன்
போதவிழ் சீர்முகம் ஆறுடனே வரும்
சோதியைக் கண்டு மகிழ்ந்தனன்

உம்பர் சிறை தவிர்த் தெம்புவியு மொரு
செம்பொன் மயிலில் வலம் வந்தனையின்ற
சம்புவின் மைந்தன் சரவண பாலனை
தானெதிர் கொண்டனன் மாலுமே

மாமன் அருமை மருகனென்று செய்ய
பூமகள் உச்சி முகர்ந்திட சீர் பெருந்
தாமரைக் கண்ணன் தழுவி யணைத்தனன்
சண்முகக் கண்மணி யென்னவே.




ராஜம்


இப்புத்தகம் திட்டம்போடுபவர்களுக்கும், சமூக சீர்திருத்தக் காரர்களுக்கும், ஜன சமூக திட்டச் செயலாளர்களுக்கும், கிராம பஞ்சாயத்துகளுக்கும் ஜில்லா போர்டுகளுக்கும், முனிசிபாலிடிகளுக்கும் மிகவும் உதவியாயிருக்கும்.
கூப்பன்
9, மவுண்ட் ரோடு, மதராஸ்.
பெயர்
விலாசம்
our villages
பிரதி ஒன்றுக்கு ரூ. 1/-
தபால் செலவு அணா 10 தனி.



சொல்லமுடியாதல்லவா போய்விட்டது!

டி.கே.சி.

நமக்குத் தெரியும் ராமபக்தர் ஒருவர் நாடகத்துக்குப் போன கதை.

நாடக மேடைக்கு முன்னால் பக்தர் உட்கார்ந்திருந்தார்.

ராம நாடகம் நடக்கிறது. தசரதன் கைகேயி சொல்லை மறுக்க மாட்டாமல் ராமனைக் காட்டுக்குப் போகச் சொல்லுகிறான். ராமனும் தாமசப் பண்ணாமல் காட்டுக்குப் போக இணங்கி விடுகிறான்.

நாடக மேடைக்கு எதிரில் முன்னணியில் இருந்த பக்தருக்கு இந்த அநீதியைத் தாங்க முடியவில்லை. கோபம் பொங்கி விட்டது. எழுந்திருந்தார். ஒரு தாவுத் தாவி நாடக மேடைக்குப் போனார். ராமனைப் பார்த்து "நீ நல்லவன். நீ போக வேண்டாம் காட்டுக்கு" என்று ஒதுக்கி நிறுத்தி விட்டு, தசரதனிடம் போய் "நீ சுத்த அயோக்கியன். நீ போ காட்டுக்கு. இந்தக் கைகேயியையும் கூட்டிக் கொண்டு போ" என்று ஒரே கர்ஜனையாகக் கர்ஜித்து இரண்டு பேரையும் நாடக மேடைக்கு வெளியே தள்ளி விட்டார். முடிந்தது ராம நாடகம்!

'நாடகம் உருப்படுகிறதாவது ஒன்றாவது இனி' என்று டிக்கட் வாங்கினவர்கள் எல்லாரும் கொட்டகையைக் காலி செய்து விட்டுத் தங்கள் வீடு போய்ச் சேர்ந்தார்கள்.

நம்முடைய ராமபக்தர் ரகத்திலச் சேர்ந்த ராமாயண ஆசிரியர்களும் ராமாயண காலக்ஷேப பக்த சிகாமணிகளும் எத்தனையோ பேர்.

ஒரு நல்ல பாத்திரமாய் இருந்தால் ஜீவபோகட்டும் என்று சோர்வோ பழுதோ இல்லாமல் திருத்தமாய் அமைத்து விடுவார்கள் பாத்திரத்தை.

'ஜடாயு, அடாடா! எவ்வளவு புனிதமானவன். ராமனிடத்தில் எவ்வளவு வாஞ்சை! அப்பேர்ப் பட்ட ஜடாயுவையா சோர்வுபட அமைப்பது? கூடவே கூடாது' என்று எண்ணி ஒரு யுக்தி பண்ணினார்கள்.

ராவணனால் வெட்டுண்டு மூர்ச்சையாய்க் கிடக்கிறான் ஜடாயு. சீதையை இழந்த ராம லக்ஷ்மணர்கள் ஜடாயுவைக் கொஞ்சம் சௌகர்யம் செய்து கொஞ்சம் அறிவு தெளியச் செய்தார்கள். ராம லக்ஷ்மணர்களைப் பார்த்தவுடனே "நல்லதாய்ப் போயிற்று நீங்கள் இங்கே வந்தது. சீதை காணாமல் போய் விட்டாள். கவலை வேண்டாம். இலங்கைக்கு அதிபதியான அரக்கன் ராவணன்தான் தூக்கிக் கொண்டு போய் விட்டான், என்னையும் இந்தப் பாடு படுத்தி விட்டு" என்று சொல்லி, இராவணனுடைய விலாசத்தை விட்டு நம்பர், தெருப் பெயர், இன்ன வார்டு, இன்ன பட்டணம் என்று விவரமாக எழுதிக் கொடுத்து விட்டான். (ஜடாயு சொன்னது, எழுதிக் கொடுத்த மாதிரி இருந்தது.)

ஜடாயு மேல் குற்றம் இல்லை பார்த்தீர்களா? லகுவாய்ப் போய்விட்டது காரியம். குரங்குகள் போய்த் தேடுகிறது. அநுமான் போய்த் தேடுகிறது எல்லாம் அநுகூலியமாகி வெகு சௌகர்யமாய் முடிகிறது ராமாயணம்.

நம்முடைய மேலே சொன்ன ராமபக்தருக்கு எத்தனை சகாக்கள் பார்த்தீர்களா? அவர்கள் காரியம் இருக்கட்டும் அப்படி.

* * *

இனி கம்பருக்கு வரலாம், கதையை அவர் எப்படி நடத்துகிறார் பார்க்கலாம்.

ராமலக்ஷ்மணர்கள் சீதையை இழந்தவர்களாய்த் துயரத்தில் மனம் மழுங்கித் தள்ளாடித் தள்ளாடி

நடந்து வருகிறார்கள். எங்கே தேட? ஏதோ உணர்வற்ற உருவங்கள் போல் நடந்து வருகிறார்கள்.

வழியில் ஜடாயு உயிர் போன நிலையாய்க் கிடப்பதைக் கண்டார்கள். ஓடிப் போய் அப்படியே ஜடாயுவின் உடலின் மீது விழுந்தார்கள்.

அந்த அதிர்ச்சியில் உயிர் நாடி துடிப்பதைக் கண்டார்கள் ஜடாயுவின் உடலில். தண்ணீர் கொண்டு வந்து முகத்தில் விட்டார்கள். கொஞ்சம் உணர்ச்சி வந்தது ஜடாயுவுக்கு. கண்ணைத் திறந்து பார்த்தான். ராம லக்ஷ்மணர்களை இனம் தெரிந்து கொண்டான்.

ஒரே சந்தோஷம் உண்டாய் விட்டது ஜடாயுவுக்கு. சொல்லுகிறான்: "இந்த உயிர் போகத்தான் போகிறது. ஆனாலும் உங்களுக்கு உண்மையைச் சொல்லிவிட முடிகிறதல்லவா எனக்கு. என்ன பாக்கியசாலி நான். இரண்டு இறக்கையும் பெற்றேன். ஏழுலகத்தையும் பெற்றேன். பழியைத் தீர்த்தேன்" என்றெல்லாம் ஆவேசத்தோடு பேசுகிறான்.

மேலும் பேசுகிறான்: "நானே யூகித்துக் கொண்ட காரியந்தான். உங்களை வஞ்சித்துச் செய்த காரியந்தான். இருக்கட்டும். நீங்கள் இரண்டு பேரும் சீதையை விட்டுப் பிரிந்திருக்க நேர்ந்ததோ?" என்று கேட்டான்.

லக்ஷ்மணன், மாயமான் வந்தது முதலான சகல காரியங்களையும் ஒன்று விடாமல் சொல்லி முடித்தான். ஜடாயு மிக்க ஆதரவோடு கேட்டு விஷயத்தை மனதில் வாங்கிக் கொண்டான்.

ஆனாலும் அவனது மனதில் ஒரு பயம் நேர்ந்தது. நடந்த விஷயத்தை அப்படியே திடீர் என்று சொல்லி விட்டால் துயர் தாங்காமல் ராம லக்ஷ்மணர்களுக்கு மூளை கொதித்து விடுமோ என்று பயந்தான்.

ஆற்றலோன் அவ்வுரை
அறைய, ஆசையால்
ஏற்றுணர்ந்(து) எண்ணிஅவ்
எருவை வேந்தனும்,—
மாற்றரும் துயர்அவர்
மனக்கொளா வகை
தேற்றுதல் நன்றென
இனைய செப்புவான்.

[ஆற்றலோன் அவ்வுரை அறைய — பெருந் திறமை வாய்ந்த அந்த லக்ஷ்மணன் அப்படிச் சொல்ல. ஆசையால் ஏற்றுணர்ந்து எண்ணி — மிக்க ஆர்வத்தோடு யோசனை செய்து மனதில்





வாங்கி. அவ் எருவை வேந்தனும்—அந்த ஜடாயுவும். மாற்றரும் துயர் — மாற்ற முடியாத கடும் துயரம். அவர் மனக் கோளாவதை — ராம லக்ஷ்மணர்களது மனமெல்லாம் விடாதபடி, மனக சிதைந்து போகாதபடி. தேற்றுதல் நன்றென — மென்மைத் தேற்றுதல் நல்லது என்று. இனைய செப்புவான்—பின் வருவனவற்றைச் சொல்லுகிறான்.]

“அற்புதம் எதையாவது ஒருவன் இந்த உலகத்தில் செய்துவிட முடியுமா, முடியாது. நம்முடைய பிறவியில் இன்ப துன்பங்கள் எத்தனையோ வந்து சேருகின்றன. அந்த இன்ப துன்பங்கள் எல்லாம், விதி ஏற்படுத்தியதே ஒழிய வேறு யாரும் செய்தது அல்ல என்பது உண்மை. இதை ஞாபகத்தில் வைத்துக் கொள்வது நமது கடமை.

‘அதிசயம் ஒருவரால்
அமைக்க லாகுமோ?

துதிஅறு பிறவியின்
இன்ப துன்பந்தான்,

விதிவயம் என்பதை,
மேற்கோ ளக்கடன்,—

மதியினும் விதிஅதை
வெல்ல வல்லமோ.’ ”

[அதிசயம்—காரண காரிய விபரீதப்படி, சகல காரியங்களும் நடக்க, அதை மீறிச் செய்வதாகச் சொல்லும் அற்புதச் செயல். துதி அறு பிறவியின்—பாராட்டுக்கு உரியது அல்லாத இந்தப் பிறவியின். மேற்கோளக் கடன்—மனதில் பதிய வைத்தல் கடன். மதியினும் விதி அதை வெல்ல வல்லமோ—எவ்வளவு யோசனையிலிருந்தாலும் விதியை வெல்ல முடியுமா நமக்கு; முடியாது.]

தான் கண்ட காட்சியை, அதாவது சீதையை ராவணன் தூக்கிக் கொண்டு போன காட்சியை, ராமனிடம் சொல்ல ஜடாயுவுக்கு மனம் துணியவில்லை; யாருக்குத்தான் துணிவு வரும்? உள்ளம் ரொம்பத் தயங்குகிறது. எப்படியோ மனசைத் திடப்படுத்திக் கொண்டு ஒரு சாய்வான போக்கில் பேசுகிறான் ஜடாயு. “சீதையைப் பிரிதற்கான காரணம் தெரிகிறது எனக்கு. தர்மம் சிதைவுண்டு போய்விட்டது; தேவர்கள் துயரத்துக்கு உள்ளாகி விட்டார்கள்; பின்னே என்ன? அந்த தர்மமும் தேவர்களது துயரமும் சேர்ந்துதான் இந்தத் துன்பத்தை விளைத்திருக்கின்றன.

“சரி, அரக்கர்களை உலகத்தை விட்டுக் களைய வேண்டியதுதான். அதன் பிறகு நல்ல வாழ்வு ஏற்படும்.”

பின்னைச்சொல் கிளிஅன்னா ளைப்
பிரிவுறல் உற்றபெற் றி,

நன்னூற்ற அறமும்தே வர்
துயரமும் தந்ததே யால்,—

கள்ளப்போர் அரக்கர்என் னும்
களையினைக் களைந்துவாழ் தி!

புள்ளிற்கும் புலனில்பேய்க் கும்
தாயன்ன புலவுவே லோய்!

[பின்னைச் சொல் கிளி அன்னாளை—குழந்தை பேசும் சொல்லுடைய கிளி போலும் சீதையை. பிரிவுறல் உற்ற பெற்றி—பிரியும்படி நேர்ந்த காரியம். நன்னூற்ற அறமும்—புறக்கணிக்கப் பட்ட தர்மமும். தேவர் துயரமும்—தேவர் படுகிற துன்பமும் சேர்ந்து. தந்ததே ஆல்—செய்த காரியந்தான்.

கள்ளப் போர் அரக்கர் என்னும்—கள்ளத்தனமாகவே போர் செய்து வருகின்ற அரக்கர் என்னும். களையினைக் களைந்து வாழ்தி—உலகத்துக்குக் களையாயிருக்கிற அரக்கரைக் களைந்து வாழ்வாயாக. புள்ளிற்கும் புலனில் பேய்க்கும்—போர்க்களத்தில் வந்து மொய்க்கும் பருந்து கழுகு முதலிய பறவைகளுக்கும் பகுத்தறிவில்லாத பேய்களுக்கும். தாயன்ன புலவு வேல்—தாய் ஊட்டுவது போல உணவு அளிக்கும்வேலாயுதம். வேலோய்: அத்தகைய வேலைக் கையில் ஏந்திய வீரனே.]

மேலே சொன்ன மாதிரி, திக்கித் திக்கி விஷயத்தைச் சொன்னான் ஜடாயு. ஒரு அரக்கன்தான் சீதையை எடுத்துக் கொண்டு போய் விட்டான் என்றும், ஜடாயுவின் சிறகை அறுத்தவன் அந்த அரக்கனே என்றும் சொல்லவில்லை. ஆனாலும் ராமன் அனுமானித்துக் கொண்டான். கோபம் அப்படியே மூண்டு விட்டது. குமுறுகிறான்.



"பெண்தனி ஒருத்திதன் னைப்
பேதைவாள் அரக்கன்பற் றிக்
கொண்டனன் ஏக, நீ இக்
கோளுறக், குறுங்கண்செய் யா
எண்திசை இறுதியா ன
உலகங்கள் இவற்றைஇன் னே
கண்டவா னவர்களோ டும்
களையுமா(று) இன்றுகாண் டி!"

[பெண் தனி ஒருத்தி தன்னை—தனியாக இருக்க நேர்ந்த ஒரு பெண்ணை. பேதை வாள் அரக்கன்—மிக்க மூர்க்கனான வாள் ஏந்திய யாரோ ஒரு அரக்கன். பற்றிக் கொண்டனன் ஏக—எடுத்துக் கொண்டு போக. நீ இக் கோள் உற—நீயும் இந்த மானபங்கத்துக்கு உள்ளாக. குறுங்கண் செய்யா, எண் திசை இறுதியான—குறுங்கி கொதுங்கிப் போயிருக்க வேண்டும்; அப்படிப் போகாத எட்டுத் திசையும் முட்டியுள்ள. உலகங்கள் இவற்றை—இதோ தெரிகிற உலகங்களை. இன்னே—இந்த க்ஷணமே. கண்ட வானவர்களோடும்—இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருக்கிறார்களே தேவர்கள் அவர்களையும் சேர்த்து. களையுமாறு இன்று காண்டி—இதோ களைந்து விடுகிறேன் பார்! இராமனுடைய பேச்சு எல்லாம் ஜம்பக் கோளாறுதான்.]

பார்த்தான் ஜடாயு: அடடா, இந்த ராமனுக்குக் கோபவெறி எப்படி உண்டாய் விட்டது! மூளை கொதித்து விட்டதே! இதை எப்படித் தணிப்பது? என்று நினைத்தவனாய் அப்படியே இருந்து விட்டான். சிறிது நேரம் கழித்து ஒரு யோசனை தென்பட்டுப் பேச ஆரம்பிக்கிறான்:

"உலகத்தில் உள்ளவர்களையோ தேவர்களையோ யாரையோ குற்றம் சொல்ல என்ன இருக்கிறது? நம்மைத்தான் நொந்து கொள்ள வேண்டும்.

'வம்பிழை கொங்கைவஞ் சி
வனத்திடைத் தமியள்வை கக்,
கொம்பிழை மானின்பின் போய்க்
குலப்பழி கூட்டிக்கொண் டீர்!
அம்பிழை வரிவிற்செங் கை
ஐயன்மீர்! ஆயுங்கா லை
உம்பிழை என்பதல் லால்,
உலகஞ்செய் பிழையுமுண் டோ?'"

[வம்பிழை கொங்கை வஞ்சி—வார் அணிந்த கொங்கையோடு கூடிய பூங்கொடி போன்ற சீதை. வனத்திடைத் தமியள் வைக—காட்டில் தனியாக இருக்க. கொம்பிழை மானின் பின் போய்—அழகாகக் கொம்பாக அமைந்த மானின் பின் போய். குலப் பழி கூட்டிக் கொண்டீர்—உங்கள் குலத்துக்கே பழியை உண்டாக்கிக் கொண்டீர்கள், நீங்கள் இருவருமேதான். அம்பு இழை வரிவில் செங்கை ஐயன்மீர்—அம்பு தொடுக்கும் வில் ஏந்திய வீரர்களே, அரச குமாரர்களே. ஆயுங்காலை—கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால். உம்பிழை என்பது அல்லால்—நீங்கள் செய்த பிழை என்று தானே ஆகும், அப்படிக் கல்லாமல் உலகத்தார் பிழை செய்தார்கள் என்று ஏற்படுமோ!

குறிப்பு:—ராமனுடைய கோப வெறியைத் தீர்ப்பதற்கு வேறு வழியில்லாமல் கடுமையான இந்த வார்த்தைகளை ஜடாயு பிரயோகிக்கிறான். இந்த வார்த்தையால் ராமன் மனது புண்படும் என்று தெரியும். தெரிந்தாலும், அதுதான் கோப வெறிக்கு மருந்து என்று எண்ணிச் சொல்லுகிறான். மிக்க அன்பும் தயிரியமும் கலந்துள்ள பயமுறுத்தல். வார்த்தையிலுள்ள காரத்தை இதப்படுத்துவதற்காக, ராமன் ஒருவனைப் பார்த்துச் சொல்லாமல் இருவரையும் பார்த்துச் சொல்லுகிறான். லக்ஷ்மணனையும் சேர்த்துச் சொன்னது ஒரு நல்ல உபாயம்.]

ஜடாயுவின் கடுஞ்சொல் ராமனது இதயத்தில் போய்த் தைத்து விட்டது. அதன் மூலமாகக் கோப வெறி இறங்குகிறது.

கோப வெறியைத் தணிப்பதற்காகவே ஜடாயு இவ்வாறு சொன்னான் என்று ராமனும் தெரிந்து கொண்டான். ஜடாயுவைப் பார்த்துச் சொல்கிறான்:

"ஐயனே! உன் அருமை வாயால் கோபங் கொள்ளாதே என்று சொல்லுகிறாய்; அப்படியே செய்வது அல்லாது எனக்கு மற்றொரு செயல் ஏதாவது இருக்கிறதா?"

இவ்வாறு சொல்லி விட்டு, மெள்ளக் கேட்கிறான் ராமன்; கொஞ்சம் பயந்தே கேட்கிறான்.

ஆயபின் அமலன்தா னும்
'ஐய! நீ அமைதியென் ன
வாயிடை மொழிந்ததன் றி
மற்றொரு செயலுமுண் டோ!
போய(து)அவ் அரக்கனெங் கே
புகல்' எனப்;—புள்ளின்வேந் தன்
ஓய்வினன் உணர்வுந்தே ய
உரைத்திலன், உயிருந்தீர்ந் தான்.

[ஆயபின்—கோபத்தை விட்டபோ என்று ஜடாயுசொல்லவும், அப்படியே ராமனுக்குக் கோபம் தணிந்த பின். அமலன் தானும்—ராமனும். ஐய! நீ அமைதி என்ன—ஐயனே, என்னைப் பார்த்து நீ கோபங் கொள்ளாதே என்று. வாயிடை மொழிந்த தன்றி—வாய் திறந்து சிரமத்தோடு சொன்னதை யல்லாமல். மற்றொரு செயலும் உண்டோ—செய்வதற்கு வேறொரு செயலும் உண்டா.

போயது அவ் அரக்கன் எங்கே புகல் என—நீ சொன்ன அரக்கன் எங்கே போனான் என்பதைத் தயவு செய்து சொல்ல வேண்டும் என்று மெள்ளச் சொன்ன மாத்திரத்தில். என்ன நேர்ந்தது! புள்ளின் வேந்தன் ஓய்வினன் உணர்வும் தேய—ஜடாயு மிக்க அசதியுற்று உணர்வும் குறைந்தவனாய். உரைத்திலன்—பேச முடியாமல் போய் விட்டது. உயிரும் தீர்ந்தான்—உயிருமே போய் விட்டது.]

ராமனைக் கடுமையான வார்த்தை சொல்லிக் கண்டித்த மாதிரி பேச வேண்டும் என்ற சிரமத்திலேயே ஜடாயுவுக்கு அசதி ஏற்பட்டது. ஓய்வும் ஏற்பட்டது. உணர்வின்மையும் ஏற்பட்டது. உயிருமே போய் விட்டது.

விஷயத்தைச் சொல்ல முடியாது போய்விட்டது.

இதிகாசம் வளருகிறது. அற்புதமான உத்தி!

குறிப்பு: செருகு கவிப் புலவர்களை நமக்குத் தெரியும். கதை எப்படிப் போனால் என்ன அவர்களுக்கு? ஜடாயுவை எப்படியாவது கல்லவனாக்கி விட வேண்டும்! அதற்காகப் பாடல் பாடிச் செருகி விட்டார்கள். பூர்வ ஆசிரியர்கள் என்ன, கம்பர் என்ன, எல்லாருக்கும் பேருதவிதான்!

பழைய பதிப்பில் உள்ள ராமாயணத்தின்படி ஜடாயு உயிர் நீத்த படலம் எழுநூறாவது பாட்டு. ஜடாயு ராமனிடம் சொல்லுவதாகப் பாடல்:

"வடுக்கண்நேர் கூந்தலா ளை
இராவணன் மன்னிவூ டும்
எடுத்தனன் நேருவா ளை
எதிர்த்தென தாற்றல்கொண் டு
தடுத்தனென் ஆவதேல் லாம்:
தவத்(து)அரன் தந்தவா ளப்
படுத்தனன்: இங்குவீழ்ந் தேன்
இறுதின்று பட்டதேன் றுன்."

பொருளுக்கும் உத்திக்கும் ஏற்றவாறு செய்யுள் பண்பும் அமைந்திருக்கிறது!

★ குழந்தைகளின் விளையாட்டுகள் எல்லாம் இன்பம் பயப்பவை. எனில், கோகுலத்தில் கண்ணன் செய்த லீலைகள் அன்னை யசோதைக்கு எவ்வளவு ஆனந்தம் அளித்திருக்கும்! பின்னொரு காலத்தில் குரு க்ஷேத்திரத்தில் தனஞ்சயனுக்காக ரதம் செலுத்திப் பாஞ்ச ஜன்யம் ஊதிக் கீதையை உபதேசித்த ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவே கோகுலத்தில் குழந்தையாக வளர்ந்தபோது யசோதையின் பின்னால் வந்து அவளுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு விளையாடுவான் என்பதைப் பெரியாழ்வார் எண்ணிப் பரவசமடைந்தார். அந்தத் தாயின் உணர்ச்சியில் நின்று பெரியாழ்வார் பாடியுள்ள பாடல்கள் தமிழுக்கோர் அருஞ் செல்வமாகும்.

நாந்தக மேந்திய
நம்பி சரணன்(று)

தாழ்ந்த தனஞ்சயற்
காகித் தரணியில்

வேந்தர்கள் உட்க
விசயன் மணித்திண்தேர்

ஊர்ந்தவன் என்னைப்
புறம் புல்குவான்!

உம்பர்கோன் என்னைப்
புறம் புல்குவான்!

குறிப்பு:—கீழே, தனஞ்சயனுக்கு ரதம் ஓட்டிய கிருஷ்ணனையும், மேலே, யசோதையைப் புறம் புல்கிய கண்ணனையும் இந்த இரட்டைச் சித்திரத்தில் காணலாம்.







★ பரமனைப் பாடிப் பரவிய சைவப் பெண்மணிகளுள் சிறந்த பக்தமணி காரைக்கால் அம்மையார். அவர் பாடல்களில் எளிமையும் அழகும் பக்தியும் பொருளும் ஒன்றுடன் ஒன்று கைகோத்துக் களி நடம் புரியும்.

அம்மையார் இளமையில் மணவாழ்க்கை மேற்கொண்டு செம்மையுறவே இல்லறம் நடத்தி வந்தார். ஆயினும் அவர் மனம் பெரிதும் ஆண்டவனிடம் பக்தி செலுத்துவதில் ஈடுபட்டிருந்தது. இதைக் கண்ட அவர் கணவர், வேறொரு நாட்டுக்குச் சென்று வேறொரு மடந்தையை மணந்து வாழலானார். இதை அறிந்த அம்மையார், தமக்குப் பேயுருவம் அருளும்படி பரமனை வேண்டிப் பெற்றார். உள்ளம் உருகி, மெய்யுருகி அவர் பல அற்புதப் பாடல்களைச் செய்தார். ஆண்டவனின் திருக்கூத்தில் ஈடுபாடு கொண்டார்.

அடிபேரில் பாதாளம்
பேரும் அடிகள்
முடிபேரில் மாமுகடு
பேரும்—கடகம்
மறிந்தாடு கைபேரில்
வான்திசைகள் பேரும்
அறிந்தாடும் ஆற்ற (து)
அரங்கு.

குறிப்பு:—'பாலே' என்ற சொல் படித்த மாத்திரத்தில் பாலேயின் முழு உருவமும் நம் மனத்துக்கு வருகிறது. அப்படியே காரைக்கால் அம்மையாருக்கு நடராஜ விக்கிரகத்தைப் பார்த்த மாத்திரத்தில் எல்லையில்லா அகவிடத்தில் ஆண்டவன் ஆனந்த நடமிடும் அற்புதக் காட்சியே தோன்றுகிறது. இந்த இரட்டைத் தன்மையை இந்த இரட்டைச் சித்திரத்தில் காணலாம்.



★ மகா கவி பாரதியார், "எங்கள் பைரவி பெற்ற பெருங் கனவே—வடி வேலவா!" என்று கூறினார்.

முருகப் பெருமான் பிறக்கும்போது பச்சிளங் குழந்தையாகத் தான் பிறந்தார். பார்வதி தேவி கொஞ்சி விளையாடக் கூடிய குமரனாகத் தான் இருந்தார். ஆனால் சூர-பத்மன் முதலிய அவுணர்களின் அட்டகாசமும், பக்தர்களின் தீனக் குரலும் கேட்டபோது குழந்தைக் குமரன், பெருங் கனலாகி, வெற்றி வடி வேலன் ஆகப் பரிணமித்தார்!

இதைக் குறித்து முருகப் பெருமானின் பரம பக்தர்களுள் முதல் பக்தரான நக்கீரர் சொல்லுகிறார் :—

குன்றம் எறிந்தாய்
குரைகடலில்
சூர்தடிந்தாய்
புன்தலைய பூதப்
பொருபடையாய்—
என்றும்
இளையாய் அழகியாய்
ஏறூர்ந்தான் ஏறே
உளையாயென் உள்ளத்(து)
உறை!

குறிப்பு :—கீழே பைரவியின் அருமைக் குழந்தையாக விளங்கும் தோற்றத்தையும், மேலே 'புன்தலைய பூதப் பொரு படையாய்' விளங்கும் கோலத்தையும், இந்த இரட்டைச் சித்திரத்தில் நமது சித்திரக்காரர் மணியத்தின் ஓவியத் திறமை சுடர் விட்டு ஒளிர்வதையும் நேயர்கள் கண்டு மகிழ்வார்கள்.





★ பாரத தேசத்துக்கும் காளிதாஸனுக்கும் ஒருங்கே சிறப்பளிக்கும் நாடகம் சாகுந்தலம். அந்தச் சாகுந்தலத்தில், மானை வேட்டையாடி வந்த துஷ்யந்த மன்னன், காசியப முனிவர் ஆசிரமத்தில் சகுந்தலையைக் கண்டு மையல் கொள்கிறான். அந்தச் சகுந்தலையைப் பற்றி அனசூயா என்ற அவளுடைய தோழியிடம் கேட்டுத் தெரிந்து கொள்கிறான் :

அரசன் :—பகவான் காசியபர் நித்திய பிரம்மசாரி என்று உலகறியும். உங்கள் தோழி அவர் மகளானது எப்படி ?

அனசூ :—ஐயா, கௌசிகர் என்ற கோத்திரப் பெயர் பூண்டு மகாப் பிரபாவமுள்ள இராஜ ரிஷி இருக்கிறார்.

அரசன் :— கேள்விப் பட்டிருக்கிறேன்.

அனசூ :— அவர் எமது தோழியின் பிறப்புத் தந்தை என்று அறிவீர். அவரால் கைவிடப்பட்ட இவளை வளர்த்த காசியப முனிவர் இவள் தந்தையா ராவார்.

குறிப்பு:—கீழே கண்வ முனிவர் சகுந்தலையைக் கண்டெடுத்த காட்சியையும், மேலே சகுந்தலையின் வரலாற்றை அனசூயை துஷ்யந்தனுக்குச் சொல்லும் காட்சியையும் இந்த இரட்டைச் சித்திரத்தில் தீட்டி யிருக்கிறது.

எமது பாலிஸிதாரர்கள்
அன்பர்கள் அனைவருக்கும்

தீபாவளி வாழ்த்துகள்

உங்களுக்கு வேண்டிய சகலவிதமான இன்ஷ்யூரன்ஸிற்கும் நாங்கள் குறைந்த விகிதங்களில் உயர்ந்தபக்ஷ அனுகூலங்களும், சிறந்தவசதிகளும் வழங்குகிறோம்

○★○

வான்கார்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

வான்கார்டு பயர் & ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

"வான்கார்டு ஹவுஸ்"

11 & 12, செகண்ட் லேன் பீச் - - - மதராஸ்-1

இந்தியன் பாங்க் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1907)



தலைமை ஆபீஸ்: 'இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்' - மதராஸ் - 1

★

அதிகாரம் பெற்ற மூலதனம்	- ரூ.	1,00,00,000
வாக்களிக்கப்பட்ட மூலதனம்	- ரூ.	72,00 000
செலுத்தப்பட்ட மூலதனம்	- ரூ.	57,80,000
ரிஸர்வும் இதர நிதிகளும்	- ரூ.	73,50,000
டெபாஸிட்டுகள் (30-6-53ல்)	- ரூ.	22,15,09,878

★

டைரக்டர்கள்:

ஸ்ரீ M. A. சிதம்பரம் செட்டியார்
ஸ்ரீ R. K. வெங்கடாசலம்
ஸ்ரீ R. சுந்தரம் அய்யர்
ராவ் பகதூர் M.R.M.S. பெரியண்ணன் செட்டியார்
ஸ்ரீ O. M. SP. L. M. மெய்யப்ப செட்டியார்
ஸ்ரீ A. M. A. MR. முருகப்ப செட்டியார்

ராவ் பகதூர் டாக்டர் M. R. குருஸ்வாமி முதலியார்
ஸ்ரீ C. கிருஷ்ணமூர்த்தி முதலியார்
ஸ்ரீ L. அழகசுந்தரம் செட்டியார்
ஸ்ரீ P.V. RM. குழந்தையன் செட்டியார்
ஸ்ரீ K. பாலசுப்ரமண்ய அய்யர்
ராவ் சாகிப் E. M. முத்தப்ப செட்டியார்

★

எல்லாவித பாங்கிங் அலுவல்களும் செய்யப்படும்

என். கோபாலய்யர்
காரியதரிசி



விஷப்பரீட்சை

லெப்டினண்ட் கவர்னர் க. சந்தானம்

1627-ம் வருஷம் ஜூன் மாதம் இருபத்தெட்டாம் தேதி. மாலை ஆறு மணி இருக்கும்.

ஓர்ச்சா நகர் முழுதும் அல்லோல கல்லோலமாக இருந்தது. பசுவைக் கொன்று வந்த புலியை வெட்டிக் கொன்றபோது, மகாராஜா வீரசிம்மன் தானும் காயமடைந்தான் என்ற செய்தி காட்டுத் தீபோல் எங்கும் பரவியது. அரச மாளிகையைச் சுற்றிலும் ஜனங்கள் திரண்டு கூடிப் பலத்த ஆரவாரம் செய்தனர்.

குதிரைமீது உட்கார்ந்தபடியே ஒரு சிப்பாய் நடந்ததைப் பின்வருமாறு விளக்கினான்: "ஒரு மணி நேரத்துக்கு முன் வழக்கம் போல் மகாராஜா குதிரைமேல் உலாவப் போனார். நானும் மற்றிருவரும் அவருடன் சென்றோம். வேத்ரவதியின் கரையோரமாக, அடர்ந்த காட்டில் காலடிப் பாதையின் வழியாகச் சென்றுகொண்டிருந்தோம். அவ்விதம் இரண்டு, மூன்று மைல் போயிருப்போம்; திடீரென்று ஒரு மாட்டின் பரிதாபமான தீனக்குரல் எங்களுக்குக் கேட்டது. 'பசுவைப் புலி அடிக்கப் போகிறது. நான் நேராகச் செல்லுகிறேன். நீங்களும் சுற்றுப் பக்கங்களில் போய்ப் பாருங்கள்' என்று குதிரையிலிருந்து குதித்து மன்னர் ஓடினார்.

"நாங்கள் அவரைத் தனியே விட்டுப் போகத் தயங்கினோம். உங்களுக்கு வீரசிம்மனின் குணம் நன்கு தெரியுமே! கோபத்துடன் எங்களை நோக்கினார். நாங்கள் பயந்து வெவ்வேறு திக்குகளில் ஓடினோம். சிறிது நேரத்தில் புலியின் கோரமான கர்ஜனை காடெங்கும் ஒலித்தது. காயம் பட்டாலொழிய புலி சப்தம் செய்யாதல்லவா? ஆதலால் மன்னர் புலியோடு சண்டை போடுகிறார் என்று நிச்சயித்து, சப்தம் வந்த திசை நோக்கி ஓடலானோம்.

"புலி வாளால் வெட்டப்பட்டுக் கிடந்தது. அருகில் மகாராஜா பல இடங்களில் காயமடைந்து விழுந்திருந்தார். தாக்கப்பட்ட பசு அசைவற்று அருகில் நின்றுகொண்டிருந்தது. மன்னரை நாங்கள் தூக்கி வருவது அபாயமென்று தோன்றியதால், நான் குதிரை மீது விரைந்து வந்தேன். மற்றத் தோழர்கள் மன்னரின் காயங்களைக் கட்டிப் பக்கத்தில் காத்துக் கொண்டிருக்கிறார்கள்."

சிப்பாய் மேற் கூறியவாறு சொல்லி முடிவதற்குள், அரண்மனையிலிருந்து இளவரசர் ஜுகவீரரும், மற்ற ராஜகுமாரர்களும், வைத்தியர், பல்லக்கு முதலிய தளவாடங்களைத் தாங்கிக் குதிரைகள்மீது வந்தனர். சிப்பாய் அவர்களுக்கு முன் வழி காட்டிக் கொண்டு விரைந்து சென்றான்.

சிறிது நேரத்துக் கெல்லாம் காட்டிலிருந்து மன்னனைப் பல்லக்கில் ஏற்றி ஊர்வலம் போல் வந்தார்கள். மறு நாள் வீரசிம்மன் பட்டம் சூடிய தினமான நாள், நகர் முழுதும் தோரணங்களால் அலங்கரிக்கப் பட்டிருந்தது. வீதியின் இரண்டு பக்கங்களிலும் ஜனங்கள் மௌனமாகக் கண்ணீர் விட்டுக் கலங்கி நின்றனர்.

இருபத்தோரு வருஷங்களுக்கு முன் வீரசிம்மன் சிம்மாசனம் ஏறிய பொழுது, ஓர்ச்சா ராஜ்யம் ஓர் சிற்றரசாக இருந்தது. தனது வீரத்தாலும், சாமர்த்தியத்தாலும், மொகல் பாதுஷா ஜிஹாங்கீரின் நட்பினாலும் ராஜ்யத்தைப் பெருக்கிப் புந்தேல்கண்டு முழுதும் தனது குடைக்குள் பொருந்தி வாழும்படி செய்தான். அதன் காரணமாக அவனுக்கு 'புந்தேல் கண்டு புலி' என்ற பெயரும் வழங்கி வந்தது.

அப்படியிருக்க, ஒரு சாதாரணமான புலியால் இம் மன்னனுக்கு இக் கதி நேரிட வேண்டுமா? ஆயினும், பசுவுக்காகத் தன்னுயிரைப் பலி கொடுப்பதற்கு வீரசிம்மன் எவ்வளவு ஜென்மம் புண்ணியம் செய்திருக்க வேண்டும்? போர்க்களத்தில் உயிர் துறந்து வீரச் சொர்க்கம் அடைவதற்கு மேலானதல்லவா இது? என்றெல்லாம் புலம்பினர் பொது மக்கள்.

ஊர்வலம் அருகில் வந்ததும், முன் வந்த சிப்பாய், "மகாராஜா வீரசிம்மருக்கு அபாயமான காயம், ஆனால் உயிருடனிருக்கிறார்" என்று

சொல்லிக் கொண்டே போனான். பல்லக்கு மாளிகைக்குள் சென்றதும் கூட்டம் அங்கிருந்து கலைந்து சென்றது.

2

அன்றிரவு, பள்ளி அறையில் ஒரு கட்டிலில் வீரஸிம்மன் மரணத்துக்கு முன்னதாக நரக வேதனையை அனுபவித்துக் கொண்டிருந்தான். தலை மாட்டில் முதல் ராணி அமிர்த குமாரியும், யுவராஜன் ஜுகவீர ஸிம்மன், பர்வத ஸிம்மன், கரதனிதாஸ், துளஸிதாஸ், வேணிதாஸ் முதலிய அவனுடைய ஐந்து புத்திரர்களும் உட்கார்ந்திருந்தனர். காலடியில் மூன்றாவது ராணி பஞ்சம குமாரியும், அவளுடைய மூன்று குமாரர்களான வாஸேஸ், மாதவ ஸிம்மன், பரமானந்தன் முதலியோரும் வீற்றிருந்தனர்.

இரண்டாவது ராணி குணகுமாரி சில வருஷங்களுக்கு முன் இறந்து விட்டாள். அவளுக்குப் பிறந்த ஹரிதோஸ், பகவான் தாஸ், சந்திரபான், கிருஷ்ண ஸிம்மன் என்ற நான்கு ராஜகுமாரர்களும் நடுவில் அமர்ந்திருந்தார்கள். அறையில் ஒரு மூலையில் யுவ ராணி சத்தியவதி தேவி விம்மி விம்மி அழுது கொண்டிருந்தாள். சூரியோதயத்திற்கு முன் மகா ராஜாவின் மரணம் நிச்சயம் என்று வைத்தியர்கள் கூறி விட்டனர்.

வீர ஸிம்மன் பூரணப் பிரக்ஞையுடன் இருந்த போதிலும் அவர்கள் எவரையும் பார்க்கவில்லை. புண்களின் வேதனையைக் குறிக்கும் எவ்விதத் தொனியும் அவனிடமிருந்து எழவில்லை.

ஆனால் அவன் கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக வழிந்து வந்தது. அவன் கண்ணீரை அவர்கள் கண்டது இதுதான் முதல் தடவை! இது உடல் புண்ணும் அல்ல, ஏதோ மனோ வேதனையால்தான் என்று எல்லோரும் ஊகித்தனர். இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் நடந்த கொடிய சம்பவம் வீரஸிம்மன் கண் முன் சுவரின் மீதுள்ள சித்திரம்போல் தோன்றியது.

1602-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 12-ந் தேதி, வெள்ளிக்கிழமையன்று அக்பர் சக்கரவர்த்தியின் அந்தரங்க அமைச்சனும், பேரறிவாளியுமான அபுல் பாஸல் ஓர்ச்சாவுக்கு இருபது மைல் தூரத்தில் தங்கி யிருந்தான்; தக்ஷிணத்தில் யுத்தத்தை முடித்துக் கொண்டு டில்லி திரும்பிச் சென்று கொண்டிருந்தான். அன்று ஓர் முகம்மதிய சுப தினமானதால் மத்தியானம் நீண்ட பிரார்த்தனை நடந்தது.

அச்சமயம் வீரஸிம்மன் தனது சைனியத்துடன் சென்று அவர்களைத் தாக்கி மந்திரியின் கூட்டாளிகளைக் கொன்று விட்டான். ஒரு ஈட்டியால் குத்தப்பட்டு அபுல் பாஸல் கீழே விழுந்தான். அவனிருக்குமிடம் விரைந்து வந்து, வீரஸிம்மன் அவனை உயிருடன் தூக்கிச் செல்லுமாறு தன் ஸிப்பாய்களுக்கு உத்தர விட்டான். அதைக் கேட்ட அபுல் பாஸல் கண்விழித்து வீரஸிம்மனைக் கொளுத்துவதுபோல் பார்த்து அவன்மீது காறி உமிழ்ந்தான். இந்த அவமானத்தைப் பொறுக்க முடியாத ஒரு ராஜபுத்திர ஸிப்பாய் அபுல் பாஸல் தலையைத் தன் வாளால் வெட்டி உடலிலிருந்து வேறாக்கி விட்டான். அத்தலையுடன் வீரஸிம்மன் ஆக்ராவுக்குச் சென்று, அதற்காக ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்த அக்பர் குமாரன் ஸலீம் (பின்னர் ஜிஹாங்கீர்) இடம் சமர்ப்பித்து அவனுக்கு உயிர் நண்பன் ஆனான்.

இத்தருணத்தில் அபுல் பாஸலின் தலையும், அன்று கொன்ற புலியின் கண்களும் மாறி மாறி வீரஸிம்மனின் கண்முன் தோன்றின. தான் செய்த கொலையின் பலனாக உயிர் துறப்பதில் அவனுக்கு அதிகத் துயரமில்லை. தனது தர்மத்தை மீறி அக்கிரமச் செயல் செய்து ராஜபுத்திர குலத்துக்கே என்றும் அபகீர்த்தி சம்பாதித்ததை நினைத்து வருந்தினான். அதற்காகத் தான் என்ன நீசப் பிறப்புகள் எடுக்க வேண்டுமோ என்று நடுங்கினான்.

இவ்விதம் வெகுநேரம் சிந்தித்து, சோகக் கடலில் மூழ்கி இருக்கையில், ஹரிதோஸ் தந்தை அருகில் வந்து அவர் காதில், "அப்பா, வீணில் வருந்தாதீர்கள். ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தியை நினைத்துக் கொள்ளுங்கள்; தங்கள் குற்றங்களை யெல்லாம் மன்னித்து, அபயம் அளிப்பார்" என்று மெதுவாகக் கூறினான்.

வீரஸிம்மன் திடுக்கிட்டுத் திரும்பினான். தன் பிரிய புத்திரனைப் பார்த்துப் புன்சிரிப்புடன், "ஆமாம், ஹரிதோஸ்! எனக்கு வேறு சரணமில்லை. சத்தியவதிக்கு ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி கோயில் கட்ட வாக்களித்திருந்தேன். எனக்குப் பிறகு நீதான் பூர்த்தி செய்ய வேண்டும்" என்று சொன்னான்.

பிறகு மற்றவர்களைப் பார்த்து "நீங்கள் துக்கப்பட வேண்டாம். ஒற்றுமையாக இருந்து இந்த ராஜ்யத்தைக் காப்பாற்றுங்கள். ஜுகவீரனுடன் தனிமையில் பேச வேண்டும். மற்றவர்கள் சிறிது நேரம் அடுத்த அறையில் போய் இருங்கள்" என்றான் வீரஸிம்மன்.

ஒவ்வொருவராக அரசன் முன் வந்து நமஸ்காரம் செய்து அவன் காலைத் தொட்டு விட்டு அங்கிருந்து வெளியே சென்றனர்.

எல்லோரும் சென்று விட்டபின், இளவரசன் ஜுகவீரனை அழைத்து, "உன் வீரத்தைப் பற்றி எனக்குச் சந்தேகமில்லை. ஆனால் ஆத்திரப் படாமல், சாவதானமாக ராஜ்யத்தைப் பரிபாலனம் செய். எக்காரியத்திலும் சத்தியவதியின் யோசனையைக் கேட்டுச் செய். ஹரிதோஸ் உனக்காகத் தன்னுயிரைக் கொடுப்பான். அவனையே நம்பு. என் சக்தி குறைந்து வருகிறது. புரோஹிதரையும் மற்றவர்களையும் வரச்சொல்" என்றான்.

சிறிது நேரத்தில் மன்னன் வீரஸிம்மனின் மூச்சு நின்றது.

3

ஜுகவீரஸிம்மன் தன் தந்தையின் அந்திம உபதேசத்தை மறக்கவில்லை. ஹரிதோஸைத் தன் முக்கிய மந்திரியாக்கினான். இது அவனுடைய சொந்த சகோதரர்களுக்குச் சிறிதும் பிடிக்கவில்லை. ஆயினும் பொதுஜன ஆதர



ளும், சைனியத்தின் உறுதியான பக்தியும் ஹர்தோல் பக்கமிருந்து வந்ததால் அவனை எதிர்க்க முடியவில்லை.

சிக்கலான பிரச்னைகளில் புது மன்னர் தம் மனைவி சத்தியவதியின் ஆலோசனையையும் நாடினார். அவளுடைய தெய்வ பக்தியின் காரணமாக ஜனங்கள் அவளை 'ஓர்ச்சா மீரா பாய்' என்று அழைப்பது உண்டு.

சத்தியவதிக்குப் பன்னிரண்டாம் வயதிலேயே ஜுகவீரனுடன் விவாகமாயிற்று. அவள் ஓர்ச்சா மாளிகையில் புகும்பொழுது இரண்டாவது ராணி குண குமாரி மரண சயனத்தில் இருந்தாள். தனக்கு நமஸ்காரம் செய்யும் சத்தியவதியிடம் பத்து வயதுள்ள ஹர்தோலை ஒப்புவித்து, "நீதான் இவனையும், என் மற்றக் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டும்" என்று சொன்னாள். சத்தியவதி ஒன்றும் பேசவில்லை. ஆனால் சாகும் ராணியின் வேண்டுகோளைக் கடவுள் கட்டளையாகக் கொண்டாள்.



அன்று முதல் ஹர்தோல் அவளை 'அம்மா' என்று அழைக்கத் தொடங்கினான். அவளும் அவனை மகன்போல் பாவித்தாள். இருவரும் வாலிபர்களாக இருக்கும்பொழுது இது சகஜமாகத் தோன்றிற்று. ஆனால் இருபத்தைந்து வயதுள்ள சத்தியவதி இருபத்தி மூன்று வயதுள்ள ஹர்தோலிடம் கூச்சமின்றிப் பழகுவது பலருக்குப் பிடிக்கவில்லை. முக்கியமாக இது முதல் ராணி அமிர்த குமாரிக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது. தனது கணவனிடம் அடிக்கடி முணுமுணுத்தாள்.

ஆனால் வீரசிம்மன் அதைப் பொருட்படுத்தவில்லை. ஹர்தோல், சத்தியவதி இருவரிடமும் அவனுக்கு அளவில்லாத பிரியமும், நம்பிக்கையும் உண்டு. ஜுகவீரனுக்குப் பட்டாபிஷேகமானதும் அமிர்த குமாரி மகனிடம் தனிமையில், "நமது ரஜபுத்திர சம்பிரதாயத்துக்கு இது முற்றிலும் விரோதமானது. வயது வந்த ரஜபுத்திர மங்கை தனது கணவனைத் தவிர வேறு எந்தப் புருஷனையும் கண்ணால் பார்க்கலாகாது. எவனுடனும் பேசக் கூடாது. ஹர்தோல் உன் தம்பியானாலும், இம்மாதிரி இருவரும் குலாவி வந்தால், நமது குலத்துக்கு நிச்சயம் அவதூறு ஏற்படும்" என்றாள்.

ஜுகவீரன் சிறிது தயங்கினான். ஆனால் பல வருஷங்களாகத் தாய், மகன் போல் பழகி வந்தவர்களை இப்பொழுது எப்படித் தடுப்பது? இப்போது தடுத்தால், அதுவே வம்புக்கு இடமாகாதா? இவ்வாறு எண்ணி அவன் மௌனமாக இருந்தான்.

ஜுகவீரனுக்கு வேட்டையிலும், ஆடம்பரத்திலும், யுத்தத்திலும் மிகவும் பிரியம். தன் தந்தையைப் போல் பக்கத்து ராஜ்யங்கள் மீது படையெடுத்துத் தனது ராஜ்யத்தைப் பெருக்கிக் கொள்ள விரும்பினான். ஆனால் ஹர்தோல் அவனைத் தடுத்தான். வீரசிம்மனிடம் பயந்து கிடந்த சர்தார்கள் அவன் இறந்ததும் அத்து மீறத் தொடங்கினார்கள். அரசனுக்குரிய வரிகளைக் கொடாமல், தங்கள் சைனியங்களைப் பெருக்கிக் கோட்டைகளைப் பலப்படுத்தி வந்தனர். அவர்களை அடக்கி ஆளுவதே புது மன்னனின் முதல் வேலை என்று ஹர்தோல் அடிக்கடி வற்புறுத்தினான்.

தவிர தனது புத்திரர்களுக்கு ஆயிரக் கணக்கான கிராமங்களை வீரசிம்மன் ஜாகீராகக் கொடுத்து விட்டதால், ராஜ்யத்தின் வருமானம் மிகவும் குறைந்து விட்டது. ஓர்ச்சா ராஜ்யத்தின் நண்பனான மொகலாய சக்கரவர்த்தி ஜிஹாங்கீரை அவன் மகன் ஷாஜஹான் சிறைப்படுத்தி வைத்திருந்தான். இத் தருணத்தில் ஏதாவது செய்தால், ஷாஜஹானின் விரோதம் ஏற்படலாம் என்று ஹர்தோல் கூறினான். ஜுகவீரன் இக் கருத்துக்களை ஏற்று, யுத்த எண்ணத்தை அடக்கிக் கொண்டான். ஆனால், ஹர்தோல் மீது அவன் மனத்தில் அருவருப்புத் தோன்றி வளர்ந்து வந்தது.

4

ஜிஹாங்கீர் 1627-ம் வருஷம் அக்டோபர், 16-ம் தேதி இறந்தான். அடுத்த வருஷம் பிப்ரவரி 6-ம் தேதி, ஷாஜஹானுக்குப் பட்டாபிஷேகம் நிச்சயிக்கப்பட்டது. அதற்கு விஜயம் செய்யுமாறு ஜுகவீரனுக்கு விசேஷ அழைப்பு வந்தது. புதிய பாதுஷாவுடன் பட்டாபிஷேகத்துக்கு முன்னும் பின்னும் சில மாதங்கள் இருக்க வேண்டும் என்றும் குறிப்பிடப் பட்டிருந்தது. ஜுகவீரன் ஆயிரம் குதிரை வீரர்களுடன் சென்றான்.

ஜுகவீரன் டில்லியில் இருக்கும் சமயத்தில் சத்தியவதியும், ஹர்தோலும் கலந்து இரண்டு காரியங்கள் செய்து முடிப்பதாகத் தீர்மானித்தனர். அத்து மீறிய சர்தார்கள் மீது நடவடிக்கை எடுத்து, அவர்களின் சைனியங்களைக் குறைத்து, கப்பங்களை வசூலித்து உள்நாட்டுக் கலகத்துக்கு இடமில்லாமல் செய்துவிட மந்திரியான ஹர்தோல் உறுதி கொண்டான்.

இக் காரியத்தில் பொது மக்கள் ஆதரவைத் தேடுவதற்காக, அவர்கள் மீதிருந்த வரிச் சுமையைக் குறைத்தான். ஏழைகளுக்கு எளிதில் நியாயம் கிடைக்குமாறு அதிகார வர்க்கத்தில் சீர்திருத்தம் செய்தான்.

வீரசிம்மன் இறக்கும் பொழுது இட்ட கட்டளைப்படி, ஸ்ரீ ராமச்சந்திரமூர்த்தியின் திருக் கோவிலை உயர்ந்த முறையில் கட்டி விடுவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

ஆனால் அதற்குப் பணம் எங்கிருந்து வரும்? ஏற்கெனவே கஜானா காலியாக இருந்தது. பொதுஜன வரிகளைக் குறைத்த பின் சர்தார்களை அடக்குவதற்கே சாதாரண வருமானம் போதவில்லை.

இத்தருணத்தில் ஹர்தோலிடத்தில் பக்தியுள்ள ஒரு சேட் வந்து, ராஜ்யத்தில் ஒரு ஜில்லாவான பன்னாவில் வைரச் சுரங்கம் இருப்பதாகவும், அதிலிருந்து ஏராளமாக வைரம் எளிதில் கிடைக்குமென்றும் கூறினான். அந்த சேட்டின் மூலமாகவே வைரத்தை ரகசியமாகத் திரட்ட ஹர்தோல் ஏற்பாடு செய்தான்.

இச்செய்தி வெளியாகி விட்டால் வைரங்களைத் திருடிப் போய் விடுவார்கள். அல்லது பாதுஷாவுக்குச் சமாசாரம் கிடைத்து விடும். பிறகு டில்லிக்கு அனுப்பி விடுமாறு ஜுகவீரன் மூலம் பாதுஷாவின் உத்தரவு பிறக்கலாமென்று பயந்து, வைரங்களை ராஜ்யப் பொக்கிஷத்தில் வைக்க

வில்லை. சத்தியவதியின் படுக்கை யறையில் ஓர் இரும்புப் பெட்டியில் பூட்டி வைத்தான். போதுமான வைரம் சேர்ந்தபின், தன் அந்தரங்க சேட் மூலம் அதை விற்று விட்டுக் கோயில் கட்ட ஏற்பாடு செய்தான்.

தினந்தோறும் மாலையில் ஹர்தோல், சத்தியவதியின் கூடத்தில் போய்க் கோயிலின் விவரங்களைப் பற்றிச் சர்ச்சை செய்வது வழக்கமாயிற்று. அப்பொழுது சத்தியவதியின் நம்பிக்கைக்குப் பாத்திரமான ஒரு சேடி மட்டுமே இருப்பாள். இம்மாதிரி இருவரும் அடிக்கடி சந்தித்துப் பேசுவதையும், சத்தியவதியின் படுக்கை யறையில் ஏதோ பொருள் போவதையும் பற்றிப் பல வதந்திகள் கிளம்பின. ஏற்கெனவே இருவர்மீதும் கோபித்திருந்த ராணி அமிர்த குமாரிக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது.

எதிரிகள் ஒன்று சேர்ந்து ஜகவீரனின் கடைசித் தம்பியான வேணிதானை டில்லிக்கு அனுப்பிவைத்தனர்.

அவன், ஜகவீரனிடம் ஓர்ச்சாவில் உலவி வரும் வதந்திகளைப் பற்றிச் சொன்னதும், அடுத்த கணமே மன்னன் ஓர்ச்சா வந்து சேர்ந்தான். அப்பொழுது இரவு பத்துமணி இருக்கும். நேரில் சத்தியவதியின் அறைக்குப் போனான். அவள் ஸ்ரீ ராம விக்கிரகத்தின் முன் உட்கார்ந்து துளசிதாசரின் பாடல்களைப் பாடிக் கொண்டிருந்தாள். தனது புருஷன் வருவதைக் கண்டு எழுந்து நின்றாள்.

"நீ ஏன் என் குலத்தைக் கெடுக்கும் கோடரியாக வந்து சேர்ந்தாய்?" என்று கத்தினான் ஜகவீரன்.

சத்தியவதி திடுக்கிட்டு, "ஏன் தாறுமாறாகப் பேசுகிறீர்கள்? நான் ஒரு பாவமும் அறியேன்" என்றாள்.

"போதும், இந்தப் பாசாங்கெல்லாம். அந்தப் பெட்டியில் என்ன வைத்திருக்கிறாய்?" என்று கேட்டவண்ணம் பெட்டி அருகில் சென்றான்.

தன் மடியிலிருந்து சாவியை எடுத்து அவனிடம் கொடுத்தாள் சத்தியவதி.

அதைத் திறந்து அதிலிருந்த வைரங்களைப் பார்த்ததும், ஜகவீரனின் சந்தேகம் நிச்சயமாயிற்று.

"இதுதான் உன் மானத்தின் விலையா?" என்றான்.

சத்தியவதிக்குத் தலையில் பேரிடி விழுந்தது போலிருந்தது.


"இப்படிப் பேசுவது உங்களுக்கு அழகல்ல. ஹர்தோல் எனது வளர்ப்பு மகன். அவன் ஸ்ரீ ராமசந்திரமூர்த்தி கோயில் கட்டுவதற்காக இதைச் சேகரித்து என்னிடம் வைத்திருக்கிறான்" என்றாள்.

ஜகவீரன் தன் தம்பி வேணிதானிடம், "நீ போய் உடனே ஒரு கின்னத்தில் பாலும் விஷமும் கொண்டு வா" என்று கூறினான்.

வேணிதான் இதை எதிர்பார்க்கவில்லை. ஆனால் மன்னன் இருக்கும் நிலையில் எதிர்த்துப் பேசவும் தைரியமில்லை. தன் தாயிடம் போய், செய்தியைச் சொல்லி ஜகவீரனைச் சமாதானம் செய்யும்படி வேண்டினான்.

ஆனால் அமிர்த குமாரியின் மனம் கல்லாகி விட்டது. அவனிடம் பாலும் விஷமும் கொடுத்தனுப்பினாள் அவள்.

அதை எடுத்துக் கொண்டு சத்தியவதியும், ஜகவீரனும் இருந்த அறைக்கு வந்து "அண்ணா!" என்று ஏதோ சொல்ல வேணிதான் ஆரம்பித்தான். உடனே, "நீ பேசாமலிரு" என்று அதட்டிவிட்டு, பாலில் விஷத்தைப் போட்டு ஒரு கரண்டியால் கலக்கிக் கலந்து சத்தியவதியின் கையில் கொடுத்தான் ஜகவீரன்.



"நீ பதிவிரதையாய் இருந்தால், இதைக் கொண்டுபோய், ஹர்தோலைக் குடிக்கச் சொல். அவன் சத்திய புருஷனாக இருந்தால் [illegible]. இல்லாவிட்டால் இருவரும் இந்தத் [illegible] விட்டு ஓடி விடுங்கள்" என்று கத்தினான்.

"நானே குடித்து விடுகிறேன். என் மகனைக் கொல்ல மாட்டேன்" என்று சத்தியவதி கின்னத்தை வாங்கி அருகில் வைத்தாள்.

அவள் கையைப் பிடித்துக் கொண்டு ஜகவீரன், "நீ அருந்தாவிட்டால் என் சந்தேகம் தீராது. உனக்கு ஏற்பட்டுள்ள அபவாதமும் தீராது. என் கட்டளைப்படி செய்" என்று கண்டிப்பாகச் சொன்னான்.

ராஜபுத்திர பதிவிரதை தன் கணவன் சொல்லை மறுக்க முடியுமா? கின்னத்தை எடுத்துக்கொண்டு ஹர்தோல் படுக்கை அறையில் போய் மெதுவாகக் கதவைத் தட்டினாள்.

ஹர்தோல் திடுக்கிட்டு எழுந்து கதவைத் திறந்து வெளியில் வந்தான். சத்தியவதி கின்னத்தில் பாலுடன் நின்றாள். கண்களிலிருந்து கண்ணீர் வெள்ளமாக வழிந்தது.

"இது என்ன, என் தாயே!" என்று கேட்டான் ஹர்தோல்.

"இந்த விஷம் கலந்த பாலை உனக்குக் கொடுக்கும்படி மன்னன் கட்டளை யிட்டிருக்கிறார். என் கற்பின் பரிசையாம் இது" என்று விம்மி விம்மி அழத் தொடங்கினாள் சத்தியவதி.

ஹர்தோல் அவள் கையிலிருந்து கின்னத்தை வாங்கி, ஒரே கணத்தில் முழுதும் குடித்தான்.

"இதற்காகவா வருந்த வேண்டும், அம்மா? தங்கள் மானத்தைக் காக்கச் சித்திரவதையைக்கூட மகிழ்ச்சியுடன் ஏற்பேன். இந்த விஷம் பலிக்குமுன், அண்ணாவின் பாதங்களில் தெண்டன் சமர்ப்பிக்க வேண்டும். அவரிடம் அழைத்துச் செல்லுங்கள்" என்றான்.

ஹர்தோல் பின்தொடர, அழுது கொண்டே ஜகவீரனிருக்குமிடம் வந்து மூர்ச்சித்துக் கீழே விழுந்தாள் சத்தியவதி.

"அண்ணா என்னைக் கொல்லத் தங்களுக்கு என்றும் அதிகாரம் உண்டு. சீதா தேவி போன்ற என் தாயைச் சந்தேகித்த பாவத்துக்கு நீங்கள் பிராயச்சித்தம் செய்ய வேண்டும். தந்தைக்கு நான் வாக்குக் கொடுத்தபடி ஸ்ரீ ராமசந்திர மூர்த்தியின் கோயிலைக் கட்டி, அவரிடம் சரண் புகுந்து நற்கதி அடைவீர். எனக்கு விடை தரவேண்டும்" என்றான்.

விஷத்தின் வேகத்தில் மயங்கித் தரையில் படுத்தான் ஹர்தோல். ஜகவீரனும் அவன் பக்கத்தில் மௌனமாக உட்கார்ந்தான். இதற்குள் அரண்மனையிலுள்ள எல்லோரும் அவர்களைச் சூழ்ந்து விட்டார்கள்.

சிறிது நேரத்தில் ஹர்தோல் இறந்தான். மறுநாள் அவன் உடல் தகனம் செய்யப்படும் பொழுது ஓர்ச்சாவின் ஆண், பெண், குழந்தைகள் அனைவரும் அவன் சவத்தைக் கும்பிட்டு அதன் மேல் மலர்களைத் தூவினர். அன்று முதல் ஹர்தோல் புந்தேல் கண்டிலும், மற்றும் வட இந்தியாவில் பலவிடங்களிலும் தெய்வமாகக் கருதப்படுகிறான். பலவிடங்களில் அவனுக்குக் கோயில் கட்டி விக்கிரகப் பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள்.

பச்சாத்தாபப்பட்ட ஜகவீரன், ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி கோயிலைக்கட்டி முடித்தான். தான் செய்த பாவத்திற்கு வேறு பலவிதங்களில் பிராயச்சித்தம் செய்ய முயற்சி செய்தான்.

ஆனால் ராஜ்யம் எங்கும் அவனுக்கு விரோதமாக ஜனங்கள் புரட்சி செய்தனர். இச் செய்தி கேட்ட மொகலாய சக்கரவர்த்தி அவனைத் தண்டிக்க ஒரு பெரும் சைனியத்தை அனுப்பினான். ஜகவீரன் மிகுந்த கஷ்டம் செலுத்திச் சக்கரவர்த்தியைச் சமாதானம் செய்யவேண்டியிருந்தது.

இப்படித் தனது ராஜ்யம் நாளுக்கு நாள் சீர்குலைந்து, முடிவில் தனது சர்தார்களுடன் போர் செய்யும் பொழுது, காட்டு மனிதர்களால் ஜகவீரன் கொல்லப்பட்டான்.

அவனுக்குப் பின், தலைநகர் ஓர்ச்சாவிலிருந்து டீகம்கருக்கு மாற்றப்பட்டது. தற்சமயம் ஓர்ச்சா ஒரு சிறிய கிராமம். ஆனால் அதில் ஸ்ரீ ராமசந்திர மூர்த்தி கோயிலும், ஹர்தோல் பலியான கூடமும் நன்கு பரிபாலிக்கப்பட்டு வருகின்றன.

[குறிப்பு: ஓர்ச்சா ராஜ்யம் தற்போதைய விந்தியப் பிரதேசத்தில் இணைக்கப் பட்டுள்ள பழைய ராஜ்யங்களில் ஒன்று. இந்தக் கதையிலுள்ள முக்கிய பாத்திரங்களும், சம்பவங்களும் ஓர்ச்சா ராஜ வம்ச சரித்திரத்திலிருந்து எடுக்கப் பட்டவை.]


ஸ்டாண்டர்ட்
வான்கார்ட்
...நாகரீய தேவைக்கேற்ற புது மோஸ்தரில் அமைந்தது
★ ஆறுபேர் சௌகரியமாக அமரலாம் ★ சொகுசான ஓட்டம் ★ எளிதில் வேகம் அதிகரிக்கலாம்
★ பராமரிக்க சிக்கனமானது ★ சாமான் வைக்க தாராளமான இடம்
எமது ஷோரூம்களில் 1953 மாடலைப் பரிசீலித்துப் பாருங்கள்
சென்னைத் தொழிற்சாலையில் விலை ரூ.13,950.
தி யூனியன் கம்பெனி (மோட்டார்ஸ்) லிட்.
மதராஸ் - பெங்களூர் -
உதகமண்டலம்.
S.M.Z.6B

ஞானரதம்

[சித்திர விளக்கம்]

மகாகவி பாரதியார் இயற்றியுள்ள வசன நூல்களில் மிகவும் சிறந்து விளங்குவது "ஞானரதம்". இது ஒரு அற்புதக் கற்பனைக் களஞ்சியம்!

"ஞானரதத்"தில் பாரதியார் தீட்டியுள்ள கற்பனைக் காட்சிகளை நமது சித்திரக்காரர் 'சந்திரா' வேறோர் இடத்தில் வண்ண ஓவியங்களாகத் தீட்டியிருக்கிறார்.

"ஞான ரதம்" முழு நூலையும் படிக்காதவர்களும் ஓரளவு "சந்திரா"வின் ஓவியங்களை ரஸிப்பது இயலும் பொருட்டுக் கீழே அந் நூலின் கருத்தைச் சித்திரங்களை யொட்டியவாறு தந்திருக்கிறோம்.

ஒரு நாள் பாரதியார் திருவல்லிக்கேணி வீரராகவ முதலித் தெருவில் மேடையில் ஒரு மஞ்சத்தின் மீது படுத்திருந்தார். 'செல்வம் இல்லாததனால் உலகத்தில் எத்தகைய இன்பமும் பெற முடியவில்லையே' என்று சிந்தித்தார். அப்போது அவர் மனம் "நான் என்னோடுக்கும் ஞானம் என்பதோர் தெய்வீக ரதத்தைக் கொடுத்திருக்கும்போது வருத்தப்படுவானேன்? எங்கே வேண்டுமானாலும் போகலாமே" என்றது. உடனே ஞானரதத்தில் ஏறிக் கவலையற்ற பூமியாகிய உபசாந்தி லோகத்துக்குப் போனார் முதலில். அங்கே ஒரு கோட்டை. அக் கோட்டையின் வாயில் காப்போன் பார்க்கப் பயங்கரமாகத் தோற்றமளித்தான். கையில் ஒரு கத்தி வைத்திருந்தான். விவேகம் என்ற எழுத்துக்கள் அதில் பொறிக்கப்பட்டிருந்தன! அவன் பாரதியாரிடம் பின்வருமாறு கூறினான்:

"மனிதா, மனம் இறந்த பிறகுதான் உபசாந்தி யுண்டு. அது இருக்கும் வரையில் கவலை நீங்கி யிருக்கலாம் என்ற எண்ணம் வீண்." இதைக் கேட்டதும் 'மனம் செத்து, நான் தனியே வாழ்வதாகிய உபசாந்தி லோகம் எத்தனை அழகாயினும் வேண்டாம்' என்று தீர்மானித்துத் திரும்பினார்.

அதற்கு மறுநாள் இன்பங்கள் நிறைந்த **கந்தர்வ லோகத்**துக்குச் சென்றார். பர்வதகுமாரி என்ற கந்தர்வ யுவதி அவரை வரவேற்று, கந்தர்வ லோகத்தைக் காண்பிக்கலானாள். பாரதியாருக்கும் பறக்க வேண்டும் என்ற எண்ணம் உண்டான உடனேயே இரண்டு சிறகுகள் முளைத்தன. இரண்டுபேரு மாகாயத்தில் பறந்து, சங்கீத சாலைகள், சிலா மண்டபங்கள், மாளிகைகள் யாவற்றையும் பார்த்தார். ஓர் இடத்தில் மன்மதன், சிவ—பார்வதி, ரதி முதலியோரின் பதுமைகளும் சித்திரங்களும் வரைந்து மன்மதன் விழாக் கொண்டாடிக் கொண்டிருந்தனர். சின்னஞ் சிறு குழந்தைகள் பூப்பந்து விளையாடிக் கொண்டிருந்தனர். அவர்களில் ஒருவன் தனியே ஒதுங்கியிருந்து கவிதைகள் புனைவதிலும் பகற்கனவுகள் காண்பதிலும் பொழுதைச் செலவழித்தான். கந்தர்வ யுவர்களும் யுவதிகளும், கடலில் உல்லாசப் படகுகளில் உல்லாச யாத்திரை செய்தனர். நீர் அருவிகளிலே கந்தர்வ யுவர்களும் யுவதிகளும் யாதொரு விகற்ப மூமின்றி நீராடி மகிழ்ந்தனர். பாரதியாரும் தமக்கு இவற்றை யெல்லாம் காண்பித்த பர்வதகுமாரியின் மீது காதல் கொண்டு சில நாள் மகிழ்ந்திருந்தார். பிறகு அவருக்குச் சலிப்பு ஏற்படலாயிற்று. அப்பொழுது கந்தர்வ யுவதி பின்வருமாறு கூறினாள்: "உனக்கு எங்கள் வாழ்க்கையில் திருப்தி யுண்டாகாமல் இருப்பது ஓர் குற்றமன்று. ஏனென்றால் மானிட ஜன்மம் எவ்வளவு இழிவுகளுடையதாயினும் ஒரு முக்கியமான விஷயத்திலே எங்கள் பிறப்பைக் காட்டிலும் சிறந்தது. ஆத்மத் தேட்டத்திற்கு மனிதப் பிறவி சௌகர்யமாக அமைக்கப்பட்டிருக்கிறது. 'திருப்தி எதிலும் ஏற்படா திருத்தல்' — இந்த ஒரு குணமே மனிதப் பிறவிக்குக் காப்பாகவும் அதன் பெருஞ் சிறப்பாகவும் விளங்குகிறது......"

அடுத்த நாள் ஞானரதம் ஏறி **சத்ய லோகம்** சென்றார். மாசற்ற சூரியப் பிரகாசம் போன்ற ஒளி பொன்று பிரகாசித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். இந்த ஒளியைக் கண்டவர்களில் சிலர் கண் கூசவே, முகத்தை மறைத்துக் கொண்டார்கள். சிலர் மலர்ந்த முகத்துடன் பார்த்தார்கள். சிலர் கிரணங்களைப் பற்றிக்கொண்டே போக முயன்றனர். இப்படிப் பலப் பல காட்சிகளை அங்கே கண்டார். அவற்றை நம் சித்திரக்காரரும் சேர்த்தியாகத் தீட்டியிருக்கிறார். இதன் தத்துவத்தைப் பாரதியார் வார்த்தைகளிலேயே அறிவோமாக:

"மானிடா! உண்மை தொடக்கத்தில் தெளிவாகத் தெரிவதுபோல் தோன்றும். கொஞ்சம் கவனம் செலுத்துவாயானால் கண் கூசத் தொடங்கிவிடும். நீ தளர்ச்சி பெறாமல் ஓர் கிரணத்தைப் பற்றிக் கொண்டு நெருங்கி நெருங்கிப் போவாயானால் பிறகு கண் வருத்தம் நீங்கி விடும். இறுதியில் நீ அருகே வந்த பிறகு உண்மை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் தெற்றெனத் தெளிந்து புலப்படும்."

பாரதியாருக்குத் தலை நோவு பலமாயிருந்தது. அதனால் தம் இருப்பிடத்தை விட்டு, தாம் குடியிருந்த வீட்டுக்குப் போகலானார். அப்படியே **மண்ணுலக** வாழ்க்கையையும் வர்ணிக்கிறார்.

ஒரு ராயர் அவர் குடியிருந்த வீட்டின் முன் பக்கத்திலிருந்தார். ராயருக்குக் காச நோய். பன்னிரண்டு குழந்தைகள். மனைவி இப்பொழுது கர்ப்பிணி. வீட்டு முற்றத்தில் பசுமாடு. சொற்ப வருவாயுள்ள சர்க்கார் உத்தியோகம். கொசு உபத்திரவம் தாங்க முடியாது. இத்தகைய வீட்டுக்கு, ஜட்கா கோச்சு வண்டிகள், புழுதி இரைச்சலுள்ள தெருக்கள் இவை கடந்து வந்து சேர்ந்தார். வந்ததும் வராததுமாக மனைவியின் இல்லைப் பாட்டு. 'வீட்டுக்காரர் வாடகை கேட்டு விட்டுப் போகிறார். பால்காரன் பணம் கேட்டு விட்டுப் போகிறான்' என்ற கர்ஜிப்பு. மனைவியின் பொல்லாப்பு. வீட்டில் மனைவிக்கும் சிறிய தாயாருக்கும் மனஸ்தாபம். போலி நேசர்களுடைய கூட்டுறவு! மொத்தத்தில் மண்ணுலகத்தில் ஒழியாத ஏமாற்று, ஒழியாத வஞ்சனை, ஒழியாத கவலை!

"மனித ஜாதிக்குத் தீராத நோய் ஒன்று பிடித்திருக்கிறது. மாறாத சாபம், இறங்காத விஷம்! இதன் பெயர் **பணம்**. இப் பேய்க்கு வணங்கும்படி அவனைத் தூண்டிவிடுவது **விருப்பம்**."

பின்னர் ஒரு நாள் ஞானரதத்தில் ஏறித் **தர்மலோகம்** சென்றார். 'தபஸ்' என்ற தேஜஸ் பொருந்திய வாலிபன் ஒருவன் வந்து, "நட்சத்திரங்கள் சூரியன் சந்திரன் முதலாக அணுவரையுள்ள ஒவ்வொரு வஸ்துவுக்கும் உரிய தர்மங்களுண்டு. அவற்றையெல்லாம் பார்க்க வேண்டுமென்றால் பதினாயிரம் ஆண்டுகள் போதா" என்றான்.

முதலில் யம சன்னிதானத்துக்கு அழைத்துச் சென்றான். அங்கே நத்தை, நண்டு, பாச்சை, பல்லி இவற்றிடையே மக்கள் அல்லலுறுவதையும் நெருப்புக் குழியில் போட்டுப் போட்டு எடுப்பதையும் கண்டார். தீய எண்ணங்கள் அதர்மச் செய்கைகளின் பலன் இவை என்கிறார் பாரதியார்.


தர்மராஜன் சன்னிதானத்தில், தர்மராஜனின் மகுடத்துக்கு நேரே வாள் தொங்குவதைக் கண்டார். இதுவே தர்மத்துக்கு ரக்ஷை. தர்மராஜனின் காலில் விழுந்து வணங்கினார்.

பிறகு கண்வாச்சாரியர் ஆசிரமத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அந்தக் குருகுலத்தில் பாரதியார் பிராமண தர்மம் யாது என்று கேட்டு அறிந்தார். அந்த ஆசிரமத்தில் கண்வாச்சாரியரின் மனைவியும் புதல்வனும் கூட வந்து அமர்ந்து சம்பாஷணையில் கலந்து கொண்டனர்.

பின்னர் சத்ய ராமன் என்னும் க்ஷத்திரியன் வீட்டுக்குச் சென்று, "அதர்மத்தை எப்பொழுதும் அழித்துக் கொண்டிருப்பதே க்ஷத்திரியன் தர்மம்" என்பதை அறிந்தார்.

இப்படிச் சில நாட்கள் தர்மலோகத்தில் தங்கினார். ஒருநாள் 'தபஸ்' ஏதோ காரியமாக வெளியே சென்றான். அப்போது கந்தர்வ கன்னிகையின் நினைவு வந்தது. அந்த இன்பத்தை மறுபடியும் நினைவு கூர்ந்தார். படீர் படீர் என்று சத்தம் கேட்டது! மூர்ச்சை போட்டுக் கீழே விழுந்தார்.

பாரதியார் சுய நினைவு பெற்றுக் கண் விழித்துப் பார்த்த போது, பழைய இடத்தில் இருக்கக் கண்டார். சிலர் அவருக்கு விசிறிக் கொண்டிருப்பதைப் பார்த்தார்.


நீங்கள் வாங்கும்
ஸ்டெயின்லஸ் ஸ்டீல்
பாத்திரங்களின்
உத்திரவாதமுள்ள அடையாளம்
I. M. M. C
MADRAS-3
உற்பத்தியாளர்.
இந்தியன் மெட்டல் & மெட்டலர்ஜிகல்
கார்ப்பொரேஷன்
498. தங்கசாலைத்தெரு, மதராஸ்-3.


எமது தீபாவளி
வாழ்த்துக்கள்
அதிகாரம் பெற்ற மூலதனம் ரூ. 8 கோடி
வழங்கப்பட்ட மூலதனம் ரூ. 4 கோடி
செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 2 கோடி
ரிசர்வ் நிதி ரூ. 75 லக்ஷங்கள்
G. D. பிர்லா சேர்மன்.
B. T. தாகூர் ஜெனரல் மானேஜர்.
தி
யுனைடெட்
கமர்ஷியல்
பாங்க் லிட்.,
கல்கத்தா
உறுதிக்கும், சேவைக்கும்
பெயர் பெற்றது



உயர்ரக கடிகாரங்களுக்கு
ஒரு நம்பகமான இடம்

○★○

8¾" ஸ்டீல், ஆல் ப்ரூப்
செண்டர் செகண்டு
17 ஜுவல்கள் சாதா
அல்லது ரேடியம் டயல்

லோவாகோ - ரிகார்டு

ரூ. 120/-

ஒரு வருஷத்திற்கு உத்தரவாதம்

○★○

THE LOKAMANYA WATCH COMPANY

Agents: LOWACO & KISAN WATCHES

26-C, GUNBOW ST., FORT, BOMBAY

கைத்தறியை ஆதரிப்பது மக்கள் கடமை!

நீண்ட காலமாக எம்மை ஆதரித்து வரும்
வாடிக்கைக்காரர்கள் அனைவருக்கும்
எமது மனமார்ந்த தீபாவளி வாழ்த்துக்கள்!

ராணி ரெங்கய்யர் ஸன்ஸ்

High Class Handloom Silk Cloth Manufacturers and Medalists at British Empire Exhibition

RANI SILK HOUSE

கருடலாயத் தெரு
கும்பகோணம்
கிளை : 20, வடக்கு மாசி வீதி 2வது தெரு
மதுரை

குறைந்த விலையில் சிறந்த ரக பெங்களூர், காஞ்சீவரம், கும்பகோணம் பட்டுப் புடவைகள் தரம் வாரியாகக் கிடைக்குமிடம்:

ரெங்கமூர்த்தி கம்பெனி

கருடலாயத் தெரு, கும்பகோணம்

கிளைகள்: காரைக்குடி & நாட்டரசன்கோட்டை

IOB

தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கி லிட்., மதராஸ்

ஸ்தாபிதம் 1937

அளிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	50,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	,,	48,98,425
கையிருப்பு நிதி	,,	19,00,000

பிராஞ்சுகள் : இந்தியா,
பர்மா, ஸிலோன்,
மலேயா, தாய்லந்து

எல்லா முக்கிய வர்த்தக ஸ்தலங்களிலும் அந்நியநாட்டு நிருபர்கள் உண்டு.

வெளிநாட்டு வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கி தனது சொந்த கிளைகளின் மூலமாகவும், உலக முழுவதும் அமர்த்தப் பட்டுள்ள ஏஜண்டுகள் மூலமாகவும், நிருபர்கள் மூலமாகவும் திறமைவாய்ந்த சேவை செய்து வருகிறது.

IOBZ-3

வான ஊஞ்சலிலே

நீதிபதி எம். எஸ். பி. அய்யர்

ஸ்ரீதேவிக்கு வயது பதினெட்டு. சிறந்த அழகி. நல்ல கட்டு மஸ்தான தேகம். கண்ணன் சர்க்கஸ் கம்பெனியில் கம்பிமீது நடக்கும் வித்தைக்காரியாக வேலை செய்து வந்தாள். கண்ணன் சர்க்கஸின் புகழ் இந்தியா, பர்மா, மலேயா முதலிய பல தேசங்களிலும் பரவியிருந்தது.

ஸ்ரீதேவிக்குத் தன்னுடைய பெற்றோர் யார் என்றே தெரியாது. ஏன், அந்தச் சர்க்கஸில் உள்ளவர்களில் கூட யாருக்கும் அவள் தந்தை யார் என்பது தெரியாது.

ஒருவேளை கம்பெனியின் ஸ்தாபகரான காலஞ்சென்ற கண்ணனின் புதல்வனான கோமனுக்குத் தெரியலாமோ, என்னவோ! ஏனெனில், முன்பிருந்த கம்பிமீது நடக்கும் வித்தைக்காரிக்கும் கண்ணனுக்கும் பிறந்தவள் தான் ஸ்ரீதேவி என்று பராபரியாய் ஒரு செய்தி கூட இருக்கத்தான் செய்தது. ஆனால் அதுபற்றி யாருக்கும் ஒன்றும் நிச்சயமாய்த் தெரியாது. கோமனுக்குத் தெரிந்தாலும் சொல்ல மாட்டான். ஏனெனில் அவளுடைய சொத்தில் தனக்கும் பங்குண்டு என்று அவள் உரிமை கொண்டாடுவதற்கு ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்ற பயந்தான்.

கோமன், அவளை நல்ல சாப்பாடு கொடுத்து அன்புடன்தான் நடத்தி வந்தான். அவள், பன்னிரண்டடி உயரத்தில் நாற்பது அடி நீளமுள்ள கம்பியின்மீது கையில் ஜப்பான் குடை பிடித்துக் கொண்டு வெகு அலட்சியமாக நடப்பாள். சர்க்கஸ் பார்க்க வந்த ஜனக் கூட்டம் அப்படியே பிரமித்து உட்கார்ந்திருக்கும். ஒரு தடவை யாவது அவள் தவறினாள் என்பது கிடையாது.

சர்க்கஸில் சிங்கத்தைப் பழக்கும் பாலுதான் அவளுடைய காதலன். இவர்கள் இருவருக்குள்ளும், அன்பும் அன்னியோன்னியமும் வெகு துரிதமாக வளர்ந்தன. இருவரும் கல்யாணம் என்ற சடங்கைச் செய்து கொள்ளாமலேயே, கணவன் மனைவியாக வாழ்ந்து வரலானார்கள்!

அவர்கள் வேலை செய்யும் சர்க்கஸில் உள்ள மிருகங்கள் கல்யாணம், கார்த்திகை என்ற சடங்குகளைப் பற்றிப் பொருட்படுத்துகின்றனவா, என்ன?

பாலுவுக்கு வயது முப்பதிருக்கும். நல்ல திடகாத்திரமான சரீரம் பெற்றவன். சிங்கத்தையும் ஆட்டையும் ஒரு தட்டில் சாப்பிடச் செய்யக்கூடியவன் என்ற பெயர் எடுத்திருந்தான். சிங்கம் எப்பொழுதாகிலும் தனக்கடங்காமல் போய்விட்டால் கொன்று விடுவதற்காகவே, அவன் எப்பொழுதும் ரவைகள் போட்டு நிரப்பி வைத்துள்ள கைத்துப்பாக்கி வைத்திருப்பான். பொது ஜனங்களுக்கு இதெல்லாம் தெரியாது. அவர்கள், பாலு தன்னுடைய மனோ திடத்தினாலும், வசிய சக்தியினாலுமே அதைச் சாதிக்கிறான் என்று சொல்லி வந்தார்கள்.

பாலுவுக்குத் தன் வித்தை சம்பந்தமாக, அசாத்திய தன்னம்பிக்கை. அவன் ஸ்ரீதேவியை, சிங்கத்தின் வாயில் தலையை விடச் செய்தான். இந்த வித்தையைப் பார்த்துப் பொது ஜனங்கள் அடைந்த அதிசயம் இவ்வளவு அவ்வளவு அல்ல. அதனால் சர்க்கஸ் கம்பெனிக்கு ஏற்பட்ட வருவாயும் கொஞ்ச நஞ்சமல்ல.

பாலு சமுதாயப் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்கள், இவற்றைச் சற்றும் மதிக்க விரும்பாதவன். அவன் சொன்னான்: "பார், ஸ்ரீதேவி! உண்மையான விவாகம் எது தெரியுமோ, காதல்தான்! அதுதான் முக்கியம். கல்யாணம் என்பது, புது மோகம் முடிந்த பிறகும், ஆண் பெண் ஒத்து வாழ்வதற்காகச் சட்ட ரீதியாக ஏற்படுத்தப்பட்ட பிணைப்பு ஆகும். வண்டிச் சக்கரத்தை, இரும்புப் பட்டை, சூடு ஆறின பிறகும் கெட்டியாகக் கவ்விக் கொண்டிருக்கவில்லையா? அம்மாதிரி, ஆண், பெண் ஒட்டிக் கொண்டு வாழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட சடங்காகும்."

அவளும் அவன் வார்த்தையை நம்பினாள். மேலும், நாடோடி வாழ்க்கை நடத்தி வந்த அந்தச் சர்க்கஸ் காரர்களும், ஸ்ரீதேவியும் பாலுவும், கல்யாணச் சடங்கு ஒன்றுமில்லாமல் தாம்பத்திய வாழ்க்கை நடத்தி வந்ததைக் குறித்துக் கவலைப்படவில்லை.

சர்க்கஸிலிருந்தவர்கள் ஒவ்வொருவருமே ஏறத்தாழ அதேமாதிரியான நிலையிலிருந்தார்கள். போர் வீரர்கள், கப்பற்படை வீரர்கள், சர்க்கஸ் காரர்கள், பிச்சைக்காரர்கள், இவர்களிடையே யெல்லாம், சமூக சம்பிரதாயங்களுக்கு எள்ளத்தனை மதிப்புக் கூட இருப்பதில்லை!

ஸ்ரீதேவி கிட்டத்தட்ட ஒரு வருஷம் சந்தோஷமாக வாழ்க்கை நடத்தினாள். பிறகு ஒரு நாள் வேலூரிலிருந்த போது, ஆட்டுடன் சாப்பிட இருந்த சிங்கம், கொஞ்சம் முறைத்துக் கொண்டது. பாலுவின் கட்டளைக்குப் பணிய சற்றுத் தாமதித்தது. ஒரு வேளை ஆட்டுடன் சாப்பிடுவதற்குப் பதில் ஆட்டையே சாப்பிட விரும்பிற்றோ என்னவோ! பாலு முதலில் அதை லட்சியம் செய்யவில்லை. அந்தப் பொல்லாத சிங்கம் சிற்சில சமயங்களில் அவ்விதம் முரண்டுவது உண்டு. அப்போதெல்லாம் பாலு தன் சாட்டையினால் பல தடவை சொடுக்குவான். சாட்டையின் சத்தத்தையும் பாலுவின் மிரட்டலையும் கண்டு சிங்கம் பெட்டிப் பாம்பாக அடங்கி விடும். அதுபோலவே இந்தத் தடவையும் சொடுக்கினான். ஆனால் சிங்கம் பணியவில்லை. அதற்கு மாறாக, எதிர்பாராதவிதமாய்ப் பாலுவின் கட்டளைக்குப் பணிய மறுத்துக் கடைசியில் அவன் மேலேயே பாய ஆரம்பித்து விட்டது.

பாலு, கடைசியில் தன் கைத் துப்பாக்கியை எடுத்து, அதைச் சுட்டபோதிலும், அவன் கழுத்தில் உயிருக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய காயம் ஏற்பட்டு விட்டது. வைத்தியம் செய்தும் பயனில்லாமற் போயிற்று. சில மணி நேரத்தில் உயிர் துறந்தான் பாலு.

ஸ்ரீதேவி அடைந்த துயரம் கொஞ்ச நஞ்சமல்ல. அவள் அழுது புலம்பினாள். கவலில் மோதிக் கொண்டாள். தலைமயிரைப் பிய்த்துக் கொண்டாள். பாலுவின் உடலை எரித்த சிதையில் விழுவதற்கு ஓடினாள். அவளைப் பக்கத்திலிருந்தவர்கள் தடுத்தார்கள்.

"அவர் போன பிறகு நான் உயிரோடிருந்து யாருக்கு என்ன ஆகவேண்டும்? நானும் போகிறேன்" என்றாள்.

ஆனால் பக்கத்திலிருந்தவர்கள், சமாதானப்படுத்தி அழைத்து வந்து மூன்று நாள்வரை அவள்மீது ஒரு கண் வைத்துக் காவல் காத்துக் கொண்டேயிருந்தனர். அவள் தற்கொலை செய்து கொண்டு விடுவாளோ என்று அவர்கள் ரொம்பவும் பயந்தனர்.

உயிர் வாழ வேண்டும் என்ற உணர்ச்சி [illegible] நிதானமாக அவள் உள்ளத்திலெழுந்தது.

பாலு தன்மீது கொண்டிருந்த அன்பைப் பற்றி நினைத்த போது அவள் உள்ளம் நெகிழ்ந்தது. ஆனால் அவனுக்காகப் பிராணத் தியாகம் செய்து கொள்ள வேண்டும் என்று சீதேவி இப்பொழுது எல்லாம் எண்ணுவதில்லை.

சர்க்கஸில் குப்பன் என்றோர் பயில்வான் இருந்தான். அவன் ஓடும் மோட்டார் வண்டியை நிறுத்தி விடுவான். ஒரு யானையைத் தன் மார்பின்மீது ஏற்றிக் கொண்டு சுமப்பான். கனமான இரும்புச் சங்கிலியை அறுத்து விடுவான். இவன்தான் சீதேவி ஒரே அடியாய் வருத்தத்தில் மூழ்கியிருந்தபோது ஆறுதல் அளித்தவன்.

பாலு உயிரோடிருந்தவரை, அவனுடைய நல்ல நண்பனாகவும் இருந்து வந்தான் குப்பன். அதனால் சீதேவிக்கு அவனைக் கண்டால் பிடிக்கும்.

பாலுவின் அகால மரணம் காரணமாக, சர்க்கஸ் சரியாக நடைபெறவில்லை. ஆகவே, சர்க்கஸில் வேலை செய்பவர்களுக்கு எல்லாம் ஒரு மாத லீவு கொடுத்து, மறுபடி, பங்களூரில் வந்து சந்திக்கும்படியும் அதற்குள் பாலுவின் ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு நல்ல ஆளைத் தான் தேடிப் பிடித்துச் சர்க்கஸில் சேர்த்து விடுவதாகவும் கூறினார் சர்க்கஸ் முதலாளி சோமன்.

இப்பொழுது குப்பன், சீதேவியிடம் கூறினான்: "பங்களூர் எப்படிப்பட்ட இடம் தெரியுமா? அதுவும் இந்தச் செப்டம்பர் மாசம் அங்கே எப்படி இருக்கும் தெரியுமா? அதற்கிணை உலகத்திலேயே கிடையாது! நாம் இரண்டு பேரும் ஒரு ஹோட்டலில் தங்குவோம்! பொழுது ரொம்ப சுகமாகப் போகும்."

சீதேவி, இதற்கு ஒருவாறு ஒப்புக் கொண்டாள். இருவரும் பங்களூருக்குச் சென்றனர். அங்கே ஒரு ஹோட்டலில் இரண்டு தனி அறைகளில் வசித்தனர்.

அவர்கள் தினந்தோறும் மாலை நேரங்களில், லால் பாக் தோட்டத்துக்குச் சென்று அங்கே உட்கார்ந்து பேசிக் கொண்டிருப்பார்கள். மரங்களிடையேயும், புஷ்பங்களிடையேயும் குப்பன், சீதேவியைக் காதலிக்கத் தொடங்கினான். முதலில் அவள் பணிய மறுத்து வந்தாள்; பாலுவுக்குத் துரோகம் செய்வதாகும் என்று சொல்லி வந்தாள். இருந்தாலும், அவள் மனம் குப்பனிடம் இளகி வந்து கொண்டிருந்தது என்பதிலும் சந்தேகமில்லை.

குப்பன், பொறுத்திருக்கவும் தயாராக இருந்தான். ஏன், அவனுடைய நெருங்கிய நண்பன் ஒருவனிடம், "பருத்த இரும்புச் சங்கிலிகளை யெல்லாம், நிதானமாக அழுத்தி முறித்த நான், இவளுடைய மனசையும் நிதானமாக என் வசம் திருப்பமாக ஆக்கிக் கொள்வேன். காலம் எனக்குச் சாதகமாகவே இருக்கிறது" என்று சொல்லிக் கொண்டிருந்தான் குப்பன்.

இப்படி இருந்தபோது, பங்களூர் நகரத்தில் இன்புளுயன்ஸா ஜுரம் வேகமாகப் பரவியது. சீதேவிக்கும் அந்த ஜுரம் வந்தது. குப்பன், விஜயலக்ஷ்மி என்ற ஒரு லேடி டாக்டரைக் கூப்பிட்டு வந்து காண்பித்தான். அந்த லேடி டாக்டர் தன் முதற் கணவன் இறந்து மூன்றாண்டுகள் வரை துக்கம் கொண்டாடினாள்; பிறகு எவ்விதத் தயக்கமுமின்றிக் கல்யாணம் செய்து கொண்டு விட்டாள்.

இதைப் பார்த்த குப்பன், "பார் சீதேவி, உயர் குடும்பத்தில் பிறந்து நல்ல குணம் படைத்த இந்தப் பெண் கூட இரண்டாந்தாரமாகக் கல்யாணம் செய்து கொண்டிருக்கிறாள். நீ மட்டும் மறுமணம் செய்து கொள்ள யோசிப்பானேன்?" என்று கூறினான்.

இதைக் கேட்ட பிறகுதான் சீதேவியின் மனசு உறுதிப்பட்டது. குப்பனுடன் வாழ்க்கை நடத்தலானாள். அவள், கல்யாணம் முதலிய சடங்குகளில் நம்பிக்கையில்லாதவளாதலால், குப்பனைக் கல்யாணம் செய்து கொள்ளாமலே, அவனுடன் வாழ்ந்து வரலானாள்.

* * *

சர்க்கஸ் மறுபடியும் கூடியது. பாலுவின் ஸ்தானத்துக்குச் சோமன் என்பவன் வந்திருந்தான். வழக்கம்போல் பெருந் திரளான கூட்டம் வரத் தொடங்கியது. சர்க்கஸ் முதலாளி சோமனுக்குப் பழைய திருப்தியும் ஏற்பட்டது.

அடுத்த வருஷம், சீதேவிக்கும் குப்பனுக்கும் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதனுக்கு லலிதா என்று பெயர் வைத்தனர். சீதேவி, அந்தக் குழந்தையைக் கொஞ்சினது இவ்வளவு அவ்வளவல்ல. அவள் மூன்று வயதுக் குழந்தையாக இருந்தபோது, கம்பிமேல் நடக்கப் பயிற்சி பெற்றாள். இதன் காரணமாக வேறு சர்க்கஸுக்கு வருபவர்களின் கூட்டம் அதிகம் ஆகியது.

குப்பனும் குழந்தை லலிதாவின்மீது ரொம்பப் பிரியம் வைத்திருந்தான். ஆனால் அவள் எட்டு வயது அடைந்த போது, அவனுக்குச் சுவாசகாசம் ஏற்படலாயிற்று. அதன் பயனாகக் குடிப் பழக்கமும், இன்னும் சில கெட்ட பழக்கங்களும் ஏற்பட்டு விட்டன.

இப்பொழுது, சீதேவியிடம் வெறி கொண்டு திரிந்து வந்தான் சோமன். அவன் தன் உணர்ச்சிகளையெல்லாம், இந்த எட்டு வருஷ காலம் உள்ளத்திலேயே வைத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. ஏனெனில் எப்பொழுதாவதும் சோமன் சற்று உள்ளக் கிடக்கையை வெளியில் தெரியும்படி பேச வந்தால், உடனே வாயை அடைத்து விடுவாள் சீதேவி. குப்பனைப் பற்றி அவதூறாகப் பேச வந்தால் அவள் தன் அருவருப்பைக் காண்பித்துச் சோமனைப் பேச விடாமற் செய்து வந்தாள்.

ஆனால் இப்பொழுது குப்பன் கள்ளுக் குடித்து விட்டு நடுநிசியில் வருவதும், சீதேவியையும் குழந்தை லலிதாவையும் அடிப்பதும் சகஜமாகி விட்டது. எனவே, சோமனுக்குத் தன் அந்தரங்கத்தைப் பகிரங்கமாகச் சொல்லச் சந்தர்ப்பம் வாய்த்தது. குப்பன் அடிக்க வரும் போது அவனைச் சோமன் தடுப்பான். குழந்தை லலிதாவுக்கு மிட்டாய்கள் வாங்கிக் கொடுத்துத் தேற்றுவான். இப்படிப்பட்ட அன்புத் தொண்டுகளினாலும், தந்திரத்தினாலும் சீதேவியின் உள்ளத்தை மெள்ளக் கவர்ந்து விட்டான். இருப்





பிறகும் அவள் மனச்சாட்சி அவ் வளவு சுலபமாக அவளை அதற்கு இணங்க விடவில்லை.

* * *

ஒரு நாள் இரவு வழக்கம் போல் கன்றாகக் குடித்துவிட்டுக் குப்பன் வீட்டுக்குப் போனான். ஸ்ரீதேவியையும் லலிதாவையும் நையப் புடைத்தான். அந்த அடி உதையுடன் கூடவே, தான் அவர்களை விட்டு விட்டுப் பாளாமணி என்கிறவளுடன் சேர்ந்து வாழப் போவதாகவும் ஆத்திரத்துடன் கூறினான்.

உடனே ஸ்ரீதேவி "ஆகா! கன்றாகப் போ! போய்த் தொலை. பிறகு ஜன்மத்துக்கும் இந்தப் பக்கம் திரும்பாதே!" என்று சீறினாள்.

"என்ன! என்னைப் பார்த்து இப்படிச் சொல்லுகிற அளவுக்குத் துணிச்சல் ஏற்பட்டு விட்டதா?" என்று சொல்லிக் கொண்டே அந்தக் குடிகாரன் அவளைக் கத்தி கொண்டு குத்தப்போனான். நல்ல வேளை, அந்த வெட்டு அவள்மீது நேரே விழவில்லை. வலது கையில் பட்டு ரத்தக் காயம் மட்டும் ஏற்படுத்திச் சென்றது.

சர்க்கஸ் முதலாளி சோமனும் மற்றவர்களும், இதைக் கேட்டுச் ஸ்ரீதேவியைக் காப்பாற்ற ஓடிவந்தனர். குப்பனை, அவள் வெட்ட வந்த கத்தியுடன் போலீஸாரிடம் ஒப்படைத்தனர். கோர்ட்டில் விசாரணை நடந்தது. குப்பனுக்கு ஒரு வருஷம் சிறைவாசத் தண்டனை விதிக்கப் பட்டது. ஸ்ரீதேவி பத்து நாள் ஆஸ்பத்திரியிலிருந்தாள். அதற்குள் அவளுடைய கைக் காயமெல்லாம் ஆறிப் போய்விட்டது.

ஒரு பாதி நன்றி யுணர்ச்சி காரணமாகவும் மற்றொரு பாதி இரக்கம் காரணமாகவும் ஸ்ரீதேவி சோமனுடன் வாழத் தலைப்பட்டாள். ஆனால் அவள் இதயத்தில் எப்பொழுதும் குப்பன் திரும்பி வந்தால் என்ன செய்வானோ, எப்படிப் பழி தீர்த்துக் கொள்வானோ என்ற பயம் இருந்துகொண்டே யிருந்தது.

மாதங்கள் சென்றன. ஸ்ரீதேவி இப்பொழுது வான ஊஞ்சலில் விளையாடும் வித்தைக்காரியாகக் கூட ஆகி விட்டாள். விளம்பரங்களில், "ஒரு பெண் துணிகரமான வான ஊஞ்சல்களில் துள்ளி விளையாடும் துணிகரச் செய்யும் காட்சியைப் பாருங்கள்" என்று விளம்பரப்படுத்தப் பட்டிருந்தது.

மேற்படி விளம்பரம் வசூலாவையும் கூட்டத்தையும் அபரிமிதமாகக் கொண்டு வந்தது. நாற்பதடி உயரத்திலிருந்து இருபது அடி தூரம் தள்ளி யிருக்கும் ஊஞ்சலில், பார்ப்பவர் விழி பிதுங்கும்படியாகவும், நெஞ்சம் திடுக்கிடும்படியாகவும் குதித்து ஜனங்களின் பாராட்டைப் பெற்றாள். அப்பொழுதெல்லாம் சோமனும் மற்றவர்களும் கீழே அவள் தவறி விழுந்துவிட்டால் காயம்படாமலிருப்பதற்காக வேண்டி, கண்கொட்டாமல் ஜமுக்காளத்தைப் பிடித்துக் கொண்டு நிற்பார்கள்.

சோமன் ஸ்ரீதேவியை அன்புடன்தான் நடத்தி வந்தான் என்றாலும், அவனுக்குக் குழந்தை லலிதாவைக் கண்டால் கொஞ்சம்கூடப் பிடிக்கவில்லை.

ஏனெனில் அந்தப் பெண்ணுக்குத் தன் தந்தை குப்பன் மீது ஒரு தனியான பாசம் இருந்து வந்தது. அதுமட்டுமல்ல. தன் தாய், தந்தைக்குத் துரோகம் செய்து விட்டுச் சோமனுடன் வாழ்வதும் அவளுக்குப் பிடிக்கவில்லை. ஆகவே அவள் சோமனைக் கண்டால் அருவருப்பாக நடந்து கொள்ளத் தலைப்பட்டாள். சோமன் அதற்கு வட்டியும் அசலுமாகத் திருப்பிக் கொடுக்கத் தலைப்பட்டான்.

இப்பொழுது நன்றாகவே தனக்குத் தன் தாயைக் கண்டால் பிடிக்கவில்லை என்பதைக் காட்டலானாள். தன் தந்தையைப் பற்றி அடிக்கடி விசாரிக்கலானாள். இந்த உணர்ச்சியை முளையிலேயே கிள்ளிவிட வேண்டும் என்று பார்த்தாள் ஸ்ரீதேவி. அவளால் முடியவில்லை. சோமனுக்கு லலிதாவைக் கண்டால் கட்டோடு பிடிக்கவில்லையென்றாலும், ஸ்ரீதேவி அவள்மீது கொண்டிருக்கும் தாய்ப் பாசம் சற்றும் குறையவில்லையே!

ஒரு நாள் சோமன் பட்டவர்த்தனமாக ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தான். "உனக்கு என்மேல் பிரியம் அதிகமா அல்லது லலிதாவின் மீது பிரியம் அதிகமா?" என்று கேட்டான்.

"இருவர் பேரிலும்தான்; ஆனால் லலிதாவின் மீது சற்று அதிகப் பிரியம் கொண்டிருக்கிறேன். ஏனென்றால் அவள் என் குழந்தை. மேலும் உன்னைத் தெரிவதற்கு முன்பிருந்தே அவளை எனக்குத் தெரியும்" என்றாள்.

சோமனால் இதற்கு எவ்விதப் பதிலும் கூற முடியவில்லை. ஆத்திரம் மட்டும் பொங்கி வந்தது. உதடுகளைக் கடித்துக் கொண்டு வாயை மூடிக் கொண்டிருந்தான்.

இதற்குப் பிறகு சோமனுக்கும் ஸ்ரீதேவிக்கும் அவ்வளவு அந்யோன்யம் நிலவவில்லை. சோமன் அவளை ஒரு பொருட்டாகக் கருதுவதே இல்லை. இதனால் ஸ்ரீதேவி மிகவும் மன வேதனை யுற்றாள். இந்த வேதனை சர்க்கஸில் அவள் திறமையைப் பெரிதும் பாதித்தது.

குப்பன் ஜெயிலிலிருந்து விடுதலை யடைவதற்கு முன்பு ஒரு பயங்கரம் நிகழ்ந்தது. அதாவது ஸ்ரீதேவி வான ஊஞ்சல்களில் தாவி விளையாடும்போது, கை தவறிக் கீழே விழுந்து விட்டாள். கீழே கொஞ்சம்கூடச் சொந்தமயின்றிச்



மாந்தளிர் மேனியாள்

"அரசர்களின் நீதி இப்படியும் இருக்குமா! ஒரு காரியத்தைச் செய்யாததற்கும் தண்டனை - அதைச் செய்ததற்கும் தண்டனையா!" என்று எண்ணி வியக்கிறாள் இந்த மலரின் அட்டையில் தோன்றும் கன்னிகை.

இப்படி அவள் ஏன் நினைக்க நேர்ந்தது என்பது தான் மிகவும் சுவாரஸ்யமான விஷயம்.

பாண்டிய மன்னன் (தென்னவன்) இளம் பிள்ளைப் பிராயத்தவன். அவன் இளமையைக் கண்டு, சில சிற்றரசர்கள் கப்பம் கட்டாது, அவனை வணங்காது அலட்சியம் செய்தனர். தென்னவன் இளைஞனாயினும் புயவலி மிக்க வீரன். அவனை வணங்காதவர்களின் நாடுகளை யெல்லாம் கைப்பற்றினான். இப்படி அவனை அலட்சியப் படுத்தியவர்கள் தங்கள் நாடுகளை இழந்தனர்.

ஆனால் இந்த கன்னிகை தென்னவனின் இளமையைக் கண்டு எள்ளி நகையாடவில்லை; அதற்கு மாறாக அவனிடம் எல்லையில்லாக் காதல் கொண்டாள்.

அவன் கம்பீரமாக யானை மீதமர்ந்து வீதியில் பவனி வருவான். அவன் அமர்ந்து வரும் யானையின் மணியோசை கேட்டதும் சிற்ப வேலைப்பாடுகள் நிறைந்த தன் வீட்டு அணிமாடத்தின் நம்மல விளக்கின் அருகில் வந்து நிற்பாள். பாண்டிய மன்னனைச் சுமந்து பெருமையுடன் வரும் அந்த யானையைப் பார்ப்பாள். நுதிக்கையில் இட்டிருக்கும் வண்ணக் கோலத்தைப் பார்ப்பாள். தந்தத்துக்கு மேலே எழுதி யிருக்கும் பச்சைக் கொடியைப் பார்ப்பாள். அவன், பரந்து விரிந்த மார்பில் தவழ்ந்து விளையாடும் மாலையையும், ஒரு கையில் அன்பின் சின்னமாகத் தாமரை மொட்டுகளும், இன்னொரு கையில் வீரத்தின் சின்னமாக முத்தும் வைரமும் இழைத்த அங்குசமும் தாங்கி ஆண்மையோடு அமர்ந்திருக்கும் அந்த வீர மன்னனைப் பார்த்து மெய் சிலிர்ப்பாள். தன் உள்ள நிலைமைவெளிப்படுமாறு அவனைக் கை தொழுவாள். இப்படி ஒரு நாளா, இரண்டு நாளா, எத்தனையோ நாட்கள்!



அதைப் பற்றித் தெரிந்து கொள்ளுமுன் மற்றொரு விஷயம் இருக்கிறது. பொதுவாக மாந்தளிர் போன்ற நிறம் பெற்ற மங்கையர்களை அழகிகள், அழகிய மேனி பெற்றவர்கள் என்ற கருத்து இன்று அல்ல நேற்றல்ல, ஆயிரமாயிரம் ஆண்டுகளாகவே நம் நாட்டில் இருந்து வருகிறது.

இப்பொழுது பாண்டிய மன்னனின் காதலுக்காகக் காத்திருக்கும் கன்னிகையைப் பாருங்கள். அவள் மாந்தளிர் மேனியைப் பாருங்கள். அவள் அணிந்திருக்கும் பட்டாடைகளையும், பவழ மாலைகளையும், முத்தாபரணங்களையும் பாருங்கள். அவள் கைவிரல்கள் நெகிழ்வதையும் கவனியுங்கள். அவள் தன்னுடைய இதய எழுச்சியை, உள்ள உணர்ச்சியைப் பாவத்தோடு எடுத்துக் கூறுவதைக் கேளுங்கள்:

களியானைத் தென்னன்
  இளங்கோஎன் றெள்ளிப்
பணியாரே தம்பார்
  இழக்க— அணியாகம்
கைதொழுதே னும்
  இழக்கோ நறுமாவின்
கொய்தளிர் அன்ன நிறம்!

"அவனை நான் வணங்கியதன் பயனாக, என் மாநிற மேனி நாளுக்குநாள் பசலையாகக் கொண்டு வருகிறதே!" என்று கூறுகிறாள். இதுதான் தன்னை வணங்கியதற்காக இளங்கோ அவளுக்கு அளித்த தண்டனை. இப்படி அவள் மாநிற மேனியை இழக்கலாமா! இது முறையா!

காதல் உள்ளத்தில் எழும் எண்ணங்கள் கவிஞர்களுக்குத்தான் தெரியும். உத்தமக் கவிஞராகிய முத்தொள்ளாயிர ஆசிரியர் நுட்பமாக நேரே காதல் உணர்ச்சியை, காதலியின் இதயத்தை, அற்புதக் கவியாகப் பாடி விட்டார்.

நமது சைத்திரிகர் மணியமும் பாடலுக்கு மிகப் பொருத்தமாக யானைமீது பவனி வரும் பெருமான அழகு பொலியும் பாண்டியனின் கம்பீரத்தையும், அவன் பேரில் காதல் கொண்ட கன்னிகை 'நான் என் மேனியின் மா நிறத்தை இழக்கலாமா!' என்று கேட்டு நாணமுற்று நிற்கும் பாவத்தையும் அற்புதமான வண்ண ஓவியமாகத் தீட்டி யிருக்கிறார்.

சோமனும் மற்றவர்களும் ஜமுக்காளத்தைப் பிடித்துக் கொண்டிருந்தனர். ஆகவே, அவன் விழுந்த போது அவனை ஏந்திக் கொள்ளவோ, நேரே பூமியில் விழாமல் தடுக்கவோ முடியாமற் போய்விட்டது. ஆகவே, அவ்வளவு உயரத்திலிருந்து நேரே தரையில் விழுந்ததில் சிதேவியின் இரு தொடைகளின் எலும்புகள் முறிந்து விட்டன. உடனே ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப் பட்டான். டாக்டர்கள் பரிசோதித்தார்கள். சிதேவி குணமடையச் சரியாக ஆறுமாதம் பிடிக்கும் என்றார்கள். அப்படிக் குணமடைந்தாலும், இனி அவனால் கம்பிமீது நடப்பதோ, வான ஊஞ்சல் ஆடுவதோ முடியாது என்று கண்டிப்பாகக் கூறி விட்டார்கள்.

இப்பொழுது லலிதா சோமனுடன் இருந்து வந்தாள். சோமன், லலிதாவின் நலத்திலோ, ஏன் சிதேவியின் நலத்திலோ சிறிதாகிலும் சிரத்தை யிருப்பவனாகக் காட்டிக் கொள்ளவில்லை. "அவன் இனிமேல் வாழ்க்கை பூராவும் நொண்டியாகவும் முடமாகவும் இருக்க வேண்டியது தான். அவன் இனிமேல் எனக்கு ஏற்றவன் அல்ல" என்று சிதேவியின் காதில் விழும்படியாகவே கூறலானான்.

சிதேவி, தன் சம்பாத்தியத்தில் மிகுந்து வைத்த பணத்தை யெல்லாம், முதலாளி சோமனிடமே கொடுத்து வைத்திருந்தான். இப்பொழுது அந்தப் பணம் எல்லாவற்றையும் சோமன் சிதேவியினிடமே கொடுத்து, அவனுடைய பணக் கஷ்டத்தை யெல்லாம் நிவர்த்தி செய்தான். ஆம், அந்தப் பணத்தில் தனக்கும் பங்குண்டு என்று சோமன் கேட்டுப் பார்த்தான். ஆனால் பலிக்கவில்லை!

* * *

திருச்சி சென்ட்ரல் ஜெயிலிலிருந்து விடுதலையான குப்பன் திரும்பவும் வந்து சேர்ந்தான். சிதேவியின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டுமென அவன் மனம் துடித்தது. நேரே சோமன் வீட்டுக்கு வந்தான்.

சோமன் வீட்டுக் கதவைத் திறந்தானோ இல்லையோ, லலிதா ஓடிச் சென்று தந்தையைக் கட்டிக் கொண்டு கண்ணீர் பெருக்கினாள். அந்த விக்கலுக்கும் விம்மலுக்கு மிடையே சிதேவிக்கு நேர்ந்த துர்க்கதியெல்லாம் எடுத்துக் கூறினாள் லலிதா. தன் குழந்தையின் அன்பைக் கண்ட குப்பனின் இதயம் இளகி விட்டது. அவளைக் கொஞ்சினான்; குலாவினான்; தேற்றினான்.

ஸ்ரீதேவியின் மீது பழி தீர்த்துக்கொள்ள வேண்டும் என்ற அவன் எண்ணம் மறையத் தொடங்கியது. "கடவுளே, அவளைத் தண்டித்திருக்கும் போது, நான் வேறு அவளைத் தண்டிப்பானேன்" என்று எண்ணினான் குப்பன்.

இந்தச் சமயத்தில் சோமன் அங்கே வந்து சேர்ந்தான். "இங்கே வந்து என்ன செய்கிறாய்?" என்று குப்பனைப் பார்த்துக் கேட்டான் சோமன்.

"என் மகளை அழைத்துச் செல்லுவதற்காக வந்தேன்" என்றான் குப்பன்.

"ஆகா! பேஷாய் அழைத்துப் போ. திரும்ப அழைத்து வரவே வேண்டாம். ஏன், அவள் தாயாரைக் கூட வேண்டுமானாலும் அழைத்துப் போ. அவள் இனி எனக்குத் தேவை இல்லை" என்றான் சோமன்.

"இதயம் இல்லாத அரக்கன் நீ" என்றான் குப்பன்.

"இதயம் இருந்தால் ஜெயிலுக்குக் கொண்டு போய் விடுகிறது. அப்படிப்பட்ட இதயமிருந்து என்ன புண்ணியம்?" என்றான் சோமன் சிரித்துக்கொண்டே.

குப்பனுக்குக் கோபம் வந்து விட்டது. சோமனை அடிக்கவே போய் விட்டான். அந்தச் சமயம் லலிதா தடுத்து, "வா, அப்பா! நாம் போய் அம்மாவைப் பார்த்து விட்டு வருவோம். அந்த மனுஷன் எப்படியாவது போகட்டும்" என்றாள்.

குப்பன், ஸ்ரீதேவியைப் பார்க்க லலிதாவுடன் ஆஸ்பத்திரிக்குச் சென்றான். முகத்தில் சோகமும், உள்ளத்தில் சோர்வும், உடலில் பலஹீனமும், தொடைகளில் 'பேண்டேஜ்' மண் வைத்துக் கட்டிய கட்டுகளுடனும் இருந்த ஸ்ரீதேவியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ஆனால் லலிதாவைப் பார்த்ததும் அவள் முகம் சற்று ஒளி பெற்றது. இதழ்களில் சிறு முறுவல் கூட வந்தது. அந்த ஒளியும் முறுவலும், மாறிப் பயமும் பீதியும் தோன்றின, அவளுக்குக் குப்பனைப் பார்த்தபோது.



"என்னை என்ன வேண்டுமானாலும் செய். குழந்தையைத் துன்புறுத்தாதே" என்றாள் ஸ்ரீதேவி.

"அப்படி யெல்லாம் சிறிதும் பயப்படாதே, அம்மா. அப்பா என் மேலே எவ்வளவு பிரியமாக இருக்கிறார் தெரியுமா?" என்றாள் லலிதா.

குப்பன் ஸ்ரீதேவியிடம், "லலிதாவை என்னுடன் அழைத்துப் போகப் போகிறேன். பன்னிரண்டு மாசங்கள் ஜெயிலில் குடியில்லாமல் இருக்க நேர்ந்ததால், குடிப் பழக்கத்தையே விட்டுத் தொலைத்து விட்டேன். எனக்கு நீ வேண்டாம். உனக்கு உடம்பு தேறிய பிறகு நீ யாருடன் வாழ வேண்டும் என்று விரும்புகிறாயோ, அவனுடன் வாழ். உன் மீது பழி தீர்த்துக் கொள்ள வேண்டும், உன்னைக் கொன்றுவிட வேண்டும் என்று நினைத்தேன். கடவுள் உன்னைத் தண்டித்து விட்டார். நான் இனி அந்த எண்ணத்தை விட்டு விட்டேன்" என்றான் குப்பன்.

அதற்கு ஸ்ரீதேவி, "ஏன் அந்த எண்ணத்தை விட்டு விட்டாய்? அதை இப்பொழுதே நிறைவேற்றி விடு. என்னால் லலிதாவைப் பார்க்காமல் ஒருநாள்கூட உயிர் வாழ முடியாது. அவள் தான் என் உயிருக்கு, என் வாழ்வுக்கு ஆதாரம். அவள் எனக்கு இல்லை யென்றால், நான் இருப்பதை விட இறப்பதே மேல்" என்றாள்.

லலிதாகூட, தினம் தன் தாயாரைப் பார்க்க அனுமதிக்கும்படி கெஞ்சினாள். குப்பனுக்குக் கோபம் வந்து விட்டது. "அப்படியானால் உன் அம்மாவோடேயே இருந்து தொலை" என்று கத்தினான்.

லலிதா, "சரி, அப்பா! அப்படியே செய்கிறேன்" என்று கூறிவிட்டாள். குப்பன் கோபத்துடன் வெளியேறினான்.

ஸ்ரீதேவி ஆஸ்பத்திரிக் காம்பவுண்டுக்குள் வசித்து வந்தவர்களிடம் சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்திருந்தாள். ஆகவே, லலிதா சாப்பாட்டு வேளை தவிர மற்ற நேரமெல்லாம் தன் தாயாரின் பக்கத்திலேயே இருந்து வந்தாள். சோமன் ஒரு தடவைகூட ஸ்ரீதேவியைப் பார்க்க வரவில்லை. "முடமாகிப்போன ஒரு பெண் பிள்ளை எனக்கு அவசியமில்லை" என்று அவன் சொன்ன வார்த்தைகள், அவள் கொண்டிருந்த கொஞ்ச நஞ்ச நம்பிக்கையையும் சிதற அடித்து விட்டது. ஆகவே, சோமனும் சக்கலையும் அந்த ஊரைவிட்டு வேறு ஊருக்குப் போய் விட்ட செய்தி கேள்விப்பட்ட போது அவள் உள்ளத்தில் எத்தகைய சலனமும் ஏற்படவில்லை.

ஒரு மாதம் கழித்து, குப்பன் ஆஸ்பத்திரிக்குச் சென்று, ஸ்ரீதேவியிடம் சொன்னான்: "எனக்குக் கூட லலிதாவின்றி வாழ முடியவில்லை. அன்பு செலுத்துவோர் இன்றி வாழ்க்கை நடத்துவது சாரமற்று இருக்கிறது. அதனால் இங்கே ஒரு வீடு ஏற்பாடு செய்திருக்கிறேன். இங்கே உள்ளூர் கட்டிட கண்ட்ராக்டர் ஒருவரிடம், மேஸ்திரி வேலை எனக்குக் கிடைத்திருக்கிறது. லலிதா என்னுடன் வந்து இருக்கட்டும். அவள் தினம் என்னுடனேயே வந்து உன்னைப் பார்ப்பாள்."

குப்பன் அன்றைக்கே லலிதாவை அழைத்துச் சென்று விட்டான். அவன் வாக்களித்திருந்தபடி தினந்தோறும் லலிதாவை ஆஸ்பத்திரிக்கு அழைத்து வந்தான். நிதானமாக, அவன் அந்த நாட்களில் ஸ்ரீதேவியின் மீது கொண்டிருந்த அன்பு வளரலாயிற்று. அதுவும், குழந்தை லலிதாவுக்கும் அவளுக்கும் இடையில் நிலவிய அன்புப் பிணைப்பைப் பார்த்த போது அவன் காதலும் அதிகமாயிற்று.

* * *

வேகமாக மாதங்கள் சென்றன. ஒருநாள் டிஸம்பர் மாதத்துக் காலை நேரம். உலகமே பச்சைப் போர்வை போர்த்திக் கொண்டாற் போல் எங்கும் பசுமை நிறமாக இருந்தது. புஷ்பங்கள் பூத்துக் குலுங்கின. பறவைகள் ஒன்றோடொன்று காதற் பாட்டுகள் பாடிப் பரிமாறிக் கொண்டிருந்தன. ஸ்ரீதேவி ஆஸ்பத்திரியிலிருந்து சிகிச்சை முடிவு பெற்று அனுப்பப்பட்டாள். குப்பனும் லலிதாவும், அவளைத் தாங்கள் குடியிருந்த வீட்டுக்கு அழைத்து வந்தார்கள். அவளால் இனி கம்பி மேல் நடக்கும் வித்தைகள் செய்ய முடியாதாயினும், கால்கள் நன்றாக நடக்கக் கூடியவாறு குணமாகி யிருந்தன.

ஒரு வாரம் கழித்துக் குப்பன் அவளிடம் சொன்னான்: "லலிதாவை முன்னிட்டாகிலும் நாம் இருவரும் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும்."

இதைக் கேட்டவுடன் ஸ்ரீதேவி உணர்ச்சி மேலிட்டு அவன் பாதங்களில் விழுந்து, "நானும் இதையே தான் விரும்பினேன். ஆனால் சொல்லத் தயங்கினேன்" என்றாள்.

அடுத்த ஞாயிற்றுக் கிழமையே, ஓர் ஆரிய சமாஜ புரோகிதர் வந்து, அக்னி வளர்த்து, வேத மந்திரங்கள் ஓதி அவர்களுக்குக் கல்யாணம் செய்து வைத்தார். குப்பன் அவள் கழுத்தில் தாலிக் கயிற்றையும் கட்டினான்.

அதே இரவு, ஸ்ரீதேவியும் குப்பனும் தனியறையிலிருந்த போது, குப்பனின் கரங்களைப் பற்றிக் கொண்டு ஸ்ரீதேவி, "கம்பிமீது நடப்பவளாக இருந்த நான் இப்போது அக்னி மீது நடப்பவளாகி விட்டேன். இனி நான் ஒரு இம்மியும் பிசக மாட்டேன்" என்று உணர்ச்சி ததும்பக் கூறினாள்.



பிரிவினைச் சக்திகள்
ராம ராவண யுத்தம்
புது டில்லி மகா விஷ்ணு
சித்திர புராணம்
16
காளிங்க நர்த்தனம்



ஜெய் ஹனுமான்!
இந்திய சர்க்கார்
இந்திய மக்கள்
புது வாமனன்
நிலச் சுவான்தார்
வண்டி ஓடுமோ?
ரஷ்யா
விஜயலட்சுமி


மந்திர மரம்
கருட வாகனம்
தேசிய விமானப் போக்குவரத்து
நவீன விக்னேசுவரர்
ஈ.வெ.ரா
கழகம்


நவீன காமதேனு
ஐந்தாண்டுத்திட்டம்
உழைப்பு
பொதுமக்கள்
அட்சய பாத்திரமு?
அமிர்தம் வருமா?
கம்யூனிஸ்டு நாடுகள்
இதர நாடுகள்
ஐ.நா.சபை
இந்தியா

உங்கள் வருங்காலத்தை உருவாக்குங்கள்

மனித குலத்தின் வருங்காலத்தை அறிந்து விதியை நிர்ணயிக்கும் சக்தி **"ஜுபிடர்"** தேவனிடம் இருப்பதாகக் கருதப்படுகிறது.

உங்கள் வருங்காலத்தின் நிச்சயமற்ற தன்மையையும் எதிர்பாராத அபாயங்களையும் தடுத்து உங்களைக் காப்பாற்ற **ஜுபிடர் ஜெனரல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்** வேண்டிய பாதுகாப்பு வசதிகளை அளிக்கிறது.

மொத்த ஆஸ்திகள் ... ரூ. 3,35,00,000

ஜுபிடர் ஜெனரல்
இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.


(ஸ்தாபிதம் 1919)

போர்ட் - பம்பாய்

இந்தியா முழுவதும் கிளைகளும், பிரதிநிதிகளும் உண்டு




ஆயுள் - நெருப்பு - கப்பல் - விபத்து



செம்மையான செய்முறை நெ. 1

ஃபுல்-ப்ரூப் லிக்விட் ப்ரேஸிங். சைக்கிளின் ஃப்ரேம் ஜெயின்டுகளும், லக்குகளும் பித்தளைக் குழம்பு உலைகளில் தோய்க்கப்பட்டவை.

இந்தியாவில் மிகப் பெரியதும், மிக நூதனமானதுமான சைக்கிள் தயாரிக்கும் இயந்திரங்களில் செம்மையாகத் தயாரிக்கப்பட்ட ஹிந்த் சைக்கிள்கள், உயர்ந்த ரக இயந்திரங்களை நியாயமான விலையில் வாங்க விரும்பும் வாடிக்கைக்காரர்களுக்குப் பிடித்தமானது.



ஹிந்த் சைக்கிள்

இந்தியாவிற்கே சொந்தமானது


ஹிந்த் சைக்கிள்ஸ் லிமிடெட், 250, வர்லி, பம்பாய்-18

சென்னை, ஆந்திரா ராஜ்யங்களுக்கும், மைசூர் சமஸ்தானத்துக்கும் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

பம்பாய் சைக்கிள் இம்போர்ட்டிங் கம்பெனி, 7, ப்ராட்வே, சென்னை

மெட்ரோபாலிட்டன் சைக்கிள் ஹவுஸ், 21, ப்ராட்வே, சென்னை

குதூகல
தீபாவளிக்கு



உங்கள்
வீட்டை

குதூகலிப்பது

வாலா






எல்லா சந்தர்ப்பங்களிலும் உங்கள் இல்லங்களை அலங்கரித்து ஒளியுறச் செய்வது வாலா பெயிண்டுகள்தான். வாலா பெயிண்ட் மிகவும் எடுப்பா யிருக்கிறது. எல்லாவற்றுக்கும் வாலா பெயிண்ட் உபயோகப் படும். உங்களுக்குத் தேவையான யோசனைகள் கூறுவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.

தயாரிப்பவர்கள்:

மக்பர்லேன் & கோ., லிட்.,
கல்கத்தா பம்பாய்.

தென் இந்தியாவின் பூரண விநியோகஸ்தர்களும் செகரட்டரிகளும்:

செளத் இந்தியா கார்ப்பரேஷன் (மதராஸ்) லிட்.,
2. அரண்மனைக்காரத்தெரு, மதராஸ்-1.
டெலிபோன்: 4911 (4 லைன்கள்) தந்தி: "GOODWILL"


S.R.V.S.
S.R.V.S.L.
S.R.V.S.
S.R.V.S.L.
துரிதமும்
அன்பும் நிறைந்த
பிரத்தியேக
சேவைக்கு*
ON
சென்னையிலும்
பெங்களூரிலும் :
ON
★ கடந்த பதினைந்து
ஆண்டுகளாக உங்களுக்கு
சேவை புரிந்து வருகிறோம்.
உங்களுடைய பூரண திருப்
தியே எங்களது மகிழ்ச்
சிக்கும் அபிவிருத்திக்கும்
காரணமாகும்.
SRI RAMA VILAS SERVICE LTD
டின்ரோஸ் எஸ்டேட், மவுண்ட்ரோடு, மதராஸ்-2 ★ ராஜன் தோட்டம், கும்பகோணம்

"அது ஒரு பெரிய கதைங்க, சொல்லட்டுங்களா?" என்று ஆரம்பித்தான் செல்லப்பன்.

கதை கேட்பதில் எனக்கு விருப்பம் அதிகம் என்ற என் பலவீனத்தை அவன் நன்றாகத் தெரிந்துகொண்டிருந்தான்.

"அப்படி யென்றால் பெருமூச்சைக் காணுமே! பெரிய கதைக்கு லக்ஷணமாக நீ ஒரு நீண்ட பெருமூச்சு விட வேண்டாமா?" என்று கேட்டேன்.

நான் சொன்னது புரியாமல் ஒரு கணம் தயங்கினான் அவன். ஆனால் தொடர்ந்து, "பெரிய கதைக்கு லக்ஷணமா? நம்ம கதைக்குப் பெருமூச்சு விட்டால் விட்டது தான். மறுபடியும் மூச்சு உள்ளே போகாமல் உடம்பை ஒரு சுத்துச் சுத்தி, ஊரையும் ஒரு சுத்துச் சுத்தி, நேரே யம பட்டணத்துக்குப் போய்த்தான் நிற்கும்!" என்றான்.

"அப்படி யென்றால்!"

"யாராச்சியும் சாகணும். அல்லது ஏதாவது கொலை கிலை நடக்கணும். அப்பதான் எனக்கு அது ஒரு பெரிய கதைங்க. இல்லை விட்டால்......"

"......சாதாரணக் கதை போலிருக்கிறது! சரிதான்! அந்தப் பெரிய கதைக்கு இப்போது என்ன வந்தது!"

"இப்ப ஒண்ணும் வல்லிங்க! நல்லா சந்தோசமாத்தான் இருக்குது! ஆனால் அது சாயங்காலம் இங்கு வந்து மாலை மாலையாகக் கண்ணில் தண்ணி விடப் போவுதே, அதைப் பாத்தீங்கன்னு..."

"அட! கதை 'நடக்கும்' என்று முன்பே அநேகம் தடவைகள் கேள்விப் பட்டிருக்கிறேன்! ஆனால் அது கண்ணீர் கூட விடும் என்று இப்போதுதான் கேள்விப்படுகிறேன்!" என்றேன்.

"நீங்க என்னாங்க! நான் நீலவேணியைச் சொன்னு, நீங்க புரியலையே..."

"நீலவேணியா! அது ஒரு பெண் பிள்ளைதானே!"

"நல்லா அசல் பொம்பளைங்க! அது கண்ணிலே தண்ணிவிட்டுப் போவதைக் கண்டீங்கன்னு....."


"வேண்டாம்! வேண்டாம்! அசல் பெண் பிள்ளைதானென்று நீ சொன்னவுடன் நான் புரிந்து கொண்டு விட்டேன்! நீ மாலை மாலை யென்று சொல்லுறியே, நான் மலை மலையாகக் கண்ணீர் விடுகிற பெண் பிள்ளைகளைப் பற்றிக் கூடக் கேள்விப்பட்டிருக்கிறேன்! என் தாத்தா செத்துப் போன பதினோராம் நாள் என்னுடைய அருமைப் பாட்டி வந்து......"

"என்னாங்க! உங்க தாத்தாவை யாராச்சியும் கொலை கிலை......"

"அட! நீ யாரையப்பா! எப்போதும் கொலையைப் பற்றியே உனக்கு ஞாபகம்! அதுதான் ஒரு கொலை செய்து விட்டு இங்கு மாட்டிக்கொண்டிருக்கிறாயே! இன்னும் ஏன் அந்த எண்ணம்! அதெல்லாம் அடியோடு மறந்து விட்டு மனத்தை நல்ல வழியில் திருப்பு" என்றேன்.

இது எனக்கும் செல்லப்பனுக்கும் நடந்த சம்பாஷணை என்று தெரிந்து கொண்டிருப்பீர்கள். சிறையில் நடந்த சம்பாஷணை என்றும் அறிந்து கொண்டிருப்பீர்கள். அதோடு நானும் செல்லப்பனும் இரு கைதிகள் என்றும் புரிந்து கொண்டு நிம்மதியாய் இருப்பீர்கள்.

ஆனால் நான் செல்லப்பனுடன் கூட ஒரு சக கைதி இல்லை யென்ற செய்தியைச் சொல்லும்போது நீங்கள் வருத்தத்துடன் நம்பித்தான் ஆகவேண்டும். அப்படியும் நம்பாவிட்டால், அதை நிரூபிக்கச் செல்லப்பன் காதலி நீலவேணியை வேண்டுமானாலும் சாட்சிக்குக் கூப்பிட்டு விடுகிறேன், அவள் சொல்லுவதற்குத் தயாரா யிருந்தால்!



* * *

சின்ன ராயவரம் சப் ஜெயிலில் அடியேன் ஒரு 'வார்டர்' என்ற திருநாமம் சூட்டப்பட்டு, '497' என்ற அர்த்தமில்லாத நம்பரையும் சுமந்து கொண்டு சுமார் ஐம்பத்தைந்து கைதிகளைக் கண்காணித்துக்கொண்டிருந்தேன்.

சுமார் ஆயிரம் வீடுகளையும் பத்தாயிரம் ஜனங்களையும் கொண்ட சின்ன ராயவரத்துக்கு அழகு அந்த சப் ஜெயில் தான் என்று அந்த ஊர்வாசிகள் சொல்லிக் கொண்டார்கள். ஆகையால் வெளியூரானான நானும் "ஊரோடு ஒட்டிவாழ்" என்ற முது மொழிப்படி சின்ன ராயவரத்துக்கு சப் ஜெயில் தான் அழகு என்று நம்பி வந்தேன், ...நீலவேணியைப் பார்க்கும் வரை...!

* * *

செல்லப்பனும் மற்றக் கைதிகளும் இருந்த 'பிளாக்' நான் காவல் புரிய வேண்டிய இடத்துக்கு நேராக இருந்தது. செல்லப்பனுக்குத் தனி அறை; புதுக் கைதியாதலால் முதல் சில மாதங்களுக்கு இந்தத் தனி மரியாதை. நான் ரோந்து ஓய்ந்திருக்கும் போதெல்லாம் அவன் அறைக்கு எதிரே இருக்கும் சிறு கடப்பாரைத் திண்ணையில் தான் உட்கார்ந்திருப்பேன். அப்போது பொழுது போக்காக நான் அவனிடம் ஏதாவது பேச்சுக் கொடுப்பது வழக்கம்.

செல்லப்பன் ஒரு நீண்ட காலக் கைதி. அதாவது ஏழு வருடங்கள் சிறைத் தண்டனை யடைந்தவன். முதல் வருடம் அவனை இந்த சப் ஜெயிலில் வைத்து விட்டுப் பிறகு அலிப்பூர் சிறைக்கோ அல்லது வேலூர் சிறைக்கோ மாற்றி விடுவார்கள். செல்லப்பனுக்கு என் வயது இருக்கும். அதாவது அவன் ஆயுள் கதையில் இருபத்தி ஐந்து ஏடுகள் புரட்டியாய் விட்டது. அரும்பு மீசை இருக்க வேண்டிய இடத்தில் அவனுக்கு அடர்த்தியான ரோமம் வளர்ந்து கிடந்தது. பளிங்குபோல் இருக்க வேண்டிய அவன் முகவாய்க் கட்டையில் பெரிய தாடி தழைத்துப் படர்ந்திருந்தது. ஆனால் ஏக்கம் தேங்கிக் கிடக்கவேண்டிய அவன் கண்களில் மட்டும் நம்பிக்கை யொளிச் சுடர் விட்டுக் கொண்டிருந்தது. அவன் பாக்கி சுமார் ஆறரை வருடங்களையும் ஆறரை நாட்களாகக் கழித்துவிடத் திட்டமிட்டிருந்தான் என் பதையும் வெளிப்படுத்தியது. அந்த நம்பிக்கைக்குப் பாத்திரமாக நீலவேணி கடைசி வரைக்கும் உறுதியாகத் துணை நிற்பாளா என்று நான் யோசித்துக் கொண்டிருந்த போது சிறை மணி "டாண் டாண்" என்று இரு முறை அடித்து என் சிந்தனையைக் கலைத்தது. அன்றைய தினம் காவல் கைதிகளைக் கண்காணிக்கும் என் வேலையும் முடிந்தது. ராயவரத்து சப் ஜெயிலில் மறுபடியும் மறுநாள் காலை ஆறு மணிக்குத்தான் எனக்கு 'டூட்டி' ஆரம்பம்.

அன்று 'விசிட்டர்'கள் தினம் என்று சிறைவாயிலை அடைந்ததும்தான் எனக்கு ஞாபகம் வந்தது. மாதம் ஒரு முறைக் கைதிகளைப் பார்க்க அனுமதிக்கப்படும் உற்றார்களும் உறவினர்களும் பழங்களையும் பட்சணங்களையும் கட்டிக் கொண்டு சிறைவாயிலில் சிறு கூட்டமாக நின்று கொண்டிருந்தார்கள்.

கூட்டத்துக்கு முன்னால் நின்று கொண்டிருந்தது நீலவேணிதான் என்று எனக்கு யாரும் சொல்லாமலே தெரிந்தது. தெரிந்தவுடன் என் மனம் இதுவரைத் தான் கொண்டிருந்த அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளத் துணிந்தும் விட்டது. இந்த சப் ஜெயிலைப்போல் இந்த ஊருக்கே அழகு என்று சொல்லுகிறார்களே; அது கேவலம் ஒரு முன்னூறு கைதிகளைத் தானே அடைத்து வைக்க முடியும்!

சிறு வயது முதல் செல்லப்பனுடன் பழக நேர்ந்த நீலவேணி வயது வந்ததும் அவனையேதான் மணப்பேன் என்று பிடிவாதம் பிடித்துக் கொண்டிருந்தாள். ஏழைப் பிள்ளையான அவனுக்குத் தன் பெண்ணைக் கொடுக்க மனமில்லாமலிருந்தான் நீலவேணியின் வளர்ப்புத் தந்தையான ராக்கப்பன். அதற்காக எப்படியாவது தட்டிக் கழிக்க எண்ணி, அக்கரைச் சீமைக்குப் போய் இரண்டு வருடங்களிருந்து பணம் சம்பாதித்து வரும்படியும் அதுவரைத் தன் பெண்ணை மணமுடிக்காது வைத்திருந்து செல்லப்பனுக்கே கொடுப்பதாகவும் சமாதானமாகக் கூறினான்.

ஆனால் மனத்துக்குள் ராக்கப்பன் போட்ட திட்டம் வேறு. செல்லப்பன் கொழும்புக்குப் போன பிறகு நிறையப் பணம் வாங்கிக் கொண்டு நீலவேணியை



'ஒரு கண்' வைத்திருக்கும் வடக்கத்தியூர் சிங்காரப் பையனுக்குக் கட்டிக் கொடுத்து விட்டால், தான் மீதி நாட்களை நிம்மதியாகக் கழிக்கலாமென்று தீர்மானம் செய்து வைத்திருந்தான் ராக்கப்பன்.

அவன் வார்த்தையை நம்பி கண்டிக்குக் கிளம்பத் தயாரானான் உலகமறியாத செல்லப்பன். ஆனால் புத்திசாலியான நீலவேணி தன் வளர்ப்புத் தகப்பன் கூறியதில் ஏதோ சூது இருப்பதாகச் சந்தேகப்பட்டுச் செல்லப்பனிடம் வேறு ஒரு உபாயம் கூறினாள். அதன்படி செல்லப்பன் வெளியூரிலிருக்கும் தன் பணக்கார அத்தையிடம் சென்று ஒரு முன்னூறு ரூபாய் கடனாக வாங்கிக் கொண்டு திரும்பி விட்டால் பிறகு நீலவேணியும் செல்லப்பனும் சேர்ந்து கண்டிக்கு ஓடி விடலாம் என்று தீர்மானித்தார்கள்.

செல்லப்பன் தன் அத்தை ஊருக்குப் போனான். அவன் அத்தையும் அவனை மனம் விரும்பி வரவேற்றாள். ஆனால் அவன் ஒன்று நினைக்க அவன் அத்தை வேறு ஒன்றை நினைத்து விட்டாள். அதாவது தன்னிடம் பெண் கேட்கத்தான் செல்லப்பன் வந்திருக்கிறான் என்று கிரகித்து அதைப்பற்றிப் பெருமிதம் அடைந்தாள் அவன் அத்தை. ஆனால் ஐந்து நாட்கள் அங்கிருந்தும் அதைத் தெரிந்து கொள்ளாமல் செல்லப்பன், ஆறாம் நாள் தான் வந்த விஷயத்தைத் தயங்கித் தயங்கிச் சொல்லி முன்னூறு ரூபாய் கடன் கேட்கவே உடனே அவனை வீட்டை விட்டு வெளியே போகும்படி கூறிவிட்டாள் அவன் அத்தை. ஒரு வாரம் கால தாமதமான வேதனையோடு அவமானமும் சேர்ந்து செல்லப்பனை வாட்டியது.

இந்த ஒரு வாரத்துக்குள் ராக்கப்பன் கல்யாணக் காரியங்களைச் சுருக்கமாக முடித்து விட்டான். இரண்டு நாளில் செல்லப்பனை எதிர் பார்த்த நீலவேணி ஆறாறு நாளாகியும் அவன் திரும்பி வராமல் போகவே ராக்கப்பனுடைய தூண்டுதலுக்கிணங்கி மனம் இல்லாமல் சிங்காரப் பையனுக்கு மண்டியிட்டாள். ராக்கப்பன் யோசனைப்படி மணமான அன்றே சிங்காரப் பையன் நீலவேணியை வடக்கத்தியூருக்கு அழைத்துச் செல்ல ஏற்பாடு செய்துவிட்டான்.

ஆடிப்பாடிப் போய்க் கொண்டிருந்த மாட்டு வண்டியில் அழுது கொண்டே உட்கார்ந்து கொண்டிருந்தாள் நீலவேணி. சிங்காரப் பையன் புது மிடுக்குடனும் தனிச் செருக்குடனும் வடக்கத்தியூர் பாதையில் தானே இரட்டை மாட்டு வண்டியை 'ஜோர்'ாக ஓட்டிக்கொண்டு வந்தான். அடிக்கடி தன் சிங்கப்பூர் மீசையைத் தடவிக்கொண்டே தன் கோணைக் கண்களால் திரும்பித் திரும்பி வண்டியினுள் பார்த்தபோது அவன் உள்ளம் நிறை

ஆனால் இந்த நீலவேணி ஆயிரமாயிரம் கைதிகளைத் தானே ஒரே சமயத்தில் அடைத்து வைக்கும் சக்தி வாய்ந்தவள் என்ற விஷயம் அவள் கண்களைப் பார்த்ததுமே புரிந்தது. அந்தக் கண்களுக்காக ஒரு கொலை என்ன, முப்பது கொலைகள் ஒரே சமயத்தில் செய்து விட்டு முன்னூறு வருடங்கள் ஜெயிலில் இருக்கலாமென்ற புதிய உண்மையும் விளங்கிற்று.

சக்கர வட்டமான அவள் கண்களில் கருவண்டுகள்போல இரு விழிகள் அலைபாய்ந்து கொண்டிருந்தன. மின்வெட்டுப் போன்ற அவள் பார்வைகளில் மிரட்சியும் கூடவே தென்பட்டது. அன்றலர்ச் செறுவெ கூந்தலில் அலட்சியமாக அவள் போட்டிருந்த கொண்டையும், ஒய்யாரமான அவள் உடையும், வாகமாகக் கனின் மேல் சாய்ந்து கொண்டிருந்த விதமும் காண்பவர்களை மிரடுமாறச் செய்தன.

நீலவேணியைப் பற்றிச் செல்லப்பன் சொல்லி இருந்த கதை இதுதான் :

வெறுத்தது! அவன் உள்ளம் விலவிலத்தது! திடீரென்று வண்டி ஒரு குலுங்கு குலுங்கியதைக் கண்டு திடுக்கிட்டான் சிங்காரப்பையன். அதைத் தொடர்ந்து, "ஐயோ! செல்லப்பா!" என்ற பயங்கர அலறல் சத்தத்தைக் கேட்டுப் பதறித் திரும்பினான் சிங்காரப்பையன்.

குறுக்குப் பாதையில் நின்று கொண்டிருந்த செல்லப்பனை அணைத்தாற்போல நீலவேணி ஒட்டிக்கொண்டு நிற்பதைக் கண்டதும் சிங்காரப் பையனின் சிங்கப்பூர் மீசை ஒரு முறை சிலிர்த்தது! அவன் கண் இரப்பைகள் படபடத்தன!

நினைத்ததை உடனே செய்யும் வழக்கத்தைத் தவிர வேறொன்றும் அறியாத சிங்காரப் பையன் தன் கையிலுள்ள மாட்டுச் சவுக்கை எடுத்து வேகமாக சுழற்றினான். "ஆ! செல்லப்பா!" என்று அலறி விழுந்தாள் நீலவேணி.

அடுத்த கணம் சவுக்கை மறு முறை சுழற்றுவதற்குள் அவன் கையில் ஒரு பெரும் கல் வந்து விழுந்தது. சவுக்கைக் கீழே நழுவவிட்ட சிங்காரப் பையன் கை அவன் மடியிலிருந்த மடக்குக் கத்தியைத் தடவியது. ஆனால் கண் இமைக்கும் நேரத்துக்குள் பாய்ந்து வந்த செல்லப்பன் கையிலிருந்த ஒரு கூர்மையான ஆயுதம் தன் கடமையைச் செய்துவிட்டுத் தரையில் ரத்தத்தில் தோய்ந்து கிடந்தது.

வடக்கத்தியூர் சிங்காரப் பையனின் சடலம் கேட்பாரற்றுக் கீழே விறைத்து கிடந்தது.

* * *

"உயிர் போகும் போது சிங்காரப் பையன் பயங்கரமாக ஒரு பெரு மூச்சு விட்டான் பாருங்க! அதைப்போல நான் வேறெங்கேயும் கேட்டதில்லீங்க!" என்று ஒரு பெருமூச்சுடன் முடித்தான் செல்லப்பன்.

"உன் சித்தாந்தப்படி எப்போது ஒரு கொலை நடந்து விட்டதோ அப்போதே கதை பெரிய கதையாக மாறிவிட்டது இல்லையா!" என்று கேட்டேன்.

"உங்க 'ரூல்' படிக்குக் கூட அந்தப் பெரு மூச்சு வெளிவந்த உடனேயே கதை பெரிய கதையா மாறிடுச்சுங்களே!" என்றான் செல்லப்பன்.

"இல்லே, இல்லே! என் 'விதி'ப்படி சிங்காரப் பையன் பெருமூச்சு விட்டால் மட்டும் நான் ஒன்றும் ஒப்புக் கொள்ள மாட்டேன். யாராவது கதையைச் சொல்றவர்கள் பெரு மூச்சைக் கதைசொல்வதற்கு முன்பாகவே விட்டால் தான்......"

"அதுக்கென்னங்க! சிங்காரப் பையனின் பெரு மூச்சை, அவன் யமதூதர்களுக்குத் தன் கதையைச் சொல்லி முடித்து விட்டதாக எண்ணிக் கொள்ளணுமுங்க!" என்று செல்லப்பன் சொன்னபோது என்னால் சிரிக்காமலிருக்க முடியவில்லை.

ஆனால் என் வேலை முறைப்படி நான் கைதிகளுடன் சிரித்துக் கொண்டிருக்கக் கூடாதாகையால், அதை அடக்கிக் கொண்டு, "ஆமாம்! நீலவேணி நேற்று உன்னிடம் என்ன சொன்னாள்!" என்று கேட்டு அவன் பேச்சை மாற்றினேன்.

"அதென்ன சொல்லுங்க! பாவம்! மாலை மாலையாய் என்னைப் பார்த்ததுடன் கண்ணில் தண்ணி கொட்டுதுங்க!"

"சரி, சரி! இன்னும் ஆறு வருடங்கள் கழித்துப் பார்! அப்போது யார் கண்ணீர்விட வேண்டியிருக்கு மென்று தெரியும்!" என்று நான் சொன்னபோது, செல்லப்பன் அதைக் கவனிக்காமலே தலையைச் சொறிந்து கொண்டான்.

* * *

நான் செய்து விட்ட தவறுதலுக்குப் பிராயச்சித்தமாக, சிங்காரப் பையன் கொடுத்த பணத்தைக் கொண்டு, நீலவேணியின் பிடிவாதத்துக்கு இணங்க சின்னராயவரத்திலேயே ராக்கியப்பன் அவளுக்கு ஒரு சிறு மளிகைக் கடை வைத்துக் கொடுத்திருந்தான். செல்லப்பன் சிறையிலிருந்தாலும் அவன் அருகே இருக்கிறோமென்ற எண்ணத்திலும் அவளும் அந்த ஊரிலேயே தங்கி வந்தாள், தன் தூரபந்துக் கிழவி ஒருத்தியின் பெரிய துணையுடன். ஆமாம்; பெரிய துணைதான்!

ஆனால் ராக்கியப்பன் மட்டும், முப்பது கல் தூரத்திலுள்ள தன் ஊரிலிருந்து மாதம் இரண்டொரு தடவை நீலவேணியைப் பார்த்து விட்டுச் செல்லும்போது சௌகரியப்பட்டால் தன்னையும் பார்த்துப் போக வருவது வழக்கம் என்றும் செல்லப்பன் கூறினான்.

நீலவேணியை நான் சிறை வாயிலில் கண்ட பிறகு சில தடவைகள் அந்த ஊர்க் கடை வீதியிலும் பார்க்க நேர்ந்தது. அச்சமயங்களில் என்னை அவள் தெரிந்து கொண்டவள் போலப் பார்த்து நாணி ஒதுங்கிப் போவது வழக்கம். ஒரு வேளை செல்லப்பன் என்னைப் பற்றி அவளிடம் சொன்னதைக் கொண்டும், என் 'வார்டன்' உடையைக் கண்டும் தான் அவள் என்னை அடையாளம் புரிந்து கொண்டிருக்க வேண்டும் என்று நினைக்கிறேன்.





இந்த மாதிரி நீலவேணியின் திடமான புத்தியைப் பற்றியும், கைதியானாலும் தன் காதலனுக்காக ஏழு வருடங்கள் காத்திருக்கத் தயாராயிருக்கும் அவள் நேரான புத்தியையும் எவ்வளவோ வியந்து கொண்டிருக்கும் போதுதான் என்னைத் திடுக்கிடச் செய்யும் சம்பவம் ஒன்றைக் கண்டேன். அதைக் கண்டதும் என் மனம் சொல்லொணா வேதனையடைந்தது. நீலவேணியைப் பற்றி நான் கொண்டிருந்த உயரிய எண்ணங்களெல்லாம் தவிடுபொடியாகச் சிதைந்தன.

எனக்கு அருவருப்பைக் கொடுத்த சம்பவம் இதுதான். சந்தை தினமான அன்று நானும் கடைகள் போடப்பட்டிருந்த மைதானத்தைச் சுற்றிச் சுற்றி வந்தேன். கூட்டம் கூட்டமாக ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாகப் போய்க் கொண்டும் வந்து கொண்டுமிருந்தார்கள். அப்போது எனக்கு முன்னால் பத்தடி தூரத்தில் நீலவேணி போவதைத் திடீரென்று பார்த்தேன்.

பார்த்ததும் மின்சாரத்தினால் அடிபட்டது போன்ற உணர்ச்சி என் உடம்பில் பரவிற்று. நீலவேணி ஒரு வாலிபனின் கரத்தைப் பிடித்துக்கொண்டு உல்லாச நடை போட்டு ஒய்யாரமாகப் போய்க் கொண்டிருந்தாள். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் செய்து கொண்ட பரிகாச வார்த்தைகள் என் காதுகளில் தெளிவாகப் படாவிட்டாலும் என்னால் விஷயத்தை ஊகித்துக் கொள்ளப் போதுமானதாயிருந்தது. காதலனைத் தவிர வேறு யாரிடமும் எதிர் பார்க்க முடியாத அவர்களிடம் காணப்பட்ட அந்த அந்நியோன்னியம் என் சந்தேகத்தை ஊர்ஜிதம் செய்தது.

நீலவேணியின் நடத்தைக்காக என் மனம் பரிதவித்தது. செல்லப்பனுக்காக என் உள்ளம் உருகித் தவித்தது. என்ன துரோகம்! என்ன சாகஸம்!

என் எண்ணம் அலை பாய்ந்தது. நான் பார்த்ததைச் செல்லப்பனிடம் கூறிவிடலாமா வென்று ஒரு கணம் யோசித்தேன்.

பாவம்! நான் சொன்னதைக் கேட்டதும் அவன் உள்ளம் சிதறிவிடும். இக் கொடிய விஷயத்தைச் சொல்லிப் பாக்கி ஆறு வருடங்கள் அவனை நரகவேதனைக் குள்ளாக்குவதைக் காட்டிலும் அவனுக்குக் கடும் விஷத்தைக் கொடுத்துவிடலாம்! அவள் கபடத்தை நான் ஏன் குலைக்க வேண்டும்! மேலும், ஆறு வருடங்களுக்குப் பிறகு யார் யாரைக் கண்டது!

அவரவர் சுபாவம்



"அதுதான் நூறு நடவையாகச் சொல்லி விட்டேனே சார்! புருஷன் தன்னாலே வாங்க முடித்ததை யெல்லாம் வாங்கப் பிர

தேன். நீலவேணியிடம் எப்படி விஷயத்தை ஆரம்பிப்பது என்ற நிலைப்பில் நான் மௌனமாகச் சிறிது நேரம் இருந்தேன்.

நான் பேசாமலிருப்பதைக் கண்டு என் முகத்தை ஏறிட்டு நோக்கினாள் நீலவேணி.

"என்னங்க! முகத்தைப் பார்த்தா ஏதோ கோவமாத் தோணுதே!" என்று கவலையாகக் கேட்டாள்.

"ஆமாம்! நீலவேணி! கோபம்தான், ஆனால் உன்மேலில்லே! அந்தச் செல்லப்பன் மேல்தான் கோபம்......"

ஒன்றும் புரியாமல் விழித்தாள் நீலவேணி. அவள் விசாலமான கண்கள் இன்னும் அகலமாக விரிந்து செல்லப்பன் புகழ்ந்த பிரசித்தி பெற்ற கண்ணீர்த் துளிகளைத் தேக்கிக் கொண்டிருந்தன. இனியும் தாமதிக்கக்கூடாதென்று, நான் சந்தை நாளன்று பார்த்த சம்பவத்தை அவளிடம் விவரித்து கூறினேன்.

"நீ செய்த காரியம் குலப் பெண்கள் செய்யக் கூடியதா!

"செல்லப்பன் உங்களிடம் சொன்ன சம்பவங்களெல்லாம் நிஜம் தானுங்க. ஆனால் அது சொல்லாத ஒரு விஷயத்தினால் மட்டும் உங்களுக்கு ஆள் மாறாட்டம் உண்டாயிருக்காப் போலிருக்குங்க!"

"ஆள் மாறாட்டமா! யாருக்கு யாரை மாறாட்டம் செய்து கொண்டு விட்டேன்!" என்று குழப்பத்தோடு கேட்டேன்.

"அதாங்க! உங்க செல்லப்பனுக்கும் என் கூடக் கண்டதாகச் சொன்னீங்களே அவருக்கும் தானுங்க!" என்று சொல்லும்போது நீலவேணியின் தலை குனிந்தது.

"அவர் யார்! அவர் பெயர் என்ன!" என்று ஆவலுடன் வினவினேன்.

"அவரு யாரென்று மட்டும் நான் சொல்வேனுங்க. ஆனால் அவரு பேரை மட்டும் நான் சொல்லக் கூடாதுங்களே" என்று நீலவேணி கூறினாள். அதே சமயத்தில், "பரவாயில்லே. அம்மா சொல்லு, 'செல்லப்பன்' என்று" கடைக்குப் பக்க வாட்டுச் சுவற்றுப் பக்கத்திலே யிருந்து ஒரு குரல் கேட்டது. நாங்களிருவரும் திடுக்கிட்டோம். நான் சந்தையில் கண்ட வாலிபன் இப்பொழுது என்னெதிரே நின்று கொண்டிருந்தான்.

"அட! நீ இம்மா நேரம் இங்கேயா ஒளிந்துக்கிட்டிருந்தே. நல்ல ஆம்பிளே நீ" என்றாள் நீலவேணி.

என் குழப்பம் அதிகரித்தது.

நீலவேணி கதையைத் தொடர்ந்தாள்.

"சந்தையிலே எங்களைக் கண்டு அவசர முடிவுக்கு வந்தது போல இப்பவும் நான் சொல்றதுக்குள்ளார அவசரப் படறீங்களே!" என்று கூறிவிட்டுச் சில விநாடிகள் சும்மாயிருந்தாள். பிறகு குரலைச் சிறிது உயர்த்தி, "ஜெயிலுக்குள்ளே உங்களுக்குக் கதையைச் சொன்னவரு, ஜெயிலுக்கு வெளியே இதோ உங்களைக்

"அப்படியானும் அந்தக் கொலையை நீ செய்தாயென்று ஒப்புக் கொள்கிறாயா !" என்று கேட்டேன்.

கொலை ஒருவன் செய்ய, மற்றொருவன் அப் பழியை ஏற்றுக் கொண்டு சிறையில் வாடுகிறானென்ற விஷயம் எனக்கு இப்போது விளங்கியது.

ஆனால் அதற்கு, "நான் எங்கே ஒப்புக் கொண்டேனும் அவன் செய்த கொலையை" என்று 'இந்த'ச் செல்லப்பன் பதில் சொன்னபோது நான் மலைத்தேன்.

"பின் அண்ணன் சொன்ன கதையில் ஆள் மாறாட்டம் சேர்ந்திருக்கிறது என்று நீலவேணியே ஒப்புக் கொண்டிருக்கிறாளே !" என்று மடக்கினேன்.

"ஆள் மாறாட்டம் நடந்திருக்கிறது என்று நீலவேணி சொன்னாளே தவிர எந்த இடத்திலிருந்து மாறாட்டம் ஏற்பட்டிருக்கிறதென்று அவள் சொல்ல மறந்து விட்டாள் !" என்றான் கணவன் செல்லப்பன்.

என் குழப்பம் பன்மடங்கு அதிகரித்தது. என் மூளை ஊகிக்கும் சக்தியை இழந்து விட்டது. என் வாய் பேசும் சக்தியைப் பறிகொடுத்து விட்டது.

என் நிலையைத் தெரிந்து கொண்டவன் போல அவன், "ஐயா ! தயவு செய்து இந்தக் குளறுபடிக்காக மன்னித்து விடுங்கள் !" என்று தொடர்ந்தான்.

"நீலவேணியின் அண்ணன் பெயரும் செல்லப்பன். அவன் கை பிடித்த என் பெயரும் செல்லப்பன்தான். இந்தப் பெயர் ஒற்றுமைதானுங்க முதல் குளறுபடிக்குக் காரணம். இரண்டாவது குளறுபடி, என்னவென்றால் சிறையில் செல்லப்பன் உங்களிடம் சொன்ன கதையில் முதல் பகுதியில் வருகிறவன் நான்தான். இரண்டாவது பகுதியில் விவரிக்கப்படுகிறவன் அண்ணன் செல்லப்பனுங்க. அதாவது நீலவேணி, 'ஐயோ ! செல்லப்பா !' என்று வண்டியிலிருந்து குதித்தாளே அது வண்டியிலிருந்து திரும்பிய அண்ணன் செல்லப்பனை முதல் முதலாகக் கண்டதும் தானுங்க. அவனே யாரென்று தெரிந்து கொள்ளாமல் ஸிங்காரப் பையன் கத்தியால் குத்தப் போகத் தானே அவனும் கொல்லப்பட்டுச் செத்தான். நான் சம்பவம் நடந்த மறுநாள் காலை தான் அத்தை வீட்டிலிருந்து ஊருக்குத் திரும்பினேன். மூன்றாவது குளறுபடி..."

"போதும் ! போதும் ! இந்த இரண்டு குளறுபடிகளே என் மண்டையை உடைத்து என் மூளையைக் கலக்கப் போதுமானதாயிருக்கிறது. மேற்கொண்டு ஒன்றைக்கூட என் மூளை தாங்காது !" என்று சீறினேன், நீலவேணியின் கணவன் செல்லப்பனைப் பார்த்து.

என் குழப்பங்கள் மறைந்தாலும் என் மனத்திலிருந்த ஒரு சின்ன சந்தேகம் மட்டும் நீங்கவில்லை.

"செல்லப்பா ! ஒரு சின்ன விஷயம் ! நீலவேணி தன் அண்ணனைக் குறிப்பிடும் போது மட்டும் 'செல்லப்பன்' என்று பெயரைத் தயங்காமல் சொல்லுகிறாள். ஆனால் அதே சமயத்தில் உன்னைப் பற்றிச் சொல்ல வேண்டிய இடத்தில் மட்டும் அதே 'செல்லப்பன்' என்ற பெயரை சொல்ல மாட்டேனென்கிறாளே ! இந்தப் பெயர் மரியாதை ஏன் ?" என்றேன்.


"நீலவேணி ! செல்லப்பனுக்குக் கதை சொல்வதில் எவ்வளவு இஷ்டமிருக்கிறதோ, அவ்வளவு பிரியம் ஐயாவுக்கும் கதை கேட்பதில் இருக்கிறது கவனிச்சியா !" என்று நீலவேணியிடம் சொல்லிக் கொண்டே என் பக்கம் திரும்பி, "ஏனு ! அது வேறு ஒரு பெரிய கதைங்க !" என்று நீண்ட பெருமூச்சு ஒன்றை விட்டான் கணவன் செல்லப்பன்.

அதைத் தொடர்ந்து, "சொல்லட்டுங்களா !" என்றும் ஆரம்பித்தான்.

"ஐயோ ! அது வேறு ஒரு கதையா ! வேண்டாம் ! வேண்டாம் ! இதுவரை கேட்ட கதையே ஏழு தலைமுறைக்குப் போதுமானது !" என்று சொல்லிவிட்டு வேகமாக நடையைக் கட்டினேன்.

என் செய்கையை ஆமோதிப்பது போல என்னிடமிருந்து நீண்ட பெருமூச்சு ஒன்று "ஹாம்" என்ற ஓங்கார சத்தத்துடனே சீங்கார மீட்டுக் கொண்டு கிளம்பி, என் நாசித் துவாரங்களின் வழியே வெளிச்சென்று பிரபஞ்சத்துடன் கலந்து விட்டு, மறுபடியும் என் கண்டத்துவாரம் வழியாக உள்ளே சென்று, என் நரம்பு கோசங்களில் பரவிக்கொண்டே என் நாபி கமலத்தில் வந்து அடங்கியது !





அமைதிக் கடலில்

ஒஸாகா விமான நிலையத்திலிருந்து பதினெட்டாயிரம் அடி பறந்ததுமே புஜியாமா மலை கம்பீரமாகத் தெரிகிறது. இராணுவ நாடான நிப்பனின் (ஜப்பான்) சேனைத் தலைவன் போலவே அந்தப் புனித மலை ஓங்கி நிற்கிறது. அதைச் சூழ்ந்து பல மலை முடுக்குகள், பைன்(Pine) காடுகள், ஸிடார் (Cidar) வனங்கள், செர்ரித் (Cherry) தோட்டங்கள், பூம் பொழில்கள் எல்லாம் இதுவே அழகு என்று பேசி நிற்கும். வெள்ளியை உருக்கி விட்டதுபோல ஓங்கார அருவிகள் நம்மை ஆசையுடன் வரவேற்கும். அலைகடல் ஓரம் நிப்பன் தேசம் ஆர்க்கும். அமைதிக் கடலில் அழகுக் கப்பல் போல் இந்த நிப்பன் மிதக்கிறது.

ஹனேதா விமான நிலையத்தில் இறங்கியதும் ஓஹாயியோ கோஸாய்மாஸ் (காலை வந்தனம், வாரும் ஐயா) என்று நண்பர்கள் வரவேற்கின்றனர். நான் புத்த பிக்ஷுக்களுடன் உலக பௌத்த மகாநாட்டுப் பிரதிநிதியாகச் சென்றதால் அமோகமான வரவேற்புக் கிடைத்தது. மரியாதை, கௌரவமான வரவேற்பு, உபசரணை, விருந்தோம்பல் — இவற்றிற்கு இலக்கணம் வேண்டுமானால் ஜப்பானியரைக் காட்டலாம்.

⁂

“தோரானோ” என்று வந்தார் மைனிச் ஆசிரியர். தோரானோ என்றால் “நல் வரவு, வாருங்கள், சந்தோஷம்” என்று பொருள். அவருடன் வந்த நிருபர் நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே படம் பிடித்தார். உடனே அஸாகி நிருபர் வந்தார். அஸாகி என்றால் உதயம், மைனிசி என்றால் தினசரி—இந்த இரண்டு பத்திரிகைகளும் ஜப்பானை ஆளுகின்றன. இவை ஒவ்வொன்றிற்கும் இரண்டு கோடி சந்தாதாரர்களுக்குமேல் உண்டு. ஜப்பானில் காலை உணவுடன் பத்திரிகை மேஜைமேல் வைப்பது வழக்கம். யாரும் இரவல் பத்திரிகை வாங்குவதில்லை; பைசா கொடுத்தே பத்திரிகை வாங்கி ஒவ்வொருவரும் படிப்பதும் வழக்கம். ஒன்பதரைக் கோடி ஜப்பானியரும் தோட்டி முதல் தொண்டமான் வரையில், நாட்டு செய்தியைத் தவறாது படித்துக் காலத்துக் கேற்றபடி நாகரிகமாக நடந்து வருகிறார்கள்.

ஜப்பானியருக்குத் தாய் மொழிதான் பேசவரும். ஆங்கிலம் சிலருக்கே தட்டுத்தடவி வரும். எனது மொழிபெயர்ப்பாளர் தோகியோ சர்வகலாசாலைத் தத்துவாசிரியர். அவர் என்னுடனேயே இருந்து எனது சொற்பொழிவுகளையெல்லாம் ஜப்பானியத்தில் அள்ளிக் கொடுத்தார்.

நாங்கள் மறுநாள் மைனிசி காரியாலயத்தில் ஏழாவது மாடியில் ஆசிரியரைத் தனியறையில் சந்தித்தோம். அன்று பல எழுத்தாளரும் எங்களை அங்கே சந்தித்தனர். இரண்டு மணி நேரம் நாங்கள் அளவளாவினோம். ஒரு விருந்தும் நடந்தது. நான் அரைமணி நேரம் ஒலிபெருக்கியில் பேசினேன். காரியாலயம் முழுதும் அது ஒலித்தது; உடனே பத்திரிகையிலும் வந்து விட்டது.

நான்: அணு குண்டு விழுந்த பிறகு ஜப்பான் நிலை எப்படி? போர் உங்களுக்கும் பாடம் கற்பித்ததா? உங்கள் தேசம் மீண்டும் போர் வழியைப் பற்றுமா?

ஆசிரியர்: எங்கள் நிப்பன் உலக நாகரிகத்துக்கே அப்பன். எத்தனையோ எரிமலைகள் எங்களைச் சோதித்தன. முன்னே எரிமலையால் தோகியோவே சாம்பலானது. மீண்டும் அது கம்பீரமாக எழுந்து நிற்கிறது. அதே போல் அணு குண்டு ஹிரோஷிமாவிலும் நகஸாகியிலும் விழுந்து எங்கள் மர வீடுகளை நாசப்படுத்தியது. எங்களுக்கும் பயின் மரங்கள் உண்டு; புதிய வீடுகள் கட்டுவோம். எங்கள் ஆத்மாவை அணு குண்டு சிதைக்க முடியாது. ஆயிரம் ஹைட்ரஜன் குண்டு விழுந்தாலும், நாங்கள் அஞ்சோம். தலை நிமிர்ந்தே உலகின் முன் நிற்போம். எங்கள் நாட்டுப் பாட்டில் நான்கு வரி கேளுங்கள்:

உதயசூரியனும் சிகப்பு!—மேற்கே
ஒளியும் சூரியனும் சிகப்பு!

புதிய நிப்பனது போலே—என்றும்
பொலியும் வீரவொளி யாலே!

எங்கள் நிப்பன் சூரியன் போன்றது. நாங்கள் சூரிய புத்திரர். உதய சூரியனும் அஸ்தமன சூரியனும் மாறாச் செக்கிறமே. சூரியனை மேகம் விழுங்குமா? இரவுதான் கொல்லுமா? நேற்று இரவு; இன்று பகல் வந்து விட்டது. நிப்பன் புதிய வேகத்துடன் எழுந்து விட்டது.

அழகு நிப்பன்

பொருளாதார நிலையை ஒழுங்கு செய்து கொண்டு மீண்டும் உலக அரங்கில் தனக்குரிய பாகத்தைக் கம்பீரமாகவே அது வகிக்கும். பாருங்கள் எங்கள் நாட்டுப் பழமையும் புதுமையும்.........

இப்படிப் பேசிப் படப் பொலிவுடன் நிப்பன் வாழ்க்கையை அவர் விளக்கினார். அதை நான் நாட்டைச் சுற்றி நேரே கண்டேன். ஒவ்வொரு நாளும் அஸாஹி-மைனிசி நிருபர்கள் என்னைக் கண்டு எனது பேச்சையும் எழுத்தையும் பத்திரிகையில் போட்டு வந்தனர்.

மைனிசி, அஸாஹி காரியாலயங்கள் எட்டடுக்கு மாளிகையில் கம்பீரமாக அமைந்துள்ளன. அவற்றைச் சுற்றிப் பார்க்கவே ஒரு முழுநாள் ஆனது. அங்கே காகிதம் முதல் ரோடரி அச்சகம் வரையில் எல்லாம் ஜப்பானியரால் செய்யப் பெற்றவை. நிப்பன் முத்திரை இல்லாத எதையும் ஜப்பானியன் தீண்ட மாட்டான்.

மைனிசி காரியாலயத்தில் சுமார் ஐயாயிரம் பேர் வேலை செய்கிறார்கள். அதற்கு நான்கு பட்டணங்களில் கிளைக் காரியாலயங்கள் உண்டு. ஒவ்வொன்றிலும் (Teleprinter) டெலிபிரிண்டர், டெலிபோட்டோ (Telephoto) முதலிய நவீன சாதனங்கள் உண்டு. எனது படத்தை மைனிசி காரியாலயத்திலிருந்தே ஒஸகாவுக்கு யந்திர மூலம் அனுப்பி அங்கோரம் பெறப் பார்த்தேன்.

காலை நான்கு மணிக்கே ஜப்பானியர் எழுந்து உடம்பு குளித்துத் தியானம் செய்து தமது அலுவல்களில் ஈடுபடுகிறார்கள். தமது நாடு முன்னேற வேண்டும் என்ற உணர்ச்சி மிகுதியால் அவர்கள் நாளெல்லாம் பாடுபடுகிறார்கள். எடுத்த வேலையை முடிக்கு முன் எந்த ஜப்பானியனும் உண்ண மாட்டான்; வேறு கவனம் செலுத்த மாட்டான். தலைவன் ஆணையைப் பின்பற்றுவதில் ஜப்பானியர் ஜப்பானியரே!

மைனிசியில் பதினொரு பெரிய பெரிய ரோடரி அச்சகங்கள் உள்ளன. அவை பிரம்மாண்டமான இகெ இரும்புத் தொழிற்சாலையில் செய்யப் பெற்றவை. அவற்றிற்கு நேரே நேராக ஜூஜோ காகித ஆலையிலிருந்து காகிதம் வந்து பொழிகிறது. காகிதம் மேலிருந்து அச்சுப் பொறியில் இழுக்கப் பெறுகிறது. பத்திரிகை எட்டுப் பக்கங்கள் நிறைவாகச் செப்பனிட்டு மாலை மூன்று மணிக்கு யந்திரத்தில் பூட்டுகிறார்கள்.

மூன்று மணிக்கு மின்சாரத்தைச் சுழற்றி விட்டால் நயாகரா அருவிபோல் அச்சிட்ட தாள்கள் கொட்டிக் கொண்டே யிருக்கின்றன. இன்னொரு யந்திரம் மடித்துத் தருகிறது. அப்படியப்படியே ஊர்களுக்கு அவை கட்டுக் கட்டாக அனுப்பப் படுகின்றன. ஜப்பானியர் முன்னேற்றம் பத்திரிகாசிரியர் பேனா முனையில் நடக்கிறது!

ஜப்பான் முழுதும் ஒரே நாடு, ஒரே சமுதாயம், ஒரே உள்ளம், ஒரே உணர்ச்சி. அங்கே இருபது மதப் பிரிவுகள் உண்டு. சாதிப் பிரிவினையில்லை. ஜப்பானியன் இருக்குமட்டும் ஷின்டோ என்ற வீரதீர மதவுணர்வில் வாழ்கிறான். இறக்கும் போதுதான் பௌத்தனாகிறான். மத பேதத்தால் மன பேதமில்லை. ஜப்பானியன் பிறப்பிலேயே நிப்பன் வீரன். நாட்டுப் பெருமையே தன் பெருமை என நினைத்து நடப்பான்.

தோகியோ, யோகஹாமா, கியோடோ, ஒஸகா இவற்றிற்கெல்லாம் மின்சார வண்டிகள் தலை கிறுக்கும் வேகத்தில் ஓடும். கூட்டம் அதிகம். ஆண்பெண் இருபாலாரும் நாட்டில் சேர்ந்தே வாழுகிறார்கள். வண்டிகளில் ஒரு பெரியார் ஏறினும், எவ்வளவு கூட்டமானாலும் உட்கார்ந்தவர் நின்று கொண்டு, வந்த பெரியாருக்கு அவர்கள் இடம் தந்து உபசரிப்பது வழக்கம். முதிய அம்மையார்களுக்கு அவர்கள் வணங்கி மரியாதை செய்து இடம் தருவார்கள். பிரயாணச் சீட்டு வாங்குவதிலும் ஒழுங்குண்டு. முதலில் வந்தவர் முதலில் வாங்கிக் கொண்டு முதலில் நிற்பார்; பின்னால் வந்தவர் அவரை இழுத்துக் கொண்டு செல்லுவதில்லை. பெருத்த கூட்டங்களிலும் இராணுவப் படை போல் ஆண்பெண்கள் ஒழுங்காக அடியெடுத்து நடந்து வரிசை கோணாமல் ஆயிரக்கால் மண்டபத் தூண் போல் அமர்ந்திருப்பார்கள். கரிய கிமோனோ உடையுடன், ஜப்பானியர் கூட்டம் கூடும் ஒழுங்கைப் பார்த்தால் கரிய இலைப் பேழைகளில் ரோஜாப் பூக்களையும் தாமரைப் பூக்களையும் அழகாக அடுக்கி வைத்தது போல் இருக்கும்.

உலகில் மிக்க அழகான மாந்தர் ஜப்பானியரே. ஒருவராவது சோடையில்லை. கலகலச் சிரிப்பது அவர்கள் சமயக் கொள்கைகளில் ஒன்று.

* * *

காலை ஏழு மணிக்கு ரேடியோ எச்சரிக்கை செய்யும்-இப்போது தேகப்பயிற்சி, எழுந்திரு, செய், இச்சி, நீ, ஸன், ஷி, கோ, ரோகு, ஷிசி, ஹச, கூ, என்று உத்தரவுகள் வரும்—ஒன்று இரண்டு மூன்று நான்கு ஐந்து ஆறு ஏழு எட்டு என்று ரேடியோ சொல்லச் சொல்ல, ஜப்பானியர் கறுகறுப்பாக உடற்பயிற்சி செய்வதை நாடெங்கும் வீடெங்கும் மூலை முடுக்குகளிலும் காணலாம்.

தெருவில் போகிறவன் மந்திரியானாலும் சரி, தோட்டியானாலும் சரி, அப்படியப்படியே நின்று இப்படித் தேகப்பயிற்சி செய்தே தீரவேண்டும். இன்றேல் தண்டனையுண்டு. நானும் பௌத்தத் துறவிகளுடன் பயிற்சி செய்தேன். இந்தத் தேகப்பயிற்சிக்கு **டைசோ** என்று பெயர்.

நான் இரண்டு நல்ல சினிமாக்களைப் பார்த்தேன். அவற்றில் ஆபாசக் காட்சியே யில்லை. இரண்டும் நாட்டன்பும் நன்னெறியும் தரும் இன்ப கலாரஸச் சித்திரங்கள். வீரச் சுவையும் கருணைச் சுவையும் அதிகம். ஜப்பானில்



தெருவுக்கொரு படமாளிகை யுண்டு. அங்கே பெருத்த கூட்டமே. ஆனால் ஆண் பெண்கள் மிகவும் பொறுத்தன்மை யாக நடக்கிறார்கள். யாரும் பொது மன்றங்களில் சுருட்டுப் புகைப்பதில்லை. எச்சில் உமிழ்வதில்லை. காகிதம் கிழித்துப் போடுவதில்லை. சளசளவென்று வம்பளப்பதில்லை. ஜப்பானியரிடம் பேச்சு மிகச் சுருக்கம், செயலே அதிகம்.

* * *

ஆடல், பாடல், அழகு, கலை என்றால் ஜப்பானியருக்குக் கொண்டாட்டம். ஜப்பானில் தொழில் முறைக் கல்வி வெற்றி பெற்று விளங்குகிறது. ஜப்பானியர் கல்வியே சித்திரம் வரைவதுடன் தொடங்கும். வர்ணப் பிரஷ் பிடிக்காத ஜப்பானியரில்லை. எல்லாரும் தமது வீட்டைப் படம் வரைந்து அழகு படுத்துகிறார்கள். ஜப்பானில் பாங்கு, ஸ்டேஷன், பத்திரிகாலயம், அரசாங்கக் காரியாலயங்கள் இவையே கம்பீரமான அடுக்கு மாளிகைகளா யிருக்கும். தனி மனிதர் வீடுகள் மிகச் சிறிய மர அட்டைக் குடில்களே.

மிகாடோ சார்பாக மந்திரிமார்கள் எங்களுக்கு அரண்மனையில் பெரிய விருந்து வைத்தார்கள். பதினாயிரம் பேர் விருந்தில் கலந்து கொண்டார்கள்.

கல்வி மந்திரிதான் அனைவரையும் வரவேற்றார். அவரது காரியாலயம் எட்டடுக்கு மாளிகை. அவர் சொந்த வீடோ மரக்குடில். அவர் வாழ்க்கையோ மிக மிக எளிது. ஐம்பதடிச் சதுரமுள்ள மரக்குடில்; அதனுள் அட்டைத் தடுப்புகளால் சிற்றறைகள்; தடுப்புகளை நீக்கினால், வீடு ஒரே கூடமா யிருக்கும். அந்த அட்டைகளில் அவர் பெண்ணும் மனைவியும் அழகான சித்திரம் வரைந்திருக்கிறார்கள்.



அவர்கள் உணவோ தேநீர், பால், அரிசிச் சோறு, மீன், காய் கனிகள் இவையே. அவர்கள் உடை வீட்டில் கிமோனோ, வெளியே காரியாலயத்தில் ஐரோப்பிய உடுப்பு. நான் பல திருமடங்களிலும் நண்பர் வீடுகளிலும் இருக்க நேர்ந்தது. அவர்கள் பீலியைத் தந்து என்னைச் சித்திரம் வரையச் செய்து நல்ல வேத வாக்கியங்களை எழுதித் தரச் சொன்னார்கள். எனது வாக்கியங்களைப் புத்தர் பாதத்தில் பூஜையில் வைத்தார்கள். சமஸ்கிருதத்துக்கு அவர்கள் பெரு மதிப்புத் தருகிறார்கள். பாலி சமஸ்கிருதம் எனக்குத் தெரிந்ததால் பல புலவர்களுடன் தாராளமாகப் பேச முடிந்தது. ஜப்பானில் நூறு சர்வகலாசாலைகளுக்குமேல் உண்டு. அவற்றில் எல்லாம் பாலி சமஸ்கிருதம் போதிக்கிறார்கள். ஏராளமான சமஸ்கிருத நூல்களை அவர்கள் புத்தக சாலைகளில் எல்லாம் காணலாம்.

* * *

ஜப்பானியர் கவிச்சுவை மிக்கவர். தங்கள் கவிகளுக்கு அவர்கள் சிலை நாட்டி வணங்குகிறார்கள். ஜப்பானியக் கவிகள் திட்ப நுட்பமான வார்த்தைகளால் புதிர் போல் குறுகிய வரிகளில் அமைந்திருக்கும்.

ஜப்பானியர் வாழ்வே பாட்டுடன் பின் பாட்டுத்தான். பாட்டும் நடனமும் இல்லாத வீடு கிடையாது. ஜப்பானியக் கவிகளையும் பாடல் ஆடல்களையும் நான் நிரம்ப நிரம்ப அனுபவித்தேன். அவற்றின் உச்ச நிலை, பாட்டின் வெட்டுஜ்வரம், நடனத்தின் பாவஞானம் முழுதும் அற்புதமான கோராகுவன் ஸ்டேடியத்தில் நுகர்ந்தேன்.

கோராகுவன் டோகியோ நகரத்துக்கு நடுநாயகமாக அமைந்த பெரிய அரங்கம். அந்தமாதிரி அரங்கம் நமது நாட்டில் கிடையாது.

அந்தப் பெரிய அரங்கில் பௌத்த மகாநாட்டுப் பிரதிநிதிகளான எங்களுக்கு அரசாங்கம் ஒரு இனிய கலை விருந்தளித்தது. அதுகாறும் அந்தமாதிரி விருந்து எங்கும் நடந்ததில்லை. அந்த அரங்கில் அணியணியாக இலட்சம் பேர் வீற்றிருந்தனர். நூறு இசைப் புலவர்கள் வாத்திய கோஷ்டிகளுடன் விருந்தளித்தனர். அனைத்திலும் கண் கொள்ளாக் காட்சி ஜப்பானிய நடனமே.

ஜப்பானில் ஜைஷா மாதர், ஆடல் பாடல் அழகையே தொழிலாகக் கொண்டவர்கள். அவருள் மிகப் புகழ் பெற்ற கலாவதி மிஸ். கமி நனையாகி. அவள் நூறு அழகான நடன மாதருடன் "காலைத் தாமரை" என்ற கதையை நடித்துக் காட்டினாள். ஜப்பானியர் நாட்டிய அரங்கு மிகப் பெரிது. எட்டுப் பக்கமும் நீண்ட பாய் விரித்து, அதில் தாராளமாக ஓடியாடி அபிநயம் பிடிக்கும்போது பார்ப்பவர் மெய்மறந்து போவர். நாட்டியக்காரர் உடையும் முகப் பொலிவும் குரலும் பின்னணியும் கலை விருந்தா யிருக்கும். இரவு முழுதும் அரசாங்கம் எங்களுக்குக் கலை விருந்தளித்தது. அதைப் பார்த்துச் சென்றவர் நடனமாடிக் கொண்டேதான் சென்றார்கள். கனவிலும் அவர் உள்ளத்தில் கலாதேவி நடனமாடினாள் என்று நண்பர் சொல்லக் கேட்டேன்.

* * *

ஜப்பானியப் புத்தகசாலையில் பெரும்பாலும் அம்மொழி நூல்களே காணும். நான் பார்த்த டோகியோ புத்தகசாலையில் சுமார் ஐந்து லட்சம் நூல்கள் இருந்தன. மற்ற மொழி நூல்கள் அந்தந்த மொழிப் பகுதிகளில் இருந்தன. ஆங்கில நூல்களும் பிரெஞ்சு ஜெர்மன் நூல்களும் இருந்தன. எல்லா கலை விஞ்ஞான சாத்திரங்களும் ஜப்பானியத்திலேயே ஆக்கப்பட்டுள்ளன.

அங்கே புலவர் சபையுள்ளது. பன்மொழிப் புலவர் அதில் அங்கம் வகிக்கின்றனர். அவர் அறிந்த மொழிகளில் உள்ள சிறந்த விஷயங்களை, உடனுடன் ஜப்பானியமாக்குகிறார்கள். பௌதிகம், ரசாயனம், தாவரம், வைத்தியம், யோகம், யந்திரம், சிற்பம் முதலிய எல்லாக் கலைகளையும் ஆராய்ந்து ஜப்பானிய நூலாக்கி, வெளியிடுகின்றனர்.

அகடெமி பிரான்சேஸ் செய்யும் மகத்தான மொழித் தொண்டையே ஜப்பான் புலவர் சங்கம் செய்கிறது. மருத்துவம், எஞ்சினீரிங் எல்லாம் தாய் மொழியிலேதான் ஜப்பானியர் படிக்கின்றனர். பிறமொழி நூல்களை ஆய்ந்து தமது சொந்த ஆராய்ச்சியுடன் கூட்டி அவர்கள் புதுப் புதுத் துறைகளில் நூல்களைச் செய்து மொழியை வளப் படுத்துகிறார்கள். அந்த முயற்சி தமிழுக்கு நடந்தால் தமிழ் இணையற்ற நாட்டு மொழியாக விளங்கும்.

* * *

ஜப்பானிய மக்களின் கல்விப் பெருக்கம், தொழில் முயற்சி, விஞ்ஞானம், மத வைராக்கியம், யோகசாதனம், சமுதாய வாழ்வு முதலியவற்றைக் கண்டு வியந்தேன். ஜப்பானியர் தீபாவளி போல் வைசாக பௌர்ணமியைக் கொண்டாடுகிறார்கள். அன்று வாணக் காட்சிகள், வாத்திய முழக்கங்கள், பாட்டு, கதை, நாடகம், நடனம், கண்காட்சிகள் எல்லாம் அமளியாயிருக்கும். அன்று அவர்கள் தாராளமாகப் பணம் செலவிட்டுப் புதிது புதிதாகச் சாமான்கள் வாங்குவார்கள். கண்காட்சிகள் காண்பார்கள். கேட்டால், "எல்லாம் நிப்பன். நாங்கள் வாங்குவதெல்லாம் நிப்பன் சரக்கு: எங்கள் பணம் நிப்பனுக்குச் செல்லுகிறது. எங்கள் பேச்சு நிப்பன் பேச்சு. எங்கள் மூச்சு நிப்பன் மூச்சு. எங்கள் கலை நிப்பன் கலை. எங்கள் புத்தர் நிப்பன் புத்தர். எங்கள் நிப்பன் ஒப்பற்ற நிப்பன்" என்பார்கள். அந்த உணர்ச்சி இந்தப் பாரத நாட்டுக்கு வரவேண்டும். ஓம் சுத்தசக்தி.

இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது மலேயா போர் முனையில் அகப்பட்டுக் கொண்ட லட்சக் கணக்கான இந்தியர்களில் நானும் ஒருவன். போர் முனையில் வெடி குண்டுகளுக்கும், பஞ்சம், பிணி முதலியவற்றுக்கும் இலக்காகி, தெருக்களில் மக்கள் ஈசல்களைப் போல் விழும் கோரத்தை நேரில் கண்டு மனம் நொந்தவர்களின் கோஷ்டியில் என்னையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஆனால், அதே சமயம் நேதாஜி சுபாஷ் சந்திர போஸையும் அந்த மாபெரும் தலைவர் நிறுவிய தாற்காலிக இந்திய அரசாங்கம், அதன் நடவடிக்கைகள் இவற்றையும் நேரில் காணும் கிடைப்பதற்கரிய வாய்ப்பும் எங்களுக்குக் கிடைத்தது.

நேதாஜி சுபாஷ் போஸ் கிழக்காசியாவுக்கு வருவதற்கு முன், வெற்றி வெறி தலைக்கேறியிருந்த ஜப்பானியர் இந்தியர்களை அவ்வளவாக லட்சியம் செய்யவில்லை. ஆனால் அத் தலைவர் அங்கு வந்த பின் இந்திய மகா ஜனங்களின் மதிப்பு மிகவும் உயர்ந்தது. ஜப்பானியரும் இந்தியர்களுடன் நட்பும், நெருங்கிய தொடர்பும் வைத்துக் கொள்ளத் தொடங்கினர்.

அப்போது கர்னல் இஸாவா என்ற உயர்தர ஜப்பான் இராணுவ அதிகாரியின் நட்பு எனக்கு ஏற்பட்டது. அந்த அருமையான மனிதர் டோக்கியோ கலாசாலை ஒன்றில் பேராசிரியர். ஆங்கில பாஷையில் தேர்ச்சி யுள்ளவர். யுத்தத்தை முன்னிட்டு அவர் போர்முனைக்கு வந்திருந்தார்.

· · ·

1945-ம் வருஷம் செப்டம்பர் மாதம் யுத்தம் முடிந்து விட்டதாக மலாய் நாட்டிலே எங்கு பார்த்தாலும் வதந்தி உலாவியது. ஜப்பானியர் சரண் அடைந்து விட்டதாகப் பலர் பேசிக் கொண்டனர். ஜப்பானியர் சகல ஜனங்களுடைய ரேடியோக்களுக்கும் முத்திரை வைத்திருந்ததால், உள்ளூர் ரேடியோ நிலையத்தைத் தவிர வேறு எந்த நிலையத்திலிருந்தும் யாரும் எந்தச் செய்தியும் கேட்க முடியவில்லை. எனவே மேற்படி வதந்தி உண்மையா என்பதை யாரும் நிச்சயமாக அறிந்து சொல்ல முடியாமல் இருந்தது. வதந்தி ஏற்பட்டுப் பல நாட்களாகியும் பத்திரிகைகளில் எவ்விதச் செய்தியும் வெளியாகாததால், உண்மை என்ன என்று தெரியாமல் ஜனங்கள் தத்தளித்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில் எனக்கு ஒரு கடிதம் வந்தது. இரண்டு மூன்று மாதங்களாக வெளியூருக்குச் சென்றிருந்த கர்னல் இஸாவாதான் எழுதி யிருந்தார். மறுநாள் தாம் கோலாலம்பூருக்கு வருவதாகவும், அந்த நகரில் உள்ள மெஜஸ்டிக் ஹோட்டலில்...நெம்பர் அறையில் தம்மை வந்து சந்திக்கும்படியும் அவர் தமது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

அவரைச் சந்திக்க வேண்டிய நேரத்தை நான் நெஞ்சு படபடக்க மிக்க ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். நாடு முழுவதும் நிலவிய வதந்தியைப் பற்றிய உண்மையை அவரிடமிருந்து தெரிந்து கொள்ளலாம் என்பது என் எண்ணம்.

இரண்டொரு நண்பர்களிடம் மாத்திரம் நான் போகும் இடத்தைத் தெரிவித்து விட்டு, மெஜஸ்டிக் ஹோட்டலுக்குச் சென்றேன். குறிப்பிட்ட அறையில் கர்னல் இஸாவா உட்கார்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

நான் சென்றதும் அவர் எழுந்து வந்து புன் சிரிப்புடன் "ஸெங்கியோமா!" என்று கேட்டு என்னை வரவேற்றார். இருந்தாலும் அவர் முகத்தில் எப்போதும் தென்படும் உற்சாகமும் குதூகலமும் அன்று இல்லை என்றே எனக்குத் தோன்றியது.

கர்னல் இஸாவா என்னை உட்காரச் சொன்னார். நாற்காலியை எனக்கு அருகில் இழுத்துப் போட்டுக் கொண்டு அவரும் உட்கார்ந்தார்.

அவர் பல விஷயங்களைப் பற்றிப் பேசினார். ஜப்பானியரின் மிக உயர்ந்த பழக்க



வழக்கங்களைப் பற்றிக் கூறினார். என்னை அவர் அன்று எதுவும் பேச விடவேயில்லை.

ஊரெல்லாம் நிலவும் வதந்தி பற்றி அவர் ஏதாவது என்னிடம் சொல்லுவாரோ என்று ஆவலுடன் எதிர்பார்த்தேன். ஆனால் அதைப் பற்றி அவர் பிரஸ்தாபிக்கவே இல்லை.

கர்னல் இராமா பேசிக் கொண்டே யிருக்கையில், திடீரென்று தமது பெட்டியைத் திறந்தார். அப்பெட்டி பெரிதாக இல்லாவிட்டாலும், கனமாக இருந்தது. அதிலிருந்து சில புத்தகங்களை எடுத்தார். "இது புத்த பகவானின் அவதார நூல்", "இதுதான் மகாத்மா காந்தியின் சுய சரித்திரம்", "இது நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் எழுதிய 'இந்தியாவின் விடுதலைப் போர்,'" "இது ஜவாஹர்லால் நேருவின் சுய சரித்திரம்" என்று ஒவ்வொரு புத்தகமாகக் காட்டினார்.

"இந்தியத் தலைவர்களைப் பற்றிய முக்கிய நூல்கள் யாவும் ஜப்பானிய மொழி பெயர்க்கப் பட்டிருக்கின்றன, பார்த்தீர்களா!" என்று கர்னல் இராமா பெருமையுடன் கூறினார்.

அதைக் கேட்க எனக்கும் பெருமையாக இருந்தது. அப் புத்தகங்களில் நமது தலைவர்களின் படங்களும் பிரசுரமாகி இருந்தன. நமது மாபெரும் தலைவர்களிடம் ஜப்பானியர்களுக்குள்ள அபாரமான மதிப்பை ரசித்துக் கொண்டேன்.

• • •

கடைசியில் கர்னல் இராமா அவரது பெட்டிக்கு அடியில் இருந்து ஒன்றை எடுத்தார். அது வெல்வெட் பட்டுத் துணியினால் சுற்றப் பட்டிருந்தது.

"இது என்ன என்று சொல்லுங்கள்!" என்றார் இராமா சிரித்துக் கொண்டே.

பட்டுத் துணிக்குள் இருப்பது என்ன என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை.

அவர் மிகுந்த பயபக்தியுடன் பட்டுத் துணியைப் பிரித்தபோது, அதற்குள் ஒரு நீண்ட வாள் பளபளவென்று மின்னிக் கொண்டிருந்தது.

அதைக் கையில் எடுத்த வண்ணம் கர்னல் இராமா, "உங்களுக்குக் கத்தி சுழற்றத் தெரியுமா?" என்று கேட்டார்.

"தெரியாது" என்றேன்.

"சிலம்பம் தெரியுமா?" என்றார்.

"எனக்குத் தெரியாது. ஆனால் எங்கள் நாட்டில் சிலம்பம் விளையாடுவதில் நிபுணர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அவர்கள் கம்பு எடுத்துச் சிலம்பம் சுற்றினால் அவர்களைக் கத்தியால்கூட யாரும் அடிக்க முடியாது" என்றேன் பெருமையாக.

உடனே கர்னல் இராமா தமது நீண்ட வாளை எடுத்து ஒரு மூலையில் நின்று கொண்டு சுர சுர வென்று சுழற்றத் தொடங்கினார்.

சிகரெட்டிலிருந்து சாம்பலை உதிர்ப்பதற்காக மேஜைமீது வைத்திருந்த பிங்கான் கிண்ணத்தை எடுத்து வேகமாக அவர்மீது வீசி எறியும்படி என்னிடம் சொன்னார்.

நான் சிறிது தயங்கினேன். அதை எறியும்படி அவர் மறுபடியும் வற்புறுத்தவே, அதை எடுத்து வேகமாக எறிந்தேன்.

'கிளிர்' என்ற சப்தத்துடன் அது எனக்கு எதிரே திரும்பி வந்து விழுந்தது!

இந்த ஆச்சரியத்தைப் பற்றி நான் சிந்திக்குமுன், வேறு விஷயங்கள் என் கவனத்தைக் கவர்ந்தன.

அதாவது அதன் பின்னரும் இராமா பட்டாக் கத்தியைக் கீழே வைக்கவில்லை. சுழற்றிக் கொண்டே யிருந்தார். அவர் முகம் விநாடிக்கு விநாடி சிவந்து கொண்டிருந்தது. அப்போது அவரது முகத்தில் தென்பட்ட வெறி என் மனத்தை என்னவோ செய்தது.

அவரது வெறி நடனத்தை முதலில் வேடிக்கையாகப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனால் சிறிது நேரத்தில் அது விபரீதமாக முடிந்து விடுமோ என்ற பயம் எனக்கு ஏற்பட்டுவிட்டது.

கர்னல் இராமாவின் கத்தி சுழலச் சுழல என் தலையும் சுழல்வது போலிருந்தது. அவர் விநாடிக்கு விநாடி என்னை நெருங்கிக் கொண்டிருந்தார்.

அப்போது எமதர்ம ராஜனே கையில் கத்தியுடன் என்னை நெருங்குவது போன்ற பிரமை எனக்கு உண்டாயிற்று!

வெடி குண்டுகளுக்குத் தப்பிய நாம், இந்த வெறி பிடித்த ஜப்பானியரிடம் இன்று அகப்பட்டுக் கொண்டோமே என்ற பீதி என்னை ஆட்கொண்டது.

அச்சமயத்தில் என் மனத்தில் எழுந்த எண்ணங்களை விவரிப்பது என்பது முடியாத காரியம். அந்தச் சில விநாடி நேரத்துக்குள் என் மனத்தில் மின்னல்களைப் போல் பல எண்ணங்கள் தோன்றி மறைந்தன. இன்னும் சில விநாடி நேரத்தில் உயிர் போக விருக்கும் ஒருவருடைய மனத்தில் தோன்றும் விசித்திர எண்ணங்கள் தான் அவை!

கத்தியுடன் வெறி நடனம் செய்து கொண்டே என் அருகில் நெருங்கி வந்த இராமா திடீரென்று நின்று என் மார்புக்கு நேராகக் கத்தியை நீட்டினார். வாளின் முனை என் மார்பில் பட்டது. சுர் என்றது. என்னை அறியாமல் நான் சிறிது பின் வாங்கினேன். என் குடல் தெறித்து, என் இருதயம் வெடித்து விடும்போல் தோன்றியது.

ஆனால், மறு நிமிஷம் கர்னல் இராமா 'ஹா ஹா ஹா' என்று உரக்கச் சிரித்துக் கொண்டே வாளை மேஜைமீது வைத்தார்.

அப்போதுதான் எனக்குப் போன உயிர் திரும்பி வந்தது!





"மறந்தே போய் விட்டேனே. கொஞ்சம் டீ சாப்பிடுகிறீர்களா?" என்று கேட்டார் இராவா.

அக் கேள்விக்கு என் பதிலை எதிர்பாராமலேயே மேஜையின்மேலிருந்த மணியை அடித்தார். ஹோட்டல் பையன் வந்தான். இருவருக்கும் டீயும் பழங்களும் கொண்டு வருமாறு உத்தரவிட்டார்.

• • •

"ஜப்பானில் எல்லோருக்கும் கத்தி சுழற்றத் தெரியும்; எல்லோருக்கும் துப்பாக்கியால் சுடத் தெரியும்; எல்லோருக்கும் மோட்டார் ஓட்டத் தெரியும்" என்றார் இராவா பெருமிதத்துடன்.

அவர் தமது வாளுக்கு மரியாதை செய்வது போல் அதை முகத்துக்கு நேராகத் தூக்கினார். மறுபடியும் பட்டுத் துணியில் சுற்றிய வண்ணம், "இந்த வாள் தான் எங்களுடைய குல தெய்வம்; குடும்பச் சொத்து" என்று கூறினார்.

முதல் முறையாக அவர் வாக்குத் தழுதழுத்ததை நான் அப்போதுதான் பார்த்தேன்.

"என் உயிரைப் பலி கொள்ளாமல் இருந்த உங்கள் குல தெய்வத்துக்கு வணக்கம்' என்று சொல்ல வேண்டும்போலிருந்தது எனக்கு!

"இந்த வாளின் சரித்திரத்தை நீங்கள் கேட்க விரும்புகிறீர்களா?" என்று கேட்டார் கிழவர் இராவா.

அச்சமயம் எந்தச் சரித்திரத்தையும் கேட்கக்கூடிய நிலையில் என் மனம் இல்லை. எனினும் அவருக்காக "ஆமாம்" என்று கூறி வைத்தேன்.

டீயைக் குடித்துவிட்டுக் கிழவர் இராவா விவரமாகச் சொல்ல ஆரம்பித்தார்:



போஷிசாவா ஒஸோடோ நகரில் ஓர் ஏழைக் குடும்பத்தில் பிறந்தவர். இராணுவத்தில் சாதாரணச் சிப்பாயாக இருந்த அவர் ஒரு சமயம் அந் நகரில் உள்ள காட்சிச் சாலைக்குச் சென்றார். அப்போது அவருக்கு வயது இருபத்தைந்து இருக்கும். அவர் எத்தனையோ இடங்களுக்குச் சென்றது உண்டு. பொது இடங்களில் ஆடவர்களைப் போல் எத்தனையோ பெண்களும் வருவதும் உண்டு அல்லவா! ஆனால் அன்று அவர் காட்சிச் சாலையில் சந்தித்த ஒரு பெண் அவரது இருதயத்தையே கொள்ளை கொண்டு விட்டாள். அவள் மானிட வர்க்கத்தைச் சேர்ந்த பெண்ணாகவே போஷிசாவாவின் கண்களுக்குத் தோன்றவில்லை. அவள் இணையில்லாத பேரழகி; அவள் தமக்கு எட்டாத கனி என்ற ஏக்கத்துடன் ஏழை போஷிசாவா வீட்டுக்குத் திரும்பியிருப்பார். பிறகு அவளை அவர் அடியோடு மறந்து விடவும் முயன்றிருக்கக் கூடும். ஆனால் அந்தப் பெண் திடீரென்று போஷிசாவைப் பார்த்துப் புன்முறுவல் செய்தது அனர்த்தமாக முடிந்தது.

ஏற்கெனவே போஷிக்குச் சொந்தமான ஓர் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த ஓமினே என்ற பெண்ணை அவருக்கு மணம்செய்து கொடுப்பதாக நிச்சயிக்கப்பட்டிருந்தது. ஓமினே, குடும்பத்துக்கு ஏற்ற உயர்ந்த குணங்கள் வாய்ந்த பெண். ஆனால் அவள் இளைஞர்களின் மதியை மயங்க வைக்கும் பேரழகி என்று சொல்ல முடியாது.

காட்சியில் தோன்றிய கட்டழகியைக் கண்டதிலிருந்து போஷியின் மனம் அடியோடு மாறி விட்டது. அதிலிருந்து அவர் தினந்தோறும் வெளியே செல்லத் தொடங்கினார். அடிக்கடி அந்தப் பெண்ணைச் சந்தித்துப் பேசுவதாகவும் போஷியின் தந்தைக்குத் தகவல் தெரிந்தது. ஆனால் அதைத் தடுக்க அவர் செய்த முயற்சி எல்லாம் வீணாயின.

'பதினெட்டு வயதில் பிசாசும் பேரழகியாகத் தோன்றும்' என்று ஜப்பானில் ஒரு பழமொழி உண்டு. அதை போஷிக்கு அவரது தந்தை சுட்டிக் காட்டினார். போஷி அந்தப் பெண்ணைச் சந்திப்பதைத் தடுத்து விட்டால், அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் தோன்றியதால், கடைசியில் விதி விட்ட வழி விடட்டும் என்று பேசாமல் இருந்து விட்டார்.

காட்சியில் கண்ட அழகியின் பெயர் யுகிகோ என்பதைத் தவிர போஷிக்கு வேறு ஒரு விவரமும் தெரியாது. அந்தப் பெண்ணுடைய வழியில் குறுக்கிட்டு வேறெந்தத் தகவலையும் அறிந்து கொள்ள போஷிசாவா விரும்பவில்லை.

போஷி யுகிகோவுக்கு அடிமையாகி விட்டாரே ஒழிய, அவள் தான் அவரைக் காதலிப்பதாக ஒரு வார்த்தை கூடக் கூறவில்லை. போஷி அவளிடம் தன்னைப் பற்றிய சகல விவரங்களையும் ஒளிவு மறைவின்றி அறிவித்தார். தன் வீட்டு விலாசத்தையும் கூறினார். அப்படிக் கூறினாலாவது அவள் தான் இருக்கும் இடத்தையும் தன்னைப் பற்றிய மற்ற விவரங்களையும் கூறலாம் என்று அவர் எதிர்பார்த்தார். ஆனால் அவர் எதிர்பார்த்தபடி நடக்கவில்லை. அடிக்கடி அவரைச் சந்தித்துப் பேசுவதைத் தவிர, மற்றப்படி அவளைப் பற்றிய விவரங்கள் எல்லாம் மர்மமாகவே இருந்தன.

அவள்மீது தாம் கொண்டுள்ள காதலைப் பட்டவர்த்தனமாக வெளியிட்டு, அவளைப் பற்றிய சகல விவரங்களையும் அறிந்து கொள்ள போஷி விரும்பினார். எனினும் அவளை நேரில் கண்ட போது அவருக்கு அவ்விதம் கேட்கத் துணிவு ஏற்படவில்லை. அவளைக் கேட்டு விட்டால் பிறகு என்ன நேருமோ! ஒரு வேளை பின்னர் அவளைச் சந்திப்பதற்கே முடியாமல் போய் விட்டால் என்ன செய்வது என்ற பயம்தான் அவருக்கு.

அடிக்கடி அவர் கண்ணில் பட்டு வந்த யுகிகோ திடீரென்று மறைந்து விட்டாள். சேர்ந்தாற்போல் இரண்டு மூன்று வாரங்கள் வரையில் அவளை போஷி காட்சியிலோ, காட்சிக்கு அருகிலோ எங்கும் காண முடியவில்லை. அவள் இருக்கு மிடத்துக்கும் போய்ப் பார்க்கலாம் என்றால் அவளது விலாசத்தைத்தான் அவள் சொல்லவில்லையே!

போஷி ஏக்கம் கொண்டு காட்சிக்கு அருகில் சுற்றிச் சுற்றித் திரிந்துகொண்டிருந்த போது, திடீரென்று ஒரு நாள் அங்கு யுகிகோ வந்து சேர்ந்தாள். போஷியிடம் பேச அவள் விரும்பவில்லை போல் தோன்றியது. இருந்தாலும் பல நாட்களாகத் தமக்குள்ள ஏக்கத்தை அவளிடம் தெரிவித்து, அவள் முடிவைத் தெரிந்து கொள்ளத் துடித்தார் போஷி.

"யுகிகோ, நான் உன்னைக் காதலிக்கிறேன். இருதய பூர்வமாகக் காதலிக்கிறேன். எனக்கு மணம் செய்விக்க என் பெற்றோர்கள் திட்டமிட்டிருந்த பெண்ணை உன் காரணமாக நிராகரித்து விட்டேன். என்னுடைய கோரிக்கைக்கு உன்னுடைய பதில் என்ன?"

இவ்விதம் போஷி பட்டவர்த்தனமாகக் கேட்டது யுகிகோவுக்கு மிகவும் சங்கடமாகி விட்டது. அவள் முகத்தில் வேதனை படர்ந்தது. அதற்கு மேல் அந்த இடத்தில் நிற்க அவள் விரும்பவில்லை. "என் பதிலை நாளைக்குச் சொல்லுகிறேன்" என்று கூறிவிட்டு அவள் வேகமாக வந்த வழியே சென்று மறைந்தாள்.

மறுநாள் போஷிக்கு அவளிடமிருந்து ஒரு கடிதம் வந்தது.

"அன்பார்ந்த நண்பருக்கு,

நான் உங்களைக் காதலிப்பது என்பது முடியாத காரியம். ஏனெனில் ஏற்கெனவே எனக்கு ஒரு காதலர் இருக்கிறார். என்னை மறந்து விடுங்கள்.

யுகிகோ."

மேற்படி கடிதத்தைக் கண்ட போஷி மிகவும் அதிர்ச்சி அடைந்தார். எனினும் அவர் சில நாட்களில் தம்மைச் சமாளித்துக் கொண்டார். யுகிகோவையும் அடியோடு மறந்துவிட முயன்றார்.

இதுதான் சமயம் என்று யோஷியின் தந்தை அவருக்கும் ஓமினேயிக்கும் கல்யாணத்தைச் சீக்கிரமாக முடித்து வைத்ததால், யோஷியின் மனம் மறுபடியும் நிம்மதி அடைந்தது.

ஓமினே தனது உயர்ந்த குணத்தினால் யோஷியை ஒரு சில தினங்களில் வசீகரித்து விட்டாள்.

• • •

ஒரு சமயம் ஓமினே அவளது பிறந்த வீட்டுக்குச் சென்றிருந்தாள். யோஷியின் தந்தையும் அவரது உறவினர் ஒருவருடைய வீட்டுக்குச் சென்றிருந்தார். சில நாட்கள் வரையில் யோஷி மாத்திரம் தனியாக வீட்டில் இருக்க நேர்ந்தது.

அப்போது ஒரு நாள் நடுநிசி இருக்கும். 'யோஷிசான்', 'யோஷிசான்' என்று யாரோ தன்னைக் கூப்பிடுவது போல் இருந்தது யோஷிக்கு. முதலில் மனப் பிரமை என்று நினைத்தார். மறுபடியும் 'யோஷிசான்' என்று கூப்பிடுவது தெளிவாகக் கேட்டது. அது ஒரு பெண்ணின் குரல். யோஷி எழுந்து படுக்கையில் உட்கார்ந்தார். ஒரு வேளை ஓமினே வந்து விட்டாளோ என்று நினைத்தார். அந்த நடு நிசியில் ஓமினே வரக் காரணமில்லை. தவிர அந்தப் பெண்ணின் குரல் கொல்லைப் புறத்தில் கேட்டது.

அவர் கொல்லைப்புற அறைக்குச் சென்று ஜன்னலின் கதவைத் திறந்தார். அங்கே அருகில் உள்ள ஒரு மரத்தடியில் நின்ற பெண்ணைக் கண்டதும் திடுக்கிட்டார். நிலவு வெளிச்சத்தில் அவள் யார் என்பதைத் தெரிந்து கொள்ள யோஷிக்கு அதிக நேரம் ஆகவில்லை. அவள்தான் யுகிகோ!

"யுகிகோ! ஏன் இந்த நடு நிசியில் புறப்பட்டு வந்தாய்?" என்று கேட்டார் யோஷி பரபரப்புடன்.

"எனக்குத் தூக்கம் வரவில்லை. தங்களைப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன்" என்றாள் அவள்.

"யுகிகோ! சற்று இரு. கதவைத் திறக்கிறேன். உள்ளே வந்து பேசிக் கொள்ளலாம். வீட்டில் ஒருவரும் இல்லை!"

இவ்விதம் கூறி விட்டு, யோஷி கதவைத் திறக்கச் செல்லுகையில், "வேண்டாம், வேண்டவே வேண்டாம். இங்கேயே நின்று சிறிது நேரம் பேசி விட்டுச் செல்லுகிறேன். தாங்கள் இங்கு வந்தால் நான் திரும்பிப் போய் விடுவேன்" என்று பதட்டத்துடன் கூறினாள் யுகிகோ.



அதனால் யோஷியின் மன வேதனை அதிகமாயிற்று. அவர் மனத்தில் அடங்கியிருந்த புயல் மறுபடியும் உக்ரமாக வீசத் தொடங்கியது.

"என் கடிதம் வந்து சேர்ந்ததா?" என்று கேட்டாள் யுகிகோ.

"ஆமாம்."

"அத்துடன் நான் உங்களுக்கு ஒரு பரிசு அனுப்பியிருந்தேனே......"

இதைக் கேட்டதும் யோஷிசானுக்கு ஒன்றும் புரியவில்லை.

"உன் பரிசு எனக்குக் கிடைக்க வில்லையே" என்றார் யோஷி.

இதைக் கேட்ட யுகிகோ சிறிது நேரம் ஒன்றுமே பேசவில்லை. அவள் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருந்தாள் போலும்.

இச் சந்தர்ப்பத்தில் அடுத்த வீட்டில் ஏதோ சந்தடி கேட்கவே, "யோஷிசான், நான் போய் வருகிறேன்" என்று கூறி விட்டு யுகிகோ வெகு வேகமாகத் திரும்பிச் செல்ல யத்தனித்தாள்.

யுகிகோவை விட்டுப் பிரிய மனமில்லாத யோஷி "யுகிகோ, யுகிகோ! ஒரு விஷயம் கேளு. நீ இருக்கும் இடத்தை எனக்குச் சொல்லவில்லையே" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

இந்தத் தடவை ஏமாந்துவிட அவர் சிறிதும் விரும்பவில்லை.

திரும்பிச் செல்லுவதற்காக இரண்டு அடி எடுத்து வைத்த யுகிகோ மறுபடியும் யோஷியை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். வெண்ணிலவில் யுகிகோவின் பால் போன்ற அழகிய முகம் அவரை நிலை குலையச் செய்தது.

"மிஸ் முதலாளி கமிமூரா இருக்கிறார் அல்லவா! அவரது தோட்டத்துக்கு அருகில் உள்ள செர்ரி மரத்துக்குப் பக்கத்தில் ஒரு சிறிய வீட்டில் இருக்கிறேன்...ஆனால் நீங்கள் அங்கே வரக் கூடாது."

இவ்விதம் சொல்லிவிட்டு, அதி வேகமாகச் சென்று விட்டாள் யுகிகோ. அவள் அச்சமயம் காற்றில் கடவேகமாகப் பறந்து செல்வது போலவே யோஷியின் கண்களுக்குத் தோன்றியது.

அச் சம்பவத்துக்குப் பிறகு அவருக்கு அன்றிரவு தூக்கமே வரவில்லை.

ஓமினேயும் யுகிகோவும் அவர் மனக் கண்முன் மாறி மாறிக் காட்சி அளித்தனர். ஆனால் ஒரு வேற்றுமை. ஓமினே யோஷியிடம் மயங்கிக் கிடந்தாள். யோஷி யுகிகோவின் அழகில் மயங்கிக் கிடந்தார்.

"கமிமூரா பிரபுவின் வீடு நாலு மைல்களுக்கு அப்பால் அல்லவா இருக்கிறது. அங்கிருந்து நடுநிசியில் இந்தப் பேதைப் பெண் எப்படியோ இவ்வளவு தூரம் வந்திருக்கிறாளே! அவ்விதம் வந்த அவள் வீட்டுக்குள்ளும் வரவில்லை...இரண்டொரு வார்த்தை கூறி, என் மனத்தில் புயலைக் கிளப்பி விட்டுச் சென்று விட்டாளே!"

இவ்விதம் யோஷியின் மனம் தவித்தது.

மறுநாள் பொழுது விடிந்தது. யோஷிக்கு எந்த வேலையும் ஓடவில்லை. இரவில் நடந்த சம்பவம் இடைவிடாது அவர் கண் முன்னே நின்றது. அது ஒரு வேளை வெறும் இன்பக் கனவோ என்ற சந்தேகமும் அவருக்கு ஏற்பட்டது. நேரம் செல்லச் செல்ல அவர் தமது ஆர்வத்தை அடக்கிக் கொள்ள முடியவில்லை. இரவு யுகிகோ கூறிய விலாசத்தைக் கண்டு பிடிக்கத் தீர்மானித்தார். சந்தர்ப்பம் வாய்த்தால் அவளுடன் பேசிவிட்டு வர வேண்டும் என்பதும் அவரது ஆசை. அவ்விதம் அவர் வீட்டுக்கு வந்ததற்காக யுகிகோ கோபித்துக் கொள்ள மாட்டாள்.

கோபித்துக் கொண்டால், 'நீதான் இதற்குக் காரணம். மிகவும் கஷ்டப்பட்டு உன்னை மறந்திருந்த என் மனத்தில்



FINEST QUALITY **PARTS** *FOR*

JEEP

CHEVROLET - DODGE - BEDFORD - G. M. C.

AND OTHER CARS AND TRUCKS

There is more profit for you and more satisfaction for your Customers—when you buy the complete line from us. Our long experience is your assurance of prompt and correct supply.

MODERN DISTRIBUTING CO.

"IMPORTERS FROM THE WORKSHOPS OF THE WORLD"

65, SINGANNA CHETTY STREET - CHINTADRIPET - MADRAS-2

Grams: "JEEPSPARES" Post Box No. 2211 Phone: 85550



முற்றிலும் இந்தியத் தயாரிப்பு

இந்தியாவிலேயே தலைசிறந்தது!

NICCO

CABLES & WIRES

LIFE LINES OF THE NATION

நிக்கோவின் தயாரிப்புகள்:

காப்பர் கண்டக்டர்கள், ஸாலிட் மற்றும் ஸ்ட்ராண்டட், அலுமினியம் கண்டக்டர்கள், ஏ. வி. எஸ். ஆர். ரப்பர் இன்ஸுலேட்டட் கேபிள்கள், ப்ளெக்ஸிபிள்கள், நூல் சுற்றப்பட்ட ஒயர்கள், எனாமல்டு ஒயர்கள் முதலியவை.

யாவும் திட்டப்படி சிறந்த முறையில் தயாரானவை



இந்திய அரசாங்கம் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஸ்தாபனங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட துணிகளின் சேர்க்கப்பட்டு "நிக்கோ" தேவைகளுக்கு சப்ளை செய்து வருகிறது.

தி நேஷனல் இன்ஸுலேட்டட் கேபிள் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்

ஸ்டீபன் ஹவுஸ் - 4, டெல்ஹௌஸி ஸ்கொயர் - கல்கத்தா-1

இந்தியாவெங்கும் ஏஜன்டுகளும் கிளை ஆபீஸ்களும் உண்டு

சென்னைக்கும் அதைச் சுற்றியுள்ள ஜில்லாக்களுக்கும் ஏஜன்டுகள்: பி. நடேசன் & கோ., லிட்., 10, மவுண்ட் ரோடு, மதராஸ்-2

"மறுபடியும் குருவளியைக் கிளப்பி விட்டாயே!" என்று அவன் மீதே குற்றத்தைச் சாட்டி விடலாம்!

* * *

ஒரு நாளுமில்லாமல் அன்றைய தினம் போஷி தம்மை அலங்காரம் செய்து கொண்டு கால் மைலுக்கு அப்பால் உள்ள புகிகோ வீட்டுக்குப் புறப்பட்டார்.

கமூரா மாளிகையும் தோட்டமும் அங்குள்ள பெரிய செர்ரி மரமும் பிரசித்தி பெற்றவை. அவற்றைக் கண்டு பிடிப்பதில் கஷ்டம் எதுவுமில்லை. எனவே அந்த இடத்துக்கு போஷி சுலா ஒரு மணி நேரத்தில் சென்று விட்டார்.

ஆனால் புகிகோ கூறிய படி அந்தச் செர்ரி மரத்துக்குப் பக்கத்தில் வெகு தூரத்துக்கு ஒரு வீடும் இல்லையே!

செர்ரி புஷ்பங்களின் காட்சியும் மணமும் அவரைப் போதை கொள்ளச் செய்தன. அதே சமயம் அவரது கவனத்தைச் செர்ரி மரத்துக்குப் பக்கத்தில் இருந்த சிறிய சமாதி ஒன்று ஆகர்ஷித்தது.

அதே விநாடியில் இனம் தெரியாத பீதி அவரது மனத்தை ஆட்கொண்டது.

அப்படியானால் இரவில் வந்த புகிகோ... அவளுடைய வீடு இதுதானா! அவர் ஒரு பதுமையைப்போல் சமாதிக்கு அருகில் சென்றார். இயற்கைக் காட்சியின் நிறைந்த அமைதியான சூழ்நிலையில் அழகாக அமைக்கப் பட்டிருந்த அந்தச் சமாதியின் மீது பொறிக்கப் பட்டிருந்த வாசகங்களைவாசித்தார்.

அட, வாங்கி விட்டீர்களா!



"எலுமிச்சம் பழக் கலர்ப் புடவை மிக நாஸூக்காக இருக்கிறது என்றீர்களே, கடையில் எலுமிச்சம் பழக் கலர் புடவையையே எல்லோருக்கும் வாங்கி விட்டீர்களே!"

"என்ன பண்றது. குழந்தைகள் எல்லோரும் பிடிச்சு எடுத்து அதையே வாங்கி விட்டார்கள்."

புத்தபகவானின் பாத கமலங்களில்
ஆழ்ந்த துயில் கொண்டுள்ள
என் அருமைக் குழந்தை
புகிகோ.

—கமூரா.

இதை வாசித்ததும் போஷிக்கு உடல் சிலிர்த்தது. பயங்கரமான ஓர் உண்மை சிறிது சிறிதாக அவர் மனத்தில் உருவாகத் தொடங்கியது. அவரது உதடுகள் வறண்டன; தலை சுழன்றது.

தன்னையே மறந்து சிறிது நேரம் அந்தச் சமாதிக்கு அருகில் நின்று கொண்டிருந்தார் போஷி. அவருடைய உடல் நடுங்கியதைப் போலவே, திடீரென்று அடித்த காற்றில் மேற்படி சமாதியும் செர்ரி புஷ்பங்களும் நடுங்குவது போன்ற உணர்ச்சி அவருக்கு ஏற்பட்டது.

அவர் மெதுவாகத் திரும்பினார். எங்கு செல்லுவதென்றே அவருக்குத் தெரியவில்லை. கடைசியாக அவரை ஒரு வித உணர்ச்சி உந்தித் தள்ளியது. அவர் அறியாமலேயே அவரது கால்கள் சிறிது தூரத்தில் உள்ள கமூராவின் மாளிகையை நோக்கி இழுத்துச் சென்றன.

கமூரா பிரபுவைப் பேட்டி காண்பது அவருக்கு அவ்வளவு எளிதாக இல்லை. கடைசியில் அவர், 'தங்கள் புதல்வியைப் பற்றிய ஒரு தகவல் கொண்டு வந்திருக்கிறேன்' என்று ஒரு குறிப்பு எழுதி அனுப்பியதுதான் தாமதம்! கமூராவிடம் அவரை அழைத்துச் செல்லுவதற்காக ஒரு ஆள் ஓடி வந்தான்.

கமூரா சோகமே உருவாக உட்கார்ந்திருந்தார். அவர் மாபெரும் செல்வந்தரானதால் ஏழையான போஷி அவர் முன் பலதடவை வணங்கினார். முதல் நாள் இரவு நடந்த சம்பவத்தை ஒன்று விடாமல் அவரிடம் தட்டுத்தடுமாறிக் கொண்டு தெரிவித்தார்.

"விருந்தைச் சாப்பிட்டு, என்னைத் தீராத துக்கத்தில் ஆழ்த்தியுள்ள புகிகோ

எழுதி வைத்திருக்கும் கடிதம் என்னிடமிருக்கிறது. அதில் விலாசம் எழுத அவள் மறந்து விட்டாள் என்று நினைக்கிறேன். அதனால்தான் அதை உங்களிடம் சேர்ப்பிக்க முடியவில்லை."

இவ்விதம் கூறிய கமிமுரா உள்ளே சென்று ஒரு கடிதத்தையும் பட்டுத் துணியினுள் சுற்றப்பட்டிருந்த வாளையும் கொண்டுவந்து போஷியிடம் கொடுத்தார்.

"அன்பார்ந்த நண்பருக்கு,

இந்தக் கடிதம் தங்கள் கைக்குக் கிடைப்பதற்கு முன் நான் புத்த பகவானின் பாதங்களை அடைந்திருப்பேன். என் மீது தாங்கள் கொண்ட காதல் பரிசுத்தமானது என்பது எனக்குத் தெரியும். நான் தங்களுடன் பல நாள் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. தாங்கள் ஒரு நாளாவது முறை தவறி என்னிடம் எதுவும் கூறியதில்லை; மற்ற இளைஞர்களைப் போல் நிலைதவறி நடந்து கொண்டதில்லை. தங்களுடைய நன்னடக்கைக்கும் உயர்ந்த குணத்துக்கும் இதைக் காட்டிலும் என்ன சான்று வேண்டும்? ஆனால் நான் தங்களைக் காதலிக்கவில்லை என்று கூறுவதைக் காட்டிலும் காதலிக்க முடியாது என்று கூறுவதே பொருந்தும். ஏனெனில் நான் உங்களைச் சந்திக்கு முன் வேறொருவரை மனப்பூர்வமாகக் காதலித்தேன். ஆனால் அவர் என்னை விரும்பவில்லை. ஏன் தெரியுமா? நான் யாரையும் மயங்க வைக்கும் அழகியாம். அவர் என்னை விரும்பாததற்கு என்னுடைய அசாதாரணமான அழகுதான் காரணம் என்று சொன்னார்!

எனக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு விட்டது. இருந்தாலும் தங்களுடைய கண்ணியம் வாடாத குணத்துக்காக என் குடும்பச் சொத்துக்களில் சிறந்த, புனிதமான வாளை உங்களுக்குப் பரிசாகக் கொடுக்கிறேன்.

தங்கள் அன்பு மறவாத

யுமிகோ."

செல்வச் செருக்கும் யாரையும் மதியாத குணமும் உள்ளவர் என்று பிரசித்தி பெற்ற கமிமுரா, மேற்படி கடிதத்தை போஷி வாசித்தபோது குழந்தையைப் போல் தேம்பித் தேம்பி அழுதார்.

"இந்தக் கடிதமும் நாங்கள் பூஜித்து வரும் இந்த வாளும் இனிமேல் உங்கள் சொத்து. எங்கள் மூதாதையரில் ஒருவருக்கு இந்த வாள் பரிசாக வழங்கப்பட்டது. அதை அவர் வீட்டுக்குக் கொண்டு வந்ததும், தமக்கு ஒரு அருமையான பரிசு கிடைத்ததாகத் தமது அன்னையிடம் கூறினாராம். அது என்ன சாதனம் என்பதை அறியாத அவள் 'உனக்குக் கிடைத்த பரிசை முதலில் புத்த பகவானின் பாதத்தில் வைத்து வணங்கு!' என்று கட்டளையிட்டாள்.

அதிலிருந்து அந்த வாள் எங்கள் குடும்பத்தில் பூஜிக்கப்பட்டு வருகிறது. அதில் இரத்தக் கறையே படக்கூடாது என்பது எங்கள் மூதாதையரின் கட்டளை. அந்த வாள் எங்கள் குடும்பத்துக்கு வந்த பிறகுதான் எங்களுக்குச் செல்வம் பெருகியது" என்று கூறி முடித்தார் கமிமுரா.

• • •

அன்றிரவு போஷிக்குத் தூக்கம் வரவில்லை. முதல் நாள் இரவிலும் அன்று பகலிலும் நிகழ்ந்த நிகழ்ச்சிச் சம்பவங்களைச் சிந்தித்த வண்ணம் அவர் புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தார்.

சரியாகக் கடிகாரத்தில் மணி பன்னிரண்டு அடித்தது. அச்சமயம் 'போஷி சாவா' என்று அந்தப் பெண் கூப்பிட்டது போஷியின் செவிகளில் விழுந்தது. அவர் நடுங்கிய வண்ணம் மௌனமாகப் படுக்கையில் படுத்துக் கொண்டு இருந்தார்.

மறுபடியும் 'போஷி சாவா', 'போஷி சாவா' என்று கூப்பிடுவது கேட்டது. அந்தக் குரல் தொனிப்பது அவரை என்ன என்னவோ செய்தது. அதற்கு மேல் அவரால் படுத்திருக்க முடியவில்லை. தைரியமாக எழுந்து சென்று ஜன்னல் கதவைத் திறந்தார். யுமிகோவை உற்றுப் பார்த்தார். உடனே யுமிகோ தலையைக் குனிந்துகொண்டது அவருக்கு நன்றாகத் தெரிந்தது.

"இன்று உங்களை அந்தச் செர்ரி மரத்தடியில் பார்த்தேனே" என்றாள் யுமிகோ.

"யுமிகோ! நீ உயிருடன் இருந்த போதும் என்னை வதைத்தாய். இப்போது ஆவி ரூபத்திலும் ஏன் என்னைச் சித்திரவதை செய்கிறாய்!" என்றார் போஷி பரிதாபமான குரலில்.

இதற்கு யுமிகோ யாதொரு பதிலும் கூறவில்லை. அதே சமயம் யுமிகோ தேம்பித் தேம்பி அழுவதை அவர் பார்த்தார். அவள் அழகிய கண்களில் நீர் சொரிந்ததைப் பார்த்தார். தாங்க முடியாத சோகத்தால் அவள் இதயம் விம்முவதைப் பார்த்தார். அவரது மனம் இளகி விட்டது. அவள் யுமிகோவின் ஆவி வடிவம் என்பதையே சில வினாடிகள் வரையில் மறந்து விட்டார்.

"யுமிகோ, நான் தவறி ஏதோ சொல்லி விட்டேன். நீ வருந்தாதே. நேற்று உன் தந்தையைக் கண்டேன். நீ எனக்கு எழுதியிருந்த கடிதத்தையும் நீ எனக்கு அளித்த அன்புப் பரிசையும் அவர் என்னிடம் கொடுத்தார். உன் அன்பு நிறைந்த கடிதத்தைப் படித்துப் பார்த்தேன். நீ அளித்த பரிசையும் பெற்றுக் கொண்டேன். உன் ஞாபகார்த்தமாக அந்த வாளை என்றென்றும் எங்கள் குடும்பத்தில் வைத்துக் கொண்டிருப்போம்."

போஷி இவ்விதம் கூறியதைக் கேட்டதும் யுமிகோ விம்முவது நின்றது.

"இனிமேல் அடிக்கடி வந்து தங்களை நான் தொந்தரவு செய்யவில்லை. என்னுடைய வேண்டுகோள் ஒன்றை நிறைவேற்றுவீர்களா?"

"யுமிகோ, உனக்காக எதுவும் செய்யச் சித்தமாக இருக்கிறேன்."

"ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் மாலையில் நீங்கள் நான் இருக்கும் அறைக்கு வந்து செப்புத்ஸா செய்ய வேண்டும். அவ்விதம் செய்தால்தான் என் ஆத்ம சாந்தி அடையும்" என்றாள் யுமிகோ.

ஜப்பானிய பாஷையில் செப்புத்ஸா என்றால் என்ன தெரியுமா! இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக, புத்த பகவானைப் பிரார்த்தனை செய்வதுதான்.

• • •

யுமிகோவிடம் அவ்வாறு உறுதி கூறிய போஷி சாவாதான் என் பாட்டனார்.


மேற்படி சம்பவத்திலிருந்து இந்த வாள் எங்கள் குடும்பத்தில் இருந்து வருகிறது. கமிமுரா கூறியதைப் போல் இந்த வாள் வந்த பின்தான் எங்கள் குடும்பத்துக்குப் பல விதத்திலும் க்ஷேமம் உண்டாயிற்று. 1904-ம் வருஷத்தில் நடந்த ருஷ்ய—ஜப்பான் யுத்தத்தில் என் பாட்டனார் போஷி சாவா காட்டிய வீர பராக்கிரமம் காரணமாக, சாதாரண சிப்பாயாக இருந்த அவர் உயர்தர இராணுவ அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

நான் ஜப்பானிலிருந்து போர் முனைக்குப் புறப்பட்டபோது என் தாயார் இந்த வாளை என்னிடம் கொடுத்து என்னை அன்புடன் ஆசீர்வதித்தார்.


ஞாபகம் இருக்கட்டும்!



பெண்ணின் தகப்பனார் (மனைவியிடம்): — உனக்குச் சொல்ல மறந்து விட்டேனே! மாப்பிள்ளை இரண்டு மாசம் கர்நூலிலிருந்து விட்டு வந்திருக்கிறார். சாம்பார், சட்டினியில் எல்லாம் காரம் அதிகம் போடணும், தெரியுமா?



CRAFTSMANSHIP
MANUFACTURERS & SOLE AGENTS FOR
HEPOLITE WELLWORTHY & BRICOVMO *Products in India.*
INDIA PISTONS LTD. MADRAS-11.
TELEPHONE: 55170, 55344
TELEGRAMS: "FITBORE"


டன்லப்
மீது சுக பிரயாணம்
செய்யுங்கள்





பரோபகாரி பஞ்சு



பாரதன்

அன்று தீபாவளி விடுமுறை நாள். காலையில் ஸ்நானம், "கங்கா ஸ்நானம் ஆச்சா" என்ற பண்டிகை குசலப் பிரச்னங்கள், தீபாவளி விருந்து எல்லாவற்றையும் முடித்துக் கொண்டேன். சற்று இளைப்பாறிய பிறகு, பிற்பகல் காப்பியும் 'ஸ்ட்ராங்கா'க ஒரு டம்ளர் உள்ளே செலுத்தினேன். ஆபீஸில் பலமாக நடக்கும் சீட்டுக் கச்சேரியில் சேர்ந்து கொள்ளலாம் என்று புறப்பட்டேன். ஆபீஸ் வாசலில் நுழையும்போது பஞ்சு அவசரம் அவசரமாக ஆபீஸிலிருந்து வெளியேறிக் கொண்டிருந்தார்.

"என்ன? அவசரமாகக் கிளம்பி யாயிற்று? ஒரு 'ரப்பர்' ஆடி விட்டுப் போகலாமே" என்று கூறி அவரை வழி மறித்தேன்.

"ஊஹூம்! இல்லை ஸார்! மன்னிக்கணும். நான் அவசரமாகப் போக வேண்டும்" என்று பஞ்சு மீண்டும் முன்னேறினார்.

"என்ன அப்படி அவசரம்? ஒரே ஒரு ஆட்டம்......" என்றேன்.

அந்த அவசரத்திலும் பஞ்சு தமது அலுவலை சுருக்கமாக எனக்குத் தெரியப் படுத்தாமல் போகவில்லை.

"நம் ஊருக்குப் பாங்கி காஷியர் புதிதாக வந்திருக்காரே, தெரியுமா? ஆத்மநாதன்! அவர் இன்றைக்குத்தான் புதுக்குடித்தனம் வைக்கிறார். பாவம்! மனுஷன் ஊருக்குப் புதிசோ, இல்லையோ! அவரும் ரொம்ப 'யங்-மேன்'. அனுபவம் போதாது. அவர் சகதர்மிணியும் சிறு பெண். ஒன்றும் தெரியாது. கொஞ்சம் கூடமாட இருந்து ஒத்தாசை செய்து விட்டு வரலாமே என்று போகிறேன். சாயந்திரம் வந்து விடுவேன்" என்று தெரிவிக்க வேண்டியதைத் தெரிவித்து விட்டு, அவசரமாக வெளியேறினார்.

நான் எதிர்பார்த்தது போலவே, பஞ்சு சாயங்காலம் வரவில்லை; மறு நாளும் கண்ணில் தென்படவில்லை. கிட்டத்தட்ட ஒரு வாரம் கழித்து ஒரு நாள் காலை மார்க்கெட்டில் அவரைப் பார்த்தேன். மும்முரமாகப் பேரம் பேசி வெண்டைக்காய், முருங்கைக் காய், இன்னும் காய்கறிகள் ஏதேதோ வாங்கிக் கொண்டிருந்தார்.

பஞ்சு மார்க்கெட்டுக்குப் போய் வீட்டுக்குக் காய்கறி வாங்கி வந்ததை இதற்கு முன் நான் பார்த்ததில்லை; இதுதான் முதல் முறை.

"ஏது! அபூர்வமாக இருக்கிறது மார்க்கெட்டுக்கு? வீட்டில் ஏதாவது விசேஷமா?" என்று நான் விசாரித்தது தான் தாமதம்; பஞ்சு விஷயத்தை விறு விறுவென்று அள்ளி அளந்து விட்டார். அவருக்கு ஒளிவு மறைவு கிடையாது.

"என் வீட்டுக்கு இல்லை, ஸார். ஆத்மநாதன் என்று சொன்னேனே, புதுக் காஷியர்? பாவம்! தம்பதிகள் இரண்டும் சிறுசுகள். ஒரு காய் கறி வாங்கக்கூடத் தெரியாமல், எப்படித் தான் மனுஷன் பாங்கில் காஷியர் வேலை பார்க்கிறாரோ! அவர் வீட்டுக்குத் தான் காய்கறி சாமான் வாங்கிக்கொண்டு போகிறேன். அந்தப் பெண்ணும் சிறுசு; பெரிய மனுஷாள் வீட்டுப் பெண் போலிருக்கிறது. காப்பி போடக் கூடத் தெரியவில்லை. நான்தான் போய் ஒத்தாசை பண்ணுகிறேன். என்ன செய்கிறது" என்று அங்கலாய்ப்புடன் கூறிவிட்டு அவசர அவசரமாகப் போனார் பஞ்சு. காய்கறி மட்டுமில்லை; கையில் ஒரு பை நிறைய மளிகைச் சாமான்களையும் சுமக்க முடியாமல் கஷ்டப் பட்டுச் சுமந்து கொண்டு சென்றார்.

காஷியர் தம்பதியிடம் பஞ்சுவுக்கிருந்த அக்கலாய்ப்புக்கு மேல் எனக்கு அவரிடம் அனுதாபம் ஏற்பட்டது. இதென்ன விஷச்சாரம்! நம் வீட்டுத் தொல்லைகளை கவனிக்கவே நமக்கு அவகாசம் இருப்பதில்லை. பிறர் குடும்ப விசாரத்தை யெல்லாம் ஏன் இந்த மனுஷன் இழுத்துப் போட்டுக்கொண்டு இப்படி அவஸ்தைப் பட வேண்டும் என்று எனக்கு அடிக்கடி தோன்றுவது உண்டு.

பஞ்சுவே அப்படித்தான்! யாருக்காவது இப்படி இழுத்துப் போட்டு உபகாரம் செய்யா விட்டால் அவருக்குத் தூக்கம் வராது. எனக்கு மட்டுமல்ல, ஆபீஸில் உள்ள நண்பர்களுக்கெல்லாம் அப்படி அவர் மேல் அனுதாபம்தோன்றுவது உண்டு.

அவர் பரோபகார சிந்தனைக்குப் பாத்திரமானவர்கள் கூட, 'அவர் ஏன் இப்படித் தங்கள் விஷயத்தில் சிரமப் படுகிறார்' என்று நினைக்க நேருவது உண்டு! இதனால் அவர்களை நன்றி கெட்டவர்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் பாதாம் அல்வா, ஜிலேபியைப் போல், நல்லெண்ணம் கூட அதிகமாகப் போனால் திகட்டி விடுகிறது. பஞ்சுவின் பரோபகாரம், அதற்கு இலக்கானவர்களைத் திகட்ட வைத்துத் திணற அடித்துத் திகைப்பில் ஆழ்த்தும் தன்மை யுடையது!

** ** **

யார் என்ன சொன்னாலும் பஞ்சு தம் பரோபகார குணத்தைக் கை விடுவதில்லை. மஹாத்மா காந்திக்குச் சத்தியமும் அஹிம்சையும் எப்படியோ, மஹா விஷ்ணுவுக்குச் சங்கும் சக்கரமும் எப்படிப் பிரிக்க முடியாத சின்னங்களோ, மோட்டார் காருக்குப் பெட்ரோல் எப்படியோ, தற்காலக் கலாசாலை மாணவர்களுக்கு சிகரெட்டு எவ்வளவு அத்தியாவசியமோ, நாகரிக சமூக சேவா நாரீமணிகளுக்கு உதட்டுச் சாயம் எவ்வளவு அவசியமோ, அப்படிப் போலவே பஞ்சுவினிடம் பரோபகார குணம் வாய்த்திருந்தது.



"பரோபகாரார்த்தம் இதம் சரீரம்" என்று புரியாத பாஷையில் ஏட்டில் எழுதி வைத்து விட்டுப் போன மகான், பிற்காலத்தில் பஞ்சுவின் அவதாரத்தைத் தீர்க்க தரிசனத்



தோடு கண்டு விட்டுத்தான் அந்த மணிமொழிகளை உதிர்த்திருக்க வேண்டும் என்பது என் அபிப்பிராயம்.

"அதெல்லாம் 'ஹம்பக்' ஸார்! சோழியன் குடுமி சும்மா ஆடாது, ஸார்! மனுஷன் ஏதாவது காரியமில்லாமல் இப்படிப் போய்ப் பரோபகாரம் செய்வானா இந்தக் காலத்தில்?" என்று சில தீவிர வாதிகள் பஞ்சுவைப் பற்றிச் சந்தேகித்தது உண்டு! அப்படிச் சந்தேகித்தவர்களில் லாயர் ரங்கநாதனும் ஒருவர்.

** ** **

லாயர் ரங்கநாதன் பிரபல "கிரிமினல் லாயர்." அவர் பேரெடுத்துப் பணம் சம்பாதித்ததெல்லாம், கொலைக் குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பூமிக்கு ஆறடி உயரத்திலிருந்து தொங்காமல் தப்புவித்ததால்தான்; மோசடி, போர்ஜரி, நம்பிக்கைத் துரோகம் முதலிய ஐ. பி. கோவின் சட்ட வரம்புகளைக் கடந்ததாகச் சந்தேகிக்கப்பட்டவர்களைக் கம்பி என்னும் தொழிலிலிருந்து காப்பாற்றி விட்டதனால்தான்!

தினசரி அத்தகையோருடன் பழகும் படியான நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்த லாயர் ரங்கநாதன் உள்ளத்தில் பஞ்சுவின் பரோபகாரம் சந்தேகத்தைக் கிளப்பியதில் ஆச்சரியமில்லை.

அப்பேர்ப்பட்ட லாயர் ரங்கநாதன் இன்று பஞ்சுவின் பரம பக்தர்களில் ஒருவர் என்றால் அதற்குக் காரணமில்லாமல் இல்லை. காரணம், ரங்கநாதனுடைய கடைசிப் பெண் கல்யாணத்தில் ஆரம்பித்தது.

லாயர் ரங்கநாதன் கடைசிப் பெண் கல்யாணத்துக்கும் அவன் தகப்பனார் கொண்ட பஞ்சு பக்திக்கும் என்ன சம்பந்தம் என்று அறிய வேண்டுமானால், லாயர் ரங்கநாதனின் சாமுத்ரிகா லக்ஷணநிசயங்களையும் அவற்றைப் பிதிரார்ஜிதமாகக் கொண்ட அவரது அருமைப் பெண்ணின் லக்ஷணங்களையும் சற்றுத் தெரிந்து கொள்வது நல்லது.

லாயர் ரங்கநாதன் கவிகள் வர்ணனைக்கு எட்டாத ரூபம் படைத்தவர். மன்மதன் என்ற சிருஷ்டிக்கு நேர் எதிரான ஒரு சிருஷ்டி இருக்குமானால், அது லாயர் ரங்கநாதனின் ரூபலாவண்யமே என்று சொல்லலாம்! மன்மதன் ஒரு கற்பனை; மன்மதனை யாரும் பார்த்ததில்லை. (நாடகமேடை, சினிமாத் திரைகளில் தவிர!)

லாயர் ரங்கநாதனைச் சிருஷ்டிக்கும் போது பிரம்மாவானவர் மனித வர்க்கத்துக்காக ஒரு புள்ளியைச் சிருஷ்டிக்க வேண்டும் என்பதை மறந்திருக்க வேண்டும். வன விலங்குகளான யானை, காண்டா மிருகம், கரடி, மனிதக் குரங்கு முதலிய ஜந்துக்களையும், கழுகு, ஆந்தை, பருந்து, காகம், போன்ற பட்சி ஜாலங்களையும், மனத்தில் நினைத்துக் கொண்டு ஏதோ ஞாபக மறதியாக ஒரு சிருஷ்டி செய்திருக்க வேண்டும்.

உருவம் எப்படி இருந்தாலும் லாயர் ரங்கநாதனின் உள்ளம் நல்லதுதான்; இல்லாவிட்டால் அவ்வளவு குற்றவாளிகள் கோர்ட்டில் அவருடைய நாவன்மையால் விடுதலை அடைந்திருக்க முடியுமா?

லாயர் ரங்கநாதனின் சொரூப வர்ணனையில் ஏன் இவ்வளவு நேரம் இறங்க வேண்டும் என்று கேட்கலாம். முதலில் அதைப் பற்றித் தெரிந்து கொள்ளாவிட்டால், அவரது கடைக்குட்டி அமிலாம்பிகைக்கு, நின்று போக இருந்த கல்யாணம் மீண்டும் எப்படி நிறைவேறியது என்பது விளங்காது. அமிலாம்பிகையின் கல்யாணம் தடங்கல் இல்லாமல் நடைபெற்றதற்கு யாராவது ஒருவர் காரணமாக இருந்தார் எனில், அவர் பஞ்சுவைத் தவிர வேறு ஒருவருமில்லை. அமிலத்தின் கல்யாணத்துக்கு ஏன் அவ்வளவு சிரமம் என்பதற்குக் காரணம் அந்தப் பெண் எனப்பட்ட அவதாரத்தைப் பார்த்தால்தான் தெரியும். அந்த அருமைக் குழந்தை பிறந்த அன்றே, அதைப் பார்த்த அத்தைமார்களும் பாட்டிமார்களும், "அப்பனை அச்சு அச்சம் உரிக்க வைத்திருக்கே" என்று ஆச்சரியப்பட்டுப் போனார்கள். பெரியோர் வாக்கைப் பொய்ப்படுத்தாமல் அந்தப் பெண்ணும் தான் தன் தந்தையின் பெண்தான் என்று, பார்க்கும் போதே எள்ளளவு சந்தேகத்துக்கும் இடம் கொடுக்காமல் வளர்ந்து பருவ நிலையை அடைந்தாள்.

இந்த நிலையில்தான் குமாரி அமிலத்திற்கு லாயர் ரங்கநாதன் வரன் தேட ஆரம்பித்தார். அவருடைய செல்வாக்கையும் பெயரையும் பணத்தையும் கேள்விப்பட்ட பல பெற்றோர்கள் தங்கள் இஷ்ட, ஜேஷ்ட, கனிஷ்ட புத்திரர்களைக் கொடுக்கச் சித்தமாக இருந்தார்கள். ஆனால் இக் காலத்துப் பிள்ளைகளில் யார்தான் தங்கள் வருங்கால மனைவியைக் கண்ணால் பார்க்காமல் மணம்புரியச் சம்மதிப்பார்கள்?

அமிலத்துக்கும் கல்யாணமாகாத ஆண் வர்க்கத்திற்கும் ஏதோ தீராப் பகை போலும்! பெண் பார்க்க வந்த ஆண் பிள்ளைக் குட்டிகள் எல்லாம் ஒரு கடைக்கண் பார்வையிலேயே, பிடரியை உதறிக் கொண்டு, வாலைச் சுருட்டிக் கொண்டு, தங்கள் பிரம்மச்சாரி வனத்துக்கு ஓட்டம் பிடித்தன. சில பிள்ளைக் குட்டிகள் வானப்பிரஸ்தம், சந்நியாசம் முதலிய தொலைவான ஆரணியங்கள் வரை, பிடித்த ஓட்டத்தை நிறுத்தவில்லை. சில பெற்றோர்கள் தாங்கள் பெற்ற பிள்ளைக் குட்டிகளைக் கட்டிப் போட்டு நிர்ப்பந்தம் செய்ய முயன்றபோது, அந்தப் பிள்ளையாண்டான்கள் வாழ்க்கையை வெறுத்துத் தற்கொலை புரிந்து கொள்ளவும் சித்தமாக இருந்தார்கள்!

"முகத்தில் என்னப்பா இருக்கிறது? முகத்தைப் பார்த்தா தினசரி குடும்ப வாழ்க்கை நடத்த முடியும்? அகத்தில் அல்லவா இருக்கிறது குடும்ப வாழ்க்கையின் ஆனந்த ரகசியம்" என்று வேதாந்திகளான முதியோர்களும், அநுபவம் வாய்ந்த பெற்றோர்களும்



சமாதானம் கூறலாம். ஆனால் குமாரி அமலத்தின் விஷயத்தில் இந்தச் சமாதானம் எல்லாம் பலிக்கவில்லை.

"எதற்கும் காலம் வரவேண்டும், லாயர்" என்று லாயர் ரங்கநாதன் ஆப்த நண்பர்கள் அவருக்கு ஆறுதல் கூறினார்கள். அந்தக் "காலம்" ஒரு சமயம் வந்தே இருந்தது. எதற்கும் அஞ்சா நெஞ்சம் படைத்த ஒரு வீர வாலிபன் குமாரி அமலாம்பிகையின் கழுத்தில் திருமாங்கல்யத்தை அணிவிக்கத் தயாராக இருந்தான். இதைக் கண்டு, உலகம் அவனை ஒரு பைத்தியக்காரன் என்று நகைத்திருக்கலாம். அந்த நகைக்கும் உலகமா கடைசியில் அவனுக்கு ஒரு வீடு, ஒரு மோட்டார் கார், ஐம்பதாயிரம் ரூபாய் ரொக்கம், அமெரிக்காவுக்கு உல்லாசப் பிரயாணம் (தான் மட்டும்) — இவற்றையெல்லாம் அளித்திருக்கும்?

லாயர் ரங்கநாதன் இதையெல்லாம் ஒரு திருணமாகக் கருதினார்; அவர் கடைசிப் பெண் கல்யாணச் செலவை மூன்று கொலைக் கேஸ், நாலு கொள்ளை, ஆறு 'சிட்டிங்' கேஸ்களில் சரிகட்டி விடலாம்; பிரமாதமில்லை.

ஆனால் இந்தக் கல்யாணத்துக்கு ஒரே ஒரு முக்கிய நிபந்தனைதான் அந்த வீர வாலிபன் போட்டிருந்தான்; உண்மையில் அவன் மனத்தை இந்தக் கல்யாணத்தில் ஈடுபடச் செய்த முக்கிய காரணம் அதுவென்றே சொல்லலாம்.

இந்த வாலிப வீரனுக்குச் சிறு பிராயத்திலிருந்து சினிமாப் பைத்தியம் உண்டு. அவன் அறை பூராவும் சினிமா நட்சத்திரங்களின் படங்களே நிறைந்திருக்கும். அவன் பாடப் புத்தகங்களில் எல்லாம், அந்தந்த சமயத்தில் எந்த சினிமா நட்சத்திரத்தின் புகழ் உச்ச நிலையில் இருக்கிறதோ அந்த நட்சத்திரத்தின் நாமாவளியை வரைந்து தள்ளியிருப்பான்.

இந்த சூத்திரதாரனான யுவன், தன் கல்யாண சுப முகூர்த்தத்தின் போது, சினிமா வானிலே அந்தச் சமயத்தில் ஜகஜ் ஜோதியாக மின்னிக் கொண்டிருந்த, "மிருக ராணி," "பெண்ணின் மகன்" "மகனின் பேரன்" "கூலிக்காரி" "காட்டுயக்காரி" "மனம்" "தனம்" "பாவம்" "புண்ணியம்" முதலிய படங்களில் புகழ் பெற்ற கோரா தேவியின் நடனக் கச்சேரிதான் வேண்டும் என்ற நிபந்தனை போட்டான். தன் கண்மணி அமலத்திற்கு எப்படியாவது யாராவது தாலி கட்டினால் போதும் என்ற நிலையில் இருந்த லாயர் ரங்கநாதன், கோரா தேவி இல்லை, போரா தேவி, பூரா தேவி, ஊரா ஊரா தேவி, எந்த தேவியாயிருந்தாலும் பிடித்து வந்து ஆடச் செய்வதற்குச் சர்வ சித்தமாக இருந்தார். எனவே, தம் பெண்ணைத் தைரியமாகக் கல்யாணம் செய்து கொள்ள முன் வந்த அந்த அதிசய வாலிபனின் அபூர்வ நிபந்தனைக்கு "ஆஹா" என்று ஒப்புக் கொண்டு விட்டார். கல்யாண ஏற்பாடுகளும் தடபுடலாகச் செய்யத் தொடங்கி விட்டார்.

* * *

கல்யாணப் பத்திரிகை அச்சடித்து வழங்கியாக வேண்டும். பத்திரிகைகளில், கச்சேரி விவரங்களைப் பிரசுரிக்க வேண்டும் அல்லவா?



லாயர் ரங்கநாதன் கோரா தேவிக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் கல்யாணத்தேதியைக் குறிப்பிட்டு அன்று சாயங்காலம் கோரா தேவி நடனக் கச்சேரி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முன்பணமாக ஆயிரம் ரூபாய்க்குச் செக்கும் வைத்து அனுப்பி விட்டார்.

மூன்று நாளைக்கெல்லாம் கோரா தேவியின் பதில் கிடைத்தது. கோரா தேவியின் தலையாளனான போராகாத் பதில் எழுதியிருந்தார். அதில் கோரா தேவிக்கு முகூர்த்தத்தன்று 'ஷூட்டிங்' இருப்பதாகவும், கச்சேரியை ஒப்புக் கொள்ள இயலாததற்கு வருத்தம் தெரிவித்தும், செக்கைக் கடிதத்துடன் திருப்பி அனுப்புவதாகவும் விவரமாகப் பதில் கிடைத்தது.

லாயர் ரங்கநாதன் இடி விழுந்தவர் போல் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார். (சாய்வு நாற்காலியைக் கண்டு பிடித்த மகான் பெரிய தீர்க்கதரிசி என்பதில் சந்தேகமில்லை!) யோசனையில் ஆழ்ந்தார். கோராதேவியின் தலையாளர் போராகாத்தின் கடிதத்தைத் திருப்பித் திருப்பி வாசித்தார். 'போர்ஜரி' கேஸில் கூட அவர் போய்க் கடிதத்தை அப்படிப் பல தடவைகள் திருப்பித் திருப்பி வாசித்தது கிடையாது.

கடைசியில் அவருக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அந்த முகூர்த்தத்தில் தானே 'ஷூட்டிங்' என்று எழுதியிருக்கிறது. சரி; அடுத்த முகூர்த்தம், அதற்கடுத்தது, இப்படி அரை டஜன்

முகூர்த்தங்களைச் சாஸ்திரிகளை விட்டுப் பார்க்கச் சொல்லி, இதில் எந்தத் தேதி கோராதேவிக்குச் சௌகரியமோ அந்தத் தேதியில் கல்யாணம் வைத்துக் கொள்வதாகவும், கோரா தேவி கருணை கூர்ந்து ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும், அதன் பொருட்டு இரண்டாயிரம் ரூபாய் செக் முன் பணமாக அனுப்பி யிருப்பதாகவும் உடனே எழுதி விட்டார்.

அதற்கும் முன் போலவே போரா காத்திடமிருந்து பதில் வந்துவிட்டது. ஐந்து முறை இப்படி எழுதிக் கடைசியில் ஆறும் முறை ஐயாயிரம் ரூபாய் செக்கும் லாயர் ரங்கநாதனின் பரிதாப வேண்டுதலும் போனதும் கோரா தேவிக்கே மனம் இளகி விட்டது போலும். தான் கச்சேரி செய்ய அரை மனதுடன் ஒப்புக் கொள்வதாகவும், ஆனால் தனக்கு நடனம் ஆடத் தெரியாததால், சில சினிமா பாட்டுகள் மட்டும் பாடிப் போவதாகவும், அதற்கும் வாத்திய கோஷ்டி, 'இரவல் குரல்' இவர்களைப் பிரத்தியேகமாக ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் எழுதியிருந்தாள். லாயர் ரங்கநாதன் இதற்கும் பின் வாங்கவில்லை. எவ்வளவு வாத்திய கோஷ்டிகள் வேண்டுமானாலும் திட்டம் செய்வதாகவும், ஒரு இரவல் குரல் இல்லை, இரவலாக கோஷ்டி கானமே வேண்டுமானாலும் ஏற்பாடு செய்வதாகவும் பதில் எழுதி விட்டார். கல்யாணப் பிள்ளைக்கும் இந்த சந்தோஷ விஷயத்தைத் தெரிவிக்கும்படி அவன் தகப்பனாருக்கு எழுதி விட்டார்.

மறுநாளே லாயர் ரங்கநாதனுக்கு மற்றொரு இடி தந்தி மூலமாக வந்து விழுந்தது. அது கல்யாணப் பிள்ளையின் தந்தையிடமிருந்து வந்தது. "பையன் கேட்டு நீங்கள் ஒப்புக் கொண்டது கோராதேவியின் **நடனக் கச்சேரி**, பாட்டுக் கச்சேரியல்ல. இந்த முக்கிய நிபந்தனையைச் சரிவர நிறைவேற்ற முடியாவிட்டால் உடனே கல்யாண ஏற்பாட்டை ரத்து செய்து விடக் கோருகிறோம்."

அன்று வெளியில் லாயர் ரங்கநாதனைக் கண்டு, "என்ன ஸார்! பெண்ணுக்குக் கல்யாணம்தான் நிச்சயமாகி விட்டதே; இன்னும் முகத்தில் ஏன் இப்படி வாட்டம் காண்கிறது? உடம்பு சரியாக இல்லையா" என்று அவரை அனுதாபத்துடன் கேட்ட ஆப்த நண்பர்களில் நானும் ஒருவன்.

லாயர் ரங்கநாதன் துக்கம் தாங்காமல் கல்யாணத்திற்கு ஏற்பட்டிருக்கும் தடங்கலை எடுத்துரைத்தார். அதைக் கேட்டுக் கொண்டிருந்த பஞ்சு, லாயர் ரங்கநாதன் முதுகில் தட்டிக் கொடுத்தார். "மிஸ்டர் ரங்கநாதன்! இதற்கா கவலைப் படுகிறீர்கள்? சே சே சே! சும்மா இருங்கள், ஸார். இந்தக் கல்யாணத்தைத் திட்டம் போட்டபடி நடத்தி விடலாம், பயப்படாதீர்கள்" என்று உறுதியுடன் கூறினார்.

பஞ்சுவின் தைரிய வார்த்தைகள் எங்களுக்கு வெறும் வார்த்தையாகவே அப்போது ஒலித்தன. லாயர் ரங்கநாதன் அந்தத் துக்கத்திலும் ஒரு அசட்டுச் சிரிப்பு சிரித்து விட்டு, "என்ன ஸார், பரிகாசம் பண்ணுகிறீர்கள்! இது நடக்கிற விஷயமா? ஆடத் தெரியாத ஒரு சினிமா நட்சத்திரத்தை நாட்டியம் ஆடவைக்க முடியுமா?" என்றார்.

"ஏன் முடியாது?" என்று திடமாகச் சொன்ன பஞ்சுவின் வார்த்தைகளைக் கேட்டு நாங்கள் அப்படியே திகைத்துப் போய் விட்டோம்.

"அதெப்படி ஐயா முடியும்? விளையாட்டுப் பேச்சாகப் பேசினால்?" என்றார் லாயர் ரங்கநாதன்.

பஞ்சு மிகவும் உணர்ச்சி ததும்ப, "விளையாட்டு இல்லை. எல்லாம் முனைந்தால் முடியும்; வாருங்கள் யோசிக்கலாம்" என்று லாயர் ரங்கநாதனைக் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வெளியில் போய் விட்டார்.

** ** **

அதற்குப் பிறகு சில நாட்கள் வரை வெளியில் லாயர் ரங்கநாதனையும் காணோம்; பஞ்சுவும் தென்படவில்லை; நாங்களும் குமாரி அகிலத்தின் கல்யாண விஷயத்தை அடியோடு மறக்க ஆரம்பித்தோம்.

திடீரென்று ஒருநாள் கல்யாணக் கடிதம் ஒன்று எனக்குக் கிடைத்தது. அது சௌபாக்கியவதி அகிலாம்பிகைக்கும், சிரஞ்சீவி வீரபத்ரனுக்கும் நடக்க விருக்கும் விவாகத்திற்கு அழைப்பு! அடியில், "சாயங்காலம் 5-30 மணிக்கு சினிமாப் புகழ் கோரா தேவியின் நடனக் கச்சேரி—தகுந்த ஜமாக்களுடன் நடைபெறும்" என்று அச்சடித்திருந்ததைக் கண்டேன்.

அதை என்னால் நம்பவே முடியவில்லை. கல்யாணத்திற்குப் போய் நடனக் கச்சேரியை நேரில் பார்த்த போதுதான் நம்பிக்கை வந்தது.

கல்யாணம் வெகு விமரிசையாக நடந்ததென்று சொல்ல வேண்டியதில்லை. ஊரே அமர்க்களப்பட்டது. கல்யாண வைபவத்தில் பஞ்சுதான் முன் நின்று எல்லாம் நடத்தினார். பலர் கல்யாணப் பெண்ணின் தகப்பனார் பஞ்சுதான் என்றுகூட நினைத்தார்கள். ஆம், பெண்ணைப் பார்க்காதவர்கள்தான் அப்படி நினைத்தார்கள்!

லாயர் ரங்கநாதனைத் தெரிந்தவர்கள் ஏராளமானவர்கள். அவர்கள் எல்லாரும் கல்யாணத்துக்கு விஜயம் செய்து சிறப்பித்ததால் பந்தலில் எள் விழ இடம் இல்லை.

ஆனால் கல்யாணத்தைப் பார்த்துத் தம்பதிகளை ஆசீர்வதிக்க வந்தவர்களை விடப் பத்து மடங்கு பேர்கள் சினிமா ராணி கோராதேவி நாட்டியமாடும் விந்தையைக் காண வந்தார்கள். நிஜமாகவே கோரா தேவிதான் ஆடுவதா என்று கண்ணைக் கசக்கிக் கொண்டு பார்க்காதவர்கள் இல்லை. இந்த அதிசயத்தைச் சாதித்தவர் பஞ்சு என்றும் நம்ப மாட்டார்கள்; ஆனால் அதுதான் உண்மை!

எப்படியோ பஞ்சு தன் நண்பர்கள் மூலம் பட உலகில் புகுந்தார்; கோரா தேவியின் சன்னிதியில் பிரசன்னமானார்; அந்த நட்சத்திரத்தின் அற்புதமான தேகக் கட்டையும் முக பாவங்களையும் புகழ்ந்து நாட்டியக் கலைக்கென்றே பிறந்தவள் என்று பாராட்டி, மேனகைக்கு அடுத்தபடி அவள்தான் என்று நம்பச் செய்தார்; பதினைந்து நாளில் பத்து உருப்படி நாட்டியம் கற்றுக்கொள்ள வைத்தார்.

ஆடத் தெரியாத சினிமா நட்சத்திரத்தை அகிலாம்பிகையின் மணப் பந்தலில் அரங்கேற்றி வைத்ததற்காக லாயர் ரங்கநாதன் அவருக்கு என்றென்றும் அடிமையாகி விட்டார். இல்லாவிட்டால் அந்தக் கல்யாணம் நடந்திருக்குமா? மாஜி குமாரி, இப்போது ஸ்ரீமதி அகிலாம்பிகையின் கணவர் வீரபத்ரன் பஞ்சுவின் பரம பக்தர்களில் ஒருவர். அவர் மட்டுமா? ஸ்ரீமதி கோரா தேவியே தன்னை நாட்டிய அரங்குக்கு அறிமுகப்படுத்தியதற்கு நன்றி பாராட்டி, அவருக்கு வந்தனக் காணிக்கையாக, இன்றைக்கும் நாளைக்கும், தம் கோரக் கதம்ப நடனக் கச்சேரியில் பஞ்சநத வர்ணத்தை முதலில் நடித்து விட்டுத்தான் மயில் டான்ஸும் குயில் டான்ஸும் ஆடுகிறார்.

லாயர் ரங்கநாதனின் பெண் சௌபாக்கியவதி அகிலாம்பிகையின் திருமண வைபவத்தை அவர் நடத்திய விமரிசைக்கு மேல் இவ்வளவு விமரிசையாக விமரிசனம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது பஞ்சுவின் பரோபகாரத்தின் ஒரு சிறு பாகத்தை எடுத்துக் காட்டவேதான்!

** ** **

பஞ்சுவின் பரோபகாரம் என்னையும் ஒரு சமயம் தாக்கியது;—அல்லது ஆட்கொண்டது—அல்லது மூழ்கடித்தது—(அதற்குத் தகுந்த பதம்தான் கிடைக்கவில்லை.) அப்பொழுதுதான் நான் பஞ்சுவின் பரோபகார தத்துவத்தைப் பூராவும் உணர்ந்தேன்.

ஒருசமயம் எனக்கு ஜலதோஷம் பிடித்திருந்தது; சற்று கடுமையாகவே. அதன் அறிகுறிகள் தும்மல், கம்மல் முதலிய வெளிப்படைச் சின்னங்களாய் காணப் பட்டன. ஜலதோஷத்தைச் சாதாரணமாக.

தொலையட்டும், தானே மூன்று நாளில் போய்விடும் என்று விட்டுவிடுவேன் நான். பஞ்சு அப்படி என் ஜலதோஷத்தையும் விடவில்லை, என்னையும் விடவில்லை; ஜலதோஷம் என்னைக் கெட்டியாகப் பிடித்தது; பஞ்சுவும் அதைவிடக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டார். அவரை அப்போது தான் நான் அரைகுறையாக அறிமுகப் படுத்திக் கொண்ட சமயம்.

“சேசே! இது ரொம்ப வைத்தியக் காரத்தனம், ஸார்; வரவிடக் கூடாது ஸார்!—ரொம்ப அபாயம்—நிமோனியா, டைபாயிட், காலரா ஆஜார், மெனஞ்ஜைடிஸ், ஜலஞ்ஜைடிஸ், கபஞ்ஜினிடிஸ், அபெண்டிஸிடிஸ் எதிலாவது கொண்டு விட்டுடும் ஸார்! ஜாக்கிரதையாயிருக்கணும்” என்று எச்சரித்தார்.

“கொண்டு விட்டுமே ஸ்வாமி! அந்த விகுணையாவது செலவில்லாமல் பார்த்து விட்டு வருகிறேன்” என்று தமாஷ் செய்தேன்.

“பார்த்துவிட்டு வரமாட்டீர்களே! அதுதானே பேஜார்” என்று அபாயச் சங்கு ஊதினார் பஞ்சு.

பிறகு என்னைக் கையைப் பிடித்துத் தர தரவென்று இழுத்துக் கொண்டு போனார். “வீட்டில் படுக்கையில் இருக்கணும் ஸார்! ‘எக்ஸ்போஸ்’ பண்ணிக்கக் கூடாது” என்று, தன் அங்கவஸ்திரத்தை எடுத்து என் தலை காது எல்லாவற்றையும் பார்சல் செய்தார். வண்டி வைத்து வீட்டில் கொண்டு போய்ச் சேர்த்தார். அதோடு விட்டாரா?

“என்ன அம்மா! நீங்கள்! இப்படி இவரை இந்த உடம்போடு வெளியில் வரவிடலாமா?” என்று என் மனைவியைக் குற்றம் சாட்டினார்.

இந்த உடம்போடு வராமல், வேறு உடம்பு எனக்கு உபயோகத்துக்கு இல்லையே, அதோடு வெளியில் வர என்று வருத்தப்பட்டுக் கொண்டேன்.

அதற்குள் என் மனைவி நிலைமைக்கு போய் “என்ன? என்ன? உடம்பு, ஏதாவது அபாயமோ? டாக்டரைக் கூப்பிடுங்களேன்” என்றாள்.

“பயப்பட வேண்டாம் அம்மா! இப்படியே அவரை ஓடியாட விட்டால் அபாயம். டாக்டரை நானே கூப்பிட்டு வருகிறேன். அதற்குள் படுக்கையில் பத்திரமாகப் படுக்க வையுங்கள். கனமான கம்பளி போர்த்துங்கள். ஜன்னல் எல்லாம் சாத்திக் காற்று வராமல் பார்த்துக் கொள்ளுங்கள் — கும்மட்டியில் கணப்புப் போட்டு உடனே வையுங்கள்...” என்று மட மடவென்று உத்தரவு போட்டு டாக்டரை அழைத்து வரப் போய்விட்டார். என் மனைவியும் அவர் சொன்னது ஒன்று விடாமல் பக்தி சிரத்தையாக செய்து விட்டாள். டாக்டர் வந்து தெர்மாமீட்டர் வைத்துப் பார்த்தார். 105·5 டிகிரி தானிருந்தது; இன்னும் சற்று நேரம் கழித்து அவர் வந்திருந்தால் 108 டிகிரி வரை கூடப் போயிருக்கும். அந்த ஜன்னல்கள் அடைத்த அறையில், நல்ல சித்திரை மாதத்தில், கணப்புக்கு நடுவில், கனக் கம்பளிக்கு அடியில், உயிர் போன சவத்திற்குக் கூட 110 டிகிரி சூடு ஏறிவிடும்.

அதிகம் சொல்வானேன்! நான் பிழைத்தது புனர் ஜன்மம்; எல்லாம் அந்தப் பரோபகாரி பஞ்சுவால்தான். — நான் பிழைத்ததைச் சொல்கிறேன். அந்தப் பதினைந்து நாள் என்னைப் படுக்கையில் போட்டு, ஷோடசோபசாரமும் செய்து, கால் பிடித்து, தலை பிடித்து, கீழ் வேலை செய்து, என் மனைவிக்கும் வீட்டு வேலைகளில் ஒத்தாசை செய்து அரும்பாடுபட்டு, என்னைக் கரையேற்றினார் பஞ்சு; நான் கரை யேறாமல் அப்படியே கண் மூடி இருந்தாலும், கடைசி ஈமச் சடங்கு வரையில் செய்து முடித்து விட்டுப் போயிருப்பார் என்பதில் எனக்குச் சந்தேகமில்லை. அந்த மனசு யாருக்கு வரும் பரோபகாரி பஞ்சுவைத் தவிர? எனக்குத் தெரிந்த ஒரு நண்பர் இருக்கிறார்; அவர் போலீஸ் உத்தியோகஸ்தர். யாருக்காவது உடம்பு சரியில்லை என்றும் அந்தப் பக்கமே பிளேக் காலரா வந்த இடம் போல் கருதி, இரண்டு மைல் தூரத்துக்குள் போக மாட்டார். பஞ்சுவா அப்படிச் செய்வார்? எனக்குப் பணிவிடை செய்து கொண்டிருக்கும்போது, ஒரு நாள் நான் ஏதேதோ பிதற்றினதாக என் மனைவி சொல்கிறாள்:

“அந்தப் பாவி தொலைந்தானா, இல்லையா? சனியன் — பீடை — மகா பாவி! ஜன்னலைத் திறந்து விடு—கம்பளியை எடுத்து எறி...” என்றெல்லாம் பிதற்றினேனாம். முதலில் சொன்ன நாமாவளிகள் பஞ்சுவைத் தான் குறிப்பிட்டன என்று என் மனைவி சத்தியம் செய்கிறாள்; அவள் இதுவரை அதிகமாக அனாவசியமாக என்னிடம் பொய் சொன்னதில்லை என்று நான் நம்புகிறேன். ஆனால் அந்த மகா பரோபகாரியையா நான் மகாபாவி என்றிருப்பேன்? என்ன தான் பாதை (ஜுரபாதை) பொறுக்க முடியாவிட்டாலும் அப்படியா சொல்லி விருப்பேன்? அதுவும் பஞ்சுவை? கடன்காரர்கள், மாமன், மச்சான், பங்காளி, வேளைசமயம் மனைவியைக்கூட, ஜுரத்தின் சாக்கில் இப்படி ஏசலாம்! பரோபகாரி பஞ்சுவையா? சே! சே! அவரை அப்படி நான் திட்ட வேண்டுமானாலும் அதற்குத் தகுந்த காரணம் இருக்க வேண்டுமே! நான் இப்படி எல்லாம் பிதற்றினேனே! மனிதர் கொஞ்சமாவது அசந்தாரா, அலுத்தாரா? இல்லை. அருகில் வந்து, “எந்தப் பாவி ஸார்! இங்கே ஒரு பாவியும் இல்லையே! நான்தானே இருக்கேன்! கொஞ்சம் அலட்டிக்காமே தூங்குங்கோ” என்று தாலாட்டித் தூங்க வைத்தார்.

எப்படியோ நானும் பிழைத்து எழுந்து நடமாடுகிறேன்.

** ** **

அது முதல் எனக்கும் பஞ்சுவுக்கும் நெருங்கிய நட்பு ஏற்பட்டு விட்டது. என் ஜலதோஷம் அவருக்கு ஒட்டிக் கொண்டால், அவர் பரோபகாரம் என்னை ஒட்டிக் கொண்டு, நான் அவரைப் பதினைந்து நாளில்லை, பதினைந்து மாதம் படுக்கையில் போட்டு, ஒரு கம்பளி இல்லை பத்து கம்பளி போர்த்தி, ஜன்னல் வாசல் கதவுகளை எல்லாம் அடைத்து, அறை பூராவும் “ஹாட் ஏர் கன்டிஷன்” செய்து அவருக்கும் பிரதியுபகாரம் செய்யக் காத்துக் கொண்டிருக்கிறேன்.

** ** **

இப்படிப்பட்ட பரம பரோபகாரியான ஒரு ஆத்மா இந்த உலகில் உஜ்ஜீவித்திருக்கிறதா என்று மூர்ச்சை போட்டு விழப் பார்க்கிறீர்கள். பரோபகார சிகாமணி பஞ்சுவை நேரில் காணத் துடிக்கிறீர்கள். கொஞ்சம் பொறுங்கள். அணுகுண்டு சக்தியைவிட வல்லமை வாய்ந்த அந்தப் பரோபகார சக்தி தற்சமயம் உடனே கொரியாவில் வேண்டியிருப்பதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. பஞ்சுவை அங்கு ஆகாய மூலம் பறக்க வைக்க ஏற்பாடாகி இருக்கிறது. அதற்கு முன்னின்று “பஞ்சு பரோபகாரக் கமிட்டி”க்கு நான் தலைமை தாங்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டிருக்கிறேன். எனக்குப் பக்கபலமாக ஸாயர் ரங்கநாதனும் காலியர் ஆத்மநாதனும் கூட்டுக்காரியதரிசிகளாக நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். உங்களாலான உதவியை எதிர் பார்க்கிறோம். உங்கள் நல்ல எண்ணத்தையாவது அனுப்புங்கள்.

என்ன? பஞ்சுவைப் பார்க்க வேண்டுமா? அவர் கொரியா போய் நல்லபடியாகத் திரும்பி வரட்டும். அங்கிருந்து இந்தோ சைனாவுக்கும் கூப்பிட்டாலும் கூப்பிடுவார்கள். அங்கிருந்து மேற்கு ஜெர்மனிக்குப் போக வேண்டி இருக்கலாம். பிறகு தென் அமெரிக்கா முதலிய நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்தாலும் செய்வார். அவர் எப்போது திரும்புவார் என்று சொல்ல முடியாது. அவசரமாகப் பார்க்கவேண்டுமானால் விமான நிலையத்துக்கு வந்து விடுங்கள், உங்களுடைய புகழ் மாலையுடன்!


தமயந்தி
கதைச் சித்திரம்
மணியம்.


மணியம்




மணியம்

அருமைப் பரிசு

கௌசிகன்

சாந்தினியின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. வியர்வையிலே நனைந்திருந்த அவள் மெல்லிய உடல் ஜில்லென்றிருந்தது. பூரண கர்ப்பிணியான அவள் ஆயாசத்தினால் கண்களைப் பாதி மூடிய வண்ணம் இருந்தாள்.

"அந்த விசிறியை இப்படித் தள்ளுங்கள் அப்பா!" என்றாள் சாந்தினி மெல்லிய குரலில்.

வால்மீகி ராமாயணத்தில் ஈடுபட்டிருந்த ரகுநாதன், புதல்வியின் குரலைக் கேட்டு, விசிறியுடன் அவள் படுத்துக் கொண்டிருந்த சாய்வு நாற்காலிக்கு அருகில் வந்தார். "சாந்தி என்னம்மா செய்கிறது! நெற்றியைத் துடைத்துக் கொள். ஏன் இவ்வளவு வியர்வை!" என்று கேட்டார் பரபரப்புடன்.

"ஒன்றுமில்லை அப்பா! மயக்கமாக வந்தது. விசாரப்படாதே" என்று தன் வெளுத்த உதடு வெளியே பிரிக்க முயன்று ஒரு பெருமூச்சு விட்டாள் சாந்தினி.

"நாம், என்னமோ, எல்லாம் நல்லபடியாக ஆகணும், ஏழைகளுக்கு அவன்தான் துணை!" என்றார் தகப்பனார். அவர் கலங்கிய கண்கள் சுவரில் மாட்டியிருந்த ஸ்ரீராமசந்திர மூர்த்தியின் படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தன.

விசிறியின் குளிர்ந்த காற்று சாந்தினியின் களைப்பைத் தணித்தது. பெஞ்சியில் பாதி படித்துவிட்டு வைத்திருந்த புத்தகத்தை எடுத்தாள். அதிலிருந்து ஒரு கடிதம் அவள் மார்பிலே விழுந்தது. அக்கடிதத்தைக் கையிலெடுத்தபோது அவள் முகத்திலேதான் எவ்வளவு பூரிப்பு!

அவள் கணவன் பாலகிருஷ்ணன் எழுதி இருந்த கடிதம்தான் அது. அது வந்து இரண்டு நாட்களாகி விட்டன. என்றாலும் இப்போதுதான் அதைப் பார்ப்பது போன்ற ஆவலுடன் அவள் குறு குறுத்த கண்கள் துவளித்துக் கொண்டிருந்தன.

அவன் கையெழுத்துக்கள் அவளோடு கனிவுடன் பேசின.

"என் அருமை சாந்தினி,

நீ என்னைவிட்டுப் பிரிந்துபோய் அறுபது நாளாகிறது. இல்லை, அறுபது வருஷங்கள் போல் தோன்றுகிறது எனக்கு. என்னால் உன் பிரிவைத் தாங்க முடியவில்லை. வீட்டில் இருந்தால் உன் நினைவு என்னை என்னமோ செய்கிறது. ஆபீஸிலோ வேலையே ஓடவில்லை. மேஜை மீதுள்ள பைல்கள் தூங்க ஆரம்பித்து விட்டன. ஒவ்வொரு நாளும் உன்னிடமிருந்து நல்ல செய்தி வரவேண்டுமே என்ற நெஞ்சுத் துடிப்புடன் நான் எழுந்திருக்கிறேன்.

சாந்தி, நீ பெற்றும் பிழைத்து மறுபடி என் ஆசைக் கிளியாக, அழகு மயிலாக வரவேண்டும் என்று நான் எத்தனை தெய்வங்களுக்குத் தெரியுமா வேண்டிக் கொண்டிருக்கிறேன்? உன் அப்பா, நீ ரொம்ப பலஹீனமாக இருப்பதாக எழுதி இருந்தார். ஆனால் நீ என்னமோ எனக்கு ரொம்பத் தைரியம் சொல்லி எழுதி இருக்கிறாய். இருந்தாலும், என்னுடைய மனதை ஏதோ ஒருவித பயம் வாட்டிக் கொண்டிருக்கிறது. உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள். லேடி டாக்டரிடம் போயிருந்தாயா?

சாந்தி! வரப்போவது நமது இரண்டாவது தீபாவளி இல்லையா? தீபாவளிப் பரிசாக நீ எனக்கு அளிக்கப் போவது ஆண் குழந்தையா, பெண் குழந்தையா? அடே! ஏன் உன் சிவந்த முகத்தை, வளைகாப்பு அணிந்த கைகளால் அப்படி மூடிக் கொள்ளுகிறாய்?

உன் விவரமான கடிதத்தை மிகுந்த ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

உன் அன்புக் கணவன்

பாலு."

கடிதத்தை மார்பிலே அணைத்துக் கொண்ட சாந்தினியின் இதழிலே புன்சிரிப்புப் பூத்திருந்தது. அவள் உள்ளத்திலே இன்பப் பொங்கல் வழிந்து கொண்டிருந்தது.

சாந்தினி இரண்டு நாளாக மாப்பிள்ளையின் கடிதத்தை அடிக்கடி படிப்பதைப் பார்த்து விட்டுத்தானோ என்னவோ ரகுநாதன் கேட்டார்.

"என்னம்மா சாந்தி, தீபாவளி ஒரு வாரம்தான் இருக்கிறது. மாப்பிள்ளையை வரச் சொல்லிக் கடிதம் எழுதட்டுமா! அதற்குள்ளே நீ பிரசவித்து விடமாட்டாய் என்று நான் நினைக்கிறேன். உனக்கும் அவனைப் பார்த்தால் கொஞ்சம் உடம்பு தெம்பாக இருக்கும்" என்றார்.

இதைக் கேட்டதும் சாந்தினியின் முகம் சட்டென்று சிறுத்து விட்டது.

"தலை தீபாவளிக்கு மாப்பிள்ளையை அழைத்துச் செய்த மரியாதைகளை நினைத்துக் கொண்டாலே மனம் குளிர்கிறது. நீங்கள் ஒரு கடிதம் போட்டதும் அவர் உடனே ஓடித்தான் வந்துவிடுவார்" என்றாள் ரோஷத்துடன். பழைய நினைவுகள் தோன்றி அவளைக் கலங்க வைத்து விட்டன.

அவளுக்கும் தன் கணவனைத் தீபாவளிக்கு அழைக்க வேண்டும் என்று ஆசைதான். ஆனால், பண்டிகையை இங்கே வந்து கொண்டாடும்படி அழைக்க அவளுக்கு என்னவோ வெறுப்பாக இருந்தது. சென்ற வருஷத்தில் நடந்த சம்பவங்களை அவளால் மறந்துவிட முடியவில்லை.

நெஞ்சின் ஆழத்திலே அடைந்து கிடந்த ஏக்கப் பெருமூச்சை இழுத்து வெளியேற்றினாள். வயிற்றிலே மிதந்து கொண்டிருந்த அவள் உயிரின் உயிர் நெளிந்தது. உடம்பை நெளித்துக் கொண்டாள். நினைவு சுழன்று கண்ணை இருட்டிற்று. அப்படியே சாய்ந்து கண்களை இறுக மூடிக் கொண்டாள் சாந்தினி.

★

'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்றும், வாய்க்கப் போகும் கணவன் எங்கே இருக்கிறானோ என்றும் தவம் கிடந்து தவித்துப் போய் விடவில்லை சாந்தினி. எல்லாப் பெண்களையும் போலத் தனக்கு வரப் போகும் புருஷனின் உருவத்தை உள்ளத்திலே உருவகப்படுத்திக் கொண்டு மகிழ்ந்திருந்தாள் அவள்.

ஒரு சமயம் அவள் தாயார் தன் கணவனின் மனத்திலே பெண்ணுக்குக் கல்யாண வயதாகி விட்டதென்ற கவலையை விதைத்தாள். ரகுநாதன் "நம் சாந்தினிக்கு அப்படி என்ன வயதாகி விட்டது!" என்று பதில் அளித்தார். அவசரமாகவே ஒரு பிள்ளையின் ஜாதகத்தை வாங்கிக்கொண்டு சாந்தினியின் ஜாதகத்தையும் கொடுத்தார்.

சாந்தினி மணப் பெண்ணாகி, மாலை போட்டுக்கொண்டு, அவள் மனத்திற்கு இசைந்த மன்மதனின் கரம் பிடிக்க வேண்டிய வேளை வந்துவிட்டபோது யார் அதிர்ஷ்டமாக இருந்தால்தான் என்ன! அந்த முதல் ஜாதகமே குதிர்ந்து விட்டது!

பெண்ணுக்குக் கல்யாணம் செய்ய வேண்டும் என்ற எண்ணமே இல்லாமல், எந்தவித ஏற்பாடும் செய்யாமலிருந்த ரகுநாதனுக்குச் சாந்தினியின் கல்யாணம் கூடி வந்தது ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தது; மற்றொருபுறம் தாங்க முடியாத கவலையாகவும் இருந்தது.

எப்படியோ, யார் காலைப் பிடித்தோ கடனை உடனை வாங்கிப் பெண்ணின் முகத்திலே பொங்கி நின்ற மகிழ்ச்சியை மங்க வைக்காமல் கல்யாணத்தை நடத்தி விட்டார் ரகுநாதன். சாந்தினியின் நெஞ்சம், தனக்கு வாய்த்த கணவனின் அழகிலே மயங்கி, தான் பாக்கியசாலி என்று நிமிர்ந்து கிடந்தது.

கல்யாணத்தைத் தொடர்ந்து ஆடி, ஆறு மாதம் என்று பல காரியங்கள் அடுத்தடுத்து வந்து ரகுநாதனின் அவல நிலைமைச் சம்பந்திகளின் முன்பு அம்பலமாக்கி விட்டன.

பாலகிருஷ்ணனின் பெற்றோர்கள் ஏழைமையான இடம் என்று தெரிந்துதான் சம்பந்தம் செய்தார்கள். ஆனால் ரகுநாதன் கல்யாணத்தைப் பட்டாகச் செய்ததைப் பார்த்தவர். சாந்தினி மூத்த பெண் ஆனதால், மேலும் அதிகச் சீர்கள் செய்வார் என்று ஆசைப் பட்டார். ஆனால் அவர்களின் ஆசையைக் காப்பாற்ற முடியவில்லை ரகுநாதனால்.

ஆகவே, கல்யாணத்துக்குப் பிறகு செய்ய வேண்டிய சீர் வகைகளில் சம்பந்தினியிடையே மனஸ்தாபமும், குற்றச்சாட்டுகளும் அதிருப்தியும் வளர ஆரம்பித்தன. அதற்காகச் சாந்தினியை அவள் மாமியார் ஏசவில்லை. இடித்துக் காட்டவில்லை. எப்படி இருந்தாலும் அந்தப் பெண் தங்கள் வீட்டுப் பெண்ணாகி விட்டாள் என்ற விவேகத்தோடு மருமகளிடம் அன்பாகவே நடந்து கொண்டாள்.

கணவன் பாலகிருஷ்ணனும் மனைவியிடம் உயிரையே வைத்திருந்தான். தன் அப்பாவின் இல்லாமையை நினைத்தோ, தன் கணவனுக்குத் தங்கள் வீட்டிலிருந்து தருத்த மரியாதைகள் கிடைக்காததை எண்ணியோ எப்போதாவது சாந்தினி கண் கலங்குவது உண்டு. அப்போது பாலகிருஷ்ணன், "இதோ பார், சாந்தி! அசடு மாதிரி நீ இதற்கெல்லாம் வருத்தப்படக் கூடாது. சீர் செனத்தி, மரியாதை மிரியாதை எல்லாம் பெரியவர்கள் விஷயம். அவர்களுக்குள் ஆயிரம் இருக்கும். நமக்கு என்ன அதைப் பற்றி. நான் உன்னை அன்புடன் நடத்தாவிட்டால் அல்லவா நீ

கண் கலங்க வேண்டும்!" என்று வாத்சல்யத்துடன் கூறி, அவள் முகத்தை நிமிர்த்தி கசிந்த கண்ணீரைத் துடைப்பான்.

கணவனின் அந்த எல்லையற்ற அன்பிலே சாந்தினிக்குத் தன் தகப்பனார்மீது கூடக் கோபம் வரும். இவ்வளவு உயர்ந்த குண முள்ள மாப்பிள்ளைக்கு எத்தனை கஷ்டப் பட்டாவது செய்ய வேண்டாமா என்று. வளர்த்த இடத்தின் சீலம் தெரியாமல் வருத்தப்பட்டுக் கொள்வாள் அவள்.

கல்யாணத்தின்போதே, பின்னால் மாப்பிள்ளைக்கு ஒரு மோதிரம் செய்து போடுவதாக ஒப்புக் கொண்டிருந்தார் ரகுநாதன். ஆனால் கல்யாணத்துக்குப் பிறகு வந்த பல சந்தர்ப்பங்களிலும் அவர் அதை நிறைவேற்றவில்லை. பிறகு செய்வதாகச் சாக்குச் சொல்லி, கடைசியில், தீபாவளிக்குக் கட்டாயம் செய்து போட்டு விடுவதாக ஒப்புக் கொண்டிருந்தார்.

அவர் ஒப்புக் கொண்டபோது தீபாவளிக்கு நாலைந்து மாத மிருந்தது. அதற்குள் அரைப் பவுனுக்கு எப்படியாவது ஒரு மோதிரம் செய்து விடலாம் என்ற தைரியத்துடன்தான் தீபாவளி வரைக்கும் வாய்தா கேட்டிருந்தார்!

ஆனால் அந்த நாலைந்து மாதங்களில் காலம் எத்தனையோ மாறுதல்களைச் செய்வதற்குத் திட்டமிட்டிருந்தது. சாந்தினி தன்னை அதிர்ஷ்டசாலி என்று எண்ணி இறுமாந்திருந்தது கண் பட்டு விட்டது போலப் பாலகிருஷ்ணனுக்குத் திடீரென்று வேலை போய்விட்டது. அவன் வேலை பார்த்து வந்த கம்பெனி நஷ்டமடைந்து விடவே, அதை மூடி விட்டார்கள். பாலகிருஷ்ணன் வீட்டோடு இருந்தான். பல இடங்களில் வேலைக்கு முயற்சித்தும் பலன் கிடைக்கவில்லை.

கணவனுக்குத் திடீரென்று வேலை போனது சாந்தினியின் மனத்தை உறுத்த ஆரம்பித்தது. தான் வந்த அதிர்ஷ்டம் என்ற பேச்சும் ஏச்சும் கிளம்புமோ என்று நடுங்கினாள். இதே கவலையாக அவள் உற்சாகமிழந்து குன்றிப் போக ஆரம்பித்தாள். ஆனால் சாந்தினி நினைத்தபடி அந்த வீட்டில் யாருமே அவள் அதிர்ஷ்டத்தைக் குறை கூறிப் போகவில்லை. அதற்குப் பதிலாக அவள் கணவன் அவளிடம் அதிகமாக அன்பு காட்ட ஆரம்பித்தான்.

★

ரகுநாதன் திடீரென்று விஷ ஜுரத்தினால் பிடிக்கப்பட்டு ஒரு மாதம் படுத்த படுக்கையாக விழுந்து விட்டார். அந்த ஒரு மாதக் குடும்பச் செலவுக்கும் மருந்துக்கும் டாக்டருக்கும் கடன் வாங்கிய தொகையைப் பல மாதங்கள் அவர் தவணை போட்டுச் செலுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது.

இந்த நிலையில் தீபாவளி அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே நகர்ந்து வந்து கொண்டிருந்தது. ரகுநாதனுக்கும் சம்பந்தியின் முகத்தில் விழிக்கவே வெட்கமா இருந்தது. எப்படி விழிப்பது! சாதாரணமாய்ப் பிள்ளைக்கு வேஷ்டி வாங்கித் தீபாவளியைக் கொண்டாடவே என்ன செய்வது என்ற கவலையில் ஆழ்ந்து போயிருக்கும் போது, மோதிரத்தைப் பற்றி நினைக்கவும் அவர் மனம் நடுங்கியது.

தீபாவளி வர இருபது நாட்கள்தான் இருந்தன. அப்போது ரகுநாதன் தம்முடைய தங்கைக்கு ஒரு கடிதம் எழுதினார். குழந்தை சாந்தினியை, அவள் புருஷன் வீட்டிலிருந்து அழைத்து வந்து, அவள் வீட்டில் பத்து நாள் வைத்துக் கொண்டிருக்கும்படியும் பிறகு தான் வந்து அவளை ஊருக்குக் கூட்டி வருவதாகவும் எழுதியிருந்தார். இந்த ஏற்பாட்டின் நோக்கம், தான் சம்பந்தியை நேரில் சந்திப்பதிலிருந்து தப்பித்துக் கொள்வதற்குத்தான். நேரில் சந்தித்தால் மோதிரத்தைப் பற்றி அவர்கள் பிரஸ்தாபிப்பார்கள் அல்லவா!

தீபாவளி சமயத்தில் ஒரு கடிதத்துக்கு இரண்டு கடிதமாக எழுதி மாப்பிள்ளையை அழைத்து, ஏதோ தம்மாலானதைச் செய்து தீபாவளியை ஓட்டி விடலாம் என்று திட்டமிட்டார் ரகுநாதன்.

ஆனால் அவர் போட்ட அந்தத் திட்டம் எத்தனை பெரிய மனஸ்தாபங்களையும், வேதனையையும் உண்டாக்கி வருத்தப் போகிறது என்பதை அவர் கண்டாரா!

ரகுநாதனின் தங்கை கோமதி, சாந்தினியை அழைக்க வந்தபோது பாலகிருஷ்ணனின் தாயார் பார்வதி மறுத்துச் சொல்லவில்லை. கல்யாணமானதிலிருந்து தம்மிடமே விட்டு வைத்திருந்த பெண்ணைக் கூப்பிடும் போது அனுப்பாமலிருக்கலாமா! மனத்திருப்தியுடனே, சந்தோஷமாகவே அத்தையுடன் மாட்டுப் பெண்ணை அனுப்பி வைத்தாள்.

ஆனால் அனுப்பும் போது, "உங்கள் அண்ணா என்ன இந்தப் பக்கமே எட்டிப் பார்க்க வில்லை!" என்று கோமதியைக் கேட்காமல் இருக்கவில்லை பார்வதி. அதற்குக் கோமதி தன் அண்ணாவைக் காட்டிக் கொடுக்காமல் ஊருக்காக ஏதோ பதில் சொல்லி விட்டுச் சாந்தினியை அழைத்துக் கொண்டு போய் விட்டாள்.

தீபாவளி சம்பந்தமாகவோ, மோதிரத்தைப் பற்றியோ ரகுநாதனிடமிருந்து யாதொரு கடிதமும் வராதது பார்வதியின் கோபத்தை நாளுக்கு நாள் வளர்த்து வந்தது. தன் பிள்ளைக்கு வேலை போனதால் தான் ரகுநாதன் அலட்சியமாக இருக்கிறார் என்று பாலகிருஷ்ணனிடம் அடிக்கடி கூறத் தொடங்கினாள். பார்வதியின் வார்த்தைகள், பாலகிருஷ்ணனுக்கு ரகுநாதன் மீது மிகுந்த வெறுப்பேற்படும்படி செய்தன.

பாவம், ரகுநாதன் தம் மகள் முகத்தில் விழிக்க வெட்கப்படுகிறார்; தம்மால் சொன்னபடி செய்ய முடியவில்லையே என்ற வேதனையிலே வேகி





“......சாந்தினி! எதற்காக இப்படி அழுது கொண்டே இருக்கிறாய்? இப்படிச் சாப்பிடாமல் கொள்ளாமல் பட்டினி கிடந்தால் உடம்பு என்னத்துக்கு ஆகும்?.. சாந்தி, உங்கள் வீட்டிலே கூட இந்தத் தனிமையின் இன்பம் கிடைக்காது. சந்தோஷமாயிருக்க வேண்டிய சமயத்தில் ஏன் கண்ணீர் விடுகிறாய்?...”



வருவதற்குச் சங்கோசப்படுகிறார் என்பது, ஆத்திரத்தை விறுக வளர்த்துக் கொண்டிருக்கும் பார்வதிக்கும் பாலகிருஷ்ணனுக்கும் எங்கே தெரியப் போகிறது!

*

தீபாவளிக்கு இரண்டு நாட்கள்தான் இருந்தன. தன் ஒரே பிள்ளையின் தலை தீபாவளி இப்படி உபசரிப்பாரற்று இருப்பதை எண்ணிக் கொதித்துக் கொண்டிருந்தாள் சம்பந்தியம்மாளான பார்வதி.

ரகுநாதன் இரண்டு கடிதம் போட்டிருந்தார். இரண்டிலும் மாப்பிள்ளையைக் கட்டாயம் தீபாவளிக்கு அனுப்பி வைக்க வேண்டுமென்று பணிவுடன் வேண்டிக் கொண்டிருந்தார். ஆனால் அதில் மோதிரத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவே இல்லை.

அன்று பதினைந்து வயதுச் சிறுவனான அவன் மைத்துனன் கணபதி ஒரு கடிதத்துடன் அவன்முன் நின்றபோது பாலகிருஷ்ணனுக்கு ஆத்திரம் பொங்கியது. கடிதத்தை வாங்கி மனத்துக்குள் படித்தான்.

“அன்புள்ள மாப்பிள்ளைக்கு அநேக ஆசீர்வாதத்துடன் எழுதியது.

தீபாவளிக்கு அவசியம் வரும்படி அம்மாவுக்கு எழுதி யிருக்கிறேன். முன்பே ஒரு தடவை எனக்கு வாங்கும் வேஷ்டி துணி மணிகளுக்கு என்னிடம் ஒரு வார்த்தை சொல்லி விட்டு வாங்குங்கள், எனக்குப் பிடித்தமானதை வாங்கிக்கொள்ள அது சௌகரியமாக இருக்கும் என்று சொல்லி யிருக்கிறீர்கள். ஆகவே கணபதியிடம் ஏதோ என்னாலானதைக் கொடுத்தனுப்பி இருக்கிறேன். தீபாவளிக்கு உங்களுக்குப் பிடித்தமான உடைகளை வாங்கிக் கொண்டு அவசியம் பண்டிகையைக் கொண்டாட வந்து விடுங்கள். சாந்தி உங்கள் வரவுக்காக ஆவலுடன் காத்திருக்கிறாள். —ரகுநாதன்.”

கடிதத்தைப் படிக்கும்போதே பாலகிருஷ்ணனின் முகத்தில் கோபம் ஜ்வலிக்க ஆரம்பித்து விட்டது. அத்திம்பேரின் கடுகடுப்பான முகத்தைக் கண்டு நடுங்கியபடியே இரண்டு பத்து ரூபாய் நோட்டுக்களைக் கையில் ஏந்தியபடி நின்று கொண்டிருந்தான் அவன் மைத்துனன் கணபதி. அந்த இருபது ரூபாய்களைக் கண்ட பாலகிருஷ்ணனுக்கு அடக்க முடியாத ஆத்திரம், தாங்க முடியாத கோபம் பற்றிக்கொண்டு வந்தது.

“போடா, போய் உன் அப்பாவிடமே அந்தப் பதினாயிரம் கட்டி வராகனைக் கொண்டு போய்க் கொடு ...போ! அத்திம்பேர் தீபாவளிக்கு வர மாட்டேன் என்று சொல்லி விட்டார் என்று சொல்லு போ” என்று கத்திவிட்டு நகர்ந்தான்.

மகனின் கூச்சலைக் கேட்டு வெளியே வந்த பார்வதி விஷயத்தை அறிந்து கொண்டாள். கணபதி கையில் பணத்துடனும் சோர்ந்த முகத்துடனும் வந்த வழியே திரும்பிப் போவதைக் கண்டாள்.

ரகுநாதனுக்கு அந்த இருபது ரூபாய்கள்தான் அப்போது இருநூறு ரூபாய்களாக இருந்தது. அதை முழுசாகக் காணவே அவர் என்னவோ அல்லாட வேண்டி இருந்தது. சோதனை போல இரண்டு நாள் முன்பு அவர் தமையனார் வேறு வடக்கே இருந்து ஒரு மாத லீவில் குடும்பத்துடன் வந்து இறங்கி யிருந்தார். அண்ணாவைப் பார்த்து எத்தனையோ வருஷங்கள் ஆகின்றன. வராதவர் வந்திருக்கிறார் என்று அவர் முன்னிலையில் தன் கஷ்டத்தையும் இல்லாமையையும் காட்டிக் கொள்ள விரும்பவில்லை ரகுநாதன். தாராளமாகவே செலவழித்துக் கொண்டிருந்தது. தம்பி பெண்ணின் தலை தீபாவளி வைபவத்தை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் ரகுநாதனின் அண்ணாவும் மன்னியும். இந்த நிலையில் திரும்பி வந்த கணபதி சொன்னதைக் கேட்டு அப்படியே இடிந்து போய் உட்கார்ந்து விட்டார் ரகுநாதன்.

மாப்பிள்ளை தீபாவளிக்கு வரவில்லை என்பது அண்ணாவுக்குத் தெரிந்தால் எத்தனை அவமானம்! தன் பெண்ணுக்கு எத்தனையோ மதிப்பான, கௌரவமான இடம் கிடைத்திருப்பதாகப் பெருமையாக எழுதி யிருந்தார் அண்ணாவுக்கு. இப்போது தன் உடன் பிறந்தவரின் முன்பு மாப்பிள்ளை வீட்டாரின் கோபத்தைப் பற்றி எப்படிச் சொல்வது! சொல்லவேகூடாது. இன்னும் யோசிப்பதால் மகளின் சந்தோஷமும் தன் குடும்ப கௌரவமும் பாதிக்கப்படும் என்பதை எண்ணி மாப்பிள்ளையை நேரில் போய் அழைத்துக்கொண்டு, வரும் வழியிலேயே குழந்தை சாந்தியையும் கூட்டி வருவது என்ற தீர்மானத்துடன் இரவு வண்டிக்கே கிளம்பி விட்டார் ரகுநாதன். சம்பந்தியம்மாளிடம் தம் நிலைமையை எப்படிப் பேசிச் சமாளிப்பது என்பதைப் பற்றியே வழி எல்லாம் அவர் சிந்தனை ஓடிக் கொண்டிருந்தது.

ரகுநாதன் எப்படியோ பார்வதியம்மாளின் மனத்தை இளகச் செய்து விட்டார். தன் தமையனார் வந்திருக்கும் இந்தச் சமயத்தில் தன் கௌரவத்தைக் காப்பாற்றும்படியும் தன் தவறுகளைப் பொறுத்து மாப்பிள்ளையை அனுப்பித் தரும்படியும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

ரகுநாதன் நேரில் வந்த உடனேயே பார்வதியம்மாளின் கோபம் பாதி தணிந்து விட்டது. அவளுக்கு நல்ல மனம். விட்டுக் கொடுக்கும் மனப்பான்மை உண்டு. “நாலைக்குக் காலம் போகும் வார்த்தை நிற்கும்; நல்ல நாளும் அதுவுமாகப் பிறர் மனத்தை நோகச் செய்யலாமோ” என்று பாலகிருஷ்ணனை அனுப்பி வைத்தாள். ஆனால் உள்ளூற இப்படி நினைத்தாலும் வெளிக்குக் கோபம் தணியாதவள் போலத் தான் அவள் நடந்து கொண்டாள்.

ரகுநாதனுக்கு எவ்வளவோ மகிழ்ச்சி; இந்த மட்டிலாவது மாப்பிள்ளையை அனுப்பச் சம்மதித்தார்களே என்று.

“தாமரைக்குளம் ஸ்டேஷனில் இறங்கிச் சாந்தியை அவள் அத்தை வீட்டிலிருந்து அழைத்துக் கொண்டு அடுத்த வண்டிக்கு ஊருக்குப் போகலாம்” என்றார் ரகுநாதன் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்ததும்.

பாலகிருஷ்ணன் முகம் வியப்பால் விரிந்தது. “இன்னும் அவள் அத்தை வீட்டில் தான் இருக்கிறாளா?” என்றான்.

“ஆமாம். கோமதிக்கு ரொம்ப ஆசை. குழந்தை இங்கேதான் இருக்கட்டுமே.

தீபாவளிக்கு முன்னும் வந்து அழைத்துக் கொண்டுபோ, என்றான். அதனாலென்ன..." என்று சாமர்த்தியமாகச் சமாளிக்கப் பார்த்தார் ரகுநாதன்.

"அவன் ஊரில் இருந்திருந்தால் இந்த தூரத்துக்கு விட்டிருக்க மாட்டான். இந்த தூரம் இவன் என் மனத்திலே வேதனையை வளர்த்திருப்பது அவனுக்குத் தெரியாது போயிருக்கிறது" என்று அவன் உள்ளம் கூறியது.

★

தாமரைக்குளம் ஸ்டேஷனில் வண்டி நின்றது. பாலகிருஷ்ணன் தான் ஸ்டேஷனிலேயே இருப்பதாயும் அவர் மட்டும் போய்ச் சாந்தினியை அழைத்து வரும்படியும் சொல்லி விட்டான். ரகுநாதன் தன் தங்கையின் வீட்டுக்கு அவனை வரும்படி எவ்வளவோ வற்புறுத்தி அழைத்தார். பாலகிருஷ்ணன் பிடிவாதமாக மறுத்து விடவே, மாப்பிள்ளையின் கோபத்தை வளர்க்க மனமில்லாமல் மௌனமாக அவர் மட்டும் ஊருக்குள் போனார்.

இவனை எதிர்பார்த்து வழிமேல் விழி வைத்துக் காத்துக் கிடக்க வேண்டிய மனைவியை, இவன் இப்போது அவள் வரும் பாதையைப் பார்த்துக் கொண்டு ஸ்டேஷனில் காத்துக் கிடந்தான். பாலகிருஷ்ணனுக்கு ஆத்திரமாக வந்தது.

ஸ்டேஷனுக்குள் நுழைந்து கொண்டிருந்தாள் அவன் மனைவி சாந்தினி. அவள் நடையிலே ஒரு பரபரப்பு இருந்தது. முகத்திலே பயமும் வேதனையும் வந்து பின்னி ஓடி இருந்தன. அவள் கண்கள் பாலகிருஷ்ணனைத் தேடித் தவித்தன. ரகுநாதன் தன் பெண்ணிடம் நடந்ததைச் சொல்லி இருக்க வேண்டும். அதனால்தான் சாந்தினியின் முகத்திலே இந்தக் கலவரம். ரகுநாதன் முகத்திலும் சிறிதும் களையில்லை.

பாலகிருஷ்ணனுக்கு மனைவியைப் பார்த்ததும் ஆறுதலாகத் தான் இருந்தது. ஆனால் அதே சமயத்தில் அவன் ஆத்திரமும் வீறாப்பும் மேலோங்கி நின்றன. குழந்தையை இறுக்கிக் கொண்டு மார்பிலே கைகளைச் சேர்த்துக் கட்டியபடி எங்கேயோ பார்த்துக் கொண்டு நின்றான், அவளைக் கவனிக்காதது போல.

சாந்தினி வேகமாக வந்தவள், அவனைக் கண்டதும் நடையை நிதானப்படுத்திக் கொண்டு மெள்ள மெள்ள அவன் அருகில் போய் நின்றாள். அவளால் பேச முடியவில்லை. என்னபேசுவது! எதைக் கேட்பது! கோபத்துடன் நிற்கும் கணவனைப் பார்க்கவே பயமாக இருந்தது அவளுக்கு. அவன் ஆத்திரத்தில் ஏதாவது கத்திவிட்டால்!... அந்தப் பொது இடத்தில் நாலு பேர் முன்பு...அவள் அருகே கொஞ்ச நேரம் நின்றாள். பாலகிருஷ்ணன் திரும்பக்கூட இல்லை. பிறகு சாந்தினி கொஞ்சம் தள்ளிப் போய் ஒரு மரத்தடியில் நின்று கொண்டாள். வண்டி வருவதற்கு இன்னும் அரை மணி நேரமிருந்தது.

ரகுநாதன் பிளாட்பாரத்தின் கோடியில் உள்ள பெஞ்சியில் இருந்து போய் உட்கார்ந்திருந்தார். வரும் வழியில் அவர் பெண் அவரை ரொம்பக் கோபித்துக் கொண்டு விட்டது மட்டுமல்ல, அவள் கண்ணீரும், மாப்பிள்ளையின் கல் மனமும் அவர் இதயத்தைப் பிளந்து கொண்டிருந்தன. இந்த உலகத்தில் பொருளில்லாதவர்களுக்குப் பெண் பிறக்கவே கூடாது என்ற விரக்தி விசாரத்தில் ஈடுபட ஆரம்பித்தது அவர் மனம்.

பாலகிருஷ்ணன் திரும்பிச் சாந்தினியைப் பார்த்தான். அழுது அழுது கண் சிவந்து முகம் வீங்கி இருந்தது.

அவள் வேதனையும் அழுகையும் பாலகிருஷ்ணனின் நெஞ்சிலே பளீர் என்று ஒரு வலியை உண்டாக்கிற்று. பாவம், அவள் தகப்பனாரின் தவறுக்கு அவளை ஏன் இப்படி வதைக்க வேண்டும் என்று எண்ணினான். அவள் அருகில் போய்ப் பரிவுடன் அவள் கண்ணீரைத் துடைத்து அவளுக்கு ஆறுதல் சொல்லி அழுகையை நிறுத்த வேண்டும் என்று நினைத்தான். ஆனால் ஆண் கௌரவம் அந்தக் கட்டத்தில் இறங்கிவிடுமா! போலி வீறாப்பைப் புறக்கணிக்க முடியாமல் நிம்மதி இழந்து தவிக்க ஆரம்பித்தான்; அவள் கால் கடுக்க நிற்பது அவனுக்குப் பொறுக்கவில்லை. உள்ளத்தைக் குத்திற்று.

சட்டென்று அவள் பக்கம் திரும்பி, "நின்று கொண்டு அழ வேண்டாம். உட்கார்ந்து கொண்டே அழலாம்" என்றான் கோபத்துடன்.

"நான் ஒன்றும் அழவில்லை" என்றாள் மெல்லிய குரலில் சாந்தினி. ஆனால் அதைச் சொல்லி முடிப்பதற்குள் அழுகை குமுறிக் கொண்டுதான் வந்தது அவளுக்கு. முகத்தை வேறு புறம் திருப்பிக் கொண்டு உதிரும் கண்ணீரைப் புடவைத் தலைப்பால் ஒத்திக் கொண்டாள். பாலகிருஷ்ணனின் வேதனையை அறிந்தது போல ரயில் வண்டியும் வந்தது.

ஜன்னலோரத்தில் போய் மௌனமாக உட்கார்ந்து கொண்ட பாலகிருஷ்ணனின் அருகில் போய்ச் சாந்தினி அமைதியாக உட்கார்ந்து கொண்டாள்.

அவள் ஸ்பரிசம் பாலகிருஷ்ணனின் உள்ளக் கொதிப்பைக் குளிரப் பண்ணி விட்டது. இறுகி இருந்த அவனுடைய உள்ளமும் உடலும் மெள்ள மெள்ள நெகிழ ஆரம்பித்தன.

கணவனின் முகத்திலே நிலவிய நிதானத்தையும் அமைதியையும் கண்டு சாந்தினி அவன் உள்ளத்தைப் புரிந்துகொண்டு விட்டாள். அவள் கண்ணீரும் உலர்ந்து, முகத்திலும் வழக்கமான புன் முறுவல் பூத்து மலர ஆரம்பித்தது.



★

ரகுநாதன் வீட்டில் மாப்பிள்ளைக்கு உபசாரம் பலமாகவே இருந்தது. ரகுநாத

வின் தலைமையனார் அவனை எதிர்கொண்டழைத்தார். கல்யாணத்தின் போது அவர் வரவில்லையாதலால் முதலில் மாப்பிள்ளைக்கு அவரைத் தெரியவில்லை. அவரே தன்னை அறிமுகம் செய்து கொண்டு பேசியதும், பாலகிருஷ்ணன் வந்த இடத்தில் புது மனிதர்களின் முன்பு தன் மனஸ்தாபத்தைக் காட்டிக் கொள்ள வேண்டாம் என்று அவரோடு சிரித்த முகத்துடன் பேசினான். ரகுநாதனுக்கும் தன் மாப்பிள்ளையின் சௌஜன்யம் கொஞ்சம் இதமாக இருந்தது.



தீபாவளி அன்று காலையில் எல்லாம் யந்திரம்போல நடந்தது. மாமனார் இருபது ரூபாய்க்குள் வாங்கி இருந்த வேஷ்டியை மாப்பிள்ளையிடம் கொடுத்தார். பாலகிருஷ்ணன் நாற்பது ரூபாயில் தன் மனைவிக்கு வாங்கி இருந்த பட்டுப் புடவையை எடுத்துப் பெருமிதத்துடன் தாம்பாளத்தில் வைத்தான். புடவையை வாங்கிக் கொண்ட சாவித்ரிக்கு நெஞ்சு பொங்கிப் பூரித்துப் போயிற்று. ஆனால் உடனே, தன் வீட்டாரால் இதற்குத் தகுந்தபடி தன் கணவனுக்கு மரியாதை செய்ய முடியவில்லையே என்ற நினைப்பு வந்து அவள் மகிழ்ச்சியை மங்க வைத்தது.

ஏதோ நல்லபடியாக இந்த மட்டுமாவது தலை தீபாவளி முடிந்து தன் கௌரவம் காப்பாற்றப்பட்டதே என்று ரகுநாதன் மகிழ்ந்து போனார். காலையில் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் வந்து மாப்பிள்ளை வந்ததை விசாரித்தபோது ரகுநாதன் பெருமையாகப் பதில் சொன்னார்.

தமையன் குடும்பத்தோடு வந்திருந்தாலும், பண்டிகை வருகிறதே என்றும் ரகுநாதன் காய்கறி, இலை முதலிய சாமான்களை மொத்தமாக இரண்டு நாள் முன்பே வாங்கிப் போட்டிருந்தார். வாழை இலை இரண்டு நாள் பழக்கத்தில் கொஞ்சம் வாடி இருந்தது. இலை போட்டவர்களாவது பார்த்துப் போட்டிருக்கலாம். வீட்டில் அதிகம் நாலுபேர் வந்து விட்டாலே சிலருக்குக் கையும் காலும் ஓடாது. கிழிந்து, நுனி வாடிக் காய்ந்த ஒரு இலையும் பந்தியில் போடப் பட்டிருந்தது. எல்லோரும் இலையில் உட்கார்ந்து கொண்டே பாலகிருஷ்ணனையும் சாப்பிட அழைத்தார்கள்.

"வாருங்கள் மாப்பிள்ளை, இப்படி உட்காருங்கள்" என்று உபசாரம் செய்து அழைத்துத் தன் அருகில் அமர்த்திக் கொண்டார் அவள் பெரிய மாமனார். ஆனால் பாலகிருஷ்ணன் உட்கார்ந்த இடத்திலா கிழிந்த, வாடிய அந்த இலை இருக்க வேண்டும்! அவன் உட்கார்ந்த பிறகாவது யாராவது கவனித்து மாற்றி இருக்கலாம். அதுவும் இல்லை. பெண்டுகள் அவசர அவசரமாக இலையில் பரிமாறிக் கொண்டு போனார்கள்.

கொல்லைப் பக்கத்தில் ஏதோ காரியமாக இருந்த சாவித்ரி தற்செயலாகக் கூடத்துக்கு வந்த போதுதான் பந்தியைப் பார்த்தாள்.—இல்லை, தன் கணவன் முகத்தைப் பார்த்தாள். உடனே அவளுக்குப் பகீர் என்றது. அவன் முன்னாலுள்ள கிழிந்து வாடிய இலையைப் போல அவள் உள்ளமும் வாடிவிட்டது.

"அடாடா! இப்படி வாடின இலையையா அவருக்குப் போட்டார்கள்" என்று தவித்துப் போய்ச் சமையல் கட்டில் உள்ளவர்களிடம் எரிந்து எரிந்து விழுந்து கொண்டிருந்தாள் சாவித்ரி.

இதற்குள் இலையில் அன்னம் பரிமாறி விட்டார்கள். ஒரு பாட்டி நெய் வார்த்துக் கொண்டு போனாள். அப்போதுதான் பெண்டுகளின் கவனம் மாப்பிள்ளையின் கிழிந்த இலை மீது சென்றது. எல்லோரும் "இலை போட்டவர்கள் பார்த்துப் போடக் கூடாதோ...!" என்று பிறரைக் குற்றவாளியாக்கிக் கசமுச என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். புருஷர்களுக்கு இதொன்றுமே தெரியாது. அவரவர் இலையில் உள்ளதைப் பக்குவமாகப் பிசைவதில் ஈடுபட்டிருந்தனர்.

ஆனால் பாலகிருஷ்ணன்...!

வாடின இலையில் வட்டித்திருந்த வெண்மையான அன்னத்திலிருந்து நிதானமாக, ஒவ்வொன்றாக எதையோ பொறுக்கிக்கொண்டிருந்தான், குனிந்த தலைநிமிராமல். மாப்பிள்ளை இலையைத் தாண்டிச் சாம்பார் வராததைக் கண்ட மாமனார் திரும்பிப் பார்த்தார். பாலகிருஷ்ணனின் செய்கை அவரைத் திகைக்க வைத்தது.

"என்ன...என்ன!" என்று பரபரப்புடன் விசாரித்தார்.

"ஒன்றுமில்லை, மாப்பிள்ளைக்கு ஆயுள் விருத்தி யாகட்டுமே என்று எறும்பை நெய்யோடு காய்ச்சி ஊற்றி இருக்கிறீர்கள். அதனால்தான் அதைப் பொறுக்கிக் கொண்டிருக்கிறேன்..." என்றான் பாலகிருஷ்ணன் நிதானமாக.

அவன் பதிலைக் கேட்க, அந்த வீடே மூச்சை அடக்கிக் கொண்டு நிசப்தமாக இருந்தது. ஒருவர் முகத்திலாவது சலனமில்லை. ரகுநாதன் முகம் வெளுக்கக் கண்களில் நெருப்புப் பொறி பறக்க, "யார் நெய் வார்த்தது" என்று கத்தினார்.

சாவித்ரிக்கு மூச்சே நின்று விட்டது. கிழிந்த இலைக்காக உள்ளே சத்தம் போட்டுக் கொண்டிருந்தவளுக்கு இந்தச் செய்தி எப்படி இருக்கும்! படபடப்புடன் வெளியே வந்தாள். கணவன் முன்னால் வந்து குனிந்து, "அந்த இலையை அப்படியே நகர்த்தி விடுங்கள், நான் வேறு இலை போட்டுப் பரிமாறுகிறேன்" என்று துக்கம் தொண்டையை அடைக்கச் சொல்லிக் கொண்டே அவள் அந்த வாடின இலையைத் தொடப் போனாள்.

இப்போது தான் பாலகிருஷ்ணனுக்கு ரௌத்ராகாரமாகக் கோபம் வந்தது.

"தொடாதே இலையை. போ உள்ளே" என்று கர்ஜித்தான். நிமிர்ந்து அவளை அவன் பார்த்த பார்வையில் சாவித்ரி நடு நடுங்கிப் போய் ஒன்றும் பேசாமல் மௌனமாக உள்ளே போய் விட்டாள்.

"ஏதோ தெரியாமல்......அதை அப்படியே நகர்த்தி விடுங்களேன்" என்று சொல்லிக் கொண்டிருந்த மாமனாரிடம் அவன் நிதானமான குரலில், "நெய்க் கின்னத்துக்கு எறும்பு வருவது சகஜம்தானே. அதனால் பரவாயில்லை" என்று ஒன்றுமே நடக்காதது போலச் சாப்பிட ஆரம்பித்து விட்டான்.

உள்ளே சாவித்ரி நெஞ்சுவெடிக்கக் குமுறிக் கொண்டிருந்தாள். தன் கணவனுக்கு ஏற்பட்ட அவமானத்தை அவளால் தாங்கவே முடியவில்லை. வாயைப் பொத்திக் கொண்டு விம்மினாள்.

சாவித்ரியைச் சாப்பிட அழைத்த போது அவள், தான் சாப்பிடப்போவதில்லை என்று ஒரே பிடிவாதமாக மறுத்து விட்டாள். யார் கூறிய சமாதானமும் அவள் அழுகையைக் கட்டுப் படுத்தவில்லை.

★

சாப்பாடாகி அரை மணி யானதும் கைக்கடிகாரத்தைப் பார்த்துக்கொண்டே, "சரி, நான் இரண்டு மணி வண்டிக்கு ஊருக்குக் கிளம்புகிறேன். வேலை இருக்கிறது" என்று எழுந்தான் பாலகிருஷ்ணன்.

"என்ன அதற்குள்ளேயா! நாளைக்குப் போகலாமே" என்று மென்று விழுங்கினார் பெரிய மாமனார்.

"இல்லை. நாளை வரை இங்கு என்ன வேலை! பண்டிகைக்கு வரவில்லை என்ற பேச்சுக்கு இடமில்லாமல் வந்தாகி விட்டது. பண்டிகை முடிந்த பிறகு கிளம்ப வேண்டியதுதானே!" என்று கூறிக் காலில் செருப்பை மாட்டிக் கொண்டான்.

அதே சமயம் உள்ளேயிருந்து சாவித்ரி புடவையை நேர் செய்து கொண்டே கையில் பையுடன் "நானும் உங்களோடு வருகிறேன்" என்று விம்மலுக்கிடையே சொல்லிக் கொண்டு வெளியே வந்தாள்.

பாலகிருஷ்ணனே திகைத்துப் போய் நிமிர்ந்து பார்த்தான். அழுது அழுது வீங்கி இருந்தது அவள் முகம்.

"என்னம்மா, சாவித்ரி...நீ கூடவா...!" என்றார் அவள் பெரியப்பா.

"ஆமாம். நான் யார்! அவர் இருக்கும் இடம்தான் எனக்கு" என்று ஆத்திரத்துடன் அவர் பக்கம் திரும்பாமல் பேசிய அவள் குரலை அழுகை வந்து பலமாக அடைத்துக் கொண்டது.

பாலகிருஷ்ணன் படி இறங்கி வீதியில் நடந்தான். சாவித்ரி அவன் நிழலிலே நடந்தாள். ரகுநாதன் பதறிப் பின்னால் ஓடிப் போனவர் ஏதோ பேச முயன்று தோல்வி யடைந்து போய் "சரி போய்ட்டு வா அம்மா" என்று சொல்லி விட்டுத் திரும்பி விட்டார். அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

பகல் இரண்டு மணிக்கு முன்னாலேயே ஸ்டேஷனுக்கு வந்து விட்டார்கள் பாலகிருஷ்ணனும் சாவித்ரியும். வழியில் ஒருவரோடொருவர் பேசிக் கொள்ளவில்லை. வண்டி வர நேர மிருந்ததால் 'வெயிட்டிங்

ரூமில் மின்சார விசிறிக்குக் கீழே போய் உட்கார்ந்து கொண்டான் பாலு.

அங்கே வேறு யாருமே இல்லை. வழி நெடுக அழாமல் தேக்கி வைத்திருந்த துக்கமும் வேதனையும் குமுறிக் கொண்டு வர சாந்தி பாலகிருஷ்ணனின் மார்பிலே முகத்தைப் புதைத்துக் கொண்டு 'ஹோ' என்று அழ ஆரம்பித்து விட்டாள். கணவன் ஆறுதலாக இரண்டு வார்த்தை சொன்னுல்தான் அவள் மனத் தவிப்பு அடங்கும்போல இருந்தது.

பாலகிருஷ்ணனின் உள்ளமும் உருகி விட்டது. நேற்று முதல் தன் மனைவி அழுத வண்ணமாகவே, வேதனைப்பட்ட உள்ளமாகவே—அதுவும் தன் பொருட்டாக—இருப்பதை நினைத்தபோது அவள் மீது பச்சாதாபம் ஏற்பட்டது. தனக்குச் செய்யப்பட்ட தவறுகளைத் தன் மனைவி உணர்ந்து கொண்டு விட்டாள், அதற்காகக் கண்ணீர் வடிக்கிறுள் என்பதை நினைத்தபோது அவன் மனத்திலே கோபம் மடிந்து விட்டது. அவள் கண்ணீரிலே அவன் உள்ளக்குமுறை கரைந்து விட்டது.

சாந்தியை வாத்ஸல்யத்துடன் அணைத்துக் கொண்டு, அவள் தலையைக் கோதிய படியே, 'எதற்காக இப்படி அழுகிறாய்! இப்படிச் சாப்பிடாமல்பட்டினி கிடந்தால் உடம்பு எதற்கு ஆகும்!' என்று பரிவுடன் அவள் முகத்தை நிமிர்த்தியபோது சின்னக் குழந்தைபோல அவள் தேம்பினுள்.

“என் வீட்டிலே உங்களுக்கு ரொம்ப அவமரியாதை நடந்து விட்டது. எங்கள் அப்பாவுக்கு ஒன்றும் தெரியாது. நீங்கள் அவரை மன்னித்துவிட வேண்டும். உங்கள் மனம் எவ்வளவு புண்பட்டிருக்கும் என்று எனக்குத் தெரியும்.”

இவ்வாறு குரல் தழுதழுக்க உருக்கமாக வேண்டிக் கொண்டாள் சாந்தி.

பாலகிருஷ்ணன் மனத்திலே இப்போது கோபமே இல்லை. தன்னுடன் அவள் ஊருக்குக் கிளம்பியதும், அவள் சொரிந்த கண்ணீரும் அவன் மனத்தை அடியோடு மாற்றி விட்டன.

இரண்டாம் வகுப்பில் அவளுடன் தனிமையிலே பிரயாணம் செய்த பாலகிருஷ்ணன் அவள் முகத்திலே சிரிப்பை ஏற்றி வைத்தான்.

“சாந்தி! உங்கள் வீட்டிலேகூட இந்தத் தனிமையின் இன்பம் கிடைக்காது. நம் மைப்போல யாரும் ரயில் வண்டியிலே தலை தீபாவளியைக் கொண்டாடி இருக்க மாட்டார்கள்” என்று அவன் கூறிய போது அவள் கன்னங்களிலே இன்ப போதை ஏறி மயங்கிற்று.

பாலகிருஷ்ணன், தன் அம்மாவிடம் தனக்கு மாமனார் வீட்டில் கிடைத்த மரியாதைகளைச் சொல்லவே இல்லை. கணவனுக்குத் தன்னிடமுள்ள பிரியை எண்ணி இன்னும் உருகிப் போனாள் சாந்தி.

★

கடிதம் எழுத உட்கார்ந்த தகப்பனாரைப் பிரசவ அறையிலிருந்து மெல்லிய குரலில் அழைத்தாள் சாந்தி.

“என்ன அம்மா!” என்று அறையின் அருகே வந்தார் ரகுநாதன். “கடிதம் எழுத வேண்டாம். செலவைப் பார்க்காமல் தந்தியே கொடுத்து விடுங்கள் அப்பா. பிள்ளைக் குழந்தை என்பதைக் கேட்டால் அவர் பூரித்துப் போய் விடுவார்!” என்ருள் காய்ந்த உதடு விரியச் சிரித்தபடி.

“அதற்கென்ன; இதோ இப்போதே தந்தி கொடுத்து விட்டு வருகிறேன்” என்று திரும்பினுர் ரகுநாதன்.

“யாருக்கு மாமா தந்தி! எனக்கா! அந்தச் செலவு வைக்காமல் நானே வந்து விட்டேன்” என்று சொல்லிக் கொண்டே உள்ளே நுழைந்தான் பாலகிருஷ்ணன் பெட்டி படுக்கையுடன்.

“மாப்பிள்ளையா! வாருங்கள். சாந்தி பிரசவித்துப் பிள்ளை பிறந்திருக்கிறது. அந்தச் சமாசாரத்தைத் தெரிவிக்கத்தான் தந்தி கொடுக்கக் கிளம்பினேன். அதற்குள் நீங்களே......”


“பிள்ளையா! பலே! சாந்தி எனக்கு இந்தத் தீபாவளிக்கு நல்ல பரிசுதத்தான் கொடுத்திருக்கிறுள். நான் சாதாரணமாக, தீபாவளியும் வருகிறது. அவளையும் பார்த்தாற்போல இருக்கும் என்று கிளம்பி வந்தேன். வந்த இடத்தில் மங்களகரமான செய்தி” என்றுன்.


“இரண்டு நாட்களுக்கு முன்கூட சாந்தி, தீபாவளிக்கு உங்களை வரச் சொல்லிக் கடிதம் எழுதச் சொன்னுள்” என்ருர் ரகுநாதன் ஆவலுடன்.

“இனிமேல் எல்லாம் மாப்பிள்ளைக்கு அழைப்புத் தேவை இல்லை மாமா. என் மாப்பிள்ளை மதிப்பைக் குறைக்கப் பிறந்து விட்டான் பயல். இனி நீங்கள் பேரனுக்குத்தான் பயப்பட வேண்டும்” என்றுன் பாலகிருஷ்ணன்.

கணவனின் சிரிப்பையும் பேச்சையும் உள்ளே இருந்தபடி கேட்ட சாந்தியின் உள்ளத்திலே மகிழ்ச்சி பொங்கியது.

அவர் பிறந்த நாள்!




எமது தீபாவளி வாழ்த்துக்கள்..
போனிக்ஸ்
விசிறிகள்
EWI LTD
சிக்கனச்செலவில் சுகம்..
அழகிய தோற்றம்..
ஆர்எம்.எஸ். & கோ,லிட்., பிராட்வே,மதராஸ்..



நல்லழகும் நறுமணமும்
நாளும் நிலைபெற
TSR
டி.எஸ்.ஆர். அன் கோ,
கும்பகோணம் - தென்னிந்தியா.
EP


நாடுவது ஏன்?
T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி
நாட்டிலே நற்பெயர்பெற்று நிலவுகிறது
தபால் பெட்டி 1151 சென்னை-21.


SAPOTEX
KANTI
SWASTIK OIL MILLS LTD
தீபாவளி
வாழ்த்துகள்
மற்றும்
இந்நன்னாளுக்குரிய
எமது
நல்லாசிகள்
ஸ்வஸ்திக் ஆயில் மில்ஸ், வடாலா, பம்பாய்.
இந்திய சோப் மற்றும் வாசனைத் திரவியங்கள் தயாரிப்பாளர் சங்கத்தின் அங்கத்தினர்கள்

வாழ்க்கைச் சித்திரம்

ஹோமர்



"இருக்கட்டும், இந்தக் காப்பியைச் சாப்பிட்டுவிட்டு உங்கள் வேலையை அப்புறம் கவனியுங்கள்!" என்று சொல்லிக் கொண்டே லதா கொடி போல் அசைந்து வந்து காப்பி டம்ளரை மேஜையின் மேல் வைத்தாள்.

மாதவன் மணம் கமழும் காப்பியை ரஸித்தபடி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு கடைக் கண்ணால் லதாவின் அழகிய முகத்தைப் பார்த்தான். முழு மதியை நிகர்த்த அவள் வதனத்தில் இலேசாக வியர்வை அரும்பியிருந்தது. கருண்ட கேசங்கள் முன் நெற்றியில் வந்து கொஞ்சமாகப் படிந்து அவள் அழகை அதிகப்படுத்தின. தேனில் விழுந்த ஈயைப் போல் மாதவன் அப்போது மதி மயங்கினான்.

"உம், ... காப்பியைச் சாப்பிடுங்கள்! என்னைச் சாப்பிட்டு விடுவது போல் பார்க்கிறீர்களே!" என்றாள் லதா. அவளுடைய இதழ்க் கடையில் புன்னகை தவழ்ந்தது.

"லதா, அப்படிப் பார்ப்பது நீயா, நானா! அடேயப்பா! உன் கண்களுக்குத்தான் என்ன சக்தி!"

"உங்கள் கண்கள் மாத்திரம் ரொம்ப சாதுவோ! பிறந்தது முதல் ஒன்றும் புரியாத என்னை ஏறெடுத்தும் பார்க்காதிருந்த நீங்கள் திடீரென்று ஒரு நாள் விழுங்கி விடுவது போல் பார்த்தீர்களே!"

"லதா, நீ சொல்லுவது உண்மை! அப்பொழுதுதான் என் அகக் கண் திறந்தது. அதற்கு முன்பு என் மனம் இருந்த நிலையைப் பற்றி இப்பொழுது என்னிடம் சொல்லாதே. இப்பொழுது நான் முற்றிலும் புது மனிதன்!" என்றான் மாதவன் உணர்ச்சிப் பெருக்கோடு.

மின்னலின் ஒளித்த இன்ப ஈரம் போல் மெதுவாகச் சிரித்தாள் லதா.

"நீங்கள் மட்டும் புது மனிதராக மாறி விடவில்லை; உங்கள் கற்பனையில் உதித்துக் கை வண்ணத்தில் உருவாகும் சித்திரங்களும் புதுமை பெற்று விட்டன!" என்று சொல்லிவிட்டுச் சிரித்துக் கொண்டே காப்பி டம்ளரைக் கையில் எடுத்துக் கொண்டு அங்கிருந்து மறைந்தாள் லதா.

மாதவனின் கைகள் தாமாகவே வேலை செய்தன; அவன் எதிரே வண்ண ஓவியம் ஒன்று உருவாகிக் கொண்டிருந்தது. லதா அந்த அறைக்கு வருவதற்கு முன்பு, அவன் ஏகாக்ரசித்தனாக அந்த வண்ண ஓவியத்தை வரைவதில் ஈடுபட்டிருந்தான். அவன் கற்பனை அன்று விரிந்து பறந்தது. அவன் கை வழி அலைகள் சென்றன. நேரம் கழிவதிலும் அவனுக்கு நினைப்பில்லை.

லதா வந்து போனதும் அவன் மனதில் இலேசாக ஒரு சலனம் கண்டது. ஓவியத்தை உருவாக்குவதில் ஈடுபட்டிருந்த அவன் சிந்தனை இப்பொழுது சிதறி விட்டது. பிறகு, தன் வாழ்க்கையின் இறந்த காலத்துக்குச் சென்றது.

• • •

அப்பொழுது மாதவனுக்குப் பதினைந்து வயது இருக்கும். சித்திரக் கலைஞர் அம்பலவாணனிடம் சிரத்தையோடு சித்திரம் பயின்ற மாணவர்களில் மாதவன் முதன்மையாகத் திகழ்ந்தான்.

பார்க்கும் காட்சிகளை பெல்லாம் மாதவன் படமாகத் தீட்டி விடுவான்; சிந்தனையில் பிறக்கும் எண்ணங்களைச் சித்திரங்களாகச் சிருஷ்டித்து விடும் திறமை அவனிடம் இருந்தது.

சித்திரக் கலைஞர் அம்பலவாணரே பல தடவை அவனது சித்திரங்களைக் கண்டு மெய் மறந்து போயிருக்கிறார்.

மாதவன் மிகவும் புத்திசாலி; ஆனால் பிடிவாதக்காரன். அவனுக்குச் சரியென்று தோன்றியதையே பிடிவாதமாகச் சாதிப்பான். அழகு அழகான சித்திரங்களைச் சிருஷ்டிக்கும் அவன் கலை உள்ளம், பெண்கள் விஷயத்தில் மட்டும் தவறான அபிப்பிராயத்தையே விடாப் பிடியாகப் பற்றிக் கொண்டிருந்தது.

சித்திரம் சம்பந்தப்பட்ட வரையில் வண்ண மலர்களோடு வடிவழகு பெற்ற பெண்களையும் ஒன்றாக நினைத்தது அவனுடைய உள்ளம்.

"காவியங்களிலும் ஓவியங்களிலும் இடம் பெறுவதற்காகவே பெண்மணிகள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறார்கள். வர்ண விசித்திரங்களை, எங்கோ தொலை தூரத்திலிருந்து கொண்டு ரசிக்கும் வான வில்லைப் போல், பெண்கள் கலைப் பொருள்கள். கலையின் மூர்க்க அவர்கள்; கலைக்கு உறுதுணையாக விரும்புவர்கள்; கடவுள் சிருஷ்டியில் பெண்களுக்கு இதைத் தவிர வேறு விதானம் அளிப்பது முற்றிலும் தவறானது. வனப்பு மிக்க வைகறை விழித்தெழுபவர்களின் மனத்துக்கும் புத்துயிர் ரஸித்துத் தெய்வ சிந்தனையை வளர்க்கிறது; வெய்யிலும் மழையும் செடி கொடிகளின் வளர்ச்சிக்கு அவசியம்; ஆனால் அந்த வைகறைப் பொழுதையும், வெய்யிலையும், மழையையும் தானே கைகலந்தோடு அநுபவிக்க வேண்டும் என்று எண்ணுவது பெருந்தவறு. அது போலத்தான் பெண்களையும் ஆண்கள் கருத வேண்டும்!" என்பான். இன்னும் என் சொன்னவே சொல்லுவான்.

அந்த இளம் பருவத்தில் அவன் உள்ளம் அவ்வளவுக்கு மேல் விரிவடைந்திருக்கவில்லை. அவன் உள்ளத்தின் ஆழத்தில் பெண்மைக் குரலொன்று அவன் ஆண்மையை எதிர்த்துச் சவால் விட்டுக் கொண்டிருந்தது அவனது புறச் செவிகளுக்கு எட்டவில்லை. அவனும் அதை உணரும் பருவத்தை எட்டவில்லை.

வயது வளர்ந்து கொண்டிருக்கும், மாதவன் தன் அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ளும் நிலையை அடையவில்லை. எப்பொழுது பார்த்தாலும் சித்திரக் கலையிலேயே ஈடுபட்டு, தணியாத ஆவலோடு மேலும் மேலும் அந்தக் கலையைப் பயில்வதிலேயே தன் முழு கவனத்தையும் செலுத்திக் கொண்டு வந்த கிழவன் மாதவனுக்குத் தன் வயதைப் பற்றி சென்ன, வேறு எதைப் பற்றியும் சிந்திக்கச் சிறிதும் அவகாசம் இருக்கவில்லை.

• • •

சின்னஞ் சிறு வயதிலிருந்தே குழந்தை மாதவனுக்குச் சித்திரக் கலையில் பேரார்வம் இருந்தது. கையில் சிலேட் பல்பும் பிடிக்கப்பட்டவுடனே வைத்துக் கொண்டு, அவன் தன் குஞ்சுக் கரங்களால் யானை, பூனை, நாய், குதிரை, ரயில் வண்டி முதலியவை

கின செல்வம் அநாயாசமாக வரைந்து தள்ளுவான். அப்போது அவனுக்கு ஏழு வயது இருக்கும். அவனுடைய தாயாரோ, தகப்பனாரோ, அண்ணனோ, அக்காளோ யாரும் இந்தக் குழந்தை உள்ளத்தில் பதிந்திருக்கும் கலை உணர்ச்சியைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை.

ஆனால் அவனுடைய இணையற்ற சித்திரங்களை அவ்வப்போது உடனுக்குடன் பார்த்து, ரசித்து, 'சபாஷ்' கூறி அவனை உற்சாகப்படுத்தி வந்தவள் யார் தெரியுமா! அவன் அத்தை மகள் லதா தான்.

லதா அவனைவிட இரண்டொரு வயது சின்னவள். ஆனால் வைராக்கியத்தில் பெரியவள்; அவள் குழந்தை உள்ளம் மாதவனின் தரைச் சித்திரங்களைக் கண்டு, மேகக் கூட்டத்தைக் கண்ட மயில் போல் களிநடம் புரியும்.

மாதவன் தினம் சீமைச் சுண்ணாம்புக் கட்டியினால் தரையில் என்னென்னவோ சித்திரங்கள் வரைவான். பிறகு, அப்பாவையும் அம்மாவையும் அழைத்துத் தன் சித்திரங்களைக் காட்டுவான். அவர்கள் அவ்வளவு சிரத்தையாகக் கவனிக்கமாட்டார்கள். அவன் மனம் உடைந்துவிடும்.

"அடி லதா, நீ இங்கே வந்து பார், யானையையும் குதிரையையும்! உனக்குத் தான் என் படங்களைப் பார்த்தும் சந்தோஷப்படத் தெரியும்" என்று கூறி, பொங்கும் மகிழ்ச்சியுடன் லதாவின் கரங்களைப் பிடித்து அழைத்துக் கொண்டு போய்த் தன் சித்திரங்களைக் காட்டுவான் மாதவன். அவைகளைப் பார்த்து லதா ஆனந்தக் கூத்தாடுவாள்.

அன்று மாதவன் வீட்டுக்கு ஒரு பெரியவர் வந்தார். அவன் தகப்பனாருக்கு அவர் அத்யந்த நண்பர். அவர்கள் வீட்டில் அவர் சில நாட்கள் தங்கியிருந்தார். அந்தச் சமயம் அவர் மாதவனின் தரைச் சித்திரங்களைப் பார்த்தார். அதிசயத்தினால் அப்படியே அசந்து போனார்.

"இந்த இளம் வயதில் இத்தகைய கலையார்வம் ஏற்படுவது மிகவும் அருமை. அதுவும் சித்திரக்கலை சாதாரணமானதல்ல; அது பயின்று தேறக் கூடிய கலை அன்று; தெய்வாம்சமாக வரக்கூடியது. விட்ட குறை தொட்டகுறையாக அந்தக் கலை குழந்தை மாதவனிடம் அமைந்திருக்கிறது. இந்தச் சிறுவனை நீங்கள் என்னிடம் அனுப்பிவிடுங்கள். என் நண்பர் ஒருவர் சித்திரக் கலைஞர். அவர் ஒரு கலைப் பள்ளிக்கூடம் நடத்தி வருகிறார். அதில் இவனைச் சேர்த்து விட்டால் பெரிய சித்திரக்காரனாகி விடுவான்!" என்று நண்பர் உணர்ச்சியோடு சொன்னார்.

"நீங்கள் சொல்லுவது உண்மை. யாருடைய போதனையும் இல்லாமல், இவன் தானாகவே சித்திரம் வரைகிறான். படிப்பில் இவனுக்குச் சிரத்தை இல்லை. பள்ளிக்கூடத்துக்கு அனுப்பியும் பயனில்லை. அங்கே போய்ப் படித்தால்தானே! வயது பன்னிரண்டாகிறது. இவனைப் பற்றித் தான் கவலையாயிருக்கிறது. படிப்பில் மட்டும்தான் சிரத்தையில்லை என்கிறீர்களா! வேறு எதிலுமே அவன் கவனம் செல்லுவதில்லை" என்று மாதவனின் தகப்பனார் மிகவும் கவலையோடு சொன்னார்.

அதற்கு அவர் நண்பர், "நீங்கள் அவனைப் பற்றித் துளிக்கூடக் கவலைப்பட வேண்டாம். நான் குறிப்பிட்ட நண்பர் சித்திரக் கலையோடு மற்றக் கலைகளையும் கற்பிக்கும் திறன் பெற்றவர்; பல மொழிகள் பயின்றவர்; மாதவனுக்குச் சுலபமாகக் கல்வியும் போதித்து விடுவார். ஆகையினால், நீங்கள் சிறிதும் யோசிக்க வேண்டாம். மாதவனை என்னுடன் அனுப்பி வையுங்கள்!" என்றார்.

அவரிடம் உள்ள மதிப்பும் மரியாதையும் காரணமாக, மாதவனின் தகப்பனார், தம் மகனை அவருடன் அனுப்பினார்.

* * *

மாதவன் பன்னிரண்டாவது வயதிலிருந்தே குருகுலவாசம் செய்ய ஆரம்பித்து விட்டான். தாய், தந்தை, மற்றும் உள்ள சுற்றத்தார் யாவரையும் மறந்து தன் கலையுண்டு, தான் உண்டு என்று ஏகாக்கிரசித்தமாக அதிலேயே பெரிதும் ஈடுபட்டுப் பாடுபட்டான்.

வருஷங்கள் சென்றன. பெற்றோர்களைப் பார்க்கக்கூட அவன் தன் ஊருக்கு வரவில்லை. சித்திரக் கலை உபாத்தியாயர் அபிமானமாகவும் மாதவனிடம் உயிரையே வைத்திருந்தார். சித்திரக்கூட மாணவர்கள் அனைவருக்கும் அவனையே தலைவனாக நியமித்திருந்தார்.

சித்திரக் கலைக்கூடத்துக்கு அருகில் ஒரு தாமரைத் தடாகம் இருந்தது. அதில், பெயருக்கு ஏற்பத் தாமரைக் கொடி படர்ந்து பசுமையாகவிருந்தது. அடிக்கடி மலரும் மலர்ந்தது.

மாதவனுக்கு அந்தத் தடாகத்தில் ஸ்நானம் செய்வது என்றால் அலாதிப் பிரியம். காலை வேளையின் அமைதியில் குளத்து நீரைச் சிற்றலைகள் மோதி, சலசலப்பதைப் பார்த்துக் கொண்டிருப்பதில் மாதவனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

அன்று வழக்கம்போல் அதிகாலையில் தாமரைக் குளத்துக்குப் போனான் மாதவன். அவனைக் கண்ட மகிழ்ச்சியில் குளத்து நீர் தன் அலைக்கரங்களால் கரையில் மோதிச் சலசலத்தது. அதைப் பார்த்த மாதவன் மெய் மறந்தான்.

அந்தச் சமயம் குளத்தில் தாமரை இலைகளுக்கு மத்தியில் ஒரு சின்னஞ் சிறு பெண்ணின் முகம் தெரிந்தது. அந்தப் பெண் தாமரைக் கொடிகளில் சிக்குண்டு தவிப்பதும் தெரிந்தது.

மறு கணம் மாதவன் குளத்து நீரில் பாய்ந்தான்; வேகமாக நீந்திக் கொண்டு போய் அந்தப் பெண்ணருகே சென்றான்.

தாமரைக் கொடிகளில் அந்தப் பெண்ணின் கரங்கள் சிக்கிக் கொண்டிருந்தன; அவளுக்கு மூச்சு முட்டித் திணறியது.

மாதவன் மிகவும் லாகவமாக அந்தப் பெண்ணின் கரங்களைக் கொடிகளின் சிக்கலிருந்து விடுவித்துக் கரை சேர்த்தான்.

பிறகு விசாரித்ததில், அந்தச் சிறுமி ஆலைத் தொழிலாளி கந்தனின் மகள் என்றும், தாமரை இலை பறிக்கக் குளத்தில் இறங்கி விபத்தில் சிக்கிக்கொண்டாள் என்றும் தெரிய வந்தது.

மாதவன் அந்தச் சிறுமியை அவள் தகப்பனிடம் கொண்டு சேர்த்தான். அவன் நன்றி உணர்ச்சியைத் தெரிவிக்க வகை தெரியாமல் தவித்தான்.

தாயற்ற அந்தச் சிறுமி கமலத்தினிடம் மாதவனுக்கு இனம் தெரியாத அன்பும் இரக்கமும் பிறந்தன. தினமும் அவளைச் சந்தித்து, பழம், பிஸ்கத்து, மிட்டாய் முதலியவைகளைக் கொடுத்து வந்தான். அந்தச் சிறுமியைக் காணாத தினத்தில் மாதவனுக்கு வேலையே ஓடாது. தாயை இழந்த அந்த எட்டு வயதுச் சிறுமி கமலத்தின் முகத்தில் மாதவன் உலகத்தின் ஏக்க உணர்ச்சி அவ்வளவையும் கண்டான்.

மாதவனுக்குத் தன் வீட்டு நினைவே அற்றுப் போயிருந்தது. இந்த ஏழு, எட்டு வருஷங்களில் அவன் தகப்பனார்தான் அடிக்கடி வந்து கொண்டிருந்தார்.

* * *

வருஷங்கள் ஓடின. மாதவன் மனநிலை மட்டும் மாறவேயில்லை. சிறுமி கமலம் பருவத்தின் இன்ப ஸ்பரிசத்தினால் அடியோடு மாறி விட்டாள். வெறும் பாவாடை, சட்டையோடு கள்ளங்கபடு இல்லாமல் துள்ளித் திரிந்த கமலம், இப்பொழுது பருவத்தின் மந்திரக் கோலுக்கு வசப்பட்டாள். அவள் உடம்பில் இளமை எழிலுடன் பருவ எழிலும் வளம்பெற்றுத் திகழ்ந்தது. நாணம் எங்கிருந்தோ வந்து அவளைச் சூழ்ந்து கொண்டது. பாவாடை, சட்டை இவற்றுடன் ஒரு தாவணியும் வாளிப்பான அவள் உடலில் ஏறியது.



ஆனால் இவை ஒன்றும் மாதவனின் மனதை ஆகர்ஷிக்கவில்லை. அவனைப் பொறுத்த வரையில் கமலம், அன்று ஒரு நாள் தாமரைக் குளத்தில் தாமரைக் கொடியில் சிக்கிக்கொண்டு தவித்த சிறுமி கமலமாகவே இருந்தாள். பருவத்தின் மாறுதல் அவன் பொருட்படுத்தியதாகவே தெரியவில்லை.

சென்ற பத்து நாட்களாக, கமலமும் அவள் தந்தை கந்தனும் ஊருக்குப் போயிருந்தனர். அன்றுதான் திரும்பினர். மாதவன் அவர்கள் வீட்டுக்குள் கேட்ட பேச்சுக் குரலைக் கேட்டு, உள்ளே புகுந்தான். ஆனால் வீடு வெறிச்சென்றிருந்தது. கந்தன் ஒரு மூலையில் உட்கார்ந்து கொண்

டிருந்தான். மாதவனைக் கண்டதும் "வாங்க ஐயா, வாங்க!" என்று மலர்ந்த முகத்துடன் வரவேற்றான்.

"கமலம் வீட்டில் இல்லையா?" என்று ஆவலோடு கேட்டான் மாதவன்.

"இருக்கிறாள். அவளுக்குக் கல்யாணம் நிச்சயமாகியிருக்குங்க. அவள் அத்தை மகன் முருகேசன்தான் மாப்பிள்ளை. ஊருக்குப் போய் அதைத்தான் முடிவு கட்டிவிட்டு வந்தேன். கல்யாணம் வருகிற மாசம் முதலிலே வைத்துக் கொள்ளலாம் என்று பார்க்கிறேன்!"

"கமலத்துக்கா கல்யாணம்! குழந்தை கமலத்துக்கா கல்யாணம்" என்று அதிசயத்துடன் கேட்டான் மாதவன்.



கந்தன் ஒரு முறை சிரித்தான். "என்னுங்க, குழந்தை மாதிரி கேக்கிறீங்களே! அவளுக்கு இப்பொழுது வயசு என்ன! உங்களுக்குத் தெரியுமா! பதினெட்டு தாண்டியாப் போயின்னா, அதுவும் வயசு வந்த பொண்ணை எத்தனை காலம் வீட்டிலேயே கல்யாணம் பண்ணாமல் வைத்துக் கொண்டிருக்க முடியும்! நீங்கள் சற்று யோசிச்சுப் பாருங்க!" என்றான்.

மாதவனுக்கு இதைப்பற்றி யோசித்துப் பார்க்க முடியவில்லை.

"கமலம் இப்போது எங்கே!"

"அவளும் அவள் அத்தானும் கொஞ்ச நேரத்துக்கு முன்னாலேதான் குளத்தங் கரைப் பக்கம் போனாங்க!" என்றான்.

மாதவன் நேரே குளத்தங்கரைப் பக்கமாக நடந்தான். அவன் அந்தக் குடிசையை விட்டு வெளியே வருவதற்கும், வெண்முகிற் போர்வையிலிருந்து சந்திரன் வெளிப் படுவதற்கும் சரியாயிருந்தது. தாமரைக் குளத்தை அடுத்திருந்த தென்னந் தோப்பும் மாந்தோப்பும் வெண்ணிலவின் மோகன ஒளியில் மூழ்கியிருந்தன.

மாதவன் மனம் சிறிது கொள்ளாமல் தவித்தது. அவன் கால்கள் மட்டும் நடந்து கொண்டிருந்தன. தாமரைக் குளத்தை நெருங்கியதும் சிற்றலைகளின் ஒலி குழந்தையின் அரையில் கட்டிய சலங்கையின் ஒலியைப் போலச் சப்தித்தது. வெண்ணிலவின் கிரணங்கள் குளத்தில் விழுந்து அதைத் தாவள மயமாகப் பிரகாசிக்கச் செய்தது. குளத்திற்படிக் கட்டில் நின்று மாதவன் நெடுந்தூரம் வரை பார்த்தான்.

"உலகத்தில் பெண்ணுக்கு ஆண் அவசியம் தானோ!" இப்படி ஒரு கேள்வி அவன் உள்ளத்தில் எழுந்தது.

"ஆம், இறைவன் படைப்பிலேயே பெண்ணுக்கு ஆண் என்ற நியதியில் தான் படைத்திருக்கிறான்!" இந்தப் பதில் அவன் உள் மனம் சொல்லியது.

"இந்தக் குளத்தின் குளிர்மையான நீரையும், வானுற ஓங்கி வளர்ந்திருக்கும் தென்னை மரங்களையும், செழிப்பான மாமரங்களையும், இந்த மகிழ்ச்சி தரும் இரவையும், இரவுக்கேற்ற வெண்ணிலவையும் ஏன் இறைவன் படைத்தான்!" இந்தக் கேள்வியைத் தானே கேட்டுக் கொண்டு மாதவன் பதில் சொல்ல முடியாமல் திணறினான். இயற்கை வனப்பின் சக்தியிலும் அவன் நெஞ்சு நெகிழ்ந்தது; அவன் உள்ளத்தின் உறுதியும் தளர்ந்தது.

"துயிலின் பொருட்டே இரவு ஏற்பட்டதானால், வைகறையையும் மாலையையும் விட இரவு ஏன் இவ்வளவு அதிக ரம்மியமாக இருக்க வேண்டும்! சூரியனின் வெப்பமும் பிரகாசமும் மிகமிகச் சக்தி வாய்ந்தவைதான். ஆனால் இந்தச் சந்திரனும் நட்சத்திரங்களும் சூரியனை விட, மோகன சக்தியில், மனிதனை மயக்கும் சக்தியில் இணையற்று விளங்குகின்றனவே! இன்பமே உருவெடுத்தது போல் வெண்ணிலவு எதற்காகக் காய்கிறது! விவரிக்க இயலாத இன்பத்துடன் கூடிய வனப்பு மிக்க இரவைக் காட்டுவதன் பொருட்டுத் தோன்றுகின்றன!"

மாதவனால் இந்தக் கேள்விகளுக்கு விடையளிக்க முடியவில்லை. கற்பனை வளம் நிறைந்த அவன் மனம் சோர்வடைந்தது.

அப்பொழுது அவனுடைய கண்களுக்கு முன்னால், நிலவொளியில் அற்புதமான நிழற் காட்சி ஒன்று தென்பட்டது.

குளத்தங்கரைக்குச் சமீபமாக இரண்டு உருவங்கள் கைகோர்த்துக் கொண்டு சென்றன. ஒன்று உயர்ந்து கம்பீரமான தோற்ற முடையதாயிருந்தது; மற்றொன்று சற்றுத் தாழ்ந்து நாணத்துடன் கூடிய தோற்ற முடையதாயிருந்தது. அது கந்தன் மகளின் உருவம் என்பதை மாதவன் அறிந்துகொள்ள அதிக நேரம் பிடிக்கவில்லை. அவளுடன் சென்றது அவள் அத்தை மகன் முருகேசனாகத்தான் இருக்க வேண்டும்.

இப்பொழுது மாதவனின் மனத்தில், சற்று முன் பதில் கிடைக்காமலிருந்த கேள்விகளுக்கும் பதில் கிடைத்துவிட்டது.

"ஆஹா! இந்த மனமொத்த ஜோடிகளுக்காகத்தான் இந்த வனப்புமிக்க இயற்கை ஏற்படுத்தியிருக்கிறது. மகிழ்ச்சி நிறைந்த மந்த மாருதத்தையும், தண்மை நிறைந்த வெண்மதியின் ஒளியையும், எண்ணிலடங்காத விண்மீன் கூட்டத்தையும் அநுபவிக்கத்தான் இறைவன் ஆணையும் பெண்ணையும் பரஸ்பரம் துணைகளாகப் படைத்தான்!"

இந்த எண்ணத்தில் மாதவன் மயங்கி நின்றபோது, காதலர்கள் இருவரும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தனர். அவர்களுடைய பேச்சொலியும், கலகலவென்ற சிரிப்பொலியும் கூட மறைந்து விட்டன. மறு கணம் மாதவனும் விழிப்படைந்தான். வேகமாகச் சித்திரக் கூடத்தை நோக்கி நடந்தான். இப்பொழுது அவன் நடையில் ஆனந்த வெறி இருந்தது. அன்றிரவு அவன் நித்திரையில் நிம்மதி நிரம்பியிருந்தது.

* * *

மறுநாள் பொழுது புலர்ந்து சிறிது நேரத்துக்கெல்லாம், காலைக் கடன்களை முடித்ததும் மாதவன் வழக்கம் போல் சித்திரக் கூடத்துக்கு வந்து சேர்ந்தான். ஆனால் வழக்கம் போல் உடனே சித்திரம் வரைய ஆரம்பிக்கவில்லை. அம்பலவாணரின் வருகைக்காகக் காத்திருந்தான். அம்பலவாணர் வந்தார். அவர் வந்ததும் மாதவன் பரபரப்போடு அவரை வணங்கி எழுந்து, "ஐயா, இன்று நான்........" என்று சிறிது தயங்கினான்.

"......ஊருக்குப் போக விரும்புகிறாய், இல்லையா!" என்று மிகவும் அமைதியாகக் கேட்டார் அம்பலவாணர்.

"......ஆமா! தங்களுக்கு... இது......" என்று இழுத்தான் மாதவன்.

"......எப்படித் தெரியும் என்று கேட்கிறாய், அப்படித்தானே! மாதவா, உன் உள்ளம் உனது இயல்போடு ஒட்டாமல் விபரீதப் பாதையில் இத்தனை நாளாகப் போய்க்கொண்டிருந்தது. இப்பொழுது சரியான பாதைக்குத் திரும்பி விட்டாய். சந்தோஷமாய் ஊருக்குப் போய் வா. நீ சித்திரக் கலையில் பரிபூர்ணமாகத் தேர்ந்து விட்டாய்" என்று அவனை ஆசீர்வதித்தார் அம்பலவாணர்.

மாதவன் அவரை நமஸ்கரித்து விட்டு விடை பெற்றுக்கொண்டான். அன்றைய தினமே ஊருக்குப் புறப்பட்டு விட்டான்.

விழாக் கோலத்தில் பொலிந்திருந்த மகனைக் கண்ட தாய் தந்தையர்களின் மகிழ்ச்சிக்கு, உள்ள உணர்ச்சிக்கு எல்லையேது!

"லதா, உன் அருமை அம்மாஞ்சி மாதவன் வந்திருக்கிறான், பார்த்தாயா! நீயும் அவனைப் பற்றிப் பேசுவாயே! மாதவனுக்குக் காப்பி தயார் செய்து கொண்டு வா" என்று மாதவனின் தாயார் சொன்னதும் பூங்கொடிபோல் அசைந்து வந்து அழகிய சித்திரம் போல் அவனுடைய எதிரில் நின்றாள், லதா.

மாதவன் அவளது எழில் உருவத்தைப் பார்த்தான்; விழுங்கி விடுவது போல் பார்த்தான்; பார்த்துக் கொண்டேயிருந்தான். நாணத்தினால் லதாவின் முகம் குங்குமம் போல் சிவந்தது; மறு கணம் வளையல்கள் கல கல வென்று குலுங்க உள்ளே ஓடிவிட்டாள்.

என்னோடு விளையாடிக் கொண்டிருந்த அதே லதாவா இவள்! இத்தனை அழகு இவளுக்கு எங்கிருந்து வந்தது! சொப்பன லோகத்தின் இன்பப் புன்னகையை இவள் எப்படிப் பெற்றாள்! வானுலகத்து அப்ஸரஸின் எழில் தோற்றம் இவளுக்கு எங்கிருந்து வந்தது!

மாதவனுக்கு விடை கிடைக்கவில்லை. மனதில் ஒரு இன்பவேதனை நிரம்பியது.

அவன் பெற்றோர்கள் எப்பொழுதோ அவ்விடத்தை விட்டுப் போய்விட்டார்கள்.

"உங்கள் மனம்தான் என்னை எப்பொழுதோ மறந்து விட்டது. இப்பொழுது கண் கூடவா தெரியவில்லை! இந்தக் காப்பியைச் சாப்பிடுங்கள்!" என்று கூறியபடி லதா காப்பி டம்ளரை அவனிடம் கொடுத்தாள். அவளைப் பார்த்துக் கொண்டே மாதவன் காப்பியை அருந்தினான். லதாவின் பேச்சைக் கேட்டதும் அவன் செவிகளில் இன்ப உலகத்துக் கின்னரி ஒலித்தது; பூங்குயில்களின் கீதம் கேட்டது. அவன் லதாவின் தளிர்க்கரங்களை அன்போடு பற்றினான்.

* * *

நிலவு காய்ந்தது. மாதவன் 'கட கட' வென்று வாய்விட்டுச் சிரித்தான். பிறகு, "அதிசயந்தான்!" என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான்.


"ஏது அதிசயம்! உங்கள் சித்திரத்தைப் பற்றிய கனவா!" என்று கேட்டுக் கொண்டே அங்கே வந்தாள் லதா.

"கனவு இல்லை, லதா! என் சித்திரமும் இல்லை. வாழ்க்கைச் சித்திரம் ஒரு அதிசயம் என்கிறேன்!" என்றான் மாதவன்.

"உங்களைப் பார்த்த பிறகு வேறொன்றும் எனக்கு அதிசயமாகத் தோன்றவில்லை!" என்றாள் லதா குறும்புடன்.

மாதவன் அவள் கையைப் பிடித்துத் தன்னருகே இழுத்து, கன்னத்தில் இலேசாகத் தட்டினான்; ரோஜாவின் இதழைப் போல் அவள் முகம் 'குப்' பென்று சிவந்தது.

அம்பியின் பட்டாசு!



மௌனம் கலைந்தது

ஞானம்

ஜானகியையும் மாப்பிள்ளையையும் தீபாவளிக்கு அழைக்க வேண்டும். வீணாகப் போன தீபாவளியையே தலை தீபாவளியாகக் கொண்டாடி யிருக்க வேண்டும். ஜானகியின் அசட்டுத்தனத்தால் புருஷன் ஒரு இடத்திலும், பெண்டாட்டி ஒரு இடத்திலுமாகத் தீபாவளி வந்ததுவே தெரியாமல் போய்விட்டது. இந்த வருஷமாவது தீபாவளிக்கு அழைக்க வேண்டாமா? கடிதம் எழுதச் சொல்லலாம் என்றால் இவர் தான் நிற்கும் இடத்திலேயே நிற்பதில்லை!

இவர் என்னுடன் பேசியே ஆறு மாதங்களாகின்றன. நித்தம் வேண்டுமானாலும் கூட காட்டுப் பெண்ணைத் தான் கேட்கிறார். நான் பரிமாறப் போனால் 'போதும்' 'வேண்டாம்' என்றுகூடச் சொல்லுவதில்லை. என் மீது அவ்வளவு கோபம்! அது தெரிந்து, இப்போதெல்லாம் நானும் அவர் எதிரே போவதில்லை.

அவரைக் கேட்காமல் நான் ஜானகியை அவனுடைய புக்ககத்துக்கு அனுப்பி விட்டேனாம். அவர் கோபத்துக்குக் காரணம் அதுதான்.

இவருக்கென்ன? ஆண்பிள்ளை! முன் பின் யோசிக்காமல், 'ஜானகியும் என் பிள்ளை என்று நினைத்துக் கொள்ளுகிறேன்' என்று சொல்லிவிட்டார்.

'பெண்ணை ஏன் புக்ககம் அனுப்பவில்லை?' என்று அவரையா கேட்கிறார்கள்? என்னைத்தானே எல்லாரும் கேட்கிறார்கள்?

ஜானகி எங்கள் ஒரே பெண். அவள் அப்பாவுக்குச் செல்லம். அருமையாக வளர்த்து ஆசையாகக் கல்யாணம் செய்து கொடுத்தோம்.

சுந்தரம் தங்கமான பையன். ரொம்பப் பிரியமாக இருப்பான். மிகவும் மரியாதையாகப் பழகுவான். நல்ல விவேகி. ஜானகி என் பெண் என்பதற்காகக் குற்றத்தை மறைக்க முடியுமா? ஜானகிக்குத் துடுக்கு வாய். நான் அவ்வப்பொழுது அடக்கிக் கொண்டிருக்கும் பொழுதே சில சமயம் சீற ஆரம்பித்து விடுவாள். இந்தப் பெண் புக்ககத்தில் எல்லாரிடமும் நல்ல பேர் எடுக்க வேண்டுமே என்று ஆரம்பத்திலிருந்தே பயந்து கொண்டிருந்தேன்.

நான் பயந்தபடியே புக்ககத்தில் தகராறு வந்து விட்டது. மாமியார், 'பொறுப்பே இல்லை. இப்படி இருந்தால் இன்றைக்குச் சரியாக இருக்கும். நாலு குழந்தைகள் பிறந்து விட்டால் அப்புறம் தெரியும்!' என்று சொன்னாளாம்.

வீடு என்றிருந்தால் எல்லாந்தான் இருக்கும். மாமியாராக இருப்பவளுக்கு இதுகூடச் சொல்ல உரிமை இல்லையா? அவளுக்கில்லாத வாய கஷ்டம் யாருக்கு?

ஜானகி சுந்தரத்திடம், 'உங்கம்மா அதைச் சொன்னாள், இதைச் சொன்னாள்' என்று புகார் படித்திருக்கிறாள். சுந்தரம் அதை லட்சியமே செய்யவில்லை. 'நீயும் நானும் கெட்டுப் போக வேண்டுமென்று அம்மா எண்ண மாட்டாள். உன் நன்மைக்கும் நம் குடும்ப நன்மைக்கும்தான் சொல்லுகிறாள். அவள் சொல்லுகிற படி நடந்து கொள்வோம். அதனால் ஒன்றும் குறைவு வந்து விடாது. அப்படியே அம்மா உனக்குப் பிடிக்காததைச் சொன்னாலும் நீ எதிர்த்துப் பேசிச் சண்டைக்கு அஸ்திவாரம் போட்டு விடாதே' என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

புருஷன் தனக்குப் பரிந்துகொண்டு அம்மாவைக் கண்டிக்காவிட்டாலும், தனிமையில் இரண்டு வார்த்தைகள் ஆறுதலாக அன்புடன் கூறவில்லையே என்று ஜானகிக்குத் தாபம். மாமியாரும் கணவனும் பாடாய்ப் படுத்துவதாகக் கண் மூக்கு வைத்து ஜோடித்து அப்பாவுக்கு எழுதி விட்டாள். அசட்டுப் பெண்! காலேஜில் படித்தால் மாத்திரம் ஆயிற்றா? உலக ஞானம் வேண்டாமா? அவளாவது சிறிசு; அவள் அப்பாவை என்னவென்று சொல்லுவது?

உடனே அவர் அங்கு விரைந்து ஓடினார். சுந்தரம் வீட்டில் இல்லாத சமயமாகப் பார்த்துப் பெண்ணைக் கூட்டிக் கொண்டு வந்து விட்டார்.

தன் பிரிவைத் தாளாமல் கணவன் மறு ரயிலில் ஓடி வந்து விடுவான்; சமாதானம் செய்து அழைத்துப் போவான் என்று ஜானகி நினைத்தாள். ஆனால் அப்படி நடக்கவில்லை.

"நீ செய்தது தவறு. இருந்தாலும் நான் அதைப் பாராட்டவில்லை. இதற்குள் உன் தவறு உனக்குப் புலப்பட்டு உன் மனம் வருந்தும் என்று நினைக்கிறேன். சீக்கிரம் புறப்பட்டு வா!" என்று எழுதினான் சுந்தரம்.

இந்தக் கடிதத்தைப் பார்த்த ஜானகிக்கு ஒரே ஏமாற்றமாக இருந்தது. தன் கௌரவத்தை விட்டு விட்டுத் தானாகப் போக மறுத்தாள்.

அவள் மாமியாரும், உடனே புறப்பட்டு வரும்படி அன்பும் ஆதரவும் ததும்ப ஜானகிக்கு நாலைந்து கடிதங்கள் எழுதினாள். நல்ல புத்தி சொல்லும்படி எனக்கும் எழுதினாள். என் பேச்சை மட்டும் ஜானகி கேட்பதாக இருந்தால் இந்த விவகாரமே ஏற்பட்டிராதே!

* * *

நாட்டுப் பெண்ணை அழைத்துப் போவதற்காகச் சம்பந்தி அம்மாள் தானே நேரில் வந்தாள்.

"என் பெண்ணை இனி உங்கள் வீட்டு வாசற்படி கூட மிதிக்க விட மாட்டேன். ஜானகி எனக்குப் பிள்ளை என்று நினைத்துக் கொள்கிறேன். நீங்கள் போகலாம்" என்று நிர்த்தாட்சண்யமாகக் கூறி விட்டார் ஜானகியின் அருமையான அப்பா!

நியாயம் சொல்ல வருகிறவர்களிடமெல்லாம் சுந்தரமே குற்றவாளி என்று வாதித்துத் தன் கட்சியையே



கிலோகாட்டி வரவானூர். அவருடைய தொழிலே அதுதானே!

'பப்ளிக் பிராஸிகியூட்டருக்கு, டைபிஸ்டுக்குக் கொடுக்கும் சம்பளம் கூட மிச்சம். கல்யாணமான பெண்ணை வீட்டோடு வைத்துக் கொண்டிருக்கிறார்' என்று வம்பளக்க ஆரம்பித்து விட்டார்கள் ஊரார். ஜானகியோ புருஷன் பிள்ளை மாதிரி துளிக் கவலையில்லாமல் டைப் அடிப்பதும், சாப்பிடுவதும், ரேடியோ கேட்பதுமாக இருந்தாள்.

வாழாத பெண் வீட்டில் இருந்தால் எவ்வளவு வம்பு வருமோ அவ்வளவும் வந்தது. பெற்ற தாயான நான் அதைப் பொறுக்க முடியாமல் தவித்தேன். நல்லது, பொல்லாதது தெரியாத பெண்ணையும், முரட்டுப் பிடிவாதமுள்ள கணவனையும் வைத்துக் கொண்டு செய்வது என்ன என்று அறியாமல் திகைத்தேன். என் திகைப்பு வெறுப்பாக மாறியது.

ஜானகியைப் பத்து மாசம் சுமந்து பெற்றவள்தான் நான். மாமியார் மாதிரி, மாற்றாந்தாய் மாதிரி அவளைக் கொடுமைப் படுத்தினேன்: சிடுசிடுத்தேன்; அலட்சியம் செய்தேன். மாமியாரின் தொல்லை பொறுக்காமல் ஓடி வந்தவள், அதைவிடக் கடுமையான தாயாரின் தொல்லையைச் சகியாமல் கோபித்துக் கொண்டு புருஷன் வீடு போகமாட்டாளா என்பது என் எண்ணம். சந்தோஷமாகப் புருஷனுடன் வந்தால்தான் பிறந்தகத்தில் மதிப்பு என்று அவளுக்கு உணர்த்தப் பாடுபட்டேன். ஜானகி வந்து விளையாட்டுப்போல் பத்து மாசம் ஆகிவிட்டது. நாளுக்கு நாள் கொடுமைக்காரியாக மாறினேன். என் கொடுமையை நினைத்து அக் குழந்தையின் மனம் எப்படி எல்லாம் வருந்தியதோ? பாவம்!

* * *

என் கொடுமை பலனளித்தது. ஆனால் நான் நினைத்த விதத்தில் இல்லை. ஜானகி யாரிடமும் சொல்லாமல் கொள்ளாமல் வேலைக்கு மனு எழுதிப் போட்டு விட்டாள். அதிகாரியை வந்து பேட்டி காணும்படி உத்தரவும் வந்து விட்டது.

அந்த உத்தரவை அனுப்பிய மேலதிகாரி சுந்தரம்தான்! சுந்தரம், ஜானகியின் விண்ணப்பத்தைப் பார்த்ததும், அவள் தன் கீழ்தான் வேலை செய்ய வேண்டியிருக்கும் என்றும், அவள் வேலைக்கு வந்து சேருவதை யாரும் தடை செய்ய வேண்டாமென்றும், என்னைத் துணையாக வரும்படியும் ரகசியமாக என் பிள்ளை கோபுவுக்கு எழுதியிருந்தான்.

அன்று ஜானகியின் அப்பா ஊரில் இல்லை. வழக்கு விஷயமாக அயலூருக்குப் போயிருந்தார். ஜானகி வெகு தைரியமாக வேலைக்கு மனு எழுதிப் போட்டுவிட்டாளேயொழிய, தனியாகப் பிரயாணம் செய்யத் தைரியமில்லை. எங்கோ பார்த்துக் கொண்டு, 'நீயும் துணைக்கு வருகிறாயா அம்மா?' என்று அலட்சியமாகக் கேட்டாள். என்றாலும் அவள் குரல் கம்மியது.

புறப்படும் பொழுது அவளுக்கு இருந்த உற்சாகம் கூட, ரயில் பிரயாணத்தின் பொழுது இல்லை. ரயிலில் இரண்டு, மூன்று தம்பதிகள் சந்தோஷமாகப் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தனர். எனக்குத் தெரியக்கூடாதென்று ஜானகி துக்கத்தை அடக்கிக் கொள்வதும், ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டிக் கொண்டு கண்ணீரை மறைப்பதும் எனக்குத் தெரிந்துதான் இருந்தது. அசடு!

ஜானகியின் பெரியப்பா வீட்டில் இறங்கினோம். பத்து மணிக்கு ஜானகி ஆபீஸுக்குச் சென்றாள். அவளை வரவேற்க அங்கே சுந்தரம் தயாராக இருப்பான் என்று எனக்குத்தான் முன்பே தெரியுமே!


சுந்தரம் கெட்டிக்காரன். ஒரு வருஷமாக என்னால் மாற்ற முடியாத ஜானகியின் மனதை ஒரு மணி நேரத்தில் மாற்றிவிட்டான். என்ன சொன்னானோ, என்னவோ! ஜானகி அதைச் சொல்ல மறுக்கிறாள். எப்படியானால் என்ன? ஒரு வருஷமாகக் கணவனைப் பிரிந்திருந்த ஜானகிக்கு இப்பொழுது புத்தி வந்து விட்டது.

இருவரும் சிரித்துப் பேசிக் கொண்டு என்னைப் பார்க்க வந்தனர். நான் விரும்பியதும் அதுதானே? சுந்தரம் என்னை வீட்டுக்கு அழைத்தான். போய்ச் சம்பந்தி அம்மாளைப் பார்த்துவிட்டு, இரண்டு நாள் இருந்து ஜானகிக்கு நல்ல புத்தி சொன்னேன். அவள் வாயிலிருந்து "இனிமேல் இப்படி யெல்லாம் மூடத்தனமாக இருக்க மாட்டேன்" என்று உறுதி கேட்டு வாங்கிக்கொண்டு ஊருக்குப் புறப்பட்டு வந்தேன்.

* * *

பெண் புருஷனுடன் குடித்தனம் செய்யப் போன கதையை நாட்டுப் பெண்ணிடம் கூறி மகிழ்ந்து கொண்டிருந்தேன். கூடத்திலிருந்து அதைக் கேட்டுவிட்ட என் கணவர், "என்ன பொய்! என்ன சூது! வேலைக்குப் போயிருக்கிறதாக நம் பிள்ளை சொன்னானே! என்னைக் கேட்காமல் நீ எப்படி ஜானகியை அந்த அயோக்கியர்களிடம் திருப்பி அனுப்பலாம்? உனக்கு அவ்வளவு அதிகாரமா?" என்று கோபமாகச் சீறினார்.

தன் மதிப்பே போய் விட்டது; மாப்பிள்ளையின் மிரட்டலுக்கு அடிபணிந்தாகி விட்டது என்று அவருக்குக் கோபம். சொல்ல நாக்கு கூசுகிறது; நினைக்கப் பயமாக இருக்கிறது. "என் வீட்டில் அவளுக்குச் சோறு இல்லை? அவள் என் பெண்ணே இல்லை" என்று உரக்கக் கத்தி ஆர்ப்பாட்டம் செய்தார்.



நான் பதிலே பேசவில்லை. இரண்டு கை தட்டினால்தானே சத்தம் எழும்? அவரே கத்தி ஓயட்டும் என்று பேசாமல் இருந்துவிட்டேன்.

கூப்பாடு ஓய்ந்தது. கோபம் தணியவில்லை. என்னிடம் பேசுவதை விட்டுவிட்டார். அவருடைய அனுமதி இல்லாது பெண்ணைப் புக்ககத்திற்கு அனுப்பிய என்னை அவர் பெரும் எதிரியாக நினைத்து வெறுத்தார்

* * *

தீபாவளி வேகமாக நெருங்குகிறது. போன வருஷமோ சண்டையும், பூசலுமாக இருந்து விட்டது. இந்த வருஷமாவது குழந்தைகளை வரவழைத்துத் தலை தீபாவளி கொண்டாட வேண்டாமா?

அவர் ஆபீஸ் அறையில் தனியாக ஈஸிசேரில் சாய்ந்து கொண்டிருந்தார். நானே வலுவில் போய்ப் பேசினேன்.

"தீபாவளி வருகிறதே? சுந்தரத்துக்குக் கடிதாசு......" என்று நான்

பேச்சை ஆரம்பிப்பதற்குள், "என்னை ஒன்றும் கேட்காதே. என்னைக் கேட்டுத்தான் எல்லாம் செய்தாயோ? அவன் என் வீட்டுக்கு வர வேண்டிய தில்லை. நீ இங்கு என் எதிரில் நிற்காதே, போ வெளியே" என்றார்.

"இத்தனை வயசாகியும் இன்னும் நீங்கள் என்னிடம் சண்டை போடுவதை நிறுத்தவில்லை. நீங்கள் அப்படித்தான் ஒரு நாள் சண்டை பிடித்துக் கொண்டும்; ஒருநாள் சிரித்து மகிழ்ந்தும். இது தெரியாமல்..."

"சரி. உன் பிரசங்கத்தை நிறுத்தலாம். இந்தத் தர்மோபதேசத்தை யெல்லாம் நான் உன்னிடம் கேட்கத் தயாராக இல்லை" என்று சொன்னார்.

எனினும் அவர் குரலில் முதலில் இருந்த கடுமை இல்லை. தொனி கொஞ்சம் இறங்கி யிருந்தது.

அதே சமயம் 'தபால்' என்ற குரல் கேட்டு வாசலுக்கு ஓடினேன். இரண்டு கடிதங்கள் வந்தன. எங்கள் நாட்டுப் பெண்ணின் அப்பா, தம் பெண்ணையும் மாப்பிள்ளையையும் தீபாவளிக்கு நாலு நாளைக்கு முன்பே அனுப்பித் தரும்படி கேட்டுக் கொண்டு எழுதி யிருந்தார்.

இன்னொன்று ஜானகி எழுதியிருந்தாள். தன் மாமியாருக்கு உடம்பு சரியில்லாததால் தனியாக விட்டுவிட்டுத் தீபாவளிக்கும் பிறந்தகம் வரப் பிடிக்கவில்லை; அன்றுவும் மன்னியும் ஊருக்குப் போய்விட்டார்களாதலால், அப்பா, அம்மா இருவரையும் தன் வீட்டிலேயே தீபாவளி கொண்டாட அழைப்பதாகவும் எழுதியிருந்தாள். அதுவே தன் கணவன், மாமியார் ஆகியோரின் விருப்பம் என்றும் குறிப்பிட்டிருந்தாள்.

கடிதத்தின் கடைசியில் ஜானகி தெரிவித்திருந்த செய்தி என்னை ஆனந்த சாகரத்தில் ஆழ்த்தியது.

"எனக்கு மூன்று மாசமாகத் தன் வலே இல்லை. அடிக்கடி வாய் குமட்டுகிறது. உங்களை எல்லோரையும் பார்க்க ஆசையாக இருக்கிறது" என்பதுதான் அந்தச் செய்தி.

சிரித்துக் கொண்டே, "பேரன் பிறந்த பின்னும் உங்கள் கோபம் நீடிக்குமா என்று பார்க்க வேண்டும். உங்கள் வீட்டுக்கு மாப்பிள்ளை வரா விட்டால் பாதகமில்லை. நீங்கள் மாப்பிள்ளை வீட்டுக்கு வந்தால் போதும். பேரன் பிறந்தால் நாளைக்குப் போகாமல் வராமல் இருக்க முடியுமா?" என்று கடிதத்தை நீட்டினேன்.

பொங்கி வரும் மகிழ்ச்சியை அடக்க முடியாமல் அவர் தவித்தார். வெகு அலட்சியமாகக் கடிதத்தைப் படித்து விட்டு, "உனக்கு அகத்துக்காரருடன் உல்லாசமாகத் தீபாவளிக்கு ஊருக்குப் போக ஆசை! தலை தீபாவளி நினைவு உனக்கு வந்து விட்டதாக்கும்" என்றார் கேலியாக.

"ஆமாம்! இத்தனை வயசாச்சு! தாத்தாவாகப் போகிறீர்கள். இன்னும் கேலியைப் பார்" என்று கூறிக் கொண்டே வெளியே வந்தேன்.

அவருடன் வாதாட எனக்கு நேரம் ஏது? இருந்தாலும், என் விஷயத்தில் ஆறுமாதங்களாக அவர் அனுஷ்டித்து வந்த மௌன விரதம் கலைந்ததைக் குறித்து என் மகிழ்ச்சி எல்லை கடந்தது....சரி, சரி, தீபாவளிக்கு ஜவுளி வாங்கப் போகவேண்டும். ஊருக்கு எடுத்துப்போகப் பட்சணங்கள் வேறு செய்ய வேண்டும். வேலை தலைக்கு மேல் இருக்கிறது. நான் வருகிறேன்.

காலை விடு!



மாமா:—டேய், டேய்! இப்படி நமஸ்காரம் பண்ணக் கூடாது! இப்படிப் பண்ணினால் நான்தான் கீழே விழுந்து விடுவேன்! காலை விட்டு விட்டு......

பையன்:—மாமா! நீங்கள் எங்கள் "பட்டாசு நிதி"க்கு இரண்டு ரூபாய் தருவதாகச் சொன்னால் நான் காலை விடுவேன்......!




பழந் தமிழ் இலக்கியம் அகம், புறம் என்ற இரு வகைப்பட்டது. அகப் பொருளின் ஐந்தில் ஒரு பகுதியாக விளங்குவது முல்லைத் திணை யாகும். அதில் முல்லை நிலத்து எழிலையும், அங்கு நெறியும் முறையும் வழுவாது வாழ்ந்த பழந் தமிழ் மக்களின் வாழ்க்கையையும் கண்டு உணர்ந்த புலவர்கள் அவற்றிற்குக் கலை வடிவம் தந்துள்ளனர்.

பாணர்கள் முல்லை நிலத்துக்கு உரிய முல்லைப் பண் பாடுகிறார்கள். பளபள வென்று ஒளி வீசும் ஆபரணங்களை அணிந்துள்ள அழகு நிறைந்த பெண் ஒருத்தி முல்லை மலர்களைத் தன் கரும் குழலில் சூடிக் கொள்கிறாள். அவள் காதலன் அவளைப் பார்க்கிறான். அவர்கள் காதலின் கனியாகத் தவழ்ந்து விளையாடும் குழந்தையைப் பார்க்கிறான். பிறகு தன் அருமைக் காதலி சூடிக் கொள்ளும் முல்லை மலரின் அழகைக் கண்டும் பாணர்கள் பாடும் முல்லைப் பண்ணைக் கேட்டும் இன்ப மடைகிறான்.

பாணர் முல்லை பாடச் சுடரிழை
வாணுதல் அரிவை முல்லை மலைய
இனிதுஇருந் தனனே நெடுந்தகை
துனிதீர் கொள்கைத்தன் புதல்வனொடு பொலிந்தே.

ஐங்குறுநூறு 408





சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற மன்னனைக் காண்பதற்காக மோசிகீரனார் என்னும் புலவர் வந்தார். நீராட்டுவதற்காக வெற்றி முரசத்தை எடுத்துச் சென்றிருந்ததால் வெற்றித்திரு வைக்கும் கட்டில் காலியாக இருந்தது. வந்த களைப்பில் அக் கட்டிலில் படுத்து உறங்கி விட்டார் புலவர். வெற்றித்திரு வீற்றிருக்கும் கட்டிலில் படுத்துத் தூங்குவது குற்றம். இந்தக் குற்றம் செய்பவர் கொலைத் தண்டனை பெறுவர். இது அக் காலத்து அரச முறை. இதனை உணராது உறங்கி விட்டார் புலவர். அவர் உறங்கிக் கிடந்ததை மன்னன் இரும்பொறை பார்த்தான். வெற்றித்திருவைவிடப் புலவர் புலமை மாண்பு பெரிதாயிற்றே என்று எண்ணினான். புலவரின் தூக்கம் இனிய தூக்கமாக இருக்க வேண்டும் என்று தானே விசிறி கொண்டு வீசினான்.

....

குருதி வேட்கை யுருகெழு முரசம்
மண்ணி வாரா வளவை யெண்ணெய்
நுரைமுகந் தன்ன மென்பூஞ் சேக்கை
அறியா தேறிய வென்னைத் தெறுவர
இருபாற் படுக்குநின் வாள்வா யொழித்ததை
அதூஉஞ் சாலுந் நற்றமிழ் முழுதறிதல்
அதனொடு மமையா தணுக வந்துநின்
மதனுடை முழவுத்தோ ளோச்சித் தண்ணென
வீசியோயே வியலிடங் கமழ............

புறநானூறு 50



"பாகனே! இந்த மான் குடும்பத்தின் வாழ்வைக் கண்டு, ஆண் மானின் பெருந் தகைமையைப் பார்த்து என் நெஞ்சம் உடைந்து விட்டது. என் காதலி வாழும் வீட்டில் அன்னம் தன் துணையோடு மகிழ்ந்து வாழ்கிறது. அந்தக் காட்சியை அவள் காண்பாள். தான் வளர்த்த கிளியிடம் சென்று, அதைத் தன் முன் கையில் ஏந்தி அதனுடன் மெதுவாகப் பேசுவாள். 'கிளியே! என்னை விட்டுப் பிரிந்து சென்றவரைப் பற்றிச் சொல். இன்று வருவார் என்று சொல்' என்று வீட்டில் உள்ள மற்றவர்கள் அறியாதபடி மெல்லப் பேசுவாள்; உருகுவாள். அவள் இழந்த அழகை மீண்டும் பெறுமாறும், என் உடைந்த நெஞ்சம் நிறுத்தி இன்புறுமாறும் தேர் விரைந்து செல்லட்டும்" என்றேன்.

.............எனவும்
துணையொடு திளைக்கும் காப்புடை வரைப்பில்
செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி
இன்றுவரல் உரைமோ சென்றிசினோர் திறத்தென
இல்லவர் அறிதல் அஞ்சி மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாணுடை அரிவை மாண்நலம் பெறவே. அகநானூறு 34.


ஏ. எப். ஹார்வி லிமிடெட்
மதுரை
தந்தி : "ஹார்வி"
மதுரை மில்ஸ் கம்பெனி
போன் : 250 (5லைன்)
ம து ரை
லிமிடெட்.
சகல தேசவாளர்களும் பெரிதும் விரும்பும் சிறந்த நூல்களை பல்வேறு ரகங்களில் தயாரிக்கும் பிரபல ஸ்தாபனம்.
5,00,000 நூற்கும் கதிர்கள். நெ. 80 வரை நூல்கள்.
மதுரை ★ அம்பாசமுத்திரம் ★ தூத்துக்குடி
பாண்டியன் இன்ஷூரன்ஸ்
போன் : 260
தந்தி : 'பாண்டியன்கோ.

சிகைகளும் நன்றாக வாரி அமைந்திருக்கின்றன
—இவர்கள் உபயோகிப்பது



தன் கணவன் கொண்டு வந்த பொட்டலத்தை ஆவலுடன் பிரித்தாள் கருணா. சந்தானம் அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். கருணாவின் சந்திரவதனம் மலர்ந்தது. மேலாக இருந்த மாம்பழக் கலர்ப் புடவையை எடுத்துச் சென்று முற்றத்து வெளிச்சத்தில் பார்த்து விட்டுத் திரும்பி வந்தாள்.

"உங்களுக்கு எப்படித் தெரிந்தது, நான் இந்தப் புடவைதான் பார்த்து வைத்து விட்டு வந்திருக்கிறேன் என்று!" என்று மகிழ்ச்சியுடன் கூவினாள் அவள்.

"இந்தப் புடவை உனக்கில்லை, கருணா. அருணாவுக்காக வாங்கினேன். நாளை தீபாவளி இல்லையா! அவளிடம் இன்றே கொடுத்துவிட்டு வரலாம் என்று வாங்கி வந்தேன். வேலையெல்லாம் முடிந்து விட்டதல்லவா! வா, போகலாம்" என்று கூப்பிட்டான் சந்தானம்.

கருணாவின் அழகிய முகத்தில் மேகம் படிந்தது போல் ஒளி மங்கிற்று. "எனக்கில்லையா! பிறகு எனக்கு! இந்தப் புடவையை நான் எடுத்துக் கொள்கிறேன். அருணாவுக்கு வேறே வாங்கிக் கொடுத்து விடுங்கள்" என்றாள் அவள் சின்னஞ் சிறு குழந்தையைப் போல.

"இரண்டு பட்டுப் புடவைகள் வாங்குவது என்றால் லேசாக இருக்கிறதா! மேலும் தீபாவளி சமயத்தில் கடனும் கொடுக்க மாட்டார்கள். இரண்டு மாதம் கழித்து உனக்கு வாங்கித் தருகிறேன்" என்றான் சந்தானம்.

"இரண்டு மாதங்கள் கழித்து...பிறகு பொங்கலுக்கு அவளுக்கு வாங்கிக் கொடுங்களேன். எனக்கு இது இருக்கட்டும். மறுபடியும் தேடினாலும் இந்த நிறம் கிடைப்பது கஷ்டம்" என்று உரிமையோடு வாதாடினாள் கருணா.

சந்தானம் அவள் கையிலிருந்த புடவையை வாங்கி மறுபடியும் பொட்டலத்தைக் கட்டினான். "அவளுக்குக் கல்யாணம் ஆவதற்கு முன்பு முதற் கொண்டு நான் புடவை வாங்கித் தந்து கொண்டிருக்கிறேன். இன்று நேற்று நிறுத்துவதா! குழந்தை எதிர் பார்த்துக் கொண்டு இருப்பாளே!"

கணவன் பேச்சு கருணாவின் அதிருப்தியை மேலும் தூண்டிவிட்டது. "ஆமாம். குழந்தை அவள்! பச்சைக் குழந்தை! என்னைவிட இரண்டு வயது மூத்தவள்!"

"என்னைவிட அவள் பத்து வயது சின்னவள். என் வரை என் தங்கை குழந்தைதான்!"

"நான் மட்டும் பாட்டியாக்கும்! இந்த ஐந்து வருஷத்தில் வாய் திறந்து முதல் தடவை ஒரு புடவை கேட்டேன். அதற்கு இவ்வாறு ஆட்சேபனை! நீங்களாகச் செய்ய வேண்டியதை நானாகக் கேட்டும்...!" கருணாவின் கண்களில் நீர் வழிய ஆரம்பித்து விட்டது. அவள் சமையலறைக்குள் புகுந்து விட்டாள்.

"ரொம்ப அழகாக இருக்கிறது!" என்று அவள் பின்னாலேயே வந்து அவளைக் கடிந்து கொண்டான் சந்தானம்.

"அழகு இல்லாவிட்டால் போகட்டும்!"

"எதற்கு இப்பொழுது இப்படி வயிற்றெரிச்சல் படுகிறாய்! உனக்கு ஆசையாக இருந்தால் உன் பிறந்த வீட்டிலிருந்து தருவித்துக் கொள்வதை யாராவது வேண்டாம் என்றார்களா! அதற்கு வழியைக் காணோம். என்னை விரட்டுவதற்கு வந்து விடுகிறாய்!" என்று கோபமாகக் கூறி விட்டுச் சந்தானம் தன் அறைக்குப் போய் உட்கார்ந்து கொண்டான்.

"என் பிறந்த வீட்டில் எட்டுப் பெண்களிடையே எனக்கு எதை வாங்கிக் கொடுக்க முடியும்!" என்று அழுகைக்கு நடுவே கூறிவிட்டுத் தரையில் குப்புறப் படுத்துக் கொண்டாள் கருணா.

●

விளக்கு வைத்து விட்டது. சந்தானம் பொட்டலத்தைக் கையில் எடுத்துக் கொண்டு தங்கை வீட்டை நோக்கி நடந்தான். கருணா படுத்துக் கொண்டு கண்ணீர் உகுத்தாள். அந்த மாம்பழ வர்ணப் புடவையிடம் அவள் அவ்வளவு உயிர் வைத்திருந்தாள். ஏமாற்றம் அவளை ஒரேயடியாக உலுக்கி எடுத்தது.

சந்தானம் வீடு திரும்பும்போது மணி பத்தரை அடித்து விட்டது. அப்பொழுதும் கருணா படுத்தபடியே இருந்தாள். சந்தானம் அவள் இருந்த இடத்தில் விளக்கைப் போட்டுப் பார்த்தான். அவள் உறங்குவதுபோல் பாசாங்கு செய்தாள். அவன் போய்ப் படுத்துக்கொண்டான். கருணா சற்றுப் பொறுத்து எழுந்து வந்து நோக்கினாள். கணவன் கண் மூடி உறங்கிக் கொண்டிருந்தான். அவள் மீண்டும் சமையலறைக்கு வந்து தரையில் படுத்துக் கொண்டாள்.

காலையில் எழுந்ததும் தம்பதிகளிடையே பேச்சில்லாமலேயே வேலை நடந்தது.

காப்பி முடிந்ததும் கையில் பையை எடுத்துக்கொண்டு கடைக்குக் கிளம்பினான் சந்தானம். "கருணா, காய் கறி தவிர வேறு ஏதாவது சாமான்கள் வேண்டுமா! உன்னிடம் சொல்ல மறந்து விட்டேனே! அருணா வீட்டில் அவர்கள் எல்லோரும் நம்மை அங்கே வந்து விடும்படி கூறினார்கள். நீ என்ன, இங்கே பட்சணங்கள் செய்யப் போகிறாயா, அல்லது அங்கேயே போய் விடுவோமா!" என்று அவன் சமாதானமாகக் கேட்டான்.

கருணா வாயே திறக்கவில்லை. சந்தானம் அவள் முகத்தைப் பார்த்து விட்டுப் பேசாமல் வெளியே போய்விட்டான்.

அவன் கொண்டு வந்த காய்களை எடுத்துச் சமைத்துப் போட்டாள் மனைவி. கணவனும் "போதும்," "வேண்டாம்" என்பதைத் தவிர வேறு எந்த வார்த்தையும் அவளுடன் பேசவில்லை.

அவன் காரியாலயத்திற்குச் செல்லு முன் அவளிடம் வந்தான். "தீபாவளிக்கு அவர்கள் வீட்டுக்கு வருவதாகச் சொல்லி விட்டேன். சாயங்காலம் நான் வரும் போது தயாராக இரு" என்றான்.

"நான் எங்கும் வரவில்லை. நீங்கள் வேண்டுமானால் போய்க் கொள்ளுங்கள். என் அழகுக்கு ஒரு தீபாவளிக் கொண்டாட்டம் வேண்டாம்" என்றாள்.

"ரொம்ப சரி, அப்பொழுது நான் சாயங்காலம் இங்கே வரமாட்டேன். எனக்குத் தீபாவளி உண்டு. என் மனதில் எந்த வயிற்றெரிச்சலும் துக்கமும் குடி கொள்ளவில்லை" என்றான்.

கருணா மௌனமாக இருந்தாள். சந்தானம் சென்று விட்டான்.

●

சாப்பாடு முடிந்ததும் கருணா படுக்கை அறையில் போய் உட்கார்ந்து கொண்டாள். 'என்ன இருந்தாலும் தங்கை தான் உசத்தியாய் ஆகிவிட்டாள். நான் வாய் திறந்து கேட்டும் கொடுக்கவில்லையே! இவரா நம் மனதை அறிந்து செய்யப் போகிறவர்!' என்று தனக்குள்ளேயே எண்ணி எண்ணிப் பொருமினாள்.

"அவர்கள் வீட்டில் அவள் பட்டுப் புடவை கட்டிக் கொண்டு மினுக்க, நான் மட்டும் புது நூல் புடவைகூட இல்லாமல் நிற்க வேண்டுமாமே! மனதில் மகிழ்ச்சியில்லாமல் என்ன பண்டிகை வேண்டியிருக்கிறது!" என்று அவள் மனம் அரற்றிக் கொண்டது.

கண்களை மூடிக்கொண்டு அவள் படுத்திருந்தபோது வேலைக்காரி அவளை வந்து எழுப்பினாள். "அம்மா வீடு மெழுக வேண்டாமா!" என்று வேலைக்காரி கேட்டதும் கருணா சுறுசுறுப்பின்றி எழுந்தாள். முகத்தைச் சுளுக்கிக் கொண்டாள்.

"ஒன்றும் வேண்டாம்" என்று அலுப்போடு கூறிவிட்டு, அவள் வேறு பக்கம் திரும்பிப் படுத்தாள்.

"அப்போ நான் பக்கத்து வீட்டை மெழுகிவிட்டு வருகிறேன். அவர்கள் கோலம் போடக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று கூறிவிட்டு வேலைக்காரி நிற்காமல் போய் விட்டாள்.

கருணா எழுந்து வாசற்பக்கம் வந்தாள். எதிர் வீட்டு வாசலில் அழகாகக் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள் அந்த வீட்டுப் பெண் கமலா.

"என்ன கருணா, பண்டிகை எவ்வளவு தூரம் வந்திருக்கிறது!" என்று சிரித்துக் கொண்டே கேட்டாள் கமலா.

"எதிர் வீட்டு வாசல்வரை" என்று பதிலளித்தாள் கருணா.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்! நீ ஒன்றும் செய்யவில்லையா! பாவம், உனக்கு மசக்கைத் தொந்தரவு! உன் கணவன் கடையிலிருந்து எல்லாம் வாங்கி வந்து விடுவார்" என்று அங்கலாய்ப்பது போல் கேலி செய்தாள் கமலா.

கருணா பதில் சொல்லவில்லை. ஆனால் கமலாவின் உற்சாகம் அவளுக்கு ரசிக்கவில்லை. "போதுமே, கமலா! உனக்குத் தான் கேலி செய்ய மனம் ஒப்புகிறது. நீ இருக்கும் நிலையில் உனக்குக் கோலம் போடக் கூடத் தோன்றுகிறதே!" என்றாள் கருணா அவளைப் பார்த்து.

ஏன் வாங்கவில்லை?

அநுத்தமா

கமலாவின் கணவன் அவளைப் பிறந்தகம் அனுப்பிவிட்டான். இரண்டாயிரம் ரூபாய் கொண்டு வந்தால் வரலாம், இல்லாவிட்டால் வேண்டாம் என்று கூறி விட்டான். இவர்கள் கையில் அவ்வளவு பெரிய தொகை இல்லை. கடன் மிகுந்து விட்டதால் பணம் புரட்டவும் இயலவில்லை. அவள் இங்கேயே இருந்து வந்தாள். இரண்டு நாட்களுக்கு முன் அவன் அவளிடமிருந்து விவாகரத்து நடவடிக்கையும் எடுப்பதாக நோட்டீஸ் வந்திருந்தது. அதை யெல்லாம் மனத்தில் நினைத்துத் தான் கருணா இப்படிப் பேசினாள்.

"கருணா, உயிர் இருக்கும்வரை ஆசை விடுவதில்லை என்பது உனக்குத் தெரியாதா! ஆசை இருக்கும்வரை நம்பிக்கையும் விடாது. அவர் தொடர்ந்து இருக்கும் நடவடிக்கை பூர்த்தியாகும் வரை அவர் என்னுடைய கணவர் தானே! அவர் மனம் மாறலாம். அப்பொழுது திடீரென்று பண்டிகை கொண்டாடுவதற்கு முடியுமா?" என்றாள் கமலா.

"ரொம்ப அழகாக இருக்கிறது உன் வியாக்கியானம். ஆண்பிள்ளைகள் ஒன்றை மனத்தில் வைத்து விட்டால் அதை மாற்றவே மாட்டார்கள். அவர்கள் பிடிவாதம் சிறு விஷயத்திலிருந்து பெரிது வரை ஒரே மாதிரிதான். வைத்தியம் நீ ஒன்று...... இன்று திடீரென்று மாறி அவர் வந்து விடப் போகிறாராக்கும்!" என்றாள் கருணா, தன் கடைசிச் சொல் கமலாவைப் புண்படுத்தும் என்றுகூடக் கவனிக்காமல்.

கமலா அப்பொழுதும் வறண்ட சிரிப்பொன்று சிரித்தாள். கருணாவைப் பார்த்து, "அதற்காக ஊரெல்லாம் என் விதியைப் பறை சாற்றச் சொல்கிறாயா!" என்று கேட்டுவிட்டு மௌனமானாள்.

கருணா அதற்கு என்ன பதில் சொல்லலாம் என்று யோசித்தாள்.

"கருணா, உனக்கும் உன் கணவருக்கும் ஏதாவது மனஸ்தாபமோ!" என்று கமலா கேட்டாள் திடீரென்று.

"ஏன்?"

"உன் முகம் சொல்கிறது. மேலும் உங்கள் வீட்டு வேலைக்காரி இப்பொழுது தான் வந்து விட்டுப் போனாள். அவள் கூறுவது போல நீ ஏன் இப்படி வீட்டைப் பாழாகப் போடுகிறாய்! நான் எதை என் மனசாலும் ஸ்மரிக்க மாட்டேன் என்று உதறித் தள்ளுகிறேனோ, அதை நீ வருவில் கொண்டாடுவாயேன்! அன்பான கணவர் இருக்கிறார். தங்கம்போல் குழந்தை வைத்திருக்கிறாய். ஊரெல்லாம் கூப்பிட்டுக் கல்யாணமாகக் கொண்டாட வேண்டிய சந்தர்ப்பம்..."

"சரி, சரி" என்று கூறிவிட்டுக் கருணா உள்ளே ஓடிவிட்டாள். கமலா வாய் விட்டுச் சிரிப்பது அவளுக்குக் கேட்டது.

கருணா தன் அறையில் போய் மீண்டும் உட்கார்ந்தாள். கமலாவும் கோலத்தை முடித்துவிட்டு உள்ளே போனாள். மறுபடியும் செம்மண் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு வந்து செம்மண் பூசுவதற்கு ஆரம்பித்து விட்டாள்.

•

வேலைக்காரி பாத்திரம் தேய்ப்பதற்காக மறுபடியும் வந்தாள்.

"நான் வீட்டை மெழுகா விட்டால் உனக்கென்ன! நான் கோலம் போடா விட்டால் என்ன! நான் எப்படிப் போனால் உனக்கென்ன! வீடு விடாகப் போய் உன்கிட்ட வம்பு பேசச் சொன்னேனா!" என்று கருணா வேலைக்காரியை ஆத்திரத்துடன் கடிந்து கொண்டாள்.

வேலைக்காரி மோவாய்க் கட்டையில் கையை வைத்துக் கொண்டாள்.

"நான் என்ன சொன்னேன், அம்மா! தலைப் பின்னித் தாரேன். சின்ன வயது. வேலை செய்து கொள்ள முடியவில்லை. பண்டிகைகூடச் செய்து கொள்ளாமல் படுத்திருக்கிறாள் என்று சொன்னேன். இது ஒரு தப்பா! பணத்துக்கு எவ்வளவு கஷ்டப் பட்டாலும் நாங்கள் கூடப் பண்டிகையை விடமுடியாமல் செய்கிறோமே! உன் மனசிலே எவ்வளவு ஆசையிராது! அதைத்தான் சொன்னேன்" என்றாள் வேலைக்காரி.

அவள் பேச்சைக் கேட்டதும் கருணாவுக்கு மிகவும் நாணமாகி விட்டது.

உலகத்தில் இவ்வளவு கஷ்டம் இருக்கிறதா! இவள் பணத்திற்காகத் தவிக்கிறாள். கமலா கணவனின் குணத்திற்காக ஏங்குகிறாள். நமக்கு என்ன குறை வந்து விட்டது! என்று தன் மனச்சாட்சியைக் கேள்வி கேட்டாள் கருணா. அதற்குப் பதில் ஒன்றும் தெளிவாக வரவில்லை போலும். தேய்க்க வேண்டிய பாத்திரங்களைப் பொறுக்கிப் போட்டுவிட்டு அவள் மீண்டும் உள்ளே வந்தாள்.

'இவர்கள் சொல்வது போல அப்படி ஒன்றும் மாக்கை தலை தூக்க முடியாமல் தவித்து விடவில்லை. கமலாவின் நிலைமைக்குப் பறை சாற்ற வேண்டுமோ என்று என்ன இடம் இருந்தால் நமக்கென்ன வந்து விட்டது?' என்று அவள் மனம் ஆராய்ச்சி செய்யத் தொடங்கியது. அவள் மறுபடியும் அலமாரியைப் பின்புறம் சென்றாள்.



"பச்சையம்மா, முதலில் வீட்டை மெழுகிவிடு, காயட்டும்; கோலம் போட வேண்டும். இத்தனை நேரம் தலைச் சுற்றல் கீழேயே முடியவில்லை" என்றாள் கருணா.

"இதோ! நிமிஷத்தில் செய்கிறேன், அம்மா!"

கருணா பரபரப்புடனே அரிசியை களைந்தாள். செம்மண்ணை ஊற வைத்தாள். பெட்டியைத் திறந்து ஒரு ரூபாயை எடுத்து வந்து வேலைக்காரியிடம் கொடுத்தாள். "போய்ப் பால் பண்ணையில் ஒரு படி பால் வாங்கி வா," என்று ஏவிவிட்டு அனுப்பி வைத்தாள்.

வேலைக்காரி திரும்புவதற்குள் அவள் பாதிக்கோலத்தைப் போட்டு விட்டாள்.

"அம்மா, நீ குனிந்து குனிந்து செம்மண் இடவேண்டாம். நான் இடுகிறேன்" என்றாள் வேலைக்காரி.

கருணா கோலமெல்லாம் முடித்துவிட்டு, அடுப்பைப் பற்ற வைத்துப் பாலை வைத்தாள். "கொஞ்ச நேரத்திற்குள் என்ன அட்டுத்தனம் வந்து மூடிக் கொண்டு விட்டது!" என்று அவள் தன்னையே நிந்தித்துக் கொண்டாள்.

ஓர் அடுப்பில் திரட்டுப் பால் காய்ந்தது. வேறு ஓர் அடுப்பைப் பற்ற வைத்துக் கொஞ்சம் ஓமப்பொடி செய்தாள் அவள். வேலை முடிந்ததும் தலை பின்னிப் போட்டுக்கொண்டு, உள்ளிருந்து எடுத்து ஒரு பட்டுச் சேலையைக் கட்டிக் கொண்டு வாசலுக்குச் சென்றாள்.

அவள் இவ்வளவும் ஏற்பாடு செய்து விட்டாளே தவிர, கணவனின் மனத்தில் தான் மூட்டி விட்ட சினம் மாறியிராதோ இல்லையோ என்ற அச்சம் அவள் மனத்தை உறுத்திக் கொண்டுதான் இருந்தது. 'அவர் இதற்குள்ளாகவே அருணாவிடம் என்ன சொல்லி விட்டாரோ! நாம் போய் நின்றால் அவர்கள் எப்படி வரவேற்பார்களோ! அவரே அவர்கள் எதிரில் நம்மை எப்படி யெல்லாம் அவமதிப்பாரோ!' என்று பல கேள்விகள் அவள் மனத்தில் எழுந்தன. ஆயினும் திட்டத்தைக் கைவிடவில்லை அவள்.

இப்படியே ஒன்றும் புரியாமல் குழம்பிக் கொண்டிருந்தாள் கருணா. திரட்டுப் பாலை இறக்கி அதற்கு வாசனைத் திரவியங்களைச் சேர்த்து ஒரு பாத்திரத்தில் எடுத்து வைத்துக் கொண்டிருந்தபோது வேலைக்காரி அங்கு வந்து சேர்ந்தாள்.

"அம்மா, ஐயா வந்து விட்டார். நான் வீட்டுக்குப் போகிறேன்" என்று கூறி விட்டுப் போக முயன்றாள் அவள்.

"ஆ! ஐயாவா!" என்று கேட்டு விட்டுத் துள்ளிச் சென்று கணவனை எதிர் கொண்டு அழைக்க வேண்டும் என்றிருந்தது கருணாவுக்கு. ஆனாலும் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் நிதானமாகப் பேசினாள். "சரி, நீ போகலாம். இரு வருகிறேன் வெற்றிலை பாக்குக் கொடுக்கிறேன்" என்று கூறிக்கொண்டே அவள் முன் பக்கம் வந்தாள்.

•

வீட்டின் அலங்காரத்தையும், தன் மனைவியின் அழகு உருவத்தையும் கண்டதும் சந்தானத்தின் முகத்தில் வியப்பும் சந்தோஷமும் போட்டியிட்டன. அவன் தன் கையிலிருந்த வெற்றிலை, புஷ்பம் முதலியவற்றை அவளிடம் நீட்டினான், அவள் கண்களை ஆராய்ந்தவாறே.

கருணா நிறைய வெற்றிலை பாக்கு, புஷ்பம், இரண்டு ரூபாய் எல்லாம் வைத்து வேலைக்காரியிடம் கொடுத்தாள். வேலைக்காரி "மகராஜியாக இருக்க வேண்டும்" என்று வாழ்த்திவிட்டுப் போய்விட்டாள்.



"ஏது, ஏது! கருணாவுக்கு ஞானம் பிறந்து விட்டது போலிருக்கிறதே" என்று கேட்டான் சந்தானம் உற்சாகத்துடன்.

"பெயர் தான் கருணா!" என்றாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்!"

கருணா அன்று நடந்தவை யாவையும் ஒன்று விடாமல் கூறினாள். "பர்மாக்காரம்மா பணத்திற்காகத்தான் தவித்தாள். அதைக் கொடுத்து நம்மால் உதவ முடியுமே என்று தோன்றியது. கொடுத்தேன். கமலாவிடம் அவள் கணவனைக் கொண்டு சேர்க்க முடியப் போகிறதா!" என்றாள்.

"கருணா, காலையில் நான் கோபமாகப் பேசிவிட்டுப் போய் விட்டேன். பிறகு மனம் வேதனைப்பட்டது. கையில் பணமில்லாத தோஷம் அப்படிப் பேசிவிட்டேன். மேலும் உனக்குப் புடவையைக் கொடுத்து விட்டாள். இத்தனை வருஷங்களாக அருணாவுக்கு வாங்கித் தந்துவிட்டு, இந்த வருஷம் விட்டுவிட்டால் உனக்குத்தான் கெட்ட பெயர் வரும் என்று வேறு கவலை எனக்கு. அதை வகையாகச் சொல்லத் தெரியவில்லை. பிறகு நானே தனிமையில் யோசித்துப் பார்த்தபோதுதான் என் அசட்டுத்தனம் புரிந்தது. இன்று அவர்கள் வீட்டுக்கு உன்னைக் கூட்டிக் கொண்டு போனால், கட்டப் புதுப் புடவை இல்லாமல் சங்கோஜப் படுவாயோ என்றும் தோன்றியது. ஆகையால் வரவில்லை என்று சொல்லி விட்டேன்" என்றான் சந்தானம்.

"நன்றாக இருக்கிறது! அங்கே போகத்தான் வெம்பிக் கொண்டிருந்தேன். நான் கொஞ்சம் பட்சணம் செய்து வைத்திருக்கிறேன். வாருங்கள் போகலாம்" என்றாள் கருணா.

"உண்மையாகவா! வேண்டாம். அங்கே போய் அவர்கள் மத்தியில் புதுத் துணியில்லாமல்......"

"உங்களுக்குத் தெரியாது. ஆனால் நான் இப்பொழுது புதுத்துணி பிரித்துக் கட்டக் கூடாது. எனக்கும் நினைவில்லை. ஏதோ கேட்டு விட்டேன். வளைகாப்பு அன்றைக்குத்தான் புதிது உடுத்தலாம்" என்று கூறினாள் கருணா உற்சாகத்துடன்.

"என் அருமை கருணா!"

"துர்க்குணா என்று அழையுங்களேன். பொருத்தமாக இருக்கும்" என்றாள் கருணா தலை குனிந்தபடியே. கணவனின் அன்புக்கு முன்னே தன் காலைச் செய்கை அவளுக்கு வெட்கமாக இருந்ததுபோலும்.

"அசட்டுப் பிசட்டென்று பேசாதே! வா போகலாம்" என்றான் சந்தானம்.

அவர்கள் போகும் வழியில் சந்தானம் கருணாவிடம் கேட்டான். "பண்டிகையை வீட்டில் கொண்டாடாததற்குக் கோலம் எதற்குப் போட்டாய்! குனிந்து குனிந்து நீ இருக்கும் நிலைமையில்......"

"நிலைமைக்காகத்தான்" என்று மெல்லக் கூறிவிட்டு வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டாள் கருணா.

சந்தானம் சிரித்துக் கொண்டான்.

அன்றிரவும் மறுநாளும் அருணாவின் வீட்டிலேயே தங்கி விட்டார்கள் தம்பதிகள். சந்தானத்திற்கு வேஷ்டி வாங்கிக் கொடுத்தனர் அருணாவின் புக்ககத்தினர். அருணா மாம்பழக் கலர்ப் புடவையை உடுத்திக் கொண்டு எல்லோருக்கும் பெருமையாகக் காட்டினாள். அதைக் காணும் போது கருணாவின் உள்ளத்திலும் பன்மடங்கு பெருமை பொங்கியது.

கணவனும் மனைவியும் மூன்றாம் நாள் வீடு திரும்பினார்கள். கருணாவுக்குச் சந்தோஷம் மிகுந்திருந்தது. "இவ்வளவு ஆனந்தத்தையும் இழக்க இருந்தோமே!" என்று நினைத்து நினைத்து அவள் மிகவும் அங்கலாய்த்தாள்.

கமலாவைக் கண்டு பேசிவிட்டு வர வேண்டும் என்றிருந்தது அவளுக்கு. இவள் வாசற் கதவைத் திறந்து கொண்டு தெருவில் போகவும், கமலாவும் அங்கே இவளை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

"கமலி, உன்னிடம் ஒன்று சொல்ல வந்தேன்" என்றாள் கருணா.

"நானும்தான் உன்னிடம் ஒன்று சொல்ல வந்தேன்" என்றாள் கமலா.

இருவரும் ஒருவரை ஒருவர் வியப்புடன் பார்த்து விட்டுப் பிறகு கருணாவின் வீட்டுக்குள் நுழைந்தனர்.

"கருணா, என் நம்பிக்கை வீண் போகவில்லை. என் சித்தப்பாவுக்கு என் விஷயம் தெரிந்து, இரண்டாயிரம் ரூபாயைத் தானே கட்டிவிட்டு, என் கணவரையும் கூட்டிக் கொண்டு வந்தார். அவர் இப்பொழுது எங்களுடைய வீட்டில் இருக்கிறார்" என்றாள் கமலா. ஆனால் அதைக் கூறுகையில் உணர்ச்சி மேலிட்டுக் கண்ணீர் உகுத்து விட்டாள்.

"என்ன சொல்கிறார், அவர்!" என்று கேட்டாள் கருணா.

"என்னைத் தண்டிக்க நினைக்கவில்லையாம் அவர். எங்கள் அப்பாவைப் பயமுறுத்த நினைத்தாராம். தன் சக்தியை மறைத்து இல்லாததையெல்லாம் ஆசை காட்டியதற்கு அவருக்குத் தண்டனையாம்."

"அதற்கு நீ பலியா! பேஷ்!"

"எப்படியானாலும் என்ன! காரியம் சுபமாக முடிந்து விட்டது. ஆனால் புண்ணைக் கிளறி ஆராய்வானேன்! அவர் பிரியமாக இருக்கிறார். நீ என்ன சொல்ல வந்தாய்!" என்று கேட்டாள் கமலா.

கமலாவின் மகத்தான நம்பிக்கை, சோதனை, அவள் மனத் தெளிவு, பெருந் தன்மை இவற்றிற்கு எதிரே, தன் அற்ப ஆசையும், கோபமும், சந்தோஷமும் நினைக்கக் கருணாவுக்கு மிகவும் வெட்கமாக இருந்தது.

"ஒன்றுமில்லை. உன் அன்புக் கரத்தால் என் கண்ணைத் திறந்து விட்டாயே. என் [illegible] கரைகடந்த சந்தோஷத்துடன் இருக்கிறது. நீ என்றும் குறைவின்றி வாழ்வாய்" என்றாள் கருணா நாத் தழுதழுக்க.

இருண்ட வாழ்வில்

பி.எஸ்.மணி





நீண்ட விசாலமான அறை. அவ்வறையைப் பல கண்ணாடி பீரோக்கள் அலங்கரித்தன. அவைகளில் அரிய உலக இலக்கியங்களும், பொறி இயல் புத்தகங்களும் அடுக்கு அடுக்காக, அழகாக வைக்கப்பட்டிருந்தன. காகிதப் பொருள்கள் அனைத்தும் அவ்வறையில் காணப்பட்டன.

மானேஜிங் டைரக்டர் பாலசுந்தரம் சுழல் நாற்காலியில் சுழன்றவாறு தமது தொழிற் சாலையின் அபிவிருத்திக்கான திட்டங்களை ஆராய்வதில் மூழ்கியிருந்தார். அவருடைய சிந்தனை அலைகளுக்கு அணை போடுவதற்கு வந்தவன் போல வேலைக்காரன் அவர் முன் தோன்றினான்.

அவர் எண்ணச் சுழலிலிருந்து விடுபட்டு, "என்னப்பா!" என்ற கேள்வியுடன் அவன் பக்கம் திரும்பினார்.

வேலைக்காரன் மிகுந்த பயபக்தியோடு, "ஐயா! தங்களைப் பார்க்க மானேசரு வந்திருக்காரு!" என்று பதிலளித்தான்.

"சரி! அவரை வரச் சொல்!" என்று கட்டளையிட்டார் பாலசுந்தரம்.

சில விநாடிகளில் அவர் முன் சிமெண்ட் தொழிற்சாலையின் மானேஜர் ஒரு பையனோடு வந்து நின்றார்.

"ஸார்! நமஸ்காரம். தங்கள் வீட்டில் சுற்றுப்புற வேலைகளைக் கவனிக்கப் பையன் வேண்டுமென்றீர்களே! இதோ சிறுவனை அழைத்து வந்திருக்கிறேன். சாதுவான பையன். அவனுக்குச் சூது தெரியாது......" என்று பையனைப் பற்றி அவர் விவரிக்கத் தொடங்கினார்.

பாலசுந்தரம் பையனை இரண்டு மூன்று தடவை ஏறிட்டுநோக்கினார். அச் சிறுவனுக்கு ஏழு வயது இருக்கும். கந்தல் ஆடைகளைக் கசக்கி அணிந்திருந்தான். சுருண்டு சுருண்டு வாரி விடப்படாத மயிர்; களையான முகம்; துரு துருப்பான கண்கள்; இவைதான் அவர் மனத் திரையில் விழுந்த அந்தச் சிறுவனின் சித்திரம்.

"மானேஜர்! சிறுவன் சின்னவனாயிருந்தாலும் சுறுசுறுப்புள்ளவனாகத் தோன்றுகிறான். அவனைச் சில நாட்கள் வீட்டில் வைத்திருந்து பார்க்கலாம் என்று எண்ணுகிறேன். பிடித்து விட்டால் அவனை இங்கேயே நிரந்தரமாக வைத்துக் கொள்கிறேன்" என்று பெரியதனத்தோடு கூறினார் பாலசுந்தரம்.

"அப்படியே செய்யுங்கள், நான் வருகிறேன்" என்று கூறி விடை பெற்றுக் கொண்டார் தொழிற்சாலை மானேஜர். துணைக்கு வந்தவர் விலகிப் போனதும் அந்தச் சிறுவனுக்குப் புலிக் கூண்டில் கொண்டு போய் நிறுத்தி விட்டது போன்ற நடுக்கம் ஏற்பட்டது. சுற்றிலுமுள்ள விசித்திரப் பொருள்கள் அனைத்தும் அவன் கண்களில் வியப்பாக விரிந்தன.

இச் சமயத்தில் பாலசுந்தரம், "விசாலம்!" என்று கூவினார். "இதோ, வந்து விட்டேன்" என்று இனிய குரலில் பதில் அளித்தவாறே அவர் முன் லக்ஷ்மீகரம் பொருந்திய பெண்மணி வந்து நின்றாள். அவள் வந்ததும் அவள் விழிகளில் புதிய பையனின் வசீகரமான தோற்றந்தான் பதிந்தது.

"விசாலம்! சமையற்காரனை வீட்டில் வைத்துக் கொள்ளத்தான் நீ ஆசைப்படவில்லை. நீயே சமையல் வேலைகளையெல்லாம் கவனித்துக் கொள்கிறாய். உன்னுடைய வேலைப் பளுவைக் குறைக்க, உனக்கு ஒத்தாசை செய்ய இப் பையனை அமர்த்தி விருக்கிறேன். இவனை வைத்துக் கொள்ள உனக்கு ஆட்சேபம் ஒன்றுமில்லையே!" என்று கேட்டார் பாலசுந்தரம்.

விசாலம் தனது கயல் விழிகளை மற்றொரு தடவை அந்தப் பையனின் மீது செலுத்தினாள். அந்தச் சிறுவனுடைய ஏக்கப் பார்வை அவளை ஏற்றுக்கொள்ள


வேண்டும் என்று அவனிடம் கெஞ்சிக் கேட்பது போலிருந்தது.

"அதற்கென்ன! இந்தச் சிறுவன் இங்கிருப்பதில் எனக்குத் தடையொன்றுமில்லை" என்று பகர்ந்தாள் விசாலம். பிறகு அந்தச் சிறுவனின் பக்கம் திரும்பி, "உன் பெயர் என்ன?" என்றாள்.

"என் பெயர்...விமலம்..." என்று நடுங்கும் குரலில் கூறினான் அவன்.

"பயப்படாதே! உன்னைப் பார்த்தால் சாப்பிட்டு ரொம்ப நாட்களாகி விட்டது போல் அல்லவா தோன்றுகிறது! வா, உனக்குச் சாதம் படைக்கிறேன். பிறகு பேசிக் கொள்ளலாம்" என்று அன்பொழுகக் கூறி விட்டு, அவன் கையைப் பற்றிக்கொண்டு சமையலறையை நோக்கி நடந்தாள்.

விசாலத்தின் அன்புப் பிரவாகத்தைக் கண்டு திகைத்தபடி கூடம் நாற்காலியில் சாய்ந்தார் பாலசுந்தரம். அவர் உள்ளம் பழையபடி தொழில் வளர்ச்சித் திட்டங்களின் ஆராய்ச்சியில் முற்பட்டது.



• • •

பாலசுந்தரம் திருநெல்வேலியில் ஒரு சிமெண்ட் தொழிற்சாலையை நிறுவி அதைத் திறம்பட நிர்வகித்து வந்தார். அவருக்கும் பூர்வீகமாகவே நிறையச் சொத்து இருந்தது. செல்வமிருக்கிறதென்று சோம்பேறியாக இராமல் தொழில் வளர்ச்சியில் தம் கண்ணோட்டத்தைச் செலுத்தினார். அவரிடம் கல்வியறிவும், இடையறா உழைப்பும் திறனும், தொழில் நுணுக்கமும் நிரம்பி இருந்ததால் அவருடைய தொழிற்சாலை நாளுக்கு நாள் பல்கிப் பெருகி வளர்ந்தது.

அவருக்குச் செல்வச் செழிப்போடு பேரழகும் நற்குணமும் பெற்ற விசாலம் மனைவியாக வாய்த்திருந்தாள். விசாலம் அவருடைய வாழ்க்கைப் படகு எந்தவித குந்தகமுமின்றி முன்னேறிச் செல்லப் பெருந் துணையாயிருந்தாள். எந்தக் காரியத்துக்கும் பாலசுந்தரம் அவள் தயவை நாடியிருக்கும்படி விசாலம் செய்திருந்தாள். பாலசுந்தரம் அவளிடம் பேரன்பும் பெரு மதிப்பும் வைத்திருந்தார். இத்தகைய அந்நியோன்ய தம்பதிகளுக்கு ஒரு குறை, குழந்தையில்லாக் குறைதான்.

2

விமலம் அந்தப் பங்களாவுக்குள் நுழைந்து ஒரு வாரமாகி விட்டது. விசாலத்துக்கு விமலம் வீட்டு வேலைகளில் அருந்துணையாயிருந்து வந்தான். குறுகிய காலச் சந்திப்பில் அந்தச் சின்னஞ் சிறு பாலகனின் மீது அவளுக்கு அளவு கடந்த பற்றுதல் ஏற்பட்டு விட்டது. அவனுக்கு வேலையிட அவள் சிறிதும் பிரியப்படவில்லை. அவனுக்கு நல்ல உடைகளளித்து, விதவிதமான உணவுப் பொருள்களைத் தயாரித்துக் கொடுத்து அவனைத் திருப்திப் படுத்துவதில் அவளுக்கு அளவிலா மகிழ்ச்சி ஏற்பட்டது. உள்ள நிறைவு இருந்தது.

அன்று அஸ்தமிக்கும் நேரம். மாலை மணம் கமழும் மௌனம் முகை விரித்தது. உணவு தேடச் சென்ற பட்சி ஜாலங்கள் தங்கள் கூட்டை நோக்கி விரைந்தன. பாலசுந்தரம் தொழிற்சாலையிலிருந்து களைப்புடன் வீடு திரும்பினார். வழக்கமாக வாசலில் நின்று வரவேற்கும் இன்முகத்தைக் காணவில்லை.

அவர் தமது அலங்கார உடைகளைக் களைந்து விட்டு வேற்றுடை யணிந்து கொண்டு விசாலமிருக்குமிடத்தை நோக்கிப் போனார். விசாலம் அன்றைய டிபனை விமலத்துக்குக் கொடுத்து அவன் ரசித்துச் சாப்பிடுவதையே மலர்ந்த முகத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள்.

தம் கணவரின் காலடிச் சத்தத்தைக் கேட்டதும் அவருக்கும் டிபனும் காப்பியும் வழங்கினாள். அவர் டிபனைச் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போதே விசாலம், "என்ன! என் உள்ளத்தில் ஒரு ஆசை தோன்றியிருக்கிறது. அதை நிறைவேற்றுவீர்களா!" என்று கேட்டாள்.

"விசாலம்! உன் விருப்பத்தை நான் என்றாவது நிறைவேற்றாமலிருந்ததுண்டா! என்ன ஆசை!"

"சின்னஞ் சிறு பையனான விமலத்தை வேலை வாங்குவதில் நான் சிறிதும் பிரியப் படவில்லை. அவனைப் பள்ளிக் கூடத்தில் சேர்த்துப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வரலாம் என்ற ஆசை..." இந்த இடத்தில் அவள் நிறுத்தினாள். பாலசுந்தரத்தின் முகத்தில் ஏற்பட்ட மாறுதல்தான் அதற்குக் காரணம்.

"வேலைக்காரப் பையனைப் பள்ளிக்கு அனுப்புவதா! நன்றாயிருக்கிறது!" என்று வெறுப்புக் கலந்த குரலில் ஏளனமாகக் கூறினார் அவர்.

"ஏன்! பள்ளிக் கூடத்துக்கு அனுப்பினால் என்ன! ஒரு ஏழைப் பையனைப் படிக்க வைத்தால் புண்ணியம் தானே!"

"பாவமும் புண்ணியமும் சரிதான். உனக்கும் பழையபடி வேலைப்பளு அதிகமாகி விடப் போவதைப் பற்றி நீ கவலைப் படவில்லையா! அதற்குத் தானே இவனை வீட்டில் வைத்துக் கொண்டேன்!"

"இவன் வந்ததனால் வேலை எந்த விதமான மாறுதலு மடைய வில்லை. இவ

னுடைய ஒத்தாசை எனக்கு வேண்டாம். ஆனால் இவனைப் பார்த்தவுடனேயே இவன் மீது எனக்கும் பாசம் பிறந்து விட்டது. அவனை நல்லபடியாக வளர்க்க வேண்டும் என்று தோன்றி விட்டது."

பாலசுந்தரம் அதற்கு மேல் விசாலத்தின் மனம் கோணும்படி நடந்து கொள்ள விரும்ப வில்லை. அவளுடைய ஆசைப்படியே விசுவத்தைப் பள்ளியில் சேர்ப்பதற்கு அவர் இசைந்தார்.

விசாலம் மறு நாளே தன் கணவரைக் கொண்டே விசுவத்தைப் பள்ளியில் சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்தாள். அவளுக்குத் தன்னுடைய முயற்சி கடைசியில் வெற்றி பலித்தது கண்டு பூரிப்பு ஏற்பட்டது.

நல்ல நாளில் விசுவம் பாடசாலைக்குச் சென்று படிக்கத் தொடங்கினான். அவனுக்குத் தினம் விதவிதமான அலங்கார அணிகளை அணிவித்து அனுப்பினாள். அவள் மனத்தில் இடைவிடாது அரித்து வந்த குழந்தை யில்லாக் குறையை விசுவத்தைப் பெறுவதில் மறந்திருந்தாள் என்பதைப் பாலசுந்தரம் புரிந்து கொள்ள முடியவில்லையே!

விசுவத்துக்குத் தினசரி உணவு கொடுத்து அலங்காரம் செய்து அனுப்புவதில், பாலசுந்தரத்தின் தேவைகளை அவளால் பூர்த்தி செய்ய இயலவில்லை.

பாலசுந்தரம் சில சமயம் மனம் விட்டு எரிச்சலோடு, "விசாலம்! நீ பழைய விசாலம் இல்லை. பேரன்புடன் என்மீது அன்பைச் சொரிந்த விசாலம் இல்லை. உன் அன்பெல்லாம் வேறெங்கோ திரும்பி விட்டது!" என்று கூறிவிடுவார். ஆனால் அவர் விசுவத்தின் மீதே பொறாமை கொள்ளும்படி நேரிட்டது. தன்னைக் கூடச் சரியாகக் கவனிக்காமல் விசுவத்தையே கண்ணும் கருத்துமாய்க் கண்காணித்து வருகிறாளே என்ற வருத்தமும் பொறாமையும் அவருக்கு எழுந்தது.

3

அந்த அறையில் ஆழ்ந்த நிசப்தம் நிலவியது. அறை பெரும் இருள் சூழ்ந்திருந்தது. மூலையிலிருந்த சோபா ஒன்றில் தொங்கிய முகத்தோடு அயர்வே வடிவாக அமர்ந்திருந்தார் பாலசுந்தரம். அவர் கண்கள் நீரைப் பெருக்கும் சக்தியை இழந்திருந்தன. வேதனை அவருடைய இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

அவர் சோக வெள்ளத்தில் மூழ்கியிருந்ததற்குக் காரணம் அவரை அன்புடனும் ஆதரவுடனும் பேணி வந்த அவர் உள்ளத்தரசியைக் காலன் அவரிடமிருந்து பிரித்து விட்டான். அவள் போன பிறகு உலகமே அவருக்கு அழிந்து விட்டது போன்ற உணர்ச்சி எழுந்தது. கண்ணிழந்தவனுக்கு வழிகாட்டி மறைந்து விட்டால் அவன் எப்படித் தவியாய்த் தவிப்பானோ, அதே நிலையில் அவர் இருந்தார்.

அவள் இவ்வுலகில் அவரைத் தன்னந்தனியே தவிக்க விட்டுச் செல்லக் காரணம் என்ன?......எல்லாம் அந்தத் துரதிர்ஷ்டம் பிடித்த சிறு பையனால்தான். அவன் மட்டும் இந்த வீட்டில் காலடி எடுத்து வைத்திரா விட்டால் அவர் அருமை மனைவி மழையில் சென்றிருக்க வேண்டியதில்லை. அதனால் அவள் உயிருக்கே அல்லவா ஹானி விளைந்துவிட்டது! இந்தக் கொடிய சம்பவம் அவர் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தது.

* * *

விசுவம் அந்த வீட்டுக்குள் புகுந்து இரண்டு வருஷங்கள் ஓடிவிட்டன. ஒரு நாள் விசுவம் வெகு நேரம் கழித்தும் பள்ளிக்கூடம் விட்டுத் திரும்பவில்லை. விசாலம் வாசலிலேயே நின்று அவன் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தாள்.

திடீரென்று வானம் இருண்டது. இடியும் மின்னலும் தொடர்ந்தன. காற்று



'விர்'ரென்று சுழன்றடித்தது. மழை 'சோ' வென்று கொட்டத் தொடங்கியது.

இடியும், மின்னலும், பெரு மழையும் அவள் மனத்தில் பெருத்த பீதியை விளைவித்தன. 'ஐயோ! இந்தக் கொட்டும் மழையின் நடுவில் விசுவம் அகப்பட்டுக்கொண்டால் என்ன செய்வது!' என்ற ஐயம் எழவும், குடையும் எடுத்துக் கொள்ளாது கொட்டும் மழையிலே அவனைத் தேடப் புறப்பட்டு விட்டாள். விசுவத்தின் மீது கொண்டிருந்த பாசம் அவளை வேகமாக உந்தித் தள்ளியது. விறுவிறென்று தன் ஆடைகள் நனைவதையும் பொருட்படுத்தாமல் அவள் போய்க் கொண்டிருந்தாள். பெண்களின் கருணை உள்ளந்தான் எத்தனை விசித்திரமானது! விவரம் தெரியாத பையனிடம் கூடப் பேரன்பு செலுத்தும் பண்பு அவர்களிடம் எப்படியோ ஒட்டி ஒளிந்திருக்கிறதே!

விசுவம் மழைக்காகப் பள்ளிக் கட்டடத்தில் ஒதுங்கி நின்று கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் பேரானந்தமடைந்தவளாய், "அப்பா! நல்ல காரியம் செய்தாய்! பெரு மழையில் அகப்பட்டுக் கொண்டாயோ என்று பயந்து போய் விட்டேன்" என்று கூறினாள்.

"அம்மா! எனக்காக நீ மழையில் நனைந்து விட்டாயே!" என்று வாஞ்சையுடன் கூறினான் விசுவம்.

இதற்குள் வானம் வெளுத்து விட்டது. விசுவத்துடன் விசாலம் வீடு திரும்பினாள். மழையில் நனைந்ததால் விசாலத்துக்குக் கடுமையான குளிர் ஜுரம் வந்து விட்டது. ஆனால் தன் உடல் நிலையை விசாலம் பாலசுந்தரத்தினிடம் கூறப் பயப்பட்டாள். அதனால் எத்தனையோ ஆபத்து நேர்ந்து விட்டது!

இரண்டாவது நாள் மாலை பாலசுந்தரம் வருவதற்கே காத்திருந்தது போல் அவள் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. விசுவம் கண்ணீர் மல்க அவளருகே வந்து அமர்ந்திருந்தான்.

பாலசுந்தரம் அவளுடைய நிலையைத் தெரிந்து கொள்ளாமல், அவள் படுக்கையில் படுத்திருப்பதைக் கண்டதும் பதறிப் போய், "உன் உடம்புக்கு என்ன! உடல் அனலாகக் கொதிக்கிறதே! என்னிடம் கூடச் சொல்லவில்லையே ஏன்!" என்றார்.

"அம்மா நேற்று மழையில் என்னைப் பள்ளிக் கூடத்திற்குத் தேடி வந்தாள். அதிலிருந்து அவளுக்கு..." என்று சிறிதும் கபடமறியாத விசுவம் ஏதோ திக்கித் திக்கிக் கூறினான்.

"என்ன! உன்னைத் தேடியா மழையில் நனைந்தாள்! உன்னால் தானா அவளுக்கு இந்த இடைஞ்சல்!" என்று வெறுப்புடன் கூறினார் பாலசுந்தரம். வெகு நாட்களாக அமுங்கிக் கிடந்த பொறாமை வார்த்தைகளாகப் பரிணமித்தது.


"அவன் ஒரு பாவமும் அறியாதவன். அவனைக் கோபித்துக் கொள்ளாதீர்கள்" என்று அந்தத் தள்ளாத உடம்பிலும் எழுந்திருந்து அவர் கோபத்தை அடக்க முயன்றாள். அதனாலேற்பட்ட அதிர்ச்சியினால் அவள் இதயம் திடீரென்று நின்று விட்டது. காலன் தன் கொடுங்கோன்மையைக் காட்டி விட்டுச் சென்று விட்டான்.

இந்தச் சம்பவம் அவர் நினைவுக்கு வந்ததும் அவருக்கு விசுவத்தின் மீது அளவு கடந்த வெறுப்பு உண்டாயிற்று. அவன் முகத்தில் விழிக்கவும் அவருக்கு அருவருப்பா யிருந்தது......


சோதனை கட்டுக்கு மீறிப் போகவே அவருடைய கண்கள் மிரள மிரள விழித்தன. சுற்றிலுமுள்ள பொருள்களனைத்தும் விசாலம் அவரை விட்டுப் பிரிந்து விட்டாளென்பதைப் பறை சாற்றின. வேதனை தாங்காமல் கண்களை இறுக மூடிக் கொண்டார்.

நேரம் போவது தெரியாமல் வெகுநேரம் சோபாவில் சாய்ந்திருந்தார் பாலசுந்தரம். அவருக்கு உணர்வோ, உலக சிந்தனைகளோ சிறிதும் இருந்ததாகத் தெரியவில்லை. அவர் மனத்திலே பெரும் கொந்தளிப்பும் குழப்பமும் ஏற்பட்டிருந்தன.

'விசுவம்! உன்னால்தான் என் அருமைத் துணைவியை இழந்தேன். நீ இந்த வீட்டில் காலடி வைக்காமல் இருக்கக் கூடாதா! என் இல்லத்தில் புகுந்து என்னிடம் விசாலம் கொண்டிருந்த அன்பை யெல்லாம்



மனமார்ந்த
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்
WEST END WATCH Co
BOMBAY
CALCUTTA



அபகரித்தாய். அது மட்டுமல்ல; என் இதயத்தரசியையே என்னிடமிருந்து பிரிக்க வந்த காலனாக அமைந்துவிட்டாய். நீ முடைகாளி. என்னை விட்டுப் போய் விடு. என்னை அனாதையாக்கிய நீ என் கண் முன்னும் நிற்காதே......!'

அவர் உள்ளத்திலே இத்தகைய ஆவேசத் தீ கொழுந்து விட்டு எரிந்தது. அவருக்கு மட்டும் கடவுள் நெற்றிக் கண்ணை அளித்திருந்தால் விஜயத்தைப் பிடிசாம்பலாக மாற்றி விருப்பார்.

நேரம் ஆமைபோல் ஊர்ந்தது. இதே சமயத்தில் விஜயம் ஒரு மூலையில் உன்மத்தம் பிடித்தவனைப் போல் தவித்துக் கொண்டிருந்தான். அவன் நெஞ்சில் பெரிய பாறை மோதித் தகர்த்துவிட்டது போன்ற உணர்ச்சி ஏற்பட்டது. தாய்க்கும் மேலாக அன்பைச் சொரிந்த விசாலத்தைப் பிரிந்ததில் அவன் அடைந்த துயரத்துக்கு அளவில்லை. அவளைப் பிரிந்த பிறகு அவனுக்கு அந்த வீட்டில் இருக்கப் பிரியமில்லை. அனாதையாகி விட்ட தான் வேறெங்கேயாவது போய்விட வேண்டும் என்றுதான் எண்ணினான்.

இந்த எண்ணம் அவன் மனத்தில் தோன்றியதும் மெதுவாக அடி வைத்துப் பார்த்து கொண்டே பாலசுந்தரத்தின் முன் போய் நின்றான். விஜயத்தைக் கண்டதும் பாலசுந்தரத்துக்குத் தம் உள்ளத்திலே எழுந்த வெறுப்பு அனைத்தையும் கொட்டித் தீர்த்துவிடத் தோன்றியது. ஆனால் விஜயத்தின் களையிழந்த முகத்திலிருந்த ஆழ்ந்த சோகப் பார்வை அதைச் சற்று தடுத்து நிறுத்தியது.

"நான் போய் வருகிறேன்..." என்று கண்களில் நீர் மல்கக் கூறினான் விஜயம்.

"எங்கே போகிறாய்!" என்று துவேஷக் குரலில் கேட்டார் பாலசுந்தரம். 'போ! என்னை அனாதையாக்கிய நீ வெளியேற வேண்டியதுதான்' என்று அவருடைய உள் மனம் எடுத்துரைத்தது.

இத் தருணத்தில் விஜயமும் அனாதை தான் என்று கொஞ்ச நாட்களுக்கு முன் தொழிற்சாலை மானேஜர் கூறி அவன் வாழ்க்கையையும் விவரித்துக் கூறியது அவர் நினைவுக்கு வந்தது.

'விஜயம் பிறந்தபோதே முடைகாளி என்று அவன் குடும்பத்தினரால் வெறுக்கப்பட்டான். அவன் பிறந்தபோதே தாயை விழுங்கிவிட்டதால் அவன் தந்தை அவனை வளர்க்கப் பிரியமின்றி வீட்டை விட்டு விரட்டிவிட்டார். அவன் அனாதை.'

பாலசுந்தரம் விஜயத்தின் பக்கம் திரும்பும்பொழுது அவர் கை மூக்காலியில் வைத்திருந்த விசாலத்தின் புகைப் படத்தைத் தட்டி விட்டது. படத்தை எடுத்து நேராக வைத்தார் பாலசுந்தரம். அவர் கண்களிலிருந்து ஒரு முத்துத் துளி உருண்டு படத்தில் விழுந்தது. அத் தருணம் விசாலமே உயிர் பெற்று வந்தது போன்ற பிரமை ஏற்பட்டது. அவருடைய கண்கள் அறை முழுதும் சுற்றிச் சுழன்றன. விசாலத்தின் மென் கரம் பட்டுப் பளபளப்பாயிருந்த பொருள்களெல்லாம் களையிழந்து காணப்பட்டன. அந்தச் சோபையற்ற பொருள்களில் எல்லாம் விசாலத்தின் சோகச் சித்திரம் பிரதிபலிப்பது போல் தோன்றியது.

'என்னிடம் உள்ள அன்பு தங்களுக்குக் குறையவில்லையே! அப்படியானால் என்னுடைய கடைசி விருப்பத்தை நிறைவேற்றி வைப்பீர்களா!'

'உன் ஆசையை நான் என்றுமே நிராகரித்ததில்லையே! உன் கடைசி விருப்பம் தான் என்ன?'

'விஜயத்தைத் தாங்கள் கைவிட்டு விடக் கூடாது! அவன் என் உயிர்!'

பொருள்களில் தோன்றிய விசாலத்தின் மாய உருவம் கானல் நீர்போல் தோன்றி மறைந்து விட்டது. பாலசுந்தரம் திடுக்கிட்டுக் கண்ணைத் துடைத்துக் கொண்டு பார்த்தார். அவரையு மறியாமல் அவர் உள்ளத்திலே, 'விசாலத்தின் அன்புக்குத் துரோகம் இழைக்காதே! விஜயத்தை உடனே ஏற்றுக் கொண்டுவிடு!' என்ற எண்ணம் உதித்தது.

இச்சமயம் விஜயம், "என் அம்மாளைப் பிரிந்த பிறகு இங்கிருக்கப் பிரியமில்லை" என்று தழுதழுத்த குரலில் கூறிவிட்டு வாசலை நோக்கி நடந்தான்.

விஜயத்தின் வேதனைச் சொற்கள் அவருடைய இதயத்தை ஊடுருவிப் பாய்ந்தன. அவர் கல் இதயத்திலே மெல்லிசைத் தெறிகள் ஒலித்தன.

'இளமை, ஆண்டுகள் செல்லச் செல்ல, வற்றிக் குறைந்து போகின்றனவே! மிருதுவான மலர்கள் எக்காரணமின்றியும் சாகின்றனவே! தாமரை இலையிலே உருண்டோடுகின்ற பனித்துளி போன்றது தானே வாழ்க்கை! மானிடர் அமரர் அல்ல; சாவுக்குள் சிறைபட்டவர்கள் தானே! இந்த அரிய கருத்துக்களை யெல்லாம் அடியோடு மறந்து உதறித் தள்ளிவிட்டு என்னைப் பிரிந்து சென்றவளையே நினைத்து மன முருகலாமா?'


அவருடைய இதய அந்தரங்கத்திலே ஒரு புதிய உத்வேகம் பிறந்தது. அந்த உத்வேகத்திலே துவேஷமும் வெறுப்பும் அழுந்திப் போய் விட்டன.


"விஜயம் நீ போக வேண்டாம். விசாலத்தை இழந்த நானும் அனாதை. நீயும் அனாதை. நீ எனக்குத் துணையாகவும் உனக்கு நான் துணையாகவும் இருக்க வேண்டும் என்பது எம்பெருமானின் திருவுள்ளம் போலும்! இல்லா விட்டால் கதியிலாருக்கும் துணையாக இருந்தவளை அழைத்துச் செல்வாரா! இனி நீதான் என் துணைவன்" என்று தளர்ந்த குரலில் கூறிக்கொண்டே அவனைத் தொடர்ந்து ஓடினார் பாலசுந்தரம்.

விஜயம் வியப்புடன் திகைத்து நின்ற படி அவரையே நோக்கினான். பாலசுந்தரம் வாசற்படியில் நின்ற அவனைச் சேர்த்து அணைத்துக் கொண்டார். விஜயமும் அவரைக் கட்டிக் கொண்டான். கண்ணிழந்து தவித்தவருக்கு ஊன்று கோல் கிடைத்தது போல் அவர் விஜயத்தின் அரவணைப்பில் தம் தனிமையை மறந்து விட்டார்.


அவர் இருண்ட வாழ்வில் ஒளி தோன்றியதைப் போல அச்சமயத்தில் வேலைக்காரன் மின்சார விளக்கைப் பொருத்தினான். அந்தப் பிரும்மாண்டமான அறை முழுவதும் பிரகாசம் நிறைந்தது.


குடலை ஒழுங்காக
வைத்திருங்கள் —
உற்சாகத்துடன்
விளங்குங்கள்
ஆரோக்யமே சுகவாழ்வுக்கு அடிப்படை.
ஆரோக்யம் பெறும் வழி, குடலில் விஷக்கழி
வுகள் தங்காமலிருப்பது தான்.
ஈனோஸ் 'ப்ரூட் ஸால்ட்' சாப்பிடுங்கள். அதன்
சௌம்ய விரேசக குணத்தினால்,
மான கழிவுப் பொருள்கள் அவ்வப்போது
வெளியேற்றப்படுகின்றன. உங்கள் ரத்தமும்
சுத்தியடைந்து, நீங்கள் பூரண ஆரோக்யமும்
உற்சாகமும் பெற அது விசேஷ
வகையில் உதவுகிறது.
ஈனோஸ்
'ப்ரூட் ஸால்ட்'
FRUIT SALT
ENO


ஒப்புயர்வற்ற
மும்மணிகள்
HINDUSTHAN 14
Studebaker
CHAMPION
STUDEBAKER TRUCK
ஹிந்துஸ்தான் மோட்டார்ஸ் லிட்., கல்கத்தா


எமது மனமார்ந்த
தீபாவளி
வாழ்த்துக்கள்
தி டாடா அயான் & ஸ்டீல் கம்பனி லிமிடெட்.

எதிரே அபாயம் காத்திருக்கிறது




முன்னதாகவே உங்களால் அதைத் தவிர்க்க முடியுமா ?

மோட்டார்காரர்களுக்கும், பாதசாரிகளுக்கும் மழமழப்பான டயர்கள் என்றால் அபாயம் என்றுதான் அர்த்தம். பிரேக் பிடிக்காது. அடிக்கடி சறுக்கும். அதனால் உயிர்ச் சேதம், எல்லாம் தொலையாத தொந்தரவுகள். பாதுகாப்பு அளிக்கும் 'டிரட்' ரப்பர் தேய்ந்து போகும்பொழுது டயரில் வெட்டுக் காயங்கள் ஏற்படுவது, பழுதடைவது, பங்ச்சர் ஆவது ஆகியன தவிர்க்க முடியாதன.

தொந்திரவை விலக்குங்கள். தாமதத்தையும், நஷ்டத்தையும் தவிருங்கள். தேய்ந்த டயர்களை "டயர் ஸோல்"லுக்கு அனுப்பி, சிரமம் தவிர்க்கும் புது "டயர் மைலே"ஜை, புதிய டயர்கள் வாங்கும் செலவில் ஒரு பகுதியைச் செலவிடுவதன் மூலம் பெறுங்கள்.

பாதுகாப்பு மனத்திருப்தியாகுங்கள்
டயர்ஸோல்ஸ் மனத்திருப்தியாகுங்கள்




இன்றே உங்கள் டயர்ஸோல்ஸ் (TYRESOLES) டீலரைப் பாருங்கள்

அல்லது எங்களுக்கு எழுதுங்கள்:

ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (ஸவுத் இந்தியா) லிட்.

ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (ஸவுத் இந்தியா) லிமிடெட்	ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (ஸவுத் இந்தியா) லிமிடெட்	டயர்ஸோல்ஸ் - பங்களூர் (ஸ்டேன்ஸ் மோட்டார்ஸ் (ஸ. இ.) லிமிடெட் கட்டாக)
திருச்சி ரோடு - கோயமுத்தூர்	89, [illegible] ரோடு, மதராஸ்-7	18, செயின்ட் மார்க்ஸ் ரோடு, பங்களூர்-1

அவசர மாப்பிள்ளை


சரி, மாப்பிள்ளை! போய் விட்டு வாருங்கள்.
டிக்கட்டை விட்டு விட்டுப் போய் விட்டேன்!
பர்ஸை விட்டு விட்டேன், எடுத்து வாருங்கள்!
மறுபடியும் திரும்பி விட்டீரே; எதை விட்டு விட்டீர்கள்!
ரயிலை விட்டு விட்டேன்.
ரயிலேத்தான் விட்டாச்சு. இன்னும் எதற்கு ஓடுகிறீர்கள்?
ரயில்வே ஸ்டேஷனில் என் கூஜாவை விட்டு விட்டேன்!



சாருமதி கேட்ட வரம்

எஸ். வி. எஸ்.

நட்டநடு மத்தியான வேளையில், வெய்யில் வீண் போகாமல் சித்திரக் கண்காட்சிக்குப் போய்ச் சேர்ந்தேன். நீண்ட நெடியதோர் கூடத்தில் சித்திரங்கள் பெரிய பெரிய சட்டங்களில் பதித்து அழகாக வைக்கப்பட்டிருந்தன. சோமநாதர் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்த சித்திரக் கலைஞர் என்றும், கிருஷ்ண தேவராயர் காலத்தில் இருந்தவர் என்றும் எங்கேயோ கேள்விப் பட்டிருந்தேன்.

நான் சென்ற வேளையில் கூட்டமே இல்லை. அதனால் ஒவ்வொரு படத்தின் முன்பும் நின்று கலைஞரின் நுணுக்க வேலைப்பாடுகளையெல்லாம் பார்த்து ரசித்து மகிழ முடிந்தது. இப்படி இரண்டு மணி நேரம் பார்த்தேன். கால் வலிக்க ஆரம்பித்து விட்டது. அந்தக் கூடத்தின் நடுவில் சற்று ஓய்வெடுத்துக் கொள்வதற்காகப் போடப் பட்டிருந்த பெஞ்சியில் போய் உட்கார்ந்தேன்.

நான் உட்கார்ந்த இடத்துக்கு நேர் எதிரில் ஒரு சித்திரம் இருந்தது. அது ஒரு போர் வீரனுடைய சித்திரம் போல் காணப்பட்டது. அதையே சற்று நேரம் கூர்ந்து பார்த்தேன். அதில் மற்றச் சித்திரங்களில் உள்ளதொரு விஷயம் இல்லாததைக் கண்டேன். ஆம், மற்றச் சித்திரங்களில் எல்லாம், சித்திரக் கலைஞரின் பெயர் பொறிக்கப் பட்டிருந்தது. சோமநாதர் என்று தேவநாகர எழுத்துக்களில் வரையப் பட்டிருந்தது. ஆனால் இந்தச் சித்திரத்தில் மட்டும் பெயரே இல்லை! தீட்டியவரின் பெயரே இல்லை!

"இது ஏன்!" என்ற கேள்வி என் மனத்தில் எழுந்தது.

"தம்பி, இதற்கு உனக்குத் திருப்திகரமான விடையளிக்க வேண்டுமென்றால் ஒரு கதையே சொல்ல வேண்டும்; கேட்கிறாயா!" என்றார் ஒரு வயதுமுதிர்ந்த பெரியவர். முகத்தில் நல்ல காந்தி வீசியது. அரையில் பஞ்சகச்ச வேஷ்டி யணிந்திருந்தார்; மேலுக்கு அங்கவஸ்திரத்தை யோக வேஷ்டியாக அணிந்திருந்தார். நெற்றியில் சந்தனத் திலகம் மிளிர்ந்தது.

"நீங்கள் கதை சொல்லுகிறீர்கள் என்றால் நான் கேட்க மாட்டேனா! பேஷாகச் சொல்லுங்கள்" என்றேன்.

★

சோமநாதருக்குக் கலை மடந்தையின் அருள் பரிபூரணமாக இருந்தது. அவர் கையில் வர்ணத்தையும், சித்திரக் கோலையும் பிடித்துக் கொண்டு வரைய முற்பட்



டாராவில் பிரம்ம சிருஷ்டியையும் தோற்கடிக்கும் வண்ணம் சித்திரங்களைச் சிருஷ்டிப்பார். ஆனால் அவருக்கு மலர்மகளின், லக்ஷ்மி தேவியின் அருள் இல்லாததனால் வறுமையில் உழல வேண்டி இருந்தது! ஆம், கலைமகளுக்கும் லக்ஷ்மிக்கும்தான் தீராச் சண்டை ஆயிற்றே. ஒரு தடவை இரண்டு மான் குட்டிகளின் சித்திரம் வரைந்திருந்தார். சித்திரம் மிக நேர்த்தியாக இருந்தது. அதை ஒரு பிரபுவிடம் விற்கக் கொண்டு சென்றார்.

பிரபு, சித்திரத்தைப் பார்த்து விட்டு, "அடடா! இந்த மான் குட்டிகளுக்குப் பதில் எங்கள் வீட்டுப் பசுவை வரைந்திருக்கக் கூடாதோ!" என்று கூறி, சொற்பத் தொகையைக் கொடுத்தனுப்பினர்.

அவர் கூறிய வார்த்தைகள் அவர் உள்ளத்தில் கூரிய அம்பைப் போல் தைத்தன. ஆயினும், பண அவசியத்தை முன்னிட்டு மறுமொழி கூறாமல் அவர் கொடுத்த ஒரு சில பொற் காசுகளை வாங்கிக்கொண்டு திரும்பினர்.

பிறகு சில நாட்கள் கழித்து யோசித்த போது அந்தப் பிரபு கூறிய மொழிகளிலும் உண்மை இருப்பதுபோல் தோன்றியது. 'கலை இஷ்டப்படி சித்திரங்கள் வரைவதை விட ஜனங்களின் விருப்பப்படி தீட்டுவதே மக்களின் பேராதரவு பெற வழி' என்ற முடிவுக்கு வரலானர்.

சில நாட்களில் சோமநாதர் மற்றொரு உண்மையும் அறியலானர். அதாவது, மனிதன் எல்லாவற்றையும்விட மேலாக விரும்புவது தன்னையேதான் என்பது. ஒரு பிரபுவின் உருவத்தைச் சித்திரமாக வரைந்தால், அந்தப் பிரபு அடையும் குதூகலம் கொஞ்ச நஞ்சமல்ல!

இந்த ரகசியத்தை அறிந்தவுடன் சோமநாதர் நாட்டுப் பிரமுகர்களின் உருவப் படங்களை வரையலானர். போர் வீரர்களின் சித்திரங்களை எழுதித் தந்தார். மந்திரிப் பிரதானிகள், இளவரசர்கள், மன்னர்கள் — இவர்களின் உருவங்களைச் சித்திரங்களாக வரைந்தார்.

வானுலகிலிருந்து சோமநாதர் வாழ்க்கையைக் கவனித்து வந்த கலைமகளின் முகத்தில் சுருக்கங்கள் விழுந்தன. மலர்மகளின் முகத்தில் புன்னகை தவழ்ந்தது.

★

மாலை நேரம்; பட்சிஜாலங்கள் தத்தம் கூடுகளை நோக்கி விரைந்தன.

கதிரவன் மறைந்து கொண்டிருந்தான். இருள் மெல்லப் படர ஆரம்பித்தது.

வானத்தில் சந்திரன் மெல்ல மெல்லப் பத்தரை மாற்றுத் தங்கத் தகடென ஜொலிக்கத் தொடங்கினன்.

நகரில் அமைதி நிலவ ஆரம்பித்தது. இரவில் மலரும் மல்லிகை, முல்லை முதலிய நறுமலர்கள் இதழ் விரித்து இன் மணம் எங்கும் பரப்பின.

பவழ மல்லிகையும் மரமல்லிகையும் பூத்துக் குலுங்கி 'கம்'மென்ற வாசனையைக் கனக மண்டலம் வரை வீசின.

இவை யாவற்றிலும் மேலாக அந்த அழகி மாடத்திலிருந்து அகிற் புகையின் இன்மணமும், சந்தனத்தின் நறுமணமும் வந்து கொண்டிருந்தன.

அந்த மாளிகையின் நிலா முற்றத்தில் சப்ரகூட மஞ்சத்தில் சயனித்திருந்தாள் அழகி சாருமதி தேவி.

அவள் அந்த நீல வான மண்டலத்தில் ஒளி வீசும் நட்சத்திரங்களை எண்ணிக் கொண்டிருந்தாளோ, அல்லது தனக்கு நேர முடியாத பாக்கியமெல்லாம் கிட்டியிருப்பதைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தாளோ யாருக்குத் தெரியும்! ஆயினும் சர்வாபரண பூஷிதையாய் விளங்கிய சாருமதியை அந்தப் பால் நிலவில் பார்க்கக் கொடுத்து வைத்தவர்கள், அந்த வான்மதி இவளுடைய முக காந்தியிடம் தோற்று விட்டது என்றே முடிவு கட்டி விடுவார்கள்!

அந்தப் பாக்கியம் கிருஷ்ண தேவராயரின் பிரதம சேனாபதி சந்திரசேனருக்குத் தான் வாய்த்தது. ஆம், அவரைத்தான் சாருமதி தனது ஆருயிர்க் காதலராக ஏற்றுக் கொண்டிருந்தாள். அவரைத் தவிர வேறு யாரும் அவளுடைய மாளிகையின் பக்கத்தில்கூட நெருங்க முடியாது.

அந்த வேளை சந்திரசேனர் சாருமதி இருந்த அவ்விடத்துக்கு வந்தார். வந்தவர் சற்றுத் தூரத்திலிருந்தே சந்திரிகையில் சோபிக்கும் தன் அருமைக் காதலி சாருமதியின் பேரெழிலைக் கண்டு அப்படியே வியந்து நின்றார், ஒரு கணம். பின்னர், "ஆகா சாருமதி! பூரண சந்திரன் உன் அழகுக்குத் தோற்றான்! அவனும் இந்த அவமானம் தாங்க முடியாமல்தானே என்னவோ, மேகத் திரைக்குள் தன் முகத்தை மறைத்துக் கொள்கிறான்!" என்று கூறிக்கொண்டே அந்தச் சப்ரகூட மஞ்சத்தில் அவள் அருகில் வந்து உட்கார்ந்து கொண்டார்!

"என்ன அழகு பெற்று என்ன பயன்! நீங்கள்தான் என்னை லட்சியம் செய்வதே இல்லையே! மாதக் கணக்கில் என்னைத் தனியே விட்டு விட்டு ராஜாங்கக் காரியமாகப் போய் விடுகிறீர்கள்! உங்கள் நெஞ்சங்கூடக் கல்லால் செய்யப்பட்டது போல் தோன்றுகிறதே!"

"'நெஞ்சங்கூடக் கல்லால் செய்யப்பட்டதுபோல் தோன்றுகிறதே' என்றால் என்ன அர்த்தம் சாருமதி!"

"கல்லைப் போன்ற திண்மை பெற்ற வீரப் புயங்களைப் பெற்றிருக்கிறீர்கள். பாறையைப்போல் உறுதி பெற்ற பரந்த மார்பைப் பெற்றிருக்கிறீர்கள். நெஞ்சமும் இரக்கம் என்பதில்லாத கல் நெஞ்சமாகப் பெற்றிருக்கிறீர்கள் என்றுதான் கூறினேன்" என்றாள் சாருமதி.

"சாருமதி! என் உடல் கல்லைப் போல் உறுதி பெற்றதாயினும், உள்ளே நினைத்த

மாத்திரத்தில் என் மனது கல்லைப் போல் கனத்து விடுகிறது!" என்றார்.

"தாங்கள் என்னை விட்டுப் பிரிந்து விட்டால், அந்தப் பிரிவுத் துயரைச் சற்றுத் தீர்ப்பதற்குத் தங்கள் படமாவது இருந்தால் தேவலை என்று வேண்டிக் கொண்டேன்! இன்னும் நீங்கள் எனக்கு அந்த உதவி புரியப் போகிறீர்கள்......!"

"இல்லை, சாருமதி! நீ கூறியது என் நினைவில் இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் நல்ல சித்திரக்காரரைப் பார்த்து அல்லவா, என்னைப் போல் சித்திரம் வரையச் சொல்ல வேண்டும்......"

"ஏன், சோமநாதர் நல்ல சித்திரக் கலைஞர் ஆயிற்றே! உங்களைத் தத்ரூபமாக வரைந்து விடுவாரே!"

"ஆம், சோமநாதர் நினைவே எனக்கு வரவில்லை...... நாளையே போய் ஏற்பாடு செய்து விடுகிறேன்" என்றார் சேனாபதி.

★

ஒரு மாதம் சென்றது. இன்று சேனாபதி சந்திரசேனர் வரும் நாள். சித்திரக் கலைஞர் சோமநாதரும் சித்திரத்தை எழுதி முடித்திருந்தார். தமது பொறாமையும் சித்திரத்தில் பொதித்து விட்டார். இனி அதில் செய்யவேண்டிய வேலையே கிடையாது!

யாரோ வரும் காலடிச் சத்தம் கேட்கிறதே! ஓ, அவரேதான். சேனாபதி சந்திரசேனர்தான் வருகிறார்!

"என்ன சோமநாதரே! படத்தை முடித்து விட்டீரா!" என்று கேட்டுக் கொண்டே வந்தார்.

"ஓ, முடித்து விட்டேன்! தங்கள் வரவுக்குத்தான் எதிர்நோக்கியிருக்கிறேன்!"

"எங்கே, எடுங்கள் பார்க்கலாம்!"

"இதோ!" என்றார் சித்திரக் கலைஞர்.

அங்கே சுவரில் சாத்தியிருந்த படத்தின் மேல் திரையை நீக்கினார்.

சேனாபதி சந்திரசேனரின் மற்றொரு உருவம் உயிரும் உணர்வும் கொண்டு தோன்றினாற் போல் காட்சி அளித்தது!

அந்தக் கம்பீரமான பார்வையும், சேனாபதிக்கு ஏற்ற உடைகளும், இடையில் செருகியிருந்த வாளையும் பார்த்து, சேனாபதியே பிரமித்துப் போய் விட்டார்.

கொஞ்ச நேரத்துக் கெல்லாம் சேனாபதி சந்திரசேனருக்கு அந்தப் படத்தில் ஏதோ குறை இருப்பது போல் தோன்றியது. நெற்றிப் புருவங்களைச் சுருக்கிக் கொண்டு ஏதோ யோசிக்கலானார்.

"என்ன! உங்களுக்குப் பிடிக்காத அம்சம் ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்!" என்றார் கலைஞர்.

"ஒரு கை இடுப்பிலிருக்கும் கத்தியிலே வைத்திருக்கிறீர்கள், மற்றொரு கை சும்மா விட்டிருக்கிறீர்களே. அது ஒரு கேடயம் பிடித்து இருப்பது போல் எழுதிவிட்டால் ரொம்பவும் நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. நீங்கள் கேடயம் பிடித்திருப்பது போலவே எழுதுங்கள்!" என்றார் சேனாபதி சந்திரசேனர்.

சோமநாதருக்கு இவ் வார்த்தைகள் நாராசம்போல் காதில் விழுந்தன. கையில் கேடயமும் கொடுத்து விட்டால் நாடக நடிகனின் ஒப்பனைபோல் அல்லவா ஆகி விடும் என்று மனத்தில் தீராத வேதனை யடைந்தார். இந்த அபிப்பிராயத்தைச் சேனாபதியிடம் சொல்லலாமா! தலை உருண்டு போய் விடும்!

"ஆகா! அப்படியே எழுதி விட்டால் போகிறது!" என்றார் சோமநாதர்.

"நாளை வருகிறேன். தயாராய் வைத்திரும்" என்று சொல்லிவிட்டுப் போனார்.

★


சேனாபதி சந்திரசேனர் உள்ளத்தில் பேர் உவகையுடன் தம் அருமைக் காதலி சாருமதியின் மாளிகைக்குச் சென்றார்.

ஆம், தம் காதலியிடம் "சோமநாதர் என்னுடைய அற்புதமான சித்திரம் தீட்டி விட்டார். நாளை கொண்டு வந்து பரிசளிக்கப் போகிறேன்!" என்று சொல்ல வேண்டும் என்ற ஆவலுடன் வந்தார்.

எப்பொழுதும் சந்திரசேனர், தமது காதலி சாருமதியின் மாளிகைக்கு வரும் பொழுது சேனாபதியின் உடையிலேயே வருவார். இன்று சாதாரண உடையில் வந்தார். மெல்லிய வெள்ளை வேட்டியைப் பஞ்சகச்சமாகக் கட்டிக் கொண்டும், மேலாக்கு ஒரு பட்டுப் பீதாம்பரத்தை அணிந்து கொண்டும் வந்திருந்தார்.



இருங்கள், இருங்கள்!



இப்படிப் பார்த்ததும், சாருமதி அப்படியே மெய் புளகித்தாள். "என் ஆருயிரே, இன்றுதான் நீங்கள் என் அன்பர், உண்மையான அன்பர் என்ற எண்ணம் மனத்தில் எழுகிறது. இத்தனை நாளும் தங்களைச் சேனாபதியின் உடையில் பார்த்துப் பார்த்து, தங்களிடம் அன்பு செலுத்துவது என் கடமை; இல்லாவிடில் நான் சேனாபதியின் தண்டனைக்கு உள்ளாவேன் என்ற பயம்தான் இருந்தது. இன்றுதான் எனக்குத் தங்களிடம் பயம் நீங்கிய அன்பு ஏற்பட்டது! காரணம் இந்தச் சாதாரண உடையே!" என்றாள்.

இந்த வார்த்தைகளைக் கேட்டபின்பு சேனாபதி சந்திரசேனர் தாம் சொல்ல வந்த விஷயத்தை வெளியிடக் கூடாதென்று தீர்மானித்தார்.

★

மறுநாள் காலை பொழுது விடிந்தவுடனேயே முதற் காரியமாக, சாருமதியின் இல்லத்தில் இருந்து சித்திரக் கலைஞர் சோமநாதர் இல்லத்துக்கு நேரே விரைந்தார் சேனாபதி சந்திரசேனர்.

சோமநாதர் முதல்நாளே வேடத்தைப் போட்டு அந்தச் சித்திரத்தை அலங்கோலமாக்கி வைத்திருந்தார்! ஆகவே, சோமநாதர் "நான் படத்தைத் தயாராக வைத்திருக்கிறேன்" என்றார்.

"நீங்கள் தயாராக வைத்திருக்கலாம். ஆனால் இன்னும் அதில் ஒரு சிறு திருத்தம் செய்து தரவேண்டும்!"

"வேடம், ரொம்ப நன்றாக இருக்கிறது! இதோ, பாருங்கள்! இந்தச் சேனாபதி உடையிருக்கிறதே அதை அப்படியே எடுத்து விட்டு இதோ உடுத்தி வந்திருக்கிறேன், பாருங்கள். இதே மாதிரி ஆடை அமைத்து விடுங்கள். இவ்வளவுதான்!" என்றார் சந்திரசேனர்.

★

இதனிடையே ஒரு நாள் சாருமதிக்கும் சந்திரசேனருக்கும் அழகு சம்பந்தமாக ஒரு சர்ச்சை ஏற்பட்டது.

அப்பொழுது சாருமதி "மானுக்கு அழகு தருவது எது!" என்று கேட்டாள்.

சந்திரசேனர், "அதன் மருண்ட பார்வைதான்" என்றார்.

"மயிலுக்கு!"

"அதன் தோகை!"

"கொடிக்கு!"

"அதில் மலரும் மலர்கள்!"

"அடடா! கொடி என்றும் மலர்க் கொடியைக் கூறவில்லை, 'பெண்களுக்கு?' என்றுதான் கேட்டேன்."

"அப்படித்தான் இருக்கட்டுமே, அப்பொழுதும் என் விடை சரிதான். இதோ மலரைப் போல் அரும்பும் புன்னகைதான் பெண்களுக்கு அழகு அளிப்பதும்" என்றார் சந்திரசேனர்.

"பரவாயில்லையே, எல்லாக் கேள்விகளுக்கும் சரியாக விடை கூறி விட்டீர்களே! சரி, கடைசியாக ஒரு கேள்வி கேட்கிறேன்......! அதற்குச் சரியாக விடை சொல்லுகிறீர்களா, பார்ப்போம்!"

"சரி, கேள்!" என்றார். "ஆண்களுக்கு அழகு அளிப்பது, எது?" என்றாள்.

சந்திரசேனர் யோசித்தார். நீண்டநேரம் யோசித்தார். எதுவும் சரியான விடையாகத் தோன்றவில்லை.

"சாருமதி! இந்தக் கேள்விக்கு என்னால் பதில் சொல்ல முடியவில்லை! நான் உனக்குத் தோற்றேன்......" என்றார் தோல்வியைக் கண்டறியாத சேனாபதி.

"நான் சொல்லட்டுமா! ஆண்களுக்கு அழகளிப்பது மீசைதான்! நான் சொல்லவில்லை, சாமுத்திரிகா லட்சண சாஸ்திரத்திலேயே போட்டிருக்கிறது! ஆனா, உங்களுக்கு மட்டும் கரிய, முறுக்கி விட்ட மீசையிருந்தால் நீங்கள் எவ்வளவு அழகாக இருப்பீர்கள்!" என்றாள் சாருமதி.

சந்திரசேனரின் மூளை குழம்பிற்று; பிரமை பிடித்தாற்போல் நின்றார்.

"அன்பரே! நீங்கள் எனக்காக மீசை வளர்ப்பீர்களா!" என்று கொஞ்சும் குரலில் கேட்டாள் சாருமதி.

சந்திரசேனருக்குத் தலையில் சம்மட்டி கொண்டு அடித்தாற் போலிருந்தது. இத்தனை நாள் கழித்து மீசையை வளர்ப்பதா!

"அன்பே! எனக்காக......" என்று தலையைச் சாய்த்துக் கொஞ்சினாள், சாருமதி மறுபடியும்.

"சாருமதி, நான் வளர்க்க முடியாது! ஆயினும் உன் விருப்பத்தை வேறு விதமாகப் பூர்த்தி செய்கிறேன். கவலைப் படாதே!" என்று அபயம் அளித்தார் சேனாபதி சந்திரசேனர்.

★

சோமநாதர் ஏதோ வேலையில் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது வாசற்புறம் காலடிச் சத்தம் கேட்டது. சேனாபதி சந்திரசேனர் உள்ளே வந்தார். தமது சித்திரத்தின் மீது மூடியிருந்த திரைச் சீலையைச் சேனாபதி எடுத்து விட்டுச் சித்திரத்தைப் பார்த்தார்.

"பேஷ்! பேஷ்! ரொம்ப ஜோராகப் போய் விட்டது! வேஷமும் பிரதாபமும் சக்தியும் கெம்பீரமும் ரொம்ப ஜோராக அமைந்து விட்டன! ஆனால்... இன்னும் ஒரே ஒரு திருத்தம் சோமநாதரே! எனக்கு நல்ல முறுக்கி விட்ட மீசை போட்டு விடுங்கள், சித்திரத்தில்....."

"சேனாபதி, நீங்கள் மீசை வைத்துக் கொள்ளவில்லையே! சித்திரத்தில் மட்டும் போட்டால்......" என்று மென்று தம் அபிப்பிராயத்தை வெளியிடலானார்.

"நான் சொல்லுகிறேன், நீர் ஏன் ஆட்சேபிப்பதற்கு! படத்தை வாங்கப் போகிறவன் நானா, நீரா!" என்று கடுமையாகக் கேட்டார் சேனாபதி.

சோமநாதரின் உள்ளம் தீரா வேதனையுற்றது. 'சீ, இதென்ன கஷ்டம்!' என்று தமக்குள் நொந்து கொண்டார். ஆனாலும் சேனாபதியின் கட்டளைக்குப் பணிவது தவிர வேறு வழியே தோன்றவில்லை.

"சரி, அப்படியானால் ஒரு கிழமை இருங்கள்! போட்டுத் தருகிறேன்."

அடுத்த கணம், அந்தச் சித்திரத்தில் தோன்றிய சந்திரசேனருக்குக் கரிய மீசை மிளிர்ந்தது! சந்திரசேனரின் முகத்திலும் அளவு கடந்த திருப்தி நிலவியது!

"பேஷாகப் போய் விட்டது! சோமநாதரே! இனி இதில் ஒரு திருத்தமும் கிடையாது! சித்திரம் அபாரம்! அற்புதம்!" என்றார் சந்திரசேனர்.

துக்கம் நெஞ்சை அடைக்க, "எனக்கு மட்டும் ஒரே ஒரு திருத்தம் செய்ய வேண்டியது பாக்கி இருக்கிறது! அதைச் செய்து விட்டால் சித்திரத்தை நீங்கள் எடுத்துச் செல்லலாம்!" என்றார் சித்திரக் கலைஞர் சோமநாதர்.

"இன்னும் என்ன திருத்தம்!" என்றார் சந்திரசேனர் வியப்புடன்.

"இதோ காண்பிக்கிறேன்" என்று சொல்லி விட்டு அந்தச் சித்திரத்தில் பொறித்திருந்த **சோமநாத:** என்ற தம் பெயரை அழித்து விட்டார்!

சந்திரசேனர், "இப்பொழுது படம் ரொம்ப அபாரமாகப் போய்விட்டது! முதலில் உமக்கு ஆயிரம் பொன் கொடுக்க





அனுபவமிக்க 616
பி.ஓ.ஏ.ஸி. விமான ஓட்டிகளில்
120க்கு மேற்பட்டவர்கள்
10 லக்ஷம் மைல்களுக்குமேல்
விமானம் ஓட்டி இருக்கிறார்கள்,
17 பேர்கள் அதைப்போல் இரு
மடங்கு தூரம் விமானம் செலுத்தி
இருக்கிறார்கள். ஒருவர் மட்டும்
30 லக்ஷம் மைல்களுக்குமேல்
விமானம் ஓட்டி இருக்கிறார்.
அதாவது உலகைச்சுற்றி
120 தடவைகள் போய்
வந்ததைப் போலுள்ள தூரம்.

பி.ஓ.ஏ.ஸி. உங்கள் பாதுகாப்பில்
அதிக கவனம் செலுத்துகிறது.

FLY B·O·A·C

பி.ஓ.ஏ.ஸி. விமானங்களில் செல்லுங்கள்.

பிரிட்டிஷ் ஓவர்ஸீஸ் ஏர்வேஸ் கார்ப்பரேஷன்

லாம் என்று நினைத்தேன். நீ செய்த இக் கடமைத் திருத்தத்தின் காரணமாக இரண்டாயிரம் பொன் கொடுக்கலாம் என்று தீர்மானித்து விட்டேன்!" என்று கூறி இரண்டு பண முடிச்சுக்களை எடுத்துக் கொடுத்தார்.

வானுலகிலிருந்து இதைப் பார்த்துக் கொண்டிருந்த கலை மடந்தை கண்ணீர் பெருக்கினாள். மலர் மடந்தைக்குத் தாங்கமுடியாத சிரிப்பு பொங்கி வந்தது!

★

சாருமதியின் மாளிகைக்கு அன்று மிக்க பெருமிதத்துடன் சந்திரசேகர் சென்றார். ஆம், இன்னுயிர்க் காதலிக்குப் பரிசாக அளிக்க அற்புதப் பொருள் கிடைத்திருக்கும்போது பெருமிதம் இருப்பது இயல்பே யல்லவா!

"சாருமதி, இன்றைக்கு மிக அற்புத மானதோர் பரிசு கொண்டு வந்திருக்கிறேன்" என்றார் சந்திரசேகர்.

"என்ன!" என்றாள் சாருமதி.

"உன் அன்புக்குப் பாத்திரமான ஒருவரை இன்று உனக்குப் பரிசளிக்கப் போகிறேன்..." என்றார்.

சந்திரசேகர் கண்களில் ஒளி வீசியது. சாருமதி திடுக்கிட்டாள்! "என் அன்புக்குப் பாத்திரமானவர் தங்களைத் தவிர வேறு யாரும் எனக்குக் கிடையாது! ஏன் இல்லாதது பொல்லாதது எல்லாம் சொல்லுகிறீர்கள்!" என்றாள் சற்றுக் கடுமையாகவே.

"உண்மையைச் சொல்! நீ இந்தச் சேனாபதியையா காதலித்தாய்!"

"ஆம், தங்களைத்தான் காதலித்தேன்."

"'தங்களை' என்பது இருக்கட்டும்! இந்தச் சேனாபதியையா காதலித்தாய்!"

சாருமதி ரொம்பவும் கலவரமடைந்தாள். தன் தலையில் ஏதோ வீண் அபவாதம் வந்து விழுகிறதே என்று கலங்கினாள். இன்னும் ஒரு கணம் சென்றால் அவள் 'ஓ' வென்று அலறி விடுவாள் போலிருந்தது! இருப்பினும் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, "நான் தங்களைத்தான் காதலித்தேன்! இக்காட்டுச் சேனாபதியல்ல தங்களைத் தான் காதலித்தேன்..." என்றாள்.

"இல்லை, நீ பொய் சொல்லுகிறாய்! நீ காதலித்த மனிதர் இதோ இருக்கிறார்" என்று கூறி "டேய், இங்கே கொண்டு வாடா!" என்று இரைந்தார்.

ஒரு சேவகன் சித்திரத்தைக் கொண்டு வந்து வைத்தான். சந்திரசேகர் திரையை விலக்கி, "இதோ இருக்கிறார், உன்னுடைய உண்மைக் காதலர்" என்றார் மிக்க பெருமையோடு.

சாருமதி ரௌத்ராகார மானாள்; காளியின் உருவெடுத்தாள். "யார் இவன்! இந்த அயோக்யன் யார்! இவனுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்! இவனை நான் முன்பின் பார்த்ததில்லை. ஏன் இந்த அபவாதத்தை என்மீது சுமத்துகிறீர்கள்! இந்தச் சண்டாளன் எவனோ! இந்தச் சூர்த்தன் யாரோ! இவனைச் சுக்கு நூறாகக் கிழித்து எறியுங்கள்" என்று இரைந்தாள்.

மலர்ந்திருந்த சந்திரசேகர் முகம் வாடிவிட்டது. "சாருமதி, ஏன் என்னை இப்படித் திட்டுகிறாய்!" என்றார் சந்திரசேகர்.

சாருமதிக்கு ஒன்றும் புரியவில்லை. "என்ன!" என்றாள் ஆச்சரியத்துடன்.

"இதோ பார், இந்தச் சித்திரத்தில் இருப்பவன் நானேதான். என் சித்திரம் ஒன்று வேண்டும் என்று கேட்டாய் அல்லவா! அதற்கு மறுநாளே நமது சித்திரக் கலைஞர் சோமநாதரிடம் சென்று என்னைப்போல் ஒரு சித்திரம் எழுதித் தரச் சொன்னேன். அவருக்கு ஒரு மாதம் அவகாசம் கொடுத்தேன். நான் கூறியபடி என் சித்திரத்தை வரைந்து முடித்திருந்தார். சித்திரம் வெகு நேர்த்தியாக இருந்தது. ஆனால் ஒரு நாள், நான் சேனாபதி உடையிலிருப்பதைவிடச் சாதாரண உடையிலிருப்பதே உனக்கு ரொம்பவும் பிடித்திருப்பதாகச் சொன்னாய் அல்லவா! உடனே அவரிடம் சென்று என் சித்திரத்திலிருந்து சேனாபதி உடையை அழித்து விட்டு, சாதாரண உடை அமைக்கச் சொன்னேன்! பின்னர் ஆண்களுக்கு அழகளிப்பது மீசை யென்று கூறி என்னையும் மீசை வளர்க்கச் சொன்னாயல்லவா! இத்தனை நாட்களுக்குப் பிறகு எனக்கு மீசை வளர்ப்பது சங்கடமாக இருந்தது. அதனால் எனக்குப் பதில் என் சித்திரத்தில் மீசை வைத்தால் உனக்கு ரொம்பவும் பிடிக்கலாம் என்று நினைத்தேன். உடனே சோமநாதரிடம் சென்று என் சித்திரத்தில் மீசை வைக்கச் சொன்னேன். இவ்வளவு பாடுபட்டு உன் மனதுக்குப் பிடிக்கக்கூடிய விதத்தில் என் சித்திரத்தை வரைந்து, அதை உனக்குப் பரிசாக அளிக்க விரும்பினால், இந்தச் சித்திரத்தில் நீ என்னையே காணவில்லை. யாரோ என்று என்னைத் திட்டிவிட்டாய்" என்றார் அந்த வீர சேனாபதி.

சாருமதிக்குச் சிரிப்பு வந்தது. விழுந்து விழுந்து சிரிக்க வேண்டும் போல் தோன்றியது. முரட்டு சுபாவம் படைத்த சேனாபதி தனது சிரிப்பைத் தவறாக எண்ணலாம் என்று பயந்தாள். எனவே, "சேனாபதி, என்னை மன்னித்து விடுங்கள்! தெரியாமற் செய்த தவறுக்கு என்னை மன்னித்து விடுங்கள்!" என்று இறைஞ்சினாள்.

அவர் மன்னித்தார் என்பதற்கு அறிகுறியாக அவள் எதிரிலேயே அந்தச் சித்திரத்தைச் சுக்கு நூறாகக் கிழித்தெறிந்தார்.

★

சில ஆண்டுகள் சென்றன. கிருஷ்ண தேவராயர் படை திரட்டிக் கொண்டு புறப்பட்டார். சேனாபதி சந்திரசேகரும் புறப்படவேண்டி யிருந்தது. சாருமதி, காதலரைப் பிரியவேண்டி யிருக்கிறதே என்ற தாங்க முடியாத வருத்தம் உள்ளத்தை அழுத்திய போதிலும், 'வெற்றி வீரராகத் திரும்புங்கள்' என்று வாழ்த்துக் கூறி யனுப்பினாள்.

ஆம், அவள் உள்ளத்துக்குள் ஒரு சிறு ஆசையுமிருந்தது. சித்திரக் கலைஞர் சோமநாதரை வரையச் செய்து சேனாபதியின் சித்திரத்தைப் பெற்று, பிரிவாற்றாமைத் துயரைச் சற்றுத் தணித்துக் கொள்ளலாம் என்று எண்ணினாள். அந்த எண்ணத்தில் தான் மகிழ்ச்சியுடனேயே சந்திரசேகரனுக்கு வழி யனுப்பினாள்.

சந்திரசேகர் சென்ற சில நாட்களுக்குப் பிறகு, ஓவியரைக் கண்டு தனது வேண்டுகோளைத் தெரிவித்தாள் சாருமதி.

சோமநாதர், "தாயே, தங்கள் காதலர் சேனாபதி சந்திரசேகர், போர்க் களத்தில் கொன்று மடித்த வீரர்கள் அனந்தம். அது பெரிதில்லை. அவர் என்னை வாழ வைத்து என் கலையைக் கொன்றுவிட்டார். எனக்கு இரண்டாயிரம் பொன் கொடுத்தார். அன்றைய தினத்திலிருந்து இனி இந்த ஜன்மத்தில் சித்திரம் தீட்டுவதில்லை என்று சபதம் செய்திருக்கிறேன்" என்று உள்ளம் குமுறிக் கூறினார்.

"ஐயா, என் மேல் இரக்கம் கொள்ளுங்கள்; கருணை காட்டுங்கள்!" என்றாள்.

இப்படி ஒருநாள் அல்ல; இரண்டு நாள் அல்ல! பல நாட்கள், பல மாதங்கள் நடையாக நடந்தாள்; இறைஞ்சினாள்.

சோமநாதரின் மனம் இளகி விட்டது!

நீண்ட நாட்களுக்குப் பிறகு வண்ணக் கட்டிகளைத் தொட்டார். சித்திரக் கோலைப் பிடித்தார். திரைத் துணியை விரித்தார். சித்திரம் வரைந்தார்.

இதைக் கண்ட சாருமதி, சேனாபதி எதிரில் நிற்பது போன்ற பிரமை கொண்டாள். அப்படியே மார்புறத் தழுவிக் கொள்ள எண்ணினாள்.

சாருமதி தன் கைகளில் அணிந்திருந்த பொன் வளையல்களைக் கழற்றினாள். "ஐயா, என் வீட்டுக்குச் சென்று இன்னும் பொன் முடிச்சுக்களை அனுப்பி வைக்கிறேன்" என்று நன்றி பொங்கக் கூறினாள்.

"அம்மா, எனக்குப் பொன்னும் வேண்டாம், மணியும் வேண்டாம். பொன்னுக்கும் பொருளுக்கும் எழுதிய காலம் முடிந்து விட்டது! இது உன் காதலுக்காக எழுதப்பட்ட சித்திரம்! உன் அன்பர்மேல் நீ கொண்டிருக்கும் காதல், என் சபதத்தைத் தளரச் செய்தது! நீ எனக்குச் செய்யக் கூடிய பிரதியுபகாரம் நீ உன் காதலரிடம் மாறு கேளாமல் என்றும் கொண்டிருப்பது தான்!" என்று கூறி விட்டு, அந்த வளையல்களை மீண்டும் அவளிடமே திருப்பிக் கொடுத்தார்.

வானுலகத்திலிருந்து இதைப் பார்த்த மலர் மடந்தை முகத்தைச் சுளித்துக் கொண்டாள். கலை மடந்தை வெற்றிப் புன் முறுவல் பூத்தாள்!

★

மேற் கண்ட கதையைச் சொல்லி விட்டு அங்கு தோன்றிய அந்தப் பெரியவர், "தேவரீர், இந்தக் காலத்துக் கலா ரஸிகர்கள். பெயரைப் பொறிக்கவில்லை யென்றாலும், இது சோமநாதரின் பாணி தான் என்று அறிந்து இந்தச் சித்திரத்தையும் 'சோமநாதரின் சித்திரக் காட்சி'யில் சேர்த்து வைத்திருக்கிறீர்களே!" என்று பாராட்டினார்.

"அது சரி, இத்தனை நீளக் கதையைச் சொன்னீர்களே. ஆனால் தாங்கள் யார் என்று கூறவில்லையே!" என்றேன்.

"ஏன், நான்தான் சோமநாதன்!" என்று கூறிவிட்டு மாயமாய் மறைந்தார் அந்தப் பெரியவர்.

எனக்குத் தலையில் பேரிடி விழுந்தது போலிருந்தது. ஆனால் இடி ஒன்றும் விழவில்லை. என் தலையைத் தட்டி எழுப்பி, "ஸார், இது தூங்குவதற்குப் போட்ட பெஞ்சு அல்ல. சற்று ஓய்வெடுத்துக் கொள்ளப் போட்டதுதான்! தூங்க வேண்டுமென்றால் வீட்டுக்குப் போய் நிம்மதியாகத் தூங்குங்கள்" என்று கூறினான், கண் காட்சியில் நியமிக்கப்பட்டிருந்த சேவகன்!


உபசாந்தி லோகம்
ஞான ரதம்
மகாகவி சுப்பிரமணிய பாரதியார்
- சந்திரா -


கந்தர்வ லோகம்
சந்திரா.

கந்தர்வ லோகம்




கந்தர்வ லோகம்


ஸத்யலோகம்

மண்ணுலகம்



தர்ம லோகம்




தர்ம லோகம்



அன்னக்குடி சம்புவையர் கண்டுமுதலைக் கவனிப்பதற்காக ஒரு மாத லீவில் ஊருக்கு வந்து சேர்ந்தார். ஆனால் விதி வேறு ஏற்பாடு செய்திருந்தது.

அறுப்பு அறுத்த நாள் களத்திலிருந்து வரத் தாமதமாயிற்று. சிவந்தான் மா மா என்று எருமை மாதிரி அலைந்தான். "நடையை விரிப் போடுடா, சிவந்தான்!" என்று எரிச்சலுடன் ஒரு சத்தம் போட்டார் சம்பு. ஆனால் வார்த்தையை முழுவதும் முடிக்க வில்லை. "சிவ......" என்றுதான் அவரால் சொல்ல முடிந்தது.

மூன்று தடவை 'சிவந்தான் சிவந்தான்' என்று சொல்லப் போராடினார். மூன்று தடவையும் "சிவ......" என்பதற்கு மேல் சொல்ல முடியவில்லை.

அவ்வளவுதான்! கையி லிருந்த குடை கழுவிக் கீழே விழுந்தது. கால் துவண்டது. ஆள் கீழே பொத்தென்று விழுந்து விட்டார். இந்த உலகில் அவரது காலம் முடிந்து விட்டது!

★

சிவகணங்கள் ஓடோடி வந்தார்கள். யமதூதர்களை விரட்டி யடித்து விட்டுச் சம்புவையரை அழைத்துக் கொண்டு கைலாசத்தை நோக்கிப் புறப்பட்டார்கள்.

என்ன உபசாரம்! என்ன மரியாதை! எவ்வளவு அன்பு! சம்புவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"ஏன் அப்பா, நீங்கள் எல்லாம் யார்? சொல்லுங்கள்; எனக்கு ஒன்றும் புரியவில்லையே!"

"ஸ்வாமி, நாங்கள் சிவகணங்கள். பூவுலகத்தைத் துறக்கும் போது நீங்கள் 'சிவ, சிவ, சிவ!' என்று மூன்று தடவை எங்களப்பன் நாமத்தைச் சொன்னீர்கள். ஓடி வந்துவிட்டோம். கைலாசநாதரின் சன்னிதியில் தங்களைக் கொண்டு சேர்க்கப் போகிறோம். சாகும்போது 'சிவ' என்று ஒரு தடவை சொன்னாலே போதும்......... மூன்று தடவைகள் சொன்னீர்களே!"

"மூன்று தடவையா! சிவா என்று!......நானா?" என்று திகைப்புடன் கேட்டார் சம்பு.

"ஆமாம். மூன்று தடவை......! யாருக்குக் கிடைக்கும் இந்தப் பாக்யமே? பாபிகள்தான், பெண்டாட்டி, பிள்ளை, எருமை மாடு, பாங்கிப் பணம், சொத்து எல்லாவற்றையும் நினைத்துக் கொண்டு உயிரை விடுவார்கள். நீங்கள் எங்களப்பன் நாமத்தைச் சொல்லி விட்டீர்களே? அந்தப் பதர்கள்மாதிரி இனிமேல் நீங்கள் பிறவித் துன்பத்தில் விழப் போவதில்லை" என்றனர் கணங்கள்.

"சிவனடியார்க்கு ஜே! அன்னக்குடி சம்புமூர்த்திக்கு ஜே!" என்ற ஜய கோஷங்கள் கைலாச மார்க்கம் முழுவதும் எதிரொலித்தன.

சம்பு விழித்துக்கொண்டு ஜாக்கிரதையாகி விட்டார். "ஓகோ! அதைச் சொல்லுகிறீர்களா? ஆமாம்! மாரடைப்பு மாதிரி இருந்தது. 'சுருக்' கென்று மார்பிலும், நெஞ்சிலும் ஒரு வலி ஏற்பட்டது பாருங்கள். சரி, நமக்கு நோட்டீஸ் வந்து விட்டது என்று தெரிந்து விட்டது. உடனே யம கிங்கரர்கள் ஏழெட்டுப் பேர் இருக்கும். ஏழெட்டா? ... ம்... ஏன், பதினைந்து பேர்கள் கூட இருக்கும். ஆளுக்கு ஒரு கயிற்றை எடுத்துக் கொண்டு வந்து நின்றார்கள். அந்த அடர்ந்த ரோமமும், கறுப்பு உடம்பும் நெருப்பு முழியும் பார்க்கவே நடுக்கமாக இருந்தது. என்ன செய்வதென்று தயங்கினேன். நல்ல வேளையாக ஞாபகம் வந்தது. உங்களப்பன் ஞாபகம் வந்தது......"சிவா, சிவா, சிவா!" என்றேன். எடுத்தான் பார் ஓட்டம் அந்தப் பயல்கள் எல்லாம்! எல்லாம் என் அப்பன், கைலாசநாதன், கருணாநிதி, ஆபத்பாந்தவன், அநாதரக்ஷகன் அருள்தான்!"

"சந்தேகமென்ன...மகாதேவருக்கு ஜே! பரமேச்வரருக்கு ஜே!" என்று சிவகணங்கள் நக்ஷத்திரங்களை இறைப்பதுபோல் கோஷத்தால் ஆகாசத்தை நிரப்பினார்கள்.

"ஸ்வாமி, பதினாயிரம் வருஷத்துக்கு ஒரு முறைதான் இந்த அதிர்ஷ்டம் ஒருவருக்குக் கிட்டும். இனிமேல் சிவனடியார்களின் முன்னணியில் உங்கள் நாமம் நின்று சுடர்விடப் போகிறது. சிவபத சந்நிதியில் இனிமேல் உங்களுக்குத்தான் முதலிடம்" என்று சிவகணங்கள் தங்கள் பக்தியையும் வியப்பையும் வெளியிட வார்த்தையும் வல்லமை யில்லாமல் மிகவும் தவித்தார்கள்.

"சரி......சாமி இப்பொழுது நேரே எங்கே போகிறோம்?" என்று கேட்டார் சம்பு.

"ஏன், நேராகக் கைலாசத்துக்குத்தான்" என்றனர்.

அவர் திகைத்து நிற்பதைப் பார்த்துச் சிவகணங்களும் நின்று விட்டார்கள்.

"ஏன், என்ன செய்ய வேண்டும்?" என்றனர் கணங்கள்.

"ஒன்று மில்லை, கொஞ்சம் காரியமிருக்கிறது. அரை மணி நேரம் நீங்கள் இங்கேயே காத்துக் கொண் டிருந்தால், நான் போய் வேலையை முடித்துக் கொண்டு வந்து விடுகிறேன்..."

"ஏன், நாங்கள் செய்கிறோமே. எதற்கும் தாசானுதாசர்களாகக் காத்திருக்கிறோம். அடியார்க்கு அடியார்கள் நாங்கள்—"

"இதெல்லாம் உங்களுக்குத் தெரியாது. ஒரு ஜோஸ்யரைப் பார்த்து விட்டு வரவேணும்."

"எங்கே இருக்கிறார் உங்களுடைய ஜோஸ்யர்?"

"அவர் மைசூர் ராஜ்யத்திற்கு வடக்கே இருக்கிறார். ஆனால் அவரை நேரிடையாக எனக்குத் தெரியாது. அவரை மதராஸில் இருக்கிற ஒரு ஜோஸ்யர் மூலமாகத்தான் பார்க்க வேணும். முதலில் மதராஸ் போக வேண்டும். அப்புறம் மைசூர் போய் விட்டு வரவேணும்."

"அதெல்லாம் பூலோகத்தில் அல்லவா இருக்கிறது?"

"பின்னே மதராஸும் மைசூரும் எங்கே இருக்கும்?"

"அங்கே திரும்பிப் போவதானால் சிரமமாயிற்றே?"





"பரவாயில்லை. நான் போய்விட்டுத்தான் திரும்பி வரவேணும். ரொம்ப அவசரம்!"

"நீங்கள் செத்துப் போய் விட்டீர்களே. எப்படித் திரும்பிப் போக முடியும் அங்கே?"

"முடியாததினால்தான் உங்களைக் கேட்கிறேன். யாராவது ஒருத்தர் என்னோடு வாருங்கள். போதும். அதிகநேரமாகாது, அரை மணிதான்."

"சரி.....அப்படி அவசியம் போய்த்தான் ஆகவேண்டும் என்றும் நான் வருகிறேன். நீங்களெல்லாரும் இங்கேயே இருங்கள்" என்று கணங்களிடம் சொல்லிவிட்டு, வக்ரநாளன் என்ற ஒரு பூதம் சம்புவை அழைத்துக் கொண்டு பூலோகத்தை நோக்கித் திரும்பினான்.

முதலில் வண்ணாரப்பேட்டை சிவ நேசர் சங்கத்தில் நுழைந்தார் சம்பு. ஐந்து நிமிஷத்திற்கெல்லாம் வெளிப்பட்டார். வெளியே காத்திருந்த வக்ரநாளனுடன் நேராகப் பங்களுருக்குப் போய்ச் சேர்ந்தார்.

அங்கும் வீர சைவக் கழகத்தை அடைந்து வெளியே பூதத்தை இருக்கச் சொல்லிவிட்டு உள்ளே போனார். மூன்று நிமிஷத்துக்குப்பின் வந்தார்.

இருவரும் அங்கிருந்து தார்வார் ஜில்லாவில் ஒரு பஞ்சாயத்து டவுனுக்குச் சென்று வீர சைவ லிங்காயத் ஆசாரியரைச் சந்தித்துவிட்டு மடத்தை விட்டுக் கிளம்பினார்கள்.

அங்கும் வக்ரநாளன் வெளியே தான் காத்திருந்தான்.

"என் அலுவல் முடிந்தது. இனி மேல் உன் இஷ்டம்" என்றார் சம்பு. இருவரும் அங்கிருந்து வேகமாகக் கிளம்பி விட்டார்கள்.

"என்ன ரொம்ப 'லேட்' ஆய் விட்டதோ? அரை மணி என்று சொன்னேன். முக்கிய காரியம் கொஞ்சம் முன்னே பின்னேதான் ஆகிறது. என்ன பண்ணுகிறது......?" என்று ஆகாசத்தில் காத்துக் கொண்டிருந்த சிவ கணங்களிடம் மன்னிப்புக் கேட்கிற பாவனையில் சம்பு வருத்தத்துடன் சொல்லிக் கொண்டார்.

"அதனால் என்ன ஸ்வாமி! அடியார்க்கடியார்கள் நாங்கள். பக்தர்களுக்குக் காத்திருப்பதைவிட நாங்கள் என்ன வெட்டி முறிக்கிறோம்?" என்று புஷ்பதந்தன் சொன்னான்.

"நல்ல வேளையாக என் வயிற்றில் பாலை வார்த்தீர்கள், ஸ்வாமி. எனக்கு வேறு சந்தேகம் வந்து விட்டது" என்றான் தண்டு என்ற பூதம்.

"என்ன சந்தேகம்?"

"தாங்கள் கோபித்துக் கொண்டு போய் விட்டீர்களோ என்றுதான்"

"எனக்கு என்ன ஐயா கோபம்?"

"இல்லை. 'சிவா' என்று ஒரு தடவை அழைத்து விட்டாலே போதும். நாங்கள் அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்திருக்க வேண்டும். மூன்று தடவை நீங்கள் சொன்ன பிறகுதானே வந்தோம். என்னடா, அத்தனை நாழிகை காக்க வைத்துவிட்டார்கள் என்று தாங்கள் கோபித்துக் கொண்டுதான் திரும்பிவிட்டீர்களோ என்று வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருந்தேன். என் நல்ல காலம்......திரும்பி வந்துவிட்டீர்கள்."

"ஹஹ்ஹஹ்ஹ...மூன்று தடவை என்னப்பன் நாமத்தைச் சொல்ல வைத்தீர்களே. அதை நினைந்து நான் பூரித்துப் போய்விட்டேன். நீ என்னமோ, கோபம், வயிற்றிலே பாலு, நெருப்பு என்று என்னென்னமோ சொல்கிறாயே? என்னப்பன், கைலாசநாதன்......மகாப் பிரபு."

மீண்டும் பரமேச்வரனுக்கு ஜய சப்தமிட்டு அஷ்ட திக்குகளும் எதிரொலிக்க வாழ்த்தினார்கள் கணங்கள். கைலாசம் வந்துவிட்டது. அங்கங்கே இருந்த கணங்களும் புது பக்தரை வணங்கி நமஸ்கரித்து ஊர்வலத்தில் கலந்து கொண்டார்கள். சம்போ, மஹாதேவா, சங்கரா, என்று அங்கு வானம் முழுவதும் சங்கரநாமம்தான் முழங்கிக் கொண்டிருந்தது.

★

அதோ வந்துவிட்டது பரமேச்வரனின் இருப்பிடம். ஸ்வர்ணமும் ரத்னங்களும் மின்னிப் பளிச்சிட, ஒரே ஜாஜ்வல்யமயமாகக் கண்ணைப் பறித்தது அந்த மூன் வாசல். அங்கு பிரம்பும் கையுமாக நந்தி காவல் புரிந்து கொண்டிருந்தார்.

ஊர்வலம் சம்புவுக்கு ஜய சப்தத்தை எழுப்பி நின்றது.

"என்னடாது கூச்சல்?" என்று கேட்டுக் கொண்டே நந்தி கூட்டத்தின் முன்னும் வந்து நின்றார்.

"யாருடா அவன்?" என்று சம்புவை முகத்தைச் சுளுக்கிக் கொண்டே முறைக்கப் பார்த்தார்.

"ஸ்வாமி, பரம பக்த சிகாமணி. அப்பன் நாமத்தை மூன்று முறை சாகும்போது ஹிருதய பூர்வமாகச் சொன்ன பரம பாகவதன்."

"யாரு? இவனா?...இந்த அயோக்கியனா? இந்த மோசக்காரனா?"

சம்புவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. சிவ கணங்கள் திகைத்துப் போய் விட்டார்கள். புஷ்பதந்தன் முகம் செத்து விட்டது. அவனுக்கு ஆத்திரம் புகைந்தது.

"ஒரு பக்தனை ஒரு கொடியில் அலக்ஷ்யமாகத் தூக்கி எறிந்து பேசி விட்டாரே? பதவியல்லவா இப்படிப் பேசச் சொல்லுகிறது?" என்று உள்ளுக்குள்ளேயே புகைந்தான்.

"ஸ்வாமி, தாங்கள் அவ்வாறு சொல்கிறீர்களே? சாகும்போது சங்கரா என்பவர்களுக்குக் கைலாசம் என்றுதானே விதி? சட்டத்தை மீறி நாங்கள் ஒன்றும் செய்துவிடவில்லையே" என்று தைரியமாகச் சொல்லி விட்டான்.

"மூடு வாயை."

வாய் மூடிவிட்டது.

"ஓய், நீர்தானே அண்ணைக்குடி சம்பு?" என்று கேட்டார் நந்தி.

"ஆமாம்."

"போன வாரம் உமது வீட்டுக்கு யார் வந்திருந்தது?"

"என் மருமான் குப்புசாமி."

"எதற்கு வந்தான்?"

"குழந்தைக்குக் கட்டி; பெரிய டாக்டரிடம் காண்பிக்க வந்தான்."



"ஊருக்குப் போகும் போது ஸ்டேஷனுக்கு நீர் ஏற்றி விடப் போனீரா, இல்லையா?"

"'கரெக்'டாகச் சொல்கிறீர்கள். நீங்களும் ஸ்டேஷனுக்கு வந்திருந்தீர்களா, என்ன?... ஹஹ்ஹ ஹஹ்ஹ......"

"போதும் உம்முடைய போலிச்சிரிப்பு."

"மன்னிக்கவேணும்...ஓஹோ! உங்களுக்கு ஞான திருஷ்டி உண்டு இல்லையா? நீங்கள் தேவர்கள் அல்லவா?"

"ஞான திருஷ்டி இருக்கிறதினால் தான் உமதுபாடு இப்பொழுது அந்தரத்திலே ஊஞ்சலாடுகிறது!"

"ஏன் அப்படி! நான் என்ன அபசாரம் பண்ணினேன்?"

"வண்டி கிளம்ப இரண்டு நிமிஷம் இருக்கிறபோது ஒரு ஆரஞ்சுப் பழக்காரன் வந்தான். அப்போது அந்தக் குழந்தை ஆரஞ்சு என்று கேட்டது. நீர் காதிலே விழாதது போல மறுபுறம் முகத்தைத் திருப்பிக் கொண்டு நின்றீர். அது இரண்டாம் தடவை கேட்டபோது யாரோ சிநேகிதரோடு பேசப் போகிறது போல் போய் விட்டீர். வண்டி ஊதின பிறகு ஓடி வந்து 'அப்பா, போய்விட்டு வருகிறேயா, குப்பு! டேட்டேய், போயிட்டு வரியா, பாப்பா' என்று அன்பு பொங்கி வழிய விடை கொடுத்தீரா, இல்லையா...?"

"எனக்கு என்ன சொல்கிறது என்று தெரியவில்லையே......அந்தக் குழந்தைக்குக் கக்குவான் வந்து இரண்டு மாசத்துக்கு முன்னும் தான் குணமாயிற்று என்று சொன்னான் குப்பு......நான் ஒன்றும் விபரீதமாக அப்படிச் செய்யவில்லை......"

டடார் என்று சத்தம் கேட்டது. நந்தி கதவைச் சாத்திக் கொண்டு உள்ளே போய் விட்டார்.



★

கோபமும் வேதனையும் நெஞ்சை வதைக்க, நந்தி சங்கரின் சன்னதியில் போய் நின்றார்.

"ஸ்வாமி, ஒரு விண்ணப்பம்."

"என்னப்பா திடீரென்று விண்ணப்பம்?"

"எனக்கு இனிமேல் இந்தத் துவாரபாலக உத்தியோகம் வேண்டாம்."

"ஏன்?"

"நான் அதற்கு லாயக்கில்லை. என் மனச்சாட்சி, ஊரில் திரிகிற அயோக்யர்கள், புருஷர்கள் இவர்களைக் கைலாசத்திற்குள் அனுமதிக்க இடங்கொடுக்க மாட்டேன் என்கிறது."

"அப்படி ஒருவரும் இங்கு வர மாட்டார்களே!"

"வரமாட்டார்களா? ஸ்வாமி நம் கண்ணிலேயே மண்ணைத் தூவிவிட்டான் ஒருத்தன். இந்தக் கணங்கள் ஒரு பெரிய அசட்டுக் கூட்டம். இருபணத்துக் கெல்லாம் ராஜுவான சம்பு என்ற ஒரு ஆளைப் பக்தனென்று இழுத்து வந்து நிற்கிறார்கள். கனத்து மேட்டில் உட்கார்ந்து வெக்தான், வெக்தான் என்று தன்னுடைய ஆளைக் கூப்பிட்டான். ஆனால் திடீரென்று மாரடைப்பினால் அந்த வார்த்தையைச் சொல்ல முடியாமல் 'வெங்க, வெங்க, வெங்க!' என்று முக்கிமுக்கிச் சொல்லப் பார்த்து விட்டுப் பிராணனை விட்டு விட்டான். உடனே கணங்கள் உங்கள் நாமத்தைச் சொல்லி விட்டான் என்று இழுத்து வாசலில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்கள். அந்த 'வெங்க', வெங்கதாஸில் பாதி. உங்கள் பெயரே இல்லை. மேலும் உங்கள் ஞாபகமே அந்த அனைத்தில் அவனுக்கு வரவில்லை. இந்த அறுங்கள் அவனை இழுத்து வந்து நிற்கின்றன."

"அவன் மேல் நீ இவ்வளவு ஆத்திரப்படுவானேன்?"

"அவன் பாபி, அதனால்தான்!"

"அப்படி என்ன பாபம் செய்து விட்டான் அவன்?"

"சொல்லட்டுமா? இவனுக்கு ஒரு பெண்ணும் ஒரு பிள்ளையும்தான். அந்தக் குழந்தைகள் வாசலில் மிட்டாய்க் காரன், பழக்காரன் யாராவது வந்தால் சப்தநாடியும் ஒடுங்கிப் போய் ஓடி ஒளிந்து கொள்ளும். மிட்டாய்க்காரன் என்றும் அத்தனை பீதி அந்தக் குழந்தைகளுக்கு!"

"என்னது!"

"ஆமாம், ஸ்வாமி! ஒரு நாளைக்கு வாசலில் மிட்டாய்க்காரன் கூவலைக் கேட்டு இந்த இரண்டு குழந்தைகளும் 'அப்பா மிட்டாயப்பா!' என்று கேட்டன. 'மிட்டாயா?' என்று வைத்தான் பாருங்கள் இரண்டு முதுகிலும்! அப்படியே ஒரு மணி நேரம் அலறிக் கேவிப் புழுவாகத் துடித்துப் போய் விட்டன இரண்டு குழந்தைகளும். அன்றிலிருந்து மிட்டாய்க்காரன் என்று சொன்னாலே குலை நடுக்கம் அந்தக் குழந்தைகளுக்கு."

"பேஷ், பேஷ்! ரொம்ப ஸ்வாரஸ்யமாயிருக்கிறதே!"

"இவன் ஏதாவது தின்றுகொண்டிருப்பான். அடுத்த வீட்டுக் குழந்தை வந்தால், மெதுவாக யார் கண்ணிலும் படாமல் 'ம்......சீ, போ போ! போடா!' என்று அதட்டி விரட்டி விடுவான். குழந்தை ஏன் அங்கு நிற்கிறது? அப்படியும் போகாமல் நின்று கொண்டிருந்தால், ஆசாமி திரும்பி உட்கார்ந்து அதற்கு முதுகைக் காட்டிக் கொண்டே தின்ன ஆரம்பித்து விடுவான்."

"ஆஹா, நல்ல மனுஷ! பார்வதி, புதிதாகக் கதை வேணும் என்றாயே, எப்படியிருக்கிறது?"

"முழுக்கச் சொல்லட்டும் அவர். இன்னும் இருக்கிறாப் போலிருக்கிறதே!" என்றாள் பார்வதி உற்சாகத்துடன்.

"இருக்கிறது. நிறைய இருக்கிறது. சொல்லத்தான் வேண்டியிருக்கவில்லை. மாதமானுக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம். வயிற்றில் பிறந்த பெண்ணின் வீட்டுக்குப் போகிற போது கூட, ஒரு கடைக்கு நாலு கடையாகப் பார்த்துக் கொட்டைப் பாக்கு அளவுக்கு அரை டஜன் ஆரஞ்சு வாங்கிக் கொண்டு போய் விடுவான். 'இந்தாம்மா, எனக்கும் பாரு, அவசரம். ரயிலுக்கோ நாழியாகிவிட்டது. துரை ஏழுமணிக்குத்தான் விட்டான். அவசரம் அவசரமாக ஓடிவந்தேன். ரயில் புறப்பட இரண்டு நிமிஷம்தான் இருந்தது. கடையிலே இதைத்தான் வாங்க முடிந்தது' என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அந்த அரை டஜன் 'கொட்டைப் பாக்கை'யும் பெண் கையில் வைத்து விடுவான்.

"இப்படியே அவசரம் அவசரம் என்று வாழ்க்கை முழுவதும் எல்லாக் காரியத்தையும் கால் செலவில் ஒப்பேற்றி விட்டான். பெண்ணுக்குக் கல்யாணத்தை மூன்று நாள் முந்தித்தான் நிச்சயம் பண்ணினான். பத்திரிகை அடிக்க நேரமில்லை. உறவினர்களை நினைத்துப் பார்த்து அழைப்பு அனுப்ப முடியவில்லை.

"'எல்லாம் அவசரம், நான் என்ன செய்ய? பிள்ளை வீட்டுக்காரர் அவகாசமே கொடுக்கவில்லை. அதனால் உங்களுக்குப் பத்திரிகை அனுப்ப முடியவில்லை' என்று கூறிவிட்டான்.

"போன வருஷம் இவன் பெண் பிரசவத்துக்கு வந்திருந்தாள். இரத்த மற்ற உடம்பு. 'அப்பா, ஏதாவது இரத்த விருத்திக்கு டானிக் சாப்





பிட்டால்தான் தேறும் என்கிறார் டாக்டர்......' என்று குழந்தையை மடியில் போட்டுக் கொண்டு இருந்தான். இந்தக் கருமி காரிலேயே போட்டுக் கொள்ள வில்லை."

★

மேற்படி விவரங்களை யெல்லாம் சிவனும் பார்வதியும் புன்னகையுடன் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

"ஸ்வாமி, எனக்கு ஆத்திரம் வருகிறது. நீங்கள் சும்மா மந்தஹாசம் செய்கிறீர்கள்? இவன் உங்களையே ஏமாற்றி விட்டானே" என்றார் நந்தி.

"எங்களையேவா!"

"ஆமாம், இரண்டு மூன்று வருஷம் முன்னால் இவன் ஸ்தல யாத்திரை செய்தான். திட்டம் போடுவதில் புலி. ஏதாவது வெளியூருக்குப் போனால் காப்பி, தோட்டம், தங்க இடம் என்றெல்லாம் காசை இறைக்கவிட மாட்டான். அந்தந்த ஊரில் இருக்கிற நண்பர்களுக்கெல்லாம் தன் நண்பர்களிடமிருந்து அறிமுகக் கடிதங்கள் வாங்கிப் போவான். 'உங்கள் பையனுக்கு அந்த வேலை செய்து கொடுக்கிறேன், இந்த வேலை செய்து கொடுக்கிறேன். முற்றத்துக்குக் கம்பிதானே போடணும். நான் ஸப் கலெக்டரிடம் சொல்லிக் கண்ட்ரோல் விலைக்கு ஏற்பாடு செய்து விடுகிறேன்' என்று ஏதையாவது சொல்லி 'டீக்'காகச் சாப்பிட்டு விட்டு, வண்டிச் சத்தத்தையும் அவர்கள் தலையில் கட்டி விட்டு ரயில் ஏறி விடுவான்."

"இதில் நாங்கள் எப்படி ஏமாந்து விட்டோம்?"

"அதைத்தானே சொல்ல வருகிறேன். ஸ்தல யாத்திரை போகும் போது, மனுஷன் கோயில் செலவுகளுக்காக அர்ச்சனை, உண்டிகளுக்குக் காலணா அவிழ்க்க வில்லை. அந்தந்தக் கோயில் எக்ஸிக்யூடிவ் ஆபீஸர்களுக்கு ஒவ்வொரு பெர்சனல் கடிதமாக வாங்கிக்கொண்டு எல்லாக் காரியங்களையும் இனாமாக முடித்துக்கொண்டு விட்டான். சர்க்கரைப்பொங்கல், பிரசாதங்கள் வேறு!"

சிவனும் பார்வதியும் சிரித்தார்கள்.

"இவ்வளவு காரியவாதியாக விருந்து விட்டானே அவனை. நான் அவனைப் பார்க்கவேண்டும். போ, உடனே அழைத்து வா!" என்று மகாதேவர் உத்தரவிட்டார்.

நந்தி வெளியே போனார். அன்னக்குடி சம்பு உள்ளே வந்தார். சிவ சன்னிதியில் விழுந்து சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். எழுந்தவர் இடுப்பில் இருந்து எதையோ எடுத்து மகாதேவனிடம் பரம பக்தியுடன் நீட்டினார்.

"என்ன அது?"

"இந்த மாதிரி ஏதாவது அசந்தர்ப்பமாக நடக்குமென்று தெரிந்து தான், தாளவாடத்துப் பசவண்ணு இருக்கிறதே, வீரசைவர்—லிங்காயத். அவரிடமிருந்து ஒரு பெர்சனல் லெட்டர் வாங்கி வந்தேன்."

"என்ன எழுதி யிருக்கிறது? நீயே வாசியேன், கேட்போம்" என்று சிவன் சொல்ல, சம்பு வாசித்தார்.

"கடிதம் கொண்டுவரும் அன்னக்குடி சம்புநாதர் நல்ல உயர்ந்த சர்க்கார் பதவியிலிருந்தவர். நல்ல அறிவாளி. இவர் அறிவு எந்த லோகத்திலும் பயனுள்ளதாக இருக்கும். சிவ, சிவ, சிவ என்று தங்கள் நாமத்தைத் தேக வியோக காலத்தில் மூன்று தடவை ஜபித்த மகத்தான சாதனையால் தங்கள் திருவடி நிழலில் யானும் இருக்கத் தகுதி பெற்று விட்டார். இப்படிக்கு, பக்தன் பசவண்ணு."

"ஓம், உம்மை பாதகர் என்று சொன்னால் போதாது. மகாபாதகர் என்று சொன்னாலும் தகும்" என்று சிவன் ஆத்திரத்துடன் கத்தினார். நெற்றி 'பளிச்' சென்றது.

ஏதாவது ஆபத்து நேர்ந்துவிடுமோ என்று பயந்து, சரேலென்று அந்த நெற்றிக் கண்ணை வலது கையால் மறைத்தாள் பார்வதி.


"போ, வெளியே" என்று சிவபிரான் சீறினார்.

அன்னக்குடிக் கனத்து பேட்டில் கிடத்த சம்பு கண்ணைத் திறந்தார்.

"அட, பாவிகளா? மூச்சுப் போயிடுத்து என்று வயிற்றில் கல்லைத் தூக்கிப் போட்டு விட்டீர்களே? வைத்தீசுவரா, மாங்கல்யப் பிச்சை கொடுத்தாயே...உங்களைத் தானே, கண்ணை முழிக்கப் பாருங்கள்?" என்று புலம்பினாள் அவர் மனைவி.

"ஒன்றுமில்லை. எதோ படபடவென்று வந்தது...விழுந்துவிட்டேன் போலிருக்கிறது" என்று சம்பு மெதுவாக எழுந்து உட்கார்ந்து கண்களைக் கசக்கிக் கொண்டார்.

நான் பெரியவனானால்....!



பையன் :— மாமா! நான் பெரியவனாக ஆனால் அப்பா மாதிரி பணம் சம்பாதிக்கப் போகிறேன். அம்மா மாதிரி செலவழிக்கப் போகிறேன்.


"பின்னி"யின் "சான்பரைஸ்ட்"
SANFORIZED துணியென உறுதிபெறுவது எப்படி?
நினைவிருக்கட்டும்: அது பின்னி யினுடையதே!
"சான்பரைஸ்ட்" (Sanforized) துணியை வாங்கும் பொழுது "பின்னி"யின் ட்ரேட் மார்க்கை தவறாமல் கவனியுங்கள். இம்மாதிரி துணிகளை செய்வதில் இந்தியாவிலேயே முதன்மையான பின்னி மில்களில் செய்யப்பட்ட "சான்பரைஸ்ட்" (Sanforized) துணிகளை நிச்சயப்படுத்த இதுவே வழி.
துணியின் ஓரங்களில் திட்டமான இடைகளில் இம்மூன்றில் ஏதாவது ஒரு ட்ரேட் மார்க்கு இருக்கிறதா கவனியுங்கள்.
இம்மார்க்குள்ள துணிகளைத்தான் பின்னி மில்களான: பக்கிங்ஹாம் கர்நாடிக் மில்ஸ் கம்பெனி, பாங்களூர் வுல்லன், காட்டன் அன்டு ஸில்க் மில்ஸ் கம்பெனி இவைகள் தயாரிப்பது.

தனிமை அளித்த உவமை

கவிதையுடைய அம்பறாத் தூணியிலே மிகச் சிறந்த பாணம் எது என்று கேட்டால், 'உவமைதான்' என்று தயங்காமல் சொல்லிவிடலாம். இரண்டு பொருள்களுக்கு இடையே இருக்கிற ஒரே ஜாடையை எடுத்துக் காட்டுவதற்கு உவமை உதவியாயிருக்கிறது. ஆகையால் அது ஒரு உன்னதமான காவியக் கருவி என்று கிரேக்க ஞானியான அரிஸ்டாட்டில் வற்புறுத்தி யிருக்கிறார்.

உவமையின் மந்திர சக்தியை ஷெல்லி என்ற ஆங்கிலக் கவிஞன் அரிஸ்டாட்டிலைப் போல் நுட்பமாக உணர்ந்தவன். ஆகவே, அவன் என்ன சொல்லுகிறான்? சிருஷ்டியிலே உருவத்தாலும், பண்பாலும் வேற்றுமைப் பட்டு போலத் தோன்றும் பொருள்கள் பல. அவைகளுக்கு இடையேயிருக்கும் பரஸ்பர ஒற்றுமை பாமர மக்களுடைய திருஷ்டிக்குப் படுவதில்லை. ஆனால், கவிஞனே தன்னுடைய காவிய உள்ளத்தால் அந்த ஒற்றுமையைக் கண்டுபிடித்து உவமையின் மூலம் வெளிப்படுத்திவிடுகிறான். இந்தக் கருத்தின் மூலம், ஷெல்லி உவமைக்கு ஒரு தத்துவ அந்தஸ்தையே கொடுக்க முயற்சிக்கிறான்.

வாஸ்தவந்தானே! பிரபஞ்சத்திலே இருக்கிற பொருள்கள் எல்லாமே ஒரு நியதிக்குக் கட்டுப்பட்டவை; ஒன்றோடொன்று பிரிக்க முடியாமல் இணைக்கப் பெற்றவை. ஒரு புல் நிலத்தைக் கீறிப் பிளந்து கொண்டு தன் மேனியின் பச்சைப் பகட்டைக் காட்டி மினுக்குவதற்கு முன்னால், பூமி முழுவதுமல்லவா பிரசவ வேதனையில் ஈடுபட்டு அல்லாடுகிறது!


சூரியனுடைய ஒளிக் கரங்களின் ஸ்பரிசம் பட்டமாத்திரத்திலேயே, கூம்பியிருக்கும் தாமரை, மேனி சிலிர்த்து, இதழ்க் கட்டவிழ்க்கிறது. ஆனால், இப்படியெல்லாம் பொருளுக்கும் பொருளுக்கும் இடையே இருக்கும் ரகசியத் தொடர்பு மேலெழுந்தவாரியாகப் பார்ப்பவர்களுக்கு விளங்குவதில்லை. இறைவனைப் போல, சிருஷ்டி தத்துவத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் கவிஞர்களுக்குத்தான் இவையெல்லாம் இலகுவில் அறியமுடியும்; உணர முடியும்.

ஒரு ஆங்கிலக் கவிஞன் அருவியைப் பார்த்தான் "இது கீழ்நோக்கிச் செல்லுகிற புகையைப் (Downward Smoke) போலிருக்கிறது" என்று சொல்லித் தொலைத்தான். இதைப் புகழ்ந்து இங்கிலீஷ் இலக்கிய விமர்சகர்கள் பத்தி பத்தியாக எழுதித் தள்ளிவிட்டார்கள். தமிழ் நாட்டிலே அவர்கள் பிறந்திருந்தால், இப்பேர்ப்பட்ட சில்லறை வர்ணனையெல்லாம் கண்டு மயங்கியிருக்க மாட்டார்கள். விதம் விதமான உவமைகள், தாக்கி வாரிப்போடுகிற உவமைகள், இயற்கையின் உண்மைகளை ஒரு உலுப்பு உலுப்புகிற உவமைகள் தமிழ்க் கவிதையிலே மலிந்து கிடக்கின்றன.

கம்பன் உவமைகள் ஒவ்வொன்றிலுமே ஒரு தனி ரஸமிருக்கும். உவமையென்றால், மின்னல் வெட்டினமாதிரி வந்து விழும். மின்னல் வெளிச்சத்திலே, பேசிக்கொண்டிருக்கிற விஷயம் மாத்திரமல்ல, அந்த விஷயத்தோடு தொடர்புள்ள பலப் பல அரிய உண்மைகளும் தெளிவாகி விடும்.

மண்ணையும், விண்ணையும் அனாயசச் சேர்த்துக் கட்டி ஒற்றுமைப்படுத்துகின்றன கம்பர் உவமைகள். வாசகர்களை மாற்றி, அவர்கள் உள்ளத்தைப் பறித்து எதிர்பாராத ஓர் அற்புத லோகத்திலே கொண்டுபோய்ச் சேர்த்து விடுவார். நம்மையெல்லாம் ஒரு நிலையில் வைத்து விஷயத்தைப் பற்றி நேருக்கு நேராகப் பேசிக்கொண்டிருப்பார். திடீரென்று நம் காலடியிலிருக்கும் செங்கம்பளை உருவிவிட்டு விடுவார். அவ்வளவுதான், நிலை தெரியாமல் தடுமாறி, ஒரு புதிய உண்மை உலகத்துக்கே சென்று விடுவோம், அந்த உவமை வாகனத்தில் ஏறி!

மாரீச மான் போகிற போக்கை வர்ணிக்கிறார் கம்பர். துள்ளிக் குதித்து, மண்ணையும் வானத்தையும் அளந்து கொண்டே செல்லுகிறது. அதைப் பின் பற்றிச் சென்ற ராமனே, உற்சாகம் இழந்தவனாய்த் திரும்பிப் போகலாமா என்று எண்ணுகிறான்.



உடனே அது அவன் பக்கத்திலேயே வந்து அசை காட்டுகிறது. விரைந்து பிடிக்கப் போகிறான். மறுபடியும் அது அகன்று விடுகிறது. இப்படியாக மாரீச மான் ராமனோடு விளையாட்டு விளையாடுகிறது.

குன்றிடை மிளிரும், மேகக்
குழுவிடைக் குதிக்கும், கூடச்
சென்றிடின் அகலும், தாழின்
நீண்டலம் நகையைத் தாவும்,
நின்றதே போல நீங்கும்—

இப்படிப் பாய்ச்சல் காண்பித்துக் கொண்டே போகிற மானின் திறமையையும், வஞ்சனையையும், தான கதியையும் வியந்த வண்ண மிருக்கிறோம்.

இந்தச் சமயத்திலே, கம்பர் செங்கல்லை உருவி விடுகிறார். மான் போன போக்கு எப்படியிருந்ததாம்?

நின்றதே போல நீங்கும்,
நீள்வழி நேயம் நீட்டும்
மன்றலம் கோதை மாதர்
மனமெனப் போயிற் றம்மா.

பணம் எங்கே யிருக்கிறதோ, அங்கே யெல்லாம் நேசத்தைக் காட்டும் பரத்தையரது உள்ளத்தைப் போல இருந்ததாம் மான் போன போக்கு. ஸ்தூல உடம்பின் சலனத்திலே மன ஆன்றிக் கிடந்த நம்மை, மானசிக உலகத்தின் மர்மங்களைக் காணும்படி செய்து விடுகிறது இந்த உவமை.

* * *

நாம் இது வரையிலும் பார்த்தோமே, இதற்கு எதிர்மறையான வேலையையும் செய்கிறது மற்றொரு உவமை. ஒரே வார்ப்பிலே வார்த்தெடுத்தது போலத் தென்படும் இரண்டு பொருள்களுக்கிடையே இருக்கும் அந்தரங்க வேற்றுமையையும் அது காட்டிக் கொடுத்து விடுகிறது. உலகத்திலே, மனிதனுக்கு மாத்திரம் தான் வேஷம் போடத் தெரியும் என்பதில்லை. அவனைக் காட்டிலும் திறமையோடு வேஷம் போடத் தெரிந்த பல பிராணிகளை இயற்கையிலே பார்க்கிறோம்.

உதாரணமாக, பச்சை விட்டிலை எடுத்துக் கொள்வோம். அதை வேட்டையாடித் தின்பதிலே சிட்டுக் குருவிகளுக்குப் பரம சந்தோஷம். குருவிகளுடைய ஜன்மப் பகையிலிருந்து தப்புவதற்காக விட்டில் பூச்சி வேஷம் போடப் படித்துக் கொண்டது. தான் குடியிருக்கும் புல், பூண்டுகள், செடி, கொடிகளுடைய நிறத்தைத் தானும் பூசிக் கொண்டு, இலையோடு இலையாய், காயோடு காயாய், சிறு பேதம் தெரியாத வாழ்க்கை நடத்த ஆரம்பித்தது. இலையெது, விட்டில் எது என்று தெரியாமல், குருவிகள் ஏமாற்றம் அடைந்தன. இதைப் போலவே, இயற்கையிலே, வேஷம் போட்டு நடித்துத் தற்காத்துக் கொள்ளும் பல பிராணிகளைப் பார்க்கிறோம். இவைகளைத்தான் நம் முன்னோர்கள் 'ஒப்பாரி' என்று அழைத்தார்கள்.

மனுஷ வர்க்கத்திலேயும், இப்பேர்ப்பட்ட பிரகிருதிகள் உண்டு என்பதை வள்ளுவர் கண்டார். அயோக்கியர் என்ற ஜாதியார் இருக்கிறார்களே, அவர்களும் மனிதர்களைப் போலவேதான் இருப்பார்கள். அந்தக் கண்ணையும், அந்த மூக்கையும், அந்த விழியையும் பிட்டு வைத்த மாதிரித்தான் இருக்கும். ஆனால், மனிதர்களா அவர்கள்?

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாம்கண்ட தில்"

எத்தனையோ ஒப்பாரிகளையுந்தான் நாம் பார்த்திருக்கிறோம், நம்முடைய அனுபவத்திலே. ஆனால், அப்பப்பா, குணத்தால் முற்றிலும் வேறுபட்டு, உருவத்தால் முற்றிலும் ஒத்திருக்கும் கயவர்களைப் போலப் 'பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை' என்கிறார் திருவள்ளுவர் பெருமான்.

* * *

இனி, உவமைக்கு அடுத்தானமாக இருப்பது என்னவென்று பார்ப்போம். உவமையைத்



எஸ். மகாராஜன்

நிறையோடு கையாளுகிறவனுக்கு வாழ்க்கையைப் பற்றிய ஆழ்ந்த ஞானம் அவசியம். அதோடு, வாழ்க்கையை அவன் ஒரே மொத்தமாக, பூரணமாகப் பார்த்திருக்க வேண்டும்.

இதற்கும் மேலான இன்னொரு குணமும் அவனுக்கு இன்றியமையாதது: கலைக் கற்பனை (Synthetic Imagination) படைத்தவனாக இருக்க வேண்டும். கலைச் சந்தனத்தைப் பற்றி உங்களுக்குத் தான் தெரியுமே. புனுகையும், ஜவ்வாதையும், சந்தனத்தையும் சரியாகக் கலக்காவிட்டால் சந்தனம் மணக்காது. அது போலத்தான், இரண்டு கருத்துக்களை இணைத்து உவமையின் மூலம் கலை செய்வதற்கு அதிநுட்பமான கற்பனை சக்தி அவசியம்.

உதாரணமாக, மைக்கூடு இருக்கிறது. இதற்குள்ளே பல நாட்களுக்கு வேண்டிய மையைச் சேகரித்து வைக்கலாம் என்று நமக்குத் தெரியும். இதோடு சதா உறைந்து கிடக்கிற பேனாவைப் பற்றியுந்தான் நமக்குத் தெரியும். ஆனால், இந்த இரண்டு தத்துவங்களையும் கற்பனையினால் இணைத்துப் பௌண்டன் பேனா உண்டாக்க எத்தனையோ நூற்றாண்டுகள் சென்றன.



காது கேட்குமா?



பையன் :—பகவானே! எனக்குத் தீபாவளிக்கு நிறைய பட்டாஸ், வாணங்கள் எல்லாம் வேணும்......!

பாட்டி :—அடடா, கத்தாதே! கடவுளுக்குக் காது நன்றாகக் கேட்குமே!

பையன் :—ஆனால் என் தாத்தாவுக்குக் காது அவ்வளவு நன்றாகக் கேட்காதே, பாட்டி!

1836ம் வருஷத்தில்தான் ச. டி. பிரீட்ஷி என்பவர் பௌண்டன் பேனாவைக் கண்டு பிடித்தார். அதற்கு முன் எத்தனையோ யுகங்களாக, அப்பாவி மனிதன் பேனாவை மைக் கூட்டிலே தொட்டுத் தொட்டு எழுதிக் கொண்டிருந்தான். இரண்டு தத்துவங்களையும் ஒரே கருவியிலே கலந்து விடலாமே என்ற யோசனை அவனுடைய மூளைக்குத் தட்டுப்படவில்லை. பிரீட்ஷி இருந்தாரே, அவருடைய கலைக் கற்பனையைப் போன்றதுதான், அநேகமாகக் கவிஞனுடைய கற்பனையும்.

◇ ◇ ◇

தூக்கணாங் குருவியின் கலை தேர்ந்த வாழ்க்கையைப் பார்த்துப் பார்த்து ரஸித்துக் கொண்டிருந்தான் ஒரு கவிஞன். அது என்ன செய்தது? இரவு வர வேண்டியதுதான். உடனே மின்மினிப் பூச்சி ஒன்றை அலகிலே கௌவிக் கொண்டு தன் கூட்டின் ஒரு மூலையிலே செருகி வைத்து விடும். இருளடைந்த குருவியின் கூட்டிலே இரவு முழுவதும் மின்மினிப் பூச்சி, நக்ஷத்திரத்தைப் போல, மினுக்கிக் கொண்டிருக்கும். இந்தக் காட்சி கவிஞனுடைய மனதிலே கிடந்து ஊறிக் கொண்டேயிருக்கிறது.

ஒருநாள் 'சோ' வென்று மழை பெய்கிறது. எங்கும் சலசல என்று தண்ணீர் பாய்கிறது. 'கரு கும்' என்று இருட்டு சர்வ வியாபியாய் விளங்குகிறது! அந்த இருட்டைப் பார்க்கும்போதே உள்ளத்தில் அச்சம் உண்டாகிறது. குளிரோ தாங்க முடியவில்லை. எங்கே பார்த்தாலும் தனிமை குடி கொண்டிருக்கிறது.

கவிஞன் இந்தக் காட்சியையும் பார்க்கிறான். ஓர் உவமை அவன் மனத்திலே உருவெடுக்கிறது. கன்னல் கிரசம் என்ற இருளைப் பார்க்கும்போது அதற்கு ஒரு ஸ்தூல சரீரமே ஏற்பட்டு விட்டதோ என்று தோன்றுகிறது. கொஞ்ச நேரத்திலே அதைக் கருங் குருவியாகவே மதிக்க ஆரம்பித்து விடுகிறான். மாரிக் காலத்து மழையினூடும், சர்வ வியாபியாயிருக்கிற தனிமையினூடும் நடுநடுங்கிக் கொண்டிருக்கிற கருங் குருவிதான் அந்த இரவு என்று உருவகம் செய்கிறான்.

அந்தச் சமயத்திலே மின்னல் ஒரு வெட்டு வெட்டுகிறது. வானத்தில் கீழ்த் திசையிலிருந்து மேல் திசை வரைக்கும் மின்னல் இரண்டு வினாடிகளுக்கு ஒருதரம் கண்ணைப் பறிக்கும் ஒளியுடன் நின்று வெட்டிப் பாய்கிறது. உடனே, தூக்கணாங் குருவி செய்த வேலை ஞாபகத்துக்கு வருகிறது. மின்னல் என்ற புழுவை எடுத்து, கன்னல் (இரவு) என்ற பறவை விளக்கேற்றுகிறது என்று கற்பனை செய்கிறான்.

கன்னலெனும் கருங்குருவி
கன மழைக் காற்றது
மின்னல் எனும் புழுவெடுத்து
விளக்கேற்றும் கார்காலம்


என்று வருகிறது அற்புதமான வர்ணனை.

கலைக் கற்பனையின் கோஷ்டியிலே, கருத்தோடு கருத்தை இணைத்து இணைத்துக் கவிஞனது உவமை முன்னம், பிரீட்ஷியின் அற்புத சாதகத்திற் கெல்லாம் மேம்பட்டதாகி, வாழ்க்கையின் சம்பூரணத்தை நிலை நாட்டுவதாய், ஷெல்லியின் உயர்ந்த இலக்கணத்துக்கு இலக்கியமாய் அமைகின்றதல்லவா?

தீப அலங்காரம்

**புராதனக் காலத்திலும்
இப்பொழுதும்**





எண்ணெய்ப் பாத்திரத்துடன் அமைக்கப்பட்ட இந்த கோபாள பித்தளை விளக்கிற்கு அலங்காரமாக நாகம் சுற்றிய விநாயகரின் உருவம் உபயோகிக்கப்பட்டது. விநாயகரின் வாழ்க்கையைப்பற்றி அநேக கதைகள் உள்ளன. மத்ஸ்ய புராணத்தில் கூறப்பட்டுள்ள ஒரு வரலாற்றைக் கீழே காணலாம்.

ஸ்நானம் செய்யும் சமயம் பார்வதியை சேஷ்டை செய்வது பரமசிவனின் பொழுதுபோக்காக இருந்தது. இதைத் தடுப்பதற்காக பார்வதி விநாயகரைக் காவலாக வைத்திருந்தாள். தன் எண்ணம் நிறைவேறாததால் சினம் கொண்ட பரமசிவன் கணபதியின் தலையை வெட்டி எறிந்தார். பார்வதி கவலையில் மூழ்கியிருந்தாள். இதைக்கண்டு பரமசிவன் முதலில் அகப்படும் தலையைக் கொண்டு வரும்படி கட்டளையிட்டார். முதலில் ஒரு யானையின் தலை அகப்படவே அவர் அதை விநாயகரின் தோளில் பொருத்தி அவருக்கு உயிர் கொடுத்தார். அன்று முதல் யானைத் தலை பூண்ட விநாயகரை மக்கள் மங்களகரமான காரியங்களுக்காக பூஜை செய்யத் தொடங்கினார்கள்.

இந்தியாவின் புராதன தீபாலங்கார ஐதீகத்தை அனுசரித்து, பிலிப்ஸ் கம்பெனியார் தீவிரமான ஆராய்ச்சியின் பலனாக தற்காலத்திற்கு வேண்டிய எல்லா வெளிச்ச சாதனங்களை தயாரிப்பதில் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

பிலிப்ஸ் — *வெளிச்ச சாதனங்களைத் தயாரிக்கும் முதன்மையான ஸ்தாபனம்*

PL. 73(C)

அந்தப் பெரிய தெருவின் இரண்டு பக்கங்களி லும் ஓட்டு வீடுகளும், கூரை வீடுகளும் இருக்கின்றன. அவை கள் ஒன்றின் மீது ஒன்று மோதி இடித்துக் கொண்டிருப்பதுபோல் நெருங்கி இருக்கின் றன. அவற்றின் மேற் கூரைகள் கருத் தும்பித்து கிழிவாகவே இருக்கின்றன.

காலத்தால் சோர்ந்து போன அந்த வீடுகளின் மேல் ஜன்னல்கள் ஒன்றைப் பார்த்து ஒன்று சிரித்துப் பேசுவது போல இருக்கின்றன. அதோ அந்தச் சிறிய வீட்டில் இருக்கும் உடைந்த ஜன் னல் லேசாகக் காற்றில் ஆடுகிறது. அது காற்றில் ஆடுவதைப் பார்த்தால் கையை ஆட்டிக் கொண்டு பருத்தநிலைப் பற்றிப் பேசுவதைப் போலிருக்கிறது. ஆமாம் அந்த வீட்டில்தான் தொழிலாளர் தலைவர், சீர்திருத்தச் செம்மல், பகுத்தறிவுப் பகல வன், தோழர் செல்லமுத்து இருக்கிறார்.

தொழிற்சாலையை விட்டு வேலை முடிந்து வெளியே வரும் தொழிலாளர்கள் அவ சரம் அவசரமாகத் தங்கள் வீட்டைத் தேடி ஓடுவார்கள். வேகமாக நடப் பார்கள். தோழர் செல்லமுத்து மட்டும் நிதானமாக நடந்து செல்வார்.

மலைவாயில் விழுந்து மறையும் சூரிய னின் இளிய ஒளியால் வான வெளியில் உண்டாகும் வர்ண ஜாலங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டே தளிர் நடை போடு வார். மேற்றிசைக் கோடியில் உள்ள தெலைமாறு குன்றுகளையும் மூடிக்கு எவத் திருந்த தங்கப் பொடியை வாரி இறைத் தாற்போல் செக்கர் வானத்தில் தோன்றி யிருக்கும் வண்ணத்தில் மனத்தை ஈடு படுத்தியவராய் வானத்தை அண்ணாந்து பார்த்து நடந்து செல்வார்.

இப்படித்தான் அன்றைக்கும் தளிர் நடை போட்டுத் தள்ளாடித் தள்ளாடி வீட்டுக்கு வந்து கொண்டிருந்தார்.

வீட்டு வாசலில் அல்லி,—அவள்தான் அவர் மனைவி காத்திருந்தாள். மூன்று வயதுப் பையன் வேலன் மண் தரையில் தவழ்ந்து விளையாடிக் கொண்டிருந்தான். தன் தந்தையைப் பார்த்த குழந்தை "அப்பா! அப்பா!" என்று கைகளை ஆல விரித்துக் கொண்டே ஓடினான்.

"மற்றவர்கள் எல்லாம் எப்பொழுதோ வீட்டுக்கு வந்து விட்டார்கள். உங்களுக்கு மட்டும் தினம் தினம் என்னதான் வேலை இருக்குமோ!" என்றாள் அல்லி.

செல்லமுத்து அவளைப் பார்த்துச் சிரித் தார். குழந்தை வேலனை எடுத்துக் கொண்டு வீட்டுக்குள் சென்றார்.

அவரைத் தொடர்ந்து ஏதேதோ சொல் லிக் கொண்டே உள்ளே நுழைந்தாள் அல்லி. "இந்த வீட்டில் நான் சொல்லும் வார்த்தைக்கு ஏதேனும் மதிப்பிருந்தால் தானே. குடும்பத்தை ஒழுங்காக நடத்தத் தும்பில்லையாம். ஊரைச் சீர்திருத்தக் கிளம்பி விட்டார்கள்" என்றாள்.

செல்லமுத்துவுக்கு இதைப் போன்ற வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டுப் புளித் துப் போய்விட்டது. அவள் சொற்கள் அவர் இதயத்தைக் கசக்கிப் பிழிந்தன. இன்னது செய்வதென்று தெரியாமல் ஒரு கணம் தவித்தார். அவர் தோளில் இருந்த குழந்தை அவர் முகத்தைப் பார்த்துக் கலகலவென்று சிரித்தான்.

அவருக்கு அல்லியைக் கலியாணம் செய்து கொண்டு தனிக் குடித்தனம் செய்ய ஆரம்பித்த நாட்கள் நினைவுக்கு வந்தன. சில நாட்களில் கடற்கரை யிலும், கடைத்தெருவிலும் சேர்ந்து சேர்ந்து சென்றதைப் பற்றியும், சினிமாக் கொட்டகை களிலும், நாடக மண்டபங்களிலும் சந்தோஷமாகக் கழித்த அந்த நாட்களைப் பற்றியும் நினைத்தார். 'உம்'மென்று ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார்.

இப்பொழுது அவர் நிலைமை மிகவும் கஷ்டம். அங்கும் இங்குமாகப் பணம் வசூ லித்துத் தொழிலாளர் மகாநாடு ஒன்று நடத்தினார். பணம் தருவதாகச் சொன்ன வர்கள் எல்லாம் கையை விரித்து விட்ட னர். அதனால் அல்லியின் நகை நட்டுகளை விற்று மகாநாடு சம்பந்தமான கடன்களை அடைக்கும்படி நேர்ந்து விட்டது.

"அப்பா! முதல் தேதி வந்ததும் பொம்மை வாங்கித் தரேன் என்றீர்களே! எப்போ வாங்கித் தரப்போறீர்கள்!" என்று கொஞ்சும் மொழியில் கெஞ்சிக் கேட்டான் குழந்தை வேலன்.

குழந்தையை எடுத்துத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்தார். குழந்தை கல கல வென்று சிரித்தான். செல்லமுத்துவும் சிரித்தார். "வேலா! அம்மா இப்படி என்றைக்கும் சிரிப்பாள்!" என்றார்.

"ஒரு கணவனுக்குத் தன் மனைவியை விட, குடும்பத்தை விட, சீர்திருத்தம் பேசு வதும், பகுத்தறிவைப் பற்றிப் பறை சாற்றுவதும்தான் மேலானது என்றால், மனைவி கல கல வென்றுதான் சிரிப்பாள்! ஏன் சிரிக்க மாட்டாள்! குழந்தைக்கு வயிறாரப் பால் வாங்கிக் கொடுக்கக் கூடக் கையில் காசு இல்லை. மகாநாட்டுச் செலவுக்கு மாங் கல்யம் கூட அடகு வைக்க வேணும். இந்த நிலையில் மனைவி சிரிப்பாளாம்! ஏன் சிரிக்க மாட்டாள்!" என்றாள் அல்லி. அவள் குரலில் ஆத்திரம் குமுறியது.

செல்லமுத்து அப்படியே சோர்ந்து நின்று கொண்டிருந்தார். திறந்து கிடந்த கதவின் வழியாக இளம் காற்று வீசி யது. முற்றத்தில் பரந்து கிடந்த நில வொளி துல்லியமாகத் தெரிந்தது.

"என் குடும்ப வாழ்க்கையில் மீண்டும் மகிழ்ச்சி ஏற்படாதா!" என்று நினைத் தார் செல்லமுத்து. அவர் உள்ளம் வேத னைப் பட்டது. அவர் காலைப் பிடித்துக் கொண்டு நின்ற குழந்தையின் அன்பு தவழும் முகத்தைப் பார்த்ததும், அவர் உள்ளம் சற்று அமைதியடைந்தது.

"உங்களைப் பார்த்துக் கொள்ளவே உங்களுக்கு நேரம் இல்லை. யாரோ தொழிலாளர்கள் சண்டை போட்டுக் கொள்ளுகிறார்கள் என்று அங்கு போய்விடு கிறீர்கள். இன்றைக்காவது நேரத்தில் சாப்பிட்டுவிட்டு அப்புறம் எங்கு போக வேணுமோ போங்கள்" என்றாள் அல்லி.

தட்டை எடுத்து வைத்துத் தன் கணவ னுக்குச் சாதம் பரிமாறினாள்.

அல்லி நன்கு கடந்கட்டு உள்ளவள். அவள் உருண்டை முகத்திலே அவாறி யான குறு குறுப்பு மின்னும். காதுகள் சிறியவைகள்தான். ஆனால் அழகு நிறைந் தவை. பேசிக் கொண்டிருக்கும் போதே எதிரியின் உள்ள உணர்ச்சிகளை நன்கு உணர்ந்துகொள்ளும் திறமை யுடையவள்.

கொஞ்ச காலமாகத் தன் கணவர் குடும் பத்தைக் கவனிக்காமல், வேலைக்கும் ஒழுங் காகப் போகாமல், தொழிலாளர், மகா நாடு என்று சுற்றுவதும், வீட்டில் இருக் கும் நகை நட்டுகளை விற்பதும், மாதச் சம்பளத்தில் வீட்டுக்குக் காலணாக் கூடக் கொடுக்காமல் ஊர் சுற்றுவதும், இரவு வேளைகளில் வீடு தங்காமல் இருப்பதும் அவள் மனத்துக்குப் பெரிய வேதனையாக இருந்து வந்தன. அதனால்தான் சமயம் வரும்போதெல்லாம் தன் கணவர் மனத் துக்குப் படும்படி சொல்லி வந்தாள்.

இப்பொழுது அல்லி முன்போல் அவ் வளவு கவர்ச்சிகரமாக இல்லை. அவள் சீவப்படாத சிதறிய கூந்தல் காற்றிலே படிய மோதிக் கொண்டிருந்தது. அவள் மிகுந்த கோபத்துடன் இருந்தாள். அவள் நீண்டு வளைந்த மூக்கு உப்பி வடிந் தது. சிவந்த பெரிய உதடு கள் துடித்தன. அவள் அவரைக்



நிருந்த ரவிக்கையின் கைப்புறம் கிழிந்திருந்தது. இருந்தாலும் சுத்தமாக இருந்தது. வறுமையின் கொடுமை அவள் அழகிய முகத்திலும், அவள் அணிந்திருந்த கந்தல் உடையிலும், அவள் குடியிருந்த சிதிலமான சிறிய வீட்டிலும், அவள் பேசிய பேச்சிலும் நன்கு தெரிந்தன.

தோழர் செல்லமுத்து அவசரம் அவசரமாகச் சாதத்தை அள்ளி வாயில் போட்டுக்கொண்டார்.

"ஏன் இந்த அவசரம்!"

"தொழிலாளர்கள்..." என்று ஏதோ சொல்லுவதற்கு ஆரம்பித்தார் செல்லமுத்து.

"நீங்கள் ஒன்றும் சொல்லாமல் இருந்தால் தொழிலாளர்கள் எல்லாம் சௌகரியமாக இருப்பார்கள்" என்று ஆத்திரத்தோடு சொன்னாள். குழந்தை வேலனும் அவள் சொல்லுவதை ஆமோதிப்பவன் போல் தன் குஞ்சுக் கைகளைக் கொட்டிக்கொண்டு மெல்லிய நாதமாகச் சிரித்தான்.

செல்லமுத்து வாய் பேசாமல் இருந்தார்.

"நீங்கள் உங்கள் குடும்பத்தைப் பற்றிக் கவலைப்பட்டால் போதும். தொழிலாளர்களைப் பற்றித் தொழிலாளர்களே கவனித்துக் கொள்வார்கள். கல்யாணமாகி விட்டால் குடும்பத்தைப் பற்றியும் அது ஒழுங்காக நடப்பதற்கு வேண்டிய பணத்தைப் பற்றியும்தான் நினைக்க வேண்டும். அத்துடன் குழந்தையும் பிறந்து விட்டால் பணம் இல்லாமல் என்ன செய்ய முடியும்! உங்களுக்குத் தெரியாதா!" என்றாள் அல்லி.

செல்லமுத்து வாய் பேசாமல் மௌனமாக இருந்தார். உணர்ச்சியின்றிச் சாப்பிட்டு எழுந்தார்.

அல்லி தானும் சாப்பிட்டாள். சாப்பிட்ட இடத்தைச் சுத்தப்படுத்தினாள். குழந்தை வேலனுக்குச் சாதம் ஊட்டினாள். அவனைப் படுக்கையில் படுக்க வைத்தாள். வாசல் பக்கம் வந்து "அப்பாடா!" என்று ஒரு பெருமூச்சு விட்டு உட்கார்ந்தாள். அவள் வாடிய முகத்திலே இப்பொழுது ஒரு நிம்மதி இருந்தது.

நீல வானத்தில் சந்திரன் ஜொலித்தான். வீட்டுக்கு எதிரில் இருந்த தென்ன மரங்களின் நீண்ட நிழல்கள் அல்லியின்மீது விழுந்தன. செல்லமுத்து வாசலில் உட்கார்ந்திருந்த அல்லியைப் பார்த்தார். அவள் முகத்தில் இருந்த அமைதியைப் பார்த்தார். மெதுவாகச் சொன்னார்.

"நான் போய்விட்டாலும், என் சேவை வீணாகாது. என் மனைவி என்பதற்காக உன்னைத் தொழிலாளர்கள் காப்பாற்றுவார்கள்."

"ஒருநாளும் மாட்டார்கள்."

"அப்படியெல்லாம் நினைக்காதே."

"இதற்கு நீங்கள் கல்யாணமே செய்துகொண்டிருக்க வேண்டாமே. ஒரு மனைவியின் கவலையும், குழந்தையின் சுகத்தையும் கவனிக்காத உங்களைத் தொழிலாளர்கள் எப்படி நம்புகிறார்கள்! அவர்கள் தங்கள் தலைவர்களின் வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்ளும் படியான பகுத்தறிவை உண்டாக்கும் தலைவர்கள்தான் இப்பொழுது இந்த நாட்டில் இல்லையே" என்றாள்.

செல்லமுத்துவுக்கு என்ன பதில் சொல்லுவது என்றே தெரியவில்லை. அல்லியின் வார்த்தைகள் அவன் காதுகளில் பயங்கரமாக ஒலித்துக் கொண்டே இருந்தன. அல்லி தொடர்ந்து பேசினாள்:

"நீங்கள் எங்கே வேணுமானாலும் போங்கள். என்ன வேணுமானாலும் செய்யுங்கள். உங்களுக்கு ஒரு குழந்தை இருப்பதை மறந்து விடாதீர்கள். அவனுக்காகவாவது மாதா மாதம் வரும் சம்பளத்தில் ஒரு பகுதியை







என்னிடம் கொடுத்து விடுங்கள். அதனும் உங்களுக்குப் பயனுண்டு" என்றாள்.
செல்லமுத்து மௌனமாக இருந்தார்.

அவள் தன் கணவனுடன் அன்புடனும் ஆதரவுடனும் இருக்கத்தான் விரும்பினாள். ஆனால் அவளுடைய கணவனின் போக்கு அவள் மனத்தை மாற்றி விட்டது. எப்பொழுதும் போல் அவள் கணவன் அன்பு காட்டியபோதிலும் அவருடைய தொழிலாளர் முன்னேற்றம், பகுத்தறிவுப் பிரசாரம் ஒன்றையும் மாற்ற முடியாது என்பதை உணர்ந்து கொண்டாள். தன்னுடையநிலையையும் தன் குழந்தையின் கதியையும் எண்ணிப் பார்த்தாள். மனைவியையும் மகனையும் கவனிக்காமல் ஊர் சுற்றும் கணவரைப் பற்றி நினைத்தாள். அவள் மனத்திலே பயம் சூழ்ந்து கொண்டது. அது காரணமாகவே அவள் கணவன்மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டு விட்டது.

"அல்லி! தொழிலாளர்கள் நலனுக்குப் பாடுபடுவதில் என்னுடைய நலனும் கலந்து இருக்கிறது என்பதை நீ உணரவில்லையா!" என்று கேட்டார் தோழர் செல்லமுத்து.

அல்லிக்கு அழுகையும் ஆத்திரமும் பொத்துக் கொண்டு வந்தது. "சரி, சரி, நீங்கள் போங்கள்; உங்கள் தொழிலாளர்களைக் காப்பாற்றப் போங்கள்" என்று சொல்லிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

வானத்தின் உச்சிக்கு இப்பொழுது நிலா வந்துவிட்டது. தென்னை மரத்தின் நிழல்கள் குறைந்து விட்டன. எங்கோ தூரத்தில் நாய்கள் குரைத்துக் கொண்டிருந்தன. யாரோ தனியே ஒற்றைக் குரலில் அழும் குரல் கேட்டது.

** ** **

ஒருநாள் செல்லமுத்துவுக்கும் அல்லிக்கும் இப்படித்தான் பேச்சு வளர்ந்து விட்டது. அல்லி ஆவேசம் வந்தவள் போல் பேச ஆரம்பித்து விட்டாள். அவளுடைய நியாயமான கேள்விகளுக்குச் செல்லமுத்துவால் பதில் சொல்ல முடியவில்லை. எப்படிச் சொல்ல முடியும்!

ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் தலை வணங்கும் தலைவர் செல்லமுத்து அல்லியின் முன்பு தலை குனிந்து விட்டார்.

"ஏன் தலை குனிந்து நிற்கிறீர்கள். உங்களுக்குக் குடும்பம் நடத்த வேண்டும் என்று இஷ்டம் இல்லையா! நான் கஷ்டப்படுவது உங்களுக்குத் தெரிய வில்லையா! கையில் காசில்லாததால் குழந்தை வேலன் மூன்று நாட்களாகப் பட்டினி கிடப்பதை நீங்கள் பார்க்கவில்லையா! சொல்லுங்கள்" என்றாள் அல்லி. அவள் குரலில் ஆத்திரமும் அன்பும், கோபமும் தாபமும் கலந்திருந்தன.

செல்லமுத்துவின் உள்ளம் அவமானத்தால் குன்றி விட்டது. அவரால் அதை உணர்ந்து கொள்ள முடிந்தது. இருந்தாலும் அல்லி அப்படி இடித்துக் காட்டியதை அவரால் தாங்க முடியவில்லை. தம்மை மறந்தார். தம்முடைய மனித உணர்ச்சியை மறந்து விட்டார்.

தம்மையும் மீறிய கோபத்தில் "சீ! மூடு வாயை" என்று இரைந்து கத்தி விட்டு வெளியில் வந்து விட்டார். தம்முடைய கால் போன வழியில் சென்றார்.

கடைசியில் ஒரு டீக் கடையில் புகுந்தார். சூடாக டீ வரவழைத்துக் குடித்தார்.

அப்படியே மாரியம்மன் கோயிலுக்கு அருகே உள்ள மாந்தோப்புப் பக்கம் சென்றார். டாண்! டாண்! என்று மாரியம்மன் கோயில் மணி ஓசை வான வெளியில் மிதந்து வந்தது. மரங்களின் இலைகளை எல்லாம் ஆட்டி அசைத்தது காற்று. கூட்டம் கூட்டமாகப் பறவைகள் தங்கள் குடும்பத்துடன் பறந்து சென்றன.



யாரோ தூரத்தில் இனிமையாகப் பாடும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து, "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ" என்று அந்தப் பாடகன் கணீரென்று பாடியதும் கேட்டது.

செல்லமுத்துவின் சிந்தனையை அந்த அமர கவியின் வரிகள் தூண்டி விட்டன.

வாழ்வின் விசித்திரங்களை ஒரு கணம் எண்ணிப் பார்த்தார் செல்லமுத்து. எவ்வளவுக் கெவ்வளவு நல்ல விஷயங்களை நாடிப் போகிறோமோ அவ்வளவுக் கவ்வளவு தீமையை எதிர்த்துப் போராட வேண்டியிருக்கிறது.

அவருக்குப் பின்னும் யாரோ வந்து உட்கார்ந்தார்கள். அவர் தலை நிமிர்ந்து பார்த்தார். அவள் ஒரு கிழவி. தொழிலாளர்களுக்கு மத்தியில் இட்லி சுட்டு விற்று வயிறு பிழைக்கும் கிழவி.

"செல்லமுத்துவா! எங்கே இப்படித் தனியே உட்கார்ந்திருக்கிறாய்! ஏதாவது தொழிலாளர் கூட்டத்துக்கு ஏற்பாடோ!" என்றாள் கிழவி.

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

"இங்கு ஏன் தனிமையில் உட்கார்ந்திருக்கிறாய். உன் முகம் கூட வாடி யிருக்கிறதே! இன்னும் சாப்பிடவில்லையா!"

செல்லமுத்துவுக்குத் தன் கஷ்டத்தை யாரிடமாவது சொல்லிக் கொண்டால் தான் மனக் குறை தீரும் போலிருந்தது. கிழவியிடம் தன் மனைவியைப் பற்றி வேண்டிய மட்டும் குறை சொன்னார்.

"சரி, வா! வீட்டுக்குப் போகலாம். நீ மிகவும் மனச்சோர்வு அடைந்திருக்கிறாய்" என்று அழைத்தாள் கிழவி.

"ஆகட்டும்" என்று சொல்லிக் கொண்டே அவள் வீட்டுக்குச் சென்றார்.

கிழவியின் வீட்டில் ஒரு பெண் இருந்தாள். செல்லமுத்துவைக் கண்டதும் அவள் அகமும் முகமும் மலர வரவேற்றாள். செல்லமுத்து அவள் அழகு ததும்பும் முகத்தைக் கவனித்தார். தன் மனைவியை ஒருகணம் நினைத்துப் பார்த்தார்.

கிழவியிடம் மேலே தொடர்ந்து பேசினார். தம் மனைவியின் இரக்கமற்ற தன்மையைப் பற்றி இப்பொழுது சற்றுக் கடுமையாகச் சொன்னார்.

"இது சகஜம்தானே" என்றாள் கிழவியின் வீட்டிலிருந்த பெண்.

"இந்தப் பெண் யார் பாட்டி!" என்று வியப்புடன் கேட்டார் செல்லமுத்து.

"யாரோ அனாதை. வேலையில்லை என்று வந்தாள். இங்கேயே வைத்துக் கொண்டிருக்கிறேன். எனக்கு உதவியாக இருக்கிறாள். மிக்க நல்ல குணம் படைத்தவள்" என்றாள்.

"இவள் பெயர் என்னவோ!"

"கண்ணகி."

"நல்ல தமிழ்ப் பெயர். பெயர் வைத்தால் பெண்களுக்கு இந்த மாதிரிதான் வைக்க வேண்டும்."

"கண்ணகி! உனக்கெப்படி என் மனைவியைப் பற்றித் தெரியும்!"

"உங்கள் மனைவியைப்பற்றி ஒன்றும் தெரியாது. ஆனால் உங்களைப் போன்ற ஆண்களைப் பற்றி எனக்கு நன்றாகத் தெரியும்!" என்றாள்.

"என்ன தெரியும்!"

"தங்கள் மனைவியைப் பற்றி ஓயாமல் குறைகூறிக்கொண்டிருப்பார்கள் என்று."

செல்லமுத்துவுக்குத் 'திக்'கென்றது.

இதற்குள் கிழவி சூடாக இட்லி கொண்டு வந்து வைத்தாள். கண்ணகி ஓடிப்போய்ச் சட்னி கொண்டுவந்து போட்டாள். செல்லமுத்து வயிறு நிறையச் சாப்பிட்டார். கிழவியிடம் விடை பெற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்பினார்.

வீட்டில் அவர் மனைவி மௌனமாக அவரைப் பார்த்தாள். பிறகு தன் காரியத்தில் ஈடுபடலானாள். அடுப்பில் இருந்த விறகை உள்ளே தள்ளிவிட்டு ஊது குழலை எடுத்து ஊதினாள். அப்பொழுது அவள் கன்னம் உப்பி உப்பி அடங்குவதைப் பார்த்துக் கொண்டிருந்தார் செல்லமுத்து. அவளிடம் பேச விரும்பி, "குழந்தை வேலன் எங்கே?" என்றார்.

"தெருவில் விளையாடுவான்."

"குழந்தையை இப்படித்தான் தெருவில் தனியாக விடுவதா!" என்று சொல்லி விட்டுத் தெருப் பக்கம் வந்தார். புழுதியில் விளையாடிக் கொண்டிருந்த வேலனைத் தூக்கிக் கொண்டு வந்தார்.

செல்லமுத்து அல்லியிடம் ஏதோ பேச ஆரம்பித்தார். அதற்கு இடம் கொடுக்காமல் அல்லி சொன்னாள்:

"தொழிலாளர்களுக்கு வெற்றி கிடைக்கும் வரை, மக்கள் எல்லாரும் பகுத்தறிவு பெறும் வரை, நீங்கள் சம்பாதிக்கும் பணத்தைக் கொண்டு வந்து குடும்பத்தில் இருக்கும் மனைவிக்குக் கொடுக்கக்கூடாது. ஏன், அப்படித்தானே!"

"அட கஷ்டகாலமே! வீட்டுக்குள் நுழைந்ததும் இதே ராமாயணம் தானா!"

"நீங்கள் மட்டும் தொழிலாளர்களுக்கு என்ன புதிதாகச் சொல்லுகிறீர்கள். கஷ்டத்தைப் பற்றித்தானே!"

செல்லமுத்து தலையை இரு கைகளாலும் இறுகப்பிடித்துக்கொண்டு உட்கார்ந்தார்.

அங்கு இருந்த நிலைமையைக் குழந்தை வேலன் புரிந்து கொண்டான். தாயின் முகத்தையும், தந்தையின் முகத்தையும்

மாறி மாறிப் பார்த்தான். 'தோசை' என்று அழுது புலம்ப ஆரம்பித்து விட்டான்.

குழந்தையைத் தாவி எடுத்து அணைத்துக் கொண்டாள் அல்லி. அவளுடைய தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு குழந்தை அழுதான். அவனை மிகுந்த சிரமத்துடன் சமாதானப் படுத்தினுள்.

"ஏன் நின்று கொண்டிருக்கிறீர்கள்! உங்களுக்கு மனைவியா! மகனு! குடும்பமா! என்ன இருக்கிறது! போங்கள். போய்த் தொழிலாளர் துயரைத் துடையுங்கள்" என்றாள். செல்ல முத்துவைக் கடுமையாகப் பார்த்தாள். ஆத்திரமும் வெறுப்பும் தொனிக்க "ஏன் நிற்கிறீர்கள்! போங்கள்!" என்றாள் மீண்டும்.

"உன்னோடு குடித்தனம் செய்வதை விட நடுத்தெருவில் நிற்கலாம்" என்றார் செல்லமுத்து. வீட்டை விட்டு 'விர்' ரென்று வெளியே கிளம்பினார்.

இப்பொழுது அவர் மீண்டும் இட்டிலி விற்கும் கிழவியின் வீட்டுக்கு வந்தார். வீடு திறந்து கிடந்தது. ஆனால் வீட்டில் யாரும் இருப்பதாகவே தெரியவில்லை. மெதுவாக வீட்டுக்குள் சென்றார்.

கண்மணி மட்டும் கயிற்றுக் கட்டிலில் படுத்துக் கிடந்தாள். அவள் சிவந்த உதட்டில் புன்னகை நெளிந்தது. தலையணைக்குப் பதிலாகக் கையை மடித்து வைத்திருந்தாள். கையைத் தலை அழுத்தி மறைத்திருந்தது. இன்னொரு கை கட்டிலுக்கு வெளியே நீண்டு கொண்டிருந்தது. அவள் கண்கள் மூடியிருந்தன. தலை மயிர் அவிழ்ந்து தொங்கிக் கொண்டிருந்தது. பள பள வென்று மின்னும் அழகிய கரும் கூந்தல் அலை அலையாக நெளிந்து அவள் கழுத்தைச் சுற்றி, தவழ்ந்து கொண்டிருந்தது. இந்தக் கூந்தலுக்கு அடியில் அழகிய கழுத்தும், வனப்பு மிக்க தோளும், எடுப்பான மார்பும் கள்ளத்தனமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தன.

செல்லமுத்து அவளைக் கூர்ந்து பார்த்தார். ஒரு தரம் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். கனைப்புச் சத்தத்தைக் கேட்டுக் கண்மணியின் தூக்கம் கலைந்தது.

திடீரென்று ஏதோ சத்தம் கேட்டு எழுந்தவள் போல கால்களை ஒய்யாரமாக நீட்டி, தரையில் குதித்தாள். தோளில் புரண்ட கரும் கூந்தலை ஒதுக்கி விட்டுச் செல்லமுத்துவைப் பார்த்தாள்.

"எனக்கு எவ்வளவோ பேர் இருக்கிறார்கள். எத்தனையோ தொழிலாளர்களின் வீடுகள் இருக்கின்றன. இருந்தாலும் உன் வீட்டைத் தேடித்தான் வந்தேன். இதைப் பார்த்தால் உனக்கு ஆச்சரியமாக இல்லையா!" என்றார்.

"ஆமாம்" என்றாள். ஆனால் அவள் முகத்தில் முறுவல் இல்லை.

"பாட்டியம்மா எங்கே!" என்றார்.

"அவர்களுக்கு எத்தனையோ பேர் தெரிந்தவர்கள். அங்கேயே போய்ச் சாப்பிட்டு விட்டு வருவார்கள். காலை வேளையைத் தவிர மற்ற வேளைகளில் அவர்கள் வீட்டில் இருப்பதில்லை" என்றாள்.

"சரி, நான் பிறகு வருகிறேன்" என்று சொல்லிக் கிளம்பினார் செல்லமுத்து.

கண்மணி ஒரு கணம் செல்லமுத்துவைப் பார்த்தாள். அவர் முகத்தில் இருந்த பசிக் களைப்பைப் பார்த்தாள். 'வீட்டில் மீண்டும் என்ன தகராறோ என்னவோ, பாவம்! மனிதர் சாப்பிடாமல்கூட இங்கே வந்து விட்டார்' என்று நினைத்தாள்.

"சற்றுப் பொறுங்கள்; இதோ வந்து விட்டேன்" என்றாள். வீட்டுக்குள் சென்றாள். ஒரு தட்டில் சாதம் போட்டுக் கொண்டு வந்து அவர் எதிரில் வைத்தாள். "உங்களைப் பார்த்தால் காலையிலிருந்தே பட்டினியாக இருப்பவர் போலிருக்கிறது. முதலில் சாப்பிடுங்கள்" என்றாள்.

தொழிலாளர்களின் தலைவர் செல்லமுத்து தன் மகனையும் மனைவியையும் தனியே விட்டு விட்டு எங்கோ ஊர் பேர் தெரியாத ஒரு அழகிய பெண்ணின் முன்னும் பல்லைக் காட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தார். அவள் படைத்த சாப்பாட்டைச் சாப்பிட ஆரம்பித்தார்.

அநாதைப்பெண் கண்மணி மெதுவாக அவரிடம் பேச்சுக் கொடுத்தாள்:

"உங்களுக்குக் கல்யாணமாகி மனைவி இருக்கிறார்கள் அல்லவா!"

"ஆமாம், இருக்கிறாள்."

"குழந்தைகள் உண்டோ!"

"ஒரு ஆண் குழந்தை இருக்கிறது."

"நீங்கள் இப்படி அவர்களை விட்டுவிட்டு அடிக்கடி இங்கே வந்து விடுகிறீர்களே, உங்கள் மனைவி அதைப் பற்றி உங்களிடம் ஒன்றுமே சொல்லுவதில்லையா!" என்றாள்.

"மூன்று வருஷங்களாக அவள் சொல்லிக் கொண்டுதான் இருக்கிறாள். என்னுடைய நிலைமையைப் புரிந்து கொள்ளாமல் அடிக்கடி கோபித்துக் கொள்கிறாள்."

"ஐயோ பாவம்! அவர்கள் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்களோ" என்றாள். ஒரு பெருமூச்சு விட்டாள்.

செல்லமுத்து இதயத்தில் அந்த வார்த்தைகள் ஒரு சூறாவளியைக் கிளப்பி விட்டன. அவருடைய சுயமரியாதை உணர்ச்சியையே பாதிக்கும் படியான ஒருவித வெறுப்பு அவர் உள்ளத்திலே குடி கொண்டது.



அவர் என்னவோ அவர் மனைவியை நேசிக்கத்தான் செய்தார். ஆனால் அவளால் அவர் மனதை உணர்ந்து கொள்ள முடியவில்லை. அவள் யாரைப் பற்றியும் நல்ல வார்த்தை சொல்லுவதில்லை. எப்பொழுதும் அவர் தலையிலே மூட்டை மூட்டையாக வசைதான் கொட்டினாள்.

அவர் ஒரு பெண்ணின் அன்புக்காக ஏங்கினார். ஆனால் அந்த அன்பை அவர் தம்முடைய மனைவியிடம் பெற முடியவில்லை. அநாதைப் பெண்ணான கண்மணியிடம் அந்த அன்பைக் கண்டார்.

அன்று முதல் கிழவியின் வீட்டுக்கு அடிக்கடி வந்து சாப்பிட ஆரம்பித்தார். சாப்பாட்டுக்காகக் கொடுக்க வேண்டிய பணத்தைவிடச் சற்று அதிகமாகவே கொடுத்தார். அதனால் கிழவியும் செல்ல முத்துவுக்கு அதிகமான உபசாரம் செய்தாள். கிழவியின் கட்டளைப்படி கண்மணியும் விழுந்து விழுந்து உபசரித்தாள்.

நடுநடுவே வீட்டுக்கும் செல்வார். வீட்டுக்குள் இருக்கும்போதெல்லாம் அல்லியின் கோபத்தை அவரால் தாங்க முடியாது. அப்பொழுதெல்லாம் கண்மணியின் அன்பான உபசரிப்பை எண்ணிப் பார்ப்பார். அவர் மனம் பேதலிக்கும்.

சில சமயம் கண்மணியிடம் பேசிக் கொண்டிருக்கும்போது அவருக்குத் தம் மனைவி அல்லியின் நினைவு வந்துவிடும். அப்பொழுது அவர் உடல் நடுங்கிவிடும். அவர் உள்ளத்தில் அவர்மீதே ஒரு வெறுப்புத் தோன்றி விடும். அவர் உள் உணர்ச்சி அவரைப் பார்த்துக் கேலி செய்யும்.

"தொழிலாளர்களின் நலனுக்குப் பாடுபடுவதாகச் சொல்லிக் கொள்ளுகிறாய்; ஊருக்கெல்லாம் பகுத்தறிவுப் பிரசாரம் செய்கிறாய். ஊரில் உள்ளவர்கள் எல்லாம் மனைவி மக்களோடு வாழவேண்டும் என்று துடிக்கிறாய். ஆனால் உன் அருமை மனைவி, மகனைப்பற்றி மட்டும் நீ நினைத்துப் பார்ப்பதில்லை" இம்மாதிரி இன்னும் என்னவெல்லாமோ அவர் உள்ளத்தில் தோன்றும்.


இப்படியாகத் தன் இதயத்தை வாட்டிப் பிழிந்து கொண்டிருக்கும் வேதனையைப் பற்றிக் கண்மணியிடம் சொன்னார். வாய் விட்டுச் சொல்லக் கூடாத பல விஷயங்களைப் பற்றிச் சொன்னார்.

கண்மணி அவருக்கு ஆறுதலாக ஏதேதோ சொன்னாள். அப்பொழுதெல்லாம் செல்லமுத்து கண்மணியைக் கூர்ந்து கவனிப்பார். அவள் கண்களில் இருக்கும் அன்பு ஒளியைப் பார்ப்பார்; அவள் விசுவாசத்துடன் பேசும் அழகைக் கவனிப்பார். பரம சாது போல இருக்கும் இந்தப் பெண் எதை வேணுமானாலும் செய்யும் திறமையுடையவள் என்பதையும் அவர் புரிந்து கொண்டார்.

செல்லமுத்துவிடம் அவள் சொல்லுவாள்: "நம் நாட்டில் யோக்கியப் பொறுப்புள்ள தலைவர்களே இருப்பதில்லை. வெறும் புகழுக்கு ஆசைப்படும் தலைவர்கள்தான் இருக்கிறார்கள். அவர்களால் நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் கேடுதான் விளைகிறது. இனி இவர்கள் மக்களை ஏமாற்ற முடியாது" என்பாள். கலீரென்று சிரிப்பாள்.

"கண்மணி அப்படிச் சொல்லாதே!"

"ஆமாம்; உங்கள் முகத்துக்கு எதிரில் அப்படிச் சொல்லக் கூடாதுதான்" என்



ருன். அவன் குரலில் தொனித்த பாவம் அதிசயமாக இருந்தது. முரண்டு செய்யும் மாட்டைச் 'சுளீர்' என்று சவுக்கால் அடிப்பது போலிருந்தது. ஒரு கணம் மௌனமாக இருந்தார். பிறகு கண்ணகியைப் பார்த்துச் செல்லமுத்து கேட்டார்.

“எனக்கு எதிரில் சொன்னால் என்ன?”

“போகப் போக அது உங்களுக்கே தெரியும்” என்றாள் கண்ணகி.

செல்லமுத்துவின் சிந்தனை செயல்பட ஆரம்பித்தது. அது எங்கோ ஓடியது.

** ** **

இப்பொழுதெல்லாம் செல்ல முத்து தங்களையும், தம் குடும்பத்தையும் விட்டு விட்டுச் சுற்றுவதைப் பற்றித் தொழிலாளர்கள் தெரிந்து கொண்டார்கள்.

தொழிலாளர்களில் சிலர் கூடி நின்று பேசிக் கொண்டதைச் செல்லமுத்து தம் காதால் கேட்டுக் கொண்டிருந்தார்.

“இவர்கள் தலைவர்களாம் தலைவர்கள். நம்முடைய பெயரைச் சொல்லி ஊரை ஏமாற்றுகிறார்கள். மனைவியும் மகனும் சாப்பாட்டுக்கில்லாமல் திண்டாடுகிறார்கள். அவர்களைக் கவனிக்கத் துப்பு இல்லையாம். நமக்குச் சேவை செய்கிறாராம். யாருக்கு வேண்டும் இவருடைய சேவை! அவர் மனைவி உத்தமி. அவள் அழுத கண்ணீர் நம் குடும்பத்தையே துடைத்துவிடும்.”

இப்படித் தம்மைப் பற்றியே பேசிக் கொள்வதைக் கேட்டவுடன் செல்ல முத்துவின் உடல் குன்றி விட்டது. அவரையும் அறியாமல் அவர் பயந்து பயந்து நடக்க நேரிட்டது. அவருடைய மனமே அவரைப் பார்த்துப் பரிகசிப்பதுபோலிருந்தது. “துரோகி! நீ தலைவனா! மனைவியையும் மகனையும் கவனிக்காத நீ ஒரு தலைவனா?” என்று யாரோ அவரைக் கேட்பது போல உணர்ந்தார். அந்தச் சத்தம் வரவரப் பெரிதாகி அவரைத் தாக்குவதுபோல வேதனைப்பட்டார்.

நேரே தம் வீட்டுக்குச் செல்ல விரும்பினார். அவர் கால்கள் அவரையும் அறியாமல் கண்ணகியின் வீட்டுக்கே சென்றது.

கண்ணகி அவரைக் களிப்புடன் அழைத்தாள். காப்பியும் பலகாரமும் கொடுத்து உபசரித்தாள். காப்பி சாப்பிட்டவுடன் செல்லமுத்து சொன்னார்.

“கண்ணகி! எனக்கு என் மனைவியையும் மகனையும் பிரிந்து இருக்க முடியவில்லை. அதே சமயத்தில் அவர்களுடன் சேர்ந்து வாழவும் முடியவில்லை. அப்படி அவர்களுடன் நான் வாழ்வதாயிருந்தாலும் நீ இல்லாமல் என்னால் வாழ முடியாது போலிருக்கிறது” என்றார்.

கண்ணகி செல்லமுத்துவை ஒரு மாதிரியாகப் பார்த்தாள். குலுங்கக் குலுங்கச் சிரித்தாள். “கவலைப்படாதீர்கள்! உங்கள் கஷ்டமெல்லாம் தீர்ந்து விடும்” என்றாள்.

அவர்களுடைய சம்பாஷணை அன்று அத்துடன் முடிந்தது.

இரவின் அமைதியில் ஆழ்ந்தது நகரம். ஆனாலும் இரண்டொருவர் நடந்து போய்க் கொண்டுதான் இருந்தனர். யாரோ ஒரு வாலிபர் தம்முடைய காதல் மனைவியுடன் கை கோத்துக் கொண்டு சென்றார். அவர்களைப் பார்த்துக் கண் சிமிட்டுவது போல் தெருவின் விளக்குகள் சில அணைந்து அணைந்து எரிந்து கொண்டிருந்தன.

மறு நாள். தொழிற்சாலையில் தீபாவளிக்காக எல்லாருக்கும் ஒரு மாதம் போனஸ் கொடுத்தார்கள். செல்லமுத்து பணத்தை வாங்கிக் கொண்டு உற்சாகமாக வந்தார். அவர் உள்ளம் ஊசலாடிக் கொண்டே இருந்தது. இன்று எப்படியும் தம்முடைய எதிர்கால குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஒரு முடிவு செய்து கொள்ள வேண்டியது என்று நிர்மாணித்தார்.

நேரே கண்ணகியின் வீட்டுக்கு வந்தார்.

வாசலில் கிழவி உட்கார்ந்திருந்தாள். அவளுக்குப் பக்கத்தில் எப்பொழுதும் நின்று கொண்டிருக்கும் கண்ணகியைக் காணவில்லை. அவர் மனத்தை என்னவோ செய்வது போலிருந்தது. அதை வெளியில் காட்டிக் கொள்ளவில்லை.

“கண்ணகி எங்கே பாட்டி!”

“அவள் போய் விட்டாள்!”

“எங்கு போனாள்!”

“எங்கே போனாளோ!”

“எப்பொழுது போனாள்!”

“காலையில்தான்!”

“அவள் போவதைப் பற்றி என்னிடம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லையே.”



“உன்னிடம் ஒரு கடிதம் கொடுக்கச் சொன்னாள்” என்று எழுந்து உள்ளே சென்றாள். ஒரு கசங்கிய கடிதத்தைக் கொண்டு வந்து அவரிடம் கொடுத்தாள்.

“உன் பேச்சைக் கேட்டுத் தொழிலாளர்கள்தான் கெட்டுப் போகிறார்கள் என்று நினைத்தேன். என்ன சொன்னாயோ! இந்தப் பெண்ணும் போய்விட்டாள்” என்றாள். அவள் குரலில் கண்ணகி போய் விட்ட ஒரு துக்கம் இருந்தது. செல்லமுத்துவை எரித்து விடுவது போல விழித்துப் பார்த்தாள். ஆத்திரத்தால் அவள் சுருங்கிய முகம் நடுங்கி ஆடியது.

“பெண்டாட்டியையும் பிள்ளையையும் வைத்துக் கொண்டு ஒழுங்காகக் குடித்தனம் செய்யக் கூடாதா!” என்றாள்.

செல்லமுத்துவுக்கு அந்த வார்த்தைகள் ஆயிரம் சுட்டிகளைக் கொண்டு காதில் குத்துவது போலிருந்தது. அடங்கா ஆவலுடன் கண்ணகி கொடுத்துப் போன கடிதத்தைப் பிரித்துப் படித்தார்.

“அன்பரே! வணக்கம். நான் அனாதைதான். ஆனால் அறிவிழந்தவள். உங்கள் அன்புக்குத் தலை வணங்குகிறேன். உங்கள் வேண்டுகோளை நிறைவேற்ற எனக்கு ஆசைதான். ஆனால் நான் இன்னொரு பெண்ணுக்குத் துரோகம் இழைக்க விரும்பவில்லை. நீங்கள் மனித உணர்ச்சி பெற்ற மனிதராக இருந்தால், உங்கள் மனைவியின் மனம் நோகாமல் வாழக் கற்றுக் கொள்ளுங்கள். உங்கள் குழந்தை வேலனை நல்ல வழியில் வளர்க்கப் பாடுபடுங்கள். குழந்தைகள்தான் நம் நாட்டின் செல்வங்கள். தொழிலாளர் முன்னேற்றம், மக்களுக்குப் பகுத்தறிவு புகட்டுவது என்பதெல்லாம் உங்களைப் போன்றவர்களால் முடியாது. அதற்கு வேண்டிய பண்பு உங்களிடம் இல்லை. அப்படிச் சொல்லிக் கொண்டு உங்களையும் ஊரையும் ஏமாற்றிக் கொள்ளாதீர்கள். நீங்கள் உங்கள் மனைவியுடன் வாழ வேண்டும் என்பதற்காகவே நான் இந்த ஊரை விட்டுப் போகிறேன். எனக்கு எந்த இடத்திலும் வாழத் தெரியும். —**கண்ணகி.**”

இந்தக் கடிதத்தைப் பல தடவைகள் படித்தார். அவர் எதிரில் கண்ணகியும், அல்லியும் மாறி மாறித் தோன்றினார்கள். கண்ணகி தன் கரிய விழிகளால் கனல் தெறிக்கப் பார்ப்பது போல் உணர்ந்தார். மிகப் பெரிய உருவமாக அவர் எதிரில் தோன்றினாள். “போங்கள், போய் உங்கள் மனைவியின் கண்ணீரைத் துடையுங்கள். இதர தொழிலாளர்கள் எப்படி வாழ வேண்டும் என்று நீங்கள் வாழ்ந்து காட்டுங்கள். போங்கள்” என்றாள்.

அவருக்கு ஒரு கணம் வானம் பூமி எல்லாமே சுழலுவது போலிருந்தது. அந்தச் சுழற்சிக்கு மத்தியில் கண்ணகியின் குரல் கேட்டுக் கொண்டேயிருந்தது. கண்ணகியின் கடிதம் அவர் கண்முன் தோன்றியது. திரும்பிய இடங்களில் எல்லாம் அதே கடிதம் காட்சி அளித்தது.

செல்லமுத்து தம் கண்களை மூடிக் கொண்டார்; காதைப் பொத்திக் கொண்டார். ஏதோ தமக்குள் சொல்லிக் கொண்டார். பிறகு வாய் விட்டே சொன்னார்.

“நான் திருந்தி விட்டேன். கண்ணகி! நான் மனித உணர்ச்சி பெற்ற மனிதனாகி விட்டேன்” என்று சொல்லிக் கொண்டார். தம் வீட்டை நோக்கி ஓடினார்.

** ** **

மாலையில் புதுப் புடவையும், குழந்தைக்குப் பட்டாசும், இன்னும் குடும்பத்துக்கு வேண்டிய பலப் பல சாமான்களுடன் புன்னகை ததும்ப வந்த தன் கணவரைப் பார்த்து அல்லி பூரித்துப் போனாள். “கல்லானாலும் அதுவாக வீட்டுக்கு வந்தீர்களே, அதுவே போதும்!” என்றாள்.

“அல்லி! நான் இப்பொழுது வெறும் வறட்டுக் கூச்சல் போடும் தொழிலாளர் தலைவன் அல்ல. பகுத்தறிவுப் பிரசாரம் செய்யும் உணர்ச்சியற்ற பிரசாரகன் அல்ல. வாழ்க்கையை வாழ்ந்து காட்டப் போகும் செல்லமுத்து” என்றார்.

“வாழ்க்கைக்குப் பிரயோசனமில்லாத எண்ணங்கள் இனிமேல் என் கணவருக்கு ஏற்படாமல் இருக்க வேண்டுமே” என்று எண்ணுவது போல அல்லி அவரை அன்புடன் பார்த்துக் கொண்டிருந்தாள். அவள் கருவிழிக் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்தது.

குழந்தை வேலன் கையில் ஒரு பட்டாசுக் கட்டை எடுத்துக் கொண்டு குதித்துக் குதித்து வந்து கொண்டிருந்தான். பட பட வென்ற சீன வெடியின் சத்தம் எங்கோ தூரத்திலே கேட்டது.


உங்கள் மங்கலத்திருவிளக்குச் சுடர்
வருடம் முழுதும்
மங்காதொளி தருக!
விளைப்பயல்களின் வேதனைகள் குறைக. நோவு, தலை வலி, ஜலதோஷம் அல்லது ஜ்வரம் இவற்றினின்று "அனஸின்" நிச்சயமாக நிவாரண மளிக்கும் என்பதை நினைவிலிருத்துங்கள்.
'அனஸின்'
வில்லைகள்
வேதனைகளிலிருந்து விடுதலைபெற
இந்தியாவில் தயாரிப்பவர்கள்:
ஜ்யாப்ரே, மானர்ஸ் & கோ. லிமிடெட். பம்பாய், கல்கத்தா, மதராஸ், டில்லி.
டிரேட் மார்க் உரிமையாளர்கள்: ஒயிட் ஹால் பார்மகல் கம்பெனி, நியூயார்க் யு.எஸ்.ஏ.


பாப்பா மலர்
ஹாஸ்ய வெடிகள்
இந்தக் காட்டில் யார் ரொம்ப பலசாலி? சொல்!
நீங்கள் தான்
இந்தக் காட்டில் யார் மிகவும் பலசாலி! சொல்!
நீங்கள் தான்.
இதைக் கேட்க வேண்டுமோ! நீங்கள் தான் மிகுந்த பலசாலி.
இந்தக் காட்டில் யார் ரொம்ப பலசாலி?
கேள்விக்குப் பதில் தெரியவில்லை என்றால்: அதற்காகக் கோபம் வரவேண்டிய அவசியமில்லையே!



அந்தப் பெரிய கூடாரத்தின் நாலா புறங்களிலும் ஏராளமான ஜனங்கள் உட்கார்ந்திருந்தார்கள். சர்க்கஸ் சொந்தக்காரர் கையில் பிரம்புடனும், தம்முடைய பல வித வர்ணக் கோட்டில் வெள்ளிப் பதக்கங்களை அணிந்து கொண்டும் கூடாரத்துக்கு மத்தியில் வந்து நின்றார்.

உடனே, வேடிக்கை பார்க்க வந்திருந்த சிறுவர் சிறுமியர் யாவரும் 'மீசை மாமா வந்து விட்டார்' என்று குதித்துக் கை கொட்டிச் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

அந்த சர்க்கஸ் சொந்தக்காரருக்கு முகத்தில் இரு பக்கங்களிலும் நீண்ட கறுப்பு மீசை இருந்ததால், குழந்தைகள் அவரை மீசை மாமா என்றே அழைப்பார்கள். அந்த மீசை மாமா, சர்க்கஸ் நடக்காத நேரங்களில் தம்மிடம் வரும் குழந்தைகளுடன் மிகவும் அன்பாக நடந்து கொள்ளுவார். ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக டிக்கெட் கொடுத்து சர்க்கஸ் வேடிக்கைகளையெல்லாம் பார்க்கச் சொல்லுவார்.

மீசை மாமா குழந்தைகளிடத்தில் எவ்வளவு அன்பாக நடந்து கொண்டாரோ, அது போலவே தம்மிடம் உள்ள மிருகங்களிடமும் மிக்க அன்பாக நடந்து கொண்டார்.

சர்க்கஸ் சொந்தக்காரர் வந்தவுடனே, பலவித வேடிக்கைகள் செய்யும் ஜிம்மி நாயும் வந்து சேர்ந்தது. சர்க்கஸ்காரர் தமது கையிலிருந்த சாட்டையைச் சொடுக்கினார். உடனே எரிந்து கொண்டிருந்த மூன்று வட்டமான பந்தங்களின் வழியாக நாய் நுழைந்து வெளியே வந்தது. அவ்வளவுதான்! கூடாரம் எங்கும் பலத்த கரகோஷம் ஏற்பட்டது.

ஆனால் அதே சமயத்தில் 'நெருப்பு, நெருப்பு!' என்று ஜனங்கள் கூக்குரலிட்டார்கள். ஆமாம், நெருப்புத்தான்! கூடாரத்தின் ஒரு மூலையில் பிடித்துக் கொண்ட நெருப்பு எல்லாப் பக்கங்களிலும் வேகமாகப் பரவத் தொடங்கியது.

ஜனங்கள் இங்கும் அங்குமாக ஓடினார்கள். சர்க்கஸிலிருந்த மிருகங்கள் யாவும் அதுதான் சமயம் என்று தப்பி ஓட்டமாக ஓடி மறைந்து விட்டன.

அவ்வளவு பெரிய சர்க்கஸ் கூடாரம் அரைமணி நேரத்தில் இருந்த இடமே தெரியாமல் சாம்பலாகித் தரையோடு தரையாகி விட்டது.


சர்க்கஸ் சொந்தக்காரரான மீசை மாமா என்ன செய்வார், பாவம்! மூர்ச்சை அடைந்து கீழே விழுந்தார். சில நிமிஷங்களுக்கெல்லாம் அவர் முகத்தை யாரோ நக்குவது போலிருந்தது. கண் விழித்துப் பார்த்தார். மீசை மாமாவின் முகத்தை நக்கியது அவர் அன்பாக வளர்த்து வந்த அந்த சர்க்கஸ் ஜிம்மிதான். மீசை மாமா நாயைக் கட்டிக் கொண்டார். அவர் அதைக் கட்டிக் கொண்டது. "எல்லா மிருகங்களும் என்னை விட்டு விட்டுப் போய் விட்டாலும் நீயாவது எனக்குத் துணையாக இருக்கிறாயே" என்று அதனிடம் சொல்லுவது போலிருந்தது.

* * *

தினந்தோறும் மீசை மாமா ஜிம்மியைத் தெருத் தெருவாக அழைத்துக் கொண்டு பல வேடிக்கைகள் செய்து வந்தார். ஜிம்மியின் சர்க்கஸ் வித்தைகளைப் பார்ப்பதற்குச் சிறுவர்களும், சிறுமிகளும் பெரியவர்களும் ஏராளமாகக் கூடி மீசை மாமாவுக்கு நிரம்பப் பணம் கொடுத்தார்கள். சில மாதங்களில் மீசை மாமாவுக்கு நல்ல காலம் பிறந்து விட்டது; ஜிம்மியின் உதவியால் மீண்டும் சர்க்கஸ் நடத்துவதற்குப் போதிய பணம் கிடைத்து விட்டது.

அப்படி இருக்கும் சமயத்தில், ஒரு நாள் இரவு ஜிம்மி வெளியே உலாவப் போனபோது, "ஏ நாயே!" என்று யாரோ கூப்பிட்டது போல் இருந்தது. நாய் திரும்பிப் பார்க்கவே, இதற்கு முன்பு தன்னுடன் சர்க்கஸில் வேலை செய்து ஓடிப் போன யானைகள், குதிரைகள், குரங்குகள், சிறுத்தைகள், கரடிகள் முதலியன நாய் இருக்கும் இடத்தை நெருங்கின.

"ஏ ஜிம்மி! இதென்ன அநியாயம்? நாங்கள் யாவரும் சர்க்கஸை விட்டு ஓடி



வந்தும் நீ மாத்திரம் அந்தப் பொல்லாத சர்க்கஸ் சொந்தக்காரரிடம் வேலை செய்துகொண்டு அவருக்கு வருமானம் கிடைக்கும்படி செய்து கொண்டிருக்கிறாயே. நாங்கள் சர்க்கஸில் இருக்கும் பொழுது அவர் எங்களைச் சும்மா விட்டாரா? சின்ன முக்காலியில் உட்காரச் சொன்னார். பீப்பாயை, இந்தப் பெரிய தேகத்தை வைத்துக் கொண்டு சிரமப் பட்டு உருட்டச் சொல்லிக் கட்டளை யிட்டார். ஒரு யானை மீது மற்றொரு யானையை உட்காரும்படி வற்புறுத்தினார். ஏன், என்னை எவ்வளவோ முறை பிள்ளையார் மாதிரி உட்காரச் சொல்லவில்லையா? உட்காரச் செய்தாரே தவிர, ஒருநாளும் கொழுக்கட்டை கூடக் கொடுத்ததில்லை. ஏன், சொல்லப் போனால் வெட்கக் கேடு! பிள்ளையார் சதுர்த்தி அன்றுகூட எங்களுக்கு விடுமுறை கிடையாது! லீவு நாள் என்று அன்றுதான் மூன்று ஆட்டங்கள் வைத்துப் பணம் வசூல் செய்தார். அவருக்காக எங்கள் தேகத்தை எப்படி யெல்லாமோ வளைக்க வேண்டியிருந்தது" என்றது ஒரு பெரிய யானை. கூட இருந்த மற்ற யானைகளும் பெரிய யானை சொல்லுவதை ஆமோதிப்பது போலத் தும்பிக்கைகளை இப்படியும் அப்படியுமாக அசைத்தன.

உடனே ஒரு குதிரை மிகக் கோபத்துடன் தான் பட்ட கஷ்டத்தைச் சொல்லத் தொடங்கியது.

"நாங்களும் உன் எஜமானனுக்கு உழைத்தது போதும். எங்களையும் சும்மா விட்டாரா அவர்? சர்க்கஸ் கூடாரத்துக்குள் காளைப்போல் சுற்றிச் சுற்றி வரச் சொன்னார். எங்கள் முதுகின் மீது தடால் தடால் என்று ஏறி எங்கள் முதுகைப் புண்படுத்திக் காய்த்துப் போகும்படி செய்தார். பின் பக்கமாக வேறு சுற்றிச் சுற்றி நடக்கும்படி செய்தார். இப்பொழுது நாங்கள் ஒரு வேலைக்கும் உதவாமல் போகும்படி செய்து விட்டார். இப்பொழுது எங்களை யாராவது வண்டியில் கட்டினால் ஒன்று நாங்கள் சுற்றிச் சுற்றி வரவேண்டும்; இல்லாவிட்டால் பின்பக்கமாகச் செல்ல வேண்டும். இதனால் எங்கள் வாழ்க்கையே பாழாய்ப் போய் விட்டது. இப்பொழுது என்ன செய்து உயிர் வாழ்வது என்றே எங்களுக்குத் தெரியவில்லை!"

உடனே ஒரு சிறுத்தைப் புலி சீறி எழுந்தது. "யானை சொல்லியதையும் குதிரை சொல்லியதையும் நான் முழு மனதுடன் ஆமோதிக்கிறேன். அவைகளைப்போல் என் வாழ்க்கையும் பாழாகி விட்டது. என் வீரம் என்ன? தைரியம் என்ன? தந்திரம் என்ன? எல்லாம் இப்பொழுது எங்கேயோ மறைந்து போய் விட்டன! எனக்குத் தீராப் பகையுள்ள பிராணிகளுடன் என்னை அன்பாகப் பழகும்படி வற்புறுத்தி, என்னை ஓர் ஆட்டுக் குட்டிக்கும் கேவலமாகச் செய்து விட்டார் அந்த சர்க்கஸ்காரர். இப்பொழுது காட்டில் என்னை ஒரு மிருகமும் லக்ஷியம் செய்யவில்லை. நான் இப்பொழுது புலி மாதிரியாகவும் இல்லை; பூனை மாதிரியாகவும் இல்லை" என்று சிறுத்தை வருத்தத்துடன் அழாக்குறையாகக் கூறியது.

குரங்குகளும் 'கீச் கீச்' என்று ஏதோ சொல்ல முற்பட்டன. இதெல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த ஜிம்மி கம்பீரமாக எழுந்து நின்று பதில் சொல்லத் தொடங்கியது.

"ஏ சிநேகிதர்களே! நான் என் எஜமானர் செய்த நன்றியை ஒரு நாளும் மறக்கவே மாட்டேன். உங்களையும் அவர் சிறு பிராயம் முதல் அன்பாக வளர்த்து வந்தார். பல வேடிக்கைகள் செய்யக் கற்றுக் கொடுத்தார். நாம் யாவரும் வேடிக்கை செய்வதைப் பார்த்துப் பல்லாயிரக் கணக்கான ஜனங்கள் சந்தோஷப் படும்படி செய்தார். இல்லாவிட்டால் நம்மை யார் லட்சியம் செய்வார்கள்? நீங்கள் என்னுடன் சேராவிட்டால் போங்கள். நாளைய தினம் எங்கள் எஜமானர் உங்கள் எதிரில் இருக்கும் இந்த மைதானத்தில் கூடாரம் ஏற்படுத்தி மறுபடியும் சர்க்கஸ் ஆரம்பிக்கப் போகிறார். முதலில் என்னை வைத்துத்தான் வேலையைத் தொடங்கப் போகிறார். பிறகு நாளுக்கு நாள் அபிவிருத்தி செய்வார்" என்று ஜிம்மி சரமாரியாகப் பிரசங்கமாரி பொழிந்தது.





இதைக் கேட்ட மற்ற மிருகங்கள் யாவும் "அதையும் தான் பார்த்து விடலாமே!" என்று சவால் விட்டுக் கொண்டே கோபத்துடன் திரும்பின.

• • •

அன்று இரவு யானைகள் என்ன செய்தன தெரியுமா? பக்கத்தில் உள்ள தோட்டத்தில் ஏராளமாகப் பெரிய மரங்கள் வெட்டப்பட்டுக் கீழே போடப்பட்டிருந்தன. தோட்டத்திலுள்ள மரங்கள் யாவற்றையும் தூக்கி வந்து மைதானம் முழுவதும் நிரப்பி விட்டன யானைகள். அப்படி நிரப்பி விட்டால் மைதானத்தில் கூடாரம் போடுவது தடைப்பட்டு விடும் என்பது அவைகளின் எண்ணம்.

மறுநாள் காலை மைதானத்தைப் பார்த்தவுடன் மீசை மாமாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. அவர் பக்கத்தில் ஜிம்மியும் கோபத்துடன் குரைத்துக் கொண்டிருந்தது. அந்தச் சம்பவத்தை யானைகளும் மற்ற மிருகங்களும் மறைவிலிருந்து மகிழ்ச்சியுடன் கவனித்துக் கொண்டிருந்தன.

அப்பொழுது ஒரு பெரிய மோட்டார் ஒன்று வந்தது. அதிலிருந்து ஒரு தனவந்தர் இறங்கினார். மீசை மாமாவின் கைகளைப் பிடித்துக் குலுக்கினார்.

"நீங்கள் செய்த உபகாரத்தை நான் என்றும் மறக்க மாட்டேன். என்னுடைய இந்தத் தோட்டத்தில் வெட்டப்பட்ட பெரிய மரங்களை எப்படி இங்கு கொண்டு வந்து சேர்ப்பது என்று கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன். ஒரே இரவில், உங்கள் சர்க்கஸ் யானைகளின் உதவியினால் மரங்கள் யாவற்றையும் இந்த மைதானத்தில் கொண்டு வந்து சேர்த்து விட்டீர்கள். நீங்கள் செய்த உபகாரத்துக்கு நன்றி!" என்று கூறித் தனவந்தர் ஒரு பண மூட்டையை மீசை மாமாவிடம் கொடுத்தார். மீசை மாமாவுக்கு ஒன்றும் புரிய வில்லை. விஷயத்தைப் புரிந்துகொண்ட யானைகளும் மற்றைய மிருகங்களும் மேலும் கோபம் அடைந்தன. வேறு இடத்தில் கூடாரம் அடிப்பதற்குள் இந்த சர்க்கஸ் நாயை நன்றாகக் காயப்படுத்திவிட வேண்டும் என்று யானைகளும் குரங்குகளும் தீர்மானித்தன.

ஆனால் சிறுத்தைகளும் சிங்கங்களும், "அதனால் பலன் ஏற்படாது. நாயைக் கொன்று விட்டால் தான் இந்த சர்க்கஸுக்கு ஒரு முடிவு கட்டலாம்" என்று ஆத்திரத்துடன் கூறின.

இவற்றின் தீர்மானத்தை யானைகளும், குதிரைகளும், குரங்குகளும் ஒப்புக் கொள்ளவில்லை. அதனால் அவைகளுக்குள்ளாகவே அபிப்பிராய பேதமும் பிணக்கும் ஏற்பட்டன.

ஜிம்மி வழக்கமாக மாலையில் ஒரு தென்னை மரத்தடியில் சற்று உட்கார்ந்து காற்று வாங்குவது வழக்கம். அன்று மாலை அது உட்கார்ந்திருக்கும் பொழுது, மரத்தின் மீது ஏறி நாயின் மேல் தேங்காய்களைப் பறித்துப் போட்டு அதன் உடம்பில் பலத்த காயம் ஏற்படும்படி செய்யுமாறு குரங்குகளிடம் குதிரைகளும் யானைகளும் சொல்லி வைத்திருந்தன. ஆனால், நாய் தென்னைமரத்தினடியில் உட்கார்ந்திருக்கும் பொழுது எந்தச் சிங்கமாவது சிறுத்தைப் புலியாவது அதன் மீது பாய்ந்து உடம்பில் பலத்த காயம் ஏற்படுத்தி விடும்படி சிங்கங்களும், சிறுத்தைப் புலிகளும் கரடிகளும் சொல்லி வைத்திருந்தன.

நாயும் தென்னை மரத்தடியில் அன்று மாலை உட்கார்ந்தது. ஏற்கெனவே செய்திருந்த ஏற்பாட்டின்படி குரங்குகளும் தேங்காய்களைப் பறித்துப் போட்டன. அதே சமயத்தில், சிறுத்தைப் புலியும் நாயின்மீது பாய்ந்தது. ஆனால் குரங்குகள் பறித்துப் போட்ட தேங்காய்கள் நாயின் மீது விழுவதற்குப் பதிலாக, பாய வந்த சிறுத்தை மீது விழவே, சிறுத்தை 'ஓ' வென்று அலறிக் கொண்டு கீழே விழுந்தது.



• • •

மறு நாள் மைதானத்தில் பெரிய கூடாரம் ஏற்பட்டது. மீசை மாமா கூடாரத்துக்கு வெளியே நின்று கொண்டிருக்கும் பொழுது தப்பி ஓடிய யானைகள், குதிரைகள், குரங்குகள் யாவும் அவரை நோக்கி வந்தன. தங்களை மன்னித்துக் கொள்ள வேண்டும் என்ற பாவனையாக யாவும் மீசை மாமாவின் எதிரில் மண்டியிட்டன.

தாம் அன்பாக வளர்த்த மிருகங்களைப் பார்த்த மீசை மாமா சந்தோஷம் கொண்டு அவைகளைத் தட்டிக் கொடுத்து வரவேற்றார். நொண்டி நொண்டி வந்து கொண்டிருந்த சிறுத்தையைத் தூக்கி அதன் மீதிருந்த காயங்களைக் கவனித்துச் சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்தார். அன்று மாலை கூடாரத்தில் ஏகக் கூட்டம். யானைகளும் குதிரைகளும் ஒன்றுக்கொன்று போட்டியிட்டுக் கொண்டு வேடிக்கைகள் செய்து காட்டின. ஜனங்களின் சந்தோஷ ஆரவாரம் கூடாரத்தையே 'கிடு கிடு'க்கும்படி செய்தது. சர்க்கஸ் ஜிம்மி வாலைப் பலமாக ஆட்டிக் கொண்டு மீசை மாமாவின் பக்கத்தில் நின்றது.




M.P.F. PENCIL
எல்லோராலும்
ஏகமனதாக
போற்றப்படுவது
எம்.பி.எப்.
பென்சில்கள்
மதறாஸ்
பென்சில் பாக்டரி
3.ஸ்டிரிங்கர் தெரு
மதறாஸ் – 1.

தி நியூ கார்டியன் ஆப் இந்தியா
லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

தலைமை ஆபீஸ்: மதராஸ்

(ஸ்தாபிதம்: 1934)

சேர்மன்: எம். ஸிடி. முத்தையா

1952-ல் முன்னேற்ற விவரம்

அமுலில் இருக்கும் பாலிஸி தொகை	...	ரூ. 3 கோடிகளுக்கு மேல்
பூர்த்தியாகிய புது பாலிஸி தொகை	...	ரூ. 54 லட்சத்துக்கு மேல்
லைப் அஷ்யூரன்ஸ் நிதி	...	ரூ. 64 லட்சத்துக்கு மேல்
மொத்த ஆஸ்திகள்	...	ரூ. 70 லட்சத்துக்கு மேல்

தாராளமான பாலிஸி நிபந்தனைகள், பாலிஸிதாரர்களுக்கு நல்ல போனஸ் மற்றும் பாத்தியதைகளை உடனுக்குடன் பைசல் செய்தல் ஆகியவைகளே கம்பெனியின் அலுவல் முறையில் சில குறிப்பிடத்தக்க அம்சங்களாகும்.

இந்த சிறிய லைப் ஆபீஸில் எடுத்துக்கொள்ளும் பாலிஸியானது நிறைந்த மதிப்புள்ள சொத்தாகும். அதன் ஏஜன்ஸியும் மதிப்பு வாய்ந்த வியாபார சம்பந்தமாகும்.

○●○

தி நியூ கார்டியன் ஆப் இந்தியா லைப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: "யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்", எஸ்பிளனேட், மதராஸ்.

Bank With DENA BANK
DEVKARAN NANJEE BANKING CO. LTD.

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	...	ரூ. 1,00,00,000
வழங்கி வசூலிக்கப்பட்ட மூலதனம்	...	...	ரூ. 50,00,000
ரிஸர்வ் நிதிகள் ...	...	...	ரூ. 24,00,000
மொத்த டெபாஸிட்டுகள் ...	...	...	ரூ. 9,50,00,000க்கு மேல்
அமுலிலுள்ள வியாபார நிதிகள்	...	...	ரூ. 11,00,00,000
கணக்கு உள்ளவர்களின் எண்ணிக்கை			80,000

தலைமை ஆபீஸ்: பம்பாய்

★ *குறைந்தபட்சம் ரூ. 1,000/- கொண்ட* **எங்களது விசேஷ சேவிங்ஸ் டெபாஸிட் திட்டம்** *2½ சத விகிதம் வட்டி அளிக்கின்றன.*

★ **எங்களது 6 வருஷ, 3 வருஷ ரொக்கப் பத்திரங்கள்** *முறையே 3½ சத விகிதமும் 2½ சத விகிதமும் வட்டி அளிக்கின்றன.*

★ *குறைந்தபட்ச தொகை ரூ. 20/-ம், செக்குகள் மூலம் பணம் பெறக்கூடியதுமான* **எங்களது சேவிங்ஸ் பாங்க் கணக்குகளுக்கு** *வட்டி 1½ சத விகிதம் அளிக்கப்படுகின்றன.*

பிரவின்சந்திர வி. காந்தி, மானேஜிங் டைரக்டர்




மேலே: புத்த பகவான் படகு யாத்திரை. —(பொலன்னறு வைச் சித்திரம்.)

கீழே: அநுராதபுரம் சந்திர வட்டக்கல் சிற்பமும், போதிசத்துவர் விக்ரஹமும்.



மணியம்


இலங்கைக்
கலை மடல்
பொலன்னருவை — அநுராதபுரம் ஆகிய புராதன நகரங்களில் உள்ள அற்புதச் சிற்பச் செல்வங்களும் அழியாச் சித்திரங் களும். (நமது சித்திர நிபுணர் மணியம் நேரில் பார்த்துப் பெயர்த்து எழுதியவை.)
By kind permission of The Archaeological Department, Ceylon.





பௌத்த முனிவரின் உபதேசத்தைத் தேவர்கள் பக்தியுடன் கேட்கின்றனர். (புராதன புலஸ்தி நகரத்துப் புத்தர் கோவில் சுவர்களிலுள்ள ஓர் அபூர்வச் சித்திரம்.) கீழே: பொலன்னறுவைக் கல் விஹாரத்தில் உள்ள சயன புத்தர் சிலை.

உங்களுடைய நல்ல
அழகான படங்களுக்கு...

GEVAPAN 33



கேவாபான் 33

பகல் வெளிச்சத்திலும், செயற்கை வெளிச்சத்திலும் இந்த மிகவும் வேக பான்க்ரோமாடிக் பிலிம் சேர்த்தியான தெளிவையும், வர்ணங்களைத் தத்ரூபமாய் ரேகிக்கும் தன்மையும் கொண்டது.

சைஸ்: 620 & 120—ரூ. 2/4



GEVACHROME 30



கேவாகுரோம் 30

பகல் வெளிச்சத்திற்கு உகந்த ஆர்தோகுரோமாடிக் பிலிம், நல்ல ரேகிக்கும் தன்மை, பிரகாசமான படிகள் பதிவு, விசாலமான தோற்றப் பிடிப்பு, மற்றும் நல்ல தெளிவு வாய்ந்தது.

சைஸ்: 620 & 120—ரூ. 2/1

Gevaert

இவை விவரங்களுக்கும் "கேவார்ட்" எக்ஸ்போஷர் கார்டு கேட்டதற்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

Allied Photographics Limited

அல்லைட் போட்டோகிராபிக்ஸ் லிமிடெட்

(லேபரிஸ் டிபார்ட்மெண்ட்) கஸ்தூரி பில்டிங்ஸ், ஜம்ஷெட்ஜி டாடா ரோடு, பம்பாய்-1

கிளை ஆபீஸ்கள்: பம்பாய் • கல்கத்தா • மதராஸ் • புதுடில்லி

அழகுக்கு
அழகு செய்யும்



ஆபரணங்களின்
உறைவிடம்

★



T. கோவிந்தராஜுலு நாயுடு

வைரம், பொன் நகைகள்
வெள்ளி சாமான்கள் வியாபாரம்

28, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் ரோடு
சென்னை-1


தந்தி: "ALANKAR" - போன்: 4818


Peace upon Earth and Goodwill to Men
மங்களகர தீப அலங்காரங்களுடன் லக்ஷ்மி தேவியைப் பூஜித்து, கோலாகலமாகக் கொண்டாடும் இத் தீபாவளித் திருநாளில் எமது மனமுவந்த நல் வாழ்த்துக்களையும், வரும் புத்தாண்டில் யாவரும் சீரும் சிறப்புடனும் வாழ நல்லாசியும் அளிக்கும் இவ்வரிய சந்தர்ப்பத்தில் எங்கள் ஸ்தாபனத்தில் ஆயுள், நெருப்பு, கப்பல், விபத்து, மெஷினரி ஆகிய திட்டங்களுக்கு இன்ஷ்யூர் செய்து கொள்வதால் பரிபூரண பாதுகாப்பு அடைவதுடன் லாபத்திலும் பகிர்ந்து கொள்ள வசதி உண்டு என்பதையும் ஞாபகமூட்டுகிறோம்.
ஓரியண்டல்
ஓரியண்டல் கவர்ன்மெண்ட் செக்யூரிடி லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.,
ஓரியண்டல் பயர் அண்ட் ஜெனரல் இன்ஷூரன்ஸ் கம்பெனி லிட்.,
தலைமை ஆபீஸ்: ஓரியண்டல் பில்டிங், பம்பாய்.


ஒன்றா உலகத்து உயர்ந்த புகழ்அல்லால்
பொன்றாது நிற்பதொன்றில்..
"குறள்"
உலகத்தில் அழியாமல்
நிற்பது புகழே...
ஸ்டார் புகையிலை
..அதனால் அதுவே
தேடுவதற்கு உரியதாகும்.
TRADE MARK
ஸ்டார் புகையிலை கம்பெனி புதுக்கோட்டை
உரிமையாளர்கள்: மீ.ந.அ.செய்யது இப்ராம்ஸா & சன்ஸ்



நல் வாழ்த்துக்கள்
Patanwala
BOMBAY - 27.



கேசரஞ்ஜன்
நிகரற்ற கூந்தல் தைலம்
கவிராஜ் N. N. ஸென் & கம்பனி லிட்.,
கல்கத்தா.

மணி ஒலித்தது!

ஏ. கே. பட்டுசாமி

வானம் இருண்டு குமுறிக் கொண்டிருந்தது. மூன்று தினங்களாக விடாத மழை. ஆகாய வீதி யுத்தரங்கமாக மாறிப்போயிருந்தது. வெறி கொண்ட மத்த கஜங்கள் ஒன்றோடொன்று முட்டிக் குருதி சாயப் பொருதுவதே போல் கரு மேகக் குவியல்கள் பயங்கரமாக மோதி, பூமியை கிடுகிடுக்கச்செய்தன.

கொட்டுகிற மழையையும் பொருட்படுத்தாது சொட்டச் சொட்ட நனைந்து கொண்டே ஓட்டமும் நடையுமாக வந்த அருணாசலம், அந்த மருந்துக் கடைக்குள் நுழைந்தான்.

"இந்த இஞ்ஜெக்ஷன் மருந்து இருக்கிறதா?" என்று டாக்டர் கொடுத்த சீட்டை நீட்டினான் அவன்.

"எல்லா மருந்தும் இருக்கிறது, ஸார்! முதலில் பணம் கொண்டு வந்தீர்களா, சொல்லுங்கள்" என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார் மருந்துக் கடைக்காரர்.

அருணாசலத்தின் முகம் சூம்பியது. "ஒரு வாரம் பொறுத்துக் கொள்ளுங்கள் ஸார்......சம்பளம் வந்ததும்......" என்று இழுத்தான்.

"அப்படியானால் ஒரு வாரம் பொறுத்தே மருந்துக்கும் வாருங்கள். முதலில் வாங்கின பாக்கி பதினொரு ரூபாய் ஆறணாவை வைக்காமல் மேற்கொண்டு கடன் தர முடியாது."

"கொஞ்சம் தயவு பண்ண வேண்டும்.......வீட்டில் ரொம்ப ஆபத்தாக இருக்கிறது......"

"அதற்கு நானென்ன பண்ணட்டும், ஸார். உங்களைப் போல் இங்கே எத்தனையோ பேர் வருகிறார்கள்; ஒவ்வொருவருக்கும் பச்சாத்தாபப் பட்டுக் கொண்டிருந்தால், நான் உருப்பட்டாற் போலத்தான்!"

அருணாசலத்துக்கு அங்கு நிற்கவே லஜ்ஜையாக இருந்தது. தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்த வழியே திரும்பினான்.

* * *

கடந்த பதினைந்து தினங்களாக அவனது மனைவி சரஸ்வதிக்குக் கடுமையான காய்ச்சல். முதலில் சாதாரண ஜுரமென்று நினைத்தான். ஆனால் வர வர முற்றிக் கொண்டே வந்து அன்று நிலைமை மோசமாகி விட்டது. மார்பில் கபம் கட்டிக் கொண்டு சுவாசம் விட மாட்டாமல் திணறிக் கொண்டிருந்தாள்.

டாக்டர் எச்சரிக்கை செய்து விட்டார். "மனித சக்தியில் எவ்வளவு செய்யக் கூடுமோ அதை யெல்லாம் செய்கிறேன். பயப்படுவதற்கு இது சமயமல்ல. நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் வருகிறேன். அதற்குள் இந்த இஞ்ஜெக்ஷன் மருந்தை வாங்கி வையுங்கள். இதில் ஜுரம் இறங்கி மூச்சுத் திணறலும் நிற்க வில்லையென்றால், ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத்தான் அழைத்துச் செல்ல வேண்டும். இங்கே பிராண வாயு சிகிச்சைக்கு வசதி இல்லை."

அருணாசலத்தின் தலை சுற்றியது. கையில் சல்லிக்காசுகூடக் கிடையாது. அக்கம் பக்கத்திலெல்லாம் கை நீட்டியாகி விட்டது. குடித்தனக்காரர்களுக்குப் பாக்கி கொடுக்க வேண்டும். காபி கடையில் நோயாளிக்காக சோடா வாங்கியதற்குத் தரவேண்டும். 'பேக்கரி'யில் ரொட்டி வாங்கியதற்குக் கடன். ஏன், பழக்காரியிடம் கூடக் கடன்தான்.

இனிமேல் முதல் தேதி பிறந்து சம்பளம் வந்தால்தான் பணத்தைக் கண்ணால் காண முடியும். சம்பளம் நூறு ரூபாய் என்றாலும் இப்போதே கடன் எழுபத்தாறு ரூபாய் காத்திருக்கிறது. முதல்தேதி வருவதற்குள் முழுச் சம்பளத்துக்கும் கடன் ஏற்பட்டு விடலாம். அவன் திகைத்தான்.

"மாமா!..."

அவன் திரும்பிப் பார்த்தான். வாசற் படியில் ஒரு அழகிய சிறுமி நின்று கொண்டிருந்தாள். அவளுக்கு ஆறு வயதிருக்கும். சலவை விக்கிரகம்போல் அழகான உருவம். கபடமற்ற குண்டு முகம்; வண்டுக் கண்கள். அரையில் கட்டியிருந்த கிழிசல் பாவாடை அவளது பெற்றோரின் ஏழ்மையைப் பறை சாற்றியது. அவன் அந்தக் குழந்தையை இதற்குமுன் பார்த்திருக்கிறான். ஆனால் எங்கே என்று நினைவுக்கு வரவில்லை.

"என்னம்மா, குழந்தை?"



"என் அக்கா உங்களிடம், ஒரு ஒத்தாசை பண்ண முடியுமா என்று கேட்கச் சொன்னாள்..."

"யார் உன் அக்காள்?"

உடனே அந்தக்குழந்தை அவனைப் பார்த்தாள். வாய் விட்டுச் சிரித்தாள்.

"எதிர்வீட்டு மாமா!......எங்களை எத்தனையோ தரம் பார்த்திருக்கிறீர்களே, ஞாபகமில்லையா?..."

அவனுக்குச் சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது. சரஸ்வதி கூடச் சொல்லியிருக்கிறாள். 'அந்தக் குழந்தையின் தமக்கையை எதிர் வீட்டுப் பையனுக்குக் கொடுத்திருக்கிறது. தன் தங்கையோடு மாமனார் வீட்டுக்கு வந்து இரண்டு மாதங்களாகின்றன. தங்கமான பெண். மாமியார் கொடுமைப் படுத்துகிறாள்' என்று. அந்தப் பெண்கூட ஒன்றிரண்டு முறை இந்தச் சிறுமியுடன் சரஸ்வதியைப் பார்க்க வந்திருக்கிறாள். ஆனால் மனக் குழப்பத்தில் பார்த்தவுடன் அடையாளம் கண்டு கொள்ள முடியவில்லை.

அவன் ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தான். "இப்போது தெரிகிறது குழந்தை, உனக்கு என்ன வேண்டும்?"

குழந்தை தன் மடியிலிருந்த ஒரு காகிதத்தை எடுத்து அவனிடம் கொடுத்தாள். அதில் மூன்று ஐந்து ரூபாய் நோட்டுகள் மடித்து வைக்கப்பட்டு இருந்தன.

"இந்தப் பதினைந்து ரூபாயை இந்தக் கடிதாசில் இருக்கும் விலாசத்துக்கு 'மணி யார்டர்' பண்ண வேண்டும், மாமா..."

அந்தக் காகிதத்தில் எழுதப்பட்டிருந்த விலாசத்தை அவன் கவனித்தான்.

'கமலம்மாள், இரட்டை வீதி, அபிராமபுரம், திருச்சி ஜில்லா'

'தயவு செய்து பணத்தை உங்கள் பெயராலேயே அனுப்பவும் —கமலி' என்று அதில் குறிக்கப்பட்டிருந்தது.

"உன் அக்காள் பெயர் கமலியா?"

"ஆமாம் மாமா, என் பெயர் ரஜனி" என்று அக்குழந்தை பெருமை

யாகக் கூறியதைக் கேட்டு அவனுக்கு அந்தக் கஷ்டத்திலும் சிரிப்பு வந்தது.

சிறிது தூரம் திரும்பிப் போய் மீண்டும் ஓடி வந்தாள் அச் சிறுமி. "மாமா, இரண்டு மூன்று நாளில் கையில் கிடைத்த மட்டும் இன்னும் கொஞ்சம் பணம் அனுப்புவதாக எழுதச் சொன்னாள் அக்கா."

"மணியார்டர் கூபனில்தானே ... சரி அப்படியே எழுதுகிறேன்."

ரஜனி போய் விட்டாள்.

அருணாசலத்தின் எட்டு வயதுப் பெண்—மூத்தவள்—கிரிஜா குழந்தையைத் தூக்கிக் கொண்டு உள்ளே வந்தாள். அவனுடைய ஐந்து வயதுப் பையன் பாபுபின்னும் வந்தான்.

"இதோ பாரப்பா இந்தப் பாபுவை, அம்மா செத்துப் போயிடுவாள் என்கிறான்..." என்றாள் கிரிஜா.

அவன் மனம் துணுக்குற்றது. பாபு பயத்திலும் தன் அக்காளுக்குப் பின்னால் போய் பதுங்கிக் கொண்டான்.

"பாபு!"

"இல்லேப்பா, பக்கத்து வீட்டுப் பாட்டி அம்மாதான் அப்படிச் சொன்னாள்."

"என்னடா சொன்னாள்?"

"'அவள் சாகக் கிடக்கிறாள், புருஷன்காரனுக்கு அவளைப் பற்றிக் கொஞ்சமும் அக்கறையில்லை' என்று சொன்னாள்."

அவன் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான்.

"அப்பா!..." என்றாள் கிரிஜா தயங்கிக் கொண்டே.

"என்ன அம்மா?"

"அம்மா...... பிழைப்பாளா, அப்பா" என்றாள்.

அவனது நெஞ்சில் ரத்தம் கசிந்தது. "பயப் படாதே கிரிஜா. இஞ்ஜெக்ஷன் கொடுத்தால் குணமாகிவிடும்."

"ஆனால் நீ இன்னும் மருந்து வாங்கிவரவில்லையே, அப்பா."

பாபு குறுக்கிட்டான். "அதோ கையிலே பணம் வச்சிருக்கா பாரு! அது மருந்துக்குத்தான்!" என்றான்.

"ஆமாம், போய் விளையாடுங்கள்."

வாசலில் மோட்டார் காரின் ஓசை கேட்டது. டாக்டர் வந்து விட்டார். அவன் அவசரமாக எழுந்தான்.

"என்ன, மருந்து வாங்கி வந்து விட்டீர்களா?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் டாக்டர்.

யோசிக்க நேரமில்லை. "இதோ ஐந்தே நிமிஷத்தில் வாங்கிக் கொண்டு வந்து விடுகிறேன், டாக்டர்"

"தயாராக இருக்கும் என்றல்லவா நினைத்தேன். சரி ஓடுங்கள்! அதற்குள் நான் ஊசியை 'ஸ்டெரிலைஸ்' பண்ணி வைத்துக் கொள்ளுகிறேன்."

மழையின் உக்கிரம் சற்று தணிந்திருந்தது. பக்கத்து வீதியிலேயே மருந்துக் கடை. அருணாசலம் ஓட்டமாகவே ஓடினான். கையிலிருந்த பதினைந்து ரூபாயை விறைப்பாக மருந்துக் கடைக்காரனிடம் நீட்டி "உம், சீக்கிரம் எடுங்கள் மருந்தை"



என்று மிடுக்கு அதிகாரத்துடனேயே கேட்டான்!

ஊசியும் கையுமாகத் தயாராக இருந்த டாக்டர் அவன் கொண்டு வந்த மருந்தைக் குழாயில் எடுத்து, பிரக்ஞை யற்றிருந்த நோயாளியின் உடம்பில் மெதுவாக ஏற்றினார்.

டாக்டர் புறப்பட்டார். பெண்களுக்கே இயற்கையான ஆவலுடன் எதிர் வீட்டுச் சன்னலருகில் அந்தச் சிறுமி ரஜனியும் அவளது அக்காள் சுமதியும் டாக்டர் போவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவனது குற்றமுள்ள மனம் அவர்களைக் கண்டதும் சொரேர் என்றது. விரைவாக உள்ளே வந்து விட்டான்.

அவன் செய்தது சரியா?....அவளை நம்பிக் கடன் கொடுப்பவர்கள் இல்லை. தான் பூராவும் எந்தக் காரியாலயத்தின் முன்னேற்றத்துக்காக மாடு போல் உழைக்கிறானோ அங்கேயும் அவனது நிலைக்கு இரங்குவாரில்லை. அப்படியிருக்க அவளை யோக்கியன் என்று நம்பிப் பணத்தைக் கொடுத்த அந்தக் கபடமற்ற அபலைப் பெண்களை ஏமாற்றி, அப்பணத்தைத் தன் சொந்த உபயோகத்துக்குச் செலவழித்தது நம்பிக்கைத் துரோகம் அல்லவா?

மறு கணமே அவன் தன் மனத்தைச் சமாதானப் படுத்திக் கொண்டான். பணத்தை அபகரித்துக் கொண்டோமா, என்ன? இன்னும் நாலைந்து நாட்களில் எங்கேயாவது கைமாற்றாக வாங்கி அனுப்பி விட்டால் போகிறது. ஒரேயடியாக ஏமாற்றினால் அல்லவா தவறு. ஆபத்திற்குப் பாபமில்லை. சரஸ்வதி பிழைத்தெழுந்திருக்கட்டும். அவளைக் கொண்டே 'உன் பணத்தால் தான் சுமதி, என் உயிர் பிழைத்தது!' என்று உண்மையைச் சொல்லிவிடச் செய்கிறேன். அந்தக் குழந்தைகளும் தங்கள் பணம் ஒரு ஆபத்தான சமயத்திற்கு உதவியதை எண்ணிச் சந்தோஷம் அடைவார்கள், என்று தனக்குத்தானே கூறிச் சமாதான மடைந்தான்.

ஆனால் என்ன முயன்றும் மனச்சாட்சி சிறிதும் சமாதான மடையவில்லை. உள்ளுணர்வு மட்டும் அவளை இடித்துக் காட்டிக் கொண்டேயிருந்தது.

2

இரண்டு மூன்று நாட்கள் கழிந்தன. அடை மழை ஓய்ந்து விட்டது. ஆனால் தூறலின் பிசுபிசுப்பு மட்டும் இன்னும் ஓயவில்லை. சரஸ்வதியின் உடம்பு குணமடையத் தொடங்கியது. இப்போது மூச்சுத் திணறல் இல்லை. டாக்டர் கூறினார்: "அருணாசலம் நீங்கள் அதிர்ஷ்டசாலிதான். இனிமேல் பயமில்லை. ஆனால் பூரண குணம் தெரிய இன்னும் ஒருவாரமாவது பிடிக்கும். இன்னும் ஆறு இஞ்ஜெக்ஷன்கள் போட்டு விட்டால்......"

இன்னும் ஆறு இஞ்ஜெக்ஷன்களா? அதற்குப் பணம்?.........அருணாசல

அரண்டு போனான். அன்று தேதி இருபத்தி நாலுதான்.

"டாக்டர், இன்ஜெக்ஷனை ஒரு வாரம் பொறுத்து......"

"வைத்தியம் எப்படிச் செய்ய வேண்டுமென்று உம்மிடம் நான் கற்றுக் கொள்ளத் தேவையில்லை என்று நினைக்கிறேன்" என்று சிறிது ஏளனம் கலந்த கடுகடுப்புடன் கூறினார் டாக்டர்.

அதற்குமேல் அவன் பேசவில்லை.

அன்று மாலை சரஸ்வதியைப் பார்க்க எதிர் வீட்டுச் கமலி வந்தாள். அவளுடன் கூடவே காதில் குண்டலங்கள் குலுங்க ரஜனியும் மான் குட்டியைப் போல் துள்ளிக் குதித்துக்கொண்டு ஓடிவந்தாள்.

"மாமா, மணியார்டர் போய்ச் சேர்ந்திருக்குமோ?"

அவனுக்குத் திக்கென்றது. இந்தக் கேள்வியை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை. பொய் சொல்லிப் பழக்க மில்லாதவனாதலால் கேட்டவுடன் ஒரு அசட்டுச் சிரிப்பைத் தவிர வேறு பதில் ஒன்றும் அவன் வாயினின்று வரவில்லை.

கமலி தன் தங்கையைக் கடிந்தாள். "அசடு, மாமிக்கு உடம்பு சரியில்லை. இரைச்சல் போடாதே" என்றாள்.

ரஜனி அடங்கி விட்டாள்.

ஏதோ பெருத்த கண்டத்திலிருந்து தப்பிப் பிழைத்தது போல் அவன் ஒரு நீண்ட பெருமூச் செறிந்தான்.

அடுத்த நிமிடம் எதையோ நினைத்துக் கொண்டவன்போல் தன் அறையிலிருந்து எட்டிப் பார்த்தான். சகோதரிகள் இருவரும் கோமளியின் அறைக்குள் இருந்தனர்.

"ரஜனி" என்று அவன் மெதுவாகக் கூப்பிட்டான்.

ரஜனி ஓடி வந்தாள்.

"என்ன மாமா, மணியார்டர் ரசீது வந்திருக்கிறதா?"

அவன் சமாளித்துக் கொண்டு பேசினான். "இல்லை குழந்தை, நாளைக்கு வரலாம். கிராமாந்திரமல்லவா? கொஞ்சம் மெதுவாகத்தான் வரும்."

"கமலி அக்காகூட அப்படித்தான் சொன்னாள்."

"ஆமாம், இன்னும் கூட ஏதோ பணம் அனுப்ப வேண்டும் என்று உன் அக்காள் சொன்னாள் என்றாயே!"


குழந்தை தயங்கினாள்...... "இல்லை மாமா,... அனுப்பத் தான் வேணும். ஆனால் என் அக்காவின் கையில் பணமில்லையே!"

"எதற்கும் கேட்டுப் பார். அனுப்புவதானால் நாளைக் காலையிலேயே அனுப்ப வேண்டும். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை. தபாலாபீஸ் இல்லை."

ரஜனி தன் அக்காவிடம் சொல்லுவதற்காக ஓடினாள்.

வறுமையில்தான் மனிதனுக்கு என்னென்ன கொடிய எண்ணங்கள் தோன்றுகின்றன? அவனுடைய பேய் மனம் எத்தனை துரோக சிந்தனைகளை உற்பத்தி செய்கிறது?

மறுநாட் காலை அருணாசலம் ரஜனியின் வரவுக்குக் காத்திருந்தான். மணி ஒன்பதாகியும் அக் குழந்தை வரவில்லை. ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டே யிருந்தான். டாக்டர் வருவதற்குள் மருந்து வாங்கியாக வேண்டுமே!......... ஒரு கால் அவன் மோசக்காரன் என்று தெரிந்து விட்டிருக்குமா?...... இராது. உலக மறியாத கபடமற்ற பெண்கள்!......அவன்மீது சிறிதும் சந்தேகப்பட மாட்டார்கள்....



அறையில் நிழல் படிந்தது. திரும்பினான். கமலி வாசற் படியில் நின்றிருந்தாள். அவனது இருதயம் பட படத்தது. அன்றுதான் அவன் முகத்தை நன்றாகப் பார்த்தான். தங்கையைப் போலவே அழகான குழந்தை முகம். அவள் ஒரு பத்து ரூபாய் நோட்டை நீட்டினாள்.

"இதையும் அதே விலாஸத்திற்குத் தயவு செய்து அனுப்பி விடுகிறீர்களா?..."

'அதே விலாஸத்திற்குத் தான் இதுவும் போகப் போகிறது' என்று கனைத்தது அவனுடைய உள்ளுணர்வு.

அருணாசலம் அதைப் பெற்றுக் கொண்டே "பாவம், நீ ஏன் வீணாகச் சிரமப்பட்டுக் கொண்டு வர வேண்டும்? ரஜனியிடம் கொடுத்தனுப்பியிருக்கலாமே" என்றான்.

"ரஜனியைப் 'போடி' என்றேன். அவளுக்கு வெட்கமாயிருக்கிறதாம்; அதனால் நானே வந்தேன்."

அருணாசலம் சிரித்தான். "இந்த ஆறு வயது ரஜனிக்கா?...... என்னிடமா வெட்கம்......"

அவள் நாணித் தலை குனிந்த வண்ணம் 'நான் வருகிறேன்!' என்று கூறிவிட்டு அங்கிருந்து சென்று விட்டாள்.

'எத்தனை வெகுளியான பெண்!...... இவளைப் போய் ஏமாற்றுகிறாயே, எத்தனை அயோக்கியன் நீ!' என்று குத்திக் காட்டியது அவனது அந்தராத்மா! ஆனால் சந்தர்ப்பம் எப்படி இருக்கிறது? மனிதனுக்குச் சுயநலமல்லவா பிரதானம்?

சிறிது நேரத்தில் கமலியின் பத்து ரூபாயும் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டது!

மேலும் ஐந்தாறு தினங்கள் விரைந்தோடின. கமலியின்

புண்ணியத்தில் சரஸ்வதிக்கு உடம்பு குணமடைந்து விட்டது. காய்ச்சல் இறங்கி முகத்தில் நல்ல தெளிவு கண்டு விட்டது. அவள் ஆபத்தின் எல்லையை இப்போது தாண்டி விட்டாள். எமனை ஏமாற்றி விட்டாள்!

⁂

அன்று முதல் தேதி. அருணாசலம் சம்பளம் வாங்கி விட்டான். சனிக்கிழமையாகையால் ஆபீஸ் அரை நாள் தான். மாலை நாலு மணிக்கே வீடு திரும்பி விட்டான். அவன் மனத்தில் தெம்பில்லை. சமதிக்காக அனுப்ப வேண்டிய பணம் இருபத்தைந்து ரூபாயையும் சேர்த்து மொத்தக் கடன் நூற்று முப்பத்தாறு ரூபாய் எட்டணா. வாங்கிய சம்பளம் கடனுக்கே போதாது. அவன் சிந்தனையில் ஆழ்ந்திருந்தான்.

தூரத்தில் கபாலீச்வரர் ஆலயத்தில் ஏதோ திருவிழா. அதிர் வெடிச் சத்தம் வான முகட்டில் எதிரொலித்துக் கொண்டிருந்தது. கோயில் வரை போய்விட்டு வந்தாலாவது மன நிம்மதி ஏற்படும் என்று நினைத்தான்.

அதே சமயத்தில் வாசற்புறம் 'தபால்' என்ற குரல் கேட்டது.

பாபு ஓடிப் போய் தபால்காரன் கையிலிருந்து தபாலைப் பிடுங்கிக் கொண்டு வந்து அருணாசலத்திடம் கொடுத்தான். அவன் உறையைக் கிழித்துக் கடிதத்தைப் பிரித்தான். வெகு நீளமான கடிதம். யாரோ பெண் மணியின் கையெழுத்தைப்போலிருந்தது.

"என் கண்ணே சமதி,......"

அவன் திடுக்கிட்டான். கிழித்துக்கீழே எறிந்த உறையை எடுத்துப் பார்த்தான். "ஸ்ரீ அருணாசலம் மேற்பார்த்துச் சமதிக்குக் கொடுப்பது" என்று எழுதப் பட்டிருந்தது.

பிறருடைய கடிதத்தைப் படிப்பது இழிவான செயல்தான். ஆனால் 'அருணாசலம் மேல்பார்த்து' என்று விலாசமிட்டிருக்கிறதல்லவா? என்ற அசட்டுச் சமாதானத்துடன் கடிதத்தின் வரிகளில் கண்ணைச் செலுத்தினான்.

"என் கண்ணே சமதி, உன் கடிதம் கிடைத்தது. மாமியார் வீட்டில் நீ படும் கஷ்டங்களையறிய என் மனம் வெதும்புகிறது. நீ விரும்பியபடி இக் கடிதத்தை உன் எதிர் வீட்டு விலாஸத்துக்கே எழுதியிருக்கிறேன். அப்பாவின் உடம்பு கவலைக்கிடமாக இருக்கிறது. இரவு பகல் வாய் ஓயாத இருமல்; ஜுரம் நிற்கவே இல்லை.

"இந்தக் கிராமத்தில் நமக்கு உதவி செய்யக் கூடியவர்களே இல்லை. உன் கல்யாணத்தின் போதே ராமய்யாப் பிள்ளை நமது நிலத்தைத் தனக்கு விற்று விடும்படி அப்பாவைத் தொந்தரவு செய்து கொண்டே யிருந்தார். அப்பா இஷ்டப்படாமல் கோனூருக்கு அடமானமாக வைத்தார். இப்போது ராமய்யாப் பிள்ளையின் தூண்டுதலால் கோனூர் கடனுக்கும் வட்டிக்குமாகச் சேர்த்து நாலாயிர ரூபாய்க்குக் கோர்ட்டில் தாவா செய்திருக்கிறார். அடுத்த வாரம் 'கேஸ்' என்று 'சம்மன்' வேறு வந்திருக்கிறது.

கையில் செல்லாக் காசுமில்லை. வறுமையும் பிணியும் சேர்ந்து உன் அப்பாவின் உடம்பை உருக்கிவிட்டன. அதோடு இந்த வழக்குத் தொல்லையும் சேர்ந்து கொண்டது. அவரது நிலைமையைப் பார்க்கும் போது என் மனத்தில் ஏதேதோ கலவரங்கள் உண்டாகின்றன. விவரிக்க முடியாத பயம் என்னை அரித்துக் கொண்டே யிருக்கிறது.

"கொட்டும் மழையில் மூன்று மைல் ஓடிப் போய்ப் பக்கத்து ஊர் டாக்டரை அழைத்து வந்தேன். நாலைந்து நாட்களாக மருந்து கொடுத்தும் துளிக் கூடக் குணமில்லை. இன்ஜெக்ஷன் ஊசி போட வேண்டுமென்கிறார் டாக்டர். அதற்கு மருந்து விலை கொடுத்து வாங்க வேண்டுமே சமதி, நான் என்ன செய்வேன்?

"போன கடிதத்திலேயே நீ யாரிடமோ கடன் வாங்கிப் பதினைந்து ரூபாய் மணியார்டர் அனுப்பி யிருப்பதாக எழுதியிருந்தாய். கடிதம்தான் வந்தது: மணியார்டர் வரவில்லை. கிராமாந்தர மாயிற்றே, அதனால் வீண் தாமதமாகிறதோ என்னவோ? தினந்தோறும் ஆறு மைல் நடந்து தபாலாபீஸுக்கும் போய் அலைந்து விட்டு வருவதுதான் மிச்சம்.

"நேற்று உன்னிடமிருந்து வந்த கடிதத்தில், ரஜனியின் காதுக் குண்டலத்தை அடகு வைத்து மேலும் பத்து ரூபாய் அனுப்பி யிருப்பதாக எழுதியிருந்தாய். இரண்டு மணியார்டர்களில் ஒன்று வந்தால் அப்பாவுக்கு மருந்தாவது வாங்கியிருக்கலாம்.

மாமா போகிறார்!



"ஏண்டா குழந்தைகளா! நான் போகிறபோதெல்லாம் நீங்கள் சிரிக்கிறீர்கள்?"
"அது ஒன்றுமில்லை, மாமா! நாங்கள் சிரிக்கிறபோதெல்லாம் நீங்கள் போகிறீர்கள், அவ்வளவுதான்!"

"இந்தக் கடிதத்தைத் தபாலாபீஸிலிருந்து எழுதுகிறேன். இன்றும் மணியார்டர் இல்லை என்று சொல்லி விட்டார்கள். இன்று அவரது நிலைமை மிகவும் மோசம். காலையிலிருந்தே 'சமதி! ரஜனி!' என்று உங்கள் பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். இந்தக் கடிதம் கண்டதும் ரஜனியை அழைத்துக் கொண்டு நீ உடனே புறப்பட்டு வா. தந்தி யடிக்கக்கூட கையில் காசில்லை."

ஏழை அம்மா"

அருணாசலத்தின் கண்களில் நீர் படர்ந்தது. அவன் அழுது விட்டான்.

சட்டையை மாட்டிக் கொண்டு பைத்தியம் பிடித்தவன் போல் தபாலாபீஸை நோக்கி ஓடினான். தான் செய்த தவறுக்குப் பிராயச் சித்தமாக மேலும் இருபத்தைந்து ரூபாயைக் கூட்டி ஐம்பது ரூபாயாகச் சமதியின் தாயார் பெயருக்குத் தந்தி மணியார்டராக அனுப்பி வைத்தான். அவன் மனத்தில் சிறிது சாந்தி பிறந்தது.

வீட்டையடைந்ததும் "மாமா, எங்க அக்கா பெயருக்கு ஏதாவது கடிதம் வந்ததா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் ரஜனி.

இது அவனுக்கு மற்றொரு பிரச்னை.

அக் குழந்தையைத் தன் அறைக்கு அழைத்துச் சென்றான். அவளை உற்றுக் கவனித்தான். குண்டலங்கள் அழகாக அசைந்தாடிக் கொண்டிருந்த காதுகள் மூளியாக இருந்தன. ரஜனி வெட்கத்துடன் 'சட்'டென்று காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

அவளது கண்கள் கலங்கின. திக்கித் திணறிக் கொண்டே "எங்க அப்பாவுக்கு உடம்பு சரியில்லை, மாமா... மருந்துச் செலவுக்காக......"

"உன் அக்காவும் நீயும் அப்பாவைப் பார்க்கப் போகவில்லையா?"

"போக வேண்டுமென்று ஆசைதான். கையில் பணமில்லையே?"

அருணாசலம் தன்னிடம் மீதியிருந்த பணத்திலிருந்து பதினைந்து ரூபாயை எடுத்து அவள் கையில் திணித்தான்.

"இந்தா குழந்தை, இதை உன் அக்காவிடம் கொடு. அப்பாவுக்கு உடம்பு ரொம்ப அதிகமாக இருக்கலாம். அதனால்தான் அம்மாவால் கடிதம் எழுத முடியவில்லை என்று நினைக்கிறேன். இரண்டு பேரும் இரவு வண்டிக்கே புறப்பட்டுப் போங்கள். ஏழு மணிக்கு வண்டி. இன்னும் இரண்டு மணி நேரம்தான் இருக்கிறது" என்று கூறினான்.

ரஜனி பரபரப்புடன் வீட்டை நோக்கி ஓடினாள். தன் கடமையைச் செய்து விட்ட உணர்ச்சியுடன் கோயிலுக்குப் புறப்பட்டான் அருணாசலம்.


அம்பிகையின் சன்னிதியில் பக்தர்களின் திருக்கூட்டம் குழுமியிருந்தது. அம்மனுக்கு விசேஷ அலங்காரம் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது. முதல் வரிசையில் பக்திப் பரவசத்துடன் அருணாசலம் நின்றிருந்தான்.

"தேவி! சபலத்தினால் நான் பெரும் அபராதம் செய்து விட்டேன்! என்னை க்ஷமித்து விடு. இனி என் வாழ்நாளில் ஒருபோதும் இத்தகைய இழிவான தவறைச் செய்ய மாட்டேன். அந்த ஏழைக் குழந்தைகளின் தந்தையைக் காப்பாற்று."

பூஜா கால மணி 'டாண் டாண்' என்று ஒலித்தது. ஆலயத்தை விட்டு வெகு தூரம் வரும் வரையில் கூட அந்த மணியோசை "மன்னித்தேன்! மன்னித்தேன்!" என்று அவன் காதுகளில் ஒலித்துக் கொண்டேயிருந்தது.

எதிரே ரஜனியும் சமதியும் இன்னும் யாருடனோ ரயிலடிக்கு வெகு வேகமாகச் சென்று கொண்டிருந்ததை அவன் கவனிக்கவில்லை.


நெருங்காதே, அபாயம்!



முதல் எலி:—ஜாக்கிரதை! அவனிடம் போகாதே! ஆபத்து நேரும்!
இரண்டாம் எலி:—ஏன்? என்ன ஆபத்து நேரும்?
முதல் எலி:—நேற்றைய தினம் அவன் ஒரு வீட்டில் இரண்டு கட்டுப் பட்டாசைத் தின்றுவிட்டான்!


இதோ பாருங்கள்...
FLIT
ESSO
KILLS
FLIES, ROACHES, MOTHS, MOSQUITOES, BEDBUGS, ANTS, AND MANY OTHER HOUSEHOLD INSECTS
புதிய சிவப்பு,
வெள்ளை
உ நீல நிற
டின்னில்
புதிய சீர்திருத்தம் கூடிய
ப்ளிட்
சக்திவாய்ந்த 6 கீடநாசினிகள் சேர்ந்தது
ப்ளிட்
அதிக பூச்சிகளைக் கொல்லுகிறது-அதற்குச் செலவழிக்கும் காசு வீண்போகிறதில்லை
ஸ்டாண்டர்ட் வாக்குவம் ஆயில் கம்பெனி

நாலு பேர் நம்மை மதிக்க வேண்டும்



துருதுரு வென்றிருக்கும் மாணவர்கள் வேண்டுவது 'ஸ்பீட்'தான்; மின்னலின் வேகம். இந்தக் காலத்து மாணவர்களுக்குப் பாடங்களைத் தவிர நண்பர்களைப் பார்த்து அளவளாவவும் பற்பல களியாட்டங்களில் கலந்து கொள்ளவும், இன்னும் இதர அலுவல்களுக்கும் எத்தனை அவகாசம் வேண்டியிருக்கு! அதனால்தான் மாணவர்கள் 'ஸ்பீட்', 'ஸ்பீட்' எனத் துள்ளுகிறார்கள். அதாவது அவர்களுக்கு வேண்டியதெல்லாம் ராயல் என்பீல்டு மோட்டார் சைகிள். ஒரு கிளப்போ, விளையாட்டோ அல்லது காலேஜோ எதற்கானாலும் சரி, வேகத்திற்குப் பேர்போன வாகனத்தில் போனால்தானே நாலு பேர் கண்ணில் நாம் படலாம். அவர்களும் நம்மைப் பார்த்து மதிப்பார்கள்.

- ★ தவணைகளில் பணம் கட்டலாம்
- ★ ஸ்பேர்கள் எப்போதும் கிடைக்கும்
- ★ விற்பனைக்குப் பிறகு சர்வீஸ் உண்டு
- ★ வாங்கினபின் எக்சேஞ்சும் சாத்தியம்


Royal Enfield

தி மதராஸ் மோட்டார்ஸ் லிமிடெட்

மோட்டார் சைக்கிள் ஸ்பெஷலிஸ்டுகள்

36-C, மவுண்ட் ரோடு :: மதராஸ்-2

கவர்ச்சிதரும்



விஞர்களிடையே காணும் காந்த சக்தியைப் பற்றி எல்லோரும் பொதுவாகப் பேசுகிறார்கள். இப்படி ஒரு சக்தி நிச்சயமாய் இருக்கிறது என்பதற்கு வாழ்க்கையில் ருசுக்கள் நிரம்ப இருக்கின்றன. உதாரணமாக ஒரு மனிதனைப் பார்த்தவுடன் 'அதோ அவரை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது' என்று சொல்லுகிறோம். ஏன் இப்படிச் சொல்லுகிறோம் என்றால் நமது மனத்தை இழுக்கக் கூடிய வசீகர சக்தி ஒன்று அந்த மனிதனிடம் இருக்கிறது. இந்த வசீகர சக்தி மனித தேகத்திலுள்ள ஒரு காந்த சக்தியால் ஏற்படுகிறது என்பது தத்துவ சாஸ்திரிகளின் முடிவு.

ஒவ்வொரு மனிதனும் விசையுள்ள ஒரு காந்தம்; நரம்பு ஓட்டத்தில் இந்த சக்தி ஊடுருவிச் செல்லுகிறது என்று அறிஞர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். இதைச் சாதாரணமாகப் பிராணிகளுக்குள்ள காந்த சக்தி எனக் கூறலாம். மற்ற வகை காந்த சக்திகள் போல் மனிதனது காந்த சக்தியும் தேகத்துக்குப் புறம்பாகவும் பரவி ஆகர்ஷிக்கும் தன்மை வாய்ந்தது. இப்படிப் புறம்பாகப் பாயும் காந்த சக்தியைத்தான் 'தேஜஸ்' என்று சொல்கிறார்கள். இந்த தேஜஸ் ஒரு பிரபையைப் போல் மனிதனைச் சுற்றி ஓடுகிறது என்பது நமது முன்னோர்களின் அபிப்பிராயம்.

இப்போது விஞ்ஞானம் வளர்ச்சியுற்றிருப்பதால் இத் துறையிலும் விஞ்ஞான ரீதியாக ஆராய்ச்சி செய்யப் பட்டுள்ளது. மனிதனுக்கு ஏற்படும் பிரபையை அளவிட்டுக் கண் கூடாகப் பார்க்க விஞ்ஞானம் உதவி யிருக்கிறது.

இதற்கு வேண்டிய கருவிகளெல்லாம் இவ்வளவுதான். தெளிவான இரண்டு கண்ணாடித் துண்டுகள். ஓரளவு சாராயம். அதில் இரண்டே சத விகித முள்ள டைஸியானின் சாயத் திராவகம். அந்த சாயத் திராவகத்தில் சில சொட்டுக்களை ஒரு கண்ணாடியில் தெளிக்க வேண்டியது. மற்றொரு கண்ணாடித் துண்டை அதோடு சேர்த்தாற்போல் இணைக்க வேண்டும். ஒரு இருட்டறை அல்லது இரவு வேளையில் இந்தக் கண்ணாடிகளைக் கண்ணுக்கு நேராகப் பிடியுங்கள். இருட்டில் நிற்கும் ஒரு மனிதனை இந்தக் கண்ணாடி மூலம் பாருங்கள். சிறிது சூக்ஷ்ம திருஷ்டியைப் பயன்படுத்திப்பார்த்தால் மனிதனுக்குள்ள இந்த பிரபையைப் பார்க்கலாம். தீபத்தின் ஜுவாலைபோல் சலனத்துடன் தேகத்தைச் சுற்றிலும் ஒளி மிகுந்த ஒரு பிரகாசத்தைப் பார்க்கலாம் என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இந்தப் பிரகாசம் சில அங்குலப் பிரமாணத்திலிருந்து சில அடிகள் வரையில் பரவி நிற்குமெனத் தெரிகிறது.

ஒவ்வொரு மனிதனிடத்திலும் ஒவ்வொரு அளவு இந்தப் பிரபை காணப்படுகிறது. இதன் அளவும் சலனமும் அந்தந்த நபருக்குத் தக்கபடி மாறுபடுகிறது. ஒரே நபர் விஷயத்தில் கூட அவரது தேக நிலை மனநிலை ஆகியவற்றிற்குத் தக்கபடி மாறுபடுகிறது. பலஹீனமான தேகம், பலஹீனமான மனம் என்றால் இந்தப் பிரபையும் மிக எளியதாகிப் பிரகாசமும் கம்மிப்பட்டிருக்கும். நல்ல பலவானாகவும் திடமான மனமும் உள்ளவனுடைய பிரபையும் அதற்கேற்ப வலிவுற்றிருக்கிறது. பரவலாகவும் காணப்படுகிறது. டைஸியானின் மூலம் பார்க்கும் பொழுது இந்தப் பிரபையில் பல வர்ணங்கள் உண்டு என்பதும், அந்த வர்ணங்களே தேகத்தின் ஒவ்வொரு உறுப்புக்கும் ஒவ்வொரு விதமாக இருக்கிறதென்பதும் தெரிய வருகிறது.

நரம்புகளின் சக்தி என்று டாக்டர்கள் கூறுகிறார்கள். இந்த நரம்புகளின் சக்தி மூலமே மூளை தேகத்தில் பல் வேறு சதைகளுக்கும் உறுப்புகளுக்கும் தனது செய்தியை அனுப்புகிறது. ஒரு நரம்பு மூலம் இந்த சக்தி பாயும் பொழுது அதனுள்ளேயும் அதைச் சுற்றிலும் அது வியாபித்திருக்கிறது. மனிதனது தேகத்தில் உள்ள இந்தப் பல சிறு சக்திகள் எல்லாம் ஒன்று திரண்டுதான் பிரபை எனக் கூறப் படும் சக்தியை உண்டு பண்ணுகிறது.

இரு ஆண்களுக்குள் தென்படும் பிரபை ஒரே மாதிரியானதாக இருக்கும் பக்ஷத்தில் அவர்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களாவார்கள். ஆண் பெண்ணுக் கிடையே ஒரே விதமான பிரபை தோன்றுங்கால் அவர்களுக்குள் காதல் ஏற்படுகிறது. அவ்விதமின்றி இரு ஆண்களுக்குள் தோன்றும் பிரபை வேறு பட்டதாயிருப்பின் அவர்கள் நண்பர்களாக மாட்டார்கள். இவர்கள் நெருங்கிப் பழக நேரிட்டாலும் முரண்பாடு உண்டாகும். ஒரு ஆணும் பெண்ணும் வெவ்வேறு பிரபையுள்ளவர்களாய் ஏற்படும் பக்ஷத்தில் இவர்களுக்குள் பரஸ்பரம் காதல் இருக்காது. இவர்கள் சமூக அந்தஸ்து, பணம் அல்லது வேறு காரணங்களைக் கொண்டு விவாகம் செய்து கொண்டாலும் இவர்களுக்குள் பரஸ்பரம் காதல் தோன்றாது. எலியும் பூனையும் போல் உறவாடுவார்கள்.

மனிதனுடைய வசீகரிக்கும் தன்மை அவனது அழகு, சாதுர்யம் அல்லது ஒழுக்கத்தைப் பற்றியதல்ல. தொடர்புண்டு; ஆனால் தனித்தது. ஒவ்வொரு உடலிலும் அது தனித்துக் குடிகொண்டிருக்கிறது.

இந்தப் பிரபை என்பது என்ன? இதை நாம் வளர்த்து வழிப்படுத்த முடியுமா? முடியும். மனிதனுடைய சங்கல்ப பலம் தான் இந்தக் காந்த சக்தியை அடக்கி ஆளவோ பிரகாசிக்கச் செய்யவோ முடியும். மனிதனுடைய உறுதி என்பது அதிசயிக்கத்தக்க ஒரு சக்தி. மனிதனை இயக்குவதும், எதையும் முடிவு செய்வதும் இந்த உறுதிதான். மனசு அல்லது புத்தியைக் கொண்டுதான் காந்த சக்தி உருப்பெறுகிறது. மனிதனுடைய தேக வலிமை அல்லது கிரியா சக்தி இதை ஓரளவு நிர்ணயிக்கிறது. ஏனெனில் மனிதனுடைய கிரியா சக்திக்கு ஏற்பப் பிரபையின் விலாசமும் பெருகிறது. தேக வலிமையைக் கொண்டு மனோவலிமையையும் சாதாரணமாக உருப் பெறுவதுண்டு. சுருக்கமாகக் கூறுமிடத்து மனோ வலிமையைக் கொண்டுதான் இந்தப் பிரபையைப் பிரகாசிக்கச் செய்யலாம். உண்மையில் ஆத்மாவின் வெளித் தோற்றமே இந்தப் பிரபை எனக் கருதவேண்டும்.

சில குழந்தைகள் பார்க்கும் பொழுதே பலரது மனதைக் கவருகின்றன. இந்தக் கவர்ச்சி எப்படி ஏற்படுகிறது? (1) கபடமற்ற தோற்றம் (2) களங்கமற்ற தன்மை (3) மாசற்ற மனம் (4) உண்மையுடன் நடத்தல் (5) உற்சாகம் (6) நம்பிக்கை (7) எல்லா விஷயங்களிலும் ஒரு அன்பு. சாதாரணமாக ஐந்து வயதுக் குட்பட்ட குழந்தைகள் எல்லாவற்றிலுமே இக்குணங்களைக் காணலாம். மனசுதானே மனிதனது பிரபையை நிர்ணயிக்கிறது என்பது ஏற்கெனவே கூறப்பட்டது. குழந்தைகள் விஷயத்தைச் சற்று ஊன்றிப் பார்ப்போம். மனிதனது தன்மைக்கு ஏற்ப இக் குழந்தைகளில் பல மாறுபாடுகள் காணப்படுகின்றன. அதுவே முடிவில் இந்தப் பிரபையைத் தோற்றுவிக்கிறது. களங்கமற்ற தன்மையினால் உலகில் தோன்றும் ஆசாபாசங்கள் குழந்தையை அதிகம் கெடுக்கவில்லை.

காந்தசக்தி

நல்ல வலுவுள்ளவனையும் பலஹீனனையும் எடுத்துக் கொள்வோம். வலுவுள்ளவனிடம் ஆரோக்கியம் இருக்கிறது. அதிகாரம், உற்சாகம், துடிகை வாழ்க்கையில் ஒரு ஆர்வம். இதெல்லாம் இருக்கின்றன. வாழ்க்கையில் இன்பத்தையே அவன் வேண்டுகிறான். உயர்ந்த அனுபவங்களைப் பெறத் தன் சக்திகளை அதற்காகப் பயன்படுத்துகிறான். இதில் உந்தப்படும் அவன் உயர் எண்ணங்கள் அவனது காந்த சக்தியை அதிகரிக்கச் செய்கின்றன. பிறரை வசீகரிக்கும் பிரபை அவனிடமிருந்து அதிகமாகப் பிரதிபலிக்கிறது. அவன் பத்தடி தூரத்தில் இருந்தாலும் அவனைப் பார்க்கப் பலர் பிரியப்படுகின்றனர். தன்னையறியாமலே பிறர் அவன் பக்கம் திரும்பி அவனைப் பார்க்கவேண்டுமென நினைக்கின்றனர். அவனது பிரபை அப்படி ஒவ்வொருவரையும் வசீகரிக்கிறது.

தேக வலிவும் மனவலிவும் குன்றிய ஒருவனை எடுத்துக் கொள்வோம். அவனுக்கு அவாவென்பது இருப்பதில்லை. உற்சாகமிராது. பரபரப்பான நடமாட்டமோ, ஆரோக்கியமோ இராது. வாழ்க்கையில் சிறந்த பயனை அடைய வேண்டுமென்ற விருப்பம் எங்கிருந்து இவனுக்கு வரப்போகிறது? யாரும் இவனைக் கவனிக்கவும் போவதில்லை. பிறர் விஷயத்தில் இவன் பிரபையைச் செலுத்தும் சக்தியும் அற்றவனாகிறான். அப்படிப் பிரபை யிருந்தாலும் அது மெலிவுற்றிருக்கும். அதிகமான அளவு அதன் வேகம் இருக்கப் போவதில்லை. அவனது சிந்தனை சக்தி அடங்கி விடும். விசை வீச்சம் வற்றி விடும். தம் வாழ்க்கையை மேம்படுத்தவோ பிறரை வசப்படுத்தவோ அவனால் யாதும் ஆகப் போவதில்லை.

ஆகவே, மனதின் பண்பாடுதான் இந்தக் காந்த சக்திக்கு ஆதாரமாக இருக்கிறது. அதற்கு ஆத்மா, மனம், அந்தக்கரணம் சுத்தமாக இருக்க வேண்டும். ஆனால் ஏன் எல்லா மனிதனும் அவ்விதம் இருப்பதில்லை? மனிதன் இருக்க வேண்டிய உயர்நிலையை அடைய எல்லோரும் மூலாதாரந்தான்.

வாழ்க்கையைப் பற்றி, பொதுவாக எவ்விஷயத்திலுமே, பாதிக்கப்படாத நிலை. வயது ஆக ஆகத்தான் உலகின் ஆசாபாசங்கள் அதைப் பற்றுகின்றன. பிறகு உலக சங்கேதங்கள், அபிப்பிராயங்கள் அதைப் பாதிக்கின்றன. பிறகு எதைப் பற்றியும் சந்தேகம் ஏற்படுகிறது. மனதில் கவலை புகுகிறது. பின்னர் பிறரைப் பார்த்தால் பயம். சில விஷயங்களைக் கேட்டால் பயம். முடிவில் அந்தப் பழைய குழந்தைத் தன்மை போய் விடுகிறது. நிலையைக் கொண்டு பல மாறுபாடுகள் தோன்றுகின்றன.

குழந்தைப் பருவ முதலே சிந்தை விழுல், சொல்லாலும், செய்கையால் இயற்கையாகத் தோன்றிய நற்குணங்களைப் பேணி வந்தால் நம்மில் ஒவ்வொருவரும் பிரகாசமான காந்த சக்தியை வெளிப்படுத்திக் கொண்டிருப்போம். மனிதன் சூரியனைப் போல உத்தம வாழ்க்கையை ஏற்றால் அவன் சூரியனைப் போல் பிரகாசிக்கிறான். பிறகு அன்புக்கு உறைவிடமாகிறான். அன்பில்லையாயின் வாழ்க்கைக்கு இன்றியமையாதது எதுவுமே கைகூடாது. அப்போது ஆத்மாவை நேசிப்பவன் தான் அதன் அழகை, சிறப்பை, மேன்மையை, புகழை வெளிப்படுத்துகிறான். மனிதன் கடவுளின் உருவமாக விளங்க வேண்டுமென்ற இச்சித்தாலும் அந்நிலையில் தான் சபேதும்.





ஸி. எஸ். நரஸிம்மன்

நாடகக்காரி



முதல் அத்தியாயம்

சென்ற ஆண்டில் சோழ நாட்டில் கோரம் புயலுடன் சேர்ந்துவந்த பெருமழையைப்பற்றி நேயர்களுக்கு நினைவிருக்கலாம். சிலர் அதைக் "கடவுளின் கருணை மழை" என்றார்கள். வேறு சிலர், "கடவுளின் கருணை மழை இப்படிப் பயங்கரமான புயலில் ஏறிக்கொண்டுதானா வரவேண்டும்? இனிய சேந்தமிழைப் போன்ற மெல்லிய தென்றல் காற்றிலே மிதந்து வரக் கூடாதா?" என்றார்கள். அவரவர்களுக்கு நேர்ந்த சௌகரிய- அசௌகரியங்களைப் பொறுத்து எதையும் முடிவு செய்வது தான் மானிட இயற்கை. எனக்கு அச்சமயம் கடவுளின் கருணையின் பேரில் வந்த கோபம் இவ்வளவு அவ்வளவு என்று சொல்ல முடியாது. ஏனெனில், அக்கருணையின் காரணமாக நான் நள்ளிரவில் மாயவரத்துக்கும் சீகாழிக்கும் நடுவில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடும்படி நேர்ந்தது.

கதையோ, கட்டுரையோ, விறுவிறுப்பாக ஓட வேண்டும் என்றால் அதை ரயிலிலே ஆரம்பிக்க வேண்டும் என்று சொல்லுவதுண்டு. இந்தக் கதை என்னமோ ரயிலிலேதான் ஆரம்பமாகிறது. அதிலும் சிலோன் போட் மெயிலில் ஆரம்ப மாகிறது. ஆனாலும் என்ன பயன்? அதி விரைவாகச் செல்ல வேண்டிய அந்த ரயில் சீகாழிக்கும் வைத்தீசுவரன் கோயிலுக்கும் நடுவில் சுமார் மூன்று மணி நேரம் ஸ்தம்பித்து நின்று விட்டது.

'ஸ்தம்பித்து நின்றது' என்று சொன்னேன்? அர்த்தமில்லாத வழக்கச் சொற்கள் அப்படியாக நம்மை அடிமைப் படுத்தி விடுகின்றன. நான் ஏறியிருந்த போட் மெயில் முன்னாலும் போகாமல் பின்னாலும் போகாமல் நின்றதே தவிர, ஸ்தம்பித்து நிற்கவில்லை. மணிக்கு எண்பது மைல் வேகத்தில் அடித்த புயற் காற்று அதைத் தாக்கிக் கொண்டிருக்கும்போது ரயில் எப்படி ஸ்தம்பித்து நிற்க முடியும்? பூமிக்குள்ளே நெடுந்தூரம் வேர் விட்டு நிலை பெற்றிருந்த பெரிய பெரிய மரங்கள் எல்லாம் தடால் தடால் என்று கீழே விழுந்து கொண்டிருந்தபோது ரயில் மட்டும் எப்படி அசையாமல் இருக்க முடியும்? ரயில் இப்படியும் அப்படியும் ஆடிக் கொண்டு தான் இருந்தது. ரயிலுக்குள் இருந்தவர்களின் உயிர்களும் ஊசலாடிக் கொண்டிருந்தன.

இப்படி மூன்று யுகம் போலக் கழிந்த மூன்று மணி நேரத்துக்குப் பிறகு ரயில் பின்னோக்கிச் செல்லத் தொடங்கியது. மிகமிக மெதுவாக ஊர்ந்து சென்று காலை ஐந்து மணிக்கு மாயவரம் ரயில் நிலையத்தை அடைந்தது.

சீகாழிக்கும் கொள்ளிடத்துக்கும் நடுவில் ரயில் பாதை மிகவும் சேதமாகிவிட்டபடியால், இனி மூன்றுநாள் அந்தப் பக்கம் ரயில் போவதற்கில்லை யென்றும், சென்னைக்குப் போகிறவர்கள் திருச்சிக்குத் திரும்பிப் போய் அங்கிருந்து விருத்தாசலம் வழியாகப் போகவேண்டும் என்றும் மாயவரத்தில் சொன்னார்கள். இதனால் எனக்கு ஏற்பட்ட மனச் சோர்வுக்கு அளவில்லை. ஆண்டவன் கருணை இப்படியா நம்மைச் சோதிக்க வேண்டும் என்று கிலேசப்பட்டுக் கொண்டு திருச்சிக்குத் திரும்பிப்போன முதல் ரயிலில் ஏறினேன்.

அற்ப அறிவு படைத்தவர்களாகிய மானிடர்கள் நன்மை என்று குதூகலிக்கிற காரியங்கள் பெருந் தீமையாக முடிகின்றன. அவர்கள் தீமை என்று நினைத்து வருந்தும் காரியங்களிலிருந்து எதிர்பாராத நன்மைகள் விளைகின்றன. எத்தனையோ பலமுறை இந்த உண்மையை வாழ்க்கை அநுபவத்தில் கண்டிருந்தும் அச்சமயத்தில் மறந்து போனேன். ஐயம்பேட்டை ரயில் நிலையத்தை அடைந்தபோதுதான் இருள் நீங்கி ஒளி உண்டாயிற்று. ஐயம்பேட்டை கந்தப்பப்பிள்ளையும் அவருடைய தவுல் வாத்தியமும் என் வண்டியில் ஏறி அமர்ந்ததும், அவருடைய தவுல் வாத்தியத்தின் இடிமுழக்க நாதத்தைப் போலவே, இறைவன் கருணையின் உண்மை இயல்பு என் உள்ளத்தில் வெடித்துக் கொண்டு உதயமாயிற்று.

"வருக! வருக! அகில பூமண்டல தவுல் வாத்திய ஏக சக்ராதிபதியே! வருக!" என்று முகமன் கூறிக் கந்தப்பப் பிள்ளையை வரவேற்றேன்.

'திருவழுந்தூர் வெங்கோழுந்து', 'விளையாளி' போன்ற அருமையான கதைகளைச் சொன்னவரை இம்மாதிரிச் சந்தர்ப்பத்தில் பார்த்தால், உற்சாகம் பிறக்கொண்டு கிளம்புவதற்கு கேட்பானேன்!—ரயிலும் உற்சாகமாக ஊதிக்கொண்டு கிளம்பியது.

கல்கி

ஐயம்பேட்டை கந்தப்பரும் சென்னைக்குத் தான் வருகிறார் என்று அறிந்ததும் என் மனச் சோர்வெல்லாம் பறந்து விட்டது. நான் சீகாழி வரையில் போய்த் திண்டாடி விட்டுத் திரும்பியதைப் பற்றிச் சொன்னேன். அவர் புயலினால் அந்தப் பக்கத்தில் விளைந்த சேதங்களைப் பற்றிச் சொன்னார். பிறகு,

"இன்னல் கூட்டி இன்பம் ஊட்டி
இந்திர ஜால வித்தை காட்டி"

என்று முனகும் குரலில் பாடி நிரவல் செய்யத் தொடங்கினார். நிரவலை நிறுத்தி, "ஆமாம்; ஆண்டவனுக்கு இதெல்லாம் இந்திர ஜால வித்தை; அநுபவிக்கிற நமக்கோ சொல்ல முடியாத அவஸ்தை!" என்று சொன்னார்.


ஏதோ ஒரு கதையை மனத்தில் வைத்துக் கொண்டுதான் அவர் இப்படிப் பேசுகிறார் என்று ஊகித்துக் கொண்டேன். (ஐயம்பேட்டை கந்தப்பன் தம் வாழ்க்கையில் கண்டு கேட்ட வரலாற்றைத்தான் சொல்லுவார். ஆனால் அந்த வரலாறு கதையைக் காட்டிலும் அதிசயமாக இருப்பது வழக்கம். அதனாலேயே கதை என்று குறிப்பிடுகிறேன்.)

அவருடைய மனதில் உள்ளதை எப்படி வெளியே கொண்டு வருவது என்று யோசித்தேன்.

"பிள்ளைவாள்! நீங்கள் முன்னொரு தடவை சொன்ன 'வீணை பவானி' கதையை ரேடியோவில் நாடகமாகப் போட்டார்களே, கேட்டீர்களா?" என்றேன்.

"உலக வாழ்க்கையே நாடகம். அதிலே சிலர் அரங்க மேடையில் ஏறி நாடகம் ஆடுகிறார்கள். அப்படி ஆடும் நாடகக்காரர்கள் — நாடகக்காரிகள் வாழ்க்கையிலும் எத்தனையோ நாடகங்கள்!" என்றார் கந்தப்பன்.

"எத்தனையோ நாடகக்காரர்கள் - நாடகக்காரிகளை உங்களுக்குத் தெரிந்திருக்கும்" என்றேன்.



"பாலாமணி என்ற பிரசித்தமான நாடகக்காரியைப் பற்றி ஐயா கேள்விப்பட்டிருக்குமே?" என்றார் கந்தப்பப் பிள்ளை.

"கேள்விப்பட்டிருக்கிறேன்; ஆனால் பார்த்ததில்லை."

"ஆனால் சின்ன பாலாமணி என்று கேள்விப்பட்டிருக்க மாட்டீர்கள்!"

"கேள்விப்பட்டதில்லை. அப்படி ஒரு நாடகக்காரி இருந்தாளா, என்ன?"

"ஆமாம்; இரண்டு வருஷம் மிகப் பிரசித்தியாக இருந்தாள். பிறகு, தெய்வத்துக்கே பொறுக்காமல் போய் விட்டது! ஆனால் தெய்வத்தைச் சொல்லி என்ன பயன்? மனிதர்களுடைய அறிவீனத்துக்குத் தெய்வம் என்ன செய்யும்?"

"மனிதர்களை ஏன் இவ்வளவு மூடர்களாகவும் துஷ்டர்களாகவும் கடவுள் படைக்கிறார் என்று அவர் பேரில் குற்றம் சொல்லலாம் அல்லவா?—அது போகட்டும். யாரோ ஒரு பாலாமணி என்றீர்களே? அது யார்? உங்களுக்குத் தெரியுமா?"

"ஏழு வயது முதல் எடுத்து வளர்த்தவன் ஆயிற்றே! எனக்குத் தெரியாமல் எப்படி இருக்கும்?" என்றார் கந்தப்பன்.

இன்னும் சில கேள்விகள் அவரைக் கேட்டுத் தூண்டிய பிறகு கந்தப்பன் கதையைக் கூறலானார்.

இரண்டாம் அத்தியாயம்

கும்பகோணத்தில் திருமருகல் நாதஸ்வரக்காரரின் கச்சேரிக்கு நான் தவுல் வாசித்துக் கொண்டிருந்தபோது முதன் முதலில் அந்தக் குழந்தையைப் பார்த்தேன். விஜயதசமித் திருநாள் அன்று ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி சூர சம்ஹாரத்துக்காக வீதி வலம் புறப்பட்டுப் போய்க் கொண்டிருந்தார். ஒவ்வொரு கோவிலிலிருந்தும் அன்றைக்குச் ஸ்வாமி புறப்பாடு நடப்பது வழக்கம். ஆனாலும் சின்னக்கடைத்தெரு வியாபாரிகள் அந்தக் கடைத் தெருவில் இருந்த சிறிய கோவிலில் நடத்தி வைத்த உற்சவம்தான் விசேஷ பிரமாதப்படும். நவராத்திரி ஒன்பது நாளும் உற்சவம் நடத்துவார்கள். ஒவ்வொரு தினமும் சங்கீதக் கச்சேரிகளும் நாதஸ்வரக் கச்சேரிகளும் நடைபெறும். விஜயதசமிக்கு ஒவ்வொரு வருஷமும் நமது தமிழ் நாட்டிலேயே மிகப் பிரசித்தி படைத்த நாதஸ்வர கோஷ்டியைப் பல மாதங்களுக்குமுன்பே ஏற்படுத்தி விடுவார்கள். சின்னக் கடைத்தெரு வியாபாரிகள் அழைத்து விட்டால், நாதஸ்வர வித்வான்களும் அதை ஒரு பெருமையாகக் கருதுவார்கள். வேறு யார் அதிகப் பணம் கொடுத்துக் கூப்பிட்டாலும் போக மாட்டார்கள். கடைத் தெரு முழுதும் அன்று அமோகமாக அலங்கரிக்கப்பட்டுக் காட்சி அளிக்கும். பல இடங்களில் பந்தல் போட்டிருப்பார்கள். ஒவ்வொரு பந்தலிலும் நாதஸ்வர கோஷ்டியார் நின்று வாசிக்க வேண்டும். அந்த நாளில் கும்பகோணத்தாரின் சங்கீத ரஸனைக்குஇணையே கிடையாது. போங்கள்! எவ்வளவோ அற்புதமாக முன்னலங்காரமும் பின்னலங்காரமும் செய்து முருகனை எழுந்தருளப் பண்ணுவார்கள். ஆனாலும், ஸ்வாமி தரிசனம் செய்யும் கூட்டத்தைக் காட்டிலும் நாதஸ்வர கோஷ்டியைச் சூழ்ந்து நிற்கும் ஜனக் கூட்டம்தான் அதிகமாயிருக்கும்.

அன்றைக்கு இவ்வாறு ஒவ்வொரு பந்தலிலும் நின்று நின்று நாதஸ்வரக் கச்சேரி நடந்து கொண்டிருந்தபோது, கச்சேரியைத் தொடர்ந்து வந்து கேட்டுக் கொண்டிருந்தவர்களில் ஒரு சிறிய பெண் குழந்தையைப் பார்த்தேன். அந்தச் சிறு குழந்தை கூட்டத்தில் எப்படியோ புகுந்து அடித்துக் கொண்டு வந்து எல்லாருக்கும்



முன்னால் வந்து நின்றது. இது என் கவனத்தைக் கவர்ந்தது. நாதஸ்வர இசையைக் கேட்டுக் கொண்டு, அந்தக் குழந்தை சில சமயம் பூரித்து மலர்ந்த முகத்துடனே காணப்படும். சில சமயம் தவில் வாத்தியத்தில் கவனம் செலுத்திக் கையினால் தாளம் போட்டுக் கொண்டிருக்கும். இன்னும் சில சமயம் மகுடி வாத்தியத்தைக் கேட்டுப் பாம்பு படம் எடுத்து ஆடுமே, அம்மாதிரி கண்களைப் பாதி மூடிக்கொண்டு, தலையை இலேசாக ஆட்டிக் கொண்டு நிற்கும். சில சமயங்களில் அதன் உடம்பு முழுதுமே ஆடும். தாமரைக் குளத்தில் இலேசாகக் காற்றடிக்கும் போது பாதி மலர்ந்தும் மலராமலும் இருக்கும் தாமரைப் புஷ்பம் அதன் நீண்டு உயர்ந்த தண்டுடன் ஆடுமே, அந்தக் காட்சி எனக்கு நினைவு வரும். திருமருகல் நாதஸ்வரக்காரர் அன்றைக்கு அபாரமாகத்தான் வாசித்துக் கொண்டிருந்தார். ஆனால் என்னுடைய நினைவு முழுதும் அந்தச் சிறு பெண் குழந்தையின் பேரிலேயே இருந்தது. ஒவ்வொரு பந்தலுக்கும் நாதஸ்வர கோஷ்டி வந்து நின்றவுடனே, நான் அந்தக் குழந்தை வந்து விட்டதா என்று பார்த்துக் கொண்டிருப்பேன். கூட்டத்தை விலக்கிக் கொண்டு, அந்தக் குழந்தை முன்னால் வந்து நின்ற பிறகு தான் எனக்கு என்னுடைய வாசிப்பில் கவனம் செல்லும். அப்போது அந்தப் பெண்ணின் பரவசமான முகத் தோற்றத்தைப் பார்த்துக் கொண்டுதான் வாசிப்பேன்.

ஊர்வலம் முடிந்து சுப்பிரமணிய ஸ்வாமி சூர சம்ஹாரம் செய்யும் இடத்துக்கு வந்து சேர்ந்துவிட்ட பிறகு, நான் என் தவில் வாத்தியத்தைச் சிஷ்யப் பிள்ளையிடம் எடுத்துக் கொடுத்து விட்டு, அந்தக் குழந்தையை அருகில் அழைத்து "உன் பெயர் என்ன, குழந்தை?" என்று விசாரித்தேன். "என் பெயர் நீலமணி" என்றது அந்தக் குழந்தை. "உன் அப்பா, அம்மா யார்?" என்று கேட்டேன். "அப்பா இல்லை அம்மா மட்டுந்தான் இருக்கிறாள். எங்கள் வீட்டுக்கு வருகிறீர்களா, மாமா! அழைத்துப் போகிறேன்! அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. நீங்கள் வந்து பார்த்தால் ரொம்ப சந்தோஷப்படுவாள்!" என்றது அந்தக் குழந்தை.

"ஆகட்டும், அம்மா, வருகிறேன்" என்று வாக்குக் கொடுத்து விட்டேன். அப்படிப்பட்ட சங்கீத ரஸனையுள்ள குழந்தையைப் பெற்ற தாயாரைப் பார்க்க எனக்கும் ஆவல் உண்டாகி இருந்தது.

என்னுடைய பதிலைக் கேட்டுவிட்டு அந்தக் குழந்தை குதூகலமாகக் குதித்துக்கொண்டு ஓடிப் போய் விட்டது.

பிறகு, பக்கத்திலிருந்தவர்களை விசாரித்ததில், நான் 'வருகிறேன்' என்று வாக்குக் கொடுத்தது அவ்வளவு உசிதமான காரியம் அல்ல என்று தெரிந்தது.

அந்தக் குழந்தையின் தாயாருக்கு மரகதமணி என்று பெயர். சங்கீதத்தில் கொஞ்சம் பயிற்சி உண்டு. சிலகாலம் கச்சேரிகள் கூடச்செய்து கொண்டிருந்தாள். தனிகர் ஒருவர் சிநேகமானார். கலியாணம் செய்து கொண்ட மனைவியைப் போலவே அவளை வைத்துப் பராமரிப்பதாகச் சொன்னார். மரகதமணி சங்கீதக் கச்சேரி செய்வதை விட்டு விட்டாள். சிலகாலம் அந்யோந்யமாகத்தான் இருந்தார்கள்.

இந்தமாதிரி சிநேகமெல்லாம் அநேகமாக எப்படி முடியும் என்பது தெரிந்த விஷயமே யல்லவா! சில வருஷங்களுக் கெல்லாம் ஏதோ காரணத்தினால் ஒருவருக் கொருவர் பிடிக்காமல் போய் விட்டது. தனிகர் மரகதமணியின் வீட்டுக்கு வருவதை நிறுத்தி விட்டார். பெரிய ஆஸ்தி படைத்த செல்வர். அந்தப் பெரிய ஆஸ்தியிலிருந்து ஏதோ கொஞ்சம் மரகதமணிக்கு எழுதி வைத்து விடுவதாகச் சொல்லிக் கொண் டிருந்தார். சொல்லிக் கொண்டிருந்தாரே தவிரக் காரியத்தில் நடைபெற வில்லை. கடைசியாக, அவர் இம்மாதிரி தொல்லைகளுக்கு இடமில்லாத மறு உலகத்துக்குப் போய் விட்டார்.

மரகதமணி தன் சின்னஞ்சிறு குழந்தையுடன் வறுமை வாழ்க்கை நடத்திவந்தாள். எப்படியோ காலம் போய்க் கொண்டிருந்தது. மனக் கவலையினால் உடம்பிலும் நோய் வந்துவிட்டது. படுத்த படுக்கையாகி விட்டாள். தாயும் பெண்ணும் இப்போது நிராதரவா யிருக்கிறார்கள்......

இந்த வேதனை தரும் வரலாற்றை அறிந்த பிறகு, "இப்போது அவர்களுக்கு ஜீவனம் எப்படித்தான் நடக்கிறது!" என்று கேட்டேன்.

"தாயாரிடம் இருந்த நகை நட்டுக்கள் கொஞ்சம் கொஞ்சமாகக் கரைந்து போய் வருகின்றன. அந்தக் குழந்தைக்கு நல்ல குரல். எங்கேயாவது பாட்டுக் கச்சேரி, நாதஸ்வரக் கச்சேரி என்றால் போய்விடும். கேட்ட பாட்டுக்களைப் பாடம் பண்ணி விடும். ரயிலிலே ஏறிப் பாட்டுப் பாடிப் பிச்சை எடுத்துத் தினம் எட்டணா, பத்தணா சம்பாதித்துக் கொண்டு வரும். அந்தக் குழந்தையின் குரல் இனிமையையும் முகக்களையையும் பார்த்து ரயில் அதிகாரிகள் சும்மா விட்டு விடுவார்கள். சில சமயம் இம்மாதிரி உற்சவ காலங்களில் மூச்சந்திகளில் நின்று பாட்டுப் பாடுவதும் உண்டு. சங்கீத ரஸனையும் தாராள உள்ளமும் படைத்தவர்கள் ஒரு அணா - இரண்டு அணா கூடக் கொடுத்துவிட்டுப் போவார்கள்!" என்று பதில் கிடைத்தது.

இதையெல்லாம் கேட்டு எனக்கு மிகவும் வருத்தமாயிருந்தது. அந்தக் குழந்தையின் நிலைமை இப்படியா யிருக்க வேண்டுமென்று எண்ணி இரங்கினேன். ஆனாலும், இம்மாதிரி இடங்களுக்கு உதவி செய்வதாக எண்ணிப் போனாலும் ஏதாவது சங்கடத்தில் வந்து முடியும் என்று நினைத்து அங்கே போகும் எண்ணத்தை விட்டு விட்டேன். உள்ளூரிலும் சரி, வெளியூரிலும் சரி, கடவுள் அருளால் எனக்கு நல்ல அந்தஸ்து ஏற்பட்டிருந்தது. கௌரவம் வாய்ந்த பெரிய மனிதர்களின் சிநேகமெல்லாம் கிடைத்திருந்தது. அசட்டுத்தனமாக எங்கேயாவது போய்க் காலை விட்டுக் கொண்டு வீண் தொல்லைக்கு ஆளாகக் கூடாது என்று மனத்தை உறுதிப் படுத்திக் கொண்டேன்.

இந்த உறுதியில் நிலைத்திருந்தேனானால் பின்னும் எவ்வளவோ சங்கடங்களுக்கு உள்ளாகாமல் தப்பித்துக் கொண்டிருப்பேன். அந்தச் சின்னஞ் சிறு குழந்தை ஒரு நிமிஷத்தில் என் மன உறுதியைக் குலைத்து விட்டது. நான் தங்கியிருந்த ஜாகைக்கே அது வந்து விட்டது. "மாமா! எங்கள் வீட்டுக்கு வருவதாகச் சொன்னீர்களே! எப்போது வருகிறீர்கள்! அம்மா ரொம்பச் சந்தோஷப் பட்டாள். கேட்டுவரச் சொன்னாள்!" என்றது.

அந்தக் குழந்தையின் உள்ளத்தைப் புண்படுத்த நான் விரும்பவில்லை. "அதற்கென்ன! சாயங்காலம் வருகிறேன், குழந்தை!" என்றேன். பக்கத்திலே இருந்த இரண்டொருவர் சிரித்ததைக் கேட்டதும் எனக்கு ரோஷம் அதிகமாகிவிட்டது. என் சுபாவந்தான் ஐயாவுக்குத் தெரியுமே! நல்லது, கெட்டது என்று என் புத்திக்குப் பட்டதைத்தான் செய்வேனே தவிர, நாலு பேர் ஏதாவது சொல்லி விடுவார்களே என்று பயந்து எதுவும் செய்ய மாட்டேன். ஊருக்குப் பயந்து நடக்கிற வழக்கமே என்னிடம் கிடையாது. யாராவது வம்பு பேசுகிறார்கள், அவதூறு சொல்கிறார்கள் என்று அறிந்தால், அந்தக் காரியத்தில் எனக்கு இன்னும் அதிக ஊக்கம் உண்டாகி விடும்.

பக்கத்திலிருந்தவர்களின் சிரிப்பையும் கேட்டு, குழந்தையின் முகத்தில் தோன்றிய ஏமாற்றத்தையும் பார்த்ததும், "சாயங்காலம் என்ன! இப்போதே உன்னுடன் வருகிறேன்" என்று சொல்லி விட்டு, உடனே எழுந்து போனேன்.

குழந்தையைப் பார்த்தபோது உண்டான இரக்கத்தைக் காட்டிலும் தாயைப் பார்த்தபோது அதிக இரக்கம் உண்டாயிற்று. அந்த அம்மாளின் பேச்சும் குணமும் அவ்வளவு உயர்வாயிருந்தன. ஆனால் தேக நிலைமை மிக மோசமாயிருந்தது. அதிக காலம் உயிர் வாழ்ந்திருக்க மாட்டாள் என்றே தோன்றியது. மூச்சுத் திணறிக் கொண்டு, உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு பேசுகிறவளைப் போல், மெல்லிய குரலில் பேசினாள். ஊர் வம்பு பேசவில்லை; தன்னுடைய சோகக் கதையைச் சொல்ல ஆரம்பிக்கவும் இல்லை. பழைய காலத்துச் சங்கீதக்காரர்கள் — நாதஸ்வரக் காரர்களைப் பற்றியே பேசினாள். அப்போது அவள் முகம் மலர்ச்சி அடைந்தது பார்த்து எனக்கும் திருப்தியாயிருந்தது. இந்த மட்டும், சீக்கிரத்தில் இறந்து போகப் போகிற ஒரு அனாதை ஸ்திரீக்கு இந்த உதவியாவது நம்மால் செய்ய முடிந்ததே என்று சந்தோஷப்பட்டேன். நீலமணி பக்கத்தில் உட்கார்ந்து வெகு சுவாரஸ்யமாக எங்கள் பேச்சுக்களைக் கேட்டுக் கொண்டிருந்தாள். விடை பெற்றுப் புறப்பட வேண்டிய சமயம் நெருங்கியபோது, நானாக அவளுடைய உடம்பு குணமாகிற வரைக்கும் வீட்டுச் செலவு பற்றிக் கவலைப்பட வேண்டாமென்றும் எனக்குத் தெரிந்த டாக்டரை அனுப்பி வைத்தியம் பார்க்கச் சொல்வதாகவும் கூறினேன். கடைசியாக, "அம்மா! நீ எவ்வளவோ நன்றாயிருந்தவள்; இப்போது இந்த கதிக்கு வந்து விட்டாய். ஆனாலும் இந்தக் குழந்தையைப் பிச்சை எடுக்கப் போகச் சொல்வதை மட்டும் நிறுத்தி விடு; பள்ளிக்கூடத்துக்கு அனுப்பு!" என்றேன்.

"நானும் போகச்சொல்கிறேன், ஐயா! 'வேண்டாம், வேண்டாம்' என்று தான் முட்டிக் கொள்கிறேன். கேட்காமல் போய்விடுகிறாள்!" என்று மரகதவல்லி கண்ணீர் ததும்பக் கூறினாள்.

அப்போது நீலமணி, "மாமா! நான் பிச்சை எடுக்கப் போவதாக யார் உங்களுக்குச் சொன்னார்கள்!" என்று கனீர் என்று கேட்டாள்.





நான் சிறிது திகைத்துப் போனேன். குழந்தையைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு இந்தப் பேச்சை எடுத்திருக்கக் கூடாது என்று எண்ணினேன்.

மறுபடியும் அந்தக் குழந்தை, "ஏன், மாமா! பதில் சொல்லுங்கள். நான் பிச்சை எடுப்பதாக யார் சொன்னார்கள்! நான் ஒன்றும் பிச்சை எடுக்கவில்லை! கச்சேரி செய்து பணம் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன். இருநூறு ரூபாய் முந்நூறு ரூபாய் வாங்கிக் கொண்டு பாடினால், அது மட்டும் கச்சேரியா! இரண்டு அணா, மூன்றணா வாங்கிக் கொண்டு பாடினால், அது பிச்சையா!" என்றாள்.

நான் அதற்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனேன். என்னை அறியாமல் சிரிப்பு பொங்கி வந்தது. அவள் தாயாரின் முகத்திலும் கொஞ்சம் புன்னகையைக் கண்டேன். கலகலவென்று சிரித்துக் கொண்டே குழந்தையைக் கட்டி அணைத்துக் கொண்டு, "நீ ரொம்பக் கெட்டிக்காரப் பெண்! பலே சமர்த்து! என்னுடன் வந்துவிடு! உன்னைப் பெரிய சங்கீதக் காரியாக்கி விடுகிறேன்" என்றேன்.

அப்போது மரகதவல்லி "அப்படியே செய்யுங்கள், ஐயா! இவளைச் சமாளிக்க என்னால் முடியவே யில்லை! நீங்களே அழைத்துக்கொண்டு போங்கள்!" என்றாள்.

பேச்சு வாக்கில் ஏதோ சொல்லி வைத்தேன். அவ்வாறு காரியத்தில் நடக்கும்படி கடவுள் செய்து விட்டார். ஆறு மாதத்துக்கெல்லாம் மரகதவல்லி இறந்து போனாள். அந்தக் குழந்தைபட்ட துயரத்தை என்னால் சொல்ல முடியாது. நல்லவேளையாக அச்சமயம் நான் கும்பகோணத்தில் இருக்கும்படி கடவுளின் அருள் இருந்தது. தாயின் ஈமக்கடன்களை முடித்து விட்டுக் குழந்தையை என் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்தேன்.

முதலில் என் வீட்டைச் சேர்ந்தவர்கள் கொஞ்சம் அருவருப்புக் காட்டினார்கள். யாரோ வீதியிலே திரிந்த பிச்சைக்காரப் பெண்ணைப் பிடித்துக் கொண்டு வந்து விட்டதாக முணு முணுத்தார்கள். அதை நான் பொருட்படுத்தவில்லை. சில நாளைக்குள்ளேயே நிலைமை மாறிவிடும் என்று அறிந்திருந்தேன். குழந்தை நீலமணி என் குடும்பத்தாரைச் சொக்குப் பொடி போட்டு மயக்குவது போல் மயக்கி விட்டாள். அவளுடைய குறு குறுப்பான கண்களும்

கருகருப்பான கூந்தலும் மழலைப் பேச்சும் இனிய பாட்டும் எல்லாரையும் வசீகரித்து விட்டன. "குழந்தையைக் கவனித்துக் கொள்ளுங்கள்" என்று நான் சொல்ல வேண்டிய அவசியமில்லாமலே போய் விட்டது. அதற்குப் பதிலாக நான் நீலமணியை எதற்காவது கண்டிக்கும்படி நேர்ந்தால், என் வீட்டில் எல்லாரும் என் பேரில் பாய ஆரம்பித்து விட்டார்கள். சிறு குழந்தைகளுக்கு அளவுக்கு மீறிச் செல்லம் கொடுப்பது தவறு என்பதை நான் அறிவேன். அப்படி இடம் கொடுத்துக் கெட்டுப் பாழாய்ப்போன பெரிய மனிதர்கள் வீட்டுக் குழந்தைகள் எத்தனையோ பேரையும் எனக்குத் தெரியும். நீலமணியினுடைய குழந்தை வாழ்க்கையை உத்தேசிக்கும்போது அவளை ரொம்பவும் கண்டித்து வளர்க்க வேண்டிய அவசியத்தையும் உணர்ந்திருந்தேன். ஆனாலும் ஒன்றும் பயன்படவில்லை. எனக்கே அந்த அனாதைக் குழந்தையைக் கண்டிக்கச் சாதாரணமாய் மனம் வருவதில்லை. எப்போதாவது அருமையாக அவளைக் கோபித்துக் கொண்டால் என் வீட்டில் எல்லாரும் என்பேரில் சண்டைக்கு வந்தார்கள்.

எப்படியோ குழந்தைக்கு நல்ல வார்த்தை சொல்லித் தாஜா பண்ணிப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பிவந்தேன். வெகு நன்றாகப் படிப்பும் வந்து கொண்டிருந்தது. ஆனால் நடு நடுவில் பழைய பழக்க வழக்கங்கள் வந்து கொண்டிருந்தன. திடீரென்று ஒரு நாள் பள்ளிக்கூடத்திலிருந்து காணமற் போய் விடுவாள். வீட்டுக்கு வரவேண்டிய சமயத்திற்கு வரமாட்டாள். ஊரில் உற்சவம் ஏதாவது நடந்தால் அங்கே வேடிக்கை பார்க்கப்போய் விடுவாள். பாட்டுப் பாடிக் காசு வாங்கவும் ஆரம்பித்து விடுவாள். சில சமயம் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போய் ரயில் ஏறிப் பாடத் தொடங்கி விடுவாள். இரண்டு மூன்று ஸ்டேஷன் பாடிக் கொண்டு போய்விட்டு "குழந்தையைக் காணுமே!" என்று எல்லாரும் கவலையுடன் தேடிக் கொண்டிருக்கும் சமயத்தில் கையில் எட்டணா, ஒரு ரூபாய்க் காசுடன் திரும்பி வருவாள்.

நான் எவ்வளவோ சொல்லிப் பார்த்தேன். "குழந்தை! நான் இந்த ஊரில் கௌரவமாய் வாழ்க்கை நடத்துகிறேன்! என் மானத்தை வாங்காதே!" என்று அடிக்கடி எடுத்துச் சொன்னேன்.

"நான் எங்கேயோ கிடந்து வந்தவள் என்றுதான் எல்லாருக்கும் தெரியுமே, மாமா! உங்களுக்கு என்னால் கௌரவக் குறைவு எப்படி ஏற்படும்!" என்று அவள் ஒரு சமயம் பதில் சொல்வாள்.

இன்னொரு சமயம், "ஏன், மாமா! நீங்கள் கச்சேரிக்குப் போய் நூறு, இரு நூறு சம்பாதித்துக் கொண்டு வருகிறீர்களே! அதில் கௌரவக் குறைவு ஒன்றும் இல்லையே! அதுபோல் நானும் எனக்குத் தெரிந்த பாட்டைப் பாடிக் கச்சேரி செய்து என்னுடைய பணத்தைச் சம்பாதித்துக் கொண்டு வருகிறேன். இதில் என்ன பிசகு?" என்பாள்.

இன்னும் ஏதாவது நான் கடுமையாகப் பேசி விட்டால் கண்ணில் கலகலவென்று கண்ணீர் பெருக்கி அழுது கொண்டு என் முன்னாலிருந்து போய் விடுவாள்.

என்னுடைய கண்டிப்பு அதிகமாகப் போய் விட்டால், ஒரு நாள் என் வீட்டை விட்டு, ஊரைவிட்டே ஓடிப்போய் விடப் போகிறாளே என்ற பயம் எனக்கு உண்டாகி விட்டது.

அதற்குப் பிறகு, "நடக்கிறது நடக்கட்டும்; கடவுள் இருக்கிறார்!" என்று விட்டு விட்டேன்.

மூன்றாம் அத்தியாயம்

ஏழெட்டு வருஷ காலம் என் பராமரிப்பிலேயே நீலமணி வளர்ந்து வந்தாள். அந்தக் குழந்தைக்குச் சங்கீதத்தில் இயற்கையாக உள்ள ஞானத்தை அறிந்திருந்தபடியால், பாட்டு வாத்தியார் வைத்துப் பாட்டுச் சொல்லிக் கொடுக்கவும் ஏற்பாடு செய்தேன். சங்கீதம் என்னமோ அவளுக்கு நன்றாகத்தான் வந்தது. ஆனால் பாட்டு வாத்தியாரிடம் எப்போதும் சண்டைதான். ஸரளி வரிசை, கீதம், வர்ணம் என்று வரிசைக் கிரமமாகப் பாட்டு வாத்தியார் பாட்டு ஆரம்பிப்பார். அதெல்லாம் நீலமணி சரியாகப் பாடம் பண்ணமாட்டாள். "அந்தக் கீர்த்தனத்தைச் சொல்லிக் கொடுங்கள்!" "இந்தப் பாட்டைப் பாடிக் காட்டுங்கள்!" என்று ஆரம்பித்து விடுவாள். பாட்டு வாத்தியார்களுக்கும் போதும் போதும் என்று ஆகி விடும். "இந்தப் பெண்ணுக்குச் சொல்லிக்கொடுக்க என்னால் ஆகாது" என்று போய் விடுவார்கள். இம்மாதிரி நாலைந்து பாட்டு வாத்தியார் மாற்ற வேண்டியதாகி விட்டது.

நானும் சில சமயம் சொல்லிக் கொடுக்கப் பார்ப்பேன். அதாவது சொல்லிக் கொடுக்கிற பாவனையாக நீலமணியைப் பாடச் சொல்லிக் கேட்பேன். "பாட்டு வாத்தியார்கள் கெட்டார்கள்! இந்தக் குழந்தைக்கு வந்திருக்கிற சங்கீதம் வேறு யாருக்கு வந்திருக்கிறது! பெரிய பெரிய வித்வான்கள் பிரமிக்கும்படியான பாட்டு அல்லவா இது! சங்கீத தெய்வத்தின் அருளினால் வந்த சங்கீதம் அல்லவா இது!" என்று மனதில் எண்ணிக் கொள்வேன். வெளிப் படையாகச் சொன்னால், குழந்தை கொஞ்சம் முறையாகக் கற்பதும் நின்றுவிடப் போகிறதென்று பயந்து மனதிற்குள்ளேயே வைத்துக் கொள்வேன்.

நீலமணிக்குப் பதினேழு வயது ஆயிற்று. "இந்தப் பெண்ணை இனிமேல் என்ன செய்வது?" என்ற கவலை என் மனத்தில் உண்டாகத் தொடங்கியது.

இந்த நிலைமையில் நான் யாழ்ப்பாணத்துக்கு ஒரு கச்சேரிக்குப் போகும்படி நேரிட்டது. யாழ்ப்பாணத்துக்காரர்கள் நல்ல சங்கீத ரசிகர்கள் என்பது உங்களுக்குத் தெரிந்ததுதானே! சங்கீதத்திலேயும் நாதஸ்வர சங்கீதத்தில் அவர்களுக்கு மோகம் அதிகம். வேண்டியவர்கள், வேண்டாதவர்கள் என்ற வேற்றுமை மனோபாவம் அவர்களிடம் கிடையாது. தமிழ் நாட்டிலிருந்து பிரபல நாதஸ்வர வித்வான்கள் எல்லாரையும் அடிக்கடி கோயில் உற்சவங்களுக்கு வரவழைப்பார்கள். எல்லாருடைய வாசிப்பையும் நன்றாகக் கேட்டு ஆனந்திப்பார்கள். நாதஸ்வர வித்வான் யாரைக் கூப்பிட்டாலும், தவுலுக்கு மட்டும் தவறாமல் என்னையே கூப்பிடுவார்கள்.

என் குடும்பத்தார் அடிக்கடி தங்களையும் ஒரு முறை இலங்கைக்கு அழைத்துப் போகும்படி கேட்பதுண்டு. நானும் 'ஆகட்டும்' 'ஆகட்டும்' என்று தட்டிக் கழித்து வந்தேன். இந்தத் தடவை மூன்று உற்சவக் கச்சேரிகள் சேர்ந்தாற்போல் வந்தபடியால், சுமார் இருபது நாள் வரை இலங்கையில் நான் தங்க வேண்டியதாயிருந்தது. குடும்பத்தை அழைத்துப் போவதற்கு இதைவிட நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது என்று எண்ணி எல்லாருமாகப் போகத் தீர்மானித்தோம். சில காலமாக நீலமணி மிக்க உற்சாகக் குறைவுடன் கிறுக்குப் பிடித்தவள் போல் இருந்தாள். 'ஒருநாள் நம்முடைய மானத்தை வாங்கிவிட்டு ஓடிப் போய் விடுவாளோ!' என்று கூட எண்ணினேன். உண்மையைச் சொல்லப் போனால், நீலமணியை உத்தேசித்தே குடும்பம் முழுவதையும் அழைத்துப் போக முடிவு செய்தேன்.

இலங்கைப் பிரயாணச் செய்தி அறிந்ததும் நீலமணி உற்சாகம் அடைந்தாள். "பிரயாணம் என்றைக்கு, மாமா!" என்று அடிக்கடி கேட்டுத் துளைத்துக் கொண்டிருந்தாள். கடைசியாகப் பிரயாண நாளும் வந்தது.

இந்தக் காலத்தைப் போல் ஆகாச விமானத்தில் ஏறிச் சில மணி நேரத்தில் இலங்கை போய் இறங்குகிற வசதி அப்போது கிடையாது. பிரயாணத்தில் எவ்வளவோ அசௌகரியங்கள் இருந்தன. சில சமயம் நரக வேதனையாகவே இருந்தது. எங்கள் கோஷ்டியில் அசௌகரியம் ஒன்றையும் பொருட்படுத்தாமல் ஒரே உற்சாகத்துடன் இருந்தவள் நீலமணி ஒருத்திதான்.

இதன் காரணம் எனக்குப் பின்னால் தெரிந்தது. நீலமணியின் தாயார் மரகதமணி அம்மாள் சந்தோஷமாக வாழ்ந்த நாட்களில் அவளும் நீலமணியின் தகப்பனாரும் இலங்கைக்கு வந்திருந்தார்களாம். அந்த அழகான தீவில் பல இடங்களுக்குப் போயிருந்தார்களாம். அங்கே அவர்கள் பார்த்த அதிசயங்களையெல்லாம் பற்றி அடிக்கடி மரகதமணி தன் அருமை மகளுக்குச் சொல்லுவதுண்டாம். "அப்போதெல்லாம் அம்மாவின் முகமே தனியான களை பெற்று விளங்கும்" என்றாள் நீலமணி. சின்னஞ் சிறு பிராயத்தில் கேட்டிருந்த இலங்கைத் தீவின் அதிசயங்கள் நீலமணியின் உள்ளத்தை அவ்வளவாகக் கவர்ந்து விட்டிருந்தன. அதனாலேதான் இலங்கைப் பிரயாணம் என்றதும் அவ்வளவு துடிதுடித்தாள். இதையெல்லாம் கொழும்புக்குச் சென்ற பிற்பாடுதான் நீலமணி சொல்லி நான் தெரிந்து கொண்டேன்.

ஆம்; முதலிலே கொழும்பிலேதான் எனக்குக் கச்சேரி இருந்தது. நாலு நாளைக்குப் பிறகு யாழ்ப்பாணத்தில் கச்சேரி. கொழும்புக் கச்சேரி முடிந்ததும் நீலமணியையும் என் குடும்பத்தினரையும் அழைத்துக் கொண்டு அந்த அழகிய நகரத்தைச் சுற்றிக் காட்டப் புறப்பட்டேன்.

நாரீமணிகளின் நாகரிகச் சின்னம்

- உங்களுக்குப் பிடித்தமானதை நீங்கள் சாப்பிடுகிறீர்கள்; ஆனால் மற்றவருக்குப் பிடித்தமானவற்றைத்தான் நீங்கள் அணிந்து கொள்ள வேண்டும். மற்றவர் கவனத்தை எவ்வளவுக்கு அதிகமாக ஒருவரது ஆடைகள் கவர்கின்றனவோ அவ்வளவுக்கு அவர் தமது ஆடைகளை விரும்பிப் போற்றுவார்.

- தரமான மைசூர் ஸில்க்கிலிருந்து கிரேப்-டி-சின் அமைப்பிற்கிணங்கத் தயாரிக்கப்பெற்ற மைசூர் கவர்ன்மெண்ட் கிரேப்-டி-சின் சேலைகள், தமது சிறப்பியல்பான காந்தியாலும், சேர்த்தியாலும், எல்லோர் உள்ளத்தையும் கொள்ளை கொள்கின்றன. வாலிபரும், வயதானவரும், பணக்காரரும், ஏழையும் ஒருமுகமாக விரும்பித் தேர்ந்தெடுப்பது இவைகளையே.

- எந்த சந்தர்ப்பத்திற்கும் ஏற்ற சேலைகள் புது ரக பார்டர்களிலும், உங்கள் விருப்பத்திற்கேற்ற விதவிதமான கலர்களிலும் கிடைக்கும்.



இவற்றை நம்பலாம்

மைசூர் கவர்ன்மெண்ட்

கிரேப்-டி-சின் சேலைகள்

பிரபல்யத்திற்கு வழி

(முழுவதும் 100 சத வீதம்
சுத்தமான மைசூர் ஸில்க்)

மைசூர் கவர்ன்மெண்ட் ஸில்க் வீவிங் பாக்டரி

மைசூர்

C. D. C. 8


Long Life
OF BINNY'S FABRICS
"மாஸ்காட்"
போன்:4688
VENKATESH VASTRALAYA
சில்லறையில் கிடைக்குமிடம்:
வெங்கடேஷ் வஸ்த்ராலயா
2, தம்பு செட்டித் தெரு, ... சென்னை-1

இதற்கிடையில் கொழும்பில் அப்போது தமிழ் நாட்டில் பிரபலமாயிருந்த நமச்சிவாயம் கம்பெனியாரின் சில நாடகங்கள் நடந்து கொண்டிருந்தன என்று கேள்விப்பட்டேன்.

சில காலம் தமிழகத்தில் மிகப் பிரசித்தி பெற்றிருந்த நமச்சிவாயம் நாடகக் கம்பெனியைப் பற்றி நீங்கள் அவசியம் அறிந்திருப்பீர்கள். நமச்சிவாயம் ஏழை பிள்ளை. விசேஷமான நல்ல குணம் வாய்ந்த பிள்ளை. முதலில் அவன் 'புதுக்கோட்டை மீனலோசனி ஜானவர்த்தினி ஒரிஜினல் பாலலோசன பரமானந்தா டிராமா கம்பெனி'யில் நடித்துக் கொண்டிருந்தான். வெகு சீக்கிரத்தில் பெயரும் புகழும் பெற்றான். அவனை எத்தனையோ போட்டி நாடகக் கம்பெனிகள் அதிகப் பணம் கொடுத்துக் கொத்திக் கொண்டு போகத் தயாரா யிருந்தன. ஆனால் அப்போதே பையன் நமச்சிவாயம் தன் வாழ்க்கையின் துருவ நட்சத்திரத்தைத் தெரிந்து கொண்டிருந்தான். சொந்தத்தில் நாடகக் கம்பெனி வைத்து நடத்தி உலகத்தையே ஒரு ஆட்டு ஆட்டி வைத்து விட வேண்டுமென்ற இலட்சியத்தைக் கொண்டிருந்தான். ஆகையால் மைனர் பருவம் முடிந்தவுடனேயே நாடகக் கம்பெனி நடத்திப் பெயர் வாங்கினான். 'அதிரூப மோகனாங்கி' 'குலேபஜான் வைஜயந்தி' 'பூலோக அற்புத ரம்பை' முதலிய புதுமையான நாடகங்களை அரங்கேற்றிப் புகழ் பெற்றான். தமிழ்நாட்டிலேதான் இப்படி யென்றால், இலங்கையிலுள்ள தமிழர்களை யெல்லாம் அவனுடைய நாடகங்களின் மூலம் பைத்தியமாக அடித்து விட்டான்!

அப்படிப்பட்ட நல்ல பிரசித்தி பெற்ற நமச்சிவாயம் கொழும்பு நகரில் நாடகங்கள் நடத்திக் கொண்டிருந்தான். என் சகோதரி பெற்ற மருமான் குடும்பத்துடன் நான் நாடகம் பார்க்கப் போயிருந்தேன். நமச்சிவாயத்தை எனக்கு முன்னாலேயே நன்றாய்த் தெரியும். பழைய மீனலோசனி கம்பெனியில் என் கையினால் ஒரு தடவை மெடல் வாங்கியிருக்கிறான். கொட்டகையில் என்னை அவன் பார்த்து விட்டுக் கண் பார்வையினாலேயே வியப்பையும், மரியாதையையும் தெரிவித்துக் கொண்டான். மறுநாள் நாங்கள் தங்கி யிருந்த ஜாகையில் என்னைப் பார்க்கவும் வந்து விட்டான். விதி என்று சொல்லுகிறார்களே, அது இது தான் என்று பிற்பாடு தெரிந்து கொண்டேன்.

ஏனெனில், நாடகம் பார்த்து விட்டதிலிருந்து நீலமணி எங்கள் ஜாகையில் அதைப் பற்றியே ஓயாமல் பேசிக் கொண்டிருந்தாள். நாடகத்தில் நடித்தவர்களைப்போல் நடித்துக் காட்டினாள்; பாடியவர்களைப்போல் பாடிக் காட்டினாள்; பேசியவர்களைப்போல் பேசிக் காட்டினாள். எல்லாரும் விழுந்து விழுந்து சிரித்துக் கொண்டிருந்தோம். முக்கியமாக, அந்த நாடகத்தில் கதாநாயகி வேஷம் போட்டவனைப்போல் நீலமணி பேசிப் பாடி நடித்துக் காட்டியது எங்களுக் கெல்லாம் ஒரே சிரிப்பை உண்டாக்கிக் கொண்டிருந்தது.

இப்படி நாங்கள் சிரித்துக் கொண்டிருந்த சமயத்திலே தான் நமச்சிவாயம் வந்து சேர்ந்தான். எல்லாரும் அவசரமாகச் சிரிப்பை அடக்கிக் கொண்டோம். நமச்சிவாயம் "என்ன, மாமா! நான் வரும்போது ஒரே சிரிப்பா யிருந்ததே!" என்று கேட்டான். "எல்லாம் உன்னுடைய பிரபாவத்தைப் பற்றித் தான்!" என்று பொதுப்படையாகச் சொன்னேன்.

நமச்சிவாயம் இதற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் சிறிதுநேரம் விழித்து விட்டு, "நீங்கள் நாடகம் பார்க்க வந்ததற்கு ரொம்ப சந்தோஷம், மாமா! அதற்கு வந்தனம் செலுத்தவே வந்தேன். நாடகம் எப்படி இருந்தது! உங்களுக்குப் பிடித்ததா!" என்று கேட்டான்.

"நாடகம் நன்றா யிருந்தது. எனக்கு மட்டு மல்ல; என் குடும்பத்தார் எல்லாருக்கும் ரொம்ப ரொம்பப் பிடித்திருந்தது. ஆனால் ஏதோ புதுமையான நாடகம் என்று விளம்பரம் செய் திருந்தாயே! பழைய நாடகந்தானே!" என்றேன்.

"யார் சொன்னது! புது நாடகந்தான், மாமா! எங்கள் கம்பெனி வாத்தியாரே புதிதாக எழுதியதல்லவா!" என்றான்.

"அது என்னமோ, அப்பா! உங்கள் வாத்தியாரே ஒரு வேளை 'காப்பி' அடித்து உன்னை ஏமாற்றி விட்டாரோ, என்னமோ! இந்த நாடகம் ஏற்கெனவே நான் பார்த்திருக் கிறேன். என் மகள்கூடப் பார்த்திருக்கிறாள். சந்தேகமிருந்தால் இதோ நிரூபித்துக் காட்டுகிறேன், பார்!" என்று சொல்லிவிட்டு, நீலமணியைக் கூப்பிட்டு, "குழந்தை, நாம் இந்த நாடகத்தை முன்னால் ஒரு தடவை தஞ்சாவூரில் பார்த்திருக்கிறோமல்லவா! சில பாத்திரங்களைப் போல் நீ நடித்துக் காட்டு! அப்போது தான் இவர் நம்புவார்!" என்று சொன்னேன்.

முதலில் நீலமணி கூச்சப்பட்டாள். கொஞ்சம் தாஜா செய்த பிற்பாடு, நிமிர்ந்து கூச்சத்தை உதறித் தள்ளிவிட்டு வந்து 'பூலோக அற்புத ரம்பை'யில் யார் யார் எப்படிப் பேசினார்கள், பாடினார்கள், நடித்தார்கள் என்று கொஞ்சம் கொஞ்சம் செய்து காட்டினாள். கதாநாயகி வேஷம் போட்ட பையனைப் போல் நீலமணி நடித்துக் காட்டியபோது எங்களுடன் சேர்ந்து நமச்சிவாயமும் விழுந்து விழுந்து சிரித்தான்.

கதாநாயகனாக நடித்த நமச்சிவாயத்தைப் போல மட்டும் நீலமணி செய்து காட்டக் கண்டிப்பாக மறுத்து விட்டாள்.

பழைய நாடகம் என்று நான் சொன்னது இந்தத் தமா ஷுக்காகத் தான் என்பதை நமச்சிவாயம் ஆரம்பத்திலேயே தெரிந்து கொண்டான்.

விடைபெற்றுச் செல்லும் போது, "மாமா! எங்கள் நாடகத்தில் எவ்வளவு குறைகள் இருக்கின்றன என்பதை இன்றைக்குத்தான் நன்றாக அறிந்தேன். ஆனால் என்ன செய்வது! கிடைக்கிற நடிகர்களைக் கொண்டு தானே நடத்த வேண்டியிருக்கிறது! ஆனால் ஜனங்களுக்கு என்னமோ பிடித் திருக்கிறது!" என்றான் நமச்சிவாயம்.

"அதுதான், தம்பி, வேண்டியது! மற்றது எப்படி இருந் தால் என்ன!" என்றேன் நான்.

நமச்சிவாயம் போன பிறகு நீலமணி "இது என்ன மாமா! இப்படி என்னைச் சிக்கலில் இழுத்து விட்டீர்கள்! அவர் என்னைப் பற்றி என்ன நினைத்துக் கொள்வார்! 'அதிகப் பிரசங்கி' 'அடங் காப்பிடாரி' என்றெல்லாம் எண்ணிக்கொண்டு போக மாட் டாரா!" என்று கேட்டாள்.

"எண்ணிக் கொண்டு போவது என்ன! உண்மையும் அப் படித்தானே! நீ அதிகப் பிரசங்கி - அடங்காப் பிடாரிதானே, அதில் என்ன சந்தேகம்!" என்றேன் நான்.

வழக்கமாக நீலமணியிடம் பேசுகிறபடி வேடிக்கையாகத் தான் சொன்னேன். ஆனால் அவள் வழக்கம் போல் சிரித்து விட்டுப் போகாமல், குப்புறப் படுத்துக் கொண்டு, விம்மி விம்மி அழத்தொடங்கி விட்டாள். 'இது என்னடா வம்பு!' என்று எனக்கு வேதனையாகப் போய் விட்டது. அவளை ஒருவாறு சமா தானப் படுத்தினேன். அன்றிரவே நாங்கள் யாழ்ப்பாணத் துக்குப் புறப்பட்டு விட்டபடியால், அந்தச் சம்பவம் அதோடு போய் விட்டது என்று நினைத்தேன். ஆனால் அது போகவில்லை; விடாமல் எங்களைத் தொடர்ந்து வந்தது.

யாழ்ப்பாணத்திலேதான் நாங்கள் அதிக நாள் தங்கினோம். ஒரு கோயில் உற்சவம் முடிந்து இன்னொரு உற்சவத்துக்காகக் காத்திருந்த சமயத்தில், நமச்சிவாயம் வந்து சேர்ந்தான்; முகத் தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வந்தான். கொழும்பில் நாடகம் நடத்திக் கொண்டிருந்த நமச்சிவாயம் கம்பெனியை யாழ்ப்பாணத்தார்கள் ஒரு 'ஸ்பெஷல்' நாடகத்துக்காகத் தரு வித்திருந்தார்கள். வரும் வழியில் ஸ்திரீ வேஷக்காரனுக்குச் சுரம் வந்து விட்டது. அதைப்பற்றி வெளியில் சொன்னால் வேறு விதமான இடைஞ்சல்கள் ஏற்படும். இந்தியாவிலிருந்து வந்தவர் களில் யாருக்காவது சுரம் வந்துவிட்டதாகத் தெரிந்தால், இலங் கையில் தொத்து வியாதி சிறைச்சாலையில் கொண்டு போய்ச் சேர்த்து விடுவார்கள். அப்புறம் உயிர் பிழைத்து வெளியில் வருவதற்கு எவ்வளவு நாள் ஆகுமோ தெரியாது.

இந்த நிலைமையில் என்ன செய்வது! 'ஸ்பெஷல்' நாட கத்தை ரத்து செய்வதா! என்ன காரணத்தைச் சொல்லி ரத்து செய்வது! நாடகத்துக்கு அழைத்திருந்தவர்கள் ஏராளமாய்ப் பணம் செலவிட்டு விளம்பரப்படுத்தி யிருந்தார்கள். அவர்களுக் கும் பண நஷ்டம்; நமச்சிவாயத்துக்கும் பெயர் நஷ்டம்.

அழமாட்டாக் குறையாக இந்த விவரங்களை யெல்லாம் நமச்சிவாயம் என்னிடம் சொன்னான்.

"நாளைக்குத்தானே தம்பி, நாடகம்! அதற்குள் ஸ்திரீ வேஷக்காரனுக்குச் சுரம் சரியாய் விடுகிறது!" என்றேன்.

"அப்படித் தோன்றவில்லை, மாமா! நூற்றைந்து டிகிரி சுரம். மேடைக்கு வந்து மயக்கம் போட்டு விழுந்து விட்டால் என் கதி என்ன ஆகிறது!" என்றான்.

"அதுவும் ஒரு நடிப்பு என்று வைத்துக் கொள்கிறது" என்று சொல்லி விட்டு நகைத்தேன்.

நமச்சிவாயத்துக்கு நகைப்பு உண்டாகவில்லை; அழுகை யும் ஆத்திரமுந்தான் வந்தது.

அச் சமயத்தில் என் நாவில் எந்தக் குட்டிச்சாத்தான் வந்து உட்கார்ந்து கொண்டதோ, என்னமோ தெரியவில்லை.



"நமது நீலமணியை வேண்டுமானால் நடிக்கச் சொன்னால் போகிறது!" என்றேன்.

உடனே நமச்சிவாயத்தின் முகம் மலர்ந்து "தங்களிடம் அதைக் கேட்கலா மென்று தான் வந்தேன்; ஆனால் கேட்பதற்கு என்னவோ தைரியம் வரவில்லை" என்றான்.

எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. தமாஷ் பேச்சு சில சமயம் எவ்வளவு இக்கட்டுகளில் கொண்டு வந்து விட்டுவிடுகிறது!

அதிகம் வளர்த்துவதில் பயனில்லை. நமச்சிவாயம் தான் வந்த காரியத்தை நிறைவேற்றிக் கொண்டுதான் போனான். தமிழ் நாட்டிலிருந்து வந்தவர்கள் கச்சேரி செய்வதாகவோ, நாடகம் போடுவதாகவோ இலங்கையில் விளம்பரம் செய்துவிட்டு, அப்படி நடக்காமற் போனால், தமிழ் நாட்டுக் கலைஞர்கள் எல்லாருக்குமே கெட்ட பெயர் உண்டாகும். இம்மாதிரி சில முறை இலங்கையில் நடந்து, தமிழ்க் கலைஞர்கள் கெட்ட பெயர் வாங்கி யிருக்கிறார்கள். ஆகையால் இவ்வளவு விளம்பரம் செய்த பிறகு நாடகம் நடந்தால்தான் நல்லது என்பதைப் பற்றிச் சந்தேக மில்லை. நமச்சிவாயத்துக்கு ஏதாவது ஒத்தாசையா யிருப்பதில் எனக்கும் திருப்திதான். ஆனால் நீலமணியை நாடகமேடை ஏறி நடிக்கச் செய்வதாம் என்கிற எண்ணம் அந்த நிமிஷத்துக்கு முன்னால் என் கனவிலே கூடத் தோன்றியதில்லை.

நீலமணியிடம் இதை நாங்கள் தயங்கித் தயங்கிப் பிரஸ்தாபித்ததும், அவள் ஒரு நிமிஷ நேரங்கூடத் தாமதிக்காமல் சம்மதித்தது என்னை ஆச்சரியத்தில் மூழ்க அடித்து விட்டது. கொழும்பில் வேடிக்கையாக நடித்துக் காட்டச் சொன்னபோது அவள் தயங்கிய அளவுகூட இப்போது தயங்கவில்லை. பூர்வ ஜன்ம வாசனை என்று இதைத்தான் சொல்கிறார்கள் போலிருக்கிறது. அவளுடைய உடம்பிலும், உடம்பில் ஓடிய இரத்தத்திலும், உள்ளத்திலும், உயிரின் ஒவ்வொரு அணுவிலும் நாடகக் கலையின் ஜீவசக்தி ததும்பித் துடித்துக் கொண்டிருந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால், ஒரு வருஷ காலத்திற்குள்ளே தமிழ் நாடெங்கும் 'சின்ன பாலாமணி' என்று பெயர் வாங்கியிருக்க முடியுமா!

உடனேயே ஒத்திகை ஆரம்பமாகி விட்டது. பாட்டு, கூத்து,—இம்மாதிரி காரியங்களில் நீலமணிக்கு அபாரமான ஞாபக சக்தி உண்டு. இப்போதோ அவளுக்கு ஒரு புதிய ஆவேசம் உண்டாகி யிருந்தது. ஒரு பகல்—ஒரு இராத்திரி ஒத்திகையில் எல்லாவற்றையும் பாடம் செய்து விட்டாள். நூறு தடவை அந்த நாடகத்தில் நடித்தவள் போல் அவ்வளவு இயற்கையாகப் பாடவும், பேசவும் செய்தாள். நடிப்போ அவளுக்கு இயற்கையாக வந்தது.

ஒத்திகையில் திருப்திகரந்தான்; மேடையில் ஏறிப் பெரிய ஜனத் திரளைப் பார்த்தவுடன் பயந்து போகாமல் இருக்க வேண்டுமே என்று எனக்குத் திக்குத் திக்கு என்று அடித்துக் கொண்டிருந்தது. ஆனால் நாடகத்தில் திரை தூக்கிச் சிறிது நேரத்துக்குள்ளேயே என் பயம் நீங்கிவிட்டது. நீலமணியிடம் சபைக்கூச்சம் என்பதே தென்படவில்லை. சபையில் கூடியிருந்த யாழ்ப்பாணத்துப் பொதுஜன ரசிகர்களோ, ஆண்பிள்ளை பெண் வேஷம் போட்டுக் கொண்டு வந்து நடிப்பதற்குப் பதிலாக ஒரு பெண்ணே கதாநாயகியாக நடிக்கிறாள் என்று தெரிந்தவுடனேயே கரகோஷத்தின் மூலம் தங்கள் உற்சாகத்தைக் காட்டி விட்டார்கள். அப்புறம் நீலமணி மேடைக்கு வரவேண்டியது தான்; சபையிலே ஒரே ஆரவாரம் எழுந்தது. போகப் போக நீலமணியின் உற்சாகம் அதிகமாகி வந்தது. நாடகம் யாரும் எதிர்பாராத அளவில் அமோகமான வெற்றியுடன் முடிந்தது.

மறுநாள் நமச்சிவாயம் என்னிடம் வந்து "மாமா! என் மானத்தைக் காப்பாற்றினீர்கள்!" என்று காலைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் சொரிந்தான். பற்பல விதமாகத் தனது நாடகத் திறமை யெல்லாம் காட்டி, எனக்கும் நீலமணிக்கும் நன்றி செலுத்திவிட்டுக் கொழும்புக்குப் பிரயாணமானான். வழக்கமாக ஸ்திரீ வேஷம் போடுகிற பையனுக்குச் சுரம் இறங்க ஆரம்பித்து விட்டது என்று தெரிந்து நானும் மன நிம்மதி அடைந்தேன். யாழ்ப்பாணத்தில் என்னுடைய கச்சேரிகள் முடிந்ததும் ஊருக்குத் திரும்பினேன்.

நாலாம் அத்தியாயம்

நீலமணியின் வருங்காலத்தைப் பற்றிக் கவலைப் பட்டுக் கொண்டிருந்தேன் அல்லவா! அந்தக் கவலை என் மனத்திலிருந்து நீங்கி போய் விட்டது. நீலமணி விரைவில் என் பொறுப்பி லிருந்து போய் விடுவாள் என்று நிச்சயம் செய்து கொண்டேன். அந்தப்படியே நடைபெறவும் செய்தது. ஆனால் அன்று எழுதிய எழுத்தை அழித்து எழுத வல்லவர் யார்! சில காலம் வரைக்கும்தான் நான் நீலமணியை மறந்து, அவளைப் பற்றிய கவலை அதிகமில்லாமல் இருக்க முடிந்தது.

சீக்கிரத்திலேயே நமச்சிவாயம் ஐயம்பேட்டையில் என்னுடைய வீடு தேடி வந்து சேர்ந்தான். அவன் வந்த சமயம் நான் வீட்டில் இல்லை. நமச்சிவாயமும் நீலமணியும் ஒருவாறு பேசி முடிவு செய்து கொண்டு என்னிடம் சம்மதம் கேட்பதற்காகக் காத்திருந்தார்கள் என்று தோன்றியது.

நமச்சிவாயம் கம்பெனியில் பிரதான ஸ்திரீ வேஷம் போட்டு வந்த பையன் சண்டை பிடித்துக் கொண்டு போய் விட்டானாம்! நீலமணியுடன் நடித்த பிறகு வேறு யாருடனும் நடிப்பதற்கு நமச்சிவாயத்துக்கும் பிடிக்கவே யில்லையாம். இப்படி, அப்படி, என்று ஏதேதோ சுற்றி வளைத்துச் சொல்லிக் கொண்டு போனான்.

அவனுடைய பேச்செல்லாம் எனக்குத் தேவையா யிருக்கவில்லை. ஏற்கெனவே நன்கு யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருந்தேன். இந்தப் பெண்ணுக்குக் கல்யாணம் பண்ணி வைப்பதென்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. இவள் சாதாரண குடித்தனக் காரப் பையன் ஒருத்தனைக் கல்யாணம் செய்து கொண்டு, அவனுக்குச் சமையல் செய்துபோட்டுக் கொண்டு, வீட்டில் நிம்மதியாக வாழக் கூடியவளும் அல்ல. இவளை இப்படியே வெகு காலம் கலியாண மில்லாமல் என் வீட்டில் வைத்துக் கொண்டிருக்கவும் முடியாது. ஆகையால்





கடவுளே பார்த்துத்தான் எங்களை அச்சமயம் இலங்கைப் பிரயாணம் அனுப்பி வைத்திருக்க வேண்டும். நீலமணியை நமச்சிவாயத்தின் கையில் பிடித்துக் கொடுத்து அனுப்பிவிட வேண்டியதுதான். நமச்சிவாயமும் அறிவாளியான பிள்ளை. அப்படி யொன்றும் ஒழுக்கம் கெட்டவன் என்று பெயர் வாங்கவில்லை. அவனுடைய நாடகக் கம்பெனியில் சேர்ந்து விட்டால் சீக்கிரத்தில் ஒரு நாள் அவர்களுக்குத் திருமணம் நடந்துதான் தீரும். கலியாணத்துக்குப் பிறகும் அவளை நாடக மேடையில் ஏற்றி நடிக்கச் செய்வது என்பது அவர்கள் இருவரையும் பொறுத்த காரியம். அவ்வளவு தூரத்துக்கு நான் இப்போது அதைப்பற்றி யோசித்துக் கொண் டிருப்பானேன்! தெய்வ சித்தத்தின்படி எல்லாம் நடந்துவிட்டுப் போகிறது......

இவ்வாறு மனத்தில் எண்ணிக் கொண்டு, முதலில் கொஞ்ச நேரம் ஆட்சேபிப்பதுபோல் ஆட்சேபித்தேன். பிறகு, "நீலமணி இஷ்டப்பட்டால் சரிதான்; நான் குறுக்கே நிற்கவில்லை" என்றேன். கடைசியில், என்னுடைய சம்மதத்தையும் கொடுத்தேன்.

நமச்சிவாயத்தைத் தனிமையில் அழைத்து, "விலையில்லாத பொக்கிஷத்தை உன்னிடம் ஒப்புவிக்கிறேன். அதைப் போற்றிப் பாதுகாப்பது உன் கடமை. அவசரப்பட்டு ஒரு தீர்மானத்துக்கும் வந்து விடாதீர்கள். கொஞ்ச நாள் நாடக மேடையோடு உங்கள் உறவு இருந்து வரட்டும். ஐந்தாறு மாதத்துக்குப் பிறகு இரண்டு பேரும் பரிபூரணமாக இஷ்டப் பட்டால் கலியாணம் செய்து கொள்ளுங்கள். அது வரையில் என் வயதான தமக்கையை நீலமணியுடன் அனுப்பி வைக்கிறேன். அவர்கள் தனி ஜாகையில் வசிக்க வேண்டும்! நானும் அடிக்கடி வந்து உங்களைப் பார்த்துக் கொண்டிருப்பேன்" என்றேன்.

நமச்சிவாயத்துக்கு அப்போதிருந்த பரவசத்தில் நான் எது சொன்னாலும்தான் ஆட்சேபிக்கப் போகிறான்! எல்லா நிபந்தனைகளையும் ஒப்புக் கொண்டான்.

அப்புறம் சில மாத காலம் நமச்சிவாயம்–நீலமணி நாடகம் தமிழ் நாட்டையே அல்லோல கல்லோலப் படுத்திக் கொண்டிருந்தது. ரயிலிலே, திருவிழாவிலே, திருமணக் கூட்டங்களிலே, நாலுபேர் சந்திக்கும் இடங்களிலெல்லாம் நமச்சிவாயம்–நீலமணி நாடகங்களைப் பற்றியே பேச்சாயிருந்தது. முக்கியமாக, 'கனவு' என்னும் ஒரு நாடகம் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இந்தக் காலத்தில் 'சமூக சித்திரம்' என்று சொல்லுகிறார்களே, அம்மாதிரி பாணியில் அமைந்தது 'கனவு' என்னும் நாடகம். அதில் ஒரு கதாநாயகனும் கதாநாயகியும் சந்திக்கிறார்கள்; காதலிக்கிறார்கள்; சிலகாலம் சந்தோஷமாக வாழ்கிறார்கள். பிறகு அவர்களைத் தொல்லைகள் தொடர்கின்றன. வாழ்க்கைத் தொல்லைகளின் காரணமாகக் காதலும் காய்ந்து போகிறது. கதாநாயகியின் பேரில் அகாரணமாகச் சந்தேகப்பட்டுக் கதாநாயகன் அவளைத் துரத்தி விடுகிறான். இதற்கிடையில் அவர்களுக்கு ஒரு குழந்தையும் பிறக்கிறது. கதாநாயகன்பேரில் பொய் வழக்கு ஜோடிக்கப் படுகிறது. அவன் சிறையில் தள்ளப்படுகிறான். கதாநாயகி பல இன்னல்களுக்கு உள்ளான பிறகு அவளுடைய அருமைக் குழந்தையுடன் வீதித் தெருவில் பிச்சை எடுத்து ஜீவிக்கும்படி நேர்கிறது.

கேளுங்கள், வேடிக்கையை! சீலமணி சிறு குழந்தையா யிருந்தபோது ரயிலில் பாட்டுப் பாடிப் பிச்சை எடுத்தாள் அல்லவா! நாடகத்திலும் அந்த வழக்கம் அவளை விடவில்லை. நாடகமேடையில் சீலமணி பிச்சை கேட்டுப் பாடிக்கொண்டு வந்தபோது சபையோர்களில் கண்ணீர் விடாதவர்கள் யாரு மில்லை. அவர்களில் பலர் காசுகளையும், கால் ரூபாய் அரை ரூபாய்களையும் மேடையின்மீது எறிவார்கள். சீலமணியைத்



தொடர்ந்து வந்த அவளுடைய பின்னஞ்சிறு மகன் (நாடகக் கதையிலே வரும் மகனைத் தான் சொல்கிறேன்) அந்தக் காசு களைப் பொறுக்கிச் சேர்ப்பான். சிலர் ரூபாய் நோட்டுகளை மேடைமீது எறிவதுண்டு. சில நாளைக்கு இப்படி மேடையில் எறியப்படும் பணமே ஐம்பது அறுபது ரூபாய் ஆகிவிடும்.

பிச்சை எடுக்கும் காட்சிக்குப் பிறகு கதாநாயகி தன் மகனுடன் தன்னந்தனியான காட்டுப் பாதையில் வழிநடந்து போவாள். இருவரும் ஒருமரத்தடியில் உட்காருவார்கள். சீலமணி களைப்புத் தாங்காமல் மரத்தில் சாய்ந்தபடி தூங்கி விடுவாள்.

அப்போது ஆகாச மார்க்கத்தில் கந்தர்வன் ஒருவன் தேவரதத்தில் ஏறிக்கொண்டு வருவான். அவன் தன் மனைவி யுடன் சண்டை பிடித்துக்கொண்டு வந்தவன். மரத்தில் சாய்ந்து கிடந்த சீலமணியைப் பார்ப்பான். இவளைக் கொண்டு தன் மனைவிக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணுவான். அதாவது அவளைக் காட்டிலும் அழகான பெண்கள் பூலோகத்திலே உண்டு என்று நிரூபித்துக் காட்ட விரும்புவான். உடனே பூமியில் இறங்கி சீலமணியின் தூக்கம் கலையாமல் அவளைத் தூக்கிக் கொண்டு கந்தர்வலோகத்தில் அவனுடைய மாளிகை யின் பூந்தோட்டத்தில் கொண்டுபோய்ச் சேர்ப்பான். அங்கே சீலமணிக்கு அவன் உபசாரம் செய்வதைக் கந்தர்வப் பெண் வந்து பார்ப்பாள். கந்தர்வனைக் கோபித்து அவனை அப்பால் போகச் செய்துவிட்டு சீலமணியிடம் அவளுடைய கதையைக் கேட்பாள். கேட்ட பிறகு அவளிடம் அநுதாபப்பட்டு, 'நீ இங்கேயே என்னுடன் இருந்துவிடு; உனக்கு ஒரு குறைவுமின்றி நான் பார்த்துக் கொள்கிறேன்' என்பாள்.

சீலமணி கந்தர்வபுரியின் அற்புத அழகு வாய்ந்த பூந்தோட்டங்களில் சித்திர விசித்திரமான பல வர்ண மலர்களையும் அந்த மலர்களைச் சுற்றிச் சுற்றிப் பறந்த பட்டுப் பூச்சிகளையும் பார்த்துக்கொண்டு உலாவி வருவாள். ஆனாலும் அவளுடைய மனத்தில் நிம்மதி ஏற்படாது. பூத்துக் குலுங்கிய மந்தார விருட்சத்தின் அடியில் நின்று ராகமாலிகையில் ஒரு விருத்தம் பாடுவாள். அந்தப் பாடலை நீங்கள் அவசியம் கேட்டிருப்பீர்கள்.

"பெற்ற தாய்தனை மக(வு) மறந்தாலும்
பிள்ளையைப் பெறுந் தாய் மறந்தாலும்
கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும்
கண்கள் நின் இமைப்பது மறந்தாலும்
உற்ற தேகம் உயிர் மறந்தாலும்
உயிரை மேவிய உடல் மறந்தாலும்
நற்றவத்தவர் இதயத்தே ஓங்கும்
நமச்சிவாயத்தை நான் மறவேனே!"

இதுதான் பாடல். இதன் கடைசி அடியான "நமச்சிவா யத்தை நான் மறவேனே" என்று சீலமணி பாடும்போது உடலும் உள்ளமும் உயிரும் உருகும்படி உணர்ச்சியுடன் பாடுவாள். அதைக் கேட்டுச் சபையோர் மனம் கசிந்து கண்ணீர் பெருக்கும் நிலையில் இருக்கும்போது, பூலோகத்தில் விடப்பட்ட கதாநாயகனையும் கந்தர்வன் அங்கே கொண்டுவந்து சேர்ப்பான். மூன்றாவது முறை சீலமணி "நமச்சிவாயத்தை நான் மறவேனே" என்று பாடும்போது, நமச்சிவாயமே அவள் பின்னால் வந்து நின்று அவளுடைய கண்களைப் பொத்துவான்.

இந்தக் கட்டத்தில் நாடகக் கொட்டகையில் உண்டான ஆரவாரத்துக்கு இணையாகத் தமிழ் நாட்டு நாடகமேடைச் சரித்திரத்தில் எப்போதும் ஏற்பட்டதில்லை. அதற்கு முன்னுமில்லை; பின்னுமில்லை.

மரத்தடியில் சாய்ந்து தூங்கிக் கொண்டிருந்த பிச்சைக் காரப் பெண் கண்ணை விழித்துப் பார்ப்பாள். அவ்வளவும் கனவு என்று உணர்ந்து ஏமாற்றம் அடைவாள். அருகிலிருந்த தன் அருமை மகனைக் காணாது திகைப்பாள். பைத்தியம் பிடித்தவள் போல ஓடுவாள். அப்போது எதிரே ஒரு சிப்பாய் அவள் மகனை அழைத்துக் கொண்டு வருவான். அந்தச் சிப்பாய் அன்று தன்னை விட்டுப் போன கணவன்தான் என்பது அறிந்து கதாநாயகி மகிழ்வாள். இத்துடன் நாடகம் முடிவுறும்.

இந்தக் 'கனவு' என்னும் சமூக சித்திரம் தமிழ் நாட்டு நாடகப் பிரியர்களை அந்த நாளில் பைத்தியமாக அடித்துக் கொண்டு வந்தது.

நமச்சிவாயம்—சீலமணியின் நாடகமேடை வெற்றியைப் பற்றிக் கேட்கக் கேட்க எனக்கு எவ்வளவோ பெருமையாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. ஆனால் அவர்களுடைய சொந்த வாழ்க்கை அவ்வளவு திருப்திகரமாக இல்லை என்று அறிந்து உள்ளூரக் குறைவு உண்டாயிற்று. ஓயாமல் அவர்கள் சண்டை பிடித்துக் கொண்டிருக்கிறார்கள் என்றும், எந்தச் சமயத்தில் என்ன நேருமோ என்று தனக்குப் பயமாயிருக்கிறதென்றும் என் தமக்கை எனக்கு அடிக்கடி சொல்லி அனுப்பிக் கொண்டிருந்தாள். முதலில் சில காலம் நான் அதை அலட்சியம் செய்து வந்தேன். காலம் போகப் போக எல்லாம் சரியாய்ப் போய் விடும் என்று மனத்தைத் திருப்தி செய்து கொண்டிருந்தேன். ஆனால் தமக்கை சொல்லி அனுப்புவது நின்றபாடில்லை.

கடைசியாக, இனி அலட்சியம் செய்வதற்கில்லை என்று தோன்றி, ஒரு நாள் சென்னைக்குப் போய்ச் சேர்ந்தேன். அப்போது சென்னை ஒற்றைவாடையில் நாடகம் நடந்து கொண்டிருந்தது. பார்க்டவுன் சந்து ஒன்றில் நாடகக் கம்பெனியின் ஜாகை. பக்கத்திலேயே சீலமணியின் வீடு. நான் அங்கே போனபோது உள்ளே இருந்து பெரும் கூக்குரல் வந்து கொண்டிருந்தது. சீலமணி-நமச்சிவாயம் இவர்களுடைய குரல்கள்தான். வீட்டுக்குள் நுழையும்போது எனக்கு நெஞ்சு திக், திக்கென்று அடித்துக் கொண்டது. என்னைப் பார்த்ததும் இருவரும் சண்டையை நிறுத்தி முகமலர்ச்சியுடன் என்னை வரவேற்றார்கள். சாமான்கள் உள்ளே வந்து சேர்ந்து வண்டிக்காரனைத் திருப்பி அனுப்பிய பிறகு, "நான் வரும்போது ஒரே கூக்குரலாயிருந்ததே, என்ன விசேஷம்!" என்று கேட்டேன்.

"நீங்களே கேளுங்கள், மாமா! உங்கள் அருமை மகளை நீங்களே கேளுங்கள்" என்றான் நமச்சிவாயம்.

"ராகமாலிகையை எந்த ராகத்தில் முடித்தால் என்ன, மாமா! 'பேஹாக்'கில் முடிக்காமல் மத்தியமாவதியில் முடித்து விட்டதாகச் சண்டை பிடிக்கிறார்!" என்றாள் சீலமணி.

"எந்த ராகத்தில் முடித்தாலும்தான் ஒன்றுமில்லையே! மத்தியமாவதியில் முடிக்காமல் நான் சொன்னபடி 'பேஹாக்'கில் முடிப்பதுதானே!" என்றான் நமச்சிவாயம்.

"பாடுகிறது நான்தானே! எனக்கு இஷ்டமான ராகத்தில் நான் பாடுகிறேன்" என்றாள் சீலமணி.

"பாடுகிறவர்களுக்காகப் பாட்டா! கேட்கிறவர்களுக்காகப் பாட்டா! நீங்கள் சொல்லுங்கள், மாமா!" என்றுள் கமலலோசனம்.

"கேட்கிறவர்கள் அப்படி. சொன்றும் மதிப்பாகவுமிலைக் கேட்டுக் காதைப் பொத்திக் கொள்ளவில்லையே! கொட்டகை இடிந்து விழும்படி சபையோர் கரகோஷ ஆரவாரம் செய்து மகிழ்ந்தார்களே!" என்றுள் நீலமணி.

"உன் பாட்டைக் கேட்டா கரகோஷம் செய்தார்கள்! நான் மேடையில் அச்சமயம் தோன்றியதற்காக அல்லவோ கரகோஷம் செய்தார்கள்!" என்றுள் கமலலோசனம்.

"அப்படி இருக்கும்போது, நான் எந்த ராகத்தில் பாடினுல் என்ன! எப்படிப் பாடினுல் என்ன!" என்றுள் நீலமணி.

"மாமா! உங்கள் மகளுக்குக் கர்வம் அசாத்தியமாகத் தலைக்கேறிவிட்டது. இனி உருப்படப் போவதேயில்லை. ஊரில் உள்ள முட்டாள் பயல்கள் எல்லாம் 'ஆஹா' என்று புகழ்ந்து இப்படி இவளைக் கர்வம் பிடிக்கச் செய்து விட்டார்கள்!" என்று குறைப்பட்டான் கமலலோசனம்.

"ஊரில் உள்ளவர்கள் எல்லாம் முட்டாள்கள் என்றுல், அவர்களுக்காகத்தானே நாம் நாடகம் ஆடுகிறோம்! நாம் மட்டும் என்ன!" என்றுள் நீலமணி.

"கேட்டீர்களா, மாமா! இவள் எனக்கு முட்டாள் பட்டம் சூட்டுவதை! இவளை மேடையில் ஏற்றி நாடெங்கும் புகழ் பெற்ற நாடகக்காரியாக்கியதற்கு எனக்கு இதுவும் வேண்டும், இன்னும் வேண்டும்! இல்லையா!" என்றுள் கமலலோசனம்.

அதற்குப் பதில் நீலமணி என்னவோ சொல்லத் தொடங்கிச் சொல்ல முடியாமல் விம்மி அழ ஆரம்பித்து விட்டாள்.

இதையெல்லாம் கேட்டு எனக்கு உண்மையிலேயே சிரிப்பதா, அழுவதா என்று தெரியாமல் போய்விட்டது. அந்தச் சங்கீதமான நிலையில் சிரித்துத்தான் வைப்போமே என்று உடம்பு குலுங்கச் சிரித்தேன்.

"அட அசட்டுக் குழந்தைகளா!" என்று இரண்டு பேரையும் மாற்றி மாற்றிப் பார்த்துப் பார்த்துச் சிரித்தேன்.

"மாமா! எங்களைப் பார்த்து நீங்கள் மட்டுந்தானு சிரிப்பீர்கள்! ஊரே சிரிக்கும்!" என்றுள் கமலலோசனம்.

"ஆமாம், தம்பி! நீங்கள் இப்படி அற்ப விஷயத்துக்குப் பெரிய சண்டையாகப் போடுகிறீர்கள்! இதன் உண்மை தெரியாதவர்கள் ஒன்றைப் பத்தாக்கி ஊரெல்லாம் டமாரம் அடித்து வீண் வதந்திகளைப் பரப்பி விடுவார்கள். பிறகு, ஊரே உங்களைப் பார்த்துச் சிரிக்கத் தொடங்கி விடும்! ஜாக்கிரதை!" என்றேன்.

உடனே பேச்சை மாற்றினேன். யோக க்ஷேமங்களை விசாரித்தேன். அவர்களுடைய நாடகங்களைப் பற்றி நாடெல்லாம் புகழ்வதைப் பற்றியும் கூறினேன்.

இரண்டு பேரையும் தனித்தனியாகப் பார்த்து நல்ல வார்த்தையாகப் புத்திமதி கூறினேன். நான் கூறியவற்றை இரண்டு பேரும் அப்படி அப்படியே ஒப்புக்கொண்டார்கள். தங்களுடைய குற்றத்தை உணர்ந்தவர்கள் போல் பேசினுர்கள்.

"ஒரு நல்ல நாள் பார்த்து ஏதாவது ஒரு கோயிலுக்குப் போய்க் கலியாணம் செய்துகொண்டு விடுங்கள். குழந்தை ஒன்று பிறந்து விட்டால் அப்புறம் சின்ன விஷயங்களைப் பற்றிச் சண்டைபோட அவகாசம் இராது" என்றேன்.

இருவரும் ஒப்புக்கொண்டு என்னையே முகூர்த்த நாள் பார்க்கும்படி சொன்னுர்கள். நான் உடனே மறு வாரத்திலேயே முகூர்த்த நாள் குறிப்பிட்டேன். இரண்டு பேரையும் பொறுக்கி யெடுத்த சில சிநேகிதர்களையும் மட்டும் திருநீர்மலைக்கு அழைத்துச் சென்று திருமணத்தைச் சுருக்கமாக முடித்து வைத்தேன். பிறகு, நிம்மதியுடன் ஊருக்குத் திரும்பினேன்.

ஐந்தாம் அத்தியாயம்

திருமணத்துக்கு நான் குறிப்பிட்ட முகூர்த்த நாளில் என்ன கோளாறு இருந்ததோ தெரியவில்லை. நான் ஊருக்குத் திரும்பிச் சில நாளைக்குள்ளே இடிவிழுந்தாற் போன்ற செய்தி சென்னையிலிருந்து வந்து விட்டது. நீலமணி கடிதத்துக்கு மேல் கடிதமாக எழுதியிருந்த நாலைந்து கடிதங்களையும் க்ஷேத்திரம் உற்சவக் கச்சேரிக்குப் போய்த் திரும்பி வந்த பிறகு சேர்ந்தாற் போல் ஒன்றன் பின் ஒன்றாக நான் படிக்க நேர்ந்தது; படித்துத் துயரமும் பீதியும் கொள்ளும்படி நேர்ந்தது.

நான் சென்னைக்குப் போயிருந்தபோதே கமலலோசனத்தின் தொண்டை கம்மி இருந்ததையும் அவன் கனைத்துக் கனைத்து அடிக்கடி இருமியதையும் கவனித்தேன். உடம்பும் மெலிந்து இளைத்திருந்தது. சென்னையில் நாள்தோறும் இடைவிடாமல் நாடகம் நடந்து வந்ததுதான் இதற்குக் காரணம் என்று எண்ணிக்கொண்டேன்.

திருமணக் கையோடு கமலலோசனத்துக்கு உடம்பு ரொம்ப பலவீனமாகிக் ஜுரமும் வந்து விட்டதாம். டாக்டரை அழைத்துப் பார்த்ததில் அவர் அந்தப் பயங்கரமான செய்தியைச் சொன்னாராம். பையனுக்கு டி. பி. வியாதி என்றும், உடனே நாடகம் ஆடுவதை நிறுத்திப் பூரண ஓய்வு எடுக்க வேண்டும் என்றும், தகுந்த சிகிச்சையும் செய்துகொள்ள வேண்டும் என்றும், இல்லாவிடில் வியாதி முற்றி உயிருக்கே அபாயம் வந்துவிடும் என்றும் சொன்னாராம். அந்த நாளில் இப்போது வந்திருப்பது போன்ற 'ஸ்ட்ரெப்டோமைஸின்' முதலிய மருந்துகள் இல்லை. டி. பி. வியாதி வந்து விட்டது என்றால் பிழைப்பது துர்லபம் என்றுதான் அர்த்தம்.

ஆனால் கமலலோசனமோ டாக்டர் சொல்வதை நம்பாமல் "எனக்கு டி. பி. யும் இல்லை; கி. பி. யும் இல்லை" என்று சொல்லி, மேடை ஏறியே தீருவேன் என்று பிடிவாதம் பிடித்தான். இதன் பயனாக, ஆறே அடியோடு மேடு தள்ளி விட்டது.

"மாமா! உடனே புறப்பட்டு வாருங்கள்! தாமதித்தால் எங்களை உயிரோடு காணமாட்டீர்கள்!" என்று நீலமணி அலறிப் புடைத்துக் கொண்டு கடைசிக் கடிதத்தில் எழுதியிருந்தாள்.

நானும் அலறிப் புடைத்துக் கொண்டு புறப்பட்டுப் போனேன். அங்கே எல்லாம் அல்லோல கல்லோலமாகத்தான் இருந்தது. நாடகத்தை நிறுத்தி ஒருவாரம் ஆயிற்று. நாடகக் கம்பெனியைச் சேர்ந்தவர்கள் எல்லாரும் என்ன செய்வதென்று தெரியாமல் விழித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுக்கெல்லாம் மாதக் கணக்காகச் சம்பளம் கொடுபடவில்லை. கொட்டகை முதலாளியும் இன்னும் பலரும் தங்களுக்குச் சேர வேண்டிய பாக்கிக்காக வந்து கொண்டிருந்தார்கள்.

நாடகக் கம்பெனிகளுக்குப் பெயரும் புகழும் பெருகுவதை யொட்டிப் பணச் செலவும் அதிகமாகிக் கொண்டு வரும். ஆள்கள் அதிகமாகச் சேர்ந்துகொண்டு வருவார்கள். ஆடம்பரம் பெருகிக்கொண்டு வரும். காட்சி ஜோடனைகளில் பணம் ஏராளமாகப் போய்க் கொண்டே இருக்கும். சுற்றி உள்ளவர்கள் பிய்த்துப் பிடுங்கிக் கொண்டிருப்பார்கள்.

திடீரென்று ஒரு நாள் கம்பெனியை மூடும்படி நேர்ந்தால், கம்பெனி சொந்தக்காரரின் கதி அதோகதிதான்.

ஏதோ கடவுள் என்னை அச்சமயத்தில் அங்கே கொண்டு போய்ச் சேர்த்தார். நான் கணக்கு வழக்குகள் பார்த்து, கொடுக்க வேண்டியவர்களுக் கெல்லாம் ஒன்றுக்குப் பாதி



கொடுத்துத் தீர்த்தேன். மொத்த முடிவில், கமலலோசனத்துக்குக் கடன் பத்தாயிரம் ரூபாய்க்கு மேல் தங்கி நின்றது.

கும்பகோணத்தில் எனக்குத் தெரிந்த நல்ல டாக்டர் இருப்பதாலும், அவரிடம் வைத்தியம் பார்த்துக் கொள்ளலாம் என்றும் சொல்லிக் கமலலோசனத்தையும் நீலமணியையும் அழைத்துக்கொண்டு போனேன். கும்பகோணத்தில் எனக்கு ஒரு வீடு இருந்தது. அந்த வீட்டிலேயே அவர்களுக்கு ஜாகை ஏற்படுத்திக் கொடுத்தேன்.

டாக்டர் ஒரு மாதம் வைத்தியம் பார்த்த பின் "நெருக்கடியான நிலைமை நீங்கி விட்டது; இனிமேல் நான் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. நமச்சிவாயத்தை மதனப்பள்ளிக்கு அழைத்துப் போய் அங்கே இரண்டு வருஷம் இருக்கச் செய்ய வேண்டும்" என்று சொன்னார்.

இந்தக் காலத்தில் புண்ணியவான்கள் ஜில்லாவுக்கு ஒரு க்ஷயரோக வைத்தியசாலை ஏற்படுத்தி வருகிறார்கள். அப்போதெல்லாம் மதனப்பள்ளிக்குப் போனால்தான் அந்தக் கொடிய வியாதிக்கும் சிகிச்சை என்று இருந்தது.

மதனப்பள்ளிக்குப் போய் இரண்டு வருஷம் இருப்பதற்கு ஐயாயிரம் ரூபாய் பணம் வேண்டும். இதற்கு எங்கே போவது என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் எதிர்பாராத உதவி ஒன்று கிட்டியது. கும்பகோணத்தில் அப்போது வேறொரு நாடகக் கம்பெனியார் நாடகம் நடத்திக் கொண்டிருந்தார்கள். நமச்சிவாயத்தின் நிலைமையை அறிந்து அவனுக்கு உதவி செய்யும் முறையில் அவர்கள் ஒரு யோசனை கூறினார்கள். அதாவது நீலமணி அவர்களுடைய கம்பெனியில் பத்து 'ஸ்பெஷல்' நாடகங்களில் நடித்தால், நாடகத்துக்கு ஐந்நூறு ரூபாய் வீதம் ஐயாயிரம் ரூபாய் முன் பணமாகவே தருவதற்கு முன் வந்தார்கள்.



நாடகத்துக்கு வசூலே சாதாரணமாக ஆயிரம் ரூபாய்க்கு மேல் ஆகாது. நீலமணிக்கு மட்டும் ஐந்நூறு ரூபாய் என்றால், உதவி செய்யும் நோக்கத்துடனே தான் அவர்கள் சொன்னார்கள் என்பதைப் பற்றிச் சந்தேகமே இல்லை. இதை நமச்சிவாயமும் உணர்ந்தான். 'ஸ்பெஷல்' நாடகங்களில் நீலமணி நடிப்பதற்கு அவன் சம்மதம் கொடுத்தான்.

ஆனால் நீலமணி பிடிவாதமாக மறுதளித்தாள். நமச்சிவாயம் இருக்கும் போது இன்னொருவனுடன் மேடையில் ஏறி நடிக்க முடியாது என்று சொன்னாள்.

"அப்படியானால் நான் செத்துத் தொலைந்து போய்விட வேண்டுமென்கிறாயா! அதற்கும் பிறகு இன்னொருவனுடன் நடிப்பாயா!" என்று ஏடாகூடமாய்ப் பேசினான் நமச்சிவாயம். நீலமணி ஆத்திரம் தாங்காமல் பொருமி அழுதாள்.

மறுபடியும் நான் தலையிட்டுத் தகராறைத் தீர்த்து வைத்தேன். நீலமணியைச் சமாதானப் படுத்தி அவள் நடிக்க ஒப்புக் கொள்வது தான் உசிதம் என்றும், நமச்சிவாயத்தினிடம் அவளுடைய உண்மை அன்புக்கு அதுதான் ருசுவாகும் என்றும் எடுத்துக் கூறி ஒப்புக் கொள்ளச் செய்தேன்.

நீலமணியின் 'ஸ்பெஷல்' நாடகங்கள் பத்தும் இரண்டு மாதத்துக்குள் நடைபெறுவதாக ஏற்பாடு. ஒன்றைவிட ஒன்று மிஞ்சிய மகத்தான வெற்றியாக நாடகங்கள் நடந்து வந்தன. இந்த 'ஸ்பெஷல்' நாடகங்களின் போது தான் நீலமணிக்குச் 'சின்ன பாலாமணி' என்று சிலர் பெயர் கொடுத்தார்கள். கடலூரிலிருந்தும் திருச்சிராப்பள்ளியிலிருந்தும் மதுரையிலிருந்தும் நாகப்பட்டினத்திலிருந்தும் நாடகம் பார்க்க ஜனங்கள் வந்தார்கள். இந்த ஜனங்கள் வழக்கமாக வரும் ரயில்களுக்கு 'நீலமணி ஸ்பெஷல்' என்ற பெயரும் ஏற்பட்டது.

இவ்வளவு அமோகமான வெற்றிக்கு மத்தியில் நமச்சிவாயத்தின் மனநிலை மட்டும் நாளுக்குநாள் கெட்டுப் போய் வந்தது. முதலில் நீலமணி நடிப்பதற்குச் சம்மதம் கொடுத்தவன், தான் இல்லாமலே அவள் நாடகத்தில் வெற்றி அடைந்து வருகிறாள் என்பதைப் பார்க்கப் பார்க்க எரிச்சல் அடைந்தான். அவனுடைய எரிச்சலை வளர்ப்பதற்கு முக்கியமாக ஒரு காரணம் ஏற்பட்டது. "பெற்ற தாய்தனை மக(வு) மறந்தாலும்" என்னும் பாட்டில் தன்னுடைய பெயர் வருவதால் அதை மட்டும் நீலமணி பாடக் கூடாது என்று அவன் சொல்லியிருந்தான். பாடுவதில்லையென்று அவளும் உறுதி கொண்டிருந்தாள். ஆனால் நாடகத்துக்கு வரும் ரசிகர்களின் இயல்பு அபூர்வமானது. அவர்களுக்குத் தங்கள் அதிகாரத்தை நிலைநாட்டுவதில் ஆர்வம் அதிகம். அவர்கள் கோரிக்கையை நடிகர்கள் நிறைவேற்றாவிட்டால் ரகளை செய்து விடுவார்கள். முதல் நாள் நாடகத்திலேயே சிலர் "பெற்ற தாய்தனை" என்று கத்தினார்கள். அதை நீலமணி பொருட்படுத்தாமல் வேறொரு விருத்தம் பாடிச் சமாளித்தாள். மறுநாள் சபையோர் அதற்கு இடம் கொடுக்கவில்லை. மூலைக்கு மூலை எழுந்து நின்று "பெற்ற தாய் பாடு!" என்று கூச்சலிட்டதுடன், பாடாவிட்டால் உட்கார மாட்டோம் என்று பிடிவாதம் பிடித்தார்கள். நாடக நிர்வாகிகள் நீலமணியிடம் "பாடாவிட்டால் கலகம் உண்டாகும்" என்று எச்சரித்ததின் பேரில் அவளும் பாட நேர்ந்தது. அந்தப் பாட்டைப் பாடும்போது இயற்கையாக அவளுடைய உணர்ச்சி மிகுந்திருந்தபடியால் ராக மாலிகை பிரமாதமாக அமைந்து விட்டது. ஜனங்களும் கையைக் கொட்டித் தீர்த்து விட்டார்கள்!

அதற்குப் பிறகு நீலமணி ஒவ்வொரு நாளும் சபையோர் கேட்பதற்கு இடம் வைக்காமல் அந்தப் பாட்டைப் பாடி விட்டாள்.

"பாடாவிட்டால் கலகம் நேர்ந்து நாடகம் குழப்பத்தில் முடிந்திருக்கும்" என்பதை நமச்சிவாயத்துக்கு அவள் எடுத்துச் சொன்னாள். அதை அவனும் வெளிப்படையில் ஒப்புக் கொண்டான். இருந்தாலும் உள்ளுக்குள் புகைந்து கொண்டிருந்தான்.

நீலமணி நாடகக் கொட்டகைக்குப் போய் வெற்றி மாலை சூடிக்கொண்டு திரும்பி வருவதும் தான் வீட்டிலேயே உட்கார்ந்திருக்க வேண்டியிருப்பதும் அவனுடைய மன வேதனையையும் எரிச்சலையும் நாளுக்கு நாள் அதிகமாக்கிக் கொண்டு வந்தன.

இரண்டொரு முறை அவனை நான் பார்க்கப் போயிருந்தேன். ஜாக்கிரதையாக நாடகத்தைப் பற்றிய பேச்சையே எடுக்காமல், மேலே அவனுக்கு நடக்க வேண்டிய சிகிச்சையைப் பற்றிப் பேசினேன். டாக்டரைக் கொண்டு மதனப்பள்ளிக்குக் கடிதம் எழுதச் சொல்லியிருப்பதாகக் கூறினேன்.

"மதனப்பள்ளிக்கு நான் எங்கே போகப் போகிறேன்! மரணப் பள்ளிக்குத்தான் போகப் போகிறேன்!" என்றான்.

"சீச்சீ! இது என்ன பேச்சு! தம்பி!" என்று சமாதானமாக ஏதோ அவனுக்குச் சொல்லி விட்டு ஊருக்குத் திரும்பினேன்.

எனக்கும் என்னுடைய ஜோலிகள் இருந்தன. நான் இவனையே எப்போதும் கட்டிக் காத்துக் கொண்டிருக்க முடியாது அல்லவா! என்னுடைய சம்பாத்தியத்தைக் கொண்டு பிழைக்க வேண்டிய ஜீவன்கள் பதினைந்து பேர் என் குடும்பத்தில் இருந்தார்கள். நான் கச்சேரிகளுக்குப் போய் வராவிட்டால் என் குடும்பம் நடப்பது எப்படி!

ஸ்பெஷல் நாடகங்கள் எட்டு முடிந்த பிற்பாடு, சிக்கல் உற்சவத்துக்குப் போய்விட்டு நான் ஜயம்பேட்டைக்குத் திரும்பி வந்தேன். கும்பகோணத்தில் நிலைமை மிக்க நெருக்கடி என்று தெரிந்தது. என் தமக்கை கூறினாள்:—"அந்தப் பையன் ஒவ்வொரு சமயம் பெட்டியைத் தூக்கிக்கொண்டு தேசாந்தரம் போகிறேன் என்று கிளம்புகிறான். ஒரு சமயம் 'நீ மருந்து வைத்துத்தான் என் உடம்பு கெட்டு விட்டது' என்கிறான். துப்பாக்கியை எடுத்துக் காட்டிச் சுட்டு விடுவேன் என்று பயமுறுத்துகிறான். இன்னொரு சமயம் கையில் அக்கினித் திராவகத்தை வைத்துக் கொண்டு 'குடித்துச் செத்துப் போகிறேன்' என்கிறான். வீடு ஒரே பயங்கரமாயிருக்கிறது. எந்த நிமிஷம் என்ன விபரீதம் நேருமோ தெரியவில்லை. நீ உடனே போய்ப் பார், தம்பி! அவர்களைப் பிரித்துத் தனித் தனியே விட்டு விட்டால் கூடத் தேவலை போலிருக்கிறது!" என்றாள்.

என் இரட்டை மாட்டுப் பெட்டி வண்டியை உடனே பூட்டச் சொல்லிக் கும்பகோணத்துக்குக் கிளம்பினேன். அன்றைக்குத் தீபாவளிக்கு முதல் நாள். கும்பகோணத்து வீதிகள் ஒரே கோலாகலமாயிருந்தன. எங்கே பார்த்தாலும் டப் டுப், டப் டபார் என்று வேட்டுகள் வெடித்துக் கொண்டிருந்தன. கம்பி மத்தாப்புக்களிலிருந்து பொழிந்த வர்ண ஒளிப் பொறிகள் கண்களுக்கு விருந்தாயிருந்தன. விஷ்ணு சக்கர வாணங்கள் பூமியிலிருந்து சுழன்று சுழன்று வானை நோக்கிச் சென்று படார் என்று வெடித்து மறைந்தன. இவற்றிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த புகை மூட்டம் ஏறி மூச்சுத் திணறும்படி செய்தது. ஆண்களும் பெண்களும் குழந்தைகளும் புது வஸ்திரங்களும் வாணங்களும் வாங்கிக் கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தார்கள். கடைத் தெருக்கள் ஜே ஜே என்று இருந்தன.

ஆனால் என் நெஞ்சு மட்டும் திக், திக் என்று அடித்துக் கொண்டிருந்தது. அந்தப் பாவி - சண்டாளன் என் அருமைக் குழந்தையை என்ன செய்யப் போகிறானோ, என்னமோ என்று எண்ணியபோதெல்லாம் அடி வயிறு கிளம்பி எழுந்து மார்பை அடைத்தது. ஒவ்வொரு தடவை பட்டாசு வெடித்தபோதும் என் தலையில் ஏதோ வெடித்ததுபோல் தோன்றியது.

கடைத் தெருவில் சற்று வண்டியை நிறுத்தி நமச்சிவாயத்துக்குப் புது வேஷ்டியும் சிவகாமிக்குப் புதுச் சேலையும் வாங்கிக் கொண்டு போனேன். வீட்டை நெருங்க நெருங்க, என் நெஞ்சுத் துடிப்பு அதிகமாகிக் கொண்டிருந்தது.

உடனேயே தூலம்பேட்டைக்குத் திரும்ப நான் விரும்பியபடியால், வண்டியைப் பூட்டு அவிழ்க்காமல் அப்படியே நிறுத்தி வைக்கச் சொல்லிவிட்டு, புது வஸ்திரப் பொட்டணங்களுடன் வீட்டுக்குள் நுழைந்தேன்.

உள்ளே இரைச்சல் கேட்டுக் கொண்டிருந்தது. வீட்டு நடையில் சற்று தயங்கி நின்றேன்.

"விடுகிறாயா, மாட்டாயா!"

"விடமாட்டேன்!"

"என்னைத் தடுக்க உனக்கு என்ன அதிகாரம்!"

"என்னைத் தாலி கட்டி நீங்கள் கலியாணம் செய்து கொள்ள வில்லையா! அந்த அதிகாரந்தான்!"

"நீ எனக்கு மனைவியும் அல்ல; நான் உனக்குப் புருஷனும் அல்ல. உன் மாமாவுக்காகச் செய்த காரியம். நான் இப்போது புறப்பட்டுத்தான் போவேன். ரயிலுக்கு நேரமாகி விட்டது. வழியை விடு! இப்படி அதைக் கொடு!"

"விடமாட்டேன்; கொடுக்க மாட்டேன்!"

"கொடுக்கா விட்டால் உன்னை இதோ இந்தக் கைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்று விடுவேன்!"

"பேஷாகச் சுட்டுக் கொன்று விட்டுப் போங்கள்!"

நமச்சிவாயம் துப்பாக்கியால் சுடுவதாகப் பயமுறுத்தியதை நான் அவ்வளவாகப் பொருட்படுத்தவில்லை. நாடக மேடையில் உபயோகப்படுத்தும் விளையாட்டுத் துப்பாக்கி ஒன்று அவன் வைத்திருந்தான். அதில் குண்டு கிடையாது. கட்டால் வெளிச்சமும் புகையுந்தான் வரும்!......

டப்! டுப்! டப்! டபார்!......

"வீல்" என்று ஒரு கோரமான குரல் காதில் விழுந்தது. யாரோ தடால் என்று விழும் சத்தமும் கேட்டது.

அலறிப் புடைத்துக் கொண்டு உள்ளே ஓடினேன். சிவகாமி அலங்கோலமாகத் தரையில் விழுந்து கிடந்தாள். அவள் உடம்பு துடித்துக் கொண்டிருந்தது. அவள் முகத்தைப் பார்த்ததும் "குழந்தே!" என்று நான் அலறினேன். உடனே அவள் அருகில் பாய்ந்து சென்று உட்கார்ந்தேன்.

"என்ன, மாமா! என்ன?" என்று கேட்டுக் கொண்டே நமச்சிவாயம் அருகில் உட்கார வந்தான்.

"அடபாவி! சண்டாளா! துரோகி! என்ன காரியம் செய்து விட்டாய்!" என்று அவன் தோளைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கித் தூரத் தள்ளினேன்.

நமச்சிவாயம் ஆவேசம் வந்தவன்போல் "அடே! யாரடா என்னைப் பிடித்துத் தள்ளுவதற்கு!" என்று பலமாகக் கூச்சலிட்டுக்கொண்டு திரும்பி வந்தான்.

என்னுடைய கோபம் எல்லையைக் கடந்துவிட்டது. உடனே குதித்து எழுந்து நமச்சிவாயத்தின் கழுத்தைப் பிடித்துக்கொண்டு,

"அட பாதகா! அவளுடைய வாழ்க்கையைத்தான் பாழாக்கி விட்டாய்! அவள் உயிரோடிருப்பது கூட உனக்குப் பொறுக்க வில்லையா!" என்று சொல்லிக்கொண்டே அவன் கழுத்தைப் பிடித்து இறுக்கத் தொடங்கினேன். நான் செய்வது என்ன வென்று எனக்கே தெரியவில்லை. நமச்சிவாயத்தின் விழிகள் பிதுங்கின. அவன் தொண்டையிலிருந்து உருத் தெரியாத பல மாதிரியான சத்தங்கள் எழுந்தன.

கடவுள் என்னைக் கொலைகாரன் ஆகாமல் தடுத்தாட்கொண்டார்! விசித்திரமான, எதிர்பாராத முறையில் குறுக்கிட்டார்.

அண்டபகிரண்டங்கள் வெடித்து விட்டன என்று சொல்லும்படியான ஒரு சத்தம் எழுந்தது. வீட்டின் முன்புறத்திலிருந்து தான்! ஆயிரம் பீரங்கிகள் சேர்ந்தாற்போல் கிடுத்து இடித்தது போன்ற சத்தம். நூறு எம்டன் குண்டுகள் ஒருமிக்க வெடித்தது போன்ற சத்தம். என் காதின் நரம்புகள் தெறித்து அறுபட்டு விட்டதாகத் தோன்றியது. என் மண்டையே ஆயிரம் சுக்கலாகி விட்டது போன்ற உணர்ச்சி உண்டாயிற்று. அந்த வெடிச் சத்தத்தின் அதிர்ச்சியினால் நமச்சிவாயத்தின் கழுத்திலிருந்து என் கைகள் வெளி வந்தன. இரண்டு பேரும் தூரதூரப் போய் விழுந்தோம். ஒரு நிமிஷ நேரக் குழப்பத்துக்குப் பிறகு நேர்ந்தது இன்னது என்பது என் அறிவுக்குப் புலனாகி விட்டது. அந்த வீட்டின் முன் அறை மட்டும் என் சிநேகிதர் ஒருவர் வசத்தில் இருந்தது. அவர் பலசரக்கு வியாபாரி. தீபாவளி சமயத்தில் அவர் பட்டாசுக் கட்டுக் கடையும் நடத்துவார். பெரிய பெரிய கள்ளிப் பெட்டிகளில் வரும் பட்டாசுக் கட்டுகள், மத்தாப்புப் பெட்டிகளை அந்த அறையில் போட்டுப் பூட்டி வைத்திருப்பார். கொஞ்சம் கொஞ்சமாகத் தேவைப்படும் போது இங்கிருந்து விற்பனைக் கடைக்கு எடுத்துப் போவார்.

அந்த அறைக்குள் எப்படியோ நெருப்புப் பொறி பறந்து விழுந்து, பட்டாசுப் பெட்டிகளில் தீப்பிடித்து விட்டது என்பதை அறிந்து கொண்டேன்.

மறு நிமிடம் வீடு ஒரே புகை மயமாகி விட்டது. முன் அறையின் கூரை தீப்பற்றி எரிவதையும் கண்டேன். வீட்டைப் பற்றி நான் அப்போது கவலைப்படவில்லை. வீடு, விபத்தினால் விளையக் கூடிய மற்றத் தொல்லைகளைப் பற்றியும் சிந்திக்கவில்லை. உடனே குதித்து எழுந்து சிவகாமியை எடுத்துத் தோளின் மீது போட்டுக் கொண்டு புகை - நெருப்பின் வழியாக வாசற் பக்கம் ஓடினேன். தயாராய் நின்ற வண்டியில் அவளைப் போட்டு விட்டு நானும் ஏறிக் கொண்டேன். "ஓட்டு! ஓட்டு! டாக்டர் வீட்டுக்கு ஓட்டு!" என்று கத்தினேன்.

பத்து நிமிஷத்துக்கெல்லாம் வண்டி டாக்டர் ராம சர்மாவின் வீட்டு வாசலில் போய் நின்றது. அந்தப் புண்ணியவான்,—அவரைப் போல் தயாள குணமுள்ள டாக்டர் இப்போது யார் இருக்கிறார்கள்!—சிவகாமியை வண்டிக்குள்ளேயே பார்த்து விட்டு, "நேரே ஆஸ்பத்திரிக்கு விடுங்கள்!" என்றார். அவரும் மோட்டாரில் இன்னொரு டாக்டரையும் நர்ஸையும் கூட்டிக் கொண்டு ஆஸ்பத்திரிக்கு வந்து சேர்ந்தார். தீபாவளி ராத்திரி யாயிற்றே என்று பாராமல் இரவெல்லாம் கண்விழித்து சிவகாமிக்குச் சிகிச்சை செய்தார்கள்.

நான் உணர்ச்சியும் உயிரும் அற்றவனாக ஆஸ்பத்திரி வாசலிலேயே காத்திருந்தேன்.

"பிழைத்தாள் புனர்ஜன்மந்தான்!" என்றார் டாக்டர். ஆனாலும் பிழைக்க வைத்து விட்டார். ஒருவாரத்துக்கெல்லாம் உயிருக்கு அபாயமில்லை என்று தெரிவித்தார்.

ஆயினும் ஆஸ்பத்திரியிலிருந்து சிவகாமியை தூலம்பேட்டைக்கு அழைத்துப் போவதற்கு ஆறுமாதம் ஆயிற்று.

கும்பகோணத்தில் என் வீட்டில் லைசென்ஸ் இல்லாமல் வெடிக்கும் சாமான்களை வைத்திருந்ததற்காக என்பேரில் ஒரு வழக்கு வந்தது. அதற்கு நான் பொறுப்பாளி இல்லை என்று வக்கீல் வைத்து வாதாடித் தப்பித்துக் கொண்டேன்.

ஆறு மாதத்துக்குப் பிற்பாடு இன்னொரு தொல்லை நேர்ந்தது. திரும்பிக் கட்டப்பட்ட அதே வீட்டில் நாட்டு வெடிகுண்டுகள் இரண்டு வெடித்தன. 'கும்பகோணம் வெடிகுண்டு வழக்கு' என்று நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அந்த வழக்கிலும் என்னைப் போலீஸார் சம்பந்தப் படுத்தினார்கள். நான் மகாத்மா காந்தி சொன்னதில் பக்தியுள்ளவன் என்றும் அஹிம்சாவாதி என்றும் நகரில் நூறு பிரமுகர்கள் சாட்சி கூறினார்கள். இதனால் அந்த வழக்கிலிருந்தும் தப்பிப் பிழைத்தேன்.

பிற்பாடு, ஒரு தம்புத் தண்டாவுக்கும் போகாமல், மற்றவர்கள் காரியத்தில் தலையிடாமல், 'நான் உண்டு; என் தொழில் உண்டு' என்று மானமாகக் காலக்ஷேபம் செய்து வருகிறேன்...

ஆறாம் அத்தியாயம்

கந்தப்பப் பிள்ளையின் கதை முடிந்தது. எழும்பூர் ரயில் நிலையமும் வந்து சேர்ந்தது.

நாங்கள் பிரிந்துபோக நேர்ந்தபோது, "கந்தப்பப் பிள்ளை! இப்போது நீலமணி எங்கே இருக்கிறான்! என்ன செய்து கொண்டிருக்கிறான்!" என்று கேட்டேன்.

"சில வருஷகாலம் பிரம்மஹத்தி பிடித்தவன் போலிருந்தான். பிற்பாடு சங்கீதத்தில் கவனம் செலுத்தினான். நல்ல திறமை பெற்று விட்டான். ஆனால் வெளியில் வந்து பாடுவதில்லை. எப்படி வருவான்! ரேடியோ என்பதாக ஒன்றைக் கண்டு பிடித்தார்களே, அந்தப் புண்ணியவான்கள் நன்றாயிருக்க வேணும்! சில சமயம் நல்ல சங்கீதத்துக்கும் ரேடியோவில் இடம் கொடுக்கிறார்கள். மூன்று மாதத்துக்கு ஒரு தடவை போய் ரேடியோவில் கச்சேரி செய்துவிட்டு வருகிறான். சங்கீதம் ஒன்றுதான் இப்போது அவனுக்கு ஜீவாதாரமாயிருந்து வருகிறது!" என்றார் கந்தப்பப் பிள்ளை.

"சங்கீதத்துடன் தங்களுடைய அன்பும் ஆதரவும் சேர்ந்திருக்கின்றன அல்லவா!" என்றேன் நான்.

"அடுத்த வாரத்தில்கூட நீலமணியின் ரேடியோக் கச்சேரி இருக்கிறது; முடிந்தால் கேளுங்கள்!" என்றார் கந்தப்பன்.

"அவசியம் கேட்கிறேன். ஆனால், நீலமணிக்கு என்னதான் நேர்ந்தது! அந்த முக்கியமான விஷயத்தை நீங்கள் சொல்லவில்லையே!" என்று கேட்டேன் நான்.

"தெரியவில்லையா, ஐயா! வேறு யாருடனும் அவன் நாடக மேடையில் ஏறி நடிக்கக் கூடாது என்பதற்காக அந்தச் சண்டாளப் பாவி அக்கினி திராவகத்தை அவன் முகத்தில் ஊற்றிக் குரூபியாகச் செய்து விட்டான்! அவன் எப்பேர்ப்பட்ட ராக்ஷஸனாயிருக்கவேண்டும்! இவ்வுலகில் மனித உருக்கொண்ட ராக்ஷஸர்களும் இருக்கிறார்கள்!" என்றார் கந்தப்பப் பிள்ளை.

நான் ஊகித்ததைத்தான் அவர் சொன்னார் என்றாலும், என் உள்ளத்தில் அப்போது சொல்ல முடியாத அருவருப்பும் பயங்கரமும் தோன்றின.

"ஆனால் இந்தச் செய்தி ஊரில் ஒருவருக்கும் தெரியாது. பட்டாசுப் பெட்டிகள் வெடித்த விபத்தினால் நீலமணிக்கு இப்படி நேர்ந்தது என்றே நம்பினார்கள். டாக்டர் ராம ஐயருக்கு மட்டும் தெரியும். என்னுடைய வேண்டுகோளின் பேரில் அவர் யாரிடமும் சொல்லவில்லை. இன்றைக்குத்தான் முதல் முதலாகத் தங்களிடம் சொன்னேன்!" என்றார் கந்தப்பன்.

"அந்த ராக்ஷஸன் - நமச்சிவாயம் பிற்பாடு என்ன ஆனான்!" என்று கேட்டேன்.

"யார் கண்டார்கள்! நான் திரும்பிப் போய் இடிந்து விழுந்து எரிந்து கொண்டிருந்த வீட்டில் தேடிப் பார்த்தபோது அவனைக் காணவில்லை. அவன் என்ன ஆனான் என்று விசாரிக்கவும் இல்லை. பல மாதம் கழித்து நீலமணி என்னிடம் அவனைப் பற்றிக் கேட்டதற்கு 'அவன் அகோரகத்தினால் செத்து ஒழிந்து விட்டான்' என்று சொல்லி விட்டேன்!"

"ஒரு வேளை உண்மையிலேயே செத்துத்தான் போய் விட்டானோ, என்னமோ!"

"அவ்வளவு பொல்லாதவர்களுக்கு இந்த உலகில் சாவு வருகிறதில்லை, ஐயா! எங்கேயோ உயிரோடுதான் இருக்கிறானாம். வேறு நாடகக் கம்பெனிகளில் அன்றாடச் சம்பளத்துக்கு நடிக்கப் போய் வருகிறானாம். சுதாவயகுளுக்குத் தோன்றி ஆர்ப்பாட்டம் செய்த காலம் போய் விட்டது. இப்போது திரை தூக்கக் கூப்பிட்டாலும் போகிறானாம். பெயரைக் கூட மாற்றி வைத்துக் கொண்டிருப்பதாகக் கேள்வி. அவ்வளவு கொடூரமான காரியம் செய்தவனுக்குத் தன் பெயரைச் சொல்லவே வெட்கமாகத் தானே இருக்கும்!" என்றார் கந்தப்பப் பிள்ளை.

கல்கத்தாவில் தமிழர்கள் சேர்ந்து நடத்தும் விழாவுக்காகக் கந்தப்பப் பிள்ளை அன்றிரவு கல்கத்தா மெயிலில் போகிறார் என்று தெரிந்து கொண்டு அவரிடம் விடைபெற்றுக் கொண்டேன்.

நாலு நாளைக்கெல்லாம் திரும்பவும் கந்தப்பப் பிள்ளையைப் பார்க்க நேருமென்று நான் எதிர்பார்க்கவில்லை. திடீரென்று அவர் என் வீடு தேடி வந்து சேர்ந்தார்.

"இது என்ன! கல்கத்தாவில் இருப்பீர்கள் என்றல்லவா நினைத்தேன்!" என்று கேட்டேன்.

"வழியில் விஜயவாடா அமளியில் சிக்கிக் கொண்டேன். ரயில் மேலே போகவில்லை. திரும்பி வந்து விட்டேன்" என்றார்.

"அடிதடி காயம் ஏதாவது உண்டோ?" என்று கேட்டேன்.

"எனக்கு ஒன்றுமில்லை. அந்தத் தடிப்பயல் நமச்சிவாயத்துக்கு நல்ல அடி. முன்னொரு நாள் அவன் நீலமணிக்குச் செய்த கொடுமைக்கு விஜயவாடா ஆந்திரர்கள் பழிவாங்கிவிட்டார்கள். செம்மையாக வெளுத்து விட்டார்கள்!" என்று எக்களிப்புடன் சொல்லிப் பிறகு விவரங்களையும் கூறினார்.

கந்தப்பப் பிள்ளையின் நாதஸ்வரக் கோஷ்டி பிரயாணம் செய்த அதே ரயிலில், கல்கத்தாவில் நடந்த அதே விழாவுக்காகத் தமிழ் நாட்டிலிருந்து ஒரு நாடக கோஷ்டியாரும் சென்றார்களாம்.

பொட்டி ஸ்ரீராமுலுவின் மரணத்தை யடுத்து ஆந்திர நாட்டில் ரயில் நிறுத்தும் படலமும் கலாப் படலமும் நடந்தன அல்லவா! இவர்கள் சென்ற ரயில் விஜயவாடா சேர்ந்தபோது, அங்கே ரயில்வே நிலையத்தில் அமளி துமளி கொந்தளித்திருந்ததாம். ரயிலில் ஒவ்வொரு வண்டிக்குள்ளும் ஆந்திர சகோதரர்கள் ஏறி "ஆந்திர ராஜ்யமு காவல!" என்று கத்தினார்கள். யாராவது தமிழர்கள் வண்டியிலிருப்பதைப் பார்த்தால், "அரவவாடு சாவல" என்றும் சேர்த்துக் கொண்டார்கள்.

நமச்சிவாயம் முன்னமே முரடன் என்பது தெரிந்த விஷயம். அவனுடைய முரட்டுக் குணம் இருபத்தைந்து ஆண்டுக்குப் பிறகும் மாறவில்லை. அவனுடைய வண்டியில் ஏறிய ஆந்திரர்கள் "ஆந்திர ராஜ்யமு காவல!" என்று கத்தியபோது, "என்னடா ஆந்திர ராஜ்யமு லேது, சோதராளரா, லேதுலே லேது! இல்லவே இல்லை! வேண்டுமானால் என் பெட்டியை நீயே சோதித்துப் பார்த்துக்கொள்ளு!" என்று நமச்சிவாயம் தெலுங்கும் தமிழும் கலந்து கேலியாகச் சொன்னானாம். அவன் தமிழன், கேலி செய்கிறான் என்று அறிந்து, ஆந்திரர்கள் "அரவவாடு சாவல!" என்று கத்தினார்கள். உடனே நமச்சிவாயத்துக்கும் கோபம் வந்தது. "உனக்கு ஆந்திர ராஜ்யமு காவல என்றால், அதற்கு அரவவாடு எதற்காகச் சாக வேண்டும்! நீ சாவல! உங்கப்பன் சாவல! உங்க பாட்டன் பூட்டன் சாவல!" என்று இரைந்தானாம். உடனே அவர்கள் வண்டியில் புகுந்து அவனை வெளியில் பிளாட்பாரத்தில் இழுத்துப் போட்டு அடி அடி என்று அடித்து விட்டார்களாம். முகம், உடம்பு எல்லாம் இரத்த விளாறி விட்டதாம். நாடக கோஷ்டியைச் சேர்ந்த மற்றவர்கள் விஜயவாடாவிலிருந்து மறுநாள் புறப்பட்ட வேறு ரயிலில் ஏறிப் போய் விட்டார்கள். தவில் கந்தப்பப்பிள்ளையோடு போன நாதஸ்வர வித்வான் மிரண்டு போய் ஊருக்குத் திரும்பி விட்டார். கந்தப்பப் பிள்ளையும், படுகாயம் பட்டுக் கிடந்த நமச்சிவாயத்தை எடுத்துப் போட்டுக் கொண்டு சென்னைக்கு வந்து சேர்ந்தார்.

"சில பேருக்கு உயிர் ரொம்ப கெட்டி, ஐயா! நமச்சிவாயம் டி. பி. வியாதியில் சாகாமல் பிழைத்தான். இப்போது ஆந்திர வெறியிலும் சாகாமல் பிழைத்து விட்டான். ஆஸ்பத்திரியிலே தான் இருக்கிறான். அவனுடைய குணம் மட்டும் இன்னும் மாறியதாகத் தெரியவில்லை. கேளுங்கள், இந்த வேடிக்கையை!... நேற்றிரவு ரேடியோவில் நீலமணியின் கச்சேரி கேட்டீர்களா!" என்றார் கந்தப்பப்பிள்ளை.

"ஆமாம், கேட்டேன்! மிக நன்றாயிருந்தது. உயர்ந்த சங்கீதம்!" என்றேன்.

"கேட்டதற்கு ஏதேனும் அடையாளம் சொல்லுங்கள், பார்க்கலாம்!" என்றார் கந்தப்பன்.

"கடைசியில் ராகமாலிகையாக அந்தப் பழைய பாட்டையே பாடினான். மத்தியமாவதியில் முடித்தான். 'நமச்சிவாயம்' என்ற பெயரைச் சொல்ல எப்படித்தான் அவனுக்கு மனம் வந்ததோ என்று நான் ஆச்சரியப்பட்டேன்" என்றேன்.

"சிவபெருமானுடைய திரு வெழுத்து அது! இந்தப் போக்கிரி அதைக் கேட்டு என்ன சொன்னான் தெரியுமா! ஆமாம்; ஆஸ்பத்திரியில் ரேடியோ இருக்கிறது. நீலமணியின் கச்சேரியின் போது திறந்து வைத்திருந்தார்கள். ராகமாலிகை முடிந்ததும் நமச்சிவாயம் என்னிடம், 'மாமா! அவனை மன்னித்து விட்டேன் என்று சொல்லுங்கள்!' என்றான். அது போதாது என்று,

'மாமா! எப்படியாவது அவனை நான் ஒரு தடவை பார்க்க வேண்டும், மாமா! நேரிலேயே அவனை நான் மன்னித்து விட்டதாகச் சொல்ல வேண்டும்' என்றாள். எப்படி இருக்கிறது கதை! இவள் அவனை மன்னிப்பதாம்! எப்படிப்பட்ட ஈரத்தை உள்ளம் படைத்தவளா யிருக்க வேண்டும்! உலகில் எந்தக் கெட்ட குணத்துக்கும் மன்னிப்பு உண்டு, ஐயா! அகங்காரம் என்கிற பேய்க் குணத்துக்கு மட்டும் மன்னிப்பே கிடையாது!" என்றார் கந்தப்பப் பிள்ளை.

"உண்மைதான்; நீங்கள் இப்பொழுது என்ன செய்யப் போகிறீர்கள்!" என்று கேட்டேன்.

"நான் எதற்காகக் குறுக்கே நிற்பது என்று யோசிக்கிறேன். நீலமணியிடம் போய்ச் சொல்லி விடுகிறேன்! அப்புறம் அவள் இஷ்டம்! இன்னும் அவள் சிறு குழந்தையா என்ன! யோசித்து விருப்பம்போல் முடிவு செய்யட்டும்! மேலும் இந்தத் துஷ்டன் பிழைப்பதே துர்லபம் என்கிறார்கள். சாகப் போகிறவனிடம் நமக்கு என்னத்திற்காக வன்மம்!" என்றார் கந்தப்பப் பிள்ளை.

"அதுதான் சரி! உங்கள் முடிவை மெச்சுகிறேன். நீலமணியிடம் பேசும்போது, அன்றைக்கு என்ன நடந்தது என்பதை மறுபடியும் விவரமாய்க் கேட்டு விடுங்கள்!" என்றேன்.

"என்றைக்கு நடந்ததைக் குறிப்பிடுகிறீர்கள்!"

"தீபாவளிக்கு முதல் நாள், கும்பகோணத்தில் உள்ள உங்கள் வீட்டில் வெடி வெடித்த அன்று, நீங்கள் நீலமணியை வண்டியில் தூக்கிப் போட்டுக்கொண்டு டாக்டரிடம் ஓடிய அன்றுதான்!"



* * *

சில தினங்களுக்கு முன்னால் ஸ்ரீ கந்தப்பப் பிள்ளையைக் கடைசியாகச் சந்தித்தேன். அவர் சித்திரமுக மலர்ச்சியுடனேயே காணப்பட்டார்.

"ஐயா சொல்லி அனுப்பியது மிகவும் நல்லதாய்ப் போயிற்று!" என்று சந்தோஷமாகக் கூறினார்.

"எதைப் பற்றிச் சொல்லுகிறீர்கள்!" என்று கேட்டேன்.

"நீலமணியிடம் நன்றாய் விசாரிக்க வேண்டுமென்று சொன்னீர்களே, அதைப் பற்றித்தான்! விசாரித்துத் தெரிந்து கொண்டது நான் முன்னம் எண்ணியதற்குக் கொஞ்சம் மாறாக இருந்தது. கொஞ்சம் என்ன! ரொம்பவும் மாறுதலாக இருந்தது. அன்றைக்கு நமச்சிவாயம் நீலமணியை விட்டு விட்டு எங்கேயாவது கண் காணாத தேசத்துக்கு ஓடிப் போய் விடப் போகிறேன் என்று வற்புறுத்திச் சொன்னானாம். சொன்னதோடல்லாமல், வீட்டு வேலைக்காரப் பையனை வண்டி கொண்டு வரச் சொல்லி அதில் பெட்டி-படுக்கை முதலிய சாமான்களையும் ஏற்றி அனுப்பி விட்டானாம். அவனுடைய கைப் பெட்டியை மட்டும் நீலமணி பிடுங்கி வைத்துக் கொண்டு 'கொடுக்க மாட்டேன்' என்றும், 'போகக் கூடாது' என்றும் பிடிவாதம் பிடித்தாளாம். அவன் மீறிப் போவதாயிருந்தால், அவன் கண் முன்னாலேயே உயிரை விட்டுவிடுவதாகக் கூறினாளாம். அந்த முட்டாள் எதற்காக அக்கினித் திராவகம் வாங்கி வைத்திருந்தானோ, கடவுளுக்குத்தான் தெரியும். தன் உயிரைத் தான் வாங்கிக் கொள்வதற்கோ, அல்லது நீலமணியைச் சும்மாவாவது பயமுறுத்துவதற்கோ தெரியாது. அதை நீலமணி கையில் எடுத்துக் கொண்டு, நமச்சிவாயம் ஒரு அடி எடுத்து வைத்தாலும் அக்கினி திராவகத்தைச் சாப்பிட்டு உயிரை விட்டு விடுவேன் என்று கூறினாளாம். நமச்சிவாயம் அதை அவள் கையிலிருந்து வாங்குவதற்காக என்னவெல்லாமோ சாமர்த்திய மெல்லாம் செய்து பார்த்தான். விளையாட்டுத் துப்பாக்கியை எடுத்து அவளைச் சுட்டு விடுவதாய்ப் பயமுறுத்தினான். 'நல்லதாய்ப் போயிற்று; உங்கள் கையாலேயே கொன்று விடுங்கள்!' என்றாள்.

'உன்னைக் கொன்று என்ன பயன்! உன்னைக் கலியாணம் செய்துகொண்ட என்னைச் சுட்டுக் கொள்கிறேன்' என்று சொல்லித் தன் பேரிலேயே அத் துப்பாக்கியைத் திருப்பிச் சுட்டுக் கொண்டான். அந்தப் பேதைப் பெண் அதை உண்மை என்று நம்பி அக்கினித் திராவகப் புட்டியை வாயண்டை கொண்டு போய் விட்டாள். நமச்சிவாயம் சட்டென்று அவள் கையிலிருந்த திராவகப் புட்டியைத் தட்டி விட்டான்! புட்டி தூர விழுந்தது என்றாலும், அதிலிருந்து சில துளிகள் அவள் முகத்தில் தெறித்துவிட்டன. அவள் நினைவிழந்து விழுந்து விட்டாள். பிறகு நடந்தது ஒன்றும் அவளுக்குத் தெரியாது. இவையும் கூட வெகுநாளைக்குப் பிறகு தான் ஒவ்வொன்றாக அவள் நினைவுக்கு வந்தது. 'நமச்சிவாயம் செத்து விட்டான்' என்று நான் சொன்னதை அவள் நம்பி விட்டாள். பட்டாஸு கட்டுப் பெட்டிகள் வெடித்து வீடு எரிந்ததில் அவன் இறந்ததாக நான் சொன்னது கொஞ்சம் அவளுக்கு ஆறுதலாயிருந்தது. இல்லாவிடில் அவனை இவளே கொன்று விட்டதாக எண்ணி மறுபடியும் பிராணத் தியாகம் செய்ய முயன்றிருப்பாள்! இப்போது நமச்சிவாயம் உயிரோடிருப்பதைப் பற்றி நான் சொன்னதும் உடனே புறப்பட்டு என்னோடு வந்து விட்டாள். இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு இருவரையும் சேர்த்து வைத்துவிட்டு வந்தேன். 'பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ!' என்று கம்பர் சொன்ன பிரகாரம் அவர்கள் இருவரும் ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்திருப்பதைப் பார்த்து விட்டு வந்தேன்!" என்று சொன்னார் கந்தப்பப் பிள்ளை.

"அப்படியானால், நமச்சிவாயம் இந்தக் கண்டத்துக்கும் பிழைத்துக் கொள்வான் என்று சொல்லுங்கள்!" என்றேன்.

"அவருடைய உயிர்தான் ரொம்பக் கெட்டி என்று சொன்னேனே, ஐயா! நமச்சிவாயமும் நீலமணியும் இன்னும் பல்லாண்டு ஆனந்த வாழ்க்கை நடத்தப் போகிறார்கள்."

"நல்லது! ரொம்ப ரொம்ப சந்தோஷம்! கந்தப்பப்பிள்ளை! இன்னும் ஒரு விஷயம் தாங்கள் சொல்லாமல் பாக்கி வைத்திருக்கிறீர்கள். அந்த வெடிகுண்டு வழக்கைப் பற்றிச் சொல்கிறேன். அதன் உண்மை என்ன!"

"அப்படி இப்படி என்று அடி மடியில் கையைப் போடப் பார்க்கிறீர்களே!" என்றார் கந்தப்பப் பிள்ளை.

"சொல்லலாம் என்றால், சொல்லுங்கள்! இல்லாவிட்டால் ஒன்றும் சொல்ல வேண்டாம்!" என்றேன்.

"இனிமேல் சொல்லுவதற்கென்ன! தாராளமாகச் சொல்லலாம். நான் வெடிகுண்டு தயாரிப்பதில் ஈடுபட்டது உண்மை தான். வெள்ளைக்காரன் மேல் போடுவதற்காகவும் அல்ல; பிரிட்டிஷ் கவர்ன்மென்டைத் தூக்கியெறிவதற்காகவும் அல்ல. அரசியலில் நான் காந்தி மகானுடைய கட்சியைச் சேர்ந்தவன். என் மகள்மீது அக்கினித் திராவகத்தை ஊற்றிய பஞ்சமா பாதகன்மேல் வெடிகுண்டைப் போட்டு அவனைக் கொன்று விடுவதென்று முடிவு கட்டிக் கொண்டேன். இதற்காகவே, வேறு அரசியல் நோக்கத்துடன் வெடிகுண்டு தயாரிக்க முன் வந்த பிள்ளைகளுக்கு இடவசதி முதலியவை தந்து உதவினேன். தெய்வாதீனத்தைப் பாருங்கள்! தயாரான வெடிகுண்டுகள் அவையே வெடித்துக் கொண்டு இரகசியத்தை வெளிப்படுத்தி விட்டன. என்னையும் பெரும் பாவம் செய்யாமல் காப்பாற்றின. நான் உத்தேசித்திருந்தபடி செய்திருந்து, பிறகு நீலமணியிடம் உண்மையை அறிந்து கொண்டிருந்தால் என் மனம் என்ன பாடுபட்டிருக்கும்! கடவுள் தடுத்தாட்கொண்டார்! முருகனின் கருணையே கருணை!" என்று கூறிய கந்தப்பப் பிள்ளை, கண்களைப் பாதி மூடிய வண்ணம் மேல்நோக்கிப் பார்த்துக் கொண்டு, பின்வரும் பாடலைப் பாடினார்:

வருவாய் மயில்மீ தினிலே!
வடிவே லுடனே வருவாய்!
தருவாய் நலமும் தகவும் புகழும்
தவமும் திறமும் தனமும் கனமும்
முருகா! முருகா! முருகா!

காத்தாயி
ஸில்க் எம்போரியம்
தந்தி "காத்தாயி"





Regd TRADE MARK No 140755

போன்: 86083.

மயிலாப்பூர்..மதராஸ்.4

எமது மனமார்ந்த தீபாவளி நல் வாழ்த்துக்கள்!

புதிய வேலைப்பாடுகள் அமைந்த கொள்ளேகாலம் பட்டு சேலைகளுக்கும், ஜார்ஜெட், இரேப் சேலைகள் சோளி துண்டுகள், சேலை அகலம் பாவாடைகள், வேஷ்டிகள், அங்கவஸ்திரங்களுக்கும் கீர்த்தி பெற்ற இடம்





ஜே. பி. மங்காராமின்

பிரசித்திபெற்ற

பிஸ்கோத்துகள்

- மிருதுவானது
- ருசியுள்ளது
- மொறமொறப்பானது



ஜே. பி. மங்காராம் & கம்பெனி, குவாலியர்

மதராஸ் ஏஜன்டுகள்: நேஷனல் ஏஜன்ஸிஸ், 1/94, ராமசாமி தெரு, மதராஸ்-1

Edited, Printed & Published by R. Krishnamurthy at the "Kalki" Press, 29, Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras



குனியும் கமலம்

குவியும் கமலம்

"மொய்யுறு நறுமலர்
முகிழ்த்த வாம்பில!" —கம்பர்.

[மொய்யுறு நறு மலர்: நிற பேதங் கொண்ட தாமரை போன்ற பகலில் மலரும் புஷ்பங்கள்; முகிழ்ந்தவாம்: குவிந்தன.]

கமல மலரின் காதலன் யார் என்று தெரியுமல்லவா?

காலையில் கீழ்த் திசையின் தொடுவானத்திலே உதிக்கிறானே அந்தக் கதிரவன்தான்.

அந்தக் கதிரவனின் பொற் கிரணங்கள் தன் மேலே பட்ட மாத்திரத்தில் அதன் மெய் சிலிர்க்கும்; முகை அவிழும். பின்னர் பகல் எல்லாம் அந்தச் சூரியனுடன் சரஸ சல்லாபம் புரியும்.

மனித வர்க்கத்தினர் இப்படித் தாமரை மலரைப் போல் தினந்தோறும் பகல் நேரத்தில் சல்லாபம் செய்து கொண்டிருக்க முடியுமா? மெய் வருந்திப் பாடுபட வேண்டிய நேரமல்லவா பகல் நேரம்? மாலை நேரம்தான் காதலர்கள் சந்திக்கவும் பேசவும் ஒழியும்.

இதோ இந்தத் தாமரைக் குளத்துக்கு, காதலர் இருவர் இந்த மாலை நேரத்திலே, வானில் பிறைச் சந்திரன் தோன்றியிருக்கும் இந்நேரத்திலே இன்பப் பேச்சுக்களைப் பரிமாறிக் கொண்டே வருகிறார்களே!

அடாடா, குளக்கரையை அடைந்தவுடன் ஏன் இப்படி ஆச்சரியக் கடலில் மூழ்கி நின்று விட்டார்கள்?

புரிகிறது, இப்பொழுது நன்றாகப் புரிகிறது. கமலம் இவர் காதல் பேச்சைக் கேட்டு வெட்கப்பட்டு இதழ்களைக் குவித்துக் கொள்வதைக் கண்டு அதிசயப்படுகிறார்கள்!

"கமலமும் ஒரு பெண்தானே? பகலில் அவள் கதிரவனுடன் பன்னிரண்டு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தாளே! அதை உலகம் முழுதும் பார்த்துக் கொண்டிருந்ததே! அப்பொழுது வெட்கம் தோன்றவில்லையோ இந்தக் கமலத்துக்கு!" என்று கேட்கலாம்.

அப்பொழுது அவள் உலகத்தை எங்கே கவனித்தாள்?

• • •

இந்த அற்புதக் காட்சியைக் கலைஞர் கனு தேசாய் வண்ண ஓவியத்தில் ஓர் அற்புதமாகவே தீட்டியிருக்கிறார்.


ஜெமினி
ஔவையார்



"பாங்கான 'பாரத்' பங்காவுடன் பங்களா உருவமதில் பல நாள் கனவொன்று பலிக்கும்" என காதலும் சொல்ல......

"'பாரத்' பங்கா வெனப் பட்டம் சாத்திய தெங்ஙனம்?" என்று கர்த்தியும் கலந்து கேட்க......

"நல்லதிர்ஷ்டம் வந்தவர்க்கே கிட்டுமாம் பாரினிலே. இந்த 'பாரத்' பங்கா; பல நாள் பழுதின்றிப் பணியாற்றும் பேறு படைத்ததை இலை!" எனப் பகன்றதே காதலும் ஆங்கே.

Makers of the Famous

BEHALA INDIA
BHARAT ROHTAS
RANJIT & TARA

FANS.

Hearty Greetings From

THE INDIA ELECTRIC WORKS LTD.


CHATNATH BLDGS, MOUNT ROAD, MADRAS - 2



திரௌபதி



ராதை



பார்வதி



சீதாதேவி

பெண் தெய்வங்கள்

Courtesy :—'NALLINI'



மேகமே! அடக்கமா யிரு!

மேகமே! அடக்கமா யிரு!

மேல் நாட்டிலே இலக்கிய அன்பர்கள் சேர்ந்துள்ள ஒரு கூட்டத்துக்குச் சென்று, "நான் இந்தியாவிலிருந்து வருகிறேன்! நான் ஒரு இந்தியன்" என்று சொன்னால், "கவி காளிதாஸன் பிறந்த நாட்டிலிருந்தல்லவா வருகிறீர்கள்? வாருங்கள்! வாருங்கள்!" என்று உபசரிப்பார்களாம்! அப்படியானால் அந்த மகா கவி காளிதாஸனுடைய கீர்த்தியைப் பற்றி நம்மால் சொல்லிச் சாத்தியமா?

காளிதாஸனின் அருமையான காவியங்களுள் ஒன்று "மேக தூதன்" என்பது. இது அற்புதமான மலை வர்ணனைகளையும், காதலன் உள்ளத்தின் உணர்ச்சி வெளியீட்டையும் கொண்டது.

யக்ஷர்கள் வசிக்கும் நகரமாகிய அளகாபுரிக்கு அரசன், செல்வத்துக்கு அதிபதியான குபேரன். குபேரனுடைய அரண்மனையில் அந்தரங்க அமைச்சனாக வேலை செய்து வந்தான் ஒரு யக்ஷன்.

ஒரு நாள், தன் காதலியைக் காலையில் பிரிந்து வந்து விட்டதை நினைந்து அவள் நினைவிலேயே அந்த யக்ஷன் மூழ்கியிருந்து விட்டான். இதனால் அவன் தான் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யத் தவறி விட்டான். இதைக் கண்டு கோபமுற்ற குபேரன், "ஓராண்டு மனிதர் இடையில் வசிப்பாயாக" என்று தண்டனை விதித்தான். இதைக் கேட்ட மாத்திரத்திலேயே மயக்கமுற்றுக் கீழே விழுந்தான் யக்ஷன்.

சற்று நேரம் கழிந்துக் கண் விழித்துப் பார்த்தபோது அந்த யக்ஷன் தான் விந்திய மலைச் சாரலில் விழுந்து கிடப்பதை யுணர்ந்தான்.

ஆடி மாதம் வந்தது. வானில் மழை மேகங்கள் சூழ்ந்தன. அவனுக்குத் தன் காதலியின் நினைவு வந்து விட்டது! அவள் தன்னைப் பிரிந்துவிட்ட துயரம் தாங்க மாட்டாமல் எவ்வளவு தவிக்கிறாளோ என்று எண்ணினான். அவளுக்குத் தன்னைப் பற்றிய செய்தியை அந்த மேகங்களிடம் சொல்லி யனுப்புகிறான்.

அப்போது, மேக தூதன் கைலையங்கிரியில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி யக்ஷன் கூறுகிறான்:

"கார் முகிலே! கைலையங்கிரி பார்வதி தேவி உல்லாசமாகச் சஞ்சரிக்கும் இடமாகும். அவ்வாறு அவள் வரும்போது பரமேசுவரன் தம் கையில் அணிந்துள்ள பாம்பு வளையல்களைக் கழற்றி வைத்து விட்டுப் பார்வதியை அணைத்து அழைத்துச் செல்வார்.

"மேகமே! கைலையங் கிரியை நீ அடையும்போது இவ்வாறு பார்வதிபரமேசுவரர்கள் உலாவிக்கொண்டிருந்தால் உனக்குக் கிடைத்தற்கரிய பேறு கிடைத்திருக்கிறது என்று எண்ணிக் கொள்! உன் நீர்த்துளிகளை அவர்கள் மீது சிந்தி விடப் போகிறாய்; அடக்கி வைத்துக் கொள்!"


மேக தூதனுக்குக் கைலையங்கிரியில் அந்தக் காட்சியைப் பார்க்கும் பேறு கிடைத்ததோ, என்னமோ, தெரியாது! "சந்திரா"வின் சித்திரத்தின் மூலம் நமக்கு அந்தப் பேறு கிட்டியிருக்கிறது.

கல்கி தீபாவளி மலர் 1953

தலையிட வேண்டாம்!



"அத்திம்பேரே! அக்கா உங்களுக்காகக் காத்துக் கொண்டிருக்கிறாள்! உம்......எங்கள் காரியத்திலே நீங்கள் தலையிடாதீர்கள்; உங்கள் காரியத்தில் நாங்களும் தலையிடவில்லை!"


பம்பாய்
விக்டோரியா
டெர்மினஸ்


நாசிக்கில்
கோதாவரி ஸ்நானம்
போட்டோ:

குங்குமத் திலகம்

முருகப் பெருமான் மீது காதல் கொண்ட பெண்கள் எத்தனை, எத்தனையோ பேர்.

அதுவும் செந்தில் முருகன்மீது காதல் கொண்ட பெண் தன் அருமைக் கிளியைப் பார்த்துப் பாடிய காதல் கீதங்கள் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்தது போல் வேறு எதுவும் கவர்ந்ததில்லை என்றே சொல்ல வேண்டும்!

அந்தப் பெண்ணுக்குச் சதா முருகப் பெருமானின் நினைவுதான். நனவிலும் சரி, கனவிலும் சரி, எக்காரியத்தைச் செய்யப் புகுந்தாலும், முருகனைச் சம்பந்தப் படுத்தி அவள் உள்ளம் எண்ணுமல் இராது.

இதோ, இப்பொழுது கூந்தலை வாரி முடிந்துக் கொண்டாள். நெற்றியில் குங்குமத்தை இட்டுக் கொண்டாள். அவளுக்குக் குமரனின் நினைவு வந்து விட்டது. அவன் மேனிகூடக் குங்கும வர்ணம் அல்லவா என்று நினைந்தாள்!

அத்துடன் அவனுடைய அளப்பருந் தன்மையும், பக்தர்களின் பக்தி வலையில் அகப்படும் தன்மையும் அவளுடைய நினைவுக்கு வந்துவிட்டன.

அவளுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. தான் அருமையாக வளர்க்கும் கிளியைப் பார்த்துப் பாடுகிறாள் :

எங்கும் நிறைந்திருப்போன்
எட்டியும் எட்டாதிருப்போன்

குங்கும வர்ணனடி — கிளியே
குமரப் பெருமானடி.

கல்கி தீபாவளி மலர் 19[illegible]

அம்மா, சீக்கிரம்!





குங்குமத் திலகம்

தயிர் கடையும் தையல்

இங்கிலாந்திலேயே பிறந்து, இங்கிலாந்திலேயே வளர்ந்த ஆங்கிலக் கவிஞர் ஷேக்ஸ்பியர் கிரேக்க தேசத்தையும் டென்மார்க் தேசத்தையும் நிலைக்களனாகக் கொண்டு நாடகங்கள் எழுதியிருக்கிறார். இந்தத் தேசங்களில், இங்கிலாந்து தேசக் காட்சிகளையும், கட்டிடங்களையும், மக்களையுமே (தன் நாடகங்களில்) குடியேற்றி வைத்தார்! அவர் என்ன செய்வார், பாவம்! தாம் பிறந்த பொன்னாட்டை மறக்க முடியவில்லை! இந்தச் சிறப்பு இயல்பாக எல்லாக் கவிஞர்களுக்குமே உண்டு.

பொன்னி நதி பாய்ந்து பொன் கொழிக்கும் கழனிகள் சூழ்ந்த சோழ நாட்டில் பிறந்த கம்பர் மட்டும் இந்த விதிக்கு விலக்காக முடியுமா! பரதன் அயோத்தியை விட்டுக் காட்டுக்குள் வந்தான் என்று கூற வரும் இடத்தில், "**காவிரி நாடன்ன கழனிநா டொரீஇ**" என்று அயோத்தியைச் சோழ நாட்டுடன் ஒப்பிட்டுக் கூற வேண்டியதாயிற்று!

நாட்டு வளத்தைக் கூற வருகையிலே, பிறந்த நாட்டை மறக்க முடியவில்லை எனில், மக்களைப் பற்றிக் கூற வரும்போது தமிழ் மக்களை எப்படிக் கம்பரால் மறக்க முடியும்! அப்படிக் கம்பரால் மறக்க முடியாத தமிழ் மக்களில் ஒரு மகள் தயிர் கடையும் ஆயர் மங்கை!

அவள் தயிர் கடையும் காட்சி கம்பர் மனத்தில் நிற்கிறது!

தயிர்ப் பானையில் போட்டுள்ள மத்து, கடையும்போது எவ்வளவு லாகவமாக மேலும் கீழும் எழும்பித் துள்ளிக் குதிக்கிறது! கடையும்போது, பெண்களின் கைகளில் அணிந்துள்ள வெண்ணிறச் சங்கு வளையல்கள் குலுங்கிச் சத்தமிடும் ஓசை, 'ஏன் எங்களை இப்படி வதைக்கிறீர்கள்!' என்று வாய் விட்டு அரற்றுவது போல் அல்லவா இருக்கிறது!

மத்தில் சுற்றியுள்ள கயிற்றின் நுனிகள் இரண்டும் இரண்டு கைகளிலும் பிடித்திருப்பார்கள். ஒரு கை முன்னே விட்டால், அடுத்த கை பின்னுக்கு இழுக்க வேண்டும். இப்படி மாற்றி மாற்றிச் செய்வதுதானே கடைதல் ஆகிறது! அப்போது பெண்களின் இடை தேய்வதுபோல் இருக்கிறது.

கவிச் சக்கரவர்த்தி பாடுகிறார்:

தோயும் வெண்தயிர்
மத்தொலி துள்ளவும்
மாய வெள்வளை
வாய்விட்(டு) அரற்றவும்
தேயும் நுண்ணிடை
சென்று வணங்கவும்
ஆயர் மங்கையர்
அங்கை வருந்துவார்.

எல்லாத் தொழிலுக்கும் அடிப்படை கைதான்! அந்தக் கைக்கு மிக உன்னத இடத்தை அளித்து விட்டார் கவிச் சக்கரவர்த்தி.

கம்பர் கவியில் அமரத்துவம் பெற்ற ஆயர் மங்கையை, ஸ்ரீமதி அரிய சித்திரமாகத் தீட்டி நம் கண் முன்னே காட்டுகிறார்!





நிவேதனம்

நிவேதனம்

பக்தி மணக்கும் நாடு பாரத நாடு.

அதுவும் கண்ணன் என்று நினைந்து விட்டால் குழந்தைகள், பெரியவர்கள், ஆண்கள் பெண்கள் எல்லோருக்கும் மெய் சிலிர்க்கும்.

அவன் ஆயர் பாடியில் கோபியருக்கு ஓயாத தொல்லை கொடுத்தது எல்லாம் நினைவுக்கு வரும்!

ஆய்ச்சியர் வீடு தோறும் நுழைந்து வெண்ணெய் திருடித் தின்று, மத்தடி பட்டது நினைவுக்கு வரும்!

பரம தரித்திரரான குசேலரை, "எனக்குத் தின்பதற்கு என்ன கொண்டு வந்திருக்கிறீர்கள்?" என்று கேட்டு வைத்ததும், குசேலர் மிகவும் வெட்கப்பட்டு, அவல் எடுத்துக் கொடுத்ததும், கண்ணன் அளவிலா மகிழ்ச்சியோடு ஒரு பிடி அவலையுண்டு குசேலருக்கு அருள் பாலித்ததும் நினைவுக்கு வரும்.

அதையெல்லாம் நினைக்க நினைக்க, கண்களில் கண்ணீர் பெருகும்; 'நம் கண்ணன்! நம் கண்ணன்!' என்ற பெருமிதம் பொங்கும்!

இப்படிப்பட்ட கண்ணனைப் பற்றிய நிகழ்ச்சி ஒன்றை நினைவூட்டுகிறார் சித்திரக் கலைஞர் கனு தேசாய்.

கண்ணன் மீது ஆழ்க் காதல் கொண்ட இந்த நங்கை கண்ணனின் அருள் வேண்டி இறைஞ்சினாள்.

கண்ணன் அவ்வளவு எளிதில் அருள் பாலித்து விடுவானா!

"இது வரை எனக்கு யாரும் கொடுக்காததோர் பரிசை யளித்தா யானால்தான்......" என்றான்.

முதலில் 'இது என்ன பிரமாதம்!' என்ற ஆணவத்தில் "சரி" என்று கண்ணனிடம் கூறிவிட்டாள்.

பிறகு கண்ணனுக்கு அதிசயப் பரிசாக என்ன கொடுப்பது என்று யோசித்தாள்; யோசித்தாள்; அப்படி யோசித்தாள்.

கண்ணனுக்குக் கொடுக்கத் தக்க அதிசயப் பொருள் தன்னிடம் ஒன்றுமே கிடையாது என்பதையறிந்தாள். கண்ணன் இல்லாத பொருள் ஏது!

எங்கும் கண்ணன்! யாதும் கண்ணன்! கண்ணனுடைய பெருமையை யுணர்ந்தாள். தன்னுடைய சிறுமையையும் உணர்ந்தாள்.

புன்னை மொட்டை நிகர்த்த மொட்டுக்கள் காட்டுச் செடி யொன்றில் இருந்தன. அதைப் பறித்தாள்.


"கண்ணா! இதுவே என் அன்புப் பரிசு! உனக்குக் கொடுக்கத் தக்க அதிசயப் பொருள் வேறு ஒன்றும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை! ஆயினும் உன் அருள் வேண்டுகிறேன்!" என்று இறைஞ்சினாள்.

தன்னையே நிவேதனமாக வைத்து வேண்டினாள்.

அவள் அளித்த நிவேதனத்தை ஏற்று, அவளுக்கே அளித்து விட்டான். அவள் கூந்தலில் சூடிவிட்டான்.

இந் நங்கையைப் பார்க்கும் போது தமிழர்களுக்கு ஆண்டாளின் நினைவு வராமற் போகாது. ஆண்டாளும் கண்ணனின் பரிபூரண அருளைப் பெற்றவள். ஆண்டாள் அருளிச் செய்த திருப்பாவைப் பாசுரம் ஒன்றை இப்போது நினைவு கூர்வோமாக:—

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனைத்
தூயோமாய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசாகும் செப்பேலோர் எம்பாவாய்!



லட்சுமணன் அன்பு!

லட்சுமணன் அன்பு!

அதிர்ஷ்டம் துரதிர்ஷ்டத்திலும் இருக்கிறது என்று சொன்னால் நம்புவது சற்றுச் சிரமம். ஆனால் சக்கரவர்த்தித் திருமகனைப் பிறந்த ராமனை எடுத்துக் கொண்டால் சுலபமாக விளங்கி விடும்.

* * * *

காட்டுக்குச் சென்ற ராமனை எப்பாடு பட்டாகிலும் நாட்டுக்குத் திரும்ப அழைத்து வந்து முடிசூட்டிவிட வேண்டும் என்று தீர்மானித்தான் பரதன்.

ஆம்; அவனால் ராமன் காட்டுக்குப் போனான் என்று சற்றும் ஆற்ற முடியவில்லை. மரவுரியைத் தரித்துக் கண்ணீரும் கம்பலையுமாக நகர மக்கள் புடை சூழப் புறப்பட்டு விட்டான்.

கங்கைக் கரையை அடைந்தான். கங்கையில் செல்லும் படகுகளின் அதிபன் குகன். ராமபிரானிடம் மாறு நேயம் பூண்டவன். எனவே, பரதன் மாபெரும் கூட்டத்துடன் வருவதைத் தூரத்திலிருந்து பார்த்த குகன், பரத னுடைய நோக்கத்தில் ஐயம் கொண்டான். ராமன்மீது படை திரட்டிக் கொண்டு வந்து விட்டானோ என்று சந்தேகப்பட்டான். பின்னர் தான் கொண்ட சந்தேகம் தவறு என்று அறிந்தவுடன் பரதனை அணுகி நட்புக் கொண்டான்!

பரதன், குகனிடம் கங்கைக் கரையில் ராமன் என்ன சாப்பிட்டான்; எங்கே தூங்கினான் என்றெல்லாம் கேட்டான்.

"ராமன் கிழங்கையும் காயையும் அமிர்தமெனக் கருதித் தின்றான்; கல்லில் பரப்பிய புல்லில் ஆனந்தமாகத் தூங்கினான்" என்றான் குகன்.

இதைக் கேட்டவுடன் பரதன் ஆவி துடித்தான்.

பின்னர், "ராமன் இப்படி. வென்றால், ராமனுடன் மாறு அன்பு கொண்டு வந்த தம்பி லட்சுமணன் எப்படிப் பொழுதைக் கழித்தான்!" என்று கேட்டான் பரதன்.

அதற்குக் குகன்:

"அல்லையாண் டமைந்தமே னி
  அழகனும் அவளும் துஞ்ச
வில்லையூன் றியகை யோ டும்
  வெய்துயிர்ப் போடும் வீ ரன்
கல்லையாண் டுயர்ந்ததோ ளாய்
  கண்கள்நீர் சொரியக் கங் குல்
எல்லைகாண் பளவும் நின் றான்
  இமைப்பிலன் நயனம்" என் றான்.

[வீரன்: லட்சுமணன்; கல்லையாண்டுயர்ந்த தோளாய்: கல்லைப் போன்று உறுதி பெற்ற தோள்களைப் படைத்த பரதனே; கங்குல்: இரவு; நயனம்: கண்.]

ஆகா! ராமன்மீது எவ்வளவு அன்பிருந்தால் இப்படி இரவெல்லாம் கண் விழித்துக் கண்ணீர் சொரிய நிற்பான்!

இரவின் எல்லையைக் காண இமை கொட்டாமல் லட்சுமணன் நின்றான் என்பது இந்தக் குகனுக்கு எப்படித் தெரிந்தது! மூவரையும் காவல் காத்துக் குகன் இவர்களுக்குத் தெரியாமல் நின்றிருக்க வேண்டுமல்லவா! குகனுடைய அன்பே அன்பு!

இந்தத் தோணிப் பொருள் நமக்கு எதனால் கிடைத்தது! கவிச் சக்கர வர்த்தி கம்பரின் அபாரமான நாடகத் திறமையினாலே.

ஆரம்பத்திலேயே, அதாவது ராமன் குகனுடன் கங்கைக் கரையில் வசித்த வரலாற்றைக் கூறும் கங்கைப் படலத்தில் கூறி யிருக்க வேண்டிய இவ் விஷயத்தை அங்கே கூறவில்லை. பல படலங்கள் கழித்து, பரதனும் குகனும் சந்திக்கும் இடத்தில் பரதனுக்குக் குகன் சொல்வது போல் வைத்த தில், குகனுடைய அன்பை அற்புதமாகக் கூறி விட்டார்!

இப்படிப் பரதனுடைய அன்பு, லட்சுமணனுடைய அன்பு, குகனுடைய பக்தி, கவிச் சக்கரவர்த்தியின் நாடகத் திறன் யாவும் வனவாசம் என்னும் துரதிர்ஷ்டத்தினால் கிடைத்தது என்றால், துரதிர்ஷ்டத்திலும் அதிர்ஷ்டம் இருக்கலாம் என்பதை நம்பத்தானே வேண்டி யிருக்கிறது!

* * * *

ஆயிரம் வருஷங்களுக்கு முன் கவிச் சக்கரவர்த்தி கம்பர் அருளிய சொற் சித்திரத்துக்கு ஒரு வண்ண ஓவியம் தீட்டிய பெருமை பாலு சகோதரர் களைச் சார்ந்தது!

பாட்டை எத்தனை தரம் படித்தாலும் புதுப் புது நயங்கள் தோன்றி எப்படி மனதை மயக்குகிறதோ, அப்படியே சித்திரமும் நம்மை மயக்குகிறது! கண்கள் நீர் சொரிய நிற்கும் லக்ஷ்மணனைப் பார்க்கப் பார்க்க நம் உள்ளமும் உருகி விடுகிறது!

கல்கி தீபாவளி மலர் 1965

REGD. No. M. 4392
Registered as a newspaper in Ceylon

